Oct - Dec
1996

தமிழரசு

Oct - Dec
1996

214390



இந்த இதழில்....

திட்டங்களின் பலன் ஏழை - எளிய மக்களைச் சென்றடைய வேண்டும் - மாண்புமிகு முதல்வர், கலைஞர் **2**

மாண்புமிகு முதல்வர் முன்னிலையில் ''மூலிகை பெட்ரோல்'' **4**

புது டில்லியில் திட்டக்குழுக் கூட்டம் - மாண்புமிகு முதல்வர் உரை **6**

மின் துறையில் வெளி நாட்டார் முதலீடு **12**

அன்பு என்பது... **14**

பாட்டுப் பிறந்த விதம் – பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 18

மருத்துவம் - தாய்ப்பால் **21**

குரு - சிறுகதை **24**

வேலை வாய்ப்புகள் **33**

'நோபெல்' **41**

எங்கள் ஊர் பிரச்சினை **46**

ஆசிரியர் மடல் **48**

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027
புரட்டாசி திங்கள்: 16
மலர் :27 இதழ் : 7
1.10.1996
விலை ரூ. 3.

திட்டங்களின் பலன் ஏழை - எளிய மக்களைச் சென்றடைய வேண்டும்:

முதல்வர் கலைஞர் உரை

''இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மாநிலத் திட்டக்குழு எனது தலைமையில் உருவாக்கப்பட்டதை நினைவிற்குக் கொண்டு வரும்போது மகிழ்ச்சி பல மடங்காகப் பெருகுகிறது. இந்தக் காலகட்டத்தில் பல விதமான அரசியல் பொருளாதார மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. பல்வேறு மாநில கட்சிகளின் ஆதரவோடு மைய அரசு அமைக்கப்

பட்டிருக்கும் இத்தருணத்தில் புதிய கண்ணோட்டத்தில் மாநில மைய அரசிடையேயான உறவு பார்க்கப்படுகிறது. கூட்டாட்சி அமைப்பில் வலுவான மாநிலங்களின் பங்கு உணரப்பட்டு வருகிறது. நாட்டின் வளர்ச்சியில் மாநிலங்கள் வகிக்கும் பங்கிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்பட்டு வருகிறது.

எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுற்று ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும் காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். மாநிலத்தின் வளர்ச்சி வேகத்தை ஊக்குவிக்கவும், வளர்ச்சியின் பயன் எல்லாப் பிரிவினருக்கும் சீராகச் சென்றடையும் வகையில் செயல்படுத்தவும் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். பல்வேறு துறைகளில் சிறந்த அனுபவம் வாய்ந்த உங்களைக் கொண்டு இப்பணியைச் செம்மையாகச் செயலாக்க முடியும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கும் காலகட்டத்தில் இதுவரை நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கவனத்திற்குக் கொண்டு வருவது அவசியமாகும். பல்வேறு திட்டங்களின் அடிப்படை நோக்கங்களில் முக்கியமானவை, வறுமையை ஒழிப்பதும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதும் ஆகும். இவ்விரு குறிக்கோளையும் எட்டுவதற்குத் தீட்டப்பட்ட திட்டங்களால் நமது மாநிலத்தில் எந்த அளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்று ஆராயும் பொழுது முழு மனநிறைவு ஏற்படாத நிலை உள்ளது.

தொடர்ந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் எண்ணிக்கை அகில இந்திய அளவைவிட கூடுதலாகவே இருக்கின்றது. மையத் திட்டக்குழு கணக்குகளின்படியாக இருந்தாலும், மூன்றில் ஒரு பங்கிற்கும் மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்றனர் என்ற நிலை இன்னமும் இருக்கின்றது. தமிழ்நாட்டில் தனி நபர் சராசரி வருமானம் இந்தியாவின் தனிநபர் வருமானத்தைவிட கூடுதலாக இருப்பினும் வறுமைக் கோட்டில் இருப்பவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பது, திட்டங்களின் பயன் அனைத்துத் தரப்பினருக்கும் குறிப்பாக ஏழை எளியவருக்குச் சென்றடையவில்லை என்பது வெளிப்படுகிறது.

வேலை வாய்ப்புக்கோரி பதிவு செய்து இருப்பவர்களின் எண்ணிக்கையும் தமிழகத்தில் கூடுதலாக இருக்கின்ற தகவலையும் சேர்த்துப் பார்க்கும்போது, திட்டங்களின் குறிக்கோள்களை எய்துவதற்கு நாம் மேற்கொண்டுள்ள செயல் முறைகளில் மாற்றங்கள் தேவையா என்றும் ஐயப்பாடு எழுகிறது. ஏழை எளிய மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டிடவும் அவற்றின் செயலாக்கம் குறிக்கோளை அடையும் வகையில் இருப்பதற்கான வழிமுறைகளை உருவாக்கவும், பொதுவான வளர்ச்சியின் பயன்கள் ஏழை எளியவரையும் அடையும் சூழ்நிலையை ஏற்படுத்தவும் திட்டக்குழுவின் ஆய்வுகளும், பரிந்துரைகளும் அடிகோல வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.''

– 14.9.1996ல் சென்னையில் நடைபெற்ற மாநிலத் திட்டக்குழுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய - உரையிலிருந்து.



அழகிய ரோஜா!

ஆங்கிலக் கவிஞர் மில்டனின் நெருங்கிய நண்பர் ஒருவர் ஒருநாள் அவரிடம் சொன்னார்: ''உங்கள் மனைவி ரோஜாவைப்போல மிகவும் அழகாக இருக்கிறார்!''

மில்டன், அதைக் கேட்டுவிட்டுப் பெருமூச்சுடன் சொன்னார்:'' உங்கள் ரசிப்புத் தன்மைக்கு நன்றி; ஆனால் ஒன்று. என்னால் அனுபவிக்க முடிந்ததெல்லாம் பெரும்பாலும் அந்த ரோஜாவின் முட்கள் தரும் வேதனையை மட்டுமே!''

214 390

முதல்வர் முன்னிலையில் ''மூலிகை பெட்ரோல்''

இராஜபாளையம் அருகில் உள்ள இடையார் பாளையத்தைச் சேர்ந்த ராமர்பிள்ளை என்பவர், மூலிகை மூலம் பெட்ரோல் தயாரிப்பதைக் கண்டு பிடித்துள்ளார். இவர், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் தண்ணீரிலிருந்து பெட்ரோல் தயாரிக்கும் முறையை 16.9.1996 அன்று செய்து காட்டினார்.

முதலில் அவர், சூடாக்கப்பட்ட தண்ணீரை மாண்புமிகு முதல்வர் அவர்களின் முன்னிலையில் கொண்டுவந்து வைத்தார். மூலிகையை எடுத்து மாண்புமிகு முதல்வரிடம் கொடுத்தார்; அவர், அதை எடுத்து வெந்நீரில் போட்டார். பின்பு எலுமிச்சம் பழத்தையும், உப்பையும் மாண்புமிகு முதல்வரிடம் கொடுத்து வெந்நீர்க் கலவையில் போடவைத்தார். பின்னர், ராமர்பிள்ளையும், அவருடன் வந்திருந்த பெண்மணியும் பெட்ரோல் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டனர். அந்தக் கலவையில் அவர்கள் ஏற்கெனவே தயாரித்து வைத்து இருந்த ரசாயனக் கலவையை ஊற்றினார்கள்.

பின்னர், ஏற்கெனவே தயாரித்து வைத்திருந்த மூலிகை பெட்ரோலில் இருந்து 10 சொட்டு, அந்தக் கலவையில் விடப்பட்டது. பின்பு அந்தக் கலவையை அப்படியே வெள்ளைத் துணியில் மூடிவைத்தனர். 15 நிமிட நேரம் மூடி வைத்திருந்தனர். இடைப்பட்ட நேரத்தில் ஏற்கெனவே தயாரித்து வைத்து இருந்த மூலிகை பெட்ரோலில் இருந்து ஒரு சொட்டு எடுத்து நுகர்ந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், பெட்ரோல் வாசனை வருவதாகக் கூறினார்.

''ராமர்பிள்ளையிடம் எப்படி இந்த மூலிகையைக் கண்டுபிடித்தீர்கள்?'' என்று கேட்கப்பட்டது. ராமர்பிள்ளை, '' 1973ல் மாணவர்களுக்குச் சமையல் செய்தபோது இந்தப்பச்சிலை தற்செயலாகத் தீப்பற்றி எரிந்தது. அது என்ன இலை என்று கண்டுபிடிக்க முயற்சி செய்தும் என்னால் முடியவில்லை. 10 ஆண்டுகள் தேடிக் கண்டுபிடித்தேன். என் வளர்ப்புத்தந்தை ராமய்யா எனக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்தார். நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் பெட்ரோல் தயாரிக்கலாம். அரசு உதவி செய்தால் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர்கள் தயாரிக்க முடியும்'' என்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் பெட்ரோல் தயாரிக்க அனுமதி வழங்கி இருக்கிறார். ஆவடியில் ஒரு இடம் ஒதுக்கி அவர் பெட்ரோல் தயாரிக்க உதவிசெய்வதாகவும் ''பேட்டன்ட்'' உரிமையை மத்திய அரசுதான் வழங்க வேண்டும், அதற்கு நாம் உதவி செய்யலாம் என்றும் கூறினார்.

மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட பெட்ரோலைப் பத்திரிக்கை நிருபர் ஒருவரின் மொபட் வாகனத்தில் ஊற்றி ஓட்டிப் பரிசோதிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மத்திய அமைச்சர் திரு. முரசொலிமாறன், முன்னாள் மத்திய அமைச்சர் திரு சிவசங்கர், தமிழக அமைச்சர் பெருமக்கள், அரசு தலைமைச் செயலாளர் திரு.கே.ஏ. நம்பியார், அரசு உயர் அலுவலர்கள், அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் நிபுணர்கள் கலந்துகொண்டனர். ராமர்பிள்ளையையும் அவரது குடும்பத்தினரையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பாராட்டி ஒரு பார்க்கர் பேனாவை ராமர்பிள்ளைக்குப் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார்.

இறுதியில் செய்தியாளர்கள், இந்தச் சாதனையைப்பற்றி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் கேட்டபோது - ''புரட்சியாகவும் தெரிகிறது; மிரட்சியாகவும் தெரிகிறது; உண்மையிலேயே பெட்ரோலாக இருந்தால் தமிழகத்தில் வறட்சியே இருக்காது!'' என்றார் அவர்.

கர்நாடகத்தில் தமிழ்

கர்நாடகத்தில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கான தகுதிபற்றிக் கர்நாடக அரசு ஒரு புதிய உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகவும், ஆசிரியர் பயிற்சி பெற விரும்புவோர் ஆங்கிலம், கன்னடம், இந்தி, மராத்தி, உருது, தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் ஏதேனும் இரண்டு மொழிகளைப் படித்திருக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் கூறப்பட்டிருந்தது தமிழ்மொழி அந்தப் பட்டியலில் இடம்பெறவில்லை.

இதனால், தமிழ்மொழி படித்தவர்கள் ஆசிரியர் பயிற்சியில் சேரமுடியாத நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையைப் போக்க வேண்டும் எனவும், அந்த உத்தரவைத் திரும்பப் பெறவேண்டும் எனவும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கர்நாடகம் சென்றிருந்தபோது, அம்மாநில முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் இந்த வேண்டுகோளை உடனே (4.9.96) ஏற்றுக்கொண்டார். தமிழ் மொழியும் அந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் அதற்கான திருத்தம் விரைவில் கொண்டுவரப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

ஆண்டுத் திட்டத்தில் ஊரக வளர்ச்சிக்கும் சமூக நலப் பணிகளுக்கும் முன்னுரிமை

1996-97 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற, மத்திய அரசின் திட்டக்குழு ரூ. 3700 கோடிக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இது சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைவிட ரூ. 500 கோடி அதிகமாகும். அதாவது 15.62 சதவீதம் கூடுதலாகும்.

மத்திய திட்டக்குழுவுடன் 20.9.96 அன்று கலந்துரையாடியதன் விளைவாக ஏற்கெனவே நிர்ணயித்திருந்த தொகையைவிட ரூ. 122 கோடி அதிகமாக நிதி உதவி அளிக்க மத்திய திட்டக்குழு இசைந்துள்ளது.

திட்டங்களை அறிவிப்பதோடு நின்று விடாமல், அவற்றின் பயன்கள் அனைத்தும் மக்களிடம் சென்றடைய வேண்டும் என்றால் சரியான தொடர் நடவடிக்கைகளும் கண்காணிப்பும் தேவை. இவையிரண்டும் உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகள் அமர்ந்தால் தான் சிறப்புற நடைபெற முடியும் என்பதை உணர்ந்த தனது அரசு பொறுப்பேற்ற மூன்று மாதங்களுக்குள்ளாகவே உள்ளாட்சி மன்றங்கள் தேர்தல்களை நடத்திடத் திட்டமிட்டு அதனைச் செயல்படுத்தியுள்ளது.

அக்டோபர் 12 ஆம் நாளுக்குப்பிறகு, உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் அனைத்தும் முடிவுற்று, மக்கள் பிரதிநிதிகள் உள்ளாட்சி அமைப்பு பொறுப்பேற்ற பின்னர், அடித்தளத்தில் உள்ள மக்களின் தேவைகளைக் கணக்கிட்டு அதற்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு முன், திட்டக்குழுவுடன் கலந்தாலோசிக்கப்படும் அதற்காகத் திட்டக்குழுத் துணைத் தலைவர் உறுப்பினர்கள் தமிழ்நாட்டுக்கு வருகை தர வேண்டும்.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் அணுகு முறை பற்றிய கருத்தினைத் திட்டக்குழுத் துணைத் தலைவர் பேராசிரியர் மதுதண்டவதே அவர்களுக்குக் கடிதம் மூலம் விரிவாகத் தெரிவிக்கப்படும்.

1996-97-ஆம் ஆண்டுத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடாகிய ரூ. 3700 கோடியில் ஊரக வளர்ச்சி மற்றும் வேளாண்மை மேம்பாட்டுக்கு 25 சதவீத ஒதுக்கீடும், சமூக நலப் பணிகளுக்கு 25 சதவீதத்திற்கும் அதிகமான ஒதுக்கீடும் - அதே போல மின் திட்டங்களுக்கு 18 சதவீத ஒதுக்கீடும் செய்வதன் மூலம் இத்திட்டங்களுக்கு நடப்புத் திட்ட ஆண்டில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

– 20.9.96 அன்று புதுடில்லி மைய திட்டக்குழு கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து

தமிழகத்தில் காந்தியார்

''தமிழர்களை நான் சந்திக்கும்போது, எனது உடன் பிறந்தவர்களைச் சந்திப்பது போன்றே உணர்கிறேன். எத்தனையோ ஆண்டுகளாக நான் போற்றி வளர்த்து வந்துள்ள மனோபாவம் இது. இதற்குக் காரணமுண்டு.

''தென்னாப்பிரிக்க இந்தியரிடையேயுள்ள பல்வேறு பிரிவினரில் போராட்டத்தின் உக்கிரத்தைத் தாங்கியவர்கள் தமிழர்கள்தான் என்று நான் கருதுகிறேன். சத்தியாக்கிரகத்தில் உயிர்த்தியாகம் செய்தவர்களில் மிக அதிகமானவர்கள் தமிழினத்தைச் சேர்ந்தவர்களே! நாராயணசாமியின் எலும்புகள் டெலகுடா வளைகுடாவில் மூழ்கிக் கிடக்கின்றன. அவர் ஒரு தமிழர். நாடு கடத்தப்பட்டவர்கள் தமிழர்கள். கடைசிவரை போராடியவர்களும், கடைசியாகச் சிறையிலிருந்து வெளியில் வந்தவர்களும் தமிழர்களே!

''தெருவில் விலை கூறி விற்பனை செய்த வாணிகத்தை அறவே இழந்தவர் அனைவரும் தமிழர்களே. டால்ஸ்டாய் பண்ணையிலிருந்த சத்தியாக்கிரகிகளில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. இந்தியாவின் மிகச் சிறந்த பாரம்பர்யத்திற்குச் சான்று தாங்கள்தான் என்பதைத் தமிழர்கள் மெய்ப்பித்து இருக்கிறார்கள். எள்ளளவும் மிகைப்படுத்தி இதை நான் கூற வில்லை.

''சிறைக்குச் சென்ற பெண்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. கைதியாகத் தயார் என்று அறைகூவல் விடுத்து, அதிகாரிகளை மீறியவர்கள், நியூகாசிலில் வீடு வீடாகச் சென்று, சுரங்கம் சுரங்கமாகச் சென்று வேலை செய்யும் கருவிகளைப் போட்டுவிட்டு வேலை நிறுத்தம் செய்யுமாறு தொழிலாளர்களை வேண்டிக் கொண்டவர்கள் யார்? மீண்டும் சொல்கிறேன், அவர்கள் எல்லாம் தமிழ்ச் சகோதரர்களே! பெண்களிடையிலிருந்து போராட்டத்திற்கு அணிவகுத்துவந்தவர்கள் யார்? உறுதியாகச் சொல்லுகிறேன், தமிழர்களே! ஒரு ராத்தல் ரொட்டியும், ஒரு அவுன்ஸ் சக்கரையும் உண்டு வாழ்ந்தவர்கள் யார்? பெரும்பாலும் தமிழர்களே!

''இந்த விஷயத்தில் கல்கத்தாவைச் சேர்ந்தவர்களின் தியாகத்திற்கும் நாம் உரிய பங்கை அளிக்க வேண்டுமென்றாலும், அவர்கள் கடைசிப் போராட்டச் சங்கநாதத்திற்கு மிகச் சிறந்த முறையில் செவி சாய்த்தார்கள் என்றாலும் — தமிழர்களைப் போன்று அவ்வளவு சிறந்த முறையில் அல்ல.

''மீண்டும் மீண்டும் சிறைக்குச் சென்றவர்களின் எண்ணிக்கையை நினைவில் கொண்டு பார்த்தாலும், அதில் தமிழர்களுடைய

எண்ணிக்கையே அதிகமிருக்குமென்று நான் கருதுகிறேன். ஆகவே, தமிழர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றுக்கு வரும்போது ரத்த பாசமுடைய கூட்டம் ஒன்றுக்கு வருவதாகவே உணர்கிறேன். அவ்வளவு ஆண்மை, அவ்வளவு நம்பிக்கை, அவ்வளவு கடமை உணர்வு, அவ்வளவு உயர்ந்த எளிமை தங்களிடமிருக்கிறதென்பதைத் தமிழர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

''நான் பேசியது அவர்களுடைய மொழியிலல்ல. அவர்களுடைய மொழியில் பேச வேண்டுமென்று எனக்கு எவ்வளவோ, விருப்பந்தான், ஆனாலும், பேச முடியவில்லை. எனினும் தொடர்ந்து அவர்கள் உறுதியாகப் போராடினார்கள். அது மகத்தான, வளம் பொருந்திய அனுபவம். அதை எனது வாழ்நாள் இறுதிவரை கருவூலம் போல் போற்றுவேன்.

''தமிழர்கள் எதற்காகப் போராடினார்களோ. அதை அவர்கள் அடைந்து விட்டார்கள். பிரிட்டிஷ் குடியேற்ற நாடு ஒன்றில் பிறந்த அவர்கள் கேப் பகுதியில் நுழைய உரிமையிருக்கிறதென்பதை நிலைநாட்டப் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்து விட்டார்கள்.

''சட்டங்கள் நியாயமான முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்று அவர்கள் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்து விட்டார்கள். ஆரஞ்சு ப்ரீஸ்டேட்டில் சட்டத்தை அமல் நடத்துவதில் நிற உணர்ச்சி காட்டப்படுவதை எதிர்த்து அவர்கள் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்து விட்டார்கள். மூன்று பவுன் வரி என்பது கடந்த கால விஷயமாகப் போய்விட்டது.

''திருமணச் சிக்கலைப் பொறுத்தவரை சிறைக்குச் சென்ற நமது அன்புச் சகோதரிகள் எல்லாம் இன்று தங்கள் கணவன்மார்கள் என்று கூறிக்கொள்ளலாம். நேற்றோ ஒரு நண்பர் வேண்டுமானால் அபிமானத்துடன் அவ்வாறு கூறியிருப்பாரே யொழிய சட்டப்படி அவர்கள் மனைவிமார்கள் அல்ல.''

(தமிழ்நாட்டில் காந்தி)

கற்களால் கட்டப்படும் கோயில்களை விட, மனித உடல்களே உண்மையான கோயில்களாகும்.

பொய்யை உண்மையாலும், விரோதத்தை அன்பாலும், ஆத்திரத்தை சகிப்புத் தன்மையாலுமே வெல்லலாம்.

– காந்தியடிகள்

தங்கக் கட்டிகளாக இருக்கக்கூடாது. அதை எடுத்துப் பயன்படுத்தி, பளபளப்புள்ள நல்ல ஒளியுள்ள தங்கமாக ஆக்க வேண்டும்.

அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை; அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயம்.

– அறிஞர் அண்ணா

அட்டைப்பட விளக்கம் :

முதல் அட்டை :

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு சங்கர்தயாள் சர்மா அவர்கள் சென்னை வந்தபோது விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வரவேற்றார். (19.9.1996)

இரண்டாம் அட்டை :

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் மூலிகையிலிருந்து பெட்ரோல் தயாரிக்கும் முறையினை திரு. இராமர்பிள்ளை என்பவர் செய்து காட்டினார். (16.9.1996).

நான்காம் அட்டை :

- காந்தியடிகள் பிறந்தநாள் நினைவாக

அறிவு வெளிச்சம் பரப்புவோரை வாழ்த்துவோம்!

ஆசிரியர் நாளான 5.9.96 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஒரு வாழ்த்துச் செய்தி விடுத்திருந்தார்; அதன் விவரம் வருமாறு:

நாடு போற்றும் நல்லாசிரியர்திலகமான மறைந்த குடியரசுத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பிறந்த செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாளை ஆசிரியர் நாள் விழாவாகக் கொண்டாடுகிறோம்.

''ஒரு நாட்டை உருவாக்கும் உண்மையான மாந்தர்கள் ஆசிரியர்களே'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அணு ஆயுதங்களைவிட ஆற்றல் மிகுந்த அறிவாயுதங்களை உருவாக்குபவர்கள் ஆசிரியப் பெருமக்களே. இவர்களுள் தகுதியும் திறமையுமுள்ளவர்களைத் தேர்ந்தெடுத்து, தமிழக அரசு ஆண்டுதோறும் 'நல்லாசிரியர் விருது' வழங்கிச் சிறப்பிக்கின்றது. இந்தப் பண்பாளர்களைப் பாராட்டும் இந்நாளில், ஆசிரியர்கள், மாணவர்கள் தலைமுறையினரிடையே மரபு வழிப் பண்பாட்டையும் மனித நேயத்தையும் ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் வளர்ப்பதோடு மட்டுமின்றி, ஊக்கமும் அளிக்க வேண்டுமென்று உளமாரக் கருதுகிறேன். மேலும், கி.பி. 2000 ஆண்டிற்குள் அனைவருக்கும் கல்வி' என்கிற இலட்சியத்தை முன்னிறுத்தி இருண்ட வீடுகளில் கல்வி விளக்கைப் பொருத்தி இருட்டு வீதிகளில் அறிவு வெளிச்சம் பரப்பி, நமது இலக்கினை எய்துவதற்குத்தமிழக அரசு மேற்கொண்டுள்ள முனைப்பான செயல் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்க வேண்டியது ஆசிரியர்களின் தலையாயப் பொறுப்பு என்பதையும் இந்நாளில் நினைவுகூறுதல் பொருத்தமுடையதாகும்.

இந்த நன்னாளில் ஆசிரியர்கள் உள்ளந்தோறும் உவகை ஊற்றெடுக்க, அவர்கள் இல்லந்தோறும் இனிமை பூத்திருக்க அனைத்து தரப்பினரும் வாழ்த்துவோம். பாராட்டுவோம்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் சிந்தனைகள்

- கல்வியின் குறிக்கோள், நல்லதொரு நிகழ்ச்சியை உண்டாக்க வேண்டும். அவ்வாறின்றி, அறிவை மட்டும் புகட்டுவதும், பரிமாறிக் கொள்வதும் மட்டுமே கல்வியினுடைய குறிக்கோள் ஆகிவிடாது.
- மிக நுண்ணிய செய்திகளை மனத்தில் திணித்துமணம்செய்வது, அனைவருக்கும் எடுத்துரைப்பது மட்டுமே கல்வியல்ல; அது, பார்வையற்றவர்களுக்குக் கண்களைக் கொடுப்பதற்குப் பதிலாக, கண்போன்ற எதையோ அவர்களுக்கு ஒட்ட வைப்பது போலாகிவிடும்.
- மக்களுக்கு நல்ல புத்தியும், எதிலும் சரியான தீர்வு காணக்கூடிய சிறந்த ஆலோசனையும் கொடுப்பதே படித்த பட்டதாரிகளின் அன்றாடக் கடமையாக இருக்க வேண்டும்.
- ஆசையைக் கிளறும் பொருளை அனுபவிப்பதால், அந்த ஆசை என்றும் திருப்தி அடைவதில்லை. எரியும் நெருப்புக்கு எண்ணெய் ஊற்றுவது போல, அந்த ஆசையானது மென்மேலும் வளர்ந்து கொண்டே போகிறது.
- அறிவினாலோ, சமுதாயத்தாலோ உருவாகின்ற கொடுமைகளுக்கு ஆதரவளிக்கும் எந்தப் பண்பாடும் பண்பாடே அல்ல; இவ்வுலகின் சுதந்திர ஆன்மாக்கள் - பண்பாடு மிகுந்த, கரைகாணாக் கல்வியால் சிறந்த பெரியோர்களேயாவர். இந்தியப் பண்பாட்டில் அடிப்படைத் தத்துவம், மனிதத்தன்மையை ஏற்படுத்திக் கொள்வதிலேயே அமைந்திருக்கிறது. இந்த உலகம் முழுவதும் ஒரே குலம்; ஒரே குடும்பம்.



டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது

ஆசிரியர் நாள் விழா நிகழ்ச்சி 7.9.96 அன்று கலைவாணர் அரங்கத்தில் அரசு சார்பில் சிறப்புடன் நடைபெற்றது. 230 தலைமை ஆசிரியர்கள் உட்பட 288 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதும், 10 ஆம் வகுப்பு, +2 வகுப்புகளில் சிறப்பிடம் பெற்ற 178 மாணவர்களுக்குப்பரிசும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்வழங்கினார். விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இனி இந்த விருது ''டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது'' என்றே அழைக்கப்படும் எனக்குறிப்பிட்டார்.

தேவநேயப் பாவாணர் குடும்பத்திற்கு ரூபாய் 20 இலட்சம் நிதியுதவி

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில்' தனித்தமிழ் இயக்கம் கண்டவர், தமிழர்களுடைய உரிமைகளுக்காக வாதிட்டவர், தமிழக அரசின் சார்பில் 'அகர முதலி' என்ற ஒரு அருமையான கருவூலத்தைஏற்படுத்துவதற்குக் காரணகர்த்தாவாக இருந்த-தேவநேயப் பாவாணர் குடும்பத்தாருக்கு ரூபாய் 20 இலட்சம் பரிசுத் தொகையும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் வழங்கப் பட்டது.

தென்னிந்திய நடிகர்சங்கப்பாராட்டுவிழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அறிவிப்பு

"ஒரு கோரிக்கை -தம்பி ராதாரவி சொன்னார், ''நடிகர் சங்கம் இருக்கிற தெருவுக்கு ஹபிபுல்லா சாலை என்று பெயர் இருக்கிறது; அதை மாற்ற வேண்டும்'' என்று சொன்னார். ஹபிபுல்லா சாலை என்பது ஒரு பெரியவருடைய பெயரால் அந்தக் காலத்து மாநகராட்சி மன்றத்தால் சூட்டப்பட்ட பெயர், அதை மாற்றுவது அவ்வளவு சரியல்ல; அது மாத்திரமல்ல, ஹபிபுல்லா என்பது ஒரு இஸ்லாமியருடைய பெயர். அந்தப் பெயரை மாற்றி சிறுபான்மை மக்களுடைய உள்ளத்திலே ஒரு துளி அளவுகூட மன உளைச்சலை ஏற்படுத்தக் கூடாது என்பதை இங்கே எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

எடுத்த எடுப்பிலேயே, முதல் கோரிக்கையையே ஏற்றுக் கொள்ளவில்லையே, முதல் கோணல், முற்றும் கோணல் ஆகிவிடுமோ என்று ராதாரவியோ, வி.கே. ஆரோ, மற்றவர்களோ கவலைப்பட வேண்டாம்.

ஏதோ ஒரு மருத்துவமனை கட்டியிருப்பதாகவும், அதற்கு மருந்து இல்லை என்றும் அதற்கு அரசு அந்த மருத்துவமனை மருந்துகளை வழங்க வேண்டும்என்றும்ராதாரவி கேட்டிருக்கிறார். நல்வாழ்வுத்துறை அமைச்சர் நண்பர் வீராசாமியினிடத்திலே உடனே சொன்னேன். ஆண்டொன்றுக்கு 50,000 ரூபாய் மருந்துகள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். மருந்துகளைத்தான் வழங்க முடியும். நோயாளிகளை வழங்க முடியாது. அதை அவர்களே பார்த்துக் கொள்ள வேண்டும்.

வீடுகளைப் பொறுத்தவரையில் கோடம்பாக்கம், வளசரவாக்கம் இந்தப் பகுதிகளில் அவர்களுடைய கோரிக்கையைப் படித்தவுடனேயே அண்ணா மாவட்ட ஆட்சியரிடத்திலும், அதைப்போல சென்னை மாவட்ட ஆட்சியரிடத்திலும் சொல்லி அந்த வீடுகளுக்கான ஏற்பாடுகளைக்கவனிக்கஏற்கெனவேஆணை பிறப்பித்திருக்கிறேன். அவ் வீடுகள் கட்டி முடிக்கப்படும். அப்படி கட்டி முடிக்கப்படுகின்ற அந்த வீடுகளுடைய குடியிருப்புக்களுக்கு, நடிகர்கள் வாழக்கூடிய அந்தக் குடியிருப்புகளுக்கு ''நடிகவேள் ராதா குடியிருப்பு'' என்று பெயர் வைக்கப்படும் என்பதையும் நான் இங்கே அறிவிக்கிறேன். காரணம், 'கலைஞர்' என்ற பெயரை எனக்கு வழங்கியவர் அவர். எனவே, அவருடைய பெயரால் 'நடிகவேள் ராதா குடியிருப்பு' என்ற பெயரில் அந்தக் குடியிருப்புக்கள் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடிகர் சங்கத்தின் பெரும்கடனை அடைப்பதற்காக நட்சத்திர இரவு நடத்த வேண்டும். அதற்கு நான் தலைமை தாங்க வேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். நான் இந்தத் தொல்லை எல்லாம் வேண்டாம் என்று அரசின் சார்பில் ஒரு உறுதிமொழியை இங்கு அளிக்கின்றேன். இவர்கள் ஸ்டேட் வங்கியிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக்கடனை 'ஸ்டேட்' (மாநில அரசு) தீர்க்கும் என்ற உறுதியை நான் வழங்குகின்றேன். ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வளர்ந்துவிட்ட அந்தக் கடனை, கழக அரசு இந்த ஆண்டுக்குள் நிச்சயமாகத் தீர்க்கும். தென்னிந்திய நடிகர் சங்கத்தை சுதந்திரமாக உங்களுடைய கைகளிலே ஒப்படைக்கும். என்ற உறுதிமொழியைத் தந்து உங்களுடைய பாராட்டுக்கு நன்றி தெரிவித்து என்றென்றும் உங்களிலே ஒருவன் என்கின்ற முறையிலே வாழ்த்துகின்றேன்."

– 12.9.1996ல் கலைஞர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 'கலைச்செல்வம்' விருது வழங்கும் விழாவில் பேசியதிலிருந்து

மின் துறைகளில் வெளிநாட்டார் முதலீடு:

மாண்புமிகு முதல்வர் வரவேற்பு

"தொழில் வளர்ச்சிக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவக்கூடிய வகையில், சாதகமான சூழ்நிலையை முதலீட்டாளர்களுக்கு அளிக்கத் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்கு மிகவும் தேவையானது அத்தியாவசிய உள் கட்டமைப்புகள், அதிலும் குறிப்பாக மின்சாரம்தான் மிகத் தேவை என்பதை நாங்கள் நன்றாக அறிவோம். எனவே, மின்சார உற்பத்தியைக் கூடுதலாகவும், டிரான்ஸ் மிஷன்களை மேம்படுத்தி மின்சார வினியோகத்தை அதிகரிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறோம்.

மத்திய மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து பெறுவது உள்பட நமது தற்போதைய மின்சக்தித் திறன் 6,579 மெகாவாட்ஸ் ஆகும். இதுவரை, அதிக அளவில் வழங்கப்பட்ட மின்சாரம் 4555 மெகாவாட்ஸ் ஆகும். அதிகபட்சமாகத் தினசரி பயன்படுத்தப்பட்ட மின்சார அளவு 96 மில்லியன் யூனிட்டுகள்.

இன்றைய தேதியில் தமிழகத்தில் மின்வெட்டு என்பது இல்லை; தமிழகத்தில் ஆண்டுதோறும் 10 சதவிகிதம் மின் திறனை அதிகரிக்க முடியும்.

ஒன்பதாவது திட்ட கால இறுதியில் 9020 மெகாவாட்ஸ் தேவையானதாக இருக்கும். 49,200 மில்லியன் யூனிட்டுகள் எரிசக்தி தேவையானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சுதந்திரமான மின்சாரத் தயாரிப்பாளர்களுக்காக மத்திய தாராளமயம் மற்றும் சர்வதேசக் கொள்கையின் அடிப்படையில் இதுவரை 10,650 மெகாவாட்ஸ் திறன் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் (தமிழகத்தில்) 16 நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

1998 ஆம் ஆண்டு இறுதியில் தனியார் மின்சாரத் தயாரிப்பாளர்கள் மூலம் 200 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் என்றும், 2002 ஆம் ஆண்டில் 3000 மெகாவாட்ஸ் கிடைக்கும் என்றும் 2005 ஆம் ஆண்டில் 9000 மெகாவாட்ஸ் கிடைக்கும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். மின் விநியோகத்திற்கான வசதிகள் ஏற்படுத்துவது குறித்து ஏற்கெனவே திட்டமிட்டுள்ளோம். அதைச் சரியான நேரத்தில் நாங்கள் நிறைவேற்றுவோம்.

இந்த மாநிலத்தில் தனியார்துறையில் கூடுதல் மின் உற்பத்தி நிலையம் ஏற்படுத்துவதற்கான தேவையான இடங்களை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

தனியார் துறையில் உள்ள பிரிமியர் மின் நிறுவனம் மற்றும் நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன் தேசிய அனல் மின்கழகம் சென்னையிலிருந்து 80 கி.மீ. தூரத்தில் உள்ள செய்யாற்றில் 2000 மெகாவாட்ஸ் திறனுள்ள அனல் மின் நிலையத்தை ஏற்படுத்த உள்ளது.

2000 ஆவது ஆண்டிற்குப் பிறகுதான் தனியார் உற்பத்தியாளர்களிடமிருந்து மின்சாரம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எனவே, அடுத்த நான்காண்டுகளில் நமக்குத் தேவையான மின்சாரத்தைப் பெறுவதற்காக 100 மெகாவாட்ஸ் திறனில் நீர்ம எரிபொருள் அடிப்படையிலான சில சிறிய மின் நிலையங்களை அமைக்க உள்ளோம்.

தமிழக மின்வாரியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் தமிழகத்தில் 20 இடங்களில் 40 மெகாவாட்ஸ் முதல் 100 மெகாவாட்ஸ் திறனுடன் கூடிய மின் நிலையங்களை ஏற்படுத்த ஏலம் கோரியுள்ளது.

ஏலம் கேட்டவர்களை முறையாகத் தேர்வு செய்து, நியாயமான முறையில் அவர்களுக்கு ஒப்பந்தம் தருவதில் சர்வதேசப் போட்டியின் தகுதியை அடிப்படையாகக் கொள்வதில் நாங்கள் திடமாக உள்ளோம். எனவே, அந்த ஏலத்தில் பங்குகொள்ள ஆர்வம் கொண்ட உள்நாடு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை நான் அழைக்கின்றேன்.

இந்த நாட்டில் முதலீடுகளுக்கான நிர்பந்தம் இருப்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து இந்த மாநிலத்திற்கான மின் துறைக்கு முதலீடுகளை நாங்கள் வெகுவாக வரவேற்கிறோம்.

எரிசக்தியைப் பாதுகாப்பதில் தமிழக அரசு தீவிரமாகவே உள்ளது. எரிசக்தியைப் பாதுகாப்பதன் மூலம் முதலீட்டுத் தேவைகளைக் குறைக்கவும் சுற்றுச்சூழல் மாசுகளைக் கட்டுப்படுத்தவும் இயலும் என்பதை நாம் அறிவோம்.

வீடுகள், வேளாண்மை இடங்கள், தொழிற்சாலைகள், வர்த்தகப் பிரிவுகளில் உள்ளவர்கள் திறன் வாய்ந்த எரிசக்தி விளக்குகள் மற்றும் பொருட்களை அதிக அளவில் வாங்க, அவர்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

தொழிற்சாலைகளில் எரிசக்தி பயன்படுத்தியது தொடர்பாகத் தணிக்கை முறையினைக் கண்டிப்பாக அமல்படுத்த வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

புதுப்பிக்கக்கூடிய எரிச்சக்தி ஆதாரங்களைப் பொறுத்தவரையில் அவ்வகை எரிசக்தி ஆதாரங்களை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாகவே உள்ளது.

காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் மிகவும் முன்னணியில் உள்ளது என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே அமைக்கப்பட்ட காற்றாலை மூலம் 555 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி ஆகிறது. காற்றாலைகள் மூலம் தமிழகத்தில் 2000 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்கிற நிலைமையுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 100 மெகாவாட் அதில் அதிகரிக்கும். தமிழ்நாடு மின்வாரியம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை விலைக்கு வாங்கும்.

இந்தியா மற்றும் வெளிநாட்டு வளர்ச்சியாளர்கள் மின்சாரம் மற்றும் அதன் தொடர்பான துறைகளுக்கு இந்த மாநிலத்தில் முதலீடு செய்வதை வரவேற்கிறேன் என்பதை மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

மேலும், மாநிலத்தில் அமலாக்கும் திட்டத்திற்கு அவர்களுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளையும் இந்த அரசு வழங்கும்."

– முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தியத் தொழிலகக் கூட்டமைப்பின் சார்பில் 11.9.1996 அன்று எரிசக்தி உச்சி மாநாடு - 96 ஐ (எனர்ஜி சம்மிட் -96) சென்னையிலுள்ள பார்க் ஷெராட்டன் அரங்கில் துவக்கிவைத்து ஆற்றிய உரையிலிருந்து.

மாணவர் பக்கம்

அன்பு என்பது!..

ஆர். இரத்தினம்

குடும்பத்தில் அன்றாடம் அன்பைப் பறிமாறிக் கொள்வதின் முக்கியத்தை ஒரு ஆங்கிலப்பத்திரிக்கை எடுத்துச் சொல்கிறது. ''இன்று உங்கள் குழந்தையை கட்டித்தழுவி அரவணைத்தீர்களா?'' என்று ஒரு கேள்வியை எழுப்பியது. இவ்வாறு செய்தால், குழந்தை ஆரோக்கியமாகப் பெற்றோரிடம் பாசத்துடன் வளரும். சாலை விபத்தைத்தடுக்க மேல் நாட்டில் கணவன் வீட்டைவிட்டுப் புறப்படுமுன் மனைவியை அவனுக்கு அன்பு முத்தம் கொடுத்து வழியனுப்பச் சொல்லு கின்றார்கள்.

மனிதனின் ஆரோக்கியத்திற்கு அன்பு



இன்றியமையாதது. அன்பு கிடைக்காதபோது மனிதன் நோய்வாய்ப்படுகிறான். டாக்டர் பிளாஷ்னர் என்பவர் ''நோய், அன்பைப் பெறுவதற்கு ஓர் குறுக்கு வழி'' என்று சொல்கிறார். தினமும் உணவு தேவைபோல் அன்பும் தேவை. அன்பு கிடைக்காதபோது நோய்வாய்ப்பட்டு ஒருமித்த கவனிப்பையும், அன்பையும் பெற்றுக்கொள்கிறான். முக்கியமாகப் பலவீனமுள்ளவர்களான குழந்தைகளும், பெண்களும், உணர்ச்சிகளையும், பிரச்சனைகளையும் சமாளிக்கத் தெரியாமலும், அன்பைக் கேட்கத் தெரியாமலும் நோய்வாய்ப் படுகிறார்கள். நோய்வாய்ப்பட்ட பொழுது அன்பைப் பொழியாமல், குறைவாகக் கொடுத்து உடல் நலமாக இருக்கும் பொழுது அவர்களுக்குத் தினமும் தேவையான அன்பைக் கொடுப்பது நல்லது.

நோய்க்கு மருந்து

தொடு உணர்வு மூலம் அன்பைப் பரிமாறிக் கொள்ளும் பொழுது, அன்பைப் பெறுபவனுக்கு ஒருவித சந்தோஷமான உணர்வு உண்டாகிறது. வியாதியைக் குணப்படுத்தும் சக்தி அவனுள் பாய்கிறது. அதனால் சீக்கிரம் குணமாகி விடுகிறான். வியாதிகளுக்கு அன்புதான் தலைசிறந்த மருந்து. வியாதிகளைக் குணப் படுத்துவதில் 90% அன்பின் பங்கு, 10% மருந்தின் பங்கு.

வியாதி உள்ளவர்களைக் குணப்படுத்து வதில் அன்பு ஒரு பெரிய சாதனையைச் செய்கிறது. கோபமும், படபடப்புமாக இருப்பவரைச் சாந்தமாக்கி, அவருக்குள்ள இரத்த அழுத்தம், குடல்புண், வலிகள் போன்ற வியாதியைக் குணப்படுத்துகிறது. நோய்வாய்ப்பட்டு பயமோ, சோர்வோ உள்ளவர்களை அன்பு ஒரு நடுநிலைக்குக் கொண்டுவந்து கிருமிகளை எதிர்க்கும் சக்தியை உயர்த்தி, காய்ச்சல், பேதி போன்ற வியாதிகளைக் குணப்படுத்துகிறது. நோய்வாய்ப்பட்ட மனிதனை அன்பு விரைவில் குணப்படுத்த உதவுகிறது. மருந்தின் தேவை குறைகிறது.

நன்மைகளும் உண்மைகளும்

ஒரு குடும்பத்தில் ஒரு பையன் நன்றாகப் படிக்கவில்லை, ஒரு குடும்ப ஆலோசகர் அவனைத்தன் அருகில் வைத்துக்கொண்டு அவன் கழுத்திலும் முதுகிலும் அன்பாக வருடிவிட்டு, சில கேள்விகள் கேட்டார். வருடியபின்பு, அவன் அமைதியடைந்து நடுநிலைக்குவந்து பகுத் தறிவை உபயோகப்படுத்தி நல்ல முடிவு எடுத்தான்.

கே: படித்தால் யாருக்கு நல்லது?

பதில் : எனக்கு

கே : இப்போது படிப்பது போதுமா? இன்னும் படிப்பது நல்லதா? எப்பொழுது எழுந்திருக்கிறாய்? இன்னும் அதிகாலையில் எழுந்திருக்கலாமா? அப்படியென்றால் ஒரு கால அட்டவணையைப் போட்டுக்கொள். எப் பொழுது எழுந்திருப்பது, படிப்பது, பள்ளி செல்வது, திரும்புவது, விளையாடுவது, திரும்பி வந்து படிப்பது, தூங்குவது என்று ஒரு அட்டவணையைத் தயாரித்துக்கொள். அதை நீ படிக்குமிடத்தில் சுவற்றில் ஒட்டி வைத்துக்கொள்.

இவ்வாறு கேள்விகள் கேட்ட பின்பு, அவன் நல்ல முடிவுக்கு வந்ததுபோல் செயல்பட்டான். அன்பாகச் சொல்லி அவன் படிப்பையும் எதிர்காலத்தையும் அவனிடமே ஒப்படைத்து விடுகிறோம். அடித்தோ திட்டினாலோ கேட்காத பையன் அன்புக்குப் பணிந்து செயல்பட ஆரம்பித்தான். திட்டுவது ஆணியை சம்மட்டி எடுத்து அடிப்பது போன்றது. ஆணி வளைந்து விடும். வேலை பூர்த்தி ஆகாது, சக்தியும் வீண், அன்பினால் காரியத்தை எளிதாக முடித்துக் கொள்ளலாம். இவ்வாறு செய்யும் பொழுது ஆணியை சுத்தியலால் அடிப்பது போன்று, காரியமும் முடிகின்றது. சக்தியும்குறைவாகச் செலவாகிறது.

பேயாவது பூதமாவது

குழந்தைகளுக்குக் காய்ச்சல் வரும்போது அன்று பள்ளியில் என்ன நடந்தது என்று கேட்டு பள்ளியில் ஏற்பட்ட பயத்தைப் போக்கி அன்பாக வருடியபின் காய்ச்சல் குறைந்தது. ஒரு குழந்தையிடம் ஒரு இருட்டறையைக் காட்டி 'பேய், பேய்' என்று மற்றொரு மாணாக்கன் பயமுறுத்தினான். அந்த அறையின் இருட்டுப் பகுதி விளக்கைப் போட்டு அங்கு பேய் இல்லை என்று குழந்தையிடம் நிரூபித்து அதை வருடிவிட்டபின் குழந்தையின் பயமும் காய்ச்சலும் போய்விட்டது. உடலில் பல பாகங்களில் வலி உள்ளவர்களுக்குத்-தலைவலி உள்ளவர்களுக்கு அன்பாகத் தடவிக் கொடுத்தால் அவைகள் போய்விடும்.

பெற்றோர்கள் இருவரும் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்தவர்கள். குழந்தைகளை அந்த ஊரிலேயே உள்ள சிறந்த பள்ளியில் தங்களுக்கு மீறிய செலவில் சேர்த்தனர். குழந்தைகள் வீட்டில் ஒரு உதவிகூட செய்வதில்லை. தாய் ''உங்களுக்காகப் பாடுபடுகிறேனே! உதவி செய்யக்கூடாதா?'' என்று திட்டினாள். ஒப்புக் காகச் சிறு வேலை செய்துவிட்டுப் படிப்பு இருக்கிறது என்று சென்றுவிடுவார்கள். அன்பாக நெற்றியிலும் பிடரியிலும், தோள்பட்டையிலும், முதுகிலும் வருடி உதவி செய்யச் சொன்னபோது மாங்கு, மாங்கு என்று தானாகவே வேலையைத் தேடி உதவி செய்தார்கள். குடும்பத்தில் அமைதியும், மகிழ்ச்சியும் ஆரோக்கியமும் பெருகியது.

மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர் காலையில் வேலையை ஆரம்பிக்கு முன்பு. வட்டமாகச் சுற்றி ஒருவர் பின் ஒருவராக நின்று கொண்டு மற்றவர் தலையிலும், கழுத்திலும், முதுகிலும், அன்பாக வருடிவிட்டுக்கொண்டு பின்பு வேலைகளை ஆரம்பித்தனர். அன்பாக வருடுதல் - சோர்வைப் போக்கி, வேலையை, அமைதியாகவும், சந்தோஷமாகவும் ஆரம்பிக்க உதவுகிறது.

சுருங்கச் சொன்னால், நிபந்தனையற்ற அன்பை மெய் மூலமாகப் பறிமாறிக் கொள்வது, மனித வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகவும் ஆரோக்கியமாகவும் அமையப்பேருதவி செய்யும். நினைவில் வையுங்கள்.

மலரும், தலையும்!

மேனாட்டறிஞர் பெர்னார்டு ஷா, வண்ண மலர்களைப் பார்த்துக் களிக்கும் பழக்கம் உள்ளவர்; இதற்காகவே அடிக்கடி அவர் பூஞ்சோலைகளை நாடிச் செல்லுவதுண்டு.

ஒருநாள் அவரிடம் அவர் நண்பர் ஒருவர் கேட்டார்: "பூக்களின் மேல் இத்தனை ஆசை கொண்டுள்ள நீங்கள், உங்கள் வீட்டில் ஏன், ஒரு பூத்தொட்டிகூட வைத்துக் கொள்ளவில்லை?''

அதற்கு, பெர்னார்டு ஷா சிரித்தபடி இவ்வாறு பதில் சொன்னார்: "எனக்குச் சிறு குழந்தைகளைப் பார்த்து ரசிப்பது கூடத்தான் நிரம்பப் பிடிக்கும். அதற்காக, அக் குழந்தைகளின் தலைகளைக் கிள்ளிவந்து வீட்டில் வைத்துக் கொள்ளவா முடியும்?"



நூல்நயம்

திராவிடத் தந்தை
டாக்டர் சி. நடேசனார்

ஆசிரியர் : ஏ.எஸ். வேணு
வெளியிட்டோர்:
ஜஸ்டிஸ் பப்ளிகேஷன்ஸ்
2, நாகல்மேடு,
வேகவதி நதி ரோடு,
சின்ன காஞ்சிபுரம் - 631 503.
விலை : ரூ. 5.00 பக்கம் : 52

1912 ஆம் ஆண்டிலேயே சமுதாயத்தில் மலிந்து கிடந்த உயர்வுதாழ்வு சாதிக்கொடுமைகளை எதிர்த்துப் போராடிய நீதிக்கட்சித் தூண்களில் ஒருவரான நடேசனாரைப் பற்றிய நூல் இது. தந்தை பெரியாரோடும், அறிஞர் அண்ணாவோடும் நெருங்கிப் பழகிய பெருமையாளர் நூலாசிரியர்.

கருணையம்மன் அந்தாதி

ஆசிரியர் : நா. பாக்கிய சுந்தரி
வெளியிட்டோர் : உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113.
விலை : ரூ. 22.00

தமிழிலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்களுக்குக் குறிப்பிடத்தக்க இடம் உண்டு; அப்படிப்பட்டவற்றில் ஒன்றே இந்தப் பிரபந்த நூல். இதில் தேவாரத் திருத்தலங்களில் ஒன்றான அவிநாசி தலச்சிறப்புக்கு மூலகாரணம் எனக் கருதப்படும் அன்னை கருணாம்பிகைபற்றிச் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

பழந்தமிழ்க் கூத்தே பரத நாட்டியம்

ஆசிரியர் : டாக்டர் புரட்சிதாசன்
வெளியிட்டோர் : பாண்டியன் பாசறை,
17, வடக்கு போக்கு சாலை,
தியாகராய நகர்,
சென்னை - 600 017.
பக்கம் : 128 விலை : ரூ. 45.00

'ஆடற்கலை' முதல் 'ஆடல் அடிமை' என்பது வரையிலான பத்துத் தலைப்புகளிலான கட்டுரைகள் கொண்டநூல் இது. பரதம் தமிழ்க்கலையல்ல என்ற விவாதம் இதில் மறுக்கப்பட்டிருக்கிறது; அதுவும் தமிழ்க்கலையே என்ற கருத்து வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

தமிழில் இஸ்லாமிய இதழ்கள்

ஆசிரியர் : அ.மா. சாமி,
வெளியிட்டோர் : நவமணி பதிப்பகம்,
12, 2வது பெருஞ்சாலை,
நகர வளர்ச்சிக் குடியிருப்பு,
சென்னை - 600 004.

இஸ்லாமியத் தமிழ் இதழ்கள் ஐநூறுக்கு மேற்பட்டவை இருந்ததாகவும், அவற்றின் தமிழ்ப்பணிசமுதாயப் பணிகள் எப்படி இருந்தன என்றும் இந்த நூலில் விவரிக்கப் பட்டிருக்கிறது. 1869ல் இலங்கையில் இருந்துதான் முதல் இஸ்லாமிய இதழ்கள் வெளிவந்தன. தமிழகத்திலிருந்து 1888 முதல்தான் அவ்வாறு வெளிவரத் தொடங்கின என்பன போன்ற பல விவரங்கள் உள்ளன.

சீதையின் சபதம்

ஆசிரியர் : கருவூர் கன்னல்
வெளியிட்டோர் : தமிழ்ப்பாசறை,
79 தெற்கு நரசிம்மபுரம்,
கருவூர் - 639 001,
திருச்சி மாவட்டம்.
பக்கம் : 64 விலை ரூ. 12.00

இராமாணத்துச் சீதை, இராவணன் அரண்மனையில் பலதினங்கள் சிறைவைக்கப்பட்டிருந்தாள் என்று நாம் படித்திருக்கிறோம்; முடிவில், இராமன் அவளைச் சந்தேகிப்பதை அடிப்படையாகவைத்து எழுதப்பட்டுள்ள பெண்ணுரிமைப் பாவியம் இது.

சூலூர் வரலாறு

ஆசிரியர் : புலவர்
செந்தலை ந. கவுதமன்
வெளியிட்டோர் : பாவேந்தர் பேரவை
38. கலங்கல் பாதை
சூலூர், கோவை - 641 402.
பக்கம் : 652 விலை ரூ. 175.00

ஊர்களின் வரலாற்றை ஒருங்கிணைத்தால், நாட்டு வரலாறு முழுமை பெற்றுவிடும் என்ற நோக்கத்தில் ஏராளமான படங்களோடு தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த நூலின் மூலம் கோவை வரலாற்றையும், கொங்குநாட்டு வாழ்வியலையும் பார்க்க முடியும்.

– இந்திரன்



பனித்துளிப் பார்வைகள்

உனது பெயரை
மீண்டும் மீண்டும்
உச்சரித்த பொழுது தான்
இனிப்புக்கு இன்னொரு அர்த்தம்
இருப்பதையே
எனது நா உணர்ந்துகொண்டது!

அன்று நடந்த
கவிதைப் போட்டிக்கு
எல்லோரும் கவிதையோடு
வந்திருந்தார்கள்.
ஆனால்
நீ மட்டும்
உன் கண்களோடு வந்திருந்தாய்!

காதலுக்குக் கண்ணில்லை
என்பது பொய்.
உன் கண்களைப் பார்த்த
பிறகுதானே
உன்னை நேசிக்கத் துவங்கினேன்!

நான் இத்தனை முறை
நச்சரித்தும்
உன் உதடுகள் ஏன்
மௌனத்தையே உச்சரிக்கின்றன?

வை. இறையன்பு

பாட்டுப் பிறந்த விதம்

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

உண்மையான அழகும், மனங்கனிந்த அன்பும், செவிகளுக்கு இனிமையான ஒலிகளும் தான் என் உள்ளத்தைக் கவர்ந்த காதற் துணைவிகள். நான் கவிதை எழுத ஆரம்பிக்கு முன் - பறவை இனங்களையும், மிருக இனங்களையும், தாவர இனங்களையும் கண்டு ரசிப்பதுபோல் அன்பில்லாத முகங்களையும் அறிவில்லாத செயல்களையும் எனக்குப் பிடிக்காமற் போனதில் வியப்பில்லை என்று எண்ணுகிறேன்.

நான் நன்றாகப் பழகிய, என்னுடைய அனுபவவாயிலாகக் கண்ட நண்பர்களின் நடைமுறைகளை ஆதாரமாக வைத்துக் கவிதை எழுதுவேன். அரைவயிற்றுக் கஞ்சி குடித்தாலும் முயற்சி, ஒற்றுமை, கட்டுப்பாடு இவைகளைக் கைவிடாமல் வாழ்க்கையோடு எதிர் நீச்சலடித்துக் கொண்டு, என்றாவதொரு நாள் நாம் எதிர்பார்த்த வாழ்வு கிடைக்கும் என்று எண்ணி, மனங்கொண்டது மாளிகையாக மரத்தடியே வீடாக வாழும் மக்களைப்பற்றி என் உள்ளம் அதிகமாக ஆராயும் தகுதியைப் பெற்றிருக்கிறது. அழகிய பூங்காவிலும் பெருங்காடுகளிலும் வயல் வெளிகளிலும் வாழும் பறவை இனங்களும் என் மனதைக் கவருவதுண்டு. அவைகள் இரை தேடிவந்து தம் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டுவதைக் கண்டு மெய்மறந்து ரசிப்பேன். அவைகள் கொஞ்சிக் குலவிக் கத்தும் ஒலிகள் நான் எந்த வாத்தியத்திலும் கேட்டறியாத இனிய கீதங்களாகும். இவைகள்தான் நான் அமைக்கும் கவிதைகளுக்கு மூலகாரணங்களாகும்.

''சங்கம் படைத்தான் காடு'' என்ற எங்கள் நிலவளம் நிறைந்த சிற்றூரைச் சேர்ந்த துறையான் குளம் என்ற ஏரிக்கரையில், நான் ஒரு நாள் வயல் பார்க்கச்சென்று திரும்பும்போது வேப்பமர நிழலில் அமர்ந்தேன்; நல்ல நிழலோடு குளிர்ந்த தென்றலும் என்னை வந்து தழுவவே எதிரிலிருக்கும் ஏரியையும் கண்டு ரசித்துக் கொண்டிருந்தேன். தண்ணீரலைகள் நெளிந்து நெளிந்து ஆடிவர, தாமரை மலர்கள் 'எம்மைப் பார்! எம் எழிலைப்பார்!' என்று குலுங்க, ஓர் இளங்கெண்டை பளிச்சென்று துள்ளிக் கரையோரத்தில் கிடந்த தாமரை இலையில் நீர் முத்துக்களைச் சிந்தி விட்டுத் தலைகீழாய்க் குதித்தது. அதுவரை மௌனமாக இருந்த நான் என்னையும் மறந்தவனாய்ப் பாடினேன். இதுதான் அது:

'ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே - கரை
ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே
தூண்டிக்காரன் வரும் நேரமாச்சு - ரொம்பத்
துள்ளிக் குதிக்காதேகெண்டைக் குஞ்சே'

இதை அங்கு ஆரம்பித்த நான் வீடுவரும் வரை பாடிக்கொண்டு வந்தேன். எல்லோரும் அதைப் பலமுறை பாடச் சொல்லி மிகவும் ரசித்தார்கள். எனக்கு அப்போது 15 வயது (1946). பாடல் இலக்கணங்கள் எப்படியென்று அறியாத நேரம் அது. எல்லோரும் ரசித்ததிலிருந்து, 'ஓகோ, இப்படித்தான் பாடல் எழுத வேண்டும் போலிருக்கிறது' என்று சிந்தித்த நான் அன்று முதல் சுவையான நிகழ்ச்சிகள், பறவை இனங்கள், அழகிய காட்சிகள், அறிஞர்கள், மடையர்கள், இன்னும் மாடுகள், ஆடுகள், நாய்கள் எல்லாவற்றையும் பற்றி வேடிக்கையாகப் பாடுவதுண்டு.

நான் சென்னையில் தங்கியபின் மயிலாப்பூர் கோவிலுக்குள் ஒரு நாள் நண்பர்களின் வற்புறுத்தலின் மீது சென்று சுற்றிப் பார்த்துக்கொண்டு வரும்போது, நற்பண்பும், குடும்பத்திற்கேற்ற

அடக்கமும் நிறைந்த ஒரு இளம் பெண், பயமும், பக்தியும், நாணமும் கொண்டு கோவிலை வலம் வரும் நேரத்தில், இறை வணக்கம் செய்யவந்த ஒருவர், வந்த பணியை மறந்து அவளையே முறைத்தபடி நின்று கொண்டும் நடந்து கொண்டும் இருந்தார். என் நண்பர்களும், இவைகளை இலேசாகக் கவனித்தவாறே 'இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நீர் பாடுவீரா?' என்று என்னைக் கேட்கவே நான் பாடினேன்.

'சீவி முடித்துத் திருமணக்கும் பொட்டு வைத்துக்
கோவிலைச் சுற்றிவரும் குலமகளே - பாவியரின்
கண்ணிலகப்பட்டுக் களங்கம் வராவண்ணம்
உன்னை நீ காப்பாற்றிக் கொள்'

என்றேன். இதைக்கேட்ட சிலர் புகழ்ந்தனர். என்னுடன்சதாவாய்ச்சண்டைபோடும்நகைச்சுவை நண்பனொருவன், 'தப்போ சரியோ, என்னமோ நீ பாடுறே, நாங்க கேக்கிறோம்' என்றான். நான் மீண்டும், 'தப்போ சரியோ, நானிப்பாவைப் பாடிவிட்டேனப்பாடி என்று புகழ்ந்தாலும், இல்லை அடப்பாவி என்று கடித்தாலும் சரியே' என்று பாடினேன்.

தியாகராயநகர் வாணிமகாலுக்கு அருகில் நான் நடந்து வந்து கொண்டிருந்தேன். காலில் அணிந்திருந்த செருப்பில் ஒன்று அறுந்துவிட்டது. இணைபிரியாத அவைகளைக் கையிலெடுத்துக் கொண்டு மீண்டும் நடந்தேன். என் பழைய நண்பர் ஒருவர், 'என்ன ஓய் பட்டுக்கோட்டை! தார் ரோடு ரொம்பக் குளிர்ச்சியாய் இருக்கா?' என்று கிண்டலாகக் கூறியதும் எனக்குச் சிறிது ஆத்திரமாக வந்தது. உடனே அவரை அருகில் அழைத்து இதைப்பாடினேன்.

'உறுப்பறுந்து போனாலும் உள்ளங் கலங்காளிச்
செருப்பறுந்து போனதற்கோ சிந்திப்பான் - நெருப்பை
எதிர்ப்பதற்கும் அஞ்சாத எண்ணம் படைத்தாற்பின்
கொதிக்குமிந்தத் தார்குளிர் நீர்.'

என்று பாடினேன். இதைக்கேட்ட அவர் இப்பொழுது என் அரிய நண்பர்களில் ஒருவராக இருக்கிறார். நான் நாடகங்களுக்கு என்றும் சினிமாவுக்கென்றும் எழுதியுள்ள பாடல்கள் அனைத்துமே ஒவ்வொரு காரணத்துடன் பிறந்ததாக இருக்கும். ஒரு சில சான்று: பனகல் பார்க் என்று தியாகராய நகரிலே ஒரு பூங்கா இருக்கிறது. அதில் நான் சிந்தனை செய்வதற்கென்றே போய் உட்காருவேன். ஒருநாள் ''சக்ரவர்த்தித் திருமகளில்'' பாடல் ஒன்று எழுதக் கேட்டிருந்தபடியால் பொதுவாகவும் எல்லோரும் பாடலின் கருத்தில் அங்கம் வகிப்பவர்களாகவும் பாடல் அமைந்தால் நல்லது என்று நான் சிந்திக்கும் வேளையில், பூங்காவில் பேசிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர், 'அவன் குணம் அப்படி இவன் குணம் இப்படி; அதுக்கு ஆரென்ன செய்யறது' என்று அவர்களுக்குள் எழுந்த வார்த்தை என் செவிகளில் விழவே, 'ஆமாம் மனிதனின் குணம் எப்பொழுது மாறுகிறது? இருந்த குணம் எப்பொழுது பிரிந்து போகிறது? மீண்டும் மனிதனுடன் எப்பொழுது வந்து சேருகிறது!' என்று ஆராய்ச்சி பண்ணியவாறே உமா பிக்சர்ஸுக்குச் சென்று மாடியில் அமர்ந்தேன்.

பூனை ஒன்று என் பக்கத்தில் நின்றது. ''உறங்கையிலே பானைகளை உருட்டுவது பூனைக் குணம்'' என்று தொகையறா ஒன்றை ஆரம்பித்தேன். பூனைக் குணம், குரங்குக் குணம், முதலைக் குணம் எல்லாம் சொல்லி, முடிவில் இத்தனை குணங்களும் மனிதனிடம் மொத்தமாய் வாழுதடா என்று தொயைறாவை முடித்து, மனிதன் பொறக்கும் போது பொறந்த குணம் போகப்போக மாறுது - எல்லாம், இருக்கும்போது பிரிந்த குணம் எறக்கும்போது சேருது. (இறக்கும்போது) மனிதன் உயிர்போகும் போது எவ்வளவு கொடியவனாக அவன் வாழ்க்கையில் வாழ்ந்திருந்தாலும் உயிர்போகுமுன் ஒரு நிமிடத்தில் தன் வாழ்க்கையில் செய்த தவறுகளைச் சிந்தித்து உணருகிறான்; அவனைப் பிரிந்திருந்த குணமும் அப்போதுதான் அவனைச் சேருகிறது; ஆனால் உடனே மூச்சு நின்று

பிறந்த குழந்தைக்கு, முதல் ஏழு மணி நேரத்திற்குச் சப்பும் சக்தி அதிகமாயிருக்கும்; தாயானவள், அந்த நேரத்தில் தாய்ப்பால் புகட்டத் தவறிவிடக்கூடாது. அப்படிச் செய்கிற தாய்க்குத்தான், வற்றாது தாய்ப்பால் சுரக்கும் நிலை, பிறகு ஏற்படும்.

ஒவ்வொரு மார்பிலும் 5 நிமிடங்கள் வீதம் ஆரம்பத்தில் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும். பிறகு இந்தக் கால அளவு படிப்படியாகப் பெருகி, 20 நிமிடங்கள், அதாவது ஒவ்வொரு மார்பிலும் 10 நிமிடங்கள் என்ற கால அளவில் பாலூட்ட வேண்டும். பால் அதிகமாக இருந்து, குடிக்கும் குழந்தையும் விரைவாகக் குடிப்பதால் கால அளவு குறைவாக இருந்து குடிக்கும் குழந்தையும் மெதுவாகக் குடித்தால் கால அளவு நீடிக்கலாம். இருந்தாலும் சராசரி பாலைக் குடிக்கும் கால அளவு மொத்தமாய் 20 நிமிடங்கள் என்று கணக்கு எடுத்துக்கொள்ளலாம்.

பூரண ஆகாரம் கிடைக்க ஒரு குழந்தைக்குச் சுமார் 5 நிமிடங்கள் முதல் 7 நிமிடங்கள் வரை போதும். இவ்வாறு ஒரு வேளை பூரண ஆகாரம் பெற்ற குழந்தை குறைந்தபட்சம் இரண்டு மணி நேரம் அழாமல் இருக்கும். எனினும் குழந்தைக்குப் பசி தோன்றினால் தான் பால் கொடுக்கவேண்டும். நேரக்கணக்குப் பார்த்துக் கொண்டு குழந்தை கதறி அழும்வரை பொறுத்திருப்பது தவறு. குழந்தைக்குத் தேவையான போதெல்லாம் பால் புகட்ட வேண்டும்.

'அழுகிற குழந்தையே பால்குடிக்கும்' என்பதை யெல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தில் யோசிக்கக்கூடாது. அதோடு எவ்வளவு நேரம் குழந்தை குடிக்கிறதோ, அவ்வளவு நேரம் பால் கொடுக்கலாம்.

பால் தரும் நேரம்

மார்பில் பால் நிறைய இருப்பதாக உணரும் தாயானவள், குழந்தை பால் குடிக்கும் இடைவேளை 3 மணி நேரத்திக்கு அதிகமாகாமல் பார்த்துகொள்ள வேண்டும். பால் பருக வேண்டிய நேரத்தில் குழந்தை உறங்கிக் கொண்டிருந்தாலும் எழுப்பிப் பால் கொடுக்கவேண்டும். பால் கொடுக்கும் பொழுது, குழந்தையின் பால் சப்பும் நேரம் குறையும் பொழுதோ, அல்லது பால் குறைந்து மார்பகம் மிருதுவதாகும் பொழுதோதான் தாய் ஒரு மார்பகத்தை மாற்றி, அடுத்த மார்பகத்திலிருந்து பால் கொடுக்கவேண்டும்.

தாய்ப்பாலைத் தினசரி தொடர்ந்து கொடுக்கிறவர்களுக்குத்தான் தாய்ப்பால் சுரப்பு இருக்கும்; பால் சுரக்கும் காலமும் நீடிக்கும். ஒரு தாயின் பால் சுரக்கும் காலத்தைப் பொறுத்தே குழந்தையினுடைய வளர்ச்சியும் நல்வாழ்வும் இருக்கும்.

சிலர், வீட்டு வேலைகளைக் கவனித்தவாறே பால் கொடுப்பார்கள்; இது தவறு.

தாய்ப்பால் ஊட்டிய சில நிமிடங்களில் குழந்தைகள் வாந்தி எடுக்கும். குழந்தை பால் உறிஞ்சும்போது காற்றும் உட்செல்வதுதான் இதற்குக் காரணம். இதை அறியாதவர்கள் மருந்து மாத்திரைகளைத் தேடவேண்டியதில்லை; தாய் அந்தக் குழந்தையைத் தவறான முறையில் வைத்துப் பாலூட்டுவதே காற்று உட்புகக் காரணம்.

எப்படிப் பால் தருவது?

குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது குழந்தையைச் சரியான நிலையில் வைத்துப் பால் கொடுக்க வேண்டும். பாலூட்டும்போது நிமிர்ந்து நின்றோ அல்லது

சாய்ந்து இருந்தோ பால் தரவேண்டும். அதுதான் சரியான முறை.

தாயின் ஒரு மார்புடன் குழந்தையின் மார்பும் குழந்தையின் தாடை தாயின் மார்புடன் இணைந்தும், மார்பகத்தின் கழுத்துப் பாகத்தில் பெரும் பகுதி குழந்தையின் வாயில் இருக்குமாறும் வைத்துப் பால் புகட்ட வேண்டும். பால் தருவதற்கு முன் கருத்த நுனிப்பகுதியை லேசாக அழுக்கிச் சிறிது பாலை வெளிப்படுத்தினால், கழுத்துப் பகுதி மென்மை அடையும். இதனால், குழந்தை இப்பகுதியை எளிதில் வாயில் கவ்வ இயலும்.

தாய்மார்கள், வலது பக்கம் பாலூட்டும்போது வலதுகை குழந்தையின் முதுகுப்புறமாகக் கீழ்நோக்கிச் செல்ல வேண்டும். அதே வேளையில் வலது கையில் முழங்கைக்கு அடுத்த முன்பகுதியில் குழந்தையின் கழுத்தை ஆதாரமாகப் பிடிக்க வேண்டும்.. குழந்தையின்

தலைப்பகுதி உயர்ந்தும் கால்பகுதி தாழ்ந்தும் இருக்கவேண்டும். குழந்தையினுடைய பின்பக்கம் வளைந்திருக்க வேண்டுமே தவிர, முன்பக்கம் வளையக்கூடாது. இவ்வாறு பால் ஊட்டும்போது உட்செல்லும் காற்றைத் தடுக்கலாம்.

பால்தரக்கூடாதவர்கள்!

இரத்தச்சோகை, இதயநோய், அம்மை, நிமோனியா, காசநோய் போன்ற நோய் ஏதேனும் உள்ள தாய்மார்கள் குழந்தைக்குப் பாலூட்டக் கூடாது. அதனால் அந்த நோய்கள் குழந்தைக்குத் தொற்றலாம். மேலும், குழந்தைக்குப் பால் ஊட்டுவதால் ஏற்கெனவே நோயால் தளர்ந்த தாயினுடைய உடல் மேலும் தளர்ச்சியடையக் கூடும். வலிப்போ, மனக் கோளாறோ உள்ள பெண்களும் குழந்தைகளுக்குப் பால்தரக் கூடாது. அதேபோலப் பால்தரும் மார்பகத்தில் கட்டிகளோ, வெடிப்போ ஏற்பட்டிருந்தாலும் குழந்தைகளுக்கு நல்லதல்ல.

சரியான எடையோடும், நலத்தோடும் குழந்தை வளரும் வரையில் எந்த ஒரு தாயும் பாலூட்டலாம். நான்கைந்து மாதத்தின்பின் மற்ற உணவுகளையும் சிறிது சிறிதாக ஊட்டத் தொடங்கலாம். அதுபோன்ற நிலையில், குழந்தை தானாகவே தாய்ப்பாலை மறக்கத் தொடங்கும்; தாய்க்குப் பால் ஊறுவதும் குறையும்.

பிள்ளை பெற்ற பெண்மணிக்குத் தாய்ப்பால் போதுமான அளவில் சுரக்காத பட்சத்தில் உணவில் கவனம் செலுத்துவது நல்லது.

அவ்வப்போது உணவில் துவரம்பருப்புடன் முருங்கைக்கீரை சேர்த்து உண்ணலாம். காலையில் ஆழாக்குப் பசும்பாலில் பாதாம் பருப்பும் கற்கண்டுத் தூளும் சேர்த்து இரண்டு மூன்றுநாள் குடிக்கலாம். அசைவம் சாப்பிடுவோரானால் முட்டை, மீன், சுறாமீன் குழம்பு, சுறாப் புட்டு என அடிக்கடி உணவோடு சாப்பிடலாம். இன்னும் சாதாரணமாகச் சொல்வதனால், கொஞ்சம் வெற்றிலைகளை எடுத்து வாட்டி மார்பகங்களில் வைத்துக் கட்டிக்கொண்டாலேகூட போதும். தாராளமாகத் தாய்ப்பால் சுரக்கும்.

தாய்ப்பால் நிலை

குழந்தைக்குப் பாலூட்டும் தாய் தன் உடலையும் சுத்தகமாக வைத்திருக்க வேண்டும். நல்ல ஓய்வுடனும் மகிழ்ச்சியுடனும் இருக்க வேண்டும். ஒவ்வொரு முறை பால் தரும் முன்பும் பின்பும் மார்பகங்களையும் கைகளையும் கழுவி சுத்தமாகத் துடைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் காம்புகளில் கசிந்து காய்ந்த பாலில் நோய்க் கிருமிகள் ஒட்டியிருக்கக்கூடும்; அது பாலோடு குழந்தையின்.வாய்க்குள் சென்றுவிடலாமல்லவா?

எனவே, கழுவிய பின் மார்பகங்களை லேசாகப்பிதுக்கி ஒன்றிரண்டு சொட்டுப் பாலை வெளியேற்றிவிட்டு அதற்குப் பின்னர் வரும் பாலையே குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். மேலும், மார்பங்களை நன்றாகக் கசக்கிவிட்டுக்கொண்டு புகட்டினால், பால் தங்கு தடையின்றிச் சுரக்கும்; பாலின் தரத்தையும் அளவையும் அதிகரிக்க நல்ல சத்துள்ள உணவுகளையே தாய்மார்கள் சாப்பிட வேண்டும். கீரைகள், பழவகைகள், பருப்பு வகைகள் அதிகம் சாப்பிட வேண்டும். நாளொன்றுக்கு இரண்டு டம்ளர் பால் அருந்த வேண்டும். ஒருநாள் விட்டு ஒரு நாளாவது முட்டை சாப்பிட வேண்டும். நாள்தோறும் 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் குடிக்கவேண்டும். இவ்வாறெல்லாம் செய்தால் தாய்ப்பால் சுரத்தலில் தட்டுப்பாடு இருக்காது.

---

18 வயது வரையில், பெண்களுக்கு இனப்பெருக்க உறுப்புகளின் வளர்ச்சி மட்டுமே; அதன் பிறகுதான் கருத்தரிக்கும் சக்தி அதிகமாகும். 30 வயது வரையிலே இந்தச் சக்தியானது மிகவும் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கும். அந்த வயதிற்கு மேல் கருத்தறிக்கும் ஆற்றல் குறையும். இருந்தாலும்கூட 48 வயது வரையில் பெண்கள் கருவுறக் கூடும்.

சிலருக்குப் பத்து மாதத்திற்கு முன்னாலும் குழந்தைபிறக்கும் சாத்தியம் உண்டல்லவா? அதேபோல் கருவுறல் முடியும் கால அளவிலும் ஓராண்டு ஈராண்டு கூடுவதும் உண்டு.

ஒரு பெண்ணானவள் முதன்முதல் கருவுறுகிறாளென்று வைத்துக்கொள்ளுங்கள். 2 ஆம் மாதம் முதலே அவளுடைய மார்பகம் சற்றுப் பருமனாகத் தொடங்கும். கருவுற்ற நாள்முதலே அவள் மார்பகங்களில் தாய்ப்பால் சுரக்கும் மாறுதல் ஏற்படத் தொடங்கும். 3 ஆம் மாதத்திலிருந்து பால் போன்ற திரவம் சுரக்கும்.

மாத விலக்குக் காலங்களில், கருவுற்ற பெண்களின் மார்பில் ஒருவகை விறுவிறுப்புத் தன்மை இருந்துகொண்டே இருக்கும். அவளுடைய மார்புக்காம்புகள் முன்பிருந்ததைவிட இன்னும் கருஞ்சிவப்பாகவோ, கருப்பாகவோ மாறும்; சற்றுத் தடித்தும் காணப்படும்.

விடுகிறது; அவன் தான் உணர்ந்ததை மற்றவர்களுக்குச் சொல்லக்கூட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறான் என்ற இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு அப்பாடலை முடித்தேன்.

இதுபோல சினிமாப் படங்களிலே வரும் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு பாடலை அமைத்தாலும் அவைகள் நாட்டுக்கு நல்ல உண்மையை - நீதியைக் கூறும் வகையில் பின்னணியில் ஏதாவது முக்கியக் கருத்தைக் கொண்டு மிளிர வேண்டும். அதற்காக இலக்கியங்களைப் புரட்டுவதைவிட, என் அன்றாட வாழ்க்கையில் நான் சந்திக்கும் உண்மையான வாழ்க்கையை, இயற்கைக்கும் மனிதருக்கும் உள்ள தொடர்பை, உலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் உள்ள பிணைப்பைத் தழுவி பாடல்களிலே கொண்டு வருவேன்.

இப்படி ஒரு பாடலைப் பற்றிச் சிந்திக்கும்போது, அந்த நேரத்தில் சூழ்நிலை எப்படி இயக்குகிறதோ, எப்படி கவிஞனுக்கு ஒத்துழைக்கிறதோ அதிலிருக்கிறது பாட்டின் உயர்வு. தனியாக இருப்பதையே விரும்பாத நான் எங்கும் எல்லோருடனும் அன்பாகப் பழகும் நான் - எழுதத் தொடங்கியதும் தனிமையை விரும்புவேன், ஆனால் அங்கங்கே உட்கார்ந்து, அடைபட்டுக் கிடந்து வேண்டுமென்றே கருத்துக்களைத் தேடுவதைவிட, சுதந்திரமாகக் கட்டுப்பாடு இன்றி நிமிர்ந்த நடையுடன், பார்வையை எங்கும் திருப்பிச் சிந்தனைப் புலன்களைக் குறுக்காமல் விசாலமாக்கிக் காணும் போதுதான், இயற்கையிலேயே கவிதைகள் உதிரும், பாடல்கள் உயிருடன் பிறக்கும், சில பாடல்களைப் போலச் செத்துப் பிறக்காது. இதுதான் என் கருத்து. இதை நான் மற்றவர்களுக்காகக் கூறவில்லை. என்னால் முடிந்தவரை மேற்கூறிய முறைகளைக் கையாளுவேன். எழுதுவதைவிட எழுதாமல் உணர்ச்சியோடு உற்சாகத்தோடு பாடவேண்டும். பாடியபின் எழுத வேண்டும். இப்படி எழும் பாடல்கள் எக்காலத்திலும் சாகாது. ●

– 13.4.1930ல் பிறந்து, 8.10.1959ல் மறைந்த கவிஞரே 'பேசும் படம்' இதழில் எழுதியது.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!
– புரட்சிக்கவிஞர்

கவிதைப் போட்டி

கற்பனையும் சிந்தனையும் கைகோத்து
நடனமிட அற்புதக் கவிபடைக்கும்
அனைவருக்கும் நல்வாய்ப்பு; இதோ,
'தமிழரசு' கவிதைப் போட்டிக்கு
அழைப்பு;

'இன்றுபோல் என்றும் இரும்'

– இதுதான் கவிதைத் தலைப்பு;
உரிய பரிசுகள் காத்திருக்கின்றன!
உங்கள் கவிதைகள் வந்து
சேர வேண்டிய

கடைசி நாள் 16.11.1996

உங்களுடைய படைப்பு -
மரபுக்கவிதையாகவோ,
புதுக்கவிதையாகவோ இருக்கலாம்;
வரி வரையறை: 16
வெல்லும் கவிதைகள் வெளியாகும்
இதழ் 1.1.1997

தேர்வு பெறாதவற்றைத் திரும்ப
அனுப்ப இயலாது; நகலெடுத்துக்
கொள்ளவும்.

கவிதை அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர் : 'தமிழரசு'
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம் - அண்ணா சாலை,
சென்னை - 600 002.



மருத்துவம்

தாய்ப்பால்

டாக்டர் சி. இராமகிருஷ்ணன்

இன்றைய நாகரிக உலகில்கூட, ஒரு குழந்தையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்கிற ஆவல் ஒவ்வொரு பெண்ணுக்கும் இருப்பதை நம்மால் காணமுடிகிறது; ஆனால், அதே நேரத்தில் - பெற்ற குழந்தையைப் பேணிக் காப்பதில் இக்காலத் தாய்மார்கள் எல்லோருக்குமே அத்தனை ஆர்வமிருப்பதாக நாம் சொல்லமுடியாது.

அவ்வாறு இருக்குமேயானால் – வீதிக்கு வீதி குழந்தைகள் காப்பகம் எப்படி வந்திருக்கும்? வசதி மிக்கவர்கள் வீட்டிலெல்லாம் குழந்தையைப் பார்த்துக் கொள்ளுவதற்கென்றே எப்படி ஒரு வேலைக்காரி நியமிக்கப்படுவாள்? அவள் சிறுமியாகத்தான் இருப்பாள் என்பதுகூட அல்ல; தான் பெற்ற குழந்தைக்குப் பாலூட்டும் அளவில் வயதுள்ளவளாகப் பார்த்து அந்த வேலைக்காரி நியமிக்கப்படுகிறாளே, அதெப்படி?

தாய்ப்பால் மறுப்பு ஏன்?

இதற்கெல்லாம் ஒரே விடை, என்னதான் ஒருத்தி பிள்ளைப்பேறு அடைந்தாலும்கூட, தன்னுடைய கட்டுமஸ்தான உடல் கட்டழகு இழந்துவிடக் கூடாது என்பதில் அவள் கருத்தாக இருக்கிறாள் என்பதுதான்.

இதில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க ஒரு விஷயம் - பிறந்த குழந்தைக்குத் தாய்பால் கொடுக்கும் பட்சத்தில், தன்னுடைய மேனியழகு குறைந்துவிடும்; பருவ மெருகு குலைந்துவிடும் என்பதிலே பெரும் பாலான இளம் பெண்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்.

ஆனால் இது நல்லதல்ல!

தாய்ப்பால் கொடுக்காமல் இருப்பது அவளுக்கு நல்லதா என்பதைவிட, தாய்ப்பால் குடிக்காமல் இருப்பது அந்தக் குழந்தைக்கு நல்லதா என்று பார்ப்போமேயானால் - கொஞ்சம் கூட நல்லதல்ல.

ஏன் இதைச் சொல்லுகிறேனென்றால், குறிப்பிட்ட பெண்மணிக்குப் பிறந்த குழந்தைக்கு ஏறத்தாழ ஆறு மாத காலம் வரை தாய்ப்பால் ஒன்றுதான் தகுந்த உணவாக அமையும்; திட உணவைவிட அந்தத்திரவ உணவே அக்குழந்தைக்கு அதிகச் சக்தியளிக்கும்; உணர்ச்சிபூர்வமான பாதுகாப்பையும் அளிக்கும்.

அதற்கு இணையான சரிவிகித உணவு - புட்டிப் பாலிலோ, பவுடர் பாலிலோ, பசும்பாலிலோ கிடைக்கவே கிடைக்காது.

இலக்கியத்தில் தாய்ப்பால்

இலக்கிய மேதைகளுக்கு ஒன்று நினைவிருக்கும்; முதுகில் காயம்பட்டு இறந்தான் தன் மகன் என்று கேள்விப்பட்ட தாயானவள், ''இந்தக் கோழைக்கோ நான் பால் கொடுத்து வளர்த்தேன்?'' என்று கேட்டுத் தன் மார்பகத்தையே வெட்டிக் கொள்ள வாளெடுத்தாளாம்!

தாய்ப்பால் எத்தனைச் சக்தி மிக்கதென்பதை அதிலிருந்தே அறியலாம்.

மாவுச்சத்து, கொழுப்புச் சத்து, தாது உப்புகள், உயிர்ச்சத்து எல்லாமே தாய்ப்பாலில்தான் சம அளவில் இருக்கிறது. நோய் எதிர்ப்புச் சக்தி மிக்கதான புரதமும் தாய்ப்பாலில் அதிகம் உண்டு; அதுதான் பச்சிளங் குழந்தையின் பாதுகாப்பு அரணாக அமையும்.

தாய்ப்பாலில் உள்ள தன்னிகரற்ற சக்தியினால் - ஒவ்வாமை அடிப்படையிலான ஆஸ்துமா, படைபோன்ற எந்த நோயும் குழந்தைக்கு வராது. தொற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு, புதிதாகப் பிறந்த குழந்தைக்கு, எதிர்ப்புச் சக்தி மிகுவதால் அதிகமிருக்கும்; அதிலிருந்து குலக்கொழுந்தை மீட்கத் தாய்ப்பாலே தக்கதோர் முக்கிய மருந்தாகும் என்பது மருத்துவ உண்மையாகும்.

பச்சிளம் குழந்தைக்கு வேறெந்த உணவு செறிக்கிறதோ இல்லையோ, தாய்ப்பால் விரைவில் செறித்துவிடும். அழகும் ஆரோக்கியமும் மிகுதியாகும். சில தாய்மார்கள் தமக்கு முதல் மூன்று நாட்கள் சுரக்கும் சீம்பாலைக் கொட்டிவிடுவார்கள்; குழந்தைக்குத் தரமாட்டார்கள். இது சரியல்ல; இளம் மஞ்சள் நிறமுள்ள சீம்பால் எனக்கருதப்படும் அந்தத் தாய்ப்பாலில்தான், குழந்தைக்கு ஏற்படக்கூடிய எந்தவித நோயையும் எதிர்த்துத் தவிடுபொடியாக்கும் தனிச் சக்தி உள்ளதென்பதை அவர்கள் உணரவேண்டும்.

அடுத்த குழந்தை

முழுமையான இயற்கை உணவான தாய்ப்பால் ஊட்டுவதால் தாய் தன் அன்பை வெளிப்படுத்துவது மட்டுமல்ல; தாயினுடைய கருப்பையானது நல்லபடி சுருங்கி, மீண்டும் முன்போன்ற நிலைக்கு வரும். சீக்கிரமே மறுபடி கருத்தரிக்கும் நிலைமையும் தாய்ப்பால் தருவோர்க்குத் தாமதமாகும். பிறந்த குழந்தையும் தாய்ப்பால் குடிப்பதால் நல்ல உடல் நலத்தோடு வளரும்!

மார்பகப் புற்றுநோய் பெரிதும் பெண்களுக்கே வரும் என்று கண்டறியப்பட்டுள்ளது; தாய்ப்பால் தரும் பெண்கள், இந்த அபாயத்திலிருந்தும் எளிதில் தப்ப தாய்ப்பால் தரும் பழக்கம் துணைநிற்கும்.

துரு



தோப்பில் முகமது மீரான்

ஈலா தொலைக்காட்சிப் பெட்டியில் இராணுவ உடையுடன் தோன்றிய நபரை சதாம் உசேன் என்று யாரோ சுட்டிச் சொன்னதை செவியுற்ற அப்துல் காதர் மகன் பட்டாளம் அகம்மதுக் கண்ணு சாகிபுக்கும் தம் வீட்டில் ஆணியில் தொங்கும் பழைய இராணுவ உடையை அணிந்து நடக்கவேண்டுமென்ற ஆசைமேலிட்டது. இந்தியாபாகிஸ்தான் போர் நடந்து முடிந்த பின் இராணுவத்தை விட்டு வந்த ஜவான் ஒருவர் சுழற்றி வீசி எறிந்த இராணுவ உடையை அவருடைய மனைவி பட்டாளம் அகம்மதுக் கண்ணு சாகிபுக்கு அவர் உடம்பில் துருத்தி நிற்கும் எலும்புகளை மறைப்பதற்காகக் கொடுத்தாள். அவரோ பல கல்யாண அவசர வீடுகளில் சாப்பாட்டுக்குச் செல்லும் போதும், பல நோன்பு பெரு நாட்களுக்குப் பள்ளி வாசலுக்குச் செல்லும் போதும் மட்டும் பயன் படுத்தி வந்த அந்த இராணுவ உடையை வளை

குடா போர் துவங்கிய பின், எப்போதும் அணிந்து நடந்து கிராம மக்களையும் தம் காலில் மொய்க்கும் ஈக்களையும் பயமுறுத்த நினைத்தார்.

எலும்புகள் துருத்தி, வியர்வையில் பொதுமி, புழுதி ஒட்டிய உடம்பில் கிழிந்த கால் சட்டைக்கு மேல் இராணுவ உடையை அணிந்து காலையில் வழக்கம்போல் மூன்று ரோடுகள் ஒன்றுகூடும் சந்திப்பில் வந்து அட்டன்ஷனாக நின்றார் பட்டாளம் சாகிபு. அவருடைய கையில் எப்போதும் கொண்டு நடக்கும் பூவரசின் கம்பைத் துப்பாக்கியென நினைத்துத் தரையில் ஊன்றியபடி தலை நிமிர்ந்து அட்டன்ஷனாக நின்றார். முக்கி முனகி வந்து போகும் வாகனங்கள் திரும்புவதும் சற்று நேரம் நின்று களைப்பாறுவதும் அந்தச் சந்திப்பிலாகும். அந்தச் சந்திப்பின் பெயர் 'கார் ஸ்டாண்டு'

கார் ஸ்டாண்டின் காவல் வீரனாகப் பட்டாளம் சாகிப் சுயம் பதவி பிரமாணம் செய்து வெகு காலங்களாகிவிட்டன. அவருடைய தற்காப்புக்காகக் கையில் வைத்திருக்கும் துப்பாக்கி தோளுக்குச் செல்லும் போது அது வழியாக ஏதேனும் ஒரு வாகனம் புகை கக்கிக் கொண்டு கடந்து செல்லும். அல்லது, மணி கிலுக்கிக் கொண்டு ஏதேனும் சைக்கிள், குடைமணி குலுக்கும் மாட்டு வண்டி இத்யாதி...

தொலைவிலிருந்து சீறி வரும் ஒரு பஸ்ஸுக்குச் சந்திப்பில் நின்றபடி கையைக் காட்டி வருவதற்கு அனுமதி கொடுத்தார், அவர்.

''வா...வா பயப்படாதெ. நான் தாண்டா நிக்குறேன்...''

சந்திப்பில் வந்து நின்ற பஸ்ஸிலிருந்து

சிலர் இறங்கினர். உடன் பட்டாளம் சாகிபு தோளில் வைத்திருந்த துப்பாக்கியை எடுத்து கக்கத்தில் இடுக்கியவாறு ஒரு கட்டளை பிறப்பித்தார்.

''டேய், ஆளெ எறக்கீட்டு போனா போரும்...'

பஸ்ஸிலிருந்து ஆட்கள் இறங்குவதற்கிடையே கிடைத்த சிறு வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார் பட்டாளம் சாகிபு. 'மாம்பட்டை' முக்கு முட்டெ குடிக்கும் டிரைவரின் கண்களிலிருந்து தப்பி வந்து பஸ்ஸின் பக்கவாட்டிலுள்ள ரப்பர் ஹாரனை அழுத்தி அமுக்கியபோது பூவாம்... பூவாம் ஒலி.

இரத்தக் கண்களுள்ள மாம்பட்டை டிரைவரின் ஓங்கிவிழும் கைக்குப் பயந்து குதித்து ஒரே ஓட்டம். பழைய இடத்தில் வந்து தோளில் துப்பாக்கி ஏந்தி பழையபடி அட்டன்ஷனாக நின்றார். டிரைவரைப் பார்த்து காவி நிறமான பற்களை இளித்துக் காட்டினார் – சிரித்தார்.

டிரைவர் பஸ்ஸை எடுக்க முற்படும்போது உரக்கெ ஒரு கட்டளை ''போட்டு... போட்டு...''

பஸ் புறப்பட்டுச் சென்ற பின் மீண்டும் தோளிலிருந்து துப்பாக்கியை எடுத்து முன் போல் தரையில் ஊன்றியபடி அட்டன்ஷனாக நின்று நாலு பக்கமும் பார்வையைச் செலுத்தினார், ஒரு திசை காவலாளியாக.

மூன்று ரோடுகள் சந்திக்குமிடத்தில் ஒரு மலடியைப்போல் நிற்கும் மின்கம்பத்தில் விளக்கு எரிந்து ஆண்டுகள் கப்பலேறிவிட்டன. டியூப் விளக்கைப் பொதிந்துள்ள பெரிய கண்ணாடிக் கூண்டு, லட்சோப லட்சம் புற்றீசல்களின் சவக்கிடங்காக மாறியும் காலம் கொஞ்சமாகிவிட்டன.

நீண்ட தாடி வளர்த்தி, ஜடை பிடித்த தலை முடியைச் சுற்றி காவித் தலைப்பாகை கட்டிய முத்துச்சாமியின் பெட்டிக் கடை ஒன்று மட்டும்தான் அங்குள்ள பஜார். அந்த பஜாரின் முன்னால் தொங்கும் 25 வாட்டு பல்பு இரவு நேரங்களில் தூவும் வறட்சியான ஒளியில் அட்டன்ஷனாக நின்று பாடத் துவங்குவார் பட்டாளம் சாகிபு. விடிந்தாலும் முடியாத தியாகராஜ பாகவதருடைய பாடலை ரசிக்காமல் விளக்கை அணைக்கும் முத்துச்சாமிக்குத் தினமும் எச்சரிக்கை விடுவதுண்டு.

''நாளெ பாரு இந்த எடத்திலே ஒனக்கெ கடெ இரிக்காமெ ஆக்கிப் போடுறேன்.''

துருபிடித்த சைக்கிளைப் பெரும் பாடுபட்டு மிதித்து வியர்வையில் நனைந்த காக்கிச் சட்டையின் காலரைத் தூக்கி விட்டபடி முத்துசாமியின் கடைக்கு முன் வந்து இறங்கிய 'லைன் மேனைக்' கண்டபோது பட்டாளம் சாகிபுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. முத்துசாமியின் கடையில் நொங்கு போட்டு சர்பத் குடிப்பதற்காக சைக்கிளை ஸ்டாண்டில் போட்டுவிட்டு கடைக்கு நேராக நடந்த 'லைன்

மேனைத்' தடுத்து நிறுத்தினார்.

''ஒனக்கு சம்பளம் தர்றது எதுக்கு ஓய்...?'' பட்டாளம் சாகிபு துப்பாகியைத் தரையில் ஊன்றி நின்றபடி கேட்டார்.

பட்டாளம் சாகிபைப் பற்றி முன் பரிச்சயமிருந்ததினால் லைன்மேன் சற்றுத் தயக்கம் காட்டி நடித்தார்.

''சொல்லு ஓய்...''

''சோறு தின்னுறதுக்கு...'' லைன்மேன் சொன்னார்.

''மேலிடத்துக்கு எழுதிப் போட்டு ஒனக்கெ வேலையை டிஸ்மிஸ் பண்ணிப் போடு வேன்...'' பட்டாளம் எச்சரிக்கை செய்தார்.

"சாயிப்பே!" லைன்மேன் கெஞ்சினார்.

"என்னெ ஆருணு தெரியுமா?"

"தெரியாது..."

"நா ஆருணு கேட்டுப்பாரு... சத்தாம் உசேன் நம்மொ பொடியனாக்கும், இண்ணுராத்திரி தூணிலெவெளக்கு எரியல் லேண்ணா நாளை காலமெ ஒன்னெ டிஸ்மிஸ் செய்து போடு வேன்..."

"சாயிப்பே, லைன்மேன் மக்கொ குட்டிக் காரரு பாவம்... டிஸ்மிஸ் செய்து போடாதெங்கோ..." முத்துசாமி லைன்மேனுக் காகப் பரிந்து பேசினார்.

"நீ சொன்னதினாலே உடுறேன்..." பட்டாளம் சாகிபின் கோபம் தணிந்தது.

லெப்டு ரைட் வைத்து திரும்பி நடக்கும் முன் பட்டாளம் சாகிப் கடைக்கு முன்னால் தரையில் கண்களை ஊன்றி எதற்காகவோ தேடினார்.

"என்ன சாயிப்பே தேடுதியோ... குவைத் திலெயிருந்து வந்த தங்கம் வல்லதும் விழுந்துதோ...?" நொங்கு போட்ட சர்பத்தை கையில் எடுத்துக் கொண்டு லைன்மேன் கேட்டார்.

பட்டாளம் சாகிபு சிரித்தவாறு தரையி லிருந்து துள்ளி எடுத்தது ஒரு துண்டு பீடியெ. பீடியில் அப்பியிருந்த மணலைக் கையாலும், ஊதியும் துடைத்தார். கடைக்கு முன்பக்கமுள்ள தூணில் தொங்கிய கயிற்றின் கீழ்முனையி லுள்ள நெருப்பிலிருந்து பீடி பற்ற வைத்தார். புகை ஊதிவிட்டு அடி தூக்கி லெப்டு ரைட் வைக்கப் போகும்போது முத்துசாமி கேட்டார்.

"நர்ஸ் அனுப்பித் தந்த டிரிபிள்ஃபை சிகரெட்டு தீந்து போச்சோ...?"

பட்டாளம் சாகிபுக்கும் அரசாங்க மருத்துவமனையிலுள்ள நர்ஸுக்குமிடையிலான தொடர்பைப்பற்றி முத்துசாமிக்குத் தெரியும். அது ஊரும் உலகும் அறிந்த தொடர்பு.

...லெப்டு ரைட் வைத்து திரும்பி நடக்கும் முன் பட்டாளம் சாகிப் கடைக்கு முன்னால் தரையில் கண்களை ஊன்றி எதற்காகவோ தேடினார்...

முத்துச்சாமியின் கேள்வி பட்டாளம் சாகிபுக்கு இரசிக்கவில்லை. ஒரு போலீஸ் அதிகாரி திருடனைப் பார்ப்பதுபோல் முத்துசாமியை முறைத்தார். அந்தப் பார்வை யில் கோபம் கொடி நாட்டியது.

"சாமி, நீ ரொம்ப வெளையாடுதா...நா எழுதிப் போட்டா மதி, நாளெ ஒனக்கெ கடெ இந்த எடத்திலே இரிக்காது எச்சரிக்கெ...?"

"அதுக்கு நா என்ன தப்பு செய்தேன் சாயிப்பே? ஒங்களுக்கு குவைத்திலெ இருந்து ஒரு லட்டர் வந்திருக்கிணு போஸ்டு மேன் சொன்னாரு. நர்ஸ் ஒங்களுக்கு அனுப்பியிருப் பாணு நெனச்சு கேட்டேன்..."

"நா அவளெ உட்டாச்சு..."

"ஏன்?..."

"எனக்கு அவொ என்.ஓ.சி. அனுப்பி தாரேணு சொல்லி அனுப்பி தரயில்லெ..."

"அப்பொ வந்திருக்குற குவைத் லட்டரே..."

"சத்தாம் உசேன் எனக்குப் போட்டிருப் பான்..."

"ஓ... அது... சரி..."

"நான்தான் குவைத்தைப் புடிக்க எளுதிப் போட்டேன்..."

"அப்படியா?"

"அவளெ பாம் போட்டு கொல்லச் சொன்னேன். என்.ஓ.சி. அனுப்பி தாரேன், தாரேணு என்னெ ஏமாத்திட்டே இருக்கா... உடுவனா அவளெ...? போஸ்டுமென் எங்கெ போனான்...?"

"ஒங்களெ தேடித்தான் போனான்..."

பட்டாளம் சாகிபு சந்திப்பை நோக்கி நடந்தார். தொலைவில் ஹாரன் சப்தம் கேட்டபோது போஸ்டு மேனை மறந்தார். கடமை உணர்வுடன் ஓடி சந்திப்பில் வந்து தோளில் துப்பாக்கி ஏந்தியபடி நின்றார்.

வந்தது ஜல்லி ஏற்றிய ஒரு லாரி.

லாரி கடந்து செல்லக் கையை உயர்த்தி அனுமதி கொடுத்தார்.

தேசத் தொண்டு என்பது மனித சமுதாயத் தொண்டு என்றே என் கருத்தில் படுகிறது.

– காந்தியடிகள்

"வா... வா... பயப்படாதெ. நாந்தாப்பா நிக்குதேன்."

மெதுவாக வளைவு திரும்பிய லாரியைப் பார்த்து எச்சரிக்கை செய்தார்.

"ரோடெல்லாம் குண்டும் குழியும்... மனுசனுக்கு நடக்க முடியாது. நாளெ சல்லி போட்டு ரோடே சரியாக்கல்லேண்ணா சீட்டெ கிழிச்சு போடுவேன். என்னெ ஏத்திட்டு போறதுக்கு நாளெ சத்தாம் உசேன் இஞ்செப்ளேன் அனுப்புவாரு...?"

அது வழி வழக்கமாக ஜல்லி ஏற்றிச் செல்லும் டிரைவருக்கு பட்டாளம் சாகிபைப் பற்றிய முன் அறிமுகமிருந்ததினால், பட்டாளம் சாகிப்புடைய காதைத் துளையிட்டு ஏறும் படியாக நீட்டி ஹாரன் ஒலி எழுப்பி அவருடைய கோபத்தைக் கிளறி விட்டார்.

பட்டாளம் சாகிபு டிரைவரைச் சுட்டு எரிக்கும்படி பார்த்தார்... அதற்கு முன் டிரைவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார். டிரைவரை கெட்ட வார்த்தையால் அபிஷேகம் செய்ய நா எழுந்தது. உடன் கரிப்புகை சீந்திக் கொண்டு லாரி முன்னால் குதித்தது.

"டேய் பயந்தா ஓடுதா... கள்ள நாய்க்குப் பொறந்த பயலே... கோபம் பீறிட்டு வந்ததால் அடக்க முடியாமல் பூட்ஸ் இல்லாத பூட்ஸ் காலால் கல்ரோட்டில் ஓங்கி மிதித்து அட்டன்ஷனாக நின்ற போது ஒரு கல்லின் கூரிய முனை கால் வெள்ளையில் குத்தி ஏறிய வலி சிரத்தில் அம்புபோல் பாய்ந்தேறியது. வேதனை தாங்க முடியாமல் தரையில் விழுந்த துப்பாக்கியைத் தூக்கி ரோட்டின் மண்டை ஓடை அடித்து உடைத்து கோபம் தீர்த்துக் கொண்டார். துப்பாக்கி முனை ஒடிந்து தெறித்தபோது துப்பாக்கியின் எஞ்சிய பகுதியைக் கையிலெடுத்து ஏமாற்றத்துடன் பார்த்தார்.

ஹம்சாவின் முள்வேலி கட்டிய தோப்பிற் குள் குதித்து, அங்கு நின்ற பூவரசு மரத்தில் ஏறி ஒடித்து தோல்களைந்து தயார் செய்த துப்பாக்கி. கையில் ஒரு துப்பாக்கியில்லாமல் கார் ஸ்டாண்டு சந்திப்பில் நின்றால் யாரும் தம்மைக் கண்டு நடுங்க மாட்டார்கள் என்ற தோன்றலின் உத்வேகத்தில் முள்வேலி குதித்துத் தாண்டி னார். தாண்டும் போது முள்வேலியிலுள்ள கூரிய இரும்பு ஆணி காலில் கிழித்த புண் பல வருடங்களாகியும் காயவில்லை.

காலை ஓங்கி மித்தபோது புண்ணைச் சுற்றிக் கட்டிய கட்டு அவிழ்ந்து போனது பிறகுதான் தெரிந்தது. கட்டை மீண்டும் இறுக்கிக் கட்டத் துவங்கும் போதுதான் அரசு மருத்துவ மனையில் வேலை பார்த்த நர்ஸைப் பற்றிய நினைவு வந்தது. அந்தப்புண் காயாத காலம் வரை நர்ஸ் அவருடைய நினைவில் ஒரு நித்தியப் பசுமை.

கூரிய இரும்பாணி கிழித்த காயத்தி லிருந்து ஒழுகும் இரத்தத்தைத் துடைத்துச் சுத்தம் செய்து மருந்து கட்டிக் கொடுத்த நர்ஸிடம் முதலில் நன்றி தோன்றியது. எழுந்து செல்ல முற்படும்போது அவள் உட்காரச் சொன்னது எதற்கென்று புரியவில்லை. உட்கார்ந்தார். நீண்ட ஊசியுடன் வந்த அவளைக் கண்டு பயந்தார். கையில் ஊசி செங்குத்தாக இறங்கியபோது தாங்க முடியாத வலி. அவளைக் கடித்துக் கிழிக்கத் தோன்றியது. மருத்துவமனையிலுள்ள கொம்பன் மீசைக் காரன் கம்பவுண்டரைக் கண்டு பயந்து அவளைக் கண்டமேனி கெட்ட வார்த்தை களால் அபிஷேகம் செய்யவில்லை.

பற்களை நெறித்து வேதனையை அடக்கி னார். ஊசி இறங்கிய இடத்தைத் தடவிக் கொண்டு வெளியேறும்போது நர்ஸுக்கு நேராகச் சுட்டு விரலை அசைத்தார்.

"பார்... ஒன்னெ தண்ணி இல்லாத காட்டுக்கு அனுப்பிப் போடுதேன்..."

பட்டாளம் சாகிபின் எச்சரிக்கையைக் கேட்டுப் பருவப் பெண்ணான நர்ஸ் குலுங்கிக் குலுங்கி சிரித்ததை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. மீண்டும் கோபம் கொடி பறக்கவிட்டது. அவளை ஏச நா உயர்ந்தது. அப்போது அங்குவந்த கம்பவுண்டர் பட்டாளம் சாகிபைப் பார்த்து மீசையைத் தடவினார்.

மீசை தடவியதைக் கண்டதும் ஒரு தடவை கம்பவுண்டரைக் கெட்ட வார்த்தை ஏசியதற்குக் கம்பவுண்டரின் உரத்த கை பட்டாளம் சாகிபின் கபால குற்றியில் விழுந்ததையும் கண்ணிலிருந்து பொன் ஈக்கள் பறந்ததையும் எண்ணிப் பார்த்து ஓட்டம் பிடித்தார்.

காயாத வடுவிலிருந்து இப்போது வடியும் சலத்தை மொய்க்கும் ஈக்கள் அவருடைய கடும் எதிரிகள், ஈக்களின் தொந்தரவு தாங்க முடியாத நிலமை ஏற்படும்போது அதன் வமிசத்தை அழித்து ஒழிக்க பாம் போடுவேனென்று ஈக்களுக்கும் எச்சரிக்கை விடுவதுண்டு.

போஸ்டு மேன் வருகின்றாரா? பார்வையை மேலிட்டார். சத்தாம் உசேன் சொந்தக் கையால் எழுதிய கடிதமாக இருக்கும். போர் செய்ய உடன் புறப்பட்டுச் செல்ல எழுதியிருக்கலாம்.

சில வேளை, சத்தாம் உசேன் நம்மொ சீடப்பிள்ளை என்ற உண்மையை உணர்ந்த பின் அந்த நர்ஸ் பொண்ணு என்.ஓ.சி. அனுப்பியிருக்கவும் கூடும்.

போஸ்டு மேன் எங்கே போய்த் தொலைஞ்சான்?

நர்ஸ் குவைத்திலிருந்து இப்போது கடிதம் அனுப்பாததால் அவளிடம் பிணக்கு. முன்னால் பலதடவை அவள் கடிதம் அனுப்பியதையும், வாசித்துக் கேட்டதையும் மறக்கவில்லை. தபால்காரனிடமிருந்து அவளுடைய தபாலை வாங்கி வந்து ரகசியமாக வாசித்துக் காட்டுவது ஸைனுல்லா அல்லது மம்மானியா, உடன் 15 காசுக்கு ஒரு போஸ்டு கார்டு வாங்கி ஸைனுல்லாவிடம் சொல்லி பதில் எழுதிப் போடத் தவறுவதில்லை. நர்ஸ், குவைத் என்ற முகவரியில், தபால் அலுவலகத்தின் முன் தொங்கும் சிவந்த பெட்டிக்குள் அவர் கையாலேயே போடுவது ஒரு குஷி.

...தரையில் காலை ஒளி படரும் முன் கால் நடையாகக் குலசேகரத்திற்குப் புறப்பட்ட பட்டாளம் சாகிபு மூன்று நான்கு நாட்களாக நர்ஸின் வீட்டைத்தேடி அலைந்தார்...

ஒரு தடவை எரியும் உச்சி வெயிலில் துப்பாக்கி ஏந்தியபடி முச்சந்திப்பில் அட்டன்ஷனாக நின்ற பட்டாளம் சாகிபின் கிழிந்த கால் சட்டையின் பின் பக்கம் ஒரு செத்த சுண்டெலி கயிற்றில் தொங்கிக் கிடந்ததை அவர் பார்க்கவில்லை. அது வழியாக வந்த நர்ஸ் அதைப் பார்த்து ஊறி ஊறிச் சிரித்தாள்.

''மாமா, அவொ நிங்களெ காதலிக்கியா?'' சைனுல்லா காதில் ஊதியதைக் கேட்டதும் அவள் ஊசி குத்தி வைத்த கோபம் நெஞ்சிலிருந்து கரைந்தது. அவளைத் தண்ணி இல்லா காட்டுக்கு அனுப்ப எடுத்துக்கொண்ட முடிவையும் மாற்றிக் கொண்டார்.

நர்ஸைப் பற்றி யாராவது எதாவது தவறாகச் சொன்னால் போதும், பட்டாளம் சாகிபு துப்பாக்கியை சொன்னவரின் மார்புக்கு நேராகக் குறி வைத்து அலறுவார்.

''சுட்டுப் பொசிக்கிய போடுவேன்...''

அங்கு உள்ள மருத்துவமனையிலிருந்து இடமாற்றம் கிடைத்துப்போன நர்ஸை அவருடைய கழுகுக் கண்கள் தேடின.

''நம்மொ ஆளு எங்கெ மருமோனே...?''

ஸைனுல்லா பதில் சொல்லும்போது சிரிப்பதில்லை. ''அவளுக்கு சொகமில்லெ. ஒங்களெ பாக்க ஆசப்படுதா...''

''அப்படியா? நிக்கு எப்படித் தெரியும்?''

''அவளுக்கெ தம்பி பயலெ கண்டேன். ஒங்களெ அவொ அவளுக்கெ ஊட்டுக்கு கூப்பிட்டாளாம்.''

''ஊடு எங்கடேய்?''

''குலசேகரத்துக்கு மேலே வடக்கோட்டு ஒரு ரோடு போவுது. அது வழி நேரே போவணும். அங்கெ இருந்து தெக்கே போயி கெழக்கெ போற ரோடு வழியாகப் போவணும். அங்கெ நின்னு பாத்தா அவளுக்கெ ஊடுதெரியும்.'' வழி சொல்லிக் கொடுத்த ஸைனுல்லா, பட்டாளம் சாகிபின் கண்முன்னால் நிற்பதில்லை. கல்லைத் தூக்கி வீசி ஸைனுல்லாவின் மண்டையை உடைத்து தகர்ப்பேன் என்ற புலம்பல். ஒரு தடவை கண் எதிரே வந்த சைனுல்லாவை கல்லை எடுத்துக் கொண்டு வெட்டினார். சைனுல்லா தப்பி ஓடினான்.

தரையில் காலை ஒளி படரும் முன் கால் நடையாகக் குலசேகரத்திற்குப் புறப்பட்ட பட்டாளம் சாகிபு மூன்று நான்கு நாட்களாக நர்ஸின் வீட்டைத்தேடி அலைந்தார். நடந்து நடந்து புண்பட்ட கால்கள் வீங்கின. பசி தாங்காமல் தளர்ந்து தெருவோரத்தில் விழுந்தார்.

முச்சந்திப்பின் உயிர்த் துடிப்பு அடங்கிப் போன நாட்கள், மக்களுக்கிடையே பல துயர சந்தேகங்களை எழுப்பின. பாழ் கிணறுகளில் எட்டிப் பார்த்தனர். ஆற்றோரங்களில் தேடினர். கடற்கரையில் ஏதாவது பிணம் கிடைக்கின்றதா என்று கூர்ந்து நோக்கினர். நிலமை மோசமடைவதை உணர்ந்ததும் ஸைனுல்லா வெடுக்கெனச் சிரித்துக்கொண்டு சொன்னான்.

''பட்டாளம் நர்ஸைத் தேடி கொலசேகரத்துக்கு போயிரிக்கி பாரு...''

மலை ஏறுமிடத்தில் பதைபதைத்துச் சுருண்டு கிடந்த பட்டாளம் சாகிபை வேளிமலை இறங்கி வந்த கூப்பு லாரி டிரைவர் ஒருவர் காப்பாற்றி குலசேகரத்தில் இறக்கிவிட்டார். குலசேகரத்திலிருந்து விறகு ஏற்றி வந்த லாரியில் பட்டாளம் சாகிப் முச்சந்திப்பில் இறங்கியதும் துப்பாக்கி ஏந்திக்கொண்டு ஸைனுல்லாவைத் தேடினார். ''கண்டா, உடனெ சுட்டுப் பொசுக்கிப் போடுவேன், இல்லேண்ணா மண்டையெ ஒடப்பேன்... என்னெ ஏமாத்திப் போட்டான்...''

சைனுல்லாவைத் தேடியிருக்கும்போது தான் நர்ஸ் குவைத் போய்விட்டதாக மம்மானியா பட்டாளம் சாகிபின் காதில் ஊதினான். ''போய் எறங்கினதும் ஒங்களுக்கு என்.ஓ.சி. அனுப்பித் தருவா...''

ஒரு பெண்ணின் கல்விக்கு நாம் செலவிடும் பணம், ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்வதாகும். நமது நாட்டுத் தாய்மார்களின் கல்வியறிவைப் பொறுத்தே நம் எதிர்காலம் அமையும்.

— மூதறிஞர் ராஜாஜி

... குலசேகரத்திலிருந்து விறகு ஏற்றி வந்த லாரியில் பட்டாளம் சாகிப் முச்சந்திப்பில் இறங்கியதும் துப்பாக்கி ஏந்திக்கொண்டு ஸைனுல்லாவைத் தேடினார்...

மம்மானியா சொன்னதைக் கேட்டபோது ஒரு வார அலைச்சலின் கசப்பான அனுபவங்களை மறந்து தரையில் துப்பாக்கியை ஊன்றி அட்டன்ஷனாக நின்றார்.

பட்டாளம் சாகிபுக்கு வரும் கடிதத்தை தபால்காரன் அவரிடம் கொடுக்காமல் அவரை ஏமாற்றுவதாக அறிந்து தபால்காரனைத் தண்ணி இல்லா காட்டுக்கு அனுப்பப் போவதாக அதட்டினார்.

நர்ஸின் தபாலை எதிர்நோக்கி தபால் அலுவலகத்தின் முன் துப்பாக்கி ஏந்தியபடி நின்றார். ஜன்னல் கம்பி வழியாகத் தலையைப் போட்டு போஸ்டு மாஸ்டரிடம் அதட்டிக் கேட்டார். ''அப்துல் காதர் மகன் அகம்மதுக் கண்ணுக்கு எளுத்துண்டா...''

தொந்தரவு தாங்க முடியாமல் ஒரு தடவை போஸ்டு மாஸ்டர் 'ரூல்தடி'யை எடுத்து மேஜை மீது அடித்து ஓசை எழுப்பி பயமுறுத்தினார்.

''போலெ...''

''பார்... ஒன்னெ தண்ணி இல்லா காட்டுக்கு அனுப்பி போடுதேன்...''

போஸ்டு மாஸ்டரை அச்சுறுத்தியதோடு தபால் அலுவலகத்தின் பக்கம் தலை காட்டுவதில்லை.

மீண்டும் முச்சந்திப்பில் துப்பாக்கி ஏந்தி நின்று வாகனங்களுக்குத் திசை காட்டினார்.

ஸைனுல்லா பயந்தவாறு சாகிபை நெருங்கி ஒரு பீடி கொடுத்தான். 'கரண்டு' கூடுதலான கைச்சுற்று பீடியைக் கண்டபோது உலகை மறந்தார்.

''மாமா...''சைனுல்லா கூப்பிட்டான்.

''என்னடா... மைனரே...''

''ஒரு விஷயம் தெரியுமா?...''

தெரிந்து கொள்ளுங்கள்

ரயில்களின் பெயர் தமிழில் எழுதப்பட வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டது. இனி ரயில்களில் - 'பாசஞ்சர் ரயில்' என்பது தொடர் வண்டி என்றும், பாஸ்ட் பாசஞ்சர் ரயில்' வேகத் தொடர் வண்டி என்றும், 'எக்ஸ்பிரஸ் ரயில்' விரைவுத் தொடர் வண்டி என்றும் தமிழில் எழுதப்பட்டிருக்கும்.

கர்நாடக மாநிலத்திலிருந்து டில்லி மேல் சபைக்கு, தேர்வுபெற இருந்த ஒரு உறுப்பினர் இடத்திற்காக மாண்புமிகு பிரதமர் தேவகவுடா அவர்கள் மனுச்செய்திருந்தார்; அவரை எதிர்த்து வேறு யாரும் மனுச் செய்யாததால், அவர் போட்டியின்றி வெற்றி பெற்றதாக முறைப்படி அறிவிக்கப்பட்டது.

1996 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியால், இந்திய உலகக் கோப்பை கிரிக்கெட் கமிட்டிக்கு ஒரு கோடியே 56 இலட்சத்து 64 ஆயிரத்து 224 ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதய நோயால் அவதிப்படும் ரஷிய அதிபர் எல்ட்ஸினுக்கு விரைவில் அறுவை சிகிச்சை நடைபெற விருக்கிறது. சிநைடா போலியோ என்ற 46 வயதுப் பெண்மணி ஒருவர் 'ஜனநாயகம் காப்பாற்றப்பட, அவருக்கு நான் இதயத்தைத் தரச் சம்மதிக்கிறேன்' என்று அறிவித்திருக்கிறார். இதை யறிந்த எல்ட்சின், அவருக்கு நன்றிக் கடிதம் எழுதியுள்ளார்!

இலங்கையில் 1987ல் தான் முதன்முதல் ஒருவருக்கு எய்ட்ஸ் நோய் பரவத் தொடங்கியது. இப்போது அந்த எண்ணிக்கை 172 ஆகியுள்ளது. இன்னும் பத்தாண்டுகளில் அங்கே 80 ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் இருப்பார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபை மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது!

புதுடில்லியில் உள்ள தேசிய தொல்பொருள் ஆய்வுத்துறையின் 1948-ஆம் ஆண்டு முதலான வரலாற்றுக் குறிப்புகளைச் சேகரித்து வைத்துள்ளனர். 1857க்கு முற்பட்டவை மைக்ரோ பிலிம் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளனவாம்.

வேலை வாய்ப்புகள்

சென்ற இதழின் தொடர்ச்சி

COSTS AND WORKS ACCOUNTANCY

இப்பயிற்சியினை The Institute of cost and works Accountants of India (ICWA) என்ற நிறுவனம் அஞ்சல் வழியாக வழங்குகிறது. +2 முடித்தவர்கள் இந்த நிறுவனத்தின் முதல் நிலைத் தேர்வினை எழுதலாம். குறைந்த அளவு 50 மதிப்பெண் பெற்ற பட்டதாரிகள் நேரிடையாக இந்நிறுவனத்தில் பயிற்சி பெற முடியும். CA பயிற்சியைப் போலவே CWA பயிற்சியும் இருநிலையினைக் கொண்டது. பயிற்சிக் காலம் 18 மாதங்கள் ஆகும். ஆண்டில் இருமுறை தேர்வு நடைபெறுகிறது. பொறியியல் பட்டதாரிகள், பட்ட மேற்படிப்புப் படித்தவர்கள், இத்தேர்வில் வெற்றி பெற்றால் நல்ல ஊதியம் பெற வாய்ப்பு உண்டு. இதன் தலைமையகம் கல்கத்தாவில் உள்ளது. அதன் முகவரி:

The Institute of Cost and Work Accountants of India,
12, Sudder Street,
Calcutta - 700 016.

இதன் தென்னக மண்டல அலுவலகம்:

Southern India Regional Council of the ICWAI of India,
65, Montieth Lane,
Egmore,
Chennai - 600 008.

CHARTED FINANCIAL ANALYST (CFA)

கம்பெனி நிதி, முதலீடு, நிர்வாகம் ஆகிய நிலைகளில் பணியாற்றுபவர்தான் CFA ஆவார். Mutual Funds, Hire Purchase, Lease Financing, Venture capital. ஆகிய துறைகளில் இவர்களின் பணி இன்றியமையாததாகும். இதற்கான பயிற்சியினை ஹைதராபாத்தில் உள்ள The Institute of Charted Financial Analysts of India (ICFAI) தொலைக் கல்வித்துறையில் நடத்துகின்றது. முக்கிய நகர்களில் தொடர்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இளநிலைப் பட்டதாரிகள் நுழைவுத் தேர்வுக்குப் பின்னர் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். CA, MBA, CWA, காப்பீட்டுக் கழக வங்கி அலுவலர்கள், சிவில் சர்வீஸ் ஆபீஸர்கள் ஆகியோர்களுக்கு நுழைவுத் தேர்வில் விதிவிலக்கு உண்டு.

இப்பயிற்சி 3 நிலைகளில் நடைபெறுகின்றது, Preliminary, Inter and Final. இதே CFA பயிற்சியின் பாடத்திட்டம் இரண்டாண்டு முழுநேரப்படிப்பாகவும், 3 ஆண்டு பகுதி நேரப் படிப்பாகவும் பல்வேறு நிறுவனங்கள் நடத்துகின்றன. அவற்றுள் சென்னையில் Institute for Financial Management and Research என்ற நிறுவனமும் ஒன்று.

உயர் நிதி நிறுவனங்கள் (APEX FINANCIAL INSTITUTIONS).

இந்திய அரசின் மைய வங்கி (RBI), Industrial Development Bank of India (IDBI), Unit Trust of India (UTI), National Housing Bank (NHB), National Bank for Agriculture and Rural Development (NABARD), Securities Exchange Board of India (SEBI), Export-Import Bank of India (ExM Bank), Small Industries Development Bank of India (SIDBI), Industrial Credit and Investment Corporation of India (ICICI)

போன்ற உயர் நிதிநிறுவனங்கள் தங்கள் அலுவல்களை நேராகவே போட்டித் தேர்வின் மூலம் தேர்ந்து எடுக்கின்றது. Grade A, Grade B என்ற நிலைகளில் தேர்ந்தெடுக்கிறது. MBAS, CAS, CFAS முதுநிலை பொருளாதார, புள்ளியியல் பட்டதாரிகள், வணிக வங்கிகளில் பயிற்சி பெற்ற அலுவலர்கள், பொறியாளர்கள் இப்பணிகளுக்கான போட்டித் தேர்வில் கலந்துகொள்ளலாம்.

11. ACTUARIAL SCIENSCE (INSURANCE)

நாடெங்கிலும் உள்ள ஆயுள் காப்பீட்டுக் கழகங்களில் பணியாற்ற Actuarial Science படித்தவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

எண்ணம் என்னும் கழனியிலே எத்தனையோ விளைகின்றன; அவற்றின் பயன்யாவும் கண்டறிந்து சுவைபெறுவதுதான் அறிவுடைமை.
- பேரறிஞர் அண்ணா

''என்னடா...''

''நிங்களெ அந்த பளஞ்சோறு பயல் ஏமாத்திப் போட்டான்.''

''என்னயியா? ஏமாத்தி போட்டானா? உடுவனா..'' துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தார். ''அவனையும் அவனுக்கெ உம்மாயையும் அவனுக்கெ வாப்பாயையும் சுட்டுப் பொசுக்கி போடமாட்டேன். என்ன சொல்லு...?''

''பளஞ்சோறு பயலுக்கெ வாப்பாக்கெ பேரென்ன?''

''அப்துல் காதர்.''

''பளஞ்சோறக்கெ பேரென்ன...?''

''அய்மக்கண்ணு...''

''ஒங்கெ அதே பேருதான் அவனுக்கும். அவன் ஒங்ளெ ஏமாத்தி போட்டான்.''

''என்னயா... உடுவனா...?''

''கேளுங்கோ. நர்ஸ் ஒங்களுக்கு என்.ஓ.சி. அனுப்பி வச்சா. போஸ்டு மேனுட்டெ போயி நான்தான் அகம் மதுக் கண்ணு எண்ணு சொல்லி அந்த என்.ஓ.சி.யை வாங்கி ஆருட்டெயும் சொல்லாதெ பளஞ்சோறு அதையும் கொண்டு குவைத்துக்கு போயிட்டான்...''

''எனக்கு அவொ அனுப்பின என்.ஓ.சி.யை கொண்டு போயிட்டானா...''

''ஓ...''

''அவனெ உடமாட்டேன். நம்மொ பொடியன் சத்தாம் உசேனுட்டெ சொல்லி குவைத்திலெ பாம் போட்டு அவனை யும் அவளையும் தொலைச்சு போடுதேன். உம்மாக்கு புள்ள இல்லாதாக்கிப் போடு தேன்...''

பட்டாளம் சாகிபுக்கு கடும் வாசி. பற்களை நெறிந்தார். தரையில் ஓங்கி மிதித்தார்.

ஆகாசத்தில் கள்ளப்பருந்துகள் வட்டமிட்டன. பளஞ்சோறு பயலெ ஏற்றி சென்ற விமானம் என்று சிலர் சுட்டி காட்டினர். உடன் கோபமடைந்து துப்பாக்கியை மேலே தூக்கிப் பிடித்தார்.

''போங்கடா அது கள்ள பருந்துடா...'' சொன்னவர்களை வெறித்துப் பார்த்தார். முனை ஒடிந்துபோன துப்பாக்கியை தரையில் ஊன்றி வானத்தை உற்று நோக்கினார். வெண் மேகங்களின் மறைவில் ஏதேனும் விமானம் போகின்றதா என்று கவனித்தார்.

தொலைவிலிருந்து ஒரு பஸ் இரைத்து வருவதைக் கண்டார். திசைக் காட்ட கையை தூக்கினார்.

''மாமா... இந்த பஸ்ஸுக்கு கை காட்டண்டாம். அவன் போயி முட்டி சாவட்டு. இந்த பஸ்லதான் அந்த பளஞ்சோறு பயலெ ஒங்கெ என்.ஓ.சி. யையும் கொண்டு குவைத்துக்கு ஏத்திட்டு போனது...''

''அப்படியா இன்னா பாரு என்ன செய்யப்போறேன்.''

பட்டாளம் சாகிப் துப்பாக்கியை தயாராக வைத்தார். பற்களை நெறித்தார். காலோங்கி தரையில் மிதித்தார்.

''பயர்....'' சீறி வந்த பஸ்ஸுக்கு முன்னால் துப்பாக்கியை நீட்டியபடி குதித்தார். ●

– 'தங்கராசு' சிறுகதை தொகுப்பிலிருந்து...
நன்றி: பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மைலாப்பூர், சென்னை - 4

சரியாகிவிடும்!

வின்ஸ்டன் சர்ச்சில் ஒருமுறை மனநோய் மருத்துவமனையைப் பார்வையிடச் சென்றிருந்தார். உள்ளே, அவரை ஒரு மன நோயாளி வழிமறித்தான். மெய்க் காப்பாளர்கள் அவனை ஒதுக்கி விட்டார்கள்.

அவர்களைப் பேசாதிருக்கும்படி சொல்லிவிட்டு, அவனிடம் அனுதாபத்தோடு சர்ச்சில் கேட்டார்: ''ஏனப்பா, உனக்கு என்ன வேண்டும்?''

உடனே அவன் – ''நீ யாரென்று தெரிய வேண்டும்'' என்றான்.

''நான்தானப்பா இந்த நாட்டின் பிரதமர், வின்ஸ்டண்ட் சர்ச்சில்'' என்று அவர் கூற – அவன் பலமாகச் சிரித்தான்.

''என்னப்பா, ஏன் சிரிக்கிறாய்?'' என்றார், அவர்.

''இங்கு வந்த புதிதில் நான்கூட உன்னைப்போல நான்தான் நெப்போலியன் என்று சொல்லிக் கொண்டிருந்தேன். நீ இப்போது தானே வருகிறாய் – போகப் போகச் சரியாகிவிடும்!'' என்றான் அவன்.

தமிழரசு

படிக்க ... பயன்பெற ... பாதுகாக்க

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 72
அரையாண்டுச் சந்தா ... ரூ. 36
'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :

உதவி இயக்குநர்,
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை - 600 002.

மேற்கு வங்க மாநில கல்யாணி பல்கலைக் கழகம், பாம்பே பல்கலைக்கழகம், கோவா பல்கலைக்கழகம் போன்ற பல்கலைக்கழகங்களில் இப் பட்டப்படிப்புத் துறை பயிற்றுவிக்கப்படுகின்றன. பம்பாயில் உள்ள Actuarial Society of India இதற்கான பாடத்திட்டத்தினை வழங்கி உள்ளது. திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி இத்துறையில் முதுநிலை பட்டய வகுப்பினைப் பகுதி நேரத்தில் நடத்துகின்றது. பொருளாதாரம், கணிதம், புள்ளியில், வணிகவியல் பயின்றவர்கள், இப்படிப்பினை மேற்கொண்டால் நல்ல வேலைவாய்ப்பு உள்ளது. சென்னைப் பல்கலைக்கழகமும், அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் இன்சூரன்ஸ் துறையில் பட்டய வகுப்புக்களை நடத்துகிறது. இளநிலைப் பட்டதாரிகள் இப் பட்டய வகுப்பில் சேரத் தகுதியுள்ளவர்கள்.

12. விளம்பரம் (ADVERTISING)



'விளம்பரம் இல்லையேல் இன்றைய வியாபாரம் இல்லை' என்பது புதுமொழி. விளம்பரங்கள் பல வகையிலும், நிலைகளிலும் பல்கிப் பெருகி வருவதை நாம் அறிவோம். மக்கள் தொடர்பு சாதனங்களில் விளம்பரங்கள் இன்று இன்றியமையாத இடத்தைப் பெற்றிருப்பது கண்கூடு. நிர்வாகத் துறையிலும் (Executive Department), படைப்பாற்றல் துறையிலும் (Creative Department) படித்தவர்கள் சிறப்புப் பெற்று வருகின்றனர். MBA படித்தவர்கள்-குறிப்பாக அங்காடி இயலில் சிறப்புப் பெற்றவர்கள் இத்துறையில் சிறப்புப் பெற்றுவருகின்றனர். தொழில் கல்லூரிகளில் விளம்பரங்கள் பட்டயத் துறையில் பயிற்றுவிக்கப்படுகின்றது. டெல்லியிலுள்ள The Indian Institute of Mass Communication, பம்பாயில் உள்ள Xavier's Institute of Communication அகமதாபாத்தில் உள்ள Muthra Institute of Management, பாரதிய வித்யாபவனின் கிளைகள் விளம்பரத்துறைக்கும், தகவலியலுக்கும் பயிற்சி அளிக்கின்றன. அகமதாபாத்தில் உள்ள National Institute of Design Visual Communication என்ற துறையினைப் பயிற்றுவிக்கின்றது. சென்னை லயோலா கல்லூரியும் இளநிலை அளவில் Visual communication பயிற்சியினை நடத்துகின்றது.

பன்னாட்டு நிறுவனங்கள் நிரம்ப இந்திய நாட்டிற்கு வருகின்ற காரணத்தால் நிரம்ப வேலை வாய்ப்புகள் பெருகும் என்பதில் ஐயம் இல்லை.

13. இதழியல் (JOURNALISM)

இதழியல் துறை விரைந்து வளர்ந்துவரும் துறையாகும். மின்னியல் தகவல் தொடர்பு சாதனங்கள் இதழியல் துறையினை வளப்படுத்துகிறது. இதழியல் துறையும் பன்முகப் படுத்தப்பட்டுவிட்டது. இதழியலார் விளையாட்டுத்துறை, பொருளியல் துறை, நிதியியல் துறை, வாணிபத்துறை, வானொலித் தொலைக் காட்சித் துறைகளில் ஒளிப்படத்துறை, திரைப் படத்துறை என்ற பல்வேறு துறைகளில் சிறப்புப் பயிற்சியினையும் பெற்று திறம்படப் பணியாற்றி வருகின்றார்கள். நாளேடுகளும், பருவ இதழ்களும் ஆங்கிலத்திலும், வட்டார மொழிகளிலும் பல்கிப் பெருகி வருகின்றன. எனவே, இத்துறையில் வேலைவாய்ப்புகள் பெருகி வருவது கண்கூடு. துணுக்குப் படங்கள், கேலிச்சித்திரங்கள் போன்றவை வளர்ந்து வருகின்றன. பருவ இதழியல் துறை நாளும் புதுப்புதுப் பொலிவோடு வளம்பெற்று வருகிறது. முழுநேர எழுத்தாளர்களோடு சுதந்திர எழுத்தாளர்களின் எண்ணிக்கையும் பெருகி வருகிறது. நூலாக்கங்களும், மொழியாக்கங்களும் முழுவீச்சில் நடைபெறுகின்றன.

இதழியல்துறை பற்றிய சான்றிதழ் பட்டய பட்ட வகுப்புகள் நாடெங்கிலும் பல்கலைக் கழகங்களில் துவக்கப்பட்டுள்ளன. மைசூர்,

பம்பாய், பனாரஸ், மணிப்பூர், பெங்களூர், கல்கத்தா, மராத்துவடா பல்கலைக் கழகங்கள் இளநிலை இதழியல் படிப்பினை நடத்துகின்றன. மைசூர், கர்னாடகா, பஞ்சாபி, பெங்களூர், பனாரஸ், கல்கத்தா, ராஞ்சி, கேரளா, காஷ்மீர், மங்களூர், ஜாமியாமில்லியா பல்கலைக்கழகங்கள் முதுநிலை இதழியல் துறையினை நடத்துகிறது. மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் தொலைக்கல்வித்துறையில் இதழியல் தகவலியல் முதுநிலைப் பட்டப் படிப்பினை ஆங்கில - தமிழ் வழிகளில் நடத்துகின்றன. டெல்லியிலுள்ள 'Indian Institute of Mass Communication', 'YMCA Institute of Mass Medium Studies', 'Xavier Institute of Communication' சென்னை பம்பாய், கல்கத்தா, நாக்பூர், உஸ்மானியா, பூனா ஆகிய பல்கலைக் கழகங்களும் இத்துறையில் சிறப்பான பயிற்சிகளை அளிக்கிறது. நாடெங்கிலுமுள்ள முக்கிய நகர்களில் 'பாரதீய வித்யா பவன்' கல்லூரிகள் அமைத்துத் தகவலியல் துறையில் பெரும்பணியாற்றி வருகின்றன. சான்றிதழ் படிப்பினை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பகுதி நேரப் பயிற்சியாக வழங்குகிறது. பத்தாம் வகுப்பில் வெற்றி பெற்றவர்கள் இளநிலைப் பட்டதாரிகள் முழுநேர இதழியல் படிப்பினை இப் பல்கலைக் கழகம் வழங்குகிறது. பட்டய வகுப்பினை அலிகார் ராஜஸ்தான், அழகப்பா, சௌராஷ்ட்ரா, Indian Institute of Mass Communication நாக்பூர், உஸ்மானியா, கௌஹாத்தி, மைசூர், கிருஷ்ண தேவராயா, குஜராத் காலிகட், கொச்சி, மதுரை, காமராஜ் போன்ற பல்கலைக் கழகங்கள் வழங்குகின்றன. இளநிலைப்பட்டதாரிகள் ஓராண்டில் இப்பயிற்சியினைப் பெறலாம்.

குறிப்பாக மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் இளநிலையில் அறிவியல் தகவலியல் (B.Sc., Science Communication) பட்டப்படிப்பும் சென்னை லயோலா கல்லூரி இளநிலையில் Visual Communication படிப்பினையும் பயிற்றுவிக்கின்றனர். மொழிப் பாடங்களைச் சிறப்பாகப் பயிலுகின்றவர்கள் இத்துறையில் பயிற்சி பெற்றால் வேலை வாய்ப்பினை எளிதில் பெறமுடியும்.

14. சுற்றுலாத் துறை (Tourism)

சுற்றுலாத்துறை வெகுவேகமாக வளர்ந்து வரும் துறையாகும். அண்மைக் காலங்களில் அன்னியச் செலாவணியை அதிகமாகப் பெற்றுத்தரும் துறையாகும். தேசிய அளவிலும் மாநில அளவிலும் சுற்றுலா வளர்ச்சிக் கழகங்கள் துவக்கப் பெற்று பல்வேறு செயல் திட்டங்களை உருவாக்கியுள்ளன. Indian Institute of Travel and Tourism Management (IITTM), டெல்லியில் துவங்கப் பெற்று சுற்றுலாக் கல்வியை மேம்படுத்தி வருகிறது. Indian Institute of Travel and Tourism Management சுற்றுலாக் கல்வியினையும் நிர்வாகத்தினையும் மேம்படுத்தி வருகிறது. குருசேத்திரா, அலிகர், குவாலியரில் உள்ள சிவாஜி, ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள சுற்றுலாத்துறை National Council for Hotel Management and Category Technology (NCHMCT) என்ற அமைப்பினை டெல்லியில் நிறுவி உள்ளது. இந்த அமைப்பு நாடெங்கிலும் உள்ள பதினேழு நிறுவனங்களில் மூன்றாண்டு பட்டயப் படிப்பினை இத்துறையில் நடத்துகிறது. இதற்கான நுழைவுத் தேர்வில் பலனறிமுறையில் எழுத்துத் தேர்வும் பின்னர் நேர்முகத் தேர்வும் உண்டு.

10 +2 முடித்தவர்கள் குறிப்பாக ஆங்கிலத்தைக் கட்டாயப் பாடமாக எடுத்தவர்கள் இப்பயிற்சியில் சேரலாம். இத்துறையில்

'வாழ வேண்டுமெனில் - தொழில்கள்
வளர வேண்டுமய்யா
ஏழை என்றொருவன் - உலகில்
இருக்க லாகாதையா!'
– கவிமணி

Oberai, Taj and Welcome Group நிறுவனங்கள் மராத்வடா பல்கலைக் கழகங்கள் இச் சுற்றுலாத்துறையில் இளநிலை முதுநிலைப் பட்டதாரிகளுக்கு, Master of Tourism Administration (M.T.A.) என்ற பயிற்சியினை வழங்குகிறது. மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் தொலைக் கல்வித்துறை Master of Tourism Management என்ற பயிற்சியினை வழங்குகிறது. பாண்டிச்சேரி, சென்னை, மதுரை, உத்கல், கோவா, கேரளா, டெல்லி, பம்பாய், அண்ணாமலை, ஆக்ரா, அனந்தப்பூர், இந்தூர், சாகர், குருகேந்திரா இமாச்சால பிரதேஷ், சிவாஜி, ரவிசங்கர், மராத்துவடா, பெர்ஹாம்பூர் போன்ற பல்கலைக் கழகங்கள் ஓராண்டு பட்டயப் படிப்பினை இத்துறையில் வழங்குகிறது. இளநிலைப் பட்டதாரிகள் இத்துறையில் சேரலாம். திருவனந்தபுரத்திலுள்ள 'Kerala Institute of Tourism' இத்துறையில் சிறப்புப் பயிற்சியினை வழங்குகிறது. பம்பாயிலுள்ள 'SNDT Women's University', Sophia Polytechnic, Bombay Nirmal Niketan, போன்ற நிறுவனங்களும் இத்துறையில் பயிற்சி அளிக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் உள்நாட்டுக்குள்ளும் வெளிநாட்டிலிருந்தும் குவிகின்ற காரணத்தினால் இத்துறையில் வேலை வாய்ப்புக்கள் பெருகிவருகின்றன. மேலும் நாடெங்கிலும் பயண முகமைகள் (Travel Agencies) பெருகிவருவதால் இத்துறையில் நல்ல ஊதியம் பெற சிறப்புப் பயிற்சி பெற்றோருக்கு வாய்ப்பு உண்டு; வளர்ச்சியும் உண்டு.

15. உயிரியல் தொழில் நுட்பம் (Bio-Technology)

மருந்தாக்கத் தொழில், வேதியியல், தொழில் வேளாண்மை ஆகிய துறைகளிலும் ஆராய்ச்சி வளர்ச்சித்துறைகளிலும் உயிரியல் தொழில் நுட்ப வல்லுனர்கள் பெரிதும் விரும்பப்படுகின்றனர். டெல்லி காரக்பூரில் உள்ள ITI இத்துறையில் பயிற்சி அளிக்கிறது +2 நிலையில் இயற்பியல், வேதியியல், கணிதவியல், உயிரியல் படித்தவர்கள் சிறப்புப் பயிற்சியினைப் பெற முடியும். டெல்லி IIT யில் Integrated five year M.Tech, Programme in Bio-Chemical Engineering and Bio-Technology பயிற்றுவிக்கப்படுகிறது. காரக்பூர் ITI யில் Integrated M.Tech Programme of five and half years Bio-Technology பயிற்றுவிக்கப்படுகிறது. இத்துறையில் நுழைய ITI Joint Entrance Exam எழுத வேண்டும். ஆண்டுதோறும் மே மாதம் இத்தேர்வு நடைபெறும். டெல்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் மே மாதத்தில் கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களில் M.Sc., Bio-Technology படிக்க நுழைவுத்தேர்வு நடத்துகிறது.

Banaras Hindu University, Varanasi.
Pondicherry University.
M.S. University, Baroda.
Poona University.
Devi Ahilya Vishwa Vidhyalaya, Indore.
Goa University.
Guru Nanak Dev University.
Central University, Hyderabad.
Madurai Kamaraj University,
Punjab University, Chandigarh.
G.B. Pant University of Agriculture Technology.
Jawaharlal Nehru University, Delhi.

வேளாண்மை உயிர் நுட்பத்துறையில் M.Sc., பட்டம் பெற, கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், உயிர்நுட்பத்துறையில் M.Tech. என்ற முதுநிலைப் படிப்பினை அண்ணாபல்கலைக் கழகமும் நடத்துகின்றன. M.B.B.S., B.U.Sc., B.Sc., (Hons) படித்தவர்களும் இத்துறையில் பயிற்சி பெறலாம். இத்துறையில் பயிற்சி பெறப் பொதுவான நுழைவுத் தேர்வு ஆண்டுதோறும் மார்ச் மாதத்தில் அறிவிக்கப் படும். மே மாத வாக்கில் 30 நகர்களில் நடைபெறும். இத்துறையில் பயின்றவர்களுக்கு ஆராய்ச்சி வாய்ப்பு இந்தியாவில் மிகுதியுமுண்டு. வெளிநாடுகளிலும் இவர்கள் பெரிதும் விரும்பப் படுகிறார்கள். உயர்வான ஊதியம் இவர்களுக்கு எங்கும் கிடைக்கும்.

16. உணவக நிர்வாகம் (Hotel Management)

சுற்றுலாப் பயணிகள் பெருகி வருவதாலும், போக்குவரத்துத் துறை வளர்ச்சி

பெற்றுள்ளதாலும் அண்மைக்காலங்களில் உணவக நிர்வாகம் சிறப்புப் பெறத் தொடங்கிவிட்டது. நாடெங்கும் நட்சத்திர ஓட்டல்கள் பெருக ஆரம்பித்துவிட்டன. Motels, Resort Hotels, Palace Hotels, Floating Hotels, Airport Hotels, Youth Hostels, Suburban Hotels என்று இத்துறை வேகமாக வளர்ந்து வருகிறது. உணவக மேலாண்மை பற்றிய பயிற்சியினை அளிக்கிறது. டெல்லியிலுள்ள 'Oberai School of Management' மூன்றாண்டு இளநிலைப் பட்டப்படிப்பினை இத்துறையில் நடத்துகிறது. கர்நாடகாவில் மணிப்பால் நிறுவனம் இத்துறையில் மூன்றாண்டு பட்டப்படிப்பு நடத்துகின்றது. தாஸ் குரூப் ஔரங்காபாத் நகரில் Indian Institute of Hotel Management என்ற அமைப்பின் மூலம் பயிற்சி அளிக்கிறது. பாதுகாப்புத்துறை, ரெயில்வே, விமானப் போக்குவரத்து, கப்பல் போக்கு வரத்து தொழிற்சாலை வளாகச் சிற்றுண்டிச் சாலைகளில் இத்துறையில் பயிற்சி பெறுகின்றவர்கள் வளாகத் தேர்வின் மூலம் வேலை வாய்ப்பும் பெறுகின்றார்கள். இத்துறையில் முதுநிலையில் பட்டம் பெற்றவர்கள் பயிற்சி நிறுவனங்களில் ஆசிரியர்களாகப் பணியாற்ற விழைகின்றார்கள். குறைந்த அளவு மாதம் ரூ. 5000/- வரை ஊதியம் பெற இத்துறையில் வாய்ப்பிருக்கிறது. வெளிநாடுகளிலும் இத்துறையில் பயின்றவர்கள் எளிதில் வேலை வாய்ப்புப் பெறமுடிகிறது.

17. வைரம் பட்டை தீட்டுதலும், நகை வடிவமைப்பும்

இந்திய நாட்டில் மகளிர் பெரிதும் நகைகளைப் பல்வேறு வடிவங்களில் விரும்புகின்றனர். ஆகவே, இத்துறையினர் பெரிதும் அண்மைக்காலங்களில் வேலைவாய்ப்பினைப் பெற முடிகிறது. 10 + 2 தேர்வில் வெற்றி பெற்றவர்கள் 3 முதல் 8 மாதங்கள் வரை இப்பயிற்சியில் குறுகிய காலப் பயிற்சியினைப் பெற வாய்ப்பிருக்கிறது. மும்பாயிலுள்ள Gemmological Institute of India (29, Gurukul Chambers, 187-189 Mumbadevi Road, Mumbai - 2.) இத்துறையில் டிப்ளமோ வகுப்புகளைக் கீழ்க்கண்ட நிறுவனங்கள் நடத்துகின்றன.

1) Diploma in gemmology and diamond grading five months. Eligibility Secondary School Certificate. (SSC)

2) Diamond cutting course (Certificate Course) Six weeks approximately.

Eligibility Diploma in Gemmology,

3) Diploma in coloured gems and diamond grading

பம்பாயிலுள்ள St. Xavier கல்லூரியும், இத்துறையில் டிப்ளமோ வகுப்பினை நடத்துகிறது. ஜெய்ப்பூர் நகரில் மத்திய அரசுப் பயிற்சிப்பள்ளி இத்துறையில் ஆறுமாத காலப் பயிற்சி வகுப்பினை நடத்துகிறது. தமிழகத்தில் சென்னையில் Small Industries Service Institute (65/1, G.S.T. Road, Chennai - 600 032.) என்ற நிறுவனம் gem cutting and polishing என்ற பயிற்சியினை நடத்துகிறது. பயிற்சிக் காலம் ஆறு மாதங்களாகும். பத்தாம் வகுப்புத் தேறியவர்கள் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு 18 முதல் 35 வரை ஆகும். மகளிருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சூரத் நகரில் Advance Course in Diamond Technology, 45 வாரங்களில் நடத்தப்படுகிறது. பட்டதாரிகள் இதில் சேரலாம். தங்க நகை வடிவமைப்புக்கள் பற்றிய பயிற்சிகளும் பம்பாய் ஜெய்ப்பூர் சூரத் போன்ற நகர்களிலும் வழங்கப்படுகின்றன. பம்பாயிலுள்ள SNDT Women's University இத்துறையில் புதிய பயிற்சியினை அண்மையில் வழங்கியுள்ளது.

இத்துறையில் பயிற்சி பெற்ற இந்தியர்களுக்கு உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் வேலை வாய்ப்புக்கள் பெருகி வருகின்றன.

18. மக்கள் தொடர்பு (Public Relations)

மனித மதிப்புக்கள் விரைந்து வீழ்ந்து வருகின்றன. இக் காலகட்டத்தில் மனித உறவைப் பலப்படுத்துவது இன்றியமையாத பணியாகும். நிறுவனங்கள் தனியார் துறையிலும் பொதுத்துறையிலும் கூட்டுத் துறையிலும் பெருகி வருவதை நாம் அறிவோம். அமைப்புக்களிடையேயும், நிறுவனங்களிடையேயும் உறவினை உருவாக்கி மேம்படுத்திப் பாதுகாப்பது சிரமமான பணி. இப்பணியினைத்தான் மக்கள் தொடர்பு அலுவலர்கள் செய்து வருகின்றனர். இதற்கான பயிற்சியினைச் சான்றிதழ் பட்டயப் படிப்புக்கள் மூலம் பெறமுடியும்.இதழியியல் துறையிலோ, மக்கள் தொடர்புத்துறையிலோ பணியாற்றுபவர்கள் இப்பணியைச் செவ்வனே செய்ய முடியும். குறைந்த அளவு பட்டதாரிகள்தான் இப்பயிற்சியில் சேர முடியும். டெல்லியில் உள்ள 'Indian Institute of Mass Communication' இத்துறையில் முதுநிலை பட்டயப் படிப்பினை வழங்குகிறது. சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி போன்ற இடங்களில் உள்ள பாரதிய வித்தியாலயா இதற்கான பயிற்சியினை அளிக்கிறது. கொச்சியில் உள்ள 'School of Communication and Management Studies' என்ற நிறுவனம் அஞ்சல் வழியாகவும், நேரடியாகவும் இப்பயிற்சியினை அளிக்கிறது. டெல்லியிலுள்ள YMCA Institute of Mass Media Studies, பூனாவில் உள்ள Symbiosis Institute of Journalism and Communication, பம்பாயிலுள்ள Xavier Institute of Communication, Sophia College, Somani Polytechnic, N.M. Institute of Management Studies, போன்ற நிறுவனங்கள் இப்பயிற்சியினை அளிக்கின்றன. பஞ்சாப் சண்டிகர், கல்கத்தா, உஸ்மானியா, பனாரஸ் பல்கலைக் கழகங்கள் இத்துறையில் பட்டயப்படிப்பினை வழங்குகின்றன. வளர்ந்து வரும் இத்துறையில் வேலை வாய்ப்புக்கள் பெருகி வருகின்றன.

19. மருத்துவம் சாராபடிப்புத்துறை (Paramedical Studies)

மருத்துவத் துறைக்குத் துணை புரிகின்ற துறை paramedical என்று வழங்கப் பெறுகின்றது. physiotherapy, occupational therapy, prosthetics and orthotic engineering, audiology and speech therapy, opthalmic technology and medical laboratory technology என்பன இதில் அடங்கும். மருந்தகங்களும், பாலிகிளினிக்குகளும் சிறு நகரங்கள் முதல் பெரு நகரங்கள் வரை பெருகி வருகின்றன. இத்துறையில் பயிற்சி பெற்றவர்கள் குறைவாக இருப்பதால் பல சிக்கல்கள் எழுகின்றன. உள்நாட்டிலேயே இவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் இருந்த போதிலும் பெரும்பாலோர் வெளிநாடுகளுக்குச் சென்று விடுகின்றனர். எனவே, இத்துறையினருக்குப் பயிற்சி அளிக்க அண்மைக் காலங்களில் சுயநிதி நிறுவனங்கள் பெருகி வருகின்றன.

Physiotherapy, Occupational therapy என்ற துறைகளில் பயிற்சி பெற, The Rehabilitation Council of India (4, Vishnu Digambar Marg, New Delhi - 110 002). என்ற அமைப்பு நுழைவுத் தேர்வுகளை நடத்துகிறது. வகுப்பில் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களில் 50 விழுக்காடுகள் தனித்தனியே பெற்றிருப்பதோடு ஆங்கிலத்திலும் தேர்வு பெற்றிருக்க வேண்டும். இளநிலை (Honours) என்ற படிப்பினையுடைய பயிற்சிக் காலம் மூன்று ஆண்டுகளும் அதற்குப் பின்னர் ஆறுமாத காலம் உள்ளிருப்பு (Intensive) ஆகும். இந்தப் பயிற்சியின் நுழைவுத் தேர்விற்கான விளம்பரம் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரியில் வெளியிடப்படும். மே, ஜூன் மாதங்களில் தேர்வுகள் நடைபெறும் The Rehabilitation Council of India நடத்துகின்ற நுழைவுத் தேர்வுகளில் வெற்றி பெற்றவர்கள் கீழ்க்கண்ட இரு நிறுவனங்களில் பயிற்சி பெறுவர்.

National Institute of Rehabilitation Training and Research, Cubtad District.

National Institute for Orthopaedically Handicapped, Calcutta.

இவை தவிர, தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரியிலும் சென்னைப் பல்கலைக் கழகத்திலும், வேலூர் Christian Medical College லும் இப்பயிற்சிகள் தரப்படுகின்றன.

அண்மைக் காலங்களில் தமிழகத்தில் பல சுயநிதிக் கல்லூரிகளில் இப்பயிற்சிக்கான பட்டயப் படிப்புத் துவங்கப்பட்டுள்ளது.

Prosthetic and Orthotic Engineering :

எலும்பு முறிவு, நரம்பு முறிவு மருத்துவத் துறை வெகு வேகமாக வளர்ந்து வருகிறது. டெல்லியிலுள்ள The Rehabilitation Council of India இதற்கான நுழைவுத் தேர்வினை நடத்துகிறது. 10+2 படித்தவர்களுள் இயற்பியல், வேதியியல், கணிதவியல், பாடங்களில் 50 விழுக்காடுகளும் ஆங்கிலத்திலும் தேர்வு பெற்றிருக்க வேண்டும். நுழைவுத்தேர்வு இந்தப்பாடங்களின் அறிவினைச் சோதிக்கும் வகையிலேயே அமையும். இந்தத் துறையில் இரண்டரை ஆண்டு பட்டப்படிப்பும் மூன்றாண்டு உள்ளிருப்புப் பயிற்சியும் இடம்பெறும். மேற்குறித்த கல்வி நிலையங்களிலேயே இந்தப் பயிற்சியும் நடத்தப்படுகிறது. டெல்லியிலுள்ள 'The Department of Rehabilitation at Safdarjung Hospital' மூன்றாண்டிற்கான பட்டயப் படிப்பினை வழங்குகிறது. இந்த மருத்துவமனை ஜூலை மாதத்தில் இதற்கான விளம்பரத்தினை ஆண்டுதோறும் வழங்கும்.

Audiology and Speech Therapy :

+2 முடித்தவர்கள் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்களில் 50 விழுக்காடுகள் பெற்று இருத்தல் வேண்டும். இளநிலை பட்டப்படிப்பு மூன்று ஆண்டுகள் பயிற்சிக் காலங்களில் வழங்கப்படுகிறது. இவற்றுள் ஆறுமாத கால உள்ளிருப்புப் பயிற்சியும் அடங்கும். தமிழகத்தில் சென்னைப் பல்கலைக் கழகம் இப்பயிற்சியினை அளிக்கிறது. பம்பாய் நகரில்

B.Y.L. Nair Hospital

T.N. Medical College

Aliyaver Jung National Institute of the Hearing Handicapped.

என்ற மூன்று நிறுவனங்களும் இப்பயிற்சியினை அளிக்கின்றன. மைசூரில் உள்ள 'All India Institute of Speech and Hearing' டெல்லியிலுள்ள All India Institute of Medical Science சண்டிகரிலுள்ள Post Graduate Institute of Medical Education and Research.

மங்களூரில் உள்ள College of Psyotherapy, Speech and Hearing போன்ற நிறுவனங்களும் இப்பயிற்சியினை அளிக்கின்றது.

Opthalmic Technology / Optometry

10+2 முடித்தவர்களுள் இயற்பியல், வேதியியல், உயிரியல் அல்லது கணிதம் இவற்றில் தனித்தனியே 50 விழுக்காடு பெற்றவர்கள் இப்பயிற்சியில் சேரலாம். மூன்று ஆண்டு B.Sc., இளநிலைப்பட்டப்படிப்பும் அதன்பின்னர் இரண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கான பட்டப்படிப்பும் வழங்கப்படுகின்றன.

All India Institute of Medical Science, Delhiயில் மூன்று ஆண்டு B.Sc., படிப்பு வழங்கப்படுகிறது.

மூன்று ஆண்டு பட்டயப் படிப்புகள் கீழ்க்கண்ட நிறுவனங்களில் வழங்கப்படுகின்றன.

Jaslok Hospital, Mumbai

K.E.M. Hospital, Mumbai

E.Y.L. Nair Hospital, Mumbai

இரண்டு வருடப் பட்டயப் படிப்புகள் கீழ்க்கண்ட நிறுவனங்களில் வழங்கப்படுகின்றன.

School of Optometry, Institute of Opthalmology,

Sarojini Devi, Eye Hospital, Hyderabad,

Govt. Medical College of Aurangabad and Nagpur

Govt. Opthalmic Hospital, Chennai

Gandhi Eye Hospital, Aligarh

Sitapur Eye Hospital, U.P.

Medical Laboratory Technology

மருத்துவத்துறை விற்பன்னர்களோடு இவர் பணியாற்ற வேண்டியிருக்கிறது. +2 முடித்தவர்கள் (அறிவியல்துறை) இப்பயிற்சியில் சேரலாம். இப்பயிற்சிக்காலம் மூன்று ஆண்டுகளாகும். கீழ்க்கண்ட நிறுவனங்கள் இப்பயிற்சியை வழங்குகிறது.

Pant Institute of Technology, Pondicherry

Jawarharlal Institute of Post Graduate Medical Education and Research (JIPMER) Pondicherry

University of Kerala Medical College, Thiruvananthapuram

Post Graduate Insitute of Medical Science, Chandigarh

டெல்லியிலுள்ள AIIMS இத்துறைக்கான பயிற்சியினை அளிக்கிறது. பம்பாயிலுள்ள

ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபெல் 1833 ஆம் ஆண்டில் ஸ்டாக் ஹோம் நகரத்திலே பிறந்தார். குழந்தைப் பருவம் முதற்கொண்டே அவர் பலவீனமாக இருந்தார். ஆயுள் முழுவதும் அடிக்கடி தலைநோயினால் வருந்துவார்.

சிறுவயது முதலே இவருக்கு இரசாயனம், பௌதிகம், எந்திரம் முதலிய விஞ்ஞான சாத்திரங்களில் மிக்க அவா இருந்தது. இவர் அமெரிக்காவுக்குச் சென்று அங்கே மிகவும் பிரக்கியாதி பெற்றிருந்த எந்திர சாஸ்திர நிபுணராகிய எரிக்ஸன் என்பவரோடு தங்கி, அவரிடம் வேலை கற்றுக்கொண்டார். அப்போது எரிக்ஸன் பல தடவைகளில் சோதனைகளை நடத்தப்போதிய பணம் இல்லாமல் துன்புறுவதைக் கண்டு, தாம் பணக்காரரானால் விஞ்ஞானிகளுக்கு உதவும்படியாகப் பெரிய நிதி ஒன்றை அளிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார். பிற்காலத்தில் இதை நிறைவேற்றுவதற்காகச் செய்த ஏற்பாடுதான் 'நோபெல் பரிசு!'

நாற்பது ஐம்பது ஆண்டுக்கு முன் 'நைட்ரோக்ஸிஸெரின்' என்பதுதான் மிகச் சிறந்த வெடிமருந்து, ஆனால் எதிர்பாராத வேளைகளில் வெடித்துப் பெருத்த உயிர்ச் சேதமும் பொருள் நஷ்டமும் உண்டாக்கி வந்தது. வெடிக்கும் சக்தியில் மிகச் சிறந்ததாயும், பயமின்றிக் கையாளக் கூடியதாயும் உள்ள வெடிமருந்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நோபெல் மிகவும் தீவிரமாய் முயன்று வந்தார்.

இவ்வாறு முயன்று வருகையில் தற்செயலாக நேர்ந்த சம்பவம் ஒன்று இவருக்கு உதவி செய்தது. பீப்பாய் ஒன்றிலிருந்து இலேசாக ஒழுகிய நைட்ரோக்ஸிஸேரின், பீப்பாயைச் சுற்றி அணைத்துக் கொட்டியிருந்த மணலோடு கலந்து கட்டியாக இருந்தது. இதைச் சோதித்தபோது தாம் நாடிய குணங்கள் இதற்கு இருப்பதை நோபெல் தெரிந்து கொண்டார்.

பிறகு முக்கால் பங்கு நைட்ரோக்ஸிநிஸரினையும் கால் பங்கு ஒருவகை மண்ணையும் கலந்து சிறந்த வெடிமருந்தை இயற்றினார். இதுதான் இக்காலத்தில் 'டைனமைட்' என்று வழங்கும் வெடிமருந்து.

பீரங்கி, துப்பாக்கி, கடற்கண்ணி முதலியவை மூலமாக இது செய்துள்ள கெடுதியும் கணக்கற்றது. எனினும், இதனால் உலகத்துக்கு விளைந்த நன்மைகளும் கணக்கில. நமது நாகரிகமே இதனால் புதிய கிளர்ச்சியை அடைந்ததென்று சொல்லலாம்.

பெ.நா. அப்புசுவாமி

தூர தேசங்களைப் பிணைக்கும் ரெயில்பாதைகளைப் போடுவதற்கும், வழியே குறுக்கிடும் மலைகளைத்தகர்த்தெறிவதற்கும், பூமியைக் குடைந்து, அதன் அடியிலே ஒளிந்து பயனற்றுக் கிடக்கும் செல்வங்களைக் கொண்டுவருவதற்கும், கடல்களை இருகூறாக்கும் நிலத்தைப் பெயர்த்தெறிந்து சமுத்திரங்களை ஒன்றாக இணைப்பதற்கும் இது உதவுகிறது. கிணறு வெட்டவும், வாய்க்கால் வெட்டவும், மரம் வைக்கக் குழி தோண்டவும் உதவுகிறது. நதிகளைத் தடுத்து அணைகளைக் கட்டிப் பாலைவனத்தைச் செழிக்கச் செய்வதற்கும் கடல் துறைமுகங்களைக் கட்டி வர்த்தகத்தை வளர்ப்பதற்கும், பெரிய பாலங்களைக் கட்டி நாட்டை ஒன்றாக இணைப்பதற்கும் வேண்டிய பெரும் பாறைகளை இது பெயர்த்துத் தருகிறது.

ராட்சச சக்தி வாய்ந்த இந்த மருந்துப் பொடியினின்று நோபெல் பல இலட்சம் லட்சமாகப் பணம் சம்பாதித்தார். ஆயினும் இவர் சந்தோசமான சுக வாழ்வு வாழவில்லை. தாம் வாலிபத்தில் காதலித்த பெண் இறந்து விட்டபடியால் இவர் திருமணம் செய்து கொள்ளாது நோயுற்ற உடலோடு, தன்னந்தனியாகவே வாழ்ந்து வந்தார். தீராத தலைநோவோடு வருந்திய நிலையிலும்கூட இவர் துர்நாற்றம் வீசும் சோதனைச்சாலையிலே வேலை செய்வார்.

இவரை அழகானவரென்று சொல்ல முடியாது. குள்ள வடிவம் உடையவர். இவருக்குப் பல மொழிகள் தெரியும். சுவைபட பேசுவார். நன்றாய்க் கதை சொல்லுவார். சற்றே அவநம்பிக்கையுள்ள சுபாவம். 1896-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10-ஆம் தேதியன்று தம்முடைய பாரிஸ் நகரத்துத் தொழிற்சாலையில் திடீரென்று இறந்து போனார். சுமார் இருபது லட்சம் பவுன் மதிப்புள்ள தம்முடைய சொத்து முழுவதையும் தர்மத்துக்கு எழுதி வைத்திருந்தார்.

தம்முடைய சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தை ஆண்டுதோறும் ஐந்து பரிசுகளாக வழங்க வேண்டுமென்று இவருடைய மரணசாஸனத்தில் கண்டிருந்தது. இதன்படி பரிசளிக்கப்படும் ஆண்டுக்கு முந்திய ஆண்டிலே பௌதிகம், இரசாயனம், வைத்தியம், இலக்கியம், சமாதானம் என்னும் ஐந்து துறைகளுள் ஒவ்வொன்றிலும் மிகச் சிறந்த செயலைச் செய்த மேதாவியைத் தேர்தெடுத்து அவருக்குப் பரிசும், பொற்பதக்கமும், நற்சான்று பத்திரமும் அளித்து வருகிறார்கள். பரிசின் மதிப்பு இப்போது சுமார் இலட்சம் ரூபாயாக இருக்கிறது. இதைத்தான் நோபெல் பரிசு என்று சொல்லுகிறார்கள். பாரபட்சம் இன்றி, ஜாதி, மதம் தேசம் முதலிய வேற்றுமைகளைக் கருதாது, மதிப்பு ஒன்றையே கருத்தாகக் கொண்டு இப்பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. உலகத்திலுள்ள அறிவாளிகள் அனைவரும் இந்தப் பரிசையே மிகவும் சிறந்த பரிசாகக் கொண்டாடுவதால் இதைப் பெறும் மேதாவி ஒவ்வொருவரும் தன்னுடைய பிறவியில் பெரும் பேற்றைப் பெற்றதாகக் கருதுகிறான்.

இந்தப் பரிசை ஏற்படுத்தின நோபெல் இறந்த தினமாகிய டிசம்பர் மாதம் பத்தாம் தேதியன்று இந்தப் பரிசு அளிக்கப்பட்ட விவரங்கள் வெளியிடப்படும்.

இரசாயணத்துக்கும், பௌதிகத்துக்கும் பரிசுக்குத் தகுதியானவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் பொறுப்பும் ஸ்வீடன் நாட்டு விஞ்ஞான சங்கத்தாரைச் சேர்ந்தவை. வைத்தியப் பரிசுக்குத் தக்கவரைத் தேர்நதெடுப்பது ஸ்டாக்ஹோம் நகரத்துக் காரனின் ஸ்தாபனம். இலக்கியப் பரிசுக்குத் தக்கவரைத் தேர்ந்தெடுப்பது ஸ்டாக்ஹோம் இலக்கியச் சங்கம். சமாதானப் பரிசுக்கு உரியவரைத் தேர்ந்தெடுப்பது நார்வே தேசத்துப் பார்லிமெண்டு சபையார் பொறுக்கி எடுத்த ஐவர் கொண்ட கமிட்டி ஒன்று.

1901 ஆம் ஆண்டு முதல் இப்பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. பல நாட்டினர் இப்பரிசுகளைப் பெற்றிருக்கிறார்கள்.

உலகத்திலுள்ள பிறநாட்டு மக்கள் யாவரும் தாங்கள் பெறக்கூடிய பரிசுகள் அனைத்திலும் சிறந்ததாகவே நோபெல் பரிசைப் பாராட்டி வருகிறார்கள். ●

– முனைவர் மு. வளர்மதி தொகுத்து, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113- வெளியிட்டுள்ள 'பெ.நா. அப்புசாமியின் அறிவியல் கட்டுரைகள்' என்ற நூலிலிருந்து.

அறிவியல் துளிகள்

பச்சையம் இருப்பதால்தான் இலைகள் பச்சையாக இருக்கின்றன எனப்படுகிறது; யூகலிப்டஸ், ரோஜா போன்றவற்றின் இலைகள் 'ரோஸ்' நிறமாக இருப்பது ஏன் தெரியுமா? அவற்றின் தளிர்களில் 'ஆந்தோஸையனின்' (Anthocyanin) என்ற நிறமி இருப்பதால்தான். ஆனால், அவற்றின் இலையானது முற்ற முற்ற அந்த நிறமியானது பலவீனப்பட்டுவிடும்; இலைகளும் பச்சைப்பசேல் என்று மாறிவிடும்.

மருதாணி இலைகளில் லாஸோன் (Lawsone) என்கிற நிறமி உள்ளது; நம் விரல் நகங்களைச் சிவப்பாக்குவது இதுதான்!

சொன்னால் உங்களுக்கு வியப்பாக இருக்கும்; தாவரங்களில் நகரும் தாவரங்கள் உண்டு தெரியுமோ? பொதுவாக அவை ஒரு சில பாசிகளில் மட்டுமே இருக்கின்றன. அந்த நகரும் வகைப்பாசிகள் கிளைமைடோமொனஸ் (Chlamydomonas), Eudorina, Pandorina Volvox – ***எனப்படும்.***

SNDT பல்கலைக்கழகம் இப்பயிற்சியினை அளிக்கிறது. பயிற்சிக்காலம் மூன்று ஆண்டு. அவற்றுள் ஆறுமாதகால உள்ளிருப்புப் பயிற்சி யும் அடங்கும்.

தமிழகத்தில் இப்பயிற்சி இரண்டாண்டு பட்டயப்படிப் பாகவும், ஓராண்டு சான்றிதழ் படிப்பாகவும் நடத்தப்படுகிறது. அரசு மருத்துவக்கல்லூரிகளில் இப்பயிற்சி அளிக்கப்படுகிறது. அண்மைக்காலங்களில் இத்துறையினருக்கான பயிற்சியினை அளிக்க சுயநிதிக் கல்லூரிகள் நிரம்ப துவக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியினைப் பெற்றவர்கள் சுயவேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பிருக்கிறது. தனியார் மருந்தகங்களிலும் பணியாற்றிச்சம்பாதிக்க வாய்ப்பிருக்கிறது. வெளிநாடுகளிலும் இவர்களுக்கு வேலைவாய்ப்புகள் இருக்கின்றன.

மதிப்பீடு

எண்ணற்ற துறைகளில் வேலை வாய்ப்புகள் இருந்த போதிலும், அதனை இளைஞர்கள் உரிய காலத்தில் இனங் கண்டு பயிற்சி பெற்றால்தான் அத்துறையில் அவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறமுடியும். குறிப்பாக மருத்துவம், பொறியியல், வேளாண்மை, மேலாண்மை, துறைகளில் பயின்றவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறவும் முடியும். தாங்களாகவே சுயமாகப் பணியாற்றவும் முடியும். அண்மைக் காலங்களில் அதிவேகமாக வளர்ந்துவரும் கம்ப்யூட்டர்கல்வி, அதன் பயன்கள் ஒளிமயமான உள்நாட்டு மேல்நாட்டு வேலைவாய்ப்புகள் போன்றவற்றினை இளைஞர்கள் நன்கு அறிவர். மாநகர், பெருநகர், இளைஞர்கள் வேலைவாய்ப்புச் செய்திகளை மக்கள் தகவல் தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும் பயன்பெற்ற நண்பர்களோடு கலந்துரையாடு வதன் மூலமாகவும் வேலை வாய்ப்புகளை அறிந்து, விரைந்து செயல்படுகின்றனர். ஆனால் நாட்டின் எங்கோ மூலைப் பகுதிகளில், மலைப்பகுதிகளில், கடலோரங்களில் வாழ்ந்து வருகின்ற இளைஞர்கள் வேலைவாய்ப்புச் செய்தியினை நகர்ப் புறத்து இளைஞர்களைப்போல அவ்வளவு விரைவாகவும், உரிய காலத்திலும் அறிந்திருக்கவில்லை என்பது நாம் அறிந்த ஒன்றாகும். எனவேதான் அவர்கள் காலம் தாழ்ந்த முயற்சி காரணமாகப் பலனை அடைய முடியவில்லை.

ஏன், தமிழகத்தில் உள்ள பல்கலைக் கழகங்களின் தொலைக்கல்வி இயக்கங்கள் அளிக்கின்ற வேலைக்கான சான்றிதழ், பட்டயப் படிப்புகளைக் கூட கிராமப்புற இளைஞர்கள் இன்றும் முழுமையாகப் பயன்படுத்த வில்லையே என்ற ஆதங்கமும் எனக்குண்டு. தொலைக்காட்சி ஓரளவு கிராமப்புற இளைஞர்களுக்கு இந்த வகையில் இன்னும் உதவ வேண்டும். தமிழக அரசின் பொதுத்துறை நூலகங்கள் வேலைவாய்ப்புப் பற்றிய நூல்களையும் அறிக்கைகளையும் நூலகங்களிலே அறிவிக்கவேண்டும். ஊராட்சி மன்ற அலுவலகங்கள் இப்பணியினைச் செவ்வனே செய்யவேண்டும். இளம்பட்டதாரி கள் 'எனக்கு வேலைதாருங்கள்' என்று சட்ட மன்ற உறுப்பினரிடமோ, மக்களவை உறுப்பினரிடமோ, வேண்டி விண்ணப்பம் தருவதற்கு மாறாக, தனக்கு இன்ன துறையில் பயிற்சி இருக்கிறது என்றும், வங்கிக்கடன் கிடைக்குமேயானால் சுயதொழில் துவங்கிடத் தயாராக இருக்கிறேன் என்றும் கூறக்கூடிய மனநிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

அப்போதுதான் இத்தப்பிரச்சினை தீரும். மனித ஆற்றலை ஆற்றுப்படுத்தினால் திறன்கள் வளரும்; வேலைவாய்ப்புகள் பெருகும்; ஒளிமிக்க எதிர்காலம் பிறக்கும். ●

நோபெல்

பெ.நா. அப்புசுவாமி

'இன்றைக்கு என் பேச்சு எப்படி இருந்தது?' நேற்று நான் ராகம் பாடியது எப்படி?' அன்று நான் பந்து ஆடியது எப்படி?' என்றெல்லாம் பிரபலகி களும், பாடகர்களும், பந்தாடுபவர்களும் ஆவலோடு கேட்கிறார்கள். 'பேஷ்! வெகு நன்றாயிருந்தது' என்று சொல்லும் பதிலானது அவர்கள் காதில் தேவாமிர்தம்போல் படுகிறது. அப்படிப் புகழ்பவன் அறிவாளியாயிருக்க வேண்டும் என்பதில்லை; ராகத்தின் சுவை தெரிந்தவனாயிருக்க வேண்டும் என்பதில்லை. மக்களுடைய மனமானது பிறருடைய நன் மதிப்பை அவ்வளவு நாடுகிறது; சாமானியன் ஒருவனுடைய வெறும் பேச்சுக்கூட மனத்துக்கு அத்துணை ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளிக்கிறது.

சாமானியர்களுடைய வெறும் பேச்சே அத்தனைப் பாராட்டப்படுமானால், சிறந்த அறிவாளிகள் பலர் ஒன்றாகக்கூடி, 'உலகம் அனைத்திலும் ஓர் ஆண்டு முழுவதிலும் செய்த செயல்கள் யாவற்றிலும் இன்னார் செய்த செயல்தான் தலை சிறந்தது' என்று ஏகோபித்து முடிவு செய்து, நற்சாட்சிப் பத்திரம் ஒன்றையும், பொற்பதக்கம் ஒன்றையும், சுமார் இலட்சம் ரூபாய் பெறுமான பொற்குவை ஒன்றையும் பரிசாக அளித்தால் எவனுடைய மனந்தான் குளிர்வடையாது? எவன்தான் ஊக்கமும் உற்சாகமும் பெறமாட்டான்?

இவ்வாறு ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு உலகத்தார் அனைவராலும் 'எல்லாப் பரிசு களிலும் தலைசிறந்தது' என்று கொண்டாடப் படும் பரிசு நோபெல் பரிசு எனப்படுவது. இது ஸ்வீடன் நாட்டினரான ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபெல் என்பவரால் ஏற்படுத்தப்பட்டது.

இவருடைய பாட்டனார் இராணுவத்தில் ரணவைத்தியர். இவருடைய தகப்பனார் எம்மானுவெல் விஞ்ஞான ஆசிரியர். இவர் வெடி மருந்து களையும் கடலினுள்ளே வெடிக்கும் கடற்கண்ணிகளை யும் இயற்றியும் ஆராய்ந்தும் வந்தார். உயிரைக் கொள்ளை கொள்ளும் இந்தத் தொழிலில் ஈடுபட்ட எம்மானுவெல் உயிருக்கு உதவி செய்யும் காரியத்திலும் ஈடுபட்டு ரண வைத்திய ஆயுதங்களையும், நோயாளிக்கு உதவும் ரப்பர் தலையணை களையும் இயற்றி வந்தார்.

வெடி மருந்தைச் செய்வதே அபாயகர மானது. அதோடு அதையொட்டிய ஆராய்ச்சி யும் சேர்ந்துவிட்டால் கேட்பானேன்? எம்மானுவெலுடைய தொழிற்சாலையில் ஒரு முறை பெரிய வெடி விபத்து நேர்ந்தது. தொழிற்சாலை தூள் தூளாகிவிட்டது. அக்கம் பக்கத்திலுள்ள வீடுகளுக்கும் பலத்த சேதம், ஆனால் ஊராருடைய கோபத்துக்கு உள்ளான எம்மானுவெல் அயல்நாடு செல்ல வேண்டிய தாயிற்று.

எம்மானுவெல் ருஷியாவுக்குச் சென்று அங்கே கிட்டத்தட்ட இருபது ஆண்டுக்காலம் தம்முடைய தொழிலை நடத்தி வந்து, பிறகு தம் ஊருக்குத் திரும்பினார். ரஷியாவிலே தங்கிய அவர் மகன் லுட்விக் என்பவன்தான் பாக்கு என்னும் இடத்திலுள்ள மண்ணெண்ணெய்ச் சுரங்கங்களைக் கண்டுபிடித்தவன்.

எம்மானுவெல் தம் சொந்த நாட்டை அடைந்தபிறகும், முன்போல் தம்முடைய தொழிலையே நடத்திவந்தார். மறுபடியும் ஒரு பெரிய வெடி விபத்து உண்டாயிற்று. அதில் எம்மானுவெலுடைய மகன் ஒருவன் இறந்து போனான். அதிர்ச்சியாலும், பொருள் நஷ்டத்தாலும், புத்திர சோகத்தாலும் மனம் முடைந்த எம்மானுவெலும் அவருடைய மனைவியும் அப்படியே படுத்த படுக்கையாய்ப் போய்விட்டார்கள். அதன் பிறகு அவர் களுடைய மகனான ஆல்பிரட் பெர்ன்ஹார்ட் நோபெல் அந்தத் தொழிலை மேற்கொண்டு நடத்திவந்தார். இவர்தாம் நோபெல் பரிசை ஏற்படுத்தியவர்.

படமும்

பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.96 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அண்ணா சிலைக்கு மாலை அணிவிக்கிறார்.

தந்தை பெரியார் பிறந்தநாளான 17.9.96 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களை இந்திய ஜப்பான் கூட்டமைப்பின் அலுவலர்கள் சந்தித்து உரையாடினார்கள். (19.9.96)

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்களுடன் புதுடில்லியில் மாண்புமிகு மத்திய வெளி உறவுத்துறை அமைச்சர் திரு ஐ.கே. குஜ்ரால் அவர்களை சந்தித்து இலங்கை அகதிகள் குறித்து பேசினார். (21.9.96)

புதுடெல்லியில் காவிரி நீர் பங்கீடு குறித்து பேசுவதற்காக கர்நாடக பவன் சென்ற மாண்புமிகு தமிழக முதல்வரை மாண்புமிகு கர்நாடக முதல்வர் வரவேற்று அழைத்துச் சென்றார். (21.9.96)

செய்தியும்

சிதம்பரனார் மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் நடந்த கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் 125 வது பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு ஆலடி அருணா, திருமதி ஜெனிபர் சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

எங்கள் ஊர் பிரச்சினை

ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம் நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம் ஆதங்குடி ஊராட்சியில் சிவன் கோவில் ஒன்று உள்ளது. முந்தைய ஆட்சியில் ஒரு கால பூசைக்குப் பணம் ஒதுக்கிக் கடிதம் வந்தது. பின்னர் காசோலை வந்து கொண்டே இருந்தது. ஆனால், அதை மாற்றிச் செலவு செய்ய உத்தரவு வரவில்லை. இதன் காரணமாக பூசை செய்யும் (எனக்கு) அர்ச்சகருக்குப் பணம் கிடைக்கவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஒரு கால பூசைத் திட்டம் என்ற பெயர் பலகையும் ஒதுக்கீடு செய்த நிலை விபரம் பலகையில் உள்ளது. ஆகையால், தாங்கள் உரிய நடவடிக்கை எடுக்க வணக்கமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,
எஸ். கண்ணன், ஆதங்குடி அஞ்சல்,
பொதக்குடி – 614 103.

தீர்வு

ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், ஆதங்குடி என்ற கிராமத்தில் அருள்மிகு விருப்பாசீஸ்வரர் (சிவன்) கோயில் உள்ளது. வருமானம் ஏதுமற்ற நிலையில் உள்ள இக்கோயிலுக்கு இத்துறையில் மூலம் அறங்காவலராக நியமனம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டும், கிராமத்திலுள்ள எவருமே அறங்காவலராக நியமனம் பெற முன்வராத நிலையில், மன்னார்குடி அருள்மிகு. மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயில் செயல் அலுவலரை இக்கோயிலுக்குத் தக்கார் ஆக நியமனம் செய்யப் பட்டுள்ளது. இருப்பினும் மேற்படி கிராம முக்கியஸ்தர்கள் தங்களுக்குள் ஒருவரான திரு.ஜி. சேகர் என்பவரை இக்கோயிலின் நிர்வாகத்தை கவனித்து வர வாய்மொழியாக ஏற்பாடு செய்து, அவர் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் கோயில் நிர்வாகத்தைத் கவனித்து வருகிறார்.

இந்நிலையில் மிகவும் வறிய நிலையிலுள்ள இத்திருக் கோயிலுக்கு இத்துறையில் மூலம் ஒரு கால பூசை திட்டத்தில் சேர்ந்து அதற்கு ரூ. 25,000/- வைப்பு நிதி முதலீடு ஏற்படுத்தி மேற்படி முதலீட்டிலிருந்து மாதாந்திர வட்டி தொகைக்கான வட்டி வாரண்டுகள் மேற்படி நடைமுறை நிர்வாகியான திரு ஜி. சேகர் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டு வந்துள்ளது. இவர் சட்டப்படி நியமனம் பெற்ற அறங்காவலராக இல்லாததால் மேற்படி மாதாந்திர வட்டி வாரண்டுகளை வங்கியில் செலுத்தி பணம் பெற முடியாது இருந்ததால் மாதாமாதம் ரொக்கம் பெற்று பூசைக்குச் செலவிட முடியாத நிலையிலுள்ளது. இதுவரை வழங்கப்பட்ட வட்டித் தொகைக்கான வாரண்டுகள் காசாக்கப்படாமல் நிலுவையில் உள்ளனவே தவிர, எந்த வகையிலும் இத்தொகை முறையற்ற வகையில் பயன்படுத்தப்படவில்லை. இந்தச் சிக்கலான நிலை ஏற்பட்டதால், நடைமுறை நிர்வாகியும் கிராமத்தினரும் தங்களாகவே நிதி சேர்த்து, இத்திருக்கோயிலில் தினசரி ஒருகால பூசையை நடத்தி வருவதாக உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். புகார் செய்த திரு கண்ணன் என்பவரும் தனக்குப் பணம் கிடைக்கவில்லை என்று கூறியுள்ளாரே தவிர, பூசை நடத்தப்படவில்லையென்றோ, அரசு வழங்கிய தொகை தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவோ தெரிவிக்கவில்லை. மேலும், இவர் அருகாமையிலுள்ள சரக ஆய்வரிடமோ, தஞ்சாவூர் உதவி ஆணையரிடமோ இப்பிரச்சினை குறித்து விவரம் ஏதும் தெரிவிக்கவில்லை.

எனினும், ஒருகால பூசை திட்டத்தின் நோக்கத்தினை நிறைவேற்றிடும் வகையில் உடனடியாக தக்கார் தனது பதவி நிலையில் வங்கி கணக்கு துவக்கி, வட்டி வாரண்டுகளை காசாக்கி மாதாமாதம் பூசை செலவுகளுக்கு கொடுத்துவருமாறும், அதே சமயத்தில் கிராமத்தினர் ஒத்துழைப்புடன் திருக்கோயிலின் அபிவிருத்தி செய்திட ஆக்கப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கடுமையாக அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்துக்கொள்கிறேன்.

வ. ராமதாஸ்,
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை - 34.

எங்கள் கிராமம் வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் அரக்கோணம் வட்டம் நெமிலி ஒன்றியத்தைச் சார்ந்த சம்பத்துராயன்பேட்டை எனும் கிராமம். பெரும்பாலும் விவசாயம், பவர்லூம் பட்டுத்தறி ஆகிய தொழில்கள் நடைபெறும் இக்கிராமத்தில் மேனிலைப்பள்ளி, டெலிபோன் இணைப்பகம் அஞ்சல் துறை ஆகியவைகள் இயங்குகின்றன. மக்கள் தொகையோ சுமார் 10,000. நெடுஞ்சாலையிலிருந்து ஊர் வரை முதன் முதலில் மின் கம்பம் நட்டபோது குழல் விளக்குகள் பொருத்தினார்கள். பிறது அந்த விளக்குகள் கடந்த 6 ஆண்டுகளாக கிடையாது. இரவு நேரத்தில் ரோடிலிருந்து ஊருக்கு வர அச்சமாக உள்ளது. இதையும் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஏ.ஆர். சொக்கநாதன்,
சம்பத்துராயன்பேட்டை - 631 002.
அரக்கோணம் தாலுகா.

தீர்வு

பார்வையில் ''எங்தள் ஊர் பிரச்சினை'' தலைப்பில் சம்பத்துராயன்பேட்டை திரு.ஏ.ஆர். சொக்கநாதன் கடிதம் கிடைக்கப்பெற்றோம். அதற்கான விளக்கம் கீழே அளித்துள்ளேன்.

ஊராட்சியில் 45 விளக்குகள் எரிகின்றன. இதில் தற்போது சம்பத்ராயன் பேட்டையில் 18 விளக்குகள் எரிகின்றன. இதில் இவர் குறிப்பிடும் ரோட்டில் 4 விளக்குகள் எரிகின்றன. இவர் குறிப்பிடும் சாலை 3. கி.மீ. இல்லை. 1.2 கி.மீ. தான் உள்ளது. 6 விளக்குகள் கோருகிறார். ஏற்கனவே உள்ள விளக்கு களுக்கு மின் கட்டணம், மற்றம் ஊராட்சி பணியாளருக்கே ஊதியம், இதர செலவினங்கள் பணம் இன்றி 3 மாதமாக வழங்கப்படவில்லை. நிதியற்ற ஊராட்சிக்கு அரசு வழங்க இருக்கும் நிதி ஆதார அடிப்படையில் மின் விளக்குகள் எரிவிக்க, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கே. அரிகிருஷ்ணன்,
ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், நெமிலி,
வடஆற்காடு அம்பேத்கர் மாவட்டம்.

வாசகர் இதயம்

அற்புதம்...

ஆசிரியர் மடலோ அற்புதம், தேசத்தைக் காக்க வழங்கிய பொக்கிசம்; கல்லறைக்கு வழிசெய் 'எய்ட்சின்' கட்டுரை, நல்வழி கொடுக்கும் நாட்டினுக்கு மருந்து, வாலியின் 'இரக்கம்' கவிதை வளமையின் சுரங்கம் நாளெல்லாம் சுவைக்க நல்கிய தமிழரசே! நன்று! நன்று!

– கெங்கை பாலதா,
சின்னக் கலையம்புத்தூர்,
மன்னர் திருமலை மாவட்டம்.

சிரிப்பிதழா?...

சிறப்பிதழா? சிரிப்பிதழா? ஆவணித்திங்கள் மலர்ந்த தமிழரசு இதழ், கலைவாணர் சிறப்பிதழாக, பேரவைச் சிரிப்பலைகளுடன், சிரிப்பிதழாக மலர்ந்து மணம் பரப்பியது. முன்பெல்லாம் தமிழரசில் வெண்பாப்போட்டி வருமே? அதுபோல், இனிமேலும் தமிழரசில் தரவேண்டும்.

– கவிஞர் பூபாளம் ப. முருகேச பாண்டியன்,
கரப்பாடி, பெரியார் மாவட்டம்.

என் ஆசை...

மற்ற இதழ்களைப்போல் கேள்வி-பதில் பகுதி தமிழரசிலும் வரவேண்டும். என் ஆசை நிறைவேறுமா?

– ஜி.ஆர். விஜய்,
இரா. புதுப்பட்டி,
இராஜாஜி மாவட்டம்.

படிக்கத் தூண்டுகிறது...

தமிழில் வெளிவரும் பருவ இதழ்களில் ஒன்றிரண்டு மட்டுமே முழுவதும் (வரிவிடாமல்) படிக்கத்தூண்டுகிறது. அவ்வகையில் தமிழரசும் இடம் பெற்றுள்ளது. வாழ்த்துக்கள்.

– ஜி. பழனிக்குமார்,
சித்தையன் கோட்டை, திண்டுக்கல்.

ஆச்சரியம்...

'தமிழரசு' - அரசாங்க இதழ்தானா? ஒரே ஆச்சரியமாக இருந்தது. சென்ற மாதத்தைக் காட்டிலும் இம்மாதம் மிகவும் நன்றாக இருக்கிறது. இதழ் எப்போதுவரும் என ஆவலைத் தூண்டுகிறது.

– மா.வெ.சு. மணியன்,
மதுரை - 1.

வழி காட்டி...

வேலை வாய்ப்புகள் கட்டுரை - இன்றைய இளைஞர்களுக்குச்சரியான வழிகாட்டி, அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வேலை வாய்ப்பு அறிவிப்புகளையும் இதழில் வெளியிடலாமே?

– தி.வே. மூர்த்தி,
அலங்கியம், பெரியார் மாவட்டம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் :எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

ஆசிரியர் மடல்

தமிழ் நாட்டில், அக்டோபர் 9,12 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டமாக உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடைபெறவிருக்கிறது.

23 ஆண்டுகளுக்குப் பிறகு, இப்போதுதான் தமிழக அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை அறிவித்திருக்கிறது.

356 ஆண்டு காலப் பழமை மிக்கதான சென்னை மாநகராட்சிக்கு 1968ல் தான் கடைசியாகத் தேர்தல் நடந்தது. அப்போது 120 வட்டங்கள் இருந்த சென்னை மாநகராட்சியில், 1990 முதல் 155 வட்டங்கள் விரிவாக்கப்பட்டுள்ளன.

1973க்குப் பிறகு, சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டு, அதிலிருந்து தனி அதிகாரி நிர்வாகத்திலேயே இருந்து வருகிறது. மதுரை மாநகராட்சி ஒரே ஒரு தேர்தலைச் சந்தித்தது. கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சேலம் ஆகிய மற்ற மாநகராட்சிகள் உருவாக்கப்பட்டனவே தவிர, தேர்தலே இதுவரை அங்கெல்லாம் நடைபெறாதிருந்தது.

தமிழ்நாட்டில் உள்ள 6 மாநகராட்சிகளின் மேயர் பதவிகளுக்கு மட்டுமே 86 பேர் விண்ணப்பித்திருக்கிறார்கள். அவைகளில் உள்ள 474 உறுப்பினர் பதவிகளுக்கு 4 ஆயிரத்து 310 பேர் மனுச் செய்துள்ளனர். சுமார் 48 கோடி ரூபாய் இத்தேர்தலுக்காகச் செலவாகும் என்று தேர்தல் ஆணையர் தெரிவித்திருக்கிறார்.

நாட்டு மக்கள் நலம்பெற வேண்டி அரசு செயல்படுத்தும் பல திட்டங்களின் பலன்கள், எல்லா மக்களுக்கும் எவ்விதக் குறையுமின்றிப் போய்ச்சேர உதவுவதில் இந்தத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் உறுப்பினர் களுக்குப் பெரும் பங்கு உண்டு.

எனவே, வாக்காளப் பெருமக்கள் தம்முடைய பிரதிநிதிகளைத் தேர்ந் தெடுப்பதில் மிகவும் விழிப்போடிருப்பது முக்கியம்.




16.10.1996 ரூ.3

இந்த இதழில் ...

☆ கலைஞர் கவிதைகளில் உவமைகள் 4

☆ புலவர்கள் உணர்க
-முனைவர் தமிழ்க்குடிமகன் 9

☆ சென்னையில் கிருஷ்ணா நீர் 10

☆ எங்கள் ஊர் பிரச்சினை 17

☆ பலி
-பேரறிஞர் அண்ணாவின் கதை 24

☆ தெரிந்து கொள்ளுங்கள் 33

☆ இலக்கியத்தில் சொல்லாடல்
-முனைவர் ந. சொக்கலிங்கம் 37

☆ பார்வை ஒன்றே போதுமே 39

☆ மழைக்கால நோய்கள் 41

☆ செய்திச் சரம் 45

☆ ஆசிரியர் மடல் 48

தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2027
புரட்டாசி திங்கள் : 31
மலர்: 27 இதழ்: 8
16.10.1996
விலை: ரூ. 3

தென் ஆப்பிரிக்காவில் உள்ள தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம் அகற்றப்படவில்லை!

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ஐ.கே. குஜ்ரால் கடிதம்

சட்டமன்றப் பேரவையில் எதிர்க்கட்சித் துணைத்தலைவர் திரு வி. லட்சுமணன் "தென் ஆப்பிரிக்கச் சத்யாகிரகப் போராட்டத்தில் அண்ணல் காந்தியடிகளுக்குஉறுதுணையாக இருந்த தமிழ் வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மைக்கு ஜோகன்ஸ் பார்க்கில் இருந்த நினைவுச் சின்னத்தை ஆப்பிரிக்க அரசு நீக்கிவிட்டது" என்று குறிப்பிட்டார்.

நெல்சன் மாண்டேலா

அதை மீண்டும் நிறுவ, ஒடுக்கப்பட்டவர்களின் தலைவராக அரசுப் பொறுப்பேற்றிருக்கும் நெல்சன் மண்டேலா அவர்களை மைய அரசு மூலமாகக் கேட்டுக் கொள்ளத் தமிழக அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக விசாரித்து அறிய, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு மத்திய வெளியுறவு அமைச்சர் திரு ஐ.கே. குஜ்ராலுக்குக் கடிதம் எழுதி இருந்தார். மத்திய அரசு இது குறித்துத் தென் ஆப்பிரிக்க பிரிடோரியாவில் உள்ள இந்தியத் தூதர் கோபாலகிருஷ்ண காந்தியை விசாரிக்குமாறு கேட்டுக் கொண்டது.

விடுதலைப் போராட்ட வீராங்கனை தில்லையாடி வள்ளியம்மை நினைவுச் சின்னம் அகற்றப்படவில்லை என்றும், இந்தியத் தூதர் கோபால கிருஷ்ண காந்தியும், விடுதலை வீராங்கனை வள்ளியம்மையின் மருமகனான கோபால் முதலியார் அவர்களும், வள்ளியம்மையின் நினைவுச் சின்னத்தைப் பார்வையிட்டதாகவும், அதற்குரிய கல்வெட்டுக் குறிப்புடன் நினைவுச் சின்னம் பாதுகாப்பாக உள்ளதாகவும் கூறி, இது தொடர்பான நிழற் படங்களை அனுப்பிவைத்துள்ளனர்.

முதல்வருக்குக் கடிதம்

மாண்புமிகு மத்திய அரசு வெளியுறவு அமைச்சர் திரு ஐ.கே. குஜ்ரால் இது குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கடிதம் எழுதி மேற்கண்ட விவரங்களைத் தெளிவுபடத் தெரிவித்துள்ளார்.

இந்தியத் தூதர் திரு கோபால கிருஷ்ண காந்தி அவர்கள், ஆகஸ்ட் 6 அன்று தான் பதவியேற்றபோது தென்னாப்பிரிக்க அதிபர் திரு நெல்சன் மண்டேலா அவர்களிடம் திருமதி வள்ளியம்மை அவர்கள் சுதந்திரப் போராட்டத்தில் பங்காற்றியது குறித்துக் குறிப்பிட்டுள்ளார் என்பதைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் போராட்ட வீராங்கனை வள்ளியம்மையின் நினைவுச் சின்னம் அகற்றப் படாமல் பாதுகாப்பாக உள்ள செய்தியறிந்த தமிழக மக்கள் இறும்பூதெய்தியுள்ளனர்.

வள்ளியம்மை

வள்ளியம்மை, தமிழ் நாட்டில் உள்ள நாகை காயிதேமில்லத் மாவட்டம் - மயிலாடுதுறைக்கு அருகே உள்ள தில்லையாடி கிராமத்தைச் சேர்ந்தவராவார். இவருடைய தந்தையார் பெயர் முனுசாமி முதலியார்; தாயார் பெயர் மங்களத்தம்மாள்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள்- பெண்மணிகள் உட்படக் கொடுமைப்படுத்தப் படுவதைக் கண்டித்துக் காந்தியார் போராட்டம் நடத்தினார். அதில் கலந்துகொண்டு கைதானபோது வள்ளியம்மைக்கு வயது 16. சிறைக் கொடுமைகளால் துன்புற்ற இவர், பெரிதும் நலிவுற்ற நிலையில் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டார். மறுபடியும் நலம் பெறாமலே 1914-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாள் இறந்துபோனார்.

பிறகு 1934-இல் இந்தியாவுக்கு வந்திருந்த காந்தியடிகள், அக்டோபர் 22-இல் தில்லையாடிக்குச் சென்று வள்ளியம்மையின் இல்லத்தைக் கண்டும், உற்றார் உறவினரோடு பேசியும் மனமுருகினார்.

வள்ளியம்மை நினைவாகத் தமிழக அரசு சார்பில் தில்லையாடியில் அந்நாள் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் நினைவுத் தூண் நாட்ட வகை செய்தார். அந்தக் கிராமம், மாண்புமிகு தமிழக முதல்வராகக் கலைஞர் அவர்கள் பொறுப் பேற்றபின் 'மாதிரிக் கிராமமா' கவே ஆக்கப்பட்டது.

-அ. மதிமாறன்

கவிதைப் போட்டி



கற்பனையும் சிந்தனையும் கைகோத்து
நடனமிட அற்புதக் கவிபடைக்கும்
அனைவருக்கும் நல்வாய்ப்பு; இதோ,
தமிழரசு' கவிதைப் போட்டிக்கு
அழைப்பு;

'இன்றுபோல் என்றும் இரும்'

- இதுதான் கவிதைத் தலைப்பு;
உரிய பரிசுகள் காத்திருக்கின்றன!
உங்கள் கவிதைகள் வந்து
சேர வேண்டிய

கடைசி நாள் 16.11.1996

உங்களுடைய படைப்பு -
மரபுக்கவிதையாகவோ,
புதுக்கவிதையாகவோ இருக்கலாம்;
வரி வரையறை: 16
வெல்லும் கவிதைகள் வெளியாகும்
இதழ் 1.1.1997

தேர்வு பெறாதவற்றைத் திரும்ப
அனுப்ப இயலாது; நகலெடுத்துக்
கொள்ளவும்.

கவிதை அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர் : 'தமிழரசு'
தமிழரசு அலுவலகம்,
அரசினர் தோட்டம் - அண்ணா சாலை,
சென்னை - 600 002.

☆ பிறருக்குத் தொல்லை
தராத வாழ்வே
ஒழுக்க வாழ்வு.

-தந்தை பெரியார்

தாய்: ஏண்டா அந்த அண்டாவைப் போட்டு இப்பிடி டமடமன்னு அடிக்கிறே?

மகன்: தங்கச்சி பாப்பாவுக்கு வேடிக்கை காட்றேன்மா!

தாய்: பாப்பா எங்கேடா?

மகன்: இந்த அண்டாக்குள்ளே அழாமெ இருக்காம்மா!

கலைஞரின் உவமைகள்

டாக்டர் சு. சுனந்தாதேவி

'பூங்காவினைப்போல் அழகும், கவர்ச்சியும் தருவது மட்டு மின்றிக் காய்கறித் தோட்டங் களைப் போல் நல்ல பயனும் தருவதே இலக்கியம்' என்பார் வில்லியம் டெம்புள்.

நம்மைச் சுற்றியுள்ள பொருட் களை நாம் காண்பதற்கும், கவிஞன் காண்பதற்கும், வேறு பாடு உள்ளது. கவிஞனுடைய கண்கள் எதையும் உற்று நோக்கும் ஆற்றல் பெற்றவை. ஊடுருவிப் பார்க்கும் இயல்பு பெற்றவை. அங்ஙனம் கண்ட தைக் கலைச் சிறப்போடு வெளி யிடும் கவிஞனே சிறந்த கவிஞனா கின்றான்.

கவிஞனுடைய கவிதைகள் சிறப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றுள் முக்கிய மானவை உவமை, உருவகம், நடை, கற்பனை என்பன. வேண்டு மென்றே அணிகளைப் பெய்து எழுதினால் கவிதை செயற்கை யாக இருக்கும். பொருத்தமான அணிகள் இருந்தால் கவிதை சிறக்கும். காலத்தை வென்று வாழும்.

உவமை

உவமைகளைப் பயன்படுத் துதல் மூலமே கவிதை முழுமை அடைகிறது எனலாம். உவமை யைப் பயன்படுத்தும் முறையி லிருந்தே ஒரு கவிஞனின் சிறப்பை உணர முடியும். அழகுள்ள ஒரு பொருளை மற்றொன்றின் அழகோடு ஒப்பிட்டுக் காணும் இந்த உவமையே கலைகள் பல வற்றிற்கு அடிப்படை என்பர்' டாக்டர் மு.வ.

உவமை கூறுவதில் இருவகை உண்டு. புரியாத ஒன்றைப் புரிய வைக்க வரும் உவமை. புரிந்த ஒன்றையே மேலும் விளக்கப் பயன்படுத்தும் உவமை. கலைஞர் தம் கருத்துக்கு அரண் செய்யவே, அழுத்தம் கொடுக்கவே உவமை களைக் கையாண்டுள்ளார். புரியாத ஒன்றைப் புரிய வைக்கப் பயன்படுத்தவில்லை. அவருடைய உவமைகளில் பொருந்தாத உவமைகள் இல்லை; வலிந்து புரிந்து கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. சில நேரங்களில் தம் கருத்துக்கு அழுத்தம் தர அடுக்கு உவமை களையும் பயன்படுத்துகின்றார்.

'காலைக் கதிரவன்போல்
கைசிவக்கக்
கொடை வழங்கும்
காவலர்கள் வாழ்ந்திருந்த
தமிழ்நாடு'
-என்பது கலைஞரின் கவிதை.

கதிரவன் உலகுக்கே ஒளி தருபவன். கதிரவன் கலைஞர் கட்சியின் சின்னம். அதைக் கட்சிச் சின்னமாக்கப் பெரு மளவில் அவர் முயன்றிருக் கிறார். அதனால் கதிரவன் உல கத்தின் ஒளிவிளக்காக இருப் பினும் கலைஞரைப் பொறுத்த வரை கதிரவன் கழகத்தின் விளக்கு.

கலைஞர் தமிழ்நாட்டை மறந்ததில்லை. நாட்டையாண்ட மன்னர்களை மறந்ததில்லை. தமிழர்களை மறந்ததில்லை. அதனால் அவர் மூவேந்தரைப் பற்றிப் பாடும்போது, 'காலைக் கதிரவன் போல்' என்ற அடையைக் கொடுக்கின்றார். காலைக் கதிரவன் சிவந் திருப்பதுபோல் காவலர்களின் கரங்களும் கொடுத்துக் கொடுத்துச் சிவந்த கரங்கள் என்று பெருமையோடு பாடு கிறார்.

'சாதல் இன்னே வரட்டுமென்று
சென்றுவிட்ட தலைமகனும்
சந்தனத்துக் கட்டைபோல
மணக்கட்டும் இலக்கியத்தில்'

இங்கு 'சந்தனத்துக் கட்டை என்ற உவமை, சிகரமாகத் திகழ்கிறது. சந்தனத்துக்கட்டை எந்த நிலையிலும் தன் மணத்தை இழப்பதேயில்லை. குறுகின விடத்தும் மணம் குறையாத.

எரித்தாலும் இனிய மனமே எழும். என, சந்தனக் கட்டையின் மணம் போலச் சமர்க்களத்தில் சாவைத் தழுவிக் கொண்ட வீரனின் புகழும் என்றும் நிலைக்கும் என்று நிலைநாட்டு கின்றார்.

'இந்நாட்டுப் படையிலோர்
வீரர் குறைந்திட்டால்
நல்ல உடையிலோர் கிழிசல்
வந்தது போலன்றே'
-என்பார் கலைஞர்

தன் தந்தையின் மரணத்தைக் குறித்துப் புறநானூற்றுத் தாய் புலம்புவதைக் குறிக்கின்றார். அவள் தந்தையின் மரணத்திற்கு வருந்தவில்லை. அவன் வீர மரணமே எய்தியிருக்கிறான். ஆனால் ஒரு வீரன் குறைந்து விட்டானே என்றுதான் குமுறுகிறாள், வீரரின் மரணம் 'நல்ல உடையிலோர் கிழிசல் வந்ததுபோல' என்று நல்ல உவமையால் கூறுகிறார்.

பழைய உடையில் கிழிசல் ஏற்பட்டால் அதைப்பற்றி நாம் கவலைப்படுவதில்லை. ஆனால் புது உடையில் ஒரு பொத்தல் ஏற் பட்டாலும் மனம் பொறுப்ப தில்லை மீண்டும் மீண்டும் புதிய உடை பாழாகி விட்டதே என்ற உணர்ச்சிதான் தோன்றும். அதைப்போல அந்தத் தாய் வருந்துகிறாள். கோழைகளின் மரணத்தால் எந்த இழப்பும் ஏற்படாது. ஆனால் வீரனின் மரணம் நாட்டிற்குப் பெரும் பாதிப்பாகும் என்பதை இங்கு விளக்குகின்றார்.

சேலத்தில் நடைபெற்ற காதலா? வீரமா? என்ற கவியரங்கத்தில் கவிஞர்களைப் பற்றி மட்டும் பாடாமல் அவை யோரை நோக்கியும் அன்புக் கட்டளை இடுகின்றார்.

'பந்தயத்துக் குதிரைகளை
முடுக்குதல் போல்
பந்தலிலே இருப்போரே
முழக்கிடுங்கள்'
-என்பதே அவர் சொல்.

ஒரு நல்ல கவிஞனுக்குத் தேவை நல்ல தூண்டுதல்; தூண்டத் தூண்ட விளக்கு ஒளி பெறுதல் போல அவனும் பெருமை யுறுவான். விமரிசனத்தால்தான் எதுவும் நன்கு வளர முடியும். இங்கு அவையோரைப் பார்த்துக் கவிஞர்களை உற்சாகப்படுத் துங்கள் ஆர்வமூட்டுங்கள் என்று கேட்கிறார்.

குதிரை இயல்பாகவே நன்கு குதித்து ஓடக்கூடியது. பந்த யத்துக் குதிரை பாய்ந்து பாய்ந்து ஓடக் கூடியது. அதை இன்னும் நன்கு முடுக்கிவிட்டால் முன்னே சென்று வெற்றிபெறும். அதைப் போல, இங்கு வந்திருப்பவர்கள் நல்ல கவிஞர்கள். அவர்களை அவையோர் ஆர்ப்பரித்து ஊக்கு வித்தால், அவர்கள் நல்ல கவிதையைச் சுவைக்க முடியும் என்று உணர்ச்சியூட்டும் திறம் அறிந்து மகிழ்தற்குரியது.

பாரதிதாசனைப் பற்றிக் குறிக்கும்போது,

கலை கலைக்காகவே என்று சொல்ல இயலாது; விளக்கு எப்படி விளக்குக்காக இல்லையோ, அதைப் போலக் கலை என்பது மக்களுக்காகத்தான்!

'நீர் வீழ்ச்சி ஓசை - நெற்
கதிர்கட்டு மீசை'
-என்கிறார்.

என்று உவமிக்கிறார். பாரதி தாசன் பாடலின் ஓசை நீர்வீழ்ச்சி போன்றது என்று கூறுவது மிகச் சிறந்த உவமை. 'நெற் கதிர்க்கட்டு மீசை' என்ற இடத்தில் கதிர்கட்டை மீசைக்கு உவமித்த முதல் கவிஞர் கலைஞர்தான்.

'நேரு கண்ட ஜனநாயகம்' என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் நேருவின் வன்மை, மென்மைகளைக் குறிக்கிறார், கலைஞர் அவர்கள்.

'எண்ணெயிட்ட கடுகாய்
வெடிக்கும்
கோபம் எனினும்
எண்ணெ யிட்டார் விடுதலை
வேள்விக் கென்போம்'
-கலைஞரின் கருத்துப்படி

எண்ணெயில் இடப்பட்ட கடுகு போன்ற கோபம் நேரு விற்கு வரும் ஆனால் விடுதலை வேள்வியில் அவர் செய்த பணி பெரியது என்கிறார். குறை யற்றவன் மனிதனில்லை ஒருவனிடத்துள்ள குறைகளைக் கூறுவதைவிட அவனுடைய குணங்களை எடுத்துக் காட்டுவதுதான் உயரிய பண்பு என்பதை இந்த உவமை மூலம் அவர் விளக்குகின்றார்.

அடுக்கு உவமை

'தனியே ஒரு பொருளைக் கண்டு அதன் அழகில் ஈடுபட்டு அதற்கு ஓர் ஒப்புமை கூறுதல் எளிது. பல பொருள்களை ஓரிடத்தே கண்டு அவற்றின் பலவகை அழகிற்கும் விளக்கம் தரும் பல்வேறு உவமைகளை உணர்ந்து கூறுதல் அரிய கலை ஆகும். இந்தக் கலை கலைஞரி டத்தில் சிறப்பாகக் காணப் படுகிறது.

214 290.

அடுக்கு உவமைகளை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒரு பொருளுக்கே வரும் பல உவமைகள் என்றும், பல பொருள்களுக்குத் தொடர்ந்து கூறப்படும் பல உவமைகள் என்றும் பிரிக்கலாம்.

ஒரு பொருளுக்கே பல உவமைகள்

கும்பகர்ணன் இறந்தபிறகு இராவணன் போர்புரியும் நிலையினைப் பின்வருமாறு விளக்குகிறார், கலைஞர்

'வேல்பட்ட புலிபோல-
விடுபட்ட கணைபோல-
அணையிட்ட வெள்ளம்
போல- ஆயிரம்
வாள்பட்ட மார்புடையான்,
போரிட்டான்'

கலைஞர் இராவணனைத் தமிழனாக, நல்லவனாக, வீரனாகக் காட்டுகின்றார். இராவணன் கொடியவன் என்ற எண்ணம் சமுதாயத்தில் வேரோடியிருக்கிறது. அந்த எண்ணம் தவறானது என்பதைக் காட்ட வந்த கலைஞர் அந்த மனப்பான்மை அகல வேண்டும் என்புதற்காகத் தம் கருத்துக்கு வலிவூட்ட அடுக்கான உவமைகளைப் பயன்படுத்துகின்றார். அவன் வீரம் இதனால் நன்கு படமாக்கப்படுகின்றது.

முதல் உவமை 'வேல்பட்ட புலிபோல' என்பது புலி தன் இயல்பிலேயே சீற்றம் மிகுந்தது. வேல் தாக்கிவிட்டால் அதன் சீற்றத்தை அடக்குதல் மிக அரிதான செயலாகும்.

அடுத்த உவமை 'விடுபட்ட கணை போல' என்பது. வீரனின் ஆற்றலுக்கு ஏற்பக் கணை மிக வேகமாகச் செல்லும்; அதன் வேகத்தையும் அடக்க முடியாது.

மூன்றாவதாக 'அணையிட்ட வெள்ளம் போல' வெள்ளமும் கட்டுக் கடங்காதது, கரையுடைந்த வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல் மிகக் கடினமானச் செயல். எனவே, சினத்தோடு செருக்களம் செல்லும் இராவணனின் நிலையை மூன்று உவமைகளால் பெற வைத்தல் சிறப்பாக அமைந்துள்ளது.

தந்தை பெரியாரின் மறைவினால் தாங்கொணாத் துயரடைந்தவர் கலைஞர், தீண்டாமையைக் குழி தோண்டிப் புதைத்து, ஒரு குலத்துக்கொரு நீதி என்ற நிலையை நீக்கித் தமிழர்க்குப் பாதுகாப்பாய் இருந்த பகுத்தறிவுத் தந்தையின் மரணம் அவர் நெஞ்சை நெருஞ்சி முள்ளாய்க் குத்தியது. அந்நிலையில் பெரியார் பற்றிய கவியரங்கில் அவர் மரணத்தைப் பற்றிப் பாடுகிறார்.

'இன்றைக்கும் நினைக்கிறேன்
பெரியார்
இளவயதில் மறையவில்லை
நிறைவயது வாழ்ந்துவிட்டே
ஓய்வு கொண்டார் எனினும்
தாஜ்மகால் திடுமெனத்
தரைக்குள்ளே
போய் விட்டால்
அதைக் கட்டி, ஆண்டுபல
ஆயிற்றே
என்று ஆறுதல்தான்
பெறுவோமா?
தஞ்சைக் கோபுரம்
சாய்ந்துவிட்டால் அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்குதல்தான் எளிதாமோ?"

-எனக் கலங்குகின்றார்.

பகுத்தறிவு இயக்கம் தோற்றுவித்த முதல்வர் பெரியார். அப்பெரியாரைப் போன்று பெருவாழ்வு வாழ்ந்தவர், பெருமை பெற்றவர் மறைந்தது மிகப் பேரிழப்பாகும். அந்த ஆற்றாமையைக் கவிதையில் வெளிப்படுத்துகின்றார். தாஜ்மகால் உலகப் புகழ் படைத்தது தஞ்சைக் கோபுரம் தமிழ் நாட்டுக்கே பெருமை தருவது எனவே, உலக அளவில் பெயர் பெற்றவர் தமிழ்நாட்டில் தலைசிறந்த தலைவராய்த் திகழ்ந்தவர் புதுச் சரித்திரம் படைத்து மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டியவர் என்று பாடுகிறார் கலைஞர். இந்த உவமைகள் சிறந்த அவல உணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றன.

பெருஞ்சித்தனாரின் வறுமையை,

'பூப்போல வாடி
வதங்கிடுவாள் துணைவி,
புழுப்போலச் சுருண்டு
படுத்திடுவாள் அன்னை
பூனைபோலப் பானை
உருட்டிடுவான் பசியாலே
பிள்ளை'

-என்று பாடுகிறார். இங்கு பூ, புழு, பூனை என்ற உவமைகள் மிகப் பொருத்தமாக ஒன்றையொன்று விஞ்சி நிற்கின்றன.

-இவை போன்ற

கலைஞரின் உவமைகள் கருத்துள்ளன. கற்பனை சிறந்தவை. வெறுங் கற்பனை என்றோ வேண்டாதவை என்றோ எதையுமே விலக்க முடியாது.

கலைஞர் தம் மேடைப் பேச்சுக்களிலும் மிகுதியான உவமைகளைக் கையாள்வது வழக்கம். அவையும் மிகச் சிறப்பாக அமையும். 'கலைஞர் அவர்கள் தம்முடைய எழுத்திலும் பேச்சிலும் தனியொரு சகாப்தத்தை உருவாக்குகிறாரென்றால், அதற்கு அடிப்படைக் காரணம், அவர் கையாண்டு வரும் அருமையான அற்புதமான உவமைகள்தான்.

அறிவியல் துளிகள்

பூமியானது ஒரு நொடிக்குச் சூரியனை 29.79 கி.மீ, அதாவது மணிக்கு 1,07,244 கிலோ மீட்டர் வேகத்தில் சுற்றுகிறது.



சந்திரனுக்குச் சுய ஒளி இல்லை. சூரிய ஒளியானது அதன் மேல் பட்டுப் பிரதிபலிப்பதால் மட்டுமே அதைக் காண முடியும். அமாவாசையன்று சந்திரன், சூரியனுக்கும் பூமிக்கும் இடையில், ஏறத்தாழ ஒரே வரிசையில் அமையும்பொழுது, சந்திரனின் ஒளியூட்ட்ப்பட்ட பாதியை நாம் காணமுடிவதில்லை; ஏனென்றால் அப்பகுதியானது சூரியனை நோக்கி இருக்கும். சூரியனின் ஒளிபடாத சந்திரனின் பாதிப்பகுதியே நம்மை நோக்கி இருக்கும் மேலும், அப்பொழுது சந்திரன் சூரியனோடு உதித்துச் சூரியனோடு மறையும். ஆகவேதான் அமாவாசை நாள் இரவில் சந்திரனை நாம் பார்க்க முடிவதில்லை.

OO

இயல்புக்கு மீறிய நரம்புத் தூண்டல்களால், கண் இமைத் தசைகளில் ஏற்படும் அரிப்பே நம் கண்களின் துடிப்பாகிறது.



OO

அளவுக்கு மீறிய வாசனை சிலருக்கு மூச்சுத் திணறல், தலைவலி ஆகியவற்றை உண்டாக்கிவிடும். காரணம் ஒவ்வாமையே (Allergy) ஆகும்.

OO

தாய்மார்களின் இரத்தமே தாய்ப்பாலாகச் சுரக்கிறது. அவர்களுடைய மார்பில் ஆயிரக் கணக்கான இரத்த நாளங்கள் உள்ளன. மார்பகத்தில் உள்ள அல்வியோலையும்-அதன் நாளங்களும் இரத்த நாளங்களிலிருந்து சக்திமிக்க பொருட்களான கால்சியம், அமினோ அமிலங்கள், கனிமப் பொருட்கள், கரிமப் பொருட்கள் பிரித்தெடுத்து பால் கோளங்களுடன் சேர்ந்து வெண்மை நிறப் பாலாக மாறுகிறது. இரத்தத்தின் குளுகோஸைப் பிரித்தெடுத்து, சிசுவானது ஏற்றுக் கொள்ளத் தக்க லாக்டோசாக மாற்றி குழந்தைக்கு ஊட்டப்படுகிறது. நாள்தோறும் இப்படி, 3 கிலோ குழந்தைக்குப் போதுமான அரை லிட்டர் பால் சுரக்கும்.

OO

ஊசி போடுவதில் 3 முறைகள் உண்டு. இரத்த நாளம் மூலம் மருந்தைச் செலுத்தினால் இரத்த ஓட்டத்தின் மூலம் மருந்து வேகமாக உரிய இடத்தை அடைந்து வேலை செய்யும்.



தசை மூலம் ஊசிபோட்டால், அப்பணி சிறிது தாமதமாகும். வாய் வழியாகச் செலுத்தினால் இன்னும் கால தாமதமாகும்.

OO

உடல் பயிற்சி எந்த நேரத்திலும் செய்யலாம்தான் ஆனால், உணவு உட்கொள்ளுமுன் வெறும் வயிற்றோடு செய்வதுதான் நல்லது. இதனால்தான் காலகாலமாக அதிகாலையில் இவ்வாறு உடற்பயிற்சி செய்வதே ஏற்றதெனக் கருதப்பட்டும் வருகிறது.

OO

சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் வந்த வரலாறு!

சென்னைக்கு வந்துள்ள கிருஷ்ணா நதிநீர் குறித்து கடந்த 1978ம் ஆண்டிலிருந்து தமிழகம் ஆந்திர மாநில அரசுகளுக்கு இடையே பல தடவை பேச்சுவார்த்தை நடந்துள்ளது. அதன் விவரம் வருமாறு:

நாள்	பேச்சுவார்த்தை நடந்த இடம்	பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டவர்கள்
1978 ஜூன் 15	ஐதராபாத்	தமிழகம் மற்றும் ஆந்திர மாநில முதல்வர்கள்.
1982 ஆகஸ்ட் 19	ஐதராபாத்	இரு மாநில முதல்வர்கள்.
1983 ஏப். 18	ஐதராபாத்	மாண்புமிகு ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தது. கிருஷ்ணா நதிநீர் குறித்து ஒப்பந்தமும் கையெழுத்தானது.
1989 ஜூன் 18	ஐதராபாத்	இரு மாநில முதல்வர்கள்.
1990 பிப். 4	ஐதராபாத்	அப்போதைய ஆந்திர முதல்வரும், தற்போது மேதகு ஆளுநராகவும் உள்ள திரு. சென்னா ரெட்டிக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் இடையே பேச்சுவார்த்தை
1992 ஜனவரி 11	ஐதராபாத்	மாண்புமிகு ஆந்திர முதல்வர் ஜனார்த்தன ரெட்டிக்கும், முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கும் இடையே பேச்சுவார்த்தை
1996 ஜூன் 8	ஐதராபாத்	மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடுவுக்கும், மாண்புமிகு தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகனுக்கும் இடையே பேச்சுவார்த்தை
1996 ஜூலை 18	ஐதராபாத்	மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடுவுக்கும், மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.ஆர்க்காடு வீராசாமி ஆகியோருக்கும் இடையே பேச்சுவார்த்தை

சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் கொண்டு வருவதற்காக ஆந்திராவுடன் தமிழகம் எட்டு முறை நேரடி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. அனைத்துப் பேச்சுவார்த்தைகளும் ஆந்திரப்பிரதேச மாநிலத் தலைநகரான ஐதராபாத்தில் நடந்துள்ளன. பேச்சுவார்த்தை அனைத்திலும் ஆந்திர முதல்வர்கள் பங்கேற்றுள்ளனர். இவற்றில் ஆறு பேச்சு வார்த்தைகளில் மட்டும் தமிழக முதல்வர்கள் பங்கேற்றுள்ளனர்.

-கோ. பாஸ்கரன்

புலவர்கள் உணர்க!



அன்றைக்கு நாடாண்ட ஆங்கி லேயர்
ஆட்சிக்குத் தேவையென எழுத்தர் தம்மை
ஒன்றுக்குப் பத்தாக உருவாக் கற்கே
ஊட்டிவந்தார் கல்விதனை ஆங்கிலத்தைக்
கன்றுக்குப் பால்வார்ப்ப தேபோல் நின்று
காத்தார்கள் நாம்கூட களிப்புற் றோமே!
இன்றைக்குத் தமிழரசு வந்த பின்னும்
எதற்கிங்கே ஆங்கிலக்கை யொப்பம் சொல்வீர்!

வெயிலடித்தால் சுருள்கின்ற புழுக்க ளைப்போல்
விசுக்கென்று சுருண்டுவிழும் வீரக் கூட்டம்
குயில்களைப்போல் அழகான குரல் இருந்தும்
கூவுதற்குக் கூசுகின்ற நீங்கள் நல்ல
மயில்களைப்போல் சாயலினைப் பெற்றி ருந்தும்
மண்டைகளை, ஆட்டுகின்ற குரங்கு கள்போல்
உயிர்பிழைக்க ஆடுவதும் சோற்றை மட்டும்
உயிர்பொருளாய் நத்துவதும் பொருத்தம் தானா?

புலவரெலாம் தமிழின்பால் பற்றுக் கொண்டு
புதுக்கருத்துச் சொல்வதிலும் எளிமை யாகப்
பலர்கற்கும் வாய்ப்பாகப் பைந்த மிழ்நூல்
படைப்பதிலும் தாழ்வுமனப் பாங்கை விட்டுக்
கலக்கமிலா நெறியுடனே உண்மைக் கல்வி
காண்பதிலும் சலுகைக்கோ அல்ல லுக்கோ
அலக்கண்வரின் அஞ்சாது துணிந்து நிற்கும்
ஆண்மைதனைப் பெறுவதிலும் முதன்மை கொள்க!

முனைவர்
தமிழ்க் குடிமகன்
(மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி
- தமிழ்ப் பண்பாட்டுத்துறை
அமைச்சர்)

சென்னையின் தாகம் தீர்க்க தவழ்ந்துவரும் கிருஷ்ணா நதி

சென்னையில் தெருக் குழாய்களில் காலிக்குடங்களும், காலி டப்பாக்களும் குடிதண்ணீருக்காகக் கால்கடுக்க இரவு பகலாக இனி நிற்கவேண்டியதில்லை.

சென்னை நகரில், தெருக் குழாய்ச் சண்டைக் காட்சிகள் திரைப்படங்களில்கூட காட்டுவதற்கு யோசிக்கப் போகிறார்கள்.

சென்னை நகருக்கு வருகிற விருந்தினர்கள் இனி, 3 நாட்களுக்கு மேலும் தங்கமுடியும்!

இதெல்லாம், கேட்பதற்குப் புதுமையாக இருக்கிறதல்லவா! சென்னை மாநகரம் நூற்றாண்டு காலமாகப் பல வரலாற்றுத் திருப்பங்களை வரிசையாகப் பெற்றிருந்தாலும், அதன் புகழுக்குச் சிறு பங்கம் விளைவிப்பது போல், குடிதண்ணீர் பிரச்சினை காலம்காலமாகத் தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. இந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைத்து, தவித்திருந்த வாய்க்குத் தாகம் தீர்க்கத் தண்ணீர் கொடுப்பதுபோல், தாராள மனதோடு புதுக்குடி போகும் புதிய மணப்பெண்ணைப்போல், ஆந்திராவிலிருந்து தவழ்ந்து, அழகு தமிழ்நாட்டிற்கு வருகின்றாள், கிருஷ்ணாநதி.

கிருஷ்ணா நதிநீர்த்திட்டம் ஓர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் என்பதற்குப் பல அசைக்கமுடியாத சான்றுகளை அடுக்கிக்கொண்டேபோகலாம். இரண்டு மாநிலங்கள் மனம் வைத்தால் மலையைக்கூட புரட்டிவிட முடியும். ஏன் மலையையும் குடைந்து நீரையும் கொண்டுவர முடியும் என்பதற்கு இத்திட்டம் ஒரு முத்தாய்ப்பு.

இரண்டு மாநிலக் கட்சிகள் கைகோர்த்தால் ஆற்ற முடியாத அரும்பணிகளைக்கூட அரங்கேற்ற முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. பல நூற்றாண்டுகளில் நிறைவேற்றப்படப் போகும் நதிகளை இணைக்கின்ற ஒரு மாபெரும் எண்ணத்திற்கு ஒரு ஊற்றுக்கால். இல்லை இது ஒரு நாற்றாங்கால் என்றுகூட சொல்லலாம்.

இப்படிப் புகழ்பெற்ற தமிழ்நாட்டின் வரலாற்றில், பொன்னெழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் பல மேடுகளிலும், பள்ளங்களிலும், காடுகளிலும் கடுமையான நிலப்பரப்பிலும் கடந்து வரலாற்றில் நடந்து வந்திருக்கிறது. அதன் பாதையை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

கிட்டத்தட்ட 115 ஆண்டுகளுக்கு முன்னால் (1881) சென்னை நகரில் 5 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் ஏற்பட்ட குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணச் சென்னை மாகாணத்தின் பாசனத்துறை நிபுணராக

★ நெஞ்சிலே
வலுவிருப்பின் வெற்றி
தஞ்சமென்று உரைத்து
வந்து நம்மிடம்
கொஞ்சிடுவது உறுதி.

-அறிஞர் அண்ணா

விளங்கிய கர்னல் டபிள்யு.எம். எல்லீஸ் என்பவரால் கிருஷ்ணா நதிநீரைச் சென்னைக்குத் திருப்பிவிடும் திட்டம் வரையப்பட்டது. ஆனால், பல்வேறு நிர்வாகச் சிக்கல்களினால் அத்திட்டம் சீர்குலைந்து, சிதிலமடைந்து என்ன காரணத்தாலோ கி ப்பில் போடப்பட்டது. பின்னர், இந்திய விடுதலைக்குப் பின்னால், அத்திட்டத்துக்குச் சிறகு முளைத்து விண்ணில் பறக்க முனைந்தது எனலாம்.

1947-53 ஆண்டுகளில் இத்திட்டம் முழுதும் ஆய்வு செய்யப்பட்டு, கிருஷ்ணா பெண்ணார் நதித்திட்டம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டது. இந்திய அரசின் திட்டக் குழுவினால், அமைக்கப்பட்ட கோஸ்லா கமிட்டி சென்னைக்குக் குடிநீர் வழங்கும் இத்திட்டத்தை கிருஷ்ணாபெண்ணார் நதிநீர்த் திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு செயல்படுத்தலாம் என்று பரிந்துரை செய்தது.

1961 வாக்கில் அமைக்கப்பட்ட குல்காட்டி கமிட்டியிடம் தமிழ்நாடு அரசு 17.83 ஏக்கர் அளவுக்குப் பாசனம் செய்யும் வகையில் 15 டி.எம்.சி. அளவு தமிழ்நாட்டுக்கு குறிப்பாகச் சென்னைக்கு வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்தது. தொடர்ந்து தமிழ்நாடு அரசு வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் பல்வேறு அமைப்புகளிலும் இக்கோரிக்கையை விடாமல்



வலியுறுத்திக் கொண்டேயிருந்தது. இந்தச் சமயத்தில்தான் (1963) மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களும் தலா 5 டி.எம்.சி. அளவுக்குத் தண்ணீரைப் பிரித்து எடுத்துக்கொள்ள முன்வந்துள்ளன என்று நாடாளு மன்ற மக்களவையில் தெரிவிக்கப் பட்டது. ஆனால், என்ன காரணத்தாலோ அது அப்படியே நின்றுபோய் பின்னர் 1969ல், ஏப்ரல் மாதத்தில் கிருஷ்ணா நதிநீர் பிரச்சினை நடுவர் மன்றம் என்ற அமைப்புக்கு விடப்பட்டது. அந்த நடுவர் மன்றம் கிருஷ்ணா நதி தமிழ்நாட்டில் பாயவில்லை என்ற ஒரு காரணம் காட்டி, தமிழ்நாட்டை அந்த நடுவர் மன்றக் குழுவில் சேர்க்கவில்லை. அதே நடுவர் மன்றம் 1973-ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பில் சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் வழங்குவதைப் பற்றி இருட்டடிப்புச் செய்து விட்டது. நடுவர்மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த 3 மாநிலங்களும் சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் தரவேண்டும் என்று ஒவ்வொன்றாய்க் கேட்டுக்கொண்டன.

இந்த இக்கட்டான நேரத்தில் தான் அன்றைய முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் சூழ்நிலைகளைச் சுட்டிக்காட்டி சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் கொடுக்க வேண்டும் என்று முதன்முதலில் அழுத்தம் திருத்தமாக முதல் குரலை எடுத்துவைத்து மைய அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார். ஆனால், மைய அரசோ கிருஷ்ணா நதிநீர் நடுவர் மன்றத்தில் 'தமிழ்நாடு உறுப்பினர் இல்லை' என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி முதல்வர் கலைஞர் அவர்கள் வைத்த கோரிக்கையை நிராகரித்து விட்டது.

அதன்பின்னர் 1976ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அன்றைய பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகிய முதல்வர்களின் முன்னிலையில் சென்னைக்குக் கிருஷ்ணா நீர் வழங்குவதுபற்றி அறிவித்தார். அதன்பின்னர் அந்த அறிவிப்பு இரண்டு மாதங்களில் சம்பந்தப்பட்ட மாநில முதல்வர்கள் கையொப்பமிட ஓர் ஒப்பந்தமாக நிறைவேறியது.

ஆந்திராவும் இத்திட்டத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட இராயலசீமா பகுதியில் விவசாயத்திற்குப் பயன்படும் வகையில், விரிவானத் திட்டமாக வரைந்தது. அந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசும் அப்படியே ஏற்றுக்கொண்டது. இந்தச் சூழ்நிலையில் 1983ஆம் ஆண்டில் சென்னை மாநகரில் கடுமையானக் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டது. இதனைத் தீர்ப்பதற்கு அன்றைய மாநில முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். மற்றும் ஆந்திர முதல்வராக இருந்த என்.டி. ராமராவ் ஆகியோர் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி சென்னைவாழ் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க முயன்றார்கள்.

அந்த முயற்சியால்தான் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 27ஆம் நாள் தமிழ்நாட்டில் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் என்ற பெயரிலும், ஆந்திராவில், தெலுங்குகங்கைத் திட்டம் என்ற பெயரிலும் இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வரத் தொடங்கியது. அப்போது, இந்தத் திட்டத்தின் செலவீட்டுத் தொகையாக ரூ.260 கோடி ஆகும் என்று கணிக்கப்பட்டிருந்தது. பின்னர், காலப் போக்கில் இது ரூ.2190 கோடி அளவுக்கு உயர்ந்துவிட்டது. இந்தத் தொகையில் 1018 கோடி ரூபாய் ஆந்திர அரசாலும், 512 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசாலும் செலவிடப் பட்டுள்ளது. இதில், கால்வாய் அமைப்புப் பணி மற்றும் பூண்டி, புழல் நீர்த்தேக்கங்களின் கரைகளில் 2 அடி உயரத்துக்கு உயர்த்தியது போன்ற பணிகளுக்காகத் தமிழ்நாடு ரூ.180 கோடி அளவுக்குக் கூடுதலாகச் செலவு செய்துள்ளது.

கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டு எல்லையில் அதாவது 'ஜீரோ பாயிண்ட்' என்று அழைக்கப் படும் பகுதியில் வெயிலில் ஆவியானது போக 12 டி.எம்.சி. தண்ணீர் ஆந்திர அரசு தரவேண்டும் என்பது முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது, முதல் கட்டமாக 3 டி.எம்.சி. தண்ணீர் 29.9.96 முதல் வரத் தொடங்கியுள்ளது.

இந்த நிகழ்ச்சியைப் பெருமைப் படுத்தும் வகையில் தமிழ்நாட்டின் எல்லைப் பகுதியான தாமரைக் குப்பம் என்ற கிராமத்தருகே 29.9.96 அன்று காலை 10 மணியளவில் எளிய முறையில் விழா நடைபெற்றது. மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என். சந்திரபாபு நாயுடு அவர்கள் விழா மேடைக்கருகே அமைக்கப் பட்டுள்ள மதகினைத் திறந்து கிருஷ்ணா நதிநீர் சென்னைக்கு வர, தொடங்கிவைத்தார். அவர் பேசும்போது, "இன்று வழங்கப் படும் தெலுங்குகங்கை நதிநீர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்காகத் தான்" என்று இரண்டு முறை அழுத்தி சொன்னதிலிருந்தே இந்தத் திட்டம் விரைவாக நிறைவேறியதற்குக் கலைஞர் அவர்களே முழுமுதற் காரணம் ஆகும் என்பது தெரியவரும். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில் மதகு அருகே எழுப்பப்பட்ட நினைவுத் தூணை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்துத் தமிழ்நாட்டின் சார்பாக ஆந்திர முதல்வருக்கு நன்றி தெரிவித்தார்.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சென்ற மாதம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் 'கிருஷ்ணா நதிநீர்' அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 ஆம் நாளன்று சென்னைக்குக் கிடைக்கும் என்று அறிவித்திருந்தார். ஆனால், அந்தச் சமயத்தில் பெய்த திடீர் மழை காரணமாகக் கால்வாய்க் கரைகளில் உடைப்பு ஏற்பட்டு குறித்த நாளில் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் வந்து சேர இயலாத சூழ்நிலை நேர்ந்துவிட்டது. இருப்பினும், முதல்வர் கலைஞர் அவர்கள் மேற்கொண்ட விடா முயற்சியினால், அண்ணா பிறந்த செப்டம்பர் மாதத்துக்குள்ளேயே அதாவது, 29.9.96 அன்று தமிழக எல்லைக்குள் கிருஷணா நதிநீர் தவழ்ந்து வந்தது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும்.

வருகின்ற 3 டி.எம்.சி. தண்ணீர் தற்போது செம்பரம்பாக்கம் ஏரியில் நிரப்பி பாதுக்காக்கப்பட்டு வருகிறது. 31 கி.மீ. நீளமுள்ள கால்வாய்ப் பகுதிகளை வளப்படுத்தி நீரைச் சுத்தப்படுத்தவும், செங்குன்றத்தில் ரூபாய் 30 கோடி செலவில் ஒரு குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது ஒரு நாளைக்கு 300 மில்லியன் லிட்டர் தண்ணீரைச் சுத்தப்படுத்தும் திறன் கொண்டது.

இந் நிகழ்ச்சியில் மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் முரசொலிமாறன், மாண்புமிகு பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் திரு. என்.வி.என். சோமு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கோ.சி. மணி, ஆந்திரப் பிரதேச அமைச்சர் டாக்டர் சிவப்பிரசாத ராவ் மற்றும் அமைச்சர் பெருமக்கள் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டார்கள். விழாவில் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு துரை முருகன் அவர்கள் வரவேற்புரை யாற்றினார். தமிழகத் தலைமைச் செயலாளர் திரு. கே.ஏ. நம்பியார் மற்றும் ஆந்திரத் தலைமைச் செயலாளர் திரு. ராஜாஜி ஆகியோர் கலந்து கொண்டார்கள். கிருஷ்ணா நதிநீர்த் திட்டத் தலைமைப் பொறியாளர் திரு. எஸ்.பி. சுப்பிரமணியன் நன்றி நவின்றார்.

-எம்.வி.எம். அசோகன்

கிருஷ்ணா நதிநீர் பெற்ற இனிய விழா

கடுந்தவமிருந்து, கங்கையை விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்குக் கொண்டுவந்தான் பகீரதன் என்கிறது புராணம். ஆந்திரத்திலிருந்து, அதை அரும்பாடுபட்டுச் சென்னை மாநகர மக்களின் தாகம் தீர்க்க இங்கே கொண்டுவந்து பெருமை பெற்றிருக்கிறார் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

ஆந்திர எல்லையைத் தாண்டி தமிழ்நாட்டினுள் தன்னுடைய இதமான இனிய பயணத்தைத் தொடங்கியது கிருஷ்ணா.

முறைப்படி அதை மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என்.சந்திரபாபு நாயுடு அவர்கள் வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பெற்றுக்கொள்ளும் விழா சென்னையில் நடைபெற்றது. இருமாநிலப் பாசனத் துறை அமைச்சர்கள் மட்டுமல்ல; தலைமைச் செயலாளர்களும், பொறியாளர்களும்கூட அவ்விழாவில் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசுகள் வழங்கிச் சிறப்பிக்கப் பட்டார்கள். மாண்புமிகு மத்திய அமைச்சர்களும், மாநில அமைச்சர்களும், நாடாளுமன்ற - சட்டப் பேரவை உறுப்பினர்களும் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

இராஜாஜி மண்டபத்தின் முன்னால் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் நடைபெற்ற அந்தச் சரித்திரச் சிறப்புமிக்க விழாவிற்கு, மேதகு தமிழக ஆளுநர் திரு. டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் வரவேற்புரையோடு தொடங்கிய கிருஷ்ணா நதிநீர் பெறும் விழா நிகழ்ச்சிகளைத் திருமதி நிர்மலா பெரியசாமி தொகுத்து வழங்கினார். "என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம் என்றான் பாரதி; என்று தணியும் இந்தச் சென்னையின் தண்ணீர்த் தாகம் என்று தவித்தார்கள் மக்கள்; இனி அந்தக் கேள்விக்கே இடமில்லை..." என்று அவருடைய தொகுப்புரை தொடங்கியது.

அவ்விழாச் சொற்பொழிவுகளில் சில தேன்துளிகள் வருமாறு:

“எத்தனையோ வரலாற்றுச் சாதனைகளைப் புரிந்த நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களின் புகழ் மகுடத்தில் இன்று புதிதாகப் பதிக்கப்பட்டு ஜொலிப்பதுதான் இந்தக் கிருஷ்ணா குடிநீர்த் திட்டம். 1983க்குப் பிறகு ஆந்திராவில் என்.டி. ராமராவ், சென்னா ரெட்டி, ஜனார்த்தன ரெட்டி, விஜயபாஸ்கர ரெட்டி, சந்திர பாபு நாயுடு ஆகிய ஐந்து முதலமைச்சர்களையும் - தமிழ் நாட்டில் எம்.ஜி.ஆர்., வி.என். ஜானகி, ஜெயலலிதா, கலைஞர் ஆகிய நான்கு முதலமைச்சர்களையும் பார்த்திருக்கிறது இந்தக் குடிநீர்த் திட்டம். இதற்காக நான்கு ஆந்திர முதல்வர்களைச் சந்தித்துப் பேசிய நம்முடைய கலைஞரே இறுதியில் வெற்றி பெற்றார். 'கங்கை கொண்டான்', 'கடாரம் கொண்டான்' என்பது போல் இதற்காகவே இவரைக் 'கிருஷ்ணா நிதிநீர் கொண்டான்' என்று வரலாறு பாராட்டும்”.

-திரு. துரைமுருகன்
(மாண்புமிகு தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சர்)



★ நாம் செய்யும் மாறுதல் சுகபோகிகளுக்குப் பாதகமாக இருப்பதால், அவர்களின் இன்பவாழ்வு பாதிக்கப்படும்; ஆகவே, அவர்கள் மாறுதலை மறுப்பார்கள் அல்லது எதிர்ப்பார்கள்.

-தந்தை பெரியார்

“இந்திய வரைபடத்திலேயே புதியதோர் நதிநீர் வழித்தடத்தை இடம்பெறச் செய்திருக்கும் மாபெரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி இது”.

-திரு. கோ.சி. மணி
(மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்)

“இந்திய வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க நாள் இந்நாள். மத்திய அரசு ஈடுபாடு ஏதுமின்றி, இரண்டு மாநிலங்களே முன் வந்து சாதித்திருக்கின்றன. மாநிலங்களுக்கிடையே இத்தகைய உறவு வலுப்பெற வேண்டும். அதுதான் கூட்டாட்சி; மத்திய அரசு ரெபரிபோல் இருக்க வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன மாநில சுயாட்சிக் கொள்கையை நிறைவேற்றும் அளவிலேயே இதில் நமது முதல்வர் கலைஞர் அவர்களும், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்களும் செயல்பட்டிருக்கிறார்கள்”.

-திரு.'முரசொலி' மாறன்
(மாண்புமிகு மத்திய அரசு தொழில்துறை அமைச்சர்)

“இத்திட்டத்திற்கான பணிகள் இரவு பகலாக நடைபெற்றன; இதன்மூலம் சென்னைவாசிகளுக்கு மட்டுமல்ல; எங்களுடைய ராயலசீமையில் உள்ள 47 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கும் தண்ணீர் கிடைக்கும்; அந்த வறட்சிப் பகுதியும் வளம்பெறும்”.

-திரு. கோடல சிவப்பிரசாத ராவ்
(மாண்புமிகு ஆந்திர மாநில நடுத்தரப் பாசனத்துறை அமைச்சர்)

“ஆந்திராவிலிருந்து சென்னைக்குக் கிருஷ்ணா நதிநீர் கொண்டுவந்ததன் மூலம், தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் புதிய சரித்திரத்தைப் படைத்திருக்கிறார். மொழிவாரியாகப் பிரிந்துள்ள இந்த மாநிலங்களை நதிவாரியாக இணைத்திருக்கிறார். கங்கை முதல் கன்னியாகுமரி வரை இணைக்கும் மாபெரும் வரலாற்றையும் கலைஞர்தான் சாதிக்க வேண்டும். தமிழும், தமிழ் மக்களும், தமிழ்நாடும் இருக்கும்வரை இதற்காகவே மக்கள் கலைஞரை நினைத்துப் பார்ப்பார்கள்.”

-திரு. எம். அருணாசலம்
(மாண்புமிகு மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)

“திரு. கருணாநிதி அவர்கள் முதல்வராக வேண்டும் என்பதற்காகவே சென்னைக்குத் தண்ணீர் விடும் இத்திட்டம் காத்துக் கிடந்தது போலிருக்கிறது. இப்படி ஆந்திர மாநிலத்திற்கும் தமிழ் மாநிலத்திற்கும் நல்லுறவு ஏற்பட்டு, உயர்வு பெற்று மக்கள் ஒற்றுமையோடு வாழ வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். என் கைகளால் சென்னைப் பட்டினத்திற்குத் தண்ணீர் தருவதை என் பூர்வ ஜென்ம சாபல்யமாக நினைத்து மகிழ்ச்சியடைகிறேன். எப்போதும் எனக்கு டாக்டர் கருணாநிதிதான் தலைவர்; என்றென்றும் அவர் எங்கள் தலைவராக விளங்க வேண்டும்”.

-திரு. என். சந்திரபாபு நாயுடு
(மாண்புமிகு ஆந்திர முதல்வர்)

“இந்த விழாவிற்குத் தலைமையேற்றிருப்பவர் நமது ஆளுநர் திரு. சென்னாரெட்டி அவர்கள்; அவர் சென்னை ரெட்டியாகவே ஆகிவிட்டவர். அதனால்தான் சென்னைக்குத் தண்ணீர் கிடைக்கும் நேரத்திலே சென்னாரெட்டி தலைமை யேற்றிருக்கிறார். ஆந்திர முதல்வர் அவர்கள் என்னைத் தலைவர் என்று குறிப்பிட்டார்; இப்படிப்பட்ட தளபதியைப் பெற்றமைக்காக நான் பெருமையடைகிறேன். இன்றைக்குக் கிருஷ்ணா நதிநீர் கிடைத்திருக்கிறது. அது எனக்காகப் பார்த்த பெண்; நான் பார்த்த பெண்; இன்றைக்குத் திருமண வயதை எய்தி மணவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மணவிழாவிற்குத் துணை

நின்றவர்களெல்லாம் நன்றிக்கு உரியவர்கள், பாராட்டுக்கு உரியவர்கள், போற்றுதலுக்கு உரியவர்கள்".

-கலைஞர்
(மாண்புமிகு தமிழக முதல்வர்)

"முதல்வர் கலைஞர் அவர்களின் நிர்வாகத் திறமையின் காரணமாகவும், வழிகாட்டுதலின் காரணமாகவும் கிருஷ்ணா நீரைக் கொண்டு வந்திருக்கிறார். நான் ஆந்திர முதல்வராக இருந்தபோது இந்த நீரைத் தரப் பாடுபட்டேன்; இப்போது பெற்றுக்கொள்ளும் நிலையில் இருக்கிறேன். இந்தப் பெருமையால் நான் இரண்டு தரப்பிலும் மகிழ்ச்சியடைகிறேன். இத் திட்டத்தின் மூலம் இரு மாநில மக்களும் பயனடைய முடியும். அண்ணா பிறந்த இந்த மாதத்தில் கிருஷ்ணாநீர் வருவது சிறப்புக்குரியது. இன்றுபோல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஆந்திரமும், தமிழ்நாடும் என்றும் இணைந்து நிற்க வேண்டும்".

-டாக்டர் எம். சென்னாரெட்டி
(மேதகு தமிழக ஆளுநர்)

இந்த விழாவிற்குத் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி.கே. மூப்பனார் முதலான பல்வேறு கட்சியினரும் ஆந்திரப் பெருமக்களும், சென்னைவாழ் பெருமக்களும் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்திருந்தார்கள்.

ஒரு சிறிய வெள்ளிக் குடத்திலிருந்து கிருஷ்ணா நதிநீரை மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. என். சந்திரபாபு நாயுடு அவர்கள் உவகையோடு ஊற்ற, சென்னை வாழ் மக்கள் சார்பில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள மகிழ்ச்சி பொங்க மற்றொரு பாத்திரத்தில் முறைப்படி அதைப் பெற்றுக் கொண்டார்.

திரண்டிருந்த பொது மக்கள் அப்போது- "கலைஞர் வாழ்க"... "சந்திரபாபு நாயுடு வாழ்க" என்று எழுப்பிய ஆனந்த முழக்கம், அந்த வட்டாரத்தையே அதிரச் செய்தது!

-'சோழராஜா'

முதியவர்களுக்குப் பாதுகாப்பும், அரவணைப்பும் தருகின்ற உணர்வைச் சமுதாயத்திலே தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காக, ஐக்கிய நாடுகள் சபை சார்பில் 'முதியோர் நாள்' அக்டோபர் முதல்நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

எங்கள் ஊர் பிரச்சினை!

பிரச்சினை

தஞ்சையிலிருந்து சுற்றுப்பட்ட ஊர்களுக்குச் செல்லும் சோழன் நகரப் பேருந்துகளில். எல்.எஸ்.எஸ். என்ற பெயரில், சென்ற அரசில் கட்டணத்தை உயர்த்திவிட்டனர். இக் கட்டணம் தனியார் பேருந்து கட்டணத்தைவிட அதிகம். இதனால் பயணிகள் தனியார் பேருந்தை நாடுவதால் அரசுக்கு இழப்பும், தனியார் பேருந்துகளில் அதிக நெருக்கடியும் ஏற்படுகிறது. ஆண்டு முழுவதும் வெளியூர் வேலைக்குச் செல்லும் பயணிகளுக்கு ஒரு குறிப்பிட்டத் தொகை அதிமாகச் செலவாகிறது. அந்தத் தொகை இருந்தால் மேலும் ஒரு வாரத்திற்கு பயணம் செய்யலாம். அதிகமான கிராமங்களைக் கொண்ட தஞ்சை போன்ற சிறு நகரங்களுக்கு LSS தேவையில்லை. பெரும்பாலான சோழன் நகரப் பேருந்துகள் மிகவும் பழுதடைந்துள்ளன. இருக்கைகளே இல்லாதபேருந்துகளும், அதிக மோசமடைந்துள்ள அடித்தளமும் கொண்ட பேருந்துகளும் இயங்குகின்றன. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்.எஸ்.எஸ். ஐ எ.எஸ்.எஸ். ஆக மாற்றி கட்டணத்தை குறைக்க வேண்டுமென்று அவதியுறும் பயணிகள் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பழுதடைந்த பேருந்துகளையும் மாற்றி பயணிகளை உரிய நேரத்தில் உரிய இடத்தில் கொண்டு போய் சேர்க்குபடி கேட்டுக்கொள்கிறேன்.

நீடா. இளஞ்செழியன்,
சாலியமங்கலம்-613 504
தஞ்சை மாவட்டம்.

தீர்வு

1. எல்.எஸ்.எஸ். நகரப் பேருந்துகளில் அரசு ஆணைப்படியே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. (அரசு ஆணை எண் 1704, உள்துறை (போக்குவரத்து VII), தேதி 24.11.93 மற்றும் அரசு ஆணை எண் 286, உள்துறை (போக்குவரத்து VII) , தேதி 23.2.86.)

பொது மக்கள் பயன்பாடு கருதி பயண நேரத்தைக் குறைக்கும் வண்ணம் குறிப்பிட்ட நிறுத்தங்களில் மட்டும் பேருந்துகளை நிறுத்திப் பயணிகளை ஏற்றி/இறக்கும் வகையில் மேற்படி எல்.எஸ்.எஸ். நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

2. சோழன் போக்குவரத்துக் கழகத்தில் பழைய பேருந்துகள் அவற்றின் வயதின் அடிப்படையில் கழிவு செய்யப்படுகின்றன. அவ்வாறு கழிவு செய்யும்போது, சோழனின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு கழிவு செய்யும் பேருந்துகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகிறது. 1996-97ஆம் ஆண்டில் இதுவரை இக் கழகத்தில் 39 பேருந்துகள் கழிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் தற்சமயம் 57 நகரப் பேருந்துகள் 30.9.96 அன்று கழிவு செய்யப்பட உள்ளன.

3. 1.10.96 அன்று நகரப் பேருந்துகளின் சராசரி வயது ஆறு ஆண்டுதானிருக்கும், பேருந்துகள் அன்றாடப் பராமரிப்பில் கவனம் செலுத்தப்படுகின்றன. பெரும்பழுதடைந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டு பழுது பார்க்கப்படுகின்றன. பேருந்துகளை நல்ல நிலைமையில் இயக்க எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர்,
தஞ்சாவூர்.

பிரச்சினை

எங்கள் ஊரில் உள்ள தெருவில் விளக்கு ஏதும் எரியவில்லை. அவை அனைத்தும் இன்னும் பொருத்தப்படவே இல்லை. விளக்குகள் பொருத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கா.வீ. முருகன்,
காறை அஞ்சல்,
செஞ்சி வட்டம் - 605 201. விழுப்புரம்.



தீர்வு

செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் காறை கிராமத்தில் 100 சதவீதம் தெரு மின்விளக்கு எரியவைக்கத் தீவிர சிறப்பு முகாம் 24.7.96 முதல் 20.8.96 வரை நடை பெற்றதில் அனைத்து தெரு மின்விளக்குகளும் எரிய வைக்கப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது அக்கிராமத்தில் உள்ள 74 தெரு விளக்குகளும் எரிகின்றன என்பதையும் தெரிவித்துக்.கொள்கிறேன்.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம், செஞ்சி,
விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம்.

பிரச்சினை

புள்ளமங்கலம் பாலக்குறிச்சியிலிருந்து சேந்தங்குடி ஆற்றுப் பாலம் வரை இராஜன்கட்டளை செல்லும் சாலையில் சோழன் பேருந்துகள் சேந்தங்குடி-புத்தகரம் சென்றுவருகின்றன. தார்சாலை மன்னார்குடி நெடுஞ்சாலைத் துறையால் செய்யப்பட வேண்டியவை 0/0-0/6, 3 பர்லாங் தூரம் ஆற்றங்கரையில் அமைந்துள்ள தார்சாலை இதற்கு அடுத்த பக்கமும் இதற்கு இந்தப் பக்கமும் தார் போடப்பட்டுள்ளது. இந்தச் சாலை முந்தைய போக்குவரத்து அமைச்சர் இருந்த காலத்தில் புதிய பேருந்து விடப்பட்டு அப்போது போடப்பட்ட சாலையும் சீர்குலைந்து கொண்டிருக்கிறது. இதனைச் சீர் செய்ய ஏற்பாடு செய்யவும்.

அ. அப்துல் லத்தீப்,
பொய்கை நல்லூர், சேந்தமங்கலம்-610 06
ஏ.டி. பன்னீர் செல்வம் மாவட்டம்

மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாளையொட்டி, காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள புகைப்படக்காட்சி அரங்கத்தை, மேதகு முன்னாள் மராட்டிய ஆளுநர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் பார்வையிட்டார் (2.10.96).

தீர்வு

கடிதத்தில் குறிப்பிட்டுள்ள இராஜன்கட்டளை சாலையானது மன்னார்குடி கோட்டம் பராமரிப்பில் உள்ள கும்பகோணம்-கொரடாச்சேரி-லெட்சுமாங்குடி-மாவூர்பெரிய மாவட்ட சாலையில் கி.மீ 47/4 ல் பிரிந்து செல்லும் அரிச்சந்திராபுரம். திருவாரூர் இதர அரசு மாவட்ட சாலையில் கி.மீ.2.0ல் பிரிந்து செல்லும் இராஜன்கட்டளை சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் கி.மீ.0/0-1/245 = 1.245 கி.மீட்டராகும். இதில் கி.மீ. 0/0-0/6 வரை இதர அரசு மாவட்ட சாலையாக நெடுஞ்சாலைத்துறை மூலம் புதுப்பிக்கப்பட்டு தார்ச்சாலை வறட்சி நிவாரணப் பணியில் செப்பனிடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. இதன் தொடர்ச்சி பகுதியான கி.மீ.0/600 - 1/245 =0.645 கி. மீட்டர் வகைப்படுத்தப்படாத கோட்டூர் ஊராட்சி ஒன்றியச் சாலையாகும். இச்சாலை தற்பொழுது கருங்கல் கப்பி சாலையாக உள்ளது. மேற்படி பகுதியை ஊராட்சி ஒன்றியம் மூலம் பிரேரணைகள் தயாரித்து கோட்டப்பொறியாளர் (நெ) தஞ்சாவூர் கிராமச் சாலைத் திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்து நெடுஞ்சாலைத் துறைக்கு நிலந்தர கோட்டத்திற்கு ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இடைப்பட்ட பகுதி மேம்பாடு செய்தால் ஆலந்தூர் ஊட்டியரணி இதர அரசு மாவட்ட சாலையில் இணையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேற்படி இடைப்பட்ட பகுதியான 0.645 கி.மீ மேம்பாடு செய்வது தொடர்பாகக் கோட்டப்பொறியாளர் (நெஊப) நாகப்பட்டினம் அவர்களுக்கும், கோட்டப்பொறியாளர்(நெ) கிராமச்சாலைகள் கோட்டம், தஞ்சாவூர் அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதவிக்கோட்டப் பொறியாளர்,
நெடுஞ்சாலை ஊரகப்பணித்துறை,
மன்னார்குடி.

இண்டர்நெட்டில் தமிழில் செய்தி — முதல்வர் கலைஞர் வாழ்த்து!

இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் இணையம் எனப்படும் இண்டர்நெட் மூலமாகச் செய்திப் பரிமாற்றம் செய்யப்படுகிறது. இந்தச் செய்திப் பரிமாற்றம் 30.9.96 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் இல்லத்திலேயே அரங்கேற்றப்பட்டது.

மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவரது இல்லத்திலிருந்து இந்த முயற்சி பற்றிக் குறிப்பிட்டு, தங்களை வாழ்த்துமாறு மாண்புமிகு முதல்வருக்குச் செய்தி அனுப்பினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன் இல்லத்திலிருந்தபடியே இந்தச் செய்தியைக் கணிப்பொறியில் படித்தவுடன் தன் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் பதிவு செய்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர், அவரது துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள், மாண்புமிகு அமைச்சர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் வளர்ச்சிச் செயலர் திரு வை. பழனிச்சாமி, இதனை இயக்கிக் காட்டிய சென்னையில் இயங்கி வரும் இணையத்தொடர்பு நிறுவனமான சைபர்லின்க் நிறுவனத்தை நடத்திவரும் திரு ரவி, சிங்கப்பூரிலிருந்து வருகை தந்து ஏற்பாடு செய்த 'முரசு அஞ்சல்' எனும் மென் பொருளுக்கு உரிமையாளரான திரு மு. முத்தெழிலன், திரு கோ. அரவிந்த் ஆகியோருடன் ஆர்வத்தோடு உழைத்த எழுத்தாளர் திரு கா. கந்தசாமியும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

வெகுவிரைவில் இந்த ஏற்பாடுகள் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் விரிவுபடுத்தப்படும் என மாண்புமிகு அமைச்சர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் தெரிவித்தார்.

மாண்புமிகு அமைச்சர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பிய செய்தி விவரம் வருமாறு:

★ சாதிமுறை, சடங்கு என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே, சாதிமுறையை ஒழிப்பதும் சமதர்மத் திட்டம்தான்.

-அறிஞர் அண்ணா



அண்ணல் காந்தி அடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, குறளகத்தில் பட்டு கண்காட்சித் திறப்பு விழா மற்றும் கதர் சிறப்பு விற்பனையை மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு அந்தியூர் ப. செல்வராஜ் அவர்கள் துவக்கி வைத்தார் (2.10.96).

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு,

இளவல் தமிழ்க்குடிமகன் எடுத்துரைக்கும் செய்தி வெறும் ஏடுகளிலும், நூல்களிலும் தாள்களிலும் மட்டுமே நிற்கும் தமிழ்ச் செல்வத்தை அறிவியல் கண்ணோட்டத்தில் உலக மெங்கும் எடுத்துச் செல்லும் உயர் பணியை இன்று நம் தமிழ் வ்ளர்ச்சித்துறை செயற்படுத்தத் தொடங்கியுள்ளது. தமிழனின் பெரிய தமிழ் இலக்கியத்தின் செழுமையைத் தமிழ் அறிஞர்களின் படைப்பு மேன்மையை மொழி, கலை பண்பாடு போன்ற கோணத்தில் உலக மெங்கும் சொல்வதற்கு இன்று அறிவியலை கையில் எடுத்துள்ளோம். தங்கள் கட்டளையை ஏற்று உலகிலுள்ள ஒவ்வொரு தமிழனும் செயற்பட வைக்கும் உயர்பணியை இன்று தொடங்கி இருக்கும் எங்களை உளமார வாழ்த்துங்கள்.

நன்றி!

-மு. தமிழ்க்குடிமகன்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அமைச்சருக்கு அனுப்பிய மறுமொழி:

அன்புள்ள இளவல் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு இனிய வாழ்த்து. தமிழ் மொழியை அறிவியல் கண்ணோட்டத்தில் உலகம் முழுமைக்கும் எடுத்துச் சொல்லுகின்ற மேன்மைமிகு தொண்டினைத் தொடங்கியுள்ள காலகட்டத்தில் அந்தத் தொண்டு தொடரவும், தொடரும் தொண்டு இடரும் தடைகளை இடரவும் தங்களைப் போன்ற தமிழ்ப் பணியாளர்களின் தோளுக்கு வலிவு ஏற்பட வாழ்த்துகிறேன்.

-இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 72
அரையாண்டுச் சந்தா ... ரூ. 36
'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 36

படிக்க ... பயன்பெற ... பாதுகாக்க

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :

உதவி இயக்குநர்,
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை - 600 002.

மாணவர் பக்கம்:

பொய் சொல்லல் நல்லதப்பா!

வேகம் வேகமாக பஸ்ஸ்டாண்டுக்கு வந்து சேர்ந்தார் வைத்தியநாதன். தூரத்தில் பல்லவன் பஸ்ஸின் பச்சை முகம் தெரிந்தது. 'கூட்டம் அதிகமிருக்கும் டிக்கட்டுக்குப் பணத்தை எடுத்து வெச்சுப்பம்' என்றெண்ணித் தனது சட்டைப் பைக்குள் கையைவிட்டார், அவர். பகீரென்றது. நேற்றிரவு தனிப்படப் பைக்குள் போட்டிருந்த ஒரே ஒரு பத்து ரூபாய்த்தாளைக் காணோம்! அதில் கிடந்த சில்லறைகள் டிக்கட்டுக்குப் போதுமானவைகளாக இருந்தன.

ஒரு வழியாக அலுவலகத்திற்குப் போய்ச்சேர்ந்தார் வைத்தியநாதன். பகல் முழுதும் ஒரு வேலையும் ஓடாமல் அந்தப் பத்து ரூபாய் பற்றியே யோசித்துக்கொண்டிருந்தார். பிறகு மாலை வெய்யில் ஓடம்புக்கு நல்லது என்று அன்றுதான் தெரிந்துகொண்டவர் போல, வியர்க்க விருவிருக்க நடந்தே வீடு வந்து சேர்ந்தார் மனிதர்.

அவர் வந்ததும் வராததுமாகக் கைப்பையை வாங்கி மேசைமேல் வைத்தாள் அவர் மனைவி பாக்கியம். அப்போதுதான் அதனருகே, மேஜையில் இருந்த ஒரு புதுப்பேனாவைப் பார்த்தார், வைத்தியநாதன்.

"என்ன அப்பிடிப் பார்க்கிறீங்க? நம்ம பையன். வழீல ஒரு பத்து ரூவா நோட்டு கீழே கிடந்து எடுத்தானாம். அதுலதான் இதை வாங்கீருக்கான். நல்லாயிருக்கில்லே?" என்றாள் அவள்.

சிரிப்போடு "ஓகோ" என்றார் வைத்தியநாதன். அடுப்படியிலிருந்து எட்டிப் பார்த்த மகனின் காதைப் பிடித்து வெளியே இழுத்தார். "ஏண்டா, பத்து ரூபாவெ கீழே கிடந்தா எடுத்தே?" என்றார் கோபமும் கேலியுமாக.

மிரள மிரள விழித்தான், பையன்,

"என்னோட சட்டைப் பையிலேர்ந்துதானே அதை எடுத்தே உண்மையைச் சொல்லுடா"! என்று அவர் அதட்டவே மிரண்டுபோன பையன், 'ஆமாம்' என்பது போல அழமாட்டாக் குறையாகத் தலையாட்டினான்.

"ஏண்டா, பொய் சொன்ன வாய்க்குப் போஜனம் கிடைக்காதுன்னு நீ படிச்சதில்லே? ... போன மாசம் தானே நீ கிழிக்கிற கிழிக்கு ஒரு பேனா வாங்கிக் குடுத்தேன். நீ கிழிக்கிற கிழிக்கு இன்னொரு பேனாவா?" என்று அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே ஒரு பெட்டைக் கோழி படபடத்துக்கொண்டு அவர்கள் வீட்டுக்குள் ஓடி வந்தது.

யாரோ அதைத் துரத்தி வருவதுபோல் தெரிந்தது. வெளியே எட்டிப்பார்த்த வைத்தியநாதன், சட்டென்று உள்ளே திரும்பினார். பரணில் இருந்த ஒரு கூடையைத் தாவி எடுத்து, அந்தக் கோழியை உள்ளே கொண்டுபோய்ப் போட்டு மூடிவிட்டுக் கூடத்திற்கு ஓடிவந்தார்.

பாக்கியமும் அவள் மகனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

கையில் அரிவாளுடன் மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்க ஒரு முரடன், அவர்கள் வீட்டு வாசலில் வந்து நின்றான். "ஏங்கையா, இந்தப் பக்கம் ஒரு பொட்டைக் கோழி வந்ததுங்களா?" என்றான்.

"அப்படியொன்னும் வரலியேப்பா?" என்றபடி, சாவதானமாகச் . சட்டையைக் கழற்றினார் வைத்தியநாதன்.

"வீட்ல விருந்தாளி வந்திருக்குதுங்க, ராத்திரி சாப்பாட்டுக்கு ஆகுமுன்னு பார்த்தா தப்பிச்சுடுச்சே சனியன்" என்றவாறே வேகமாகப் போய்விட்டான், அவன்.

தன்னை வித்தியாசமாகப் பார்த்த மனைவியையும் மகனையும் பார்த்துச் சிரித்தபடி இப்படிச் சொன்னார் வைத்தியநாதன்- "என்னடா, கொஞ்சம் முன்னால பொய்சொல்லக் கூடாதுன்னு நமக்குச் சொல்லீட்டு, இவன் இப்ப புளுகறானேன்னுதானே பார்க்கிறீங்க? பொய் சொல்றதால ஒரு நல்லது நடக்கும்னா தாராளமா சொல்லலாம். தப்பில்லே! கோழி இதோ இருக்குன்னு நாம பிடிச்சுக் கொடுத்திருந்தா, அவன் அதெ இந்நேரம் வெட்டிப் போட்டிருப்பான். அதான் அப்படிப் பொய் சொன்னேன். பத்துரூபாய் கீழே கெடந்து எடுத்தேன்னு நீ பொய் சொன்னாப்ல இல்ல இது. புரிஞ்சுதோ?"

"பொய்யையும் வாய்மை
இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

-அப்படீன்னு திருவள்ளுவரே சொல்லீருக்கார் தெரியுமோ" என்று அவர் விளக்கியதும், தாயும் மகனும் வாயடைத்துப்போய் நின்றார்கள்.

-ராஜூ

பலி

அறிஞர் அண்ணா

"திங்கள் மனமாளிகையிலிருந்து, மன்னவா! என்னை விரட்டிட எப்படித் துணிந்தீர்கள்? என்ன குற்றம் காண்கிறீர்கள் என்னிடம்? எந்தக் கண்களிலிருந்து காதலொளி வீசிற்றோ அவைகளா இந்தக் கொடுமையைக் கக்குகின்றன? "தங்களை நான் மணவாளனாக ஏற்ற நாளில், மன்னர் அவையிலே தங்கட்கு ஓர் இடம் கிடைக்கும் என்று கூட எண்ணம் பிறந்திருக்க முடியாதே. நாட்டிலே இருந்து வந்த படைத் தலைவர்களிலே ஒருவராகத் தாங்கள் இருந்த போதல்லவா தங்களை நாயகனாகப் பெற்றேன். நாடாளும் நிலை தங்கட்கு வந்ததும், காடாள நான் துரத்தப்பட வேண்டுமா! தங்களுடைய உயர்வு கண்டு உள்ளம் பூரித்துக் கிடந்தவளல்லவா நான், என் நாதனின் வீரமும் தீரமும், பெருங்காவியமாகிறது. என் கண்ணாளனின் காலடியிலே பிரான்சு நாடே கிடக்கிறது. என் கணவனின் சுட்டு விரல் காட்டும் திக்கு நோக்கிச் செல்லும் படைச் சூறாவளியிலே, சாம்ராஜ்யங்களெல்லாம் சரணாகதி ஆகின்றன! உலகமே போற்றிப் புகழ்கிறது. என் உள்ளத்திலே கோயில் கொண்டுள்ளவனை! அவனை யாராலும் அடக்க முடியாது. ஆற்றல் மிக்கவன். அஞ்சா நெஞ்சன், என்று அவனியே புகழ்கிறது.

"எனினும், என் காதலுக்குக் கட்டுண்டு கிடப்பவர்தான் காவலன்! போர் வீரன்தானா கிடைத்தாள் இவளுக்கு? எந்தக் களத்திலே சிக்கி, காலிழந்து முடமாகப் போகிறானோ கண்ணிழந்து கபோதியாகப் போகிறானோ! இவளை மணம் செய்து கொண்டாளே, இவளுக்கென்ன எழிலுக்குக் குறைவா? என்று ஏளனமொழி பேசியோரை நான் காணும் போதெல்லாம்- எப்படிப்பட்டவன் பார்த்தீர்களா, என் கணவன், ஏமாளிகளே! மணிமுடி அவன் காலடியில், மன்னவர்கள் அவனுக்கு அடைப்பக்காரர்கள். மண்டிலங்கள் அவனுக்குப் பூப்பந்து!

"என்றெல்லாம் எண்ணிக் கொள்வேனே ஏறுநடை கொண்டவனே! எட்டுத் திக்கிலும் வெற்றிக் கொடி நாட்டியவனே! என் இதயத்துக்கு இன்பமே! வாழ்வின் ஒளியே! புதிய வையகத்தை எனக்களித்த காதலனே! என்னையா, விலக்கி விடத் துணிந்தீர்! என்னையா? உமது இன்பவல்லியையா?"

-உண்மையாகத்தானா? கெட்ட கனவொன்று காண்கின்றேனா? இல்லையேல், கெடுமதிகொண்டு என்னை உண்மையிலேயே கொடுமை செய்யத்தான் துணிந்து விட்டீரா? துரையே!

"மற்றவர்களைக் கண்டதுண்டமாக்கிக் கழுகுக்கும் நரிக்கும் விருந்திட்டு, வெற்றி வெற்றி என்று களிநடம் புரிகிறீர்! வீரனின் பொழுதுபோக்கு என்னைச் சித்திரவதை செய்வதுமா, உமக்கு ஏற்ற வீர விளையாட்டு? "கண்டதுண்டமாக்கிவிட்டால் கவலையில்லை. என்னை உயிருடன் உலவ விட்டல்லவா, ஓராயிரம் ஈட்டிகளால் இதயத்தில் குத்த முனைந்துவிட்டீர். என் கணவர் என்று களிப்புடன் உரிமையுடன், யாரை நான் கண்டு, கண்டு உளம் பூரித்துக் கிடந்தேனோ, அவரை, ஐயோ! வேறோர் மங்கை, என் மணாளன் என்று உரிமையில் கொண்டாடுவதா, அதை நான் எங்கோ ஓர் மூலையில் கிடந்து மகிழ்வதா, நான், வெட்கமும் வேதனையும் பற்றி இழுத்திட பதைபதைத்துப் புரள்வதா? மாளிகையிலும் மலர்த் தோட்டத்திலும், மாலை மதியத்தில் நீரோர் புதியவளுடன் உலவுவது, ஒதுக்கப்பட்டு, விரட்டப்பட்டு, கணவன் உயிருடனிருக்கும்போதே விதவைக் கோலம் பெற்று, நான் விம்மிக் கிடப்பதா!

"அதோ பார், பாவம், ஜோசபைன்! கணவனால் நிராகரிக்கப்பட்டவள் கலங்கித் தவிக்கிறாள், கதியற்றவளானாள், என்று மாதர்கள் என்னைக் கண்டு கசிந்துருகுகிறார்கள். கை கொட்டிச் சிரிப்பதா! அன்பரே!

எத்தனை எத்தனை இளைஞர்கள், என்னைத் தாங்கள் இன்பபுரிக்கு அழைத்துச் செல்வதற்கு முன்பு, என் இதழமுதுக்கு ஏங்கிக் கிடந்தனர், என்பதை அறியமாட்டீரோ? அவர்கள் இன்று, அரண்மனையை விட்டு விரட்டப்படும் என்னைக் காண நேரிட்டால், ஐயையோ! என்னென்ன கேலிமொழி பேசி என்னைக் கொல்வார்களோ! நெப்போலியன் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நாடு பல நடுங்கும் என்று பிறர் கூறக் கேட்டதுண்டு. இதோ, நினைத்ததும் நடுக்க மெடுக்கிறதே! சிப்பிக்குள் முத்தாகி இருந்தேனே! சிரித்துப் பேசினீர் தடுத்துப் பார்த்தேன். காதலை வேண்டினீர்; காலங்கடந்த செயல் என்று எனக்கு நானே கூறிக்கொண்டேன். இதயத்தை வென்றீர்; நானளித்த விருந்தும் நாதா! சுவையற்றதல்லவே! பயனற்றது என்கிறீர், ஓர் பாலகன் இல்லாததால், வெட்கமாகத்தான் இருக்கிறது. எனினும் நமது காதல் வாழ்வு முழுக்க முழுக்க நமக்கே சொந்தம்.

"என் இதயத்துக்கு இன்பமே! வாழ்வின் ஒளியே! புதிய வையகத்தை எனக்களித்த காதலனே! என்னை விலக்கிவிடத் துணிந்தீர்?..."

"அதிலே குழந்தை குறுக்கிடுவதையும் கர்த்தர் அனுமதிக்க மறுக்கிறார்போலும் என்றல்லவா எண்ணிக்கொண்டேன். தங்கள் மனம் மட்டும், வேறுவிதமாக எண்ணிடக் காரணம் யாதோ?

"மன்னவா! நமது காதல் வாழ்விலே 'கனி' கிடைக்கவில்லை என்பதாலே கசப்படைகிறீர்! ஒன்று நான் நினைவூட்டுகிறேன். நான் பிள்ளைக் கனி அமுது பெற்றுத் தங்கட்குத் தர முடியாத பாவியாக இருக்கிறேனே தவிர, மலடி அல்லவே! இருவரல்லவா எனக்கு மகன் உளர்! பலர் கூறினாலும் பன்னிப்பன்னிச் சொன்னாலும் பாறை உருகுமா என்று கேட்கிறார்கள் படித்தறிந்தோர்! பாகு மொழியாளே! என்று என்னைக் கொஞ்சு மொழியில் அழைத்து, களத்திலே மட்டுமல்ல, காதல் வாழ்விலே மட்டுமென்ன, - என்று கேட்பது போல என்னுடன் குலவிய

போலந்து நாட்டைச் சேர்ந்த பெண் கவிஞரான [illegible] போர்ஸ்கா என்பவர் இலக்கியப் பணிக்கான நோபல் [illegible] பெற்றிருக்கிறார். அவருக்கு வயது என்ன தெரியுமோ? 73 [illegible]

குணாளரே! என்னைக் கொல்லாதீர்! அபலையாக்காதீர்!

"நான் தாங்கிக் கொள்ள மாட்டேன் வலிவு இல்லை காதல் பொலிவினை இழந்திடத் துணிவு பிறக்காது. உள்ளம் படைத்த எவருக்கும். ஊராளும் உயர் நிலை தங்கட்குக் கிடைத்தாலும் உள்ளத்தில் உறைபவள் என்று யாரை அழைத்து வந்தீரோ, அவளையா, பதவிப் பேய்க்குப் பலியிட வேண்டும்? வேண்டாம், வேந்தே! வேண்டாம்!

"வெந்தழலில் என்னைத் தள்ளிவிட்டு நீர் மணமுள்ள சந்தனத்தை மார்பகத்தே பூசிக் கொள்ளாதீர்! என் கண்ணீரைப் பன்னீராக்கிக் கொள்ளாதீர்! என் காதலைக் கருக்கி அழிக்காதீர்! அத்தாணி மண்டபத்தில், புத்தம் புதிய பவையை அழைத்துக் கொண்டு நீர் 'ராஜநடை' நடக்கும்போது, உம்மோடு வாழ்ந்து, உமக்காகவே வாழ்ந்து உளமாரக் காதலித்து வந்த இந்த அபாக்கியவதி, பொலிவிழந்து மதிப்பிழந்து மரணப் படுகுழியைத் தேடித் தள்ளாடி நடந்து சென்று கொண்டிருக்கிறாள் என்று, உம்மாலே எண்ணாமலிருக்க முடியாது- நிச்சயமாக முடியாது.

"இறையே! அந்த எண்ணம், உம்மைச் சும்மாவிடாது! உமது கிரீடம் முள் முடியாகும்! சிம்மாசனம் சர்ப்பாசனமாகும்! கொலு மண்டபம் கொடுமைக் கூடமாகும்! இதயம் சுக்கு நூறாகும்! ஆம் தூய காதலின் மீது ஆணை, என்னை மோசம் செய்துவிட்டு, உம்மாலே, வாழ்விலே புதிய வாசம் பெற்று மகிழ்ந்திருக்க முடியாது. நாம் இருவரும், ஒருவருக்காகவே ஒருவர் படைக்கப்பட்டிருக்கிறோம்!

"தங்களை இன்று மணாளனாக ஏற்றுக்கொள்ள எவள் வருவதாயினும் தங்களிடம் காதல் கொண்டதால் அல்ல என்பதை, நான் நினைவூட்ட வேண்டுமா! ஒரு பேரரசுக்குக் காவலர் நெப்போலியன்; அவரைக் கடிமணம் புரிந்து கொண்டால், அந்தஸ்தும் அதிகாரமும், செல்வமும் செல்வாக்கும் ஏராளமாகக் கிடைக்கும் என்ற எண்ணத்தினாலே மட்டுமே ஓர் ஏந்திழை உம்மை நாடுவாள். நான், தங்களைக் கண்டு மகிழ்ந்தேனே, அதுபோல அல்ல இப்போது உமக்கு வருபவள், அரண்மனையில் உள்ள ஆபரணாதிகளைக் கண்டு மகிழ்வாள். எடுபிடிகள் கைகட்டி நிற்பது கண்டு களிப்பாள். அரச அவையிலே காத்துக்கிடக்கும் கொலுப் பொம்மைகளைக் கண்டு ஆனந்தம் கொள்வாள். உம்மைக் கண்டல்ல. நிச்சயமாக உம்மைக் கண்டு உள்ளத்தை நான் பெற்று மகிழ்ந்தேன். இப்போது வருபவள், உம்மிடம் குவிந்துள்ள உடமைகளுக்காக வருகிறாள்!

அரக்கோணத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில், முதல்கட்டமாக ரூ.350 கோடி முதலீட்டில், டயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்கான ஒப்பந்தம் (MOU) தமிழ்நாடு தொழில்வளர்ச்சி கழகத்திற்கும், தென்கொரிய நிறுவனமான 'கும்ஹோ' டயர் கம்பெனிக்கும், தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலர் திரு கே.ஏ. நம்பியார், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது (3.10.96).



"நிலை உயர உயர, நாதா, தங்கள் நெஞ்சிலே இருந்து வந்த காதல் உலர வேண்டுமா! இது எந்த வகையான நீதியோ! களத்திலே கடும் போரிடும் சாதாரணப் போர் வீரனாக இருக்கும்போது மட்டுமே நான் தங்கட்குத் துணைவியாக இருக்கத் தக்கவளோ! கொலு வீற்றிருக்கும் கோமானானதும் வேறோர் கோதைதான் தேவையோ! கார் காலத்துக்கு ஓர் உடையும் வசந்தத்தின்போது வேறோர் வகையான உடையும் அணிகிறோம்; உள்ளத்திலே இடம் பெறும் உத்தமக் காதலுக்குமா, இது? என்னாலே எண்ணிப் பார்த்திடக் கூட முடியவில்லையே! யார் மூட்டிய போதனை? எவரிடம் கற்றீர் இக் கயமையினை? எந்தக் காதகர் கலகமூட்டினார்?

"ஆற்றலரசே! இப்போது உமக்கு வந்துள்ள உயர்வு கண்டு பலருக்குப் பரிவும் பாசமும் சுரக்கும். அது உண்மை என்று எண்ணிடலாமா? விளைந்த காட்டுக் குருவிகளும், மரம் பழுத்ததும் வட்டமிடும் வெளவால்களும், வாடி இருக்கும் கொக்குகளும், வலைகட்டும் சிலந்திகளும், மனித இனத்திலேயும் இருக்கத்தானே காண்கிறோம். இந்தக் கூட்டத்தில் யாரோ தங்கள் மனதை மாற்றியிருக்கிறார்கள். வேண்டாம், வெற்றியால் ஏற்றம் பெற்ற வீரனே! என் உள்ளத்தை வேகவைக்காதீர். என்ன செய்ய முடியும் இந்தப் பேதையால் என்று எண்ணுவீர், களத்திலேயே உம்மை எதிர்த்திட யாருக்கும் ஆற்றல் இல்லை என்றால், கலகலெனப் பொல பொலவெனக் கண்ணீர் சிந்துவதன்றி வேறெதும் செய்யத் தெரியுமா இவளால் என்று எண்ணுவீர், கண்ணாளா! இந்தக் கண்ணீர், நீர் இதுவரை கண்ட படைக்கலம் போன்றதல்ல! இது கன்னெஞ்சக் கோட்டை கட்டிக் கொண்டு அதற்குள்ளே ஒளித்துக் கொள்ளும் வஞ்சகத்தையும் சுட்டுச் சாம்பலாக்கவல்ல ஆற்றல் பெற்றது.

பிதற்றுகிறாள் என்று கேலி பேசாதீர். பித்தம் பிடித்து பாரீஸ்

பட்டினத்து நெடுஞ்சாலைகளிலே நான் பழைய நாட்களை எண்ணிக்கொண்டு, காதல் சிந்து பாடிக் கொண்டு விளக்குக் கம்பங்களைக் கட்டி அணைத்துக் கொண்டும் ஆடை நெகிழ, கூந்தல் சரிய, அலங்கோல நடனமாடினாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை. மலை உச்சியிலிருந்து, கீழே உருட்டி விடப்படும் சிறு மதலையின் கதி என்னாகும்- என் மனம் அந்நிலையன்றோ பெறுகிறதே!''

-இவ்வளவும் இதற்கு மேலும் கேட்கத் தோன்றிற்று; உள்ளத்திலே ஓராயிரம் எண்ணங்கள் கொதித்தெழுந்தன. எனினும் ஜோசபைனால் ஒரு வார்த்தையும் பேசமுடியவில்லை. ''ஹா'' என்றாள். மயக்கமேலிட்டது கீழே வீழ்ந்தாள். மூச்சுப் பேச்சற்றுக் கிடந்தாள். நெப்போலியனும் திகைத்துப் போனான்.

ஜோசபைனுக்குக் குழந்தை பிறக்கவில்லை; பிரான்சுப் பேரரசுக்கு, இளவரசன் இல்லை!

நெப்போலியன், சக்கரவர்த்தி. நாட்டுக்கு வெற்றியும் கீர்த்தியும் தேடிக் கொடுத்தான். புரட்சி பொசுக்கப்பட்டுவிட்டது. புது முறையை வெட்டி வீழ்த்தியாகிவிட்டது. பேரரசனாகிவிட்டான். போர் வீரனாகப் பயணத்தைத் துவக்கிய இந்த ரணகளச் சூரன், பேரரசன், பெற்றுத் தரவேண்டிய மற்றோர் சாதனை உண்டே, பரம்பரை பழக்கப்படி அந்த வெற்றியை நெப்போலியன் தேடித்தரவில்லை. குழந்தை இல்லை. வாரிசு இல்லை!

வல்லமை முழுவதும் செலவிட்டு ஆபத்துக்களைத் துரும்பாக எண்ணிப் போரிட்டுப் பெற்ற பேரரசு, நெப்போலியன் வாரிசு இன்றி இருந்தால், என்ன கதியாகும்? நெப்போலியனுடைய நெஞ்சிலே இந்த நச்சு நினைப்பு நுழைந்தது. வேகமாக வளர்ந்தது. விபரீதமான முடிவுக்கு வந்துவிட்டான். ஜோசபைனை விலக்கிவிடுவது, ராஜகுமாரி ஒருவளை மனைவியாகக் கொள்வது; அவள் தாயாவாள் பிரான்சுக்கு ஓர் இளவரசனை ஈன்றெடுத்தளிப்பாள். பரம்பரை நிலைக்கும். என்று எண்ணினான்.

★மொழிப்பற்று இருப்பது
வருந்தத்தக்கதல்ல;
போற்றத்தக்கது.

-அறிஞர் அண்ணா

துணிந்து இதை நிறைவேற்றித் தீருவது என்று செயலில் இறங்கிவிட்டான். நெப்போலியன் ஒரு முடிவு எடுத்துவிட்டால் தடுத்து நிறுத்த வல்லவர் யார்?

எப்போதுமே புகழொளியைத் தேடித் திரிந்துவந்தவன் நெப்போலியன், பேராசைப் பெரும் பேய், பதவிமோகம், அவன் உள்ளத்தில் தழலாகிக் கிடந்தது. காதல் மட்டுமென்ன, அவன் திட்டத்தின் வெற்றிக்குத் தடையாக இருந்தால், கசக்கி வீசப்படத்தானே வேண்டும்? அதுதான் நெப்போலியன் முறை, அதை அவள் எங்ஙனமறிவாள். அவள் துணைவியாகி அவன் அரசனாக்கப்பட்டதும் அரசியாக விளங்கிய அழகி, ஜோசபைன் தன் கணவர், எதை வேண்டுமானாலும் செய்வார். இதயத்தை வேறு எந்தக் காரியத்துக்கும் இரும்பாக்கிக் கொள்வார். ஆனால் தன்னைப் பொறுத்த மட்டில், அவன் எப்பொழுதும் காதலைப் பொழியும் கண்ணாளனாகத்தான் இருப்பான் என்று எண்ணிக் கொண்டாள்.

பேதையே, பேதையே! பேரரசு அல்லவா இப்போது அவனுக்குப் பெரிதாகத் தெரிகிறது. உன் கண் தந்த கவிதையை அவன் இப்போது கேட்டு இன்புற முடியுமா! சக்கரவர்த்தி நெப்போலியன்! நெப்போலியன் உன்னிடம் காதல் வரம் கேட்டான் காரிகையே இப்போது சக்கரவர்த்தி ஒரு ராஜகுமாரியைக் கேட்கிறான். இளவரசன் வேண்டுமாம்!

பட்டத்தரசன், வாரிசு இன்றியாபோவது, அரசன் மகன் அரசனாக வேண்டும்! அந்த 'ஐதீகத்தை'ப் பாழாக்குவானா? கண்பொத்தினானே கரம் பற்றினானே, என்று எண்ணிக் கிடக்கிறாயே, அவை காதல் விளையாட்டு! சிருங்கார சாஸ்திரம்! இப்போது அவன் 'ராஜ நீதி'யின் படி நடக்கிறான் என்று ஜோசபைனுக்குக் கூறக் கூடியவர்கள் யார்? அவளைச் சூழ இருந்த சுந்தரிகள் யாவரும் திகைத்துப் போயினர். நெப்போலியன் இந்தப் பயங்கர முடிவு எடுப்பான் என்று எவரும் எண்ணவில்லை.

"என் கண்ணாளனின் காலடியிலே பிரான்சு நாடே கிடக்கிறது; என் கணவன் சுட்டு விரல் காட்டும் திக்கு நோக்கிச் செல்லும் படைச் சூறாவளியிலே சாம்ராஜ்யங்களெல்லாம் சரணாகதி அடைகின்றன!"

ஜோசபைனுக்கும் நெப்போலியனுக்கும் அறிமுகம் கூட ஆகாதிருந்த சூழ்நிலைதான் முதலில்.

புரட்சி மலர், நல்லாட்சி எனும் மணம் வீசும் என்று கருதப்பட்டது. பிறகு, அது நச்சு மலராகிவிட்டது என்று கூறப்பட்டு, மக்களைக் கட்டுத் திட்டத்துக்கு அடங்கி நடந்திடச் செய்யும் படைத் தலைவர் ஆட்சி புகுந்துவிட்ட நேரம். பாரிஸ் பட்டினத்துப் பதட்டக்காரர்களை அடக்குவதற்காக நெப்போலியன் நியமிக்கப்பட்டிருந்த சமயம்.

அப்போது ஒருநாள், அவன் அலுவலகத்தில், ஒரு வாலிபன், பள்ளி மாணவப் பருவத்தினன். வந்தான். வந்தனமளித்தான். பணிவுடன் ஒரு மனுச் செய்து கொண்டான்.

"என் தந்தை, பெருமைக்குரிய அதிகாரியே! புரட்சிக்காரரால் கொல்லப்பட்டுப் போனவர். அரசியல் அமளிகளில் அக்கரை காட்டாத ஓர் கண்ணியமான குடும்பம், எம்முடையது. ஒழுங்கை நிலைநாட்டும் பேராற்றலால், நாட்டிலே அமைதியை ஏற்படுத்திய தங்களிடம் நான் வேண்டுவதெல்லாம், என் தந்தையாரின் உடைவாள் திருப்பித் தரப்பட வேண்டும். எம்மிடம், என்பதுதான். அவருடைய வீரவாள், எங்கள் குடும்பக் கீர்த்திக்கோர் சின்னம்! அந்தக் கருவூலத்தை மீட்டுக் கொண்டு வரும் பணியில் மகன் நான் ஈடுபட்டேன். அருள் கூர்ந்து, வாளைத் திருப்பித் தர உத்தரவளிக்கக் கோருகிறேன்'' என்றான் வாலிபன். சிறுவனென்றே கூறத்தகும் பருவத்தினன்.

நெப்போலியன், வாளைத் தந்தான். முழங்காற்படியிட்டு, அதைப் பெற்றுக் கொண்ட அந்தச் சிறுவன் அதனை மார்புறத் தழுவினான். கண்களிலே அதனை ஒத்திக் கொண்டான். நெஞ்சு நெக்குருக அதனை நோக்கினான். களிப்புக் கண்ணீர் வழிந்தது. நெப்போலியனுக்கு ஆச்சரியமாக இருந்தது. தந்தையின் உடைவாளைத் தனயன் இவ்வளவு போற்றிப் பூஜிக்கிறானே! குடும்பக் கீர்த்தியிலேதான் இவனுக்கு எவ்வளவு பற்று எத்துணைப் பெருமை! மிக உயர்தரமான குடும்பமாக இருக்க வேண்டும். இத்துணை மாண்பு பெறும் வகையில் இவனை வளர்த்துள்ள மாதா, வணங்கப்படத்தக்கவள், என்று எண்ணினான்.

அவளைக் கண்டான்; காதலிக்கத் தக்கவள் என்று உணர்ந்தான்.

ஜோசபைன், கணவனிழந்தவள். கண்ணின் மணிகள் போல் இரு புதல்வர்களுடன் எளிய, ஆனால் பிறர்கரம் எதிர்பாராத நிலையில் வாழ்ந்து வந்தாள்.

அவளுடைய கவர்ச்சியை, விதவைக் கோலம் குலைத்து விடவில்லை; கட்டழகு கெடாத நிலையில், ஆயினும் கண்வலை வீசாக் காரிகையாக அவள் வாழ்ந்து வந்தாள். அந்தக் கவின்மலரைக் கண்டான் நெப்போலியன். உள்ளத்தை அர்ப்பணித்தான்.

அவன் அங்கு சென்றது, ஒரு மூதாட்டியைக் காண. முதுமைக்

"கார்னர் டிக்கட்டா இரண்டு கொடுங்க?" என்று திரையரங்கில் கேட்டதன் விளைவு!

சென்னையில், பொதுவிநியோகத் திட்டச் சீரமைப்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையத்தைத் தொடங்கி வைத்தார். அருகில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு வே. தங்கபாண்டியன் ஆகியோர் உள்ளனர் (25.9.96).

நெப்போலியன், ஜோசபைனிடம், கூறினான்.

"சாம்ராஜ்யத்தின் நலனுக்காக, சரசாங்கி! நான் உன்னை விலக்கிவிட்டு வேறோர் அரச குடும்பத்து அணங்கைத் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துவிட்டேன். பிரான்சுக்கு ஓர் இளவரசன் தேவை, அவனை அளிக்கும் கடமை எனக்கு இருக்கிறது" என்றான்.

ஜோசபைன், தன் 'இல்லற ஜோதி'யாகக் கிடைக்க வேண்டுமென்று, மனுவிட்டு நின்றவன்தான் இதே நெப்போலியன். அவள், இவனை அங்காடியில் சந்தித்து மயக்கினவளல்ல. மலர்ச் சோலையில் கண்ணில் பட்டுக் கருத்தில் சென்று நுழைந்தவளல்ல. ஜோசபைன், இருக்குமிடம் அறிந்து சென்று, முகமன் கூறி, மறுத்துவிடக் கூடாது என்று மண்டியிட்டு, அவளை மணமுடித்துக் கொண்டவன், இந்த நெப்போலியன்.

அந்த ஜோசபைனைப் பெறுவதற்கேற்ற சூழ்நிலை அமைந்த கட்டமே, பாவலர்கள் கருத்துக்குச் சுவைதரும் காவியம் போன்றது.

இதோ, துவண்டு வீழ்ந்து கிடக்கிறாள், காதலன் காலடியில், வேறோர் அரண்மனையில், தாதியர் புடைசூழ ஓர் அரசிளங்குமரி, அலங்காரவதியாகிக் கொண்டிருக்கிறாள். கொடியவனுக்கு மனையாட்டியாவதற்காக. பிரான்சு சக்கரவர்த்தினியாவதற்காக!

கீழே, மூச்சுப் பேச்சற்றுக் கிடக்கும் காரிகை, இந்தக் களம் சுற்றிக் கடும் போரிடும் கன்னெஞ்சக்காரனுக்குத் தன் இதயத்தைக் காணிக்கையாக்கித் தந்தாள்! வரப் போகிறாள் வேறோர் வனிதை, அரண்மனையில் வளரும் அலங்காரப் பொம்மை, காதலை அளிக்க அல்ல. 'வாரிசு' பெற்றுத்தர!

பிரான்சு நாட்டுப் பெரிய அதிகாரிகள், ராஜதந்திரம் அறிந்தவர்கள். பெண் கேட்கச் சென்று, அந்த 'அன்னத்தை'க் கொண்டு வரப்போகிறார்கள். இதோ, சிறகொடிந்த மாடப் புறா கீழே சாய்ந்து கிடக்கிறது. நெப்போலியன் இந்தப் பேசும் புறாவைக் கொள்ளப் பேசாதனவெல்லாம் பேசினான், முன்பு.

கோலத்தில் ஜெபமாலையை உருட்டிக் கொண்டு கிடக்கும் அம்மையைக் காணச் சென்றான். அழகு மயிலைக் கண்டான்! மாண்புள்ளவன் உன் மகன்! மண்டிலம் அவன் போன்றோரை அளித்திடும் மாதர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது என்று முகமன்கூறச் சென்றான். அவன் கண்டதோ விரித்தாடாவிடினும், கலாபத்தை இழக்காத நிலையில் உள்ள மயிலாளை! முகமன் கூறச் சென்றவன், காதல் பேசிடும் நிலை பிறந்தது.

அவள் அவனை உடனே ஏற்றுக் கொள்ளவில்லை.

ஈராண்டு மூத்தவள் அவனினும்; இரு புதல்வர்களுக்குத் தாய்; எனவே, போர் வீரனுடைய காதலை ஏற்றுக் கொள்வதா, எத்தனையோ அலைகள் இதுபோல எழும் என்று கருதி அலட்சியமாக இருந்துவிடுவதா என்று அமைதியாக இருந்தே எண்ணிட முடிந்தது. முடிவில் தன்னை நெப்போலியனுக்கு அர்ப்பணித்தாள்.

களத்திலே கடும்போரிட்டுக் களைத்துப்போய், இரவு படுக்கப் போகும்போது கூட, நெப்போலியன், ஜோசபைன் பற்றிய நினைவு கொண்டு, காதற் கடிதங்கள் தீட்டுவான். அவ்வளவு பிரேமை அவனுக்கு. இதோ வெட்டிச் சாய்த்துவிட்டான். பட்டத்தரசியாக வேறோர் முகவெட்டுக் காரியைப் பெறத் திட்டமிட்டுவிட்டான்.

நெப்போலியன், தன் 'பிரதாபத்தை'ப் பெரிதாக்கிக் கொள்வதற்காகக் கொடுமை பல புரிந்தான் என்று வரலாற்றுச் சுவடியினர், காரணம் பல காட்டிக் கூறுகின்றனர். அவன் செய்த எல்லாக் கொடுமைகளிலும் ஜோசபைனுக்கு அவன் இழைத்த துரோகம் போன்றது வேறெதுவு மிராது.

ஜோசபைன், அரண்மனையை விட்டு வெளியேற வேண்டிய நாள் குறிக்கப்பட்டுவிட்டது. அதற்கான உத்தரவு பிறந்துவிட்டது.

கண்ணீருக்குக் கட்டுப்படுபவனல்ல. பேராசைப் பேய்க்கு இடமளித்துவிட்ட நெப்போலியன் பேரரசன்!

"ஒதுக்கப்பட்டு, விரட்டப்பட்டு, கணவன் உயிருடன் இருக்கும்போதே விதவைக் கோலம் பெற்று நான் விம்மிக் கிடப்பதா?"

நீண்டதோர் அங்கியால் தன்னை முற்றிலும் மறைத்துக் கொண்டாள் அந்த மாதரசி.

அரண்மனைப் பணிப் பெண்கள், அழுத கண்ணினராய், மாடிப்படியில் நின்றனர்; ஏதும் பேசவில்லை. பேசும் நிலையில் இல்லை. செல்கிறேன் என்று கரமசைத்தாள். அரண்மனை விட்டு வெளியே வந்தாள்.

ஆறு குதிரைகள் பூட்டப்பட்ட வண்டி அவளுடைய பயணத்துக்காகக் காத்துக் கிடந்தது. ஏறினாள். சென்றாள். இதயத்தைத் தந்தவள், இதயமற்றவனுடைய கொடுமையைச் சுமந்துகொண்டு சென்றாள். அந்த நாளை, யார்தான் நினைக்கும்போது நெஞ்சு நெக்குருகாமல் இருக்க முடியும்.

ஜோசபைன், மனம் குமுறினாள் வேறென்ன செய்ய முடியும்? நெப்போலியனை, எதிர்த்தோர்தான் பிழைக்க முடியாதே! அதிலும் இவளோ, பாவம், பெண் பேதை, என் செய்வாள்!

சுடச்சுடப் பேசவும், அவனுடைய சூது மதியினைச் சாடவும், அவளுக்கு உரிமை உண்டு. எனினும் அவள், இதயத்தை அர்ப்பணித்துவிட்டவள், எனவே, தாங்கிக் கொண்டாள். கொடுமையைத் தாங்கிக் கொள்வோம், காலம் பாடம் புகட்டட்டும் என்று எண்ணிக் கொண்டாள் போலும்.

புதிய சக்கரவர்த்தினி கொலு மண்டபம் நுழைந்தாள். ஆஸ்திரிய நாட்டு அரச குமாரி மேரி லூரசியா - கொலுமண்டபம்தான் நுழைந்தாள். கொற்றவன் நெஞ்சிலல்ல.

நெப்போலியன் பெற்ற புகழொளியை அவள் தன் மாளிகைக்கு மணிவிளக்காக்கி மகிழ்ந்தாள். கண்களிலே காதல் ஒளி பூத்திடவில்லை.

அவள் கடமை, பட்டத்தரசியாக இருப்பதுதானே! அதை அவள் வாய்ப்பு இருந்தவரையிலே செய்தாள்.

நெப்போலியனுக்கு இறங்கு முகம் கண்டது. மேரி, அவனை விட்டு அகன்றுவிடத் துணிவு பெற்றாள். நெஞ்சில் இடமளித்திருந்தால்தானே, அகற்றிவிட இயலாது. மேரிக்கு அந்தச் சங்கடம். சஞ்சலம் எழவில்லை.

நெப்போலியனுடைய வீழ்ச்சி,

எழுச்சியைவிட வேகமாக உரு வெடுத்தது.

தொட்டதெல்லாம் கெட்டிடக் கண்டான்; திக்கெலாம் பகை முண்டிடக் கண்டான்; வெற்றி யன்றி வேறு அறியாத படை, நிலைகுலையக் கண்டான். ரஷிய நாட்டுக் கடுங்குளிர் கொட்டிடக் கண்டான்; கொற்றம் அற்று வீழ்ந்து விடும் என்று ஆருடம் கூறினர்; மற்றுமோர் தீரமான தாக்குதல். மகத்தான ஒரு வெற்றி, மீண்டும் புகழொளி ஓங்கும் என்று எண்ணி எண்ணி ஏமாந்தான். நொந்த உள்ளத் துடன் கிடந்தான்– வெந்த உள்ளத்துடன் காட்டு மலர் போல வாழ்க்கையை நடத்திவந்த ஜோசபைன் தன் காதற் கணவர்க்கு வந்துற்ற கதியறிந்து கசிந்து கண்ணீர் மல்கினாள். அவனும் அரசபோகம், அது ஊட்டிய அகந்தை, அதன் காரணமாகப் புதுப்பெண்ணைத் தேடிய அக்ரமம், அந்த அக்ரமத் திட்டத்துக்காக ஆசைக்கினிய வளைத் துரத்திய கொடுமை இவைகளை எண்ணினான். கலங்கியறியாதவன், கலங் கினான்.

ஜோசபைனுக்குத் தன் நிலை குறித்துக் கடிதமும் அனுப் பினான்.

அன்று, அரண்மனை மாடி யிலிருந்து இறங்கியபோது அடைந்ததைவிட அதிகமாக வருத்தமுற்றாள், ஜோசபைன்.

ஐயோ! அவருக்கா இந்தக் கதி? அவனி புகழப் பவனி வந்தவருக்கா இந்த நிலை? என்றெல்லாம் எண்ணித் துக்– கித்தாள்.

'பறந்தோடி வருவேன். தங்கள் பக்கமிருந்து பணிவிடை புரிவேன். தங்கள் துக்கத்தைப் பங்கிட்டுக் கொள்வேன்,



'தனிமையில் உண்மை காணல்' என் பதற்குப் பொது விவகாரங்களில் பங்கேற்கக் கூடாது என்று அர்த்தமல்ல; நாம் அதைச் செய்தேயாக வேண்டும். அப்பணியை அந்தந்த உணர்வில் செய்ய வேண்டும்.

துரையே! என்னால் முடியும், என் இதயம் அதற்கு இட மளிக்கும். ஆனால், உலகம் என்ன கூறும்? உரிமை கொண் டவன் வேறொருவள் இருக் கிறாளே, உதறித் தள்ளப்பட்ட நான், தங்களிருப்பிடம் வருவது முறையாகாதே. இதை எண்ணியே கலக்கம் அடைகிறேன்'– என்ற கருத்துப்பட, கடிதம் அனுப்பவும் அந்தக் காரிகைக்கு நற்பண்பு இருந்தது. இவ்வளவு கொடுமை களை இழைத்தவனிடம், கொண்ட காதலை அவள் மறந்தாளில்லை.

நெப்போலியன், பொறியில் சிக்கிய புலியானான். பொறி பலமானது மட்டுமல்ல. புலியின் பல்லும் நகமும்கூடச் சுடர் மழுங்கிவிட்ட நிலை.

எல்பா என்னும் இடத்தில் நெப்போலியன் இருக்கிறான் - வலிவிழந்து, பொலிவற்று, இருள் சூழ்ந்த நிலையில்.

ஜோசபைன், நோய்வாய்ப் பட்டுக் கிடக்கிறாள். நாளெல்லாம் அவன் நினைப்பு போலும். இரவெல்லாம் பழைய நாட்கள் பற்றிய கனவு போலும். மெலிந்து கிடந்தாள். பூங்கொம்பு பட்டுப் போகும் என்பது தெரிந்து விட்டது.

அங்கு எல்பாவில் நெப் போலியன், மீண்டும் இவன் எழுவது ஏது! 'அணைந்தது இவன் ஆதிக்கம்!' என்று பலரும் கூறிடத்தக்க நிலையில் கிடக் கிறான்.

நெப்போலியன், எல்பா சென்று நான்கு கிழமைகள் நகர்ந்தன. நோய், ஜோசபைனை அரித்து விட்டது – மனோகரமான ஓர் மாலை, ஜோசபைன் உயிர் பிரிந்தது.

உயிர் பிரியும் போது, அவளு டைய உள்ளத்திலே நெப்போலி யனின் நினைவு, கரத்திலே நெப்போலியன் உருவம் பொறிக் கப்பட்ட பதக்கம், உதட்டிலே, "நெப்போலியன்!... எல்பா... நெப்போலியன்!"

– 'பூம்புகார்' வெளியீடான 'செங்கரும்பு' நூலிலிருந்து

தெரிந்துகொள்ளுங்கள்

★ இந்தியாவில் உத்திரப் பிரதேசம், பீகார், அரியானா, அருணாசலப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் வாழும் பெண்களே அதிக அளவில் கருத்தரிக்கின்றனர். அதிகக் குழந்தைகள் பெறும் கணக்கில் உத்திரப்பிரதேசப் பெண்களே முன்னிலை வகிக்கின்றனர். அங்கே ஒரு பெண்ணுக்கு 4.8 என்ற கணக்கில் குழந் தைகள் உள்ளனவாம்!

★ தமிழ்நாட்டில் உள்ள 3200 கிராமங்களுக்குப் புதிதாகத் தொலைபேசி இணைப் புகள் தரப்படவுள்ளன. இதில், ஓர் அழைப்பிற்கு 50 காசு மட்டுமே வசூலிக்கப் படும்!

★ வெள்ளைப் பூண்டு, புற்று நோயைத் தடுக்குமாம். பெரியவர்கள் ஒரு நாளைக்கு 10 கிராம் பூண்டு சாப்பிட்டுவந்தால் புற்று நோய் வராமல் தடுக்கலாம் என்று தைவான் மருத்து வர்கள் அறிவித்திருக் கிறார்கள்.

★ பெண் கல்வி இங்கு மட்டுமல்ல வளரும் நாடு களிலும் வளராமலே இருக் கிறது என்று தெரிவித் திருக்கிறது யூனிசெப் நிறுவனம். பெரும்பாலான வளரும் நாடுகளில் ஆண் களுடன் சேர்ந்து படிக்கும் பெண்கள் மரியாதைக் குறைவாக நடத்தப்படு கின்றனர். இனக் கவர்ச்சி முக்கிய இடம் வகிக்கிறது. கல்விக் கூடங்கள் வெகு தூரத்தில் அமைந்திருப்பதும் இதற்குக் காரணம். இதை உணர்ந்து, தக்க நடவடிக் கைகள் மேற்கொண்டு மகளிர் மேம்பாடு பெறச் செய்யவேண்டும் என்றும் அந்தச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. பெண் களுக்கு எதிரான குற்றங்கள் அண்மைக் காலமாக ராஜஸ் தானில்தான் அதிகரித்து வருகிறது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.



★ ரஷ்ய விண்வெளி ஓடம் மூலம் 188 நாட்கள் வானவெளியில் வலம்வந்த வீராங்கனை சான்னோான் லூசிட் என்பார், அதே அட்லாண்டிஸ் ஓடத்தில் பூமிக்குத் திரும்பினார். அவருக்கு வயது 53.

★ குறிஞ்சிப் பாட்டில் 99 வகைப் பூக்கள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை யாவையும் சேகரித்துப் பதப்படுத்தப்பட்டு, சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்படும். அப்பூக்களின் தற்போதைய பெயர், அறிவியல் பெயர் ஆகிய வையும் அத்துடன் குறித்து வைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வடலூர் வள்ளலாரின் மானிட தர்மம்

வடலூர் இராமலிங்க அடிகளார், மானுட தர்மத்தின்படி ஒழுகுதல் வேண்டும் என்று, தன்னை மானிட தர்மத்திற்கொப்ப உலகம் அறியா இளைஞராக இருக்கும்போதே மாற்றிக்கொண்ட பெருமான் ஆவார்.

உயிரில் உயர்ந்தது தாழ்ந்தது என்பதில்லை! வலியோன் எளியோனை அடக்கியாள்வது தகுமா? சாதியெனும் மடைமையினால் மானிட தர்மம் தகர்க்கப்படுவது நீதியாகுமா? என்று எடுத்தியம்பிச் சுட்டிக் காட்டியவர் அவர்.

வள்ளல் இராமலிங்க அடிகளாரின் அன்புள்ளம் ஏழை எளியவர்களுக்காக எப்படி வாட்டமுறுகிறது பாருங்கள்

"சோடில்லை மேல்வெள்ளைச்
சொக்காய் இல்லை நல்ல
சோமன் இல்லை

பாடில்லை கையில்
பணமில்லை தேகப்
பருமனில்லை

வீடில்லை யாதொரு வீறாப்பும்
இல்லை விவாகமது
நாடில்லை நீ நெஞ்சமே! எந்தவாறு
இனி நண்ணுவையே!"

என்று ஏழ்மையை மனம் வெதும்பிக் கூறுகிறார். இக்கருத்து எவ்வளவு ஆழமாக வறுமையில் உழலும் பிற உயிர்களின் நிலையினை அகழ்ந்தெடுத்து உணர்ந்து தன்னையும் உட்படுத்தி விவரிப்பது மனித சமுதாயச் சீரழிவுதனை வெட்ட வெளிச்சமாகக் காட்டுகின்றது.

ஏற்றத் தாழ்வுகளைக் காணச் சகியாத அக்காருண்யமூர்த்தி, ஏழ்மையின் நிலையினை வலிமையானவர்கள் எப்படித் தனக்கு அடக்கமாக அடக்கி வைத்துள்ளனர் என்பதையும் நமது மனக் கண்முன் நிழல்படமாக எடுத்துக் காட்டுகின்றார்.

"வட்டிமேல் வட்டிகொள்
மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற
மார்க்கத்தை அறியீர்
பெட்டிமேல் பெட்டிவைத்
தாள்கின்றீர் வயிற்றுப்
பெட்டியை நிரப்பிக்கொண்
டாட்டியுள் இருந்தீர்

பட்டினி கிடப்பாரைப்
பார்க்கவும் நேரீர்
பழங்கஞ்சி ஆயினும்
வழங்கவும் நினையீர்
எட்டிப்போல் வாழ்கின்றீர்
கொட்டியினைப் போல
எத்துணை கொள்கிறீர்
பித்துல கீரே!"

வட்டிமேல் வட்டி வாங்கி, பெட்டி நிறையப் பூட்டி வைத்துக்கொண்டு தான் மட்டும் உண்டு உடுத்தி ஏகபோக வாழ்க்கை வாழும் தனவான்களே!

பட்டினியாய் வாழும் பாமர மக்களுக்குப் பசியாற பரிமாற வேண்டாம் பழைய கஞ்சியையாவது ஊற்றி அவர்களுடைய பசியை ஆற்றவாவது நினைத்ததுண்டா?

இதுபோன்று எளியவரை வதைப்பதினால் கடைசியில் கொண்டுபோவதுதான் என்ன?

எட்டி மரம் காய்த்துப் பழுத்தாலும் சரி கொட்டியைப் போன்று ஆழப் பரந்து தர்மத்தை உணராத மாக்களாக இருப்பதினால் உலகத்திற்கு என்ன பயன்? என்று வள்ளலார் வினவியுள்ளார்.

வடலூர் வள்ளல் பெருமான் பிறரைச்சாடும் அதே சமயம் அவர்கள் திருந்திடல் வேண்டும் என்னும் நோக்கில் தன்னுள்ளத்தின் வாட்டத்தையும் வெளிக்கொணர்ந்து வருத்திக் கொள்கின்றார்.

ஏற்றத்தாழ்வுகளைப் பொறுக்கமுடியாத காருண்யமூர்த்தி மானிட வர்க்கத்தில் எத்தனைப் பிரிவுகள்? இதனால் மனிதருக்கு என்ன நன்மை? சாதி சமய சச்சரவுகளினால் ஏற்படுகின்ற அவலங்களை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? என்றெண்ணித் தன்னுடைய உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகின்றார்.

சாதியிலே, மதங்களிலே
சமயநெறிகளிலே,
சாத்திரச் சந்தடிகளிலே
கோத்திரச் சண்டைகளிலே
ஆதியிலே அபிமானத்து
அலைகின்ற உலகீர்!
அலைந்து அலைந்து
வீணேநீர் அழிதல்
அழகலவே!..."

"ஆதியில் உண்டாக்கிய சாதி சமய சாத்திரங்களிலே மனதைச் செலுத்தி வீணே அமைதியுற்று அலைவதனால் என்ன பயன்? அதனால் கண்ட பயன் என்ன? இதையெல்லாம் விடுத்து சன்மார்க்கத்தின்பால் மனதைச் செலுத்தி தெளிவினைப் பெற்றுத். தெளிந்திடுவீர்!" என அறிவுறுத்தி அழைக்கின்றார் வள்ளலார்.

வள்ளல் பெருமான் ஆன்மீக வாதியாக இருந்தாலும், நாட்டு மக்களின் நலனில் மிகவும் அக்கரை கொண்டவர் என்பதை அவரது பாடல்களின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

ஆகையால் மாசற்று மானுட தர்மத்தைக் கடைப்பிடித்தவர் வள்ளல் இராமலிங்கப் பெருமானாரேயாகும்.

மனித சமுதாய ஏற்றத் தாழ்வினால், பணம் படைத்தோர் படாடோபமாக வாழ்ந்து, பணமற்ற பாமர மக்கள் வசதியற்று வறுமையினால் வாடிடுவதைக் கண்டு வள்ளலாரின் பஞ்சு நெஞ்சம் பற்றி எரிவதைப் பாடலின் வாயிலாக எப்படி வெளிப்படுத்துகின்றார், பாருங்கள்

"உள்ளலேன் உடையார் உண்ணவும்
வறியார்

★ பேதம் என்றால் உருவ பேதம் அல்ல; நடப்பிலும் நட்பில் ஏற்படும் பயனிலும் உள்ள பேதமேயாகும்.

-தந்தை பெரியார்

"ஹலோ, வெண்ணெய்க் கடைக்காரர் தானே பேசறீங்க? என்ன இது அரை கிலோ வெண்ணெய் கேட்டனுப்பினா என் பையன்கிட்டே கால் கிலோதான் கொடுத்தனுப்பியிருக்கீங்க!"

"அரை கிலோதானே கொடுத்தனுப்பினேன்; சரியா நிறுத்துப்பாருங்க!"

"பார்த்துட்டுத்தான்யா பேசறேன், குறைவாகத்தான் இருக்கு!"

"அப்ப இனிமே ஒண்ணு செய்யுங்க; வெண்ணெய் வாங்க வர்றதுக்கு முன்னேயும், வாங்கிட்டு வந்தப்புறமும் ஒங்க பையனை ஒருதரம் எடை போட்டுப்பாருங்க, உண்மை தெரியும்!"

உறுபசி உழந்துவெந் துயரால்
வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ
மற்றிதை நினைத்திருந் தோறும்
எள்ளலேன் உள்ளம் எரிகின்ற துடம்பும்
எரிகின்ற தென்செய்வேன் அந்தோ!
கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன்
இந்தக்
குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்!"

வசதி படைத்தோர் உண்டு கொழுப்பதும், வசதியறறோர் வாடித் துயர் உறுவதும் என்னேகொடுமை? இக்கொடுமைகளை எப்படிப் பார்த்துக் கொண்டிருப்பது?

இக்கொடுமையைப் பார்க்குங்கால் என் உள்ளமும் உடலும் எரிகின்றதே என் செய்வேன்? இக்குறைகளை உடனடியாக அகற்றிடல் வேண்டும் என்கிறார் வள்ளல் பெருமான்.

ஆன்மீகப் பெரியோர்கள் பலரும் வறுமையைச் சாடியிருக்கிறார்கள். ஆனால் வள்ளலார் மட்டும் வறுமையின் கொடுமையைக் கண்டு தன்னுடைய நெஞ்சும் உடலும் எரிகிறது என்கிறார்.

பிறர் படும் துயரை தான் படும் துயராக நினைத்து வேதனைப்படுகிறார் என்றால், வள்ளலாரின் மாசற்ற மானிட தர்மத்தை நம்மால் உணர முடிகிறதல்லவா!

-வடலூர் இராமலிங்கர்
பிறந்தநாள் நினைவாக...
'கார்த்திகா பப்ளிகேஷன்ஸ், வடபழனி, சென்னை 26 வெளியிட்டுள்ள அருட்பெருஞ்சோதி வள்ளலார்' என்ற நூலிலிருந்து.

'சென்னை'க்கு டில்லி ஒப்புதல்

☆ மைய அரசு, 'மெட்ராஸ் சிட்டி' என்னும் பெயரை 'சென்னை' என்று மாற்றி அழைப்பதற்குத் தனது இசைவினை அளித்துள்ளது.

☆ மாநில அரசும், 'மெட்ராஸ்' சிட்டி என்ற பெயரை மாற்றி, 'சென்னை' என்று 30.9.96ஆம் தேதியிலிருந்து அழைக்கப்படவேண்டும் என்பதற்கான அறிவிக்கையினை 30.9.96 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிட்டுள்ளது.

☆ இதற்கான அரசு ஆணை எண் 1002 ஆகும்.

"ஏடாயிரங் கோடி
எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்த விரகன்"

ஆவார். சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம் பகம் என்பன போன்ற பன்னூல்களைப் படைத்துத் தந்துள்ள பாவலர் அவர். ஒரு பொருளுடைய பல சொற்களைக் கொண்டு பாடல் இயற்று வதிலே பேராற்றல் மிக்கவராக விளங்கிய கவிராயர் இராமன் என்னும் வள்ளலைக் காணச் சென்றிருந்தார்.

அவ்வள்ளல் யானையைப் பரிசாக வழங்கினான் அவருக்கு. அப்பரிசினைப் பெற்றுக்கொண்ட கவிராயர், உடனே ஒரு பாடல் பாடித் தம்முடைய புலமையினை அவ் வள்ளலிடம் காட்டினார். பாடல், அவர் தம் மனைவியிடம் கூறுவது போன்று அமைந்துள்ளது.

பாணன் மனைவியாகிய பாடினி இவரை நோக்கி, "பாணரே! இந்நில உலகையும் விண்ணுலகையும் தனது புகழுக்கு எல்லையாக உடைய இராமன் என்னும் வள்ளலைப் பாடி நீர் என்ன கொண்டு வந்தீர்? என்றாள். நானோ, புதியதாகிய 'களபம்' என்றேன் அவளோ சந்தனம் என்று புரிந்துகொண்டு, 'உடலிலே பூசிக்கொள்ளும்' என்று மொழிந்தாள், 'யானை' என்ற பொருள்படும் மற்றொரு சொல்லாகிய

இலக்கியத்தில் சொல்லாடல்!

முனைவர் நெல்லை ந. சொக்கலிங்கம்

பாலாற்றங்கரையில் உள்ள பூதூரில் ஒரு புலவர் தோன்றினார். பிறக்கும் போதே அவருக்குக் கண்பார்வை இல்லை. பிற்காலத்தில் சிறந்த பெருங்கவிஞராக அவர் விளங்கினார். எனவே அக்கவிஞர் பெரு மகனைப் பொதுமக்களும் சான்றோர்களும் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்றே சிறப்பு அடைமொழி கொடுத்து அழைக் கலாயினர். அவர்,

'மாதங்கம்' என்று சொன்னேன். அவள் அதை 'நிறை பொன்' என்று கருதி, 'நாம் வறுமையில் இருந்து தப்பிப் பிழைத்தோம்; இனிமேல் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்வோம்!' என்று மகிழ்ந்து கூறினாள். நானோ எழுச்சியில் சிறந்த 'வேழம்' என்று சொன்னேன். என் மனைவி அதனைக் 'கரும்பு' என்று கருதிக் கொண்டு 'தின்னுங்கள்' என்று விரைந்து சொன்னாள். இன்னும் என்

கருத்தை உணர்ந்து கொள்ளவில்லையே என்றெண்ணிப் 'பகடு' என்றேன். அவள், அதைக்கொண்டு வயலை உழவு செய்யுங்கள் என்றாள். நான் 'கம்பமா' என்றேன் அவள் 'கம்பு மாவு' என்று கருதிக்கொண்டு 'நல்ல களியாகச் செய்யலாம்' என்று நவின்றாள். 'கைம்மான்' என்று சொன்னேனோ இல்லையோ, என் மனைவி ஒன்றுமே மறுமொழி பேசாமல் திகைத்துப்போய் நின்றாள்.

இதுவே, அந்தகக் கவி வீரராகவ முதலியார் பாடியுள்ள பாடலின் கருத்தாகும். இப்போது நாம் அக் கவிராயரின் பாடலைக் காண்போமா?

சொன்னாலும் வாய்மணக்கும் அப்பாடல்:

"இம்பர்வான் எல்லை இராமனையே பாடி
என்கொணர்ந்தாய் பாணா நீ?' என்றாள்
பாணி;
'வம்பதாம் களபம்' என்றேன்; 'பூசும்'
என்றாள்;
மாதங்கம் என்றேன்; 'யாம் வாழ்ந்தேம்'
என்றாள்;
'பம்புசீர் வேழம்' என்றேன்; 'தின்னும்'
என்றாள்;
'பகடு' என்றேன் 'உழும்' என்றாள்
பழனந் தன்னைக்
'கம்பமா' என்றேன் 'நற்களியாம்' என்றாள்;
'கைம்மா' என்றேன் சும்மா கலங்கினாளே!"

-கவிராயரின் மேற்கண்ட பாடலில் யானைக்குரிய பெயர்களாகிய களபம், மாதங்கம், வேழம், கம்பமா, கைம்மா போன்ற சொற்களுக்கு முறையே சந்தனம், பொன், கரும்பு, எருமை, கம்பமாவு போன்ற வேறு பொருளும் உண்டு என்பதனை அறிந்து இன்புறுகின்றோம். இவ்வாறு இராமன் கொடுத்த பரிசினைப் பெற்றுக்கொண்ட புலவர் சொல்லழகு தோன்றக் கூறும் பாங்கும், சுவைமிகு சொல்லாடலும் எண்ணி மகிழத்தக்கதாகும்.



பார்வை ஒன்றே போதுமே!

வார்த்தைகளுக்கு
வாலிபம் அதிகம்
வலிமையும் அதிகம்!

வார்த்தைகள் நெருப்புக் குவியல்கள்
அவைபட்ட இடம் புண்ணாகும்
தொட்ட உதடு சூடாகும்!



லேசான இதயம் கூட
வார்த்தைகள் பட்டால் கனமாகும்!

காசைச் சேமித்தால்
கனவுகள் அதிகமாகும்
வாழ்நாள் குறையும்!
வார்த்தையைச் சேமித்தால்
நிம்மதி கைகூடும்
ஆயுள் அதிகரிக்கும்!



சொல்ல நினைப்பதைச்
சொல்ல நினைக்கும்போது
சொல்லாமல் இருப்பது
மன உறுதியைச் சொல்லும்!

அன்பின் பிரதிபலிப்பை
எடுத்துச் சொல்ல
ஆயிரம் வார்த்தைகள் தேவையில்லை.
ஆறுதலாய் ஒரே யொரு பார்வை போதும்...!

— பால சாண்டில்யன்.



நூல்நயம்

புதிய சிந்தனைகள் - முதல் பகுதி

ஆசிரியர்: **இராம. வீரப்பன்**
வெளியீடு: ஆழ்வார்கள் ஆய்வு மையம்
29, திலக் தெரு
தியாகராய நகர்
சென்னை 600 017

பக்கம்: 240 விலை: ரூ.60

முன்னாள் அமைச்சர் திரு ஆர்.எம்.வீ. அவர்களின் எழுபத்தோராவது பிறந்த நாளையொட்டி வெளியிடப்பட்டுள்ள நூலாகும் இது. அவர் பல்வேறு நிகழ்ச்சி களில், பல்வேறு சூழ்நிலைகளில், ஆற்றிய உரைகள், எழுதப்பட்ட கட்டுரைகள், முன்பு பல தலைப்புகளின் கீழ் வெளிவந்துள்ளன; அவற்றின் ஒட்டுமொத்தத் தொகுப்பே இந்த நூல். இரண்டு பகுதிகளாக வெளிவந்துள்ளன. இரண்டாம் தொகுப்பு 201 பக்கங்கள் உடையது; அதன் விலை ரூ.50.

சிறகை விரித்த சிந்தனைகள்

ஆசிரியர்: **முனைவர் கடவூர் மணிமாறன்**
வெளியீடு: விடியல் வெளியீட்டகம்
கிருட்டிணராயபுரம் 639 102
தீரன் சின்னமலை மாவட்டம்

பக்கம்: 96 விலை: ரூ.18

எண்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம், வெண்பா அகவல், தாழிசை என மரபுக் கவிதைகள் பல அணிவகுத்துள்ள நூல் இது. தமிழ் முதலாக நெருப்பாற்றில் எதிர்நீச்சல் தொடர்பான 43 நற்கவிதைகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. எளிய இனிய கவிதைத் தொகுப்பு.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளில் வெற்றி பெறுங்கள்

ஆசிரியர்: **கா.மு. பாதுசா**
வெளியீடு: நூர் பதிப்பகம்
2/515, அலி தெரு
கோமதிபுரம்
மதுரை 625 020

பக்கம்: 153 விலை: ரூ.55

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளில் பங்குபெறும் தமிழ்நாட்டார் எண்ணிக்கை மிகவும் குறைவு. காரணம் அந்தப் படிப்பின் மீதான அச்சம், அல்லது மனோதிடமின்மை, தெளிவின்மை ஆகியவை களேயாகும். அதெல்லாம் தேவையில் லாதவை; துணிந்து படித்து அவ்வாறான தேர்வுகளில் நாமும் வெல்லமுடியும் என்கிற பலமளிக்கும் நூல் இது.

மகாகவி சேக்ஸ்பியரின் ஹாம்லெட்

மூலம்: **சேக்ஸ்பியர்**
தமிழில்: **கவிஞர் புவியரசு**
வெளியீடு: கற்பகம் புத்தகாலயம்
18, ராஜாபாதர் தெரு
தியாகராய நகர்
சென்னை 600 017

பக்கம்: 216 விலை: ரூ.40

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களைத் தமிழில் மொழிபெயர்க்கலாம் என்று மகாகவி பாரதி கொடுத்த தைரியத்தில் வெளி வந்துள்ள நூல்களில் இதுவும் ஒன்று. சேக்ஸ்பியர் எழுதிய நாடகம் எளிய இனிய தமிழில், இடையிடையே படங்களோடு வெளியிடப்பட்டிருக்கிறது.

தன்னம்பிக்கை

மூலம்: ரால்ப் வால்டோ எமர்சன்
தமிழில்: **வ.வெ.சு. ஐயர்**

பக்கம்: 80 விலை: 10

மகாத்மா காந்தியடிகளும், நேருவும் எடுத்தாண்ட மேற்கோள் சொற்களில் பல, அமெரிக்க மேதை எமர்சனுடையவை களாகும். பல மொழி மேதையான வ.வெ.சு. ஐயர், நமக்கு அவருடைய ஒரு நூலைப் பயன் மிக்கதாகத் தமிழில் உருவாக்கித் தந்திருக் கிறார். அதுவே இது. வெளியிட்டோர் காந்திய இலக்கியச் சங்கம், காந்தி நிலையம், மதுரை 625 020

மழைக்கால நோய்கள்

டாக்டர் எம்.பாஸ்கரன் செல்வபதி

மழைக்காலம் வந்திருக்கிறது வானத்திலிருந்து அமிழ்வதால் மழையை அமிழ்தத்திற்கு ஒப் பானது என்று அந்தக் காலத்துத் திருவள்ளுவரும், அண்மைக் காலத்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரும் சிறப்பித்துப் பாடியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் மழைக் காலம், மனிதர்களுக்குச் சில வகைத் துன்பங்களைத் தரும் காலமாக அமைந்து விடுவதும் உண்டு என்பதை யாராலும் மறுக்க முடியாது.

ஒவ்வொரு பருவத்திலும் ஏற்ப சில நோய்கள் உண்டாகும் அல்லது அதிக அளவில் வேக மாகப் பரவும்.

அந்த வகையில், மருத்துவக் கண் கொண்டு பார்த்தால், சிலவகை நோய்கள் நமக்குத் தெரியவரும். அப்படிப்பட்ட மழைக்கால நோய்கள் பற்றிய நம் வினாக்களும் டாக்டர் எம். பாஸ்கரன் செல்வபதி, எம்.எஸ்., எம்.என்.ஏ.எம்.எஸ்., அவர்கள் அளித்த விடைகளும் பின் வருமாறு:

மழைக்காலத்தில் எப்படிப் பட்ட நோய்கள் மக்களிடையே பரவக்கூடும்?

ஒன்று மழை நீரில் அசுத்தங்கள் மற்றும் மனிதக் கழிவுகள் கலந்துவரும் மாசுபட்ட நீரை அருந்துவதால் ஏற்படக் கூடிய தொற்றுநோய்கள். இதில் முக்கியமாக வயிற்றுப்போக்கு அதாவது Diarrhoeal diseases காலரா, டைபாய்டு ஜுரம், மஞ்சள் காமாலை, போலியோ

ஆகியவற்றைச் சொல்லலாம். இவற்றை நீர் மூலம் பரவும் நோய்கள் அதாவது Water-borne diseases என்கிறோம்.

இரண்டாவதாக, மழைநீர் தேங்குவதால் கொசுக்களும் ஈக்களும்பெருகி,, அவற்றால் பரவும் நோய்களைச் சொல்லலாம்.

ஈக்களால் ஏற்கெனவே நான் கூறிய தொற்றுநோய்கள் அனைத்தும் பரவலாம்.

கொசுக்களினால் மலேரியா மற்றும் பைலேரியாஸில் எனப் படும் யானைக்கால் வியாதி ஆகியவை பரவலாம்.

மேற்கூறிய நீர்மூலம் பரவக்கூடிய நோய்கள் தவிர, மழைக்காலத்தில் ஈரத்தன்மை யால் ஜலதோசம், இருமல், சளி, ஆஸ்த்துமா போன்ற நோய்களும் அதிகமாக நம்மைப் பாதிக் கலாம்.

இவ்வாறான நலக்கேடுகள் ஏற்பட அடிப்படைக் காரணங்கள் யாவை?

உலகில் பொதுவாக வளரும் நாடுகளில் ஏற்படும் நோய்கள் பலவற்றிற்கு, அடிப்படைக் காரணம் சுத்தமான குடிநீர் இல்லாமைதான் என்று கூற லாம். உலக சுகாதார நிறுவனம்

களையே அதிகம்தாக்கும். இந்நோயையும் பெருமளவில் கட்டுப்ப்டுத்த முடியும். குழந்தைகளுக்குச் சரியான பருவத்தில் போலியோ சொட்டு மருந்து கொடுப்பதன் மூலம் போலியோ வராமல் தடுக்கலாம்.

கொசுக்களால் பரவக்கூடிய நோய்கள் யாவை?

கொசுக்கடியினால் ஏற்படும் இரண்டு முக்கியமான நோய்கள் மலேரியாவும், யானைக்கால் வியாதியும் Filariasis ஆகும். இந்நோய்களைப் பரப்பும் கொசுக்கள் தேங்கி நிற்கும் நீரில் பெருகி வளர்கின்றன. மேலும், மழைக்காலத்தில் சுற்றுப் புறத்தில் நில்வும் ஈரப்பதம் இக்கொடிய நோய்களைப் பரப்பும் கொசுக்களின் வளர்ச்சிக்குச் சாதகமாக அமைகின்றன.

எந்த வகைக் கொசுக்கள் அந்நோய்களைப் பரப்பும் அதிலிருந்து தப்புவது எப்படி?

மலேரியா நோய், அனாபெலஸ் என்ற வகைக் கொசுக்கள் கடிப்பதனால் ஏற்படுகின்றது. மலேரியா நோய்க்கிருமிகள் பிளாஸ்மோடியம் என்ற இனத்தைச் சேர்ந்தவை. பிளாஸ்மோடியம் வைலாக்ஸ், Falciparem, Ovale, Malariae என்ற 4 வகையான கிருமிகள் மூலம் மலேரியா ஏற்படலாம். இவற்றுள், நமதுநாட்டில் பிளாஸ்மோடியம் வைலாக்ஸம் பால்சிபேரமும் மட்டுமே மலேரியாவிற்குப் பெருமளவில் காரணமாக அமைகின்றன. கொசு மனிதனைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சும் நேரம், கொசுவின் உமிழ்நீர் மூலம் மலேரியா நோய்க் கிருமிகள் மனித இரத்தத்தில் கலக்கின்றன. இவை இரத்த அணுக்களில் பெருகி, இரத்த அணுக்களைச் சிதைக்கின்றன. அவ்வாறு இரத்த அணுக்கள் சிதைவுறும்பொழுது வெளியேறும் சில நச்சுப் பொருட்களே ஜுரம் ஏற்படக் காரணமாக அமைகின்றன. இரத்த அணுக்கள் சிதைந்து, எண்ணிக்கையில் குறைவதால் இரத்தச் சோகை Anemia ஏற்படுகின்றது.

மலேரியா நோய்க்குத் தக்க மருந்துகள் பல உள்ளன. மலேரியாவைத் தடுக்க முக்கியமாக நாம் கொசுக்கடியைத் தவிர்க்க வேண்டும்.

பிஸ்டியா வகை நீர்த் தாவரங்களை ஒழித்தும் யானைக்கால் நோய் பரவுவதைப் பெருமளவு தடுக்கலாம். மலேரியாவுக்கு இருப்பது போன்றே தேசிய யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டம் ஒன்றும் நமது நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இதயம் என்பது தனக்காகத் துடிப்பதில்லை; உடலும் உயிரும் வாழ்வதற்காகவே துடித்துக் கொண்டிருக்கிறது. அரசும் அப்படித்தான்!

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அட்டைப்பட விளக்கம்

முதல் அட்டை

சென்னை மாநகர மக்களின் நீண்டகாலக் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண, கிருஷ்ணா நதிநீரை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களிடம், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு சந்திரபாபு நாயுடு அவர்கள் வழங்கினார் (29.9.96).

இரண்டாம் அட்டை

அண்ணல் காந்தியடிகளின் 128வது பிறந்தநாளையொட்டி அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் (2.10.96).

கடைசி அட்டை

கிருஷ்ணா நதிநீர் தமிழகத்திற்கு கிடைக்கும் நிகழ்ச்சியைக் குறிக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நினைவுத் தூணையும், மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு சந்திரபாபு நாயுடு அவர்கள் வருகைதர, கிருஷ்ணா நதிநீர் தமிழகத்திற்கு வருகைதர மதகினையும் திறந்து வைக்கின்றார்கள் (29.9.96).

மாவட்ட வருவாய் நிர்வாகத்தைச் சீரமைக்க வருவாய் ஆணைக்குழு

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 6.8.96 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் மாவட்ட வருவாய் நிர்வாகத்தைச் சீரமைக்க ஒரு வருவாய் ஆணைக்குழு அனுமதிக்கப்படும் என்று அறிவித்தார்.

பின்னர் 28.8.96 ஆம் நாளன்று இந்த வருவாய் ஆணைக்குழுவின் தலைவராகத்திரு பி.சபாநாயகம், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களும், உறுப்பினர்களாக திருவாளர்கள் பி.கே. லெட்சுமணன், சட்டமன்ற உறுப்பினர், கே.எஸ். இராமகிருஷ்ணன், இ.ஆ.ப. (ஓய்வு), எஸ். சிவசுப்பிரமணியன், இ.ஆ.ப., (ஓய்வு) மற்றும் டி.சங்கர் மேலாண்மை வல்லுநர் ஆகியோரும் இருப்பர் என்றும் அறிவித்தார்.

இவ்வறிவிப்பிற்கிணங்க அரசு ஒரு வருவாய் ஆணைக்குழுவை அமைக்க ஆணை பிறப்பித்துள்ளது.

இக்குழுவின் அமர்விடம் சென்னை நகரமாகும். இக்குழு, தேவையான சாட்சியங்களை விசாரிப்பதற்கும், பொதுமக்களிடமிருந்தும், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட வருவாய்த்துறை பணியாளர்களின்சங்கங்களிடமிருந்தும் மனுக்களைப் பெறுவதற்கும் தகுந்த வழிமுறைகளை வகுத்துக் கொள்ளும்.

இக்குழு, ஓராண்டு காலத்திற்குள் தமது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.

♦♦♦♦

தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தைக் கீழ்க்கண்டவாறு மாற்றியமைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தலைவர் - திரு எஸ்.றா. சற்குணம்,
துணைத்தலைவர் - திரு. எஸ். ஏ. காஜா மொய்தீன், (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), அமைப்பாளர் (கன்வீனர்) மற்றும் உறுப்பினர் - பேராசிரியர் திரு. மரியநல்லு, திருச்சி, உறுப்பினர் - திரு டாமன் பிரகாஷ், சென்னை, உறுப்பினர் - திருஅமானுல்லாகான், சேலம், உறுப்பினர் - செயலாளர் - பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர்.

♦♦♦♦

♦♦♦♦

திரைப்படக் கல்லூரி ஆண்டு விழா

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஆண்டு விழா 7.9.96 அன்றுமாலை எம்.ஜி.ஆர். திரைப்பட நகரத்தில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்கு விருதுகள் வழங்கிச்சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவிற்குத்திரு ஏ.வி.எம்.சரவணன் தலைமையேற்றார். திரைப்பட நடிகை செல்வி குஷ்பு குத்துவிளக்கேற்றினார். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு என்.எஸ். பழநியப்பன், இ.ஆ.ப., அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் எம்.ஜி.ஆர். திரைப்பட

1975-இல் நடத்திய ஓர் ஆய்வின்படி இந்திய நாட்டில், நகரத்தில் வசிக்கும் மக்களில் 80 சதவிகிதத்தினருக்கும் கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களில் 18 சதவிகிதத்தினருக்கும் மட்டுமே குடிக்கத் தகுந்த பாது காப்பானகுடிநீர் கிடைப்பதாகத் தெரிகின்றது. போதிய நீர் வசதி இல்லாததால் மிகப் பெரும் பான்மையானோருக்குப் பாது காப்பானக் குடிநீர் இன்னும் அளிக்க முடியவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். இந்திய மக்களில் 80 சதவிகிதத் தினர் கிராமப்புறங்களில் வாழ்வ தால் மாசுபட்ட நீரினால் ஏற் படும் நோய்களும் பெரும்பாலும் கிராமப்புற மக்களையே பாதிக் கின்றன.

குடிக்கத் தகுந்த நீர் என்று எதைச் சொல்லலாம்?

பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்பக் குடிநீரின் தேவையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. குடிக்கத் தக்க நீர் என்பது சில தகுதி களைப் பெற்றிருக்க வேண்டும்.

நோய்க்கிருமிகள் அதில் இருக்கக்கூடாது.

தீங்கிழைக்கக்கூடிய வேதிப் பொருட்கள் Chemicals அதில் இருக்கக்கூடாது.

நீர், சுவையாக இருக்க வேண்டும்.

நீர், வீட்டு உபயோகத்திற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.

மழைக்கால நோய்களில் முக்கியமான நோய் பற்றியும் அது அணுகாமல் தடுக்கும் முறைகளைப் பற்றியும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங் களேன்?

மழைக்காலத்தில் பரவக் கூடிய தொற்றுநோய்களில் மிக முக்கியமானது வயிற்றுப்போக்கு நோய். இந்தியாவில் 5 வயதுக் குட்பட்ட குழந்தைகளில் குறைந்த பட்சம் 15 இலட்சம் பேர் ஒவ்வோர் ஆண்டும் வயிற்றுப் போக்கினால் இறக்கின்றனர். மருத்துவமனைகளில் குழந்தை களுக்கான வார்டுகளில் 30 சதவிகிதக் குழந்தைகள் வயிற்றுப் போக்கிற்காகவே சேர்க்கப்படு கின்றனர்.

இந்தப் புள்ளி விவரங்கள் மூலம் இந்நோய் எவ்வளவு சமூக முக்கியத்துவம் வாய்ந்தது என் பதை நாம் புரிந்து கொள்ளலாம். நோய்க்கிருமிகள் சிறுகுடலின் உட்புறத்தைச் சேதப்படுத்து வதால், நீர்ச்சத்து குடலுக்குள் உறிஞ்சப்படாமல் வெளியேறு கிறது. இதனால் வயிற்றுப் போக்கு அதாவது Diarrhoea ஏற்படுகிறது.

வயிற்றுப்போக்கு நோய் ஏற்பட முக்கியக் காரணம் என்ன?

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. வைரஸ் கிருமிகள்தான் வயிற்றுப்போக்கு ஏற்பட மிகமுக் கியமான காரணமாகும். ரோட்டா வைரஸ், எக்கோ வைரஸ், காக்சாக்கி வைரஸ், அடினோ வைரஸ், பார்வோ வைரஸ், கொரோனோ வைரஸ் போன்ற பல வைரஸ்கள் குடலைச் சேதப்படுத்தி வயிற்றுப் போக்கு ஏற்படுத்துகின்றன. அதிலும் முக்கியமாக ரோட்டா வைரஸ்தான் குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட மிகவும் முக்கியமான காரணமாகும்.

வைரஸ் கிருமிகள் மட்டு மின்றி E.Coliஸால் மோனெல்லா, ஷில்லா, Vibrio cholera போன்ற பாக்டீரியாக்களும் ஜியார்டியா மற்றும் அமீபா போன்ற நுண் ணுயிர்க் கிருமிகளும் வயிற்றுப் போக்கு ஏற்படுத்தலாம். இந் நோய்க் கிருமிகள் மனித மற்றும் மிருகங்களின் மலக்கழிவுகளின் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொரு வருக்குப் பரவுகின்றன. மாசுபட்ட நீர், உணவு மற்றும் சரிவர கைகளைக் கழுவா மையால் இவை பரவுகின்றன. ஈக்களின் உடலில் ஒட்டிக் கொண்டும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு இவை பரவு கின்றன. மழைக்காலத்தில் குடி நீரில் கழிவுகள் கலக்க வாய்ப்பு அதிகம். இதனால்தான் மழைக் காலத்தில் வயிற்றுப்போக்கு நோய் அதிகம் ஏற்படுகிறது. வயிற்றுப்போக்கு நோய் கண்டால் நோயாளி உடனே மருத்துவரை அணுகவேண்டும்.

கிருமிகளைக் கொல்ல நல்ல பல மருந்துகள் உள்ளன மற்றும் Oral Rehydration Theraphy (ORT) என்ற முறையில் வயிற்றுப் போக்கினால் உடல் இழக்கும் நீர் மற்றும் பல்வேறு உப்புச் சத்துக் களை ஈடுசெய்யும் புதியதோர் சிகிச்சைமுறை உள்ளது. இது ஓர் உயிர்காக்கும் எளிய, செலவற்ற சிகிச்சை முறையாகும். இம்முறையில், குளுக்கோஸ், சோடியம் குளோரைடு, பொட்டாசியம் குளோரைடு, சிட்ரேட் போன்ற உப்புக்கள் கலந்த நீர் வயிற்றுப்போக்குள்ள நோயாளிகளுக்கு அடிக்கடி கொடுக்கப்படுகிறது. இப்பொருட்கள் Oral Rehydration Mixture என்று பாக்கெட்டில் பவுடராக விற்கப்படுகின்றன. இப்பாக்கெட்டை ஒரு லிட்டர் நீரில் கரைத்து அடிக்கொரு தரம் கொடுக்கலாம். இதை விலை கொடுத்து வாங்க முடியாத வர்கள், வீட்டிலேயே ஒரு லிட்டர் குடிநீரில் 5 கிராம் சமையல் உப்பையும், 20 கிராம் சர்க்கரை யையும் கலக்கி உபயோகிக் கலாம். நீரைக் கொதிக்க வைக்க வேண்டிய அவசியம் கூட இல்லை.

அதிக அளவு வயிற்றுப் போக்கு ஏற்பட்டு, உடலில் நீர்ச்சத்து குறைந்தால், 'நரம்பு ஊசி' எனப்படும் Intravenous திரவங்களை உடலில் ஏற்றும் சூழ்நிலை வரலாம்.

காலரா நோய் உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் நோயா?

காலரா எனப்படுவது, விப்ரியோ காலரே (Vibrio cholerae) எனப்படும் நோய்க் கிருமிகளால் ஏற்படும் மிகக் கடுமையான வயிற்றுப் போக்காகும். தக்கத் தருணத்தில் மருத்துவக் கவனிப்பு இல்லா விட்டால் காலரா நோய் கண்டவர்களில் 100க்கு 30 முதல் 40 சதவிகிதம் பேர்வரை உயிரிழக்க நேரிடலாம். காலரா வின் அறிகுறிகள் கி.மு. 7-ஆம் நூற்றாண்டிலேயே நமது ஆயுர் வேத மருத்துவ நூலான 'அஸ்ருத சம்ஷிதா' வில் 'ஷிஷுசிகா' என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

காலரா நோயின் அறி குறிகள் யாவை?

காலரா நோய் கண்டவர் களுக்குத் திடீரென, மிக அதிக அளவில், வயிற்றில் வலியின்றி, தெளிந்த நீர் போன்று அடிக்கடி வயிற்றுப்போக்கு ஏற்படலாம். ஒரே நாளில் ஏறக்குறைய 40 முறை வரை வயிற்றுப்போக்கு உண்டாகலாம். வாந்தி, கண் களில் குழிவிழுதல், நாவறட்சி போன்றவை உண்டாகலாம். மிக அவசர மருத்துவக் கண் காணிப்பு இதற்குத் தேவை. நோய் ஓரிடத்தில் பரவத் துவங்கினால், பாதுகாப்புக் கெனத் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளலாம்.

டைபாய்டு, மஞ்சட்காமாலை நோய்க் கூறுகள் பற்றிக் கொஞ்சம் விவரமாகச் சொல்லுங்களேன்?

டைபாய்டு நோய் சால் மனெல்லா எனப்படும் நுண்ணுயிர்க் கிருமிகளினால் ஏற்படும் ஒரு கொடிய ஜுர நோயாகும். பாதிக்கப்பட்ட நோயாளிகளின் சிறுநீர், மலக் கழிவின் மூலம் இந்நோய் பரவுகிறது. இந்நோயும் நீர், பால் உணவுப் பொருட்கள், மற்றும் ஈக்களின் மூலமாகப் பரவு கின்றது. டைபாய்டு நோய்க்குத் தக்க மருந்துகளும், நோய் வராமல் தடுக்கத் தடுப்பு ஊசியும் உள்ளன.

மஞ்சள் காமாலை நோய் பல்வேறு வைரஸ் கிருமிகள் ஈரலைத் தாக்குவதால் ஏற் படலாம். பொதுவாக Hepatitis-A வைரஸ் மூலமே நமது நாட்டில் இந்நோய் ஏற்படுகிறது.

இந்த வைரஸ் கிருமி மாசுபட்ட நீர் மூலம் பரவு கின்றது. குடிநீரை நன்கு கொதிக்க வைத்துக் குடிப்ப தனாலும், முறையாகக் குளோரின் கலக்கப்பட்ட நீரைப் பருகுவ தனாலும், சாப்பிடும் முன்னரும், சாப்பிட்டப் பின்னரும், கழிவறை சென்று வந்த பின்னரும், கைகளை நன்றாகக் கழுவுவதன் மூலம் இந்த வைரஸ் பரவாமல் தடுக்க முடியும். நோய் ஏற்பட்டு விட்டால் முழுமையாக ஓய்வு எடுப்பதே இந்நோய்க்கு மிக முக்கியமானதும் முதலாவது மான சிகிச்சையாகும்.

போலியோ நோய் என்பது எப்படிப்பட்டது?

மூன்று வகையான போலியோ வைரஸ்களினால் ஏற்படக்கூடிய இது ஒரு கொடிய நோய். Type 1 எனப்படும் வைரஸ்தான் அதிக அளவில் போலியோ நோய்க்குக் காரணமாக அமைகிறது. பொதுவாக நீர் மூலம் பரவும் இந்நோயும் மழைக்காலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. 4 வயதுக்குட்பட்டக் குழந்தை

அரசு ஊழியர் அகவிலைப்படி

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் அகவிலைப்படி உயர்வுக்கான ஆணையைத் தமிழ்நாடு அரசு 25.9.96 அன்று பிறப்பித்தது.

இந்த அகவிலைப்படி உயர்வுடன் மூன்றாவது தவணையாக 10 சதவிகிதம் இடைக்கால நிவாரணமும் தரப்படும். ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அமல்படுத்தப்படும். இதன் மூலம் 11 இலட்சம் பேர் பயனடைவர். அகவிலைப்படியை மத்திய அரசு உயர்த்தியுள்ளதை அடுத்தே தமிழ்நாடு அரசின் இந்த ஆணை பிறப்பிக்கப் பட்டது.

நகரத் தலைவர் திரு முக்தா வி. சீனிவாசன் திரைப்படக்கல்லூரி மற்றும் திரைப்படப் பிரிவு இயக்குநர் திரு. பி. அமிர்தம், தேசிய திரைப்பட வளர்ச்சிக்கழக மண்டல மேலாளர் திரு. பி. பரமேஸ்வரன், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் திரு இராம. நாராயணன், திரைப்படத்தயாரிப்பாளர் திரு. ஆபாவாணன், திரைப்பட இயக்குநர் திரு. அரவிந்தராஜ், எடிட்டர் திரு. பி. லெனின், செய்தித் துறை இணை இயக்குநர் திரு. ஆர். நடேசன் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

திரைப்படக் கல்லூரி முதல்வர் திரு. ஏ. சீனிவாசராவ் அவர்கள் ஆண்டு அறிக்கையைச் சமர்ப்பித்தார். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவன மாணவர் சங்கத் தலைவர் திரு. ஆர். இளங்கோ வரவேற்புரையாற்றினார். மாணவர் சங்கத்தின் செயலாளர் திரு. தணிகை அரசு விழாவில் பங்கேற்ற அனைவர்க்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

♦♦♦♦

பூம்புகார் சுற்றுலா வளாகத்திற்கு ரூ.1 கோடி செலவில் வளர்ச்சிப் பணிகள்

பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் கடந்த பல ஆண்டுகளாக ஏற்பட்ட கடல் அரிப்பினால், கடற்கரைப் பகுதிகளை ஒட்டி அமைந்துள்ள இலஞ்சி மன்றம் மிகவும் சேதம் அடைந்துள்ளது. இதைச் செப்பனிட்டு, சீர்செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க சுற்றுலாத்துறை முன் வந்துள்ளது. வரும் 15.10.96 க்குள் இப்பணியை முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கலைக்கூடம், ஓய்வு விடுதி, சுற்றுலா குடில்கள் சீர்செய்தல், புதிய மின் அனுப்பி (டிரான்ஸ்பார்மர்) நிறுவுதல், தேவையான அளவிற்குத்தண்ணீர் பெற ஏற்பாடு செய்தல், நெடுங்கல் மன்றத்திற்கு சுற்றுச் சுவர் கட்டுதல், புதிய மின் இயக்கி, (ஜெனரேட்டர்) வாங்குதல், புதிய உணவகம் கட்டுதல், தொல்பொருள் ஆய்வுத்துறை உதவியுடன் ஒரு அருங்காட்சியகம் நிறுவுதல், புதிய பேருந்து நிலையம் அமைத்தல், மேலும் சுற்றுலா பயணிகளுக்குப்பொழுது போக்குக்காகக்கலை நிகழ்ச்சிகள் அமைத்தல், கூடுதல் கழிப்பறை கட்டுதல், தோட்ட மேம்பாடு மற்றும் சாலை மேம்பாடு செய்தல் போன்ற பணிகள் செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. பூம்புகார் சுற்றுலா வளாகம் தொடங்கப்பட்டபோது கட்டப்பட்ட சிலம்பு வடிவப்பயணிகள் காத்திருக்கும் இடம் உரிய பராமரிப்பு இல்லாததாலும், மீண்டும் அதைச் சீர்செய்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாலும், அதை இடித்துவிட்டு, அதற்குப் பதிலாக அதேபோல் சிலம்பு வடிவத்தில் புதிய பயணிகள் காத்திருக்கும் இடம் ரூ. 30.00 லட்சம் செலவில் கட்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பூம்புகார் சுற்றுலா வளாக மேம்பாட்டுப் பணிகளுக்குச்சுமார் 1 கோடி ரூபாய் இந்த நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது. இதில் ரூ. 30 இலட்சம் மத்திய அரசும் மீதியை தமிழ்நாடு அரசும் வழங்கும் என்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. சுரேஷ் ராஜன் தெரிவித்துள்ளார்.

♦♦♦♦

தீபாவளிக்குக் கூடுதல் சர்க்கரை

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, இவ்வரசு குடும்ப அட்டைதாரர்கள் ஒவ்வொருவருக்கும், கூடுதலாக 1 கிலோ சர்க்கரை வழங்க முடிவு செய்துள்ளது. இதற்கான சர்க்கரையை நியாய விலைகடைகளுக்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் தத்தம் நியாய விலைக் கடைகளிலிருந்து இக்கூடுதல் சர்க்கரையை அக்டோபர் மாதம் அல்லது நவம்பர் மாதத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

214280.

வாசகர் இதயம்

தாங்கள் தொடர்ந்து வெளியிட்ட வேலைவாய்ப்புகள் கட்டுரை ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ். போன்ற படிப்புகளுக்குத் தக்க வழிகாட்டுவதாக இருந்தது. மிக்க நன்றி.

- இ. கோவிந்தராசு
காஞ்சிபுரங்குடி, இராமநாதபுரம்.

பழநிபாரதி கவிதை சிறப்பாக இருந்தது. அடிக்கடி இதுபோன்ற கவிதைகள் இடம்பெறட்டும்.

கலைவாணர் நிகழ்ச்சி பற்றிய சுருக்கம் அருமையாக இருந்தது. 'ஆசிரியர் மடல்' அருமை.

- தி.பொ. சண்முகசுந்தரம்
திட்டக்குடி.

சின்ன அண்ணாமலை கட்டுரை, அறிஞர் அண்ணா அவர்களின் பெருந்தன்மையை காலகாலத்திற்கும் நிலை நிறுத்துவதாக அமைந்திருந்தது. எங்கள் ஊர் பிரச்சினை ஒரு நல்ல பகுதி.

- புலவர் வைரி. தரளம்
கோ.வி.பாளையம்.

பெரியாரும் - அண்ணாவும் பற்றி நெஞ்சுக்கு நீதியில் கலைஞர் அவர்கள் எழுதியிருந்ததை எடுத்துவெளியிட்டிருந்தது நன்றாக இருந்தது. இதேபோல் அண்ணாபோன்றோரின் முக்கிய எழுத்துகளும் வெளிவருமா?

- கே.பி. எல்லப்பன்
கடலாடி.

அனைத்துத்தரப்பினரையும் அலசி அறிந்து தகுந்தபடி புதுப்புது பகுதிகளை வெளியிடுவதில் தமிழரசுக்கு 'தமிழரசே' இணை.

- கே. கருப்பையன்
பட்டீஸ்வரம்.

ஐந்தாண்டுக் காலத்திற்குப் பிறகு 'தமிழரசு' இதழில் அறிவு பூர்வமான செய்திகள் வெளிவருகின்றன, மகிழ்ச்சி.

- டி. திருமகள்,
தென்னூர், வாலாஜா.

அணுசக்தி

50 ஆண்டுகளாக இயங்கிவரும் சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனம் பிரிட்டனைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வந்தாலும், இதன் செயல்பாடுகளில் 90 சதவிகிதம் வெளிநாடுகளில்தான் நடைபெற்று வருகிறது.

முப்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் இந்நிறுவனம் இயங்கி வருகிறது. இந்தியாவில் 1994 முதல் டெல்லி, பம்பாய் (மும்பை) சென்னை, கல்கத்தா, பெங்களூர் ஆகிய இடங்களில் ஆலோசனை மையங்களைக் கொண்டு இயங்கி வரும் இந்நிறுவனம் மருத்துவத்துறையில் "ஸ்கேனிங்" போன்ற அதிநுட்ப பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நவீன இயந்திரங்களை தயாரித்து வழங்கி வருகிறது.

அதிலும் குறிப்பிடத்தக்க அம்சம்: அணுசக்தியை அழிவுக்கு பயன்படுத்துவதைப் போல ஆக்கசக்திக்கும் பயன்படுத்த லாம் என்பதை நிரூபிக்கும் வகையில் அணுசக்திகளைப் பயன்படுத்தும் எந்திரங்களை இந்நிறுவனம் தயாரித்து உள்ளது. அந்த வகையில் பல ரேடியோ பார்மசூடிகல் எந்திரங்களை அது தயாரித்துள்ளது. வழக்கமாக இந்த எந்திரங்களில் அயோடின் மற்றும் தாலியம் போன்ற பொருட்களே பயன்படுத்தப்படுவது வழக்கம். ஆனால் அமர்ஷாமின் எந்திரங்களில் டெக்னேடியம்– 99 எம், டிரேசராக பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் இருதயம் மற்றும் மூளைப் பகுதிகளை மிகத் தெளிவாக ஸ்கேன் செய்ய முடியும். பொதுவாக அணுசக்தியுள்ள பொருள் பயன்படுத்தப்படும்போது கதிர்வீச்சு (ரேடியோக்டிவிடி) ஏற்படும் ஆபத்து உண்டு. ஆனால் இதில் பயன்படுத்தப் படும் டெக்னேடியம் –99எம் 6 மணி நேரமே செயல்படு வதால் அதனால் ஏற்படும் கதிர்வீச்சு விரைவில் மறைந்து விடுகிறது என்று அந் நிறுவனம் கூறுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் : எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எம். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

ஆசிரியர் மடல்

எப்போதுமே மக்களாட்சித் தத்துவத்திற்குத் தனி மரியாதை உண்டு. இதைக் காஷ்மீர் தேர்தல் ஆணித்தரமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறது.

அண்டை நாட்டுக்காரர்கள் தந்த அசட்டுத் துணிச்சலில், அங்கிருந்த தீவிரவாதிகள் சிலர் ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டுப் பாடியும்கூட, அமைதியான முறையிலே சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்றிருக்கிறது; 53 சதவிகிதம் வாக்குப் பதிவாகியிருக்கிறது.

9 ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த அத்தேர்தலில், 6 ஆண்டுகளுக்குப் பிறகு, 2வது முறையாக வெற்றி பெற்று முதலமைச்சராகியிருக்கிறார் திரு. பரூக் அப்துல்லா.

ஆம்; அங்குள்ள 87 தொகுதிகளில், 4 கட்டமாக நடைபெற்ற அப் பொதுத் தேர்தலில், வாக்குப் பதிவில் எந்த அசம்பாவிதமும் இல்லை; 57 இடங்களில் அவருடைய தேசிய மாநாட்டுக் கட்சியே பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. ஒரே ஒரு சுயேட்சை வேட்பாளரும் அவரோடு இணைந் திருக்கிறார்.

1990-ல் குடியரசுத் தலைவர் ஆட்சி அறிவிக்கப்பட்ட அங்கே, நமது மாநில சுயாட்சிக் கொள்கைக்குப் புது மெருகூட்டும் வகையிலே, இப்போது புதிய அரசு உதயமாகியிருக்கிறது. முதலமைச்சராகத் தேர்வு பெற்றுள்ள பரூக் அப்துல்லா, "மத்திய மாநில உறவுகளுக்கு முன்னுரிமை அளிப்போம்" என்று அறிவித்திருக்கிறார்.

'காஷ்மீர் சிங்கம்' என்ற பெருமையுடைய சேக் அப்துல்லாவின் மூத்த மகனான பாருக் அப்துல்லா, முதல்வரானதன் மூலம் 'இருட்டிலிருந்த காஷ்மீரத்தில் ஜனநாயக ஒளி பரவச் செய்திருக்கிறார்' என்று கூறிப் பாராட்டி, நமது முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களும் வாழ்த்தியிருக்கிறார்; நாமும் அத்துடன் நம் வாழ்த்தினை இணைப்போம்.





தமிழரசு
..6 ரூ.3

இந்த இதழில்....

பன் மாநில மன்றக் கூட்டத்தில் முதல்வர் உரை **2**

உள்ளாட்சித் தேர்தல்கள்:ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம் **6**

ஞாலத்தின் தலைவர் **10**

வாழ்க்கைக் கலை - அரசு மணிமேகலை **12**

வீரமாமுனிவர் **17**

இல்லற சந்நியாசி - தி. ஜானகிராமன் **18**

கணிப்பொறியின் கதை **33**

மலேரியா - மருத்துவக் கட்டுரை **34**

தித்திக்கும் திராட்சை **40**

மாநகராட்சி மேயர்களின் வாழ்க்கைக் குறிப்பு **46**

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2027

ஐப்பசி திங்கள்: 16

மலர் :27 இதழ் : 9

1.11.1996

விலை ரூ. 3.

நம் கூட்டாட்சி அமைப்புத் தவறுகள் முறைப்படி களையப்பட வேண்டும்

- முதல்வர் கலைஞர்

"பன்மாநில மன்றத்தின் இரண்டாவது கூட்டத்தில் பங்கு கொள்வது எனக்குப் பெருமையையும், பெருமகிழ்ச்சியையும் அளிக்கிறது. ஏனெனில், ஏறத்தாழ ஆறாண்டுகளுக்கு முன்னர் 1990 அக்டோபரில் நடைபெற்ற முதலாவது கூட்டத்திலும் நான் கலந்து கொள்ளும் பேறு பெற்றிருந்தேன். அன்று, பன்மாநில மன்றத்தை ஏற்படுத்திய தேசிய முன்னணி அரசு, அதற்குச்சிறிது காலத்திற்குப் பின்னர் பதவியிழந்தது.

அதனையொட்டி, அந்த அரசு உருவாக்கிய பன்மாநில மன்றமும் அடுத்து வந்த ஐந்தாண்டுகளாகச் செயல்படாமலிருந்தது. உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை நிறுவ வேண்டும் என்ற இலட்சியத்தில் உறுதி பூண்டுள்ள தி.மு. கழகமும், ஏனைய கட்சிகளும் பங்கு பெற்றுள்ள ஐக்கிய முன்னணி அரசு, பன்மாநில மன்றத்தை மீண்டும் உயிர்ப்பித்துள்ளது பொருத்தமானதாகும். இந்த இனிய சந்தர்ப்பத்தில், குறிப்பாக டாக்டர் ஃபரூக் அப்துல்லா அவர்களை நான் வருக. வருக என வரவேற்கிறேன். நாங்கள் இருவரும் இந்தியத் துணைக் கண்டத்தின் தென் கோடியிலும் வடகோடியிலுமுள்ள இரு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்பதோடு, நாங்கள் கூட்டாட்சித் தத்துவத்தை மிகவும் உறுதியோடு வலியுறுத்தி வந்துள்ளவர்கள் ஆவோம்.

இந்தப் பன்மாநில மன்றத்தில் உரையாற்றக்கிடைத்துள்ள இந்த வாய்ப்பின்போது, இந்த மன்றத்தைக் கூட்டாட்சி மன்றமென்று பெயரிட்டழைக்க நான் விரும்புகின்றேன். இதே சமயம், நமது அரசியலமைப்புச் சட்டத்தில் இழையோடிக்கிடக்கின்ற கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான, மற்றும், ஜனநாயகத் தத்துவத்திற்கு விரோதமான அம்சங்களால் மிகமிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களில் நானும் ஒருவன்.

ஏன் அவ்வாறு சொல்கிறேன் என்றால், மிகவும் மோசமானது என்று பெயர்வாங்கியுள்ள அரசியலமைப்புச்சட்டத்தின் 356-ஆம் பிரிவின் கீழ் நான் முதலமைச்சர் பதவியிலிருந்து இரண்டு முறை பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளேன். இந்த முறையில் அடைந்த 'பதவி நீக்கப் பெருமை' எனக்கு மட்டுமே கிட்டிய தனிச் சிறப்பாகும். இந்திய மாநிலங்களிலேயே, சட்டமன்றப் பேரவையில் மிகப் பெரும்பான்மை பெற்றிருந்த அரசாக இருந்தும், மாநில ஆளுநருடைய அறிக்கை பெறுகின்ற வழக்கத்தைக் கூடக் கடைப்பிடிக்காமல் விட்டு விட்டுப் பதவி நீக்கம் செய்யப்பட்ட மாநில முதலமைச்சர் நான் மட்டுமே, என்று நம்புகிறேன்.

ஏனென்றால், அரசியலமைப்புச்சட்டத்தின் 356-ஆம் பிரிவின் விதித்துறையில் இடம் பெற்றுள்ள ''வேறு வகையில்'' என்னும் சொற்பொருளைப் பயன்படுத்தி, அப்போதைய ஆளுநர்கூட, அறிக்கை ஒன்றை எனது அரசுக்கு எதிராக அனுப்ப மறுத்துவிட்டார் என்பது நாடறிந்த செய்தியாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான சில கூறுகள் இடம்பெற்றுள்ளன. அவை குறித்து அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்கள் கொண்டுவர வேண்டியது மிக அவசரத் தேவையாகும். கூட்டாட்சித் தத்துவத்திற்கு விரோதமான அம்சங்களாவன:

★ மாநிலங்கள் மீது குடியரசுத் தலைவராட்சியைத் திணித்தல்;

★ மாநிலங்களில் ஆளுநர்களை நியமித்தலும் அவர்களின் பங்கும்;

சட்டமியற்றும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதில் காணும் பொருந்தாத் தன்மைகள்;

★ மாநிலச் சட்டமுன் வடிவுகளுக்கு மத்திய அரசு (குடியரசுத் தலைவரின்) ஒப்புதல் அளிக்க மறுக்கும் மறுப்பதிகாரம்.

★ நிதிவாயில்களை ஒதுக்கீடு செய்வதில் குறைபாடுகள்.

இவை எல்லாம், இன்று நடைமுறையிலிருக்கிற இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான ''கூட்டாட்சியமைப்புத் தவறுகள்'' அல்லது ''கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரான அம்சங்களாகும்'' இவையாவும் உரிய நடவடிக்கை வாயிலாகக் களையப்படுதல் வேண்டும். நமது அரசியலமைப்புச் சட்டம் கூட்டாட்சியமைப்பிற்கு உகந்ததாகக் கருதப்பட வேண்டுமெனில், இந்தக் குறைந்தபட்ச நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டியது அவசியமாகும்.

இன்னும் எஞ்சி நிற்கும் அதிகாரங்கள் குறித்து ஆய்வு செய்தல் போன்ற ஏனைய பிற பொருள்களும் நம்முன் உள்ளன என்பதில் ஐயமில்லை. இவற்றுள் மிகமிக இன்றியமையாதது, வரி வருவாய்த் துறையில் மாநிலங்களுக்குத் தன்னாட்சியுரிமை வழங்குவதாகும். இத்துறை முழுவதையும் குறித்து இன்று ஆய்வு செய்வது அவசரத்தேவையாகும். புதிதாக உருவாகியுள்ள ஒத்த கருத்துடையார் அரசியல் ஓங்கியுள்ள சூழலில் இந்தச் சீர்த்திருத்தங்கள் யாவும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

1971 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஆட்சிபுரிந்த தி.மு.க. அரசு அப்போதைய சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி டாக்டர். பி.வி. இராஜமன்னார் தலைமையில், மத்திய-மாநில அரசு உறவுகள் குறித்த உயர்நிலைக் குழு ஒன்றை அமைத்தது. இந்திய நாட்டில் மத்திய - மாநில அரசு உறவுகள் குரித்து விரிவாக மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஆய்வு அதுவேயாகும்.

அந்த ஆய்வு, ஒரு மாநில அரசின் மூலம் தொடங்கப்பட்டது என்பதைக் கருதிப் பார்க்கையில், அது இன்னும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்ததாகிறது. இராஜமன்னார் குழு அறிக்கை குறித்து, தமிழ்நாடு அரசு எடுத்த கருத்து முடிவுகளின் அடிப்படையில் மாநிலச் சட்டமன்றப் பேரவை 1974 ஆம் ஆண்டில் மாநில அரசின் தன்னாட்சி உரிமை குறித்த வரலாற்றுப் பெருமை வாய்ந்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. அப்போது தொடங்கி, ஏனைய பல மாநில அரசுகளும், அரசியல் கட்சிகளும் மாநில அரசுகளுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள், பொறுப்புகள், நிதிவாயில்கள் வழங்கப்பட வேண்டும் என்னும் கோரிக்கை முழக்கத்தை எழுப்பி வந்திருந்தன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மாநில அரசின் தன்னாட்சி உரிமை குறித்துத் தீர்மானம் இயற்றிய நாள், தொடங்கி, மற்ற மாநில அரசுகளிடமிருந்து தொடர்ந்து எழுந்துவந்த வலுவான கோரிக்கைகளுக்குக் காலம் தாழ்த்தி செவிசாய்த்த வகையில் தான், 1983 ஆம் ஆண்டில் சர்க்காரியா ஆணைக்குழுவை மத்திய அரசு அமைத்தது எனலாம்.

இந்த மன்றத்தின் முதலாவது கூட்டத்தில் பேசுகையில், மாநில அரசுகள் இதுகாறும் பெரிய அளவில் தன்னாட்சி உரிமைக்காகச் சட்டப்பூர்வமான முறையில் கருத்துத் – தெரிவித்தும் குரல் எழுப்பியும்

214 290

வந்தமைக்குப் போதுமான அளவில், அவற்றின் கோரிக்கையை நிறைவேற்றுகின்ற வகையில் சர்க்காரியா ஆணைக்குழுவின் பரிந்துரைகள் இல்லை என்று நான் சுட்டிக் காட்டியிருந்தேன். எனவே, மாநில அரசுகளின் கோரிக்கைகள் எவற்றையும் வலுவிழக்கச் செய்வது என்கின்ற வினாவிற்கு இடமேதுமில்லை. மாறாக, மாநிலங்களுக்கு அதிக அளவில் தன்னாட்சியுரிமை அளிக்கும் வகையில் கமிஷன் அளித்துள்ள பரிந்துரைகளை மேலும் சீரான முறையில் செயலாக்க முயலவேண்டும். மேலும், சர்க்காரியா கமிஷன் அதன் அறிக்கைகளைக் கொடுத்த பின்னர், கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பல அம்சங்களில் கமிஷன் அளித்த பரிந்துரைகளுக்கு அப்பாற்பட்டும் செயல்பட வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன.

பின்னணி அவ்வாறிருக்க, நாம் பரிசீலிப்பதற்காகவைக்கப்பட்டுள்ளதுணைக்குழுவின் அறிக்கை ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது என்பதை நான் கூற வேண்டியிருக்கிறது. மாநிலங்களும், முக்கிய அரசியல் கட்சிகளும் முன்வைத்த விவாதங்களின் அடிப்படையில், சீரமைக்க வேண்டிய அவசியமுள்ள பிரச்சினைகள் குறித்து சர்க்காரியா கமிஷன் அளித்துள்ள பரிந்துரைகளைச் சீரமைக்க முயலாமல், கமிஷன் அளித்த பரிந்துரைகள் அவ்வாறே ஏற்பதில் துணைக்குழு மனநிறைவடைந்துள்ளது.

சர்க்காரியா கமிஷன் பரிந்துரைகளை மாற்றி அமைத்ததன் மூலம் துணைக்குழு, அவற்றைப் பயனற்றதாகச் செய்துள்ளது. அவசர கால விதித்துறைகள் உட்பட பல முக்கியமான பிரச்சினைகளில், துணைக்குழுவினால், ஒருமித்த கருத்து முடிவுக்கு வர இயலவில்லை. இந்தியக் குடியரசுத்தலைவரின் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கும், மாநிலங்களுக்கும் இடையிலான நிதி உறவுகள்

> காலம் மாறக்கூடியது; மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.
>
> **– அறிஞர் அண்ணா**

தொடர்பான பரிந்துரைகளையும், அதனால் செயல்முறைப்படுத்த இயலவில்லை. மன்றத்தில், தற்போதுள்ள உறுப்பினர்கள், துணைக்குழுவில் உறுப்பினராக இல்லாதிருப்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.

இந்நிலையில், துணைக்குழு பரிசீலித்த 179 பரிந்துரைகளைப் பொறுத்தவரை, துணைக்குழுவின் கருத்துக்களை மேலும் கருதிப் பார்க்காமல் அவற்றை ஏற்றுக்கொள்ள இயலாது என நாங்கள் கருதுகிறோம். இதுபோன்ற பன்மாநில மன்றத்தின் ஒருநாள் கூட்டம், இந்தச் சிக்கலான பிரச்சினைகள் குறித்து ஆழ்ந்து விரிவாக விவாதிப்பதற்குப் போதுமானதல்ல. எனவே, இந்தப் பரிந்துரைகளை விரைந்து ஆய்வு செய்வதற்கு உட்படுத்துவது அவசியமும் விரும்பத்தக்கதும் ஆகும்.

அத்தகைய ஆய்வுக்குரிய அடிப்படையாக அமைய, துணைக் குழுவின் பரிந்துரைகள் குறித்து ஒருமாத கால அளவுக்குள் தங்களது கருத்துரைகளை அனுப்பி வைக்குமாறு அனைத்து மாநிலங்களும் கேட்டுக் கொள்ளப்படலாம். குறைந்தபட்ச பொதுவான தேவைத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளை ஆய்வு செய்து, அவற்றை நாளது வரையாக்கவும், நிதி அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிப்பது குறித்துப் பரிசீலிக்கவும், உயர் நிலைக்குழு ஒன்றை நியமிக்க, நிகழ்ச்சி நிரல் குறிப்புகளில் தனியாகக் கருதப்பட்டுள்ளது. மாநிலங்கள் அளிக்கும் கருத்துரைகளின் அடிப்படையில், இக்குழு துணைக் குழுவின் பரிந்துரைகளை மூன்று திங்கள் கால அளவிற்குள் விரைந்து ஆய்வு செய்து, அதன் அறிக்கையை அளிக்க வேண்டும்.

இத்தருணத்தில், நான் சில முக்கியமான பிரச்சினைகள் குறித்து எங்களது கருத்துக்களைச் சுருக்கமாகக் குறிப்பிட விழைகிறேன்.

சட்டமியற்றுவது தொடர்பான உறவுகள்: மாநிலங்களின் தன்னாட்சியை மேம்படுத்தும் நோக்கத்துடன், ஏழாவது விவர அட்டவணையிலுள்ள I, II, III மற்றும் பட்டியல்களில் உள்ள பதிவுகள் குறித்து விரிவான ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும்படி, உத்தேச உயர்நிலைக்குழு

கேட்டுக் கொள்ளப்படலாம். மாநிலச் சட்ட முன் வடிவுகளுக்குக் குறிப்பிட்ட காலவரையறைக்குள் குடியரசுத் தலைவர் இசைவு தெரிவிப்பதை உறுதிசெய்ய, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 200 மற்றும் 201 ஆகிய பிரிவுகளில் போதிய காப்பு விதித்துறைகள் சேர்க்கப்பட வேண்டும்.

நிர்வாகத் தொடர்புகள்: மாநிலங்களுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கவும் அரசமைப்புச் சட்டத்தின் அவசரகால விதித்துறைகளைப் பயன்படுத்தவும்; அரசமைப்புச் சட்டத்தின் 256,257 மற்றும் 365 ஆகிய பிரிவுகள் மத்திய அரசுக்கு எல்லையற்ற அதிகாரங்களை அளிக்கின்றன. அவை ரத்து செய்யப்படலாம்.

ஆளுநர்கள்: ஆளுநர்களின் தகுதிகள், அவர்கள் நியமிக்கப்படும் முறை, அவர்களுடைய பதவிக்காலம், அவர்களுடைய அதிகாரங்களைச் செலுத்துவதற்கான வழிகாட்டிக் குறிப்புகள், அவர்கள், தங்களுடைய விருப்ப உரிமையைப் பயன்படுத்துவது மீது கட்டுப்பாடுகள் விதிப்பது ஆகியவை தொடர்பாக குறிப்பான வரையறைகள், மரபுகள், காப்பு விதிகள் ஆகியவை பின்பற்றப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தின் திருத்தங்கள் வெளியிடுவதன் மூலமாகவும், ஆளுநர்களுக்கு வழக்கமான உத்தரவுகள் பிறப்பிப்பதன் மூலமாகவும் இயன்றவரையில், இது பின்பற்றப்பட வேண்டும்.

356 ஆம் பிரிவு : அரசியல் ரீதியாகவும், 356 ஆம் பிரிவு தவறாகப் பயன்படுத்தப்படுவது குறித்தும் நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. இக்கூட்டத்திற்குப் பிரதிநிதியாக வந்துள்ள ஒவ்வொரு தனி மாநிலமும், ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஏதேனும் ஒரு சமயத்தில் அதனால் பாதிக்கப்பட்டுள்ளன. பொதுவான குறைந்தபட்சத் திட்டமானது, 356 ஆவது பரிவு, தவறாகப் பயன்படுத்தப்படுவதைத்தடுக்க, அது திருத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளது. கூட்டாட்சி என்று கூறிக்கொள்கின்ற அரசமைப்பில், இதுபோன்ற விதித்துறை, உலகில் வேறு எந்த அரசமைப்புச் சட்டத்திலும் இல்லை. எனவே, எனது கட்சி இதனை முழுமையாக நீக்கவேண்டும் என்ற நிலையைக்கொண்டுள்ளது. அந்தசட்டப்பிரிவு அரசியலமைப்புச் சட்டத்தில் இருக்கும்

> இளைய தலைமுறையே எழுவாய்! செயப்படுபொருள் பயனிலையேல் விழுவாய்! அறிவில் மூத்தோரைத் தொழுவாய்! அரிய பயன்களை ஆழ உழுவாய்!
>
> **– கலைஞர்**

வரையில், அதனைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான தூண்டுதல் எழுவதைத் தடுக்க இயலாது என்பது எங்களுடைய கருத்தாகும். இது குறித்து ஆய்வு செய்யுமாறு உயர் நிலைக்குழு கேட்டுக் கொள்ளப்படலாம்.

மத்திய - மாநில அரசுகளின் கலந்தாலோசனைகள்: மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்குமிடையே நெருங்கிய, தொடர்ச்சியான கலந்தாலோசனைகள் இடம்பெற தேசிய வளர்ச்சி மன்றமும், மாநிலங்களுக்கிடையேயான மன்றமும் உயர்நிலை அமைப்புகளாகக் கருதப்பட வேண்டும். இனி வருங்காலத்தில் இம்மன்றங்கள், குறைந்தது ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறையாவது கட்டாயமாகக் கூட வேண்டும். என்பது உயர் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நோக்கத்தை எய்துவதற்காக, நாடாளுமன்றத்தில் உரிய சட்டம் இயற்றப்பட வேண்டும். இல்லையெனில் இது ஒரு ஐந்தாண்டிற்கு ஒரு முறை கூடும் கூட்டமாக அமைந்துவிடும். அவற்றின் முடிவுகள், மத்திய அரசினைக் கட்டுப்படுத்துவனவாகக் கருதப்பட வேண்டும்.

நிதியும் திட்டமிடலும்: இத்தலைப்புகள் குறித்த சர்க்காரியா கமிஷனின் பரிந்துரைகளை உயர்நிலைக்குழு ஆய்வு செய்ய வேண்டியுள்ளன. அனைத்து நிதி ஆதாரங்களிலிருந்தும் மாநில அரசுகளுக்குக் கிடைக்கும் நிதி போதுமானதாக, சரிவிகிதமாக, உறுதியளிக்கப்பட்ட ஒன்றாக, நோக்கங்களை அளவுகோலாகக் கொண்டு வழங்கப்படுவனவாக இருக்க வேண்டும். பத்தாவது நிதிக்குழு பரிந்துரை செய்துள்ளவாறு, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே பகிர்வு செய்யப்படும் உரிமைப்படியான வரிப் பங்கீடுகளில், மத்திய அரசின் முழு வரி வருவாயினையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். மாநில அரசுத் துறையில் உள்ள, மத்திய மற்றும் மத்திய அரசு பொறுப்பேற்கும்

திட்டங்களின் எண்ணிக்கை குறைந்தனவாகக் கருத வேண்டும்; அத்திட்டங்களைச் செயலாக்குவதில் மாநிலங்களுக்குச்சமஅளவு அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

இந்தியாவில் கூட்டாட்சி முறை உண்மையானதாக ஆக வேண்டும். பின் சமாளிக்கப்பட வேண்டிய முதன்மைப் பிரச்சினைகளுக்குரிய விரிவான அணுகுமுறை பற்றிய எங்கள் கருத்துக்களை நான் இங்கு சுட்டிக் காட்டியுள்ளேன். பல இனங்கள், பல மொழிகள், பல மதங்கள் கொண்ட துணைக்கண்டமாகவுள்ள இந்தியா போன்ற நாட்டில் கூட்டாட்சி முறை மட்டுமே நிலவும் வேற்றுமைகளைப் போக்கி ஒற்றுமையை நிலைநாட்டுவதற்கு ஏதுவாக அமையும்.

மாநிலங்களுக்குச் சுயஆட்சி உரிமையுடன் உண்மையான, முழுமையான கூட்டாட்சி முறை ஒன்றைக் கொண்டுவர, புத்துயிரூட்டப்பட்ட பன்மாநில மற்றும் சிறந்த அமைப்பாகத் திகழும் என்றும், இவ்வாறாக, சிறந்த வலிமையான துடிப்பார்வமிக்க இந்தியாவிற்கு ஒரு உறுதியான அடித்தளமாக அமையும் என்றும் நான் நம்புகிறேன்.

கூட்டாட்சிக் கோட்பாட்டினரின் புரட்சியானது, தற்போதுள்ள சூழ்நிலையில் உலகின் அமைப்பை மாற்றுகின்ற வகையில் வெளியில் தெரியாமல் நாடிப் பெறுகின்ற பெரும் எண்ணிக்கையிலான பல்வேறு புரட்சிகளில் ஒன்றாகப் பெரும் பங்கு வகிக்கிறது எனப் பேராசிரியர் டேனியல் எல்சன் தெரிவித்துள்ளார். உலகின் மக்கள் தொகையில் ஏறத்தாழ 40 சதவீதத்தினர், தற்போதுள்ள கூட்டாட்சி முறை பின்பற்றப்படுகின்ற நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இன்னொரு மூன்றாவது பிரிவினர், ஏதாவதொரு வகையில் கூட்டாட்சி முறை ஏற்பாட்டைக் கொண்ட நாடுகளில் வாழ்கின்றனர். மிக நீண்ட காலத்திற்கு முன்பே இந்தியாவில் தோன்றியிருக்க வேண்டிய கூட்டாட்சிப் புரட்சியை நாம் இப்போது உருவாக்குவோம்.

– புது டில்லியில் 15.10.1996 அன்று நடைபெற்ற பன்மாநில மன்றக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை.

உள்ளாட்சித் தேர்தல்கள்

கடந்த செப்டம்பர் மாதம் 3ஆம் தேதியன்று, தமிழ்நாட்டுத் தேர்தல் ஆணையர் திரு. கே. மலைச்சாமி அவர்கள் செய்த முக்கிய அறிவிப்பொன்று தமிழக வரலாற்றில் குறிப்பிடத்தக்கதாக விளங்கியது; தமிழக உள்ளாட்சித் தேர்தல் அக்டோபர் 9 ஆம் தேதியும், 12 ஆம் தேதியும் என இரண்டு கட்டமாக நடைபெறும் என்கிற அறிவிப்பே அது.

இப்போதுள்ள திராவிட முன்னேற்றக் கழக அரசு 1990ல் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, செப்டம்பர் 26ல் மாநகராட்சிகளுக்கான தேர்தல் நடைபெறும் என அப்போது அறிவித்தது; சென்னை - மயிலாப்பூரைச் சேர்ந்த ராஜகோபாலன் என்பவர், பெண்களுக்கான இட ஒதுக்கீடு தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

அதன் அடிப்படையில் 29.8.1990ல், நீதிபதி எஸ். இராமலிங்கம் அத் தேர்தலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்தார். அதோடு சரி; 1968ல் கடைசியாக நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தல் இனி எப்போது நடக்கும் என்பதே யாராலும் நிர்ணயிக்க முடியாத ஒன்றாக ஆகிவிட்டிருந்தது.

அந்தத் தேர்தல்தான், தடை பல கடந்து இதோ இப்போது நடந்து முடிந்திருக்கிறது. பெண்களுக்கான இட ஒதுக்கீடு 30 சதவிகிதம் என அறிவித்திருந்தார், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்.

பெண் மேயர்கள்

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய 6 மாநகராட்சி அந்தஸ்து பெற்ற பெருநகரங்களுக்கும் மற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவற்றில் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, ஆகிய 2 மாநகராட்சிகளுக்கும் பெண்மணிகளே மேயர்களாக நிற்பதென ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதேபோல், அவ்விரு மாநகரங்களிலும் பெண்களே அப்பதவிக்குப் போட்டியிட்டார்கள்.

அதன்படி திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குத் திருமதி புனிதவல்லி பழநியாண்டியும் திருநெல்வேலி நகராட்சிக்குத் திருமதி. உமாமகேஸ்வரியும் மேயர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

சென்னை மாநகராட்சி

356 ஆண்டுகாலப் பழமை மிக்கதான சென்னை மாநகராட்சிக்கு, ஏறத்தாழக் கால் நூற்றாண்டு கழித்து மாநகராட்சித் தேர்தல் நல்ல வண்ணம் நடந்து முடிந்திருக்கிறது.

1933 ஆம் ஆண்டுவரை சென்னை மாநகராட்சிக்கான மேயர் இலண்டன் பாணியிலேயே பதவியேற்பது வழக்கமாக இருந்துவந்தது. பின்னர், குமாரராஜா முத்தையா செட்டியார் அவர்கள்தான் எளிமையாக சென்னை மாநகராட்சியின் முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மேயராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அணிந்திருக்கும் 100 பவுன் தங்கச்சங்கிலி அந்நாளில், இவர் செய்தளித்ததே ஆகும்.

1934ல் இருந்து 1972-73 வரை சென்னை மாநகராட்சி 43 மேயர்களை, அதாவது நகரத் தந்தைகளைக் கண்டிருக்கிறது; 44 வதாக 8,24,526 வாக்குகளைப் பெற்றுத் தேர்வு பெற்றிருப்பவர்தான் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும், தி.மு.க.

இளைஞர் அணித்தளபதியுமான வணக்கத்திற் குரிய திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள். இவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் புதல்வர் ஆவார்.

தொடக்கத்தில் இப்பதவிக்கு 17 பேர் மனுச் செய்திருந்தனர். முடிவில், திரும்பப் பெற்றவர் களெல்லாம் போக, களத்தில் 8 பேர் எஞ்சி நின்றனர். எழுவரைத் தோல்வியுறச்செய்து திரு. ஸ்டாலின் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்.

இத்தனை மேயர்களில், ஒரே பெண் மேயரைத்தான் 1971-72ல் சென்னை மாநகராட்சி கண்டிருக்கிறது. திருமதி காமாட்சி ஜெயராமன் என்கிற அவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரே.

மேயர் – துணைமேயர் பதவி

முன்பெல்லாம் மாநகராட்சி உறுப்பினர் களே - அதுவும் சாதி அடிப்படையில் நகரத் தந்தையைத் தேர்ந்தெடுத்தனர்; அப்போதைய விதிமுறைகள் அப்படியிருந்தன. இப்போதோ, மக்களே பொதுத் தேர்தலில் வாக்களித்துத் தேர்ந்தெடுக்கும்முறை அமலாக்கப் பட்டிருந்தது.

நகரத் தந்தைக்கு ஒரு வாக்குச் சீட்டு; மாநகராட்சி மன்ற உறுப்பினருக்கு வேறு ஒரு வாக்குச் சீட்டு.

முன்பெல்லாம் மேயரின் பதவிக்காலம் ஓராண்டுதான்; இப்போதோ மேயர், துணை மேயர் பதவிக்காலம் ஐந்தாண்டுகள்.

ஆனால், சாதி மத அடிப்படையில் இனி மேயர் தேர்தல் நடைபெறாது.

அறிஞர் அண்ணா பாராட்டு

1957ல் நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலில் பங்கேற்பது என்று திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் முடிவெடுத்தது; இதையடுத்து சென்னை மாநகராட்சியை முதன்முதலில் கைப்பற்றியது.

அந்த மாபெரும் வெற்றிக்குக் கலைஞர் அவர்களே முழுமுதல் காரணகர்த்தாவாக இருந்தார். ஆகவே, அறிஞர் அண்ணா அவர்கள் அதற்கென நடைபெற்ற பாராட்டு விழாவில் கலைஞர் அவர்களுக்குத் தம் அன்பின் பரிசாக மோதிரம் ஒன்றை அணிவித்துப் போற்றிப் புகழ்ந்தார்.

''என் மனைவிக்குக் கூட, நகைக் கடைக்குச் சென்று நான் மோதிரம் வாங்கிய தில்லை; இதைத் தம்பி கருணாநிதிக்காகநானே சென்று வாங்கிவந்தேன்'' என்று அப்போது பெருமிதத்தோடும், பெரும் மகிழ்வோடும் அவர் பாராட்டியதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் மஞ்சள் நிறச் சால்வையோடு காட்சிதரும் மார்பளவுப் படத்தில், சால்வையை இரண்டுபக்கமும் பிடித்திருக்கும் கைவிரல் ஒன்றில் அந்த அற்புத நினைவுப் பரிசை - கணையாழியை இப் போதும் நாம் காணலாம்.

அப்போது, முதலாவது சென்னை மாநகராட்சி மேயராகத் திரு. அ.பொ. அரசு

தொடர்ச்சி 41ஆம் பக்கம்

கதர்த்துணிகளை வாங்கி கைவினைஞர்களை ஆதரிப்பீர்!

முதல்வர் கலைஞர்

தாய்த்திருநாட்டின் விடுதலைக்காக, அண்ணல் காந்தியடிகள் கதர்த் திட்டத்தைத் துவக்கினார்கள். இந்நாடு விடுதலை பெற்றபின், அண்ணல் காந்தியடிகள் ஆசியுடன் தமிழக அரசு கதர்த் திட்டத்தை அரசின் திட்டமாகச் செயல்படுத்திவருகிறது.

வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப அவர்களுக்கு வளமும், நலனும் சேர்க்கக் கிராமப் புறங்களிலே உள்ள மூலப்பொருள்களைக் கொண்டு, மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைத் தயாரிக்க ஏதுவாகக் கதர் கிராமத் தொழில்கள் இயங்கிவருகின்றன.

இவ்வடிப்படையிலேயேதான், ஆண்டுக்கு ஆண்டு, கதர் விற்பனை கணிசமாகப் பெருகிவருகிறது. அதனால், கதர்த் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் நிலையான வாழ்வைப் பெற்றுவருகிறார்கள். கதர் வாங்குவதன் மூலம் செலவிடும் தொகை கிராமங்களிலுள்ள ஏழை எளிய மக்களின் நல்வாழ்விற்கு வழி கோலுகிறது. என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏழை மக்களின் அயராத உழைப்பினால் உற்பத்தி செய்யப்பட்ட கண்கவர் வண்ணங்களில், கதர்த்துணிகள், மெல்லிய வேட்டிகள், துண்டுகள், போர்வைகள், தயாரித்த ஆடைகள், பல நவீனப் பட்டு வகைகள் கதர் அங்காடிகளில் உள்ளன. பொதுமக்கள் அவைகளைப் பண்டிகைக் காலங்களில் வாங்கவேண்டும் என்பதற் காகச் சிறப்புத் தள்ளுபடி அளிக்கப்படுகிறது.

இந்தச் சிறப்புத்தள்ளுபடியைத் தமிழக மக்கள் பயன்படுத்திக் கொண்டு, தங்களுக்கு வேண்டிய கதர்த் துணிகளை வாங்கி, இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் இலட் சோபலட்சம் கைவினைஞர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

– அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளையொட்டி மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிக்கை .

ஞாலத்தின்

மடி பறித்துச் சுதந்திரத்தை அபகரித்த வெள்ளையரின்
கொடி பறித்து விடுதலைக் கொடி பிடித்த கொள்கை வீரன்
அடி கொடுத்தால் வாங்கிக் கொண்டு
அடக்குமுறை தாங்கிக்கொள்ள
அண்ணல் வகுத்த வழி
அயராதுழைத்த சிங்கம்!
இளமையின் எழிலை இருட்டுச் சிறையில்
கழித்த தியாகி!
எண்ணையிட்ட கடுகாய் வெடிக்கும் கோபம் எனினும்
எண்ணையிட்டார் விடுதலை வேள்விக் கென்போம்!
பணமலைக்கிடையே பிறந்தார், எனினும் ஏழையை அணைக்கும்
குணமலையாகத் திகழ்ந்தார் என்போம்!
பணியின் விரைவைப் பம்பரம் என்பர்
பண்டிதர் பணியோ பம்பரம் தோற்கும்!
இடி இடிக்கும் பேச்சில் - இளமைத்
துடி துடிக்கும் எழுத்தில் - தேன் ஒரு
படி இனிக்கும் பண்பில் - அதிர்
வெடி முழக்கும் செயலில் - விடாப்
பிடியிருக்கும் குணத்தில் - விடுதலைக்
கொடியிருக்கும் கையில் - கொஞ்சம்
முடியிருக்கும் தலையில்
நீதிக்கு எதிரானவற்றையெல்லாம்
நேர் நின்று எதிர்த்ததாலே நேருவானார்... இந்திய
நீள் எல்லைக் கோடு தன்னைப் பெரும்பகைவர் கடந்தபோது -

தலைவர்

முதல்வர் கலைஞர்



என்ன நேருமோ என்றேங்கி இருந்த மக்கள்
நெஞ்சின் துயர் துடைத்து, எதுவும
நேராது நான் இருக்குமட்டும் எனச் சொல்லி நேருவானார்!
துணிவிருந்தால் உள்ளத் தூய்மையிருந்தால்
துன்பம் நேருமா? எனக் கேட்டார் குழந்தையிடம்
இன்பம் நேரும் மாமா என்றது பிஞ்சும் பூவும் -
இதனால் 'நேரு மாமா' வானார்.
மதம் கடவுள் நம்பிக்கை இவைகளிலே
அவர் கொள்கை தனி எனினும் பிறர்
மனம் புண்படாமல் நல்வழியில் ஆட்சி செய்தார்!
தன் மரணத்தின் பின்னாலே மதச் சடங்கு வேண்டாமெனத்
தக்க தருணத்தில் உயிலெழுதி உலகிற்கு ஒளி செய்தார்
நடுநிலைத் தன்மை நலமெனக் கொண்டு
நானிலம் போற்ற நமது பூங்குன்றனார் நவின்ற
''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற மொழிக்குத்
தோதாய்க் கொள்கை தொகுத்தே சொன்னார்.

காலத்தின் கோலம் காட்டுக்கு ராஜாவாய்க் கர்த்தபம் ஆகும்
ஏலத்தில் சில பேர் கோபுர உச்சியில் குந்திக்கொள்வர்! 'இந்திய
ஞாலத்தின் தலைவராய்' ஜவகர் ஆனது இவ்விதமல்ல! அவர்
சேலத்து மாம்பழம் - சென்னைக் கடற்கரை-
கொள்கை முத்து - கொள்ளேகால் பட்டு-
தஞ்சைக் கோயில் - தண்புனல் காவிரி-
தறியில் காஞ்சி - தடந்தோள் பாண்டியன்-

– சென்னையில் 14.11.1970 அன்று நேரு கண்ட ஜனநாயம்''
என்ற தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில்
கலைஞர் அவர்களின் தலைமைக் கவிதையிலிருந்து.

வாழ்க்கைக் கலை!

பேராசிரியர் அரசு மணிமேகலை
உறுப்பினர் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்.

வாழ்க்கை ஒரு பெரிய கலை; அதனை வளமான முறையில் வாழ்ந்து முடிப்பவர்கள்; சுவடுகளைப் பதிப்பவர்கள் மிகச் சிலரே.

பெரும்பாலோர் புலம்பலிலேயே வாழ்க்கையைத் தொடங்கி, புலம்பலிலேயே முடித்துக் கொள்கிறார்கள்.

பலரின் வாழ்க்கை வரலாற்றை எழுத முற்பட்டால், பிறந்தார், இருந்தார், இறந்தார் என்கிற மூன்றே வார்த்தையோடு முற்றுப் பெற்று விடும்.

அதற்கு மேல் எழுத எதுவுமே இருக்காது. இடுகாட்டில் பலரைப் புதைத்த இடத்தில் பிறந்த தேதி இது, இறந்த தேதி இது என்று குறிப்பிடப்பட்டிருக்கும்.

வாழ்ந்த காலம் முழுக்க, பிறந்ததிலிருந்து இறக்கும் வரை அவர்கள் செய்த உருப்படியான செயல்கள் இவை இரண்டு மட்டுமே என்பது உற்று நோக்குவோருக்கு மட்டுமே புலப்படும் உயரிய உண்மைகள்...

அதனால்தான், அவர்கள்பால் கொண்ட அனுதாபத்தின் காரணமாக, பொறுப்பே இல்லாமல் வாழ்ந்து முடித்துவிட்டார்களே என்கிற பரிதாபத்தால், போகின்ற காலத்தில் நாம் ஓர் உதவி செய்கிறோம். வைகுண்ட பதவி அடைந்தார் - சிவலோக பதவி அடைந்தார் என்று வாழ்த்தி அனுப்புகிறோம்.

மிகச் சிலரின் வாழ்க்கையில் மட்டுமே பிறந்தார், வாழ்ந்தார், வளர்ந்தார், வளப்படுத்தினார், நின்றார், நிலைத்தார் என்கிற நிலைகள் இருக்கும். அப்படிப் பட்டவர்களையே உயர்ந்தோர், சான்றோர், புகழுக்குரியோர் என்று போற்றி மகிழ்கிறோம்.

"மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்த்தனரே!"

– என்று புகழ்கிறது புறநானூறு.

நிலையாமை என்னும் குணத்தை உடைய இவ்வுலகத்தில் நிலைத்து நிற்க வேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள், தம் புகழை நிலை நிறுத்துகிறாற் போல, அருஞ்செயல்களைச் செய்துவிட்டு, பிறகே இயற்கை அடைந்தார்கள் என்கிற இந்தப் புறநானூற்றுப் பாடல் கருத்து நினைந்து இன்புறற்குரியது.

தீய செயல்களைச் செய்யாதிருத்தல் :-

"ஈன்றாள் பசிகாண்பாள் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை"

– என்று கூறுகிறார் இரண்டடியால் மக்கள் தம் இதயத்தின் பரப்பளந்த வான்புகழ் வள்ளுவர்.

தாய்ப்பசியைப் போக்கவே தவறுகள் செய்யக் கூடாது என்னும் போது, தன்பசி போக்க அவன் தவறு செய்யலாமா? கூடாதல்லவா? இதைச் சொல்லாமல் சொல்லுகிறார் வள்ளுவர்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று நான்கு பேரைக் குறிப்பிடுவார்கள் சிலர். என்னைக் கேட்டால், மாதா, பிதா, குரு = தெய்வம் என்பேன். மாதா, பிதா, குருவை அலட்சியம் செய்துவிட்டு, மண்ணுலகில் எந்தத் தெய்வத்தை வணங்கி நன்மைகள் ஈட்டிக்கொள்ளப் போகிறார்கள்? வியப்பல்லவா?

அப்படிப்பட்ட முதல் நிலையில் அன்னையை எண்ணவேண்டும் என்பதற்காகவே வள்ளுவர் கூறுகிறார்.

'யாருடைய பசியைப் போக்க வேண்டும் என்று துடிக்கிறாய்? ஓ! அன்னையின் பசியையா? ம்கூம்... அன்னையின் பசியாகவே இருந்தாலும், தீய செயல்களைச் செய்து, பசி தீர்க்க முயலாதே' என்கிறார் வள்ளுவர்.

'நீ வணங்க வேண்டிய முதல் தெய்வம் உன் தாய்தான்' என்று சொல்லாமல் சொல்கிறார் வள்ளுவர்.

பகுத்துண்ணும் பண்பு:-

இருப்பனவற்றைப் பகுத்துண்ணும் பண்பு, எல்லோரிடமும் காணக் கூடிய ஒன்றன்று.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

– என்று குறள் கூறுவது உண்மையிலும் உண்மையே.

இருப்பனவற்றைப் பகிர்ந்துகொள்ளத் தெரிந்தவனுக்கு, எல்லா நல்ல குணங்களும் இருக்க வாய்ப்புண்டு.

"உண்டாலம்ம இவ்வுலகம்; இந்திரர் அமிழ்தம்
இயைவது ஆயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் இலரே"

– என்னும் பாடலில் கடலுள் மாய்ந்த இளம் பெரு வழுதி என்னும் அரசர் பகிர்ந்து கொள்ளும் குணத்தார் இருப்பதால் மட்டுமா உலகம் நிலைத்திருக்கிறது என்கிறார்.

பட்டியலில் வருகிற மற்ற பண்புகள்:-

"முனிவிலர்,
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சிப்

புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்; பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே''

– என்கிறார்.

''சினம் கூடாது; சோம்பல் கூடாது; சான்றோர் அஞ்சும் செயல்களைச் செய்யக் கூடாது. புகழ் எனில், உயிரையும் தரல் வேண்டும். பழி வருமெனில், உலகே கிடைப்பதாக இருந்தாலும் செய்யக் கூடாது. அயர்வு கூடவே கூடாது. தன்னலம் பாராமல் பிறருக்காகவே பாடுபடல் வேண்டும்.'' என்கிற அன்றைய வரிகள் அன்றைக்கு மட்டுமல்ல, இன்றைக்கும் ஏன் என்றைக்கும் பொருந்து கின்ற பைம்பொன் வரிகள்.

செல்வத்துப் பயனே ஈதல்:-

எதற்காக நாம் செல்வத்தைச் சேர்க்க வேண்டும்? பிறருக்கு வாரி வாரி வழங்குவதற்காகவே, செல்வத்தைச் சேர்க்க வேண்டுமே அல்லாது, தன் மனைவி, தன் மக்கள் பயன்பட மட்டுமே அல்ல.

என்ன எளிமையான வார்த்தைப் பூக்களைக் கொண்டு வனைத்து காட்டுகிறார் நக்கீரர் புறநானூற்றில்...

''தென்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும், பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி, உடுப்பவை இரண்டே
பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்போம் எனினே தப்புன பலவே''

வெண் கொற்றக் குடையின் கீழமர்ந்து வையத்தை அரசாளும் வேந்தனாக இருந் தாலும் சரி, இரவும் பகலும் தூங்காமல் விலங்குகளை வேட்டையாடித் திரிகிற வேடனாக இருந்தாலும் சரி; உண்பது நாழி அரிசிச் சோறுதான்; உடுப்பவை இடுப்பில் ஒன்றும், தோளில் ஒன்றுமாக இரண்டு ஆடைகள்தான்.

செல்வத்துப் பயனே பிறருக்குத் தருவதுதான். பிறருக்குத் தராமல், நாமே அனுபவிப்போம் என்றால், அந்தச் செல்வம் நம் கையை விட்டுப் போய்விடும்...

எத்தனை உயரிய தத்துவத்தை எத்தனை எளிமையாகச் சொல்லியிருக்கிறார் பாருங்கள்?

பின்னென்ன? அரசர் என்பதாலேயே, ஆறு நாழி உண்டுவிட முடியுமா? அடிப்படைத் தேவைகள் எல்லோருக்கும் ஒன்றுதானே?

ஆனால், உலகில் பலரின் அநியாயப் பேராசைகளைப் பார்க்கத்தானே பார்க்கிறோம்! ஏராளமான சொத்துக்களை வாங்கிச் சேர்ப்பதே பிறவி எடுத்ததன் பெரும்பயன் எனப் பலர் செயல்படுவதில்லையா?

எத்தனை ஆண்டுகளுக்கு முன்னால் ''உண்பது நாழி; உடுப்பவை இரண்டே'' என்று நயமாகச் சொல்லி வைக்கப்பட்டிருக்கிறது பாருங்கள்!

தத்துவ நோக்கோடு, தார்மீகப் போக்கோடு மக்கள் செயல்பட வேண்டும் என்கிற கவிஞரின் எண்ணம் நமக்குத் தெளிவாகப் புலப்படுகிறது...

நல்லதும் அல்லதும்:-

நரிவெரூஉத் தலையார் ஒருபடி மேலே சென்று, ஓர் உயர்ந்த உண்மையைச் சொல்கிறார்.

''நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்
எல்லோரும் உவப்பது; அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே''

எல்லாருக்குமே அன்ன சத்திரம் ஆயிரம் வைக்க முடியாது; ஆலயம் பதினாயிரம் நாட்ட முடியாது; ஏழைகட்கெல்லாம் எழுத்தறிவிக்க முடியாது.

ஆனால், ஒன்றே ஒன்று செய்ய முடியும் இல்லையா?

என்ன அது? அன்னதானம், ஆலயப் பணி, எழுத்தறிவித்தல் இவை போன்ற நல்லவை செய்ய முடியாமல் போகலாம்!

ஒன்றைச் செய்ய முடியுமே! ஆமாம்! நல்லது செய்ய முடியாவிட்டாலும், கெட்டது செய்யாமலாவது இருக்கலாம்-அல்லவா?

இதில் மறைமுகமாக, பல கருத்துக்களைச் சொல்லிச் செல்கிறார் கவிஞர்.

ஆலயங்கள் சென்று ஆண்டவனை வழிபட்டு நின்றால், மட்டும் நல்ல கதிக்குப் போய் விட முடியுமா? முடியவே முடியாது இல்லையா?

நல்லது செய்தால்தான் நற்கதிக்குப் போகலாம். சரி... நல்லது செய்ய முடியாவிட்டாலும், கெட்டது செய்யாமல் இருந்தாலும் கூடப் போதுமே! ''நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே'' என்கிற நயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏழையானாலும் சரி, எளியவரானாலும் சரி; எல்லோருக்கும் பொருந்துகின்ற ஏற்ற மிகு நல்லுரை இது எனலாம்.

உலவும் நிலவு உரைத்திடும் பொருள்:-

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்னும் ஓங்கு புகழ்ப் புலவர், உலவும் நிலவைக் காட்டி ஓர் உண்மையை உரைக்கின்றார்.

தாமரை மலரின் இதழ்கள் நூற்றுக் கணக்கில் இருக்கும். ஒரே மாதிரி இருக்கும். அதே போல ஒரு குடிப் பிறந்து, ஒன்றாய் வாழ்கின்ற பலர் குறித்து ஆராய்ந்தால், அவர்களுள் சிலரே புகழுடன் வாழ்வது புலனாகும். பலரோ தாமரையின் இலையைப் போல, எந்தச் சிறப்புமின்றி, மாண்டவர்களாக இருப்பார்கள்.

நிலவு ஓர் உண்மையைச் சொல்லி நிற்கிறது. செல்வம் தேயும்; பின்னர் வளரும்; இல்லாமலேயே மாயும்; பின்னர் பிறக்கும் என்பதைக் கல்லாதோருக்குக் காட்டி நிற்கிறது.

''வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை ஆகுமதி!''

அருஞ் செயல் செய்ய வல்லவர் ஆயினும், வல்லமை அற்றோர் ஆயினும், பசி என்று பரிதவித்து வந்தவருக்கு, இரக்கம் காட்டுங்கள்; பரிவு காட்டுங்கள் என்கிறார்.

இவர் பாடலைப் படித்தபின் வானிலே நிலவு கண்டால், கவிஞன் சொன்ன வண்ணக் கருத்து நினைவுக்கு வராமல் போய்விடுமா? இல்லை... போகத்தான் முடியுமா?

விடா முயற்சி இருந்தால் வெற்றி கிடைத்தே தீரும்; தூற்றினோரே துதிபாடுவர்; ஏளனம் பேசியோர் ஏத்தி ஏத்தித் தொழுவர்!

– அறிஞர் அண்ணா

வாழ்க்கையிலே இந்தச் செல்வம்தான் பெரும் பங்கு வகிக்கிறது. ஒருவரைச் செல்வமுடையவர் என்று போற்றுதலும், மற்றும் ஒருவரை மாப்பொருள் இழந்த நிலையில் தூற்றுதலும் அன்றாடம் உலகில் அடிக்கடி நடக்கும் நிகழ்ச்சிகளே!

வளர்பிறை வளர்ந்து முழுநிலா ஆதலும், முழு நிலா தேய்ந்து இருளில் மூழ்கலும் வானின் நியதிகள் மட்டும் அல்ல... வாழ்க்கை நியதிகளும்தான். இதைப் புரிந்துகொண்டோம் என்றால் உள்ளம் பண்பட்டவர்களாய், உயர்ந்தவர்களாய் நாம் மாறிவிடுவோம்.

கருத்துக் கருவூலமாம் கணியன் பூங்குன்றனார் கருத்து:-

சிலபல கருத்துக்கள் அந்த நூற்றாண்டுக்கு மட்டுமே பொருந்தும்.

ஒரு சில கொள்கைகளே எந்த நூற்றாண்டுக்கும் பொருந்தும். அந்தக் கணக்கில் பார்த்தால், சென்ற நூற்றாண்டு, இந்த நூற்றாண்டு, எதிர்வரும் நூற்றாண்டு என்று எல்லா ஆண்டினுக்கும் பொருந்தும் கருத்துக் கருவூலம் கணியன் பூங்குன்றனாரின் பாடல் என்பதை யாரும் மறக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

பண்டைத் தமிழரின் வாழ்க்கைக் கோட்பாடுகள் எவையென்று கேட்டால், இந்த ஒரே பாடலைச் சான்று காட்டினாலே போதும்...

அந்த அளவுக்கு முழுமையான வாழ் வியல் தத்துவம் அந்தப் பாடலில் கூறப்பட்டுள்ளது.

தேசிய ஒருமைப்பாடு என்பதை இந்த நூற்றாண்டின் இனிய தத்துவம் என்பதைப் போல நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எண்ணிப் பாருங்கள்...

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று ஒரு தமிழ்ப் புலவர் தொடங்குகிறார் என்றால், அது உலக ஒருமைப்பாட்டுக்குத் தரப்படுகின்ற உரத்த குரல் பிரகடனம் அல்லவா?

''எல்லாமே என் ஊர்தான்; எல்லாருமே என் உறவினர்தான்'' என்று சொல்கிறார் என்றால், எப்படிப்பட்ட பண்பான உள்ளம் - பக்குவப்பட்ட உள்ளம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா?

இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிற இந்தக் காலகட்டத்தில் கூட - சாதிக்கொரு சங்கம் வைத்து 'சங்க காலம்' என்று புகழ் பெறுகிற இந்தக் காலகட்டத்தில்கூட மக்களால் இப்படித் தீர்மானமாக, திடமாகச் சொல்ல முடியுமா என்றால், சொல்ல முடியாது என்பதுதான் பதிலாக இருக்கும்.

சரி... முழுப் பாடலையும் பார்ப்போம்.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ எனாது
கல்பொருது இரங்கும் மல்லல்பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆதலின், மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!''

''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்கிறார் பிறரால் நமக்குத் துன்பமே வருகிறது என்று நினைப்பதுதான் மனித மனத்தின் இயல்பு.

ஓரத்திலே இருக்கும் ஆட்டுக்கல்லில் காலை இடித்துக்கொண்டு ஆவென்று அலறுவோம். 'என்ன?' என்று யாரேனும் கேட்டால், ''ஆட்டுக்கல் என் காலில் இடித்துவிட்டது'' எனபோமேதவிர, ''நான்போய் ஆட்டுக்கல்லில் இடித்துக் கொண்டேன்'' என்று சொல்ல மாட்டோம். இதுதான் மனித மன இயல்பு.

ஆனால், கணியன் பூங்குன்றனார் அழகாக எடுத்துரைக்கிறார்.

''தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும், தணிதலும் அவற்றோ ரன்ன...''

அதுமட்டுமா? மனிதன் பிறந்த நாளிலேயே மரணம் என்பதும் விதிக்கப்பட்ட ஒன்று மரணம்; ஒன்றும் புதுமையானதில்லை.

நாம் எப்படி வாழ்க்கையை வாழ வேண்டும்?

மரணம் என்கின்ற ஒன்று நிச்சயம் என்று தெரிந்துவிட்டது. எல்லோருக்கும் உண்டு அந்த மரணம் என்பதும் தெரிந்துவிட்ட ஒன்று. அதனால், வாழ்தலை இனிமையானது என்று எண்ணி அதிகமாய் மகிழவும் மாட்டார்களாம்; ஏதோ வெறுப்பு வந்துற்றால், 'ச்சே, இந்த வாழ்க்கையே பெருந்துன்பம்' என்று மனங் குலைந்து போவதுமில்லையாம்!

என்ன பக்குவப்பட்ட மனம் பாருங்கள்... இன்பத்தில் இறுமாந்து நிற்பதும், துன்பத்தில் அதிகமாய் துவண்டுபோவதும்தான் வாழ்க்கைப் போக்கை நிலை குலையச் செய்கின்றன. அந்த இரண்டிலுமே நிதானம் கடைப் பிடிக்கப்படுகிறது என்னும்போது, பதற்றமும் பரபரப்பும், வருத்தமும் வாட்டமும் அதிகம் வர வாய்ப்பில்லை அல்லவா? என்ன உயரிய வழிகாட்டல்?

நீர் வழிச் செல்லும் ஓடம் போல, ஊழ் வழியே மனிதர் செல்வர் என்பதால், பெரியோரை வியக்கவும் மாட்டார்களாம்; சிறியோரை இகழவும் மாட்டார்களாம்.

சலனமில்லாத மனத்தோடு, விளாம் பழமும் ஓடும் போல, வாழ்க்கையை அனுபவிக்கும் போக்கு இது.

இதனைக் கற்றுக்கொண்டால் வாழ்க்கையில் துன்பம் என்றுமே வாராது.

பண்டைத் தமிழரின் வாழ்க்கைக் கோட்பாடு நம்மை வியக்கவைக்கின்றது; கைகுவிக்க வைக்கின்றது; பின்பற்ற வேண்டும் என்று நினைக்க வைக்கின்றது. ■

நமதரும் தமிழ்நாட்டிற்கு, அந்நாளில் விரும்பிவந்த வெளிநாட்டினர் பலராவர். அவர்களுள் மிகச் சிலரே தமிழ் மொழியைக்கற்றுக் கொள்ளவும், தமிழினை வளர்க்கவும், தமிழில் பல்வேறு ஆய்வுகளை மேற்கொள்ளவும் பேரவாக்கொண்டவர்களாக இருந்தார்கள்.

அவ்வாறு, வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து தமிழ்த்தொண்டு புரிந்தவர்களில் முதலாமவர். வீரமாமுனிவரேயாவார்.

இத்தாலியில் 23.11.1680ல் பிறந்த பேரறிஞரான இவர் ஒன்பது மொழிகளிலே தேர்ச்சி பெற்றிருந்தார். பரமார்த்தகுருவின் கதை, தேம்பாவணி ஆகியவை, இவரால் எழுதப்பட்டவைகளே!

சென்னையில் சிலை

வீரமாமுனிவர், திருக்குறளின் மேல் மிகுந்த ஈடுபாடுகொண்டிருந்தார்; குறளை இலத்தீனிலும் மொழிபெயர்த்தார்.

தமிழ் எழுத்துக்களில், அரும்பாடுபட்டு சில சீர்திருத்தங்களையும் செய்த இவர், மேனாட்டு முறையின் அடியொற்றிச் 'சதுரகராதி'யையும் தொகுத்தளித்துப் பெருமைபெற்றார்.

1968 ஆம் ஆண்டில், சென்னை மாநகரில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற போது, கடற்கரையோரத்தில் வைக்கப்பட்ட கவின்மிகு திருவுருவச் சிலைகளில் வீரமா முனிவர் சிலையும் ஒன்று என்பது குறிப்பிடத் தக்கது.

இசையின் வகை

இசை ஏழு ஆகும். அவை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பவை. இவைகளில் இடத்தால் குரல், நாவினால் துத்தம், அண்ணத்தால் கைக்கிளை, சிரத்தால் உழை, நெற்றியால் இளி, நெஞ்சால் விளரி, மூக்கால் தாரம் எனத் தனித்தனியே பிறக்கும். இவையே ஏழு சுரங்கள் எனவும், வீணையில் ஏழு நரம்பெனவும் குறிப்பிடப்படும்.

இவற்றில் ஓசை யுவமை - மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை;

சுவை உவமை-பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங் கனி;

வாசனையுவமை மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னாவிரை, புன்னை;

அக்கரம் ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஔஉ;

மாத்திரை நான்கு குரல், நான்கு துத்தம், இரண்டு கைக்கிளை, மூன்று உழை, நான்கு இளி, மூன்று விளரி, இரண்டு தாரம்.

இவற்றால் ஏழு பாலை பிறக்கும்; அவை யாவன: குரலே குயிலாகுமா்னால் செம்பாலை, துத்தமே குரலாயின் படுமலைப் பாலை, கைக்கிளையே குரலாயின் செவ்வழிப் பாலை, உழையே குரலாயின் அரும்பாலை, இளியே குரலாயின் கொடிப்பாலை, விளரியே குரலாயின் விளரிப் பாலை, தாரமே குரலாயின் மேற்செம் பாலை.

இவற்றுள், செம்பாலைக்குக் கொடிப்பாலை வலிது; கொடிப்பாலைக்கு விளரிப் பாலையும், மேற் செம்பாலையும் வலிது; அன்றியும் தாரத்துள் உழையும், உழையுள் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத்துள் விளரியும் விளரியுள் கைக்கிளையும் பிறப்பது தகுதி.

இசையின் வகை - பைரவி, தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, பட மஞ்சரி, தேசி, இல்லிதை, தோடி, வசந்தம், இராக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌரி, நாட்டை, தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம். என 32 வகை ஆகும்.

- தமது 'சதுரகராதியில் இவ்வாறெல்லாம் நம் தமிழிசைபற்றிப் பலவிதமாக ஆய்வு செய்திருக்கிறார் வீரமா முனிவர்.

– கோ. பாஸ்கரன்

சுந்தரராஜனுக்கு ஒரு மாதம் லீவாம். முதல் ஒரு வாரம் கிராமத்தில் என்னுடன் வந்து தங்கப் போவதாக எழுதியிருந்தான். ஸ்டேஷனுக்கு வண்டி போய் அழைத்து வந்தது. விடியற் காலை, கொல்லையில் இரண்டு காட்டாமணக்கு குச்சிகளை ஒடித்துப் பல்லில் கடித்து சுவைத்துக் கொண்டே ஆற்றங் கரைக்குக் கிளம்பினோம்.

''அப்பா அம்மா யாரும் இல்லையா?'' என்று வழியில் கேட்டான் அவன்.

''ஊரில் இல்லை.''

''எங்கே, அண்ணாவோ இந்தத் தடவை!''

''இல்லை. அக்காள் வீட்டுக்கு.''

''எப்போது போனார்கள்?''

''இரண்டு வாரம் ஆச்சு.''

''நீங்களெல்லாம் ரொம்பக் கொடுத்துவைத்தவர்கள் அப்பா.''

''என்ன?''

''இத்தனை வயதுக்கு மேலே அப்பாவும் அம்மாவும் உயிரோடே இருந்து, அவர்களுக்கு நீங்கள் செய்து போடுகிறது என்றால் அது அதிருஷ்டந்தானே?''

''உண்மைதான், உங்கள் அப்பாவும் நீ ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறதைக் கண்டுவிட்டுத்தானேபோனார்.''

''ஆனால் உங்கள் அப்பா சேதி வேறு.''

''என்ன?''

''மூன்று பிள்ளை, மூன்று பெண், ஆளுக்கு இரண்டு மாசமாய் அவர் முகாம் போடலாம். இடம் மாறினாலேயே மனசுக்கு ஒரு சந்தோஷம், சலிப்பு இருக்காது. சிணுங்கி இராது, பார்.''



... எங்கள் அப்பா கோபத்தை அடக்கினவர். அடிக்கடி கோபம் வராது. வந்தால் சிரமம்...

''சலிப்பு, சிணுக்கல் வந்தாலும் இடம் மாற்றிக் கொள்ள வழி இருக்கும். வருகிறாயா?''

''ஆமாம். ஆனால் உங்கள் அப்பாவுக்குச் சலிப்பு சிணுக்கல் வர நியாயம் இல்லை. சின்ன வயசிலிருந்து தியானம் பூஜை என்று மனசை நல்ல வழியில் ஒழுங்குப்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார். கோபம், தாபம் எல்லாம் அடக்கினவர். எங்கள் அப்பா மாதிரி இல்லையே, எங்கள் அப்பாவுக்குக் கடைசி மூச்சு வரையில் கோபம் போகவில்லை. கோபித்துக் கொண்டாலும் என்னை விட்டுப் போகிறதுக்கு வழி இல்லை.'' சுந்தரராஜன் ஒரே பிள்ளை.

''சிரமமாகத்தான் இருந்திருக்கும்'' என்றேன்.

''யாருக்கு?''

''அவர், நீ - இரண்டு பேருக்குந்தான்.''

''பழகிப்போச்சு, ஒருநாள் இரண்டு நாள் அல்லவே நாற்பது வருஷமாக விவரம் தெரிந்த நாளாக அவர் கோபத்தை அநுபவித்துக் கொண்டேஇருந்ததனால்நாளாக நாளாக மனசிலே உரைக்காமலே போய் விட்டது.''

''எனக்குப் பழகிப் போகவில்லை. அதுதான்வித்தியாசம்.''

''அப்படி என்றால்?''

''எங்கள் அப்பா கோபத்தை அடக்கினவர். அடிக்கடி கோபம் வராது. வந்தால் சிரமம்.''

''உங்கள் அப்பாவுக்குத்தான் கோபமே வராதென்றுதான் நீ சொல்லியிருக்கிறாயே?''

''வெளியிலே' என்று ஒரு திருத்தம் சேர்த்துக்கொள்ளேன் இப்போது.''

– தி. ஜானகிராமன்

''இப்போது அதற்கு அவசியம் வந்திருக்கிறதா? வயசான குற்றமாக்கும்?''

''ஆமாம், வயசு அறுபத்தெட்டுஆகிவிட்டது, அவருக்கு. ஆனால் இப்பொழுதென்று இல்லை. எப்போதும்அப்படித்தான். வெளியிலே யாரும், அவர் கோபித்துக் கொள்வாரா, கோபம் என்று ஒன்று தெரியுமா என்றுதான் நினைப்பார்கள். வீட்டில் இருக்கிறவர்களுக்குத்தான் அவர் மனசு எப்படிக் கோணுகிறது என்று தெரியும். சின்ன சமாச்சாரத்துக்கெல்லாம் கோபம் வந்துவிடும். குழம்பிலே கொஞ்சம் புளி தூக்கலாக இருந்துவிட்டதானால் கண்ணிலே விரலைக் கொடுத்துத்தான் ஆட்டுவார்.''

''எல்லாருக்கும் இருக்கிறதுதான். ஆனால் உங்கள் அப்பாவுக்கும் இந்த மாதிரி என்று நீ சொன்னதில்லை, இது வரைக்கும்.''

''சின்ன வயசிலே ஒன்று நடந்தது. அப்பாவும் நானும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். எனக்குப் பதினாறு வயசு இருக்கும். அப்பா பச்சடிக்கு உப்பு ஜாஸ்தி என்று இக்குபிக்கென்று காய்ச்சுகிறார். அம்மாவுக்குத்தான் தொண்டையை அடைத்து அடைத்து வருகிறது. இவ்வளவு சின்ன விஷயத்துக்கு இவ்வளவு பேச்சா என்று எனக்கும் தாங்கவில்லை. ஆனால் பேச முடியுமா? அப்பா எழுந்து போகிறவரைக்கும் பேசாமல் இருந்தேன். எழுந்து கையலம்பக் கொல்லைப்பக்கம் போனார். தொண்டையில் துக்கம் அடைக்க, 'அம்மா இனிமேல் இந்த அப்பாவோடு உட்கார்ந்து சாப்பிடவே போறதில்லை' என்று குமுறினேன். அம்மா சொன்னது என்னதெரியுமா?''

''ம்...''

''சீச்சீ நாயே! வாயை அலம்பு, நாயே! அப்பாவோடு சாப்பிடமாட்டேன் என்கிற காலிக்கு இங்கே என்ன வேலை? ஓடு வெளியிலே'' என்று சீறினாள் பார், அப்படியே வெதறிப்போயிற்று எனக்கு.''

''பழங்காலத்துப் பெண் தெய்வம்.''

''அப்பாவிடம் சொல்லட்டுமா என்றாள். சொல்லேன் என்றேன். 'சொன்னால் உன் முகரக்கட்டையிலே விழிக்கக்கூட மாட்டாரடா முகரக் கட்டை!'' என்று மூன்றாம் மனிதர் காதிலே படாமல் பாட்டுப் பாடினாள். அப்பா கையலம்பிவிட்டு வந்தார். 'என்ன!' என்றார். 'மோர் புளிக்கிறதாம் துரைக்கு! முகரக் கட்டைக்கு' என்று அம்மா காற்றாடியைத் திருப்பி விட்டாள். ஏதுக்குச் சொல்ல வந்தேன் என்றால், அப்பா சின்னதுக்கெல்லாம் இப்படித் தலைசுற்றி ஆடுவார். வெளியிலே போகிறபோது அவர் முகத்தைப் பார்த்தால் சாந்தமே ரண்டு கால், ரண்டு கையோட நடந்து போகிற மாதிரிதான் இருக்கும்.!''

சுந்தரராஜன் புன்சிரிப்புடன் 'ம்' போட்டுக்கொண்டு வந்தான். எனக்கு, இறக்குவதற்கு ஒரு மாற்றுத்தலை அகப்பட்டு விட்டாற்போல் இருந்தது அவன் வந்தது.

''என் பிள்ளைகளை அடித்துக் கண்டித்துக்கொண்டு வரவில்லையென்று அப்பாவுக்கு ரொம்பக் கோபம் என் பேரிலே. சின்னது, சும்மாவா இருக்கும்! கை சும்மா இருக்குமா, அவர்களுக்கு? பெரிய பயல் இருக்கிறானே!''

''மணிப்பயலா?''

''ஆமாம், அவன் ஏதாவது சத்தம் போட்டுக்கொண்டேதான் இருப்பான். அவனை விரட்டி விரட்டிக்கொண்டு ஓடுவார். கையிலே அகப்படவில்லையோ, அவருக்கு



... உனக்கும் குறும்பு போகவில்லை. அப்பா! அப்படியே நடிக்கிறாயே பதினைந்து இருபதுநாள் முன்னாலே என்ன ஆச்சு தெரியுமா?...

ஆத்திரம் பொங்கிக்கொண்டு வரும். கடைசியிலே பிடித்து நாலு வைக்கவும் வைப்பார். அதோடு நின்றால் தேவலையே! இரண்டு மணி நேரம் வாயாலே பொரிந்து தள்ளுவார். அந்தப் பயலை என்ன என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் நீ? மகா நெஞ்சு உரப்பில்லை அவனுக்கு? அரை நிமிஷம் சும்மா இருக்கிறானா? என்ன ஓட்டம்? என்ன கூச்சல்? புஸ்தகத்தை விரலாலே தொடமாட்டேன் என்கிறான். பிள்ளையாண்டானா வாயைத் திறக்க மாட்டேன் என்கிறான், பிள்ளையை அப்படிக் கொண்டு வருகிறானாம்! எலே, இங்கே வாடா எலெ... காலமெ எழுந்திருந்தவுடனே வாசிடா என்றேனா இல்லையா? என்பார். 'அதுதான் வாசித்தேனே, தாத்தா?' என்பான் அவன். 'என்னடா வாசித்தாய்? இரண்டு நிமிஷம் வாசித்தால் போதுமாடா? - சும்மா சும்மா என்னத்தை வாசிக்கறதாம்?' - 'பிரபவ, விபவ பாடம் பண்ணச் சொன்னேனா, இல்லையா? சொன்னேனா இல்லையாடா?' - 'சொன்னாய்' - 'பண்ணினாயா?' - 'பண்ணினேன்' - 'சொல்லு பார்ப்போம்!' - 'இருபதுதான் வரும் - 'ஏன் மீதி?' - 'அறுபது இருக்கிறதே!' - 'பின்னே முப்பதாஇருக்கும்?' - 'உக்கும்' - ''என்ன உக்குமா? உக்குமா போடுகிறாய்?' துடையைப் பிடித்துக் கிள்ளுவார் அவனை. ஓ என்று ஒப்பாரி வைப்பான் அவன். 'மூடு வாயை! மூச்சுப் பரிந்தாயோ கொலை விழுந்து விடும்' என்பார்.

முன்னாலெல்லாம் மூச்சுப் பரியாமல்தான் இருந்தான் அவன், வரவரத் துளிர்விட்டுப் போய்விட்டது அவனுக்கு. அடிக்க அடிக்க வாயை 'ஆ' என்று நன்றாகப் பிளந்து கொண்டு அழுவான், அழுவான், அப்படி அழுவான். ஒன்றும் பலிக்கவில்லையென்றால் இவர் என்ன செய்வார் தெரியுமா? 'அப்பா, இனிமேல் அடிக்கவில்லையடா, அடிக்கவில்லையடா, அடிக்கவில்லையடா, எனத்தன் கன்னத்திலே பளீர் பளீரென்று தானே போட்டுக்கொள்வார். 'உன்னை விழுந்து கும்பிடுகிறேனடா' என்று கை இரண்டையும் கூப்பிக் கொண்டு நிற்பார். இதைப் பார்த்ததும் அவன் இன்னும் வீலென்று கத்துவான். கடைசியிலே அம்மா வந்து, 'விட்டுத் தொலையுங்களேன் அதை. அதுதான் அடங்காப்பிடாரி, அதோடு என்னத்துக்கு மல்லாட்டம்' என்பாள். 'விட்டுத் தொலைக்காமல் என்ன பண்ணப் போகிறேன்? எக்கேடும் கெட்டுப் போகட்டும், விட்டுத் தொலைக்காமல் என்ன? இதெல்லாம் விட்டுத் தொலைத்துவிட்டு, காசாயத்தை கட்டிக் கொண்டு போகலாமென்றுதான் பார்க்கிறேன். அதற்கு இன்னும் படைத்தவன் மனசு வைக்கவில்லை. தொலைக்காமல் என்ன?' என்று சொல்லி விர்ரென்று வாசலைப் பார்க்கப் போய் விடுவார்.''

''உனக்கும் குறும்பு போகவில்லை. அப்பா! அப்படியே நடிக்கிறாயே பதினைந்து இருபதுநாள் முன்னாலே என்ன ஆச்சு தெரியுமா?''

''ம்''

''காலையில் பொழுது புலரஇருக்கிறது, எனக்கு நல்ல தூக்கம். ராத்திரி ஒரு மணிக்குத் தான் படுத்தேன். விடிய விடிய அப்பா குரல் கேட்டது. கூடத்திலே உட்கார்ந்து கொண்டு மணிப்பயலைக் காய்ச்சிக் கொண்டிருக்கிறார். செஷன்ஸிலே குறுக்கு விசாரணைபோல நடக்கிறது. விஷயம் இதுதான்; தங்கை ஊரிலிருந்து வந்து ஒரு மாசம் இருந்தாள். இந்தப் பயல் வாயாடியா? அவள் ஏதோ சொல்ல இவன் தத்துப் பித்தென்று ஏதோ சொல்லியிருக்கிறான். அத்தைக்கும் பயலுக்கும் வாய் தடித்துப் போச்சு.

இந்தப்பயலுக்கு எட்டு வயசுதான். ஆனால் வாய்க்கு இருபது வயசு.

''குழந்தைகளைவைத்துக் கொண்டு பெரியவர்கள் ஊர் வம்பு அளந்தால் அவை கற்றுக் கொள்ளாமலா இருக்கும்? நீ இனிமேல் எங்கள் வீட்டுக்கு வரவேண்டாம் என்று உள்ளே போய்க் கதவைச் சாத்திவிட்டானாம். தங்கை தடாலென்று கதவைத் திறந்துவிட்டு, 'அப்படித்தாண்டா வருவேன். எங்க அண்ணா வீட்டுக்கு நான் வருவேன். நீ யார் கேட்க?' என்று உள்ளே போனாளாம். அந்தப் பயலுக்கு வெறி, ஒரு புத்தகத்தைத் தூக்கி தங்கை தலைமேல் எறிந்தானாம். அப்போது நானும் இல்லை; அப்பாவும் இல்லை; முதல் நாள் சாயங்காலம் நடந்ததற்குக் காலையில் விசாரணை நடக்கிறது. காலையில் ஆறு மணிக்கு, 'எத்தனை நாழிகையாடா தூங்குகிறாய்?' என்று ஆரம்பித்து முதல்நாள் கேசை எடுத்துக் கொண்டார், அப்பா. அரை மணியாகக் கேள்வி மேலே கேள்வி. நான் படுத்துக் கொண்டே கேட்டேன். எட்டு வயசுப் பிள்ளை பதில் சொல்லுகிற கேள்வியாகவே இல்லை ஒன்றும். எழுந்து பாயைச் சுருட்டிக் கட்டில் மேலே போட்டுவிட்டுக் கூடத்துக்கு வந்தேன். இந்தப் பயல் பேதிக்குச் சாப்பிடவன் மாதிரி முகத்தைச் சிணுக்கிக் கொண்டே ஒற்றை வார்த்தையாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான். எனக்குத் தூக்கம் கெட்ட கோபம். ''என்னடா நாயே'' என்று அந்தப் பயலைப் பளார் பளார் என்று முதுகிலே நாலு வைத்தேன். புழுமாதிரி துடிக்கக் கிளம்பிவிட்டான் அவன்.

''அப்பாவை அடிக்க முடியவில்லை. அவனை அடித்தாயாக்கும்?'' என்று குறுக்கிட்டான் சுந்தரராஜன்.

எனக்குச் சிரிப்பு வந்தது. அவன் சொன்னது ஓரளவு உண்மை போலவும் இருக்கவே, வெட்கமாகவும் இருந்தது. பதிலுக்குச் சிரித்தேன்.

''அப்புறம்?''

''அப்புறம் என்ன? அப்பா என் மேலே பாய்ந்தார். 'ஏண்டா, நான் அவனைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். உனக்கு என்னடா?' என்று ஆரம்பித்தார். 'பின்னே என்ன? நாலு அறைவிட்டுக் கழுதையை வாயை மூடப் பண்ணுகிறதா? அவனோடே தர்க்கம் பண்ணிக் கொண்டே இருந்தால் வாய் வளர்கிறது, அந்த நாய்க்கு' என்று கத்தினேன்.

'ஓகோ அப்படியா! எனக்குத் தெரியாமல் போச்சு, நீ ரொம்பப் புத்திசாலிடா. எனக்குத் தெரியாமல்தாண்டா போச்சு' 'நான் புத்திசாலி என்று சொல்லிக் கொள்ளவில்லை இப்போது, உதை கொடுத்து அடக்கவேண்டிய கழுதையோடே என்ன வாதம் என்று தான் சொன்னேன்' - அவ்வளவுதான் 'சை! நீ ஒரு மனுஷன் மாதிரி! பாகம் பிரிந்ததிலிருந்தே நீ வேறெ ஆளாய்த்தான் இருக்கிறாய்' என்று சுருக்கென்று என்னவோ சொன்னார்; வெளியே போய்விட்டார். மூன்று நாள் பேசவே இல்லை. நாலாவது நாள் எல்லோரோடும் ஊருக்கும் கிளம்பி விட்டார். வந்து ஒரு மாசம் ஆகவில்லை. ஆறுமாசம் இங்கே இருக்கிறதாகத்தான் வந்தார். காரணம் கேட்டதற்கு ஏதோ வேலை கிலை என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார். நொண்டிச் சாக்கென்று அவருக்குத் தெரியும்; எனக்கும் தெரியும்.''

''மணிப்பயலை நீ அப்போது அடித்திருக்கக்கூடாது.''

''அடித்துக்கொண்டு வரவில்லை என்றுதானே அவர் புலம்புகிறார்!''

... குழந்தைகளைப் படிக்கச் சொல்கிறது, வளர்கிறது எல்லாமே மாறியிருக்கின்றன. நம் தலைமுறை நினைக்கிற வழியே வேறே; அவர்கள் போனவழி வேறே...

''அதுசரி, அந்தச் சமயத்திலே அடித்திருக்கக்கூடாது. அதுதான் நான் அப்போதே சொன்னேன்.''

''என்னவோ, வயசானவர்களோடு பழகுகிறது சிரமமாகத்தான் இருக்கிறது.''

''சிரமந்தான். பொறுத்துக் கொண்டுதான் போகவேணும்.''

''குழந்தைகளைப் படிக்கச் சொல்கிறது, வளர்கிறது எல்லாமே மாறியிருக்கின்றன. நம் தலைமுறை நினைக்கிற வழியே வேறே; அவர்கள் போனவழி வேறே.''

அடியாத மாடு படியாது என்கிறவர்கள் அவர்கள்.



... கடைசியில் மூன்று வருஷம் பாரிசவாதம் வந்து சித்தமும் ஸ்வாதீனம் இல்லாமல் அவர் கிடந்ததும், அவன் முணு முணுக்காமல் அவரைத் தாங்கியதும் பெரிய கதை...

அந்தக் கட்சியும் சில சமயம் பொருத்தமாகத் தான் தோன்றுகிறது. ரொம்பவும் செல்லம் கொடுக்கவும் வேண்டாம். தோலையும் உரிக்க வேண்டாம்.'' என்றான் சுந்தரராஜன்.

''ஏதாவது சொன்னால்' டேய், நீதாண்டா அதிகமாய்ப் பிள்ளையைப் பெற்று வளர்க்கிறாய்! நாங்கள் எல்லாம் மலட்டுக்கூட்டம் பார்!'' என்று புகைகிறார்.''

''அதெல்லாம் பிள்ளை வளர்க்கிறதைப் பற்றி வந்த கோபம் இல்லை. வயசுக் கோபம். பாகம் பண்ணியாச்சு என்று வேறே சொல்கிறாய். பிள்ளைகளெல்லாம் பெரிய மனிதர் ஆகிவிட்டார்கள். வீட்டுக்கு நாலுபேர் பார்க்க வருகிறவர்களும் பிள்ளைகளோடு சினேகிதம் தவிர, அவர்களைப் பார்க்க யாரும் வர மாட்டார்கள். வந்தால் யாராவது உறவின் முறை, இல்லாவிட்டால் கிழட்டுச் சிநேகிதம் இவர்களே வருவார்கள். சோறு ஜீரணமாகாது. பல் ஆட்டம் கண்டு சும்மாசும்மா வலிக்கும். உடம்பே தாளவில்லை. சாவியோ கையைவிட்டுப் போய் விட்டது. வேறு என்ன வேண்டும்? அசூயைப் படாமல் எப்படி இருக்க முடியும் அவர்களாலே? நாமே பொறுத்துக் கொண்டு போகவேணும்'' என்று எனக்குப் புத்திமதி சொன்னான் சுந்தரராஜன். அவன் தகப்பனாரின் கோபம் சர்க்காருக்கே தெரியும். கோட்டுக்கு உள்ள பாக்கெட்டுகளுக்கு மேல் உபரியாகத் தைக்காமல் தாசில்தார் வேலை பார்த்தவர் அவர். ஒரே பிள்ளையிடமே அவர் மென்மை காட்டியதில்லை. ரூல்தடி, விசிறிக் காம்பு, வேப்பங்குச்சி என்று பல சாமான்களை அவன் எலும்பு மேலேயே உடைத்திருக்கிறார் அவர்.

''அப்பா அடித்தாரோ, நான் ஆளாகப் பிழைத்தேனோ'' என்பான் அவன்.

கடைசியில் மூன்று வருஷம் பாரிசவாதம் வந்து சித்தமும் ஸ்வாதீனம் இல்லாமல் அவர் கிடந்ததும், அவன் முணுமுணுக்காமல் அவரைத் தாங்கியதும் பெரிய கதை.

''அப்பா போனவர், இன்னம் ஒரு கடுதாசி போடவில்லை. வாரத்துக்கு மூன்று கடுதாசி எழுதுகிறவர், ஊருக்குப் போய்விட்டுச் சொன்ன தேதிக்கு நான் வரவில்லையென்றால், ரெயிலடிக்கு வந்து வண்டி வண்டியாகப் பார்க்கிறவர், காலையிலே பஸ் நிற்கிற மதகிலே வந்து பைத்தியம் பிடித்தாற்போல, போகிற, வருகிற பஸ்ஸை எல்லாம் பார்க்கிறவர்'' என்றேன் நான்.

''இது என்னப்பா இது? ஆற்றோரத்திலே ஒரு வீடு. தோட்டம்? போன வருஷம் நான் வந்திருந்தபோது ஒன்றையும் காணோமே?''

''அதுவா? வேலைமெனக் கெட்ட வேலை.''

''என்னது?''

''சக்ரபாணி ஐயர் என்று ஒருத்தர், இந்த ஊர்தான். ஆசிரமம் கட்டிக் கொண்டு இருக்கிறாராம். வானப் பிரஸ்தமாம்.''

''என்னது!''

''ஆமாம்.''

''வானப் பிரஸ்தமா?''

''ஆமாம்!''

''பழைய காலத்து வார்த்தையாயிருக்கிறதே!''

''பழக்கமும் பழையது தான்.''

''நான் கேள்விப்பட்டதே இல்லை. இந்த இருபதாவது நூற்றாண்டிலா?''

''ஏன், இருபதாவது நூற்றாண்டிலே கிறுக்குகளே இருக்கக்கூடாதா?''

'''உண்மை என்ன என்று தெரிந்துகொள்ளாமல் . சட்டென்று தீர்மானம் சொல்லக் கூடாது.''

''பின்னே என்ன? உனக்கு வானப்பிரஸ்தம் என்றால் என்னவென்று தெரியுமா?'' என்று கேட்டேன்.

''காட்டிலே வாழ்ந்து தவம் பண்ணுகிறது.''

''இது காடா?''

''காடென்றால் சிங்கம் புலி இருந்தால்தான் காடா? ஜன நடமாட்டம் இல்லாத இடம் காடுதான்.''

''சரி, இது காடாகவே இருக்கட்டும், பெண்பிள்ளைக்கு என்ன வேலை அங்கே?''

''யார் பெண்பிள்ளை?''

''சக்பரபாணி ஐயர் சம்சாரத்தோடு தபசு பண்ணுகிறார்.''

''சம்சாரம்தானே? வேறு யாரும் இல்லையே?''

''தபசு பண்ண, கூட பெண் சாதி எதற்கு?''

''இதோ பார், சும்மா கோணல்கட்சி பேசி என்ன? நான் நன்றாகப் பார்க்காமல், தெரிந்துகொள்ளாமல் ஒன்றும் பேசத் தயாராயில்லை.''

• ''சரி, நாளைக்குப் போகலாம்.''

''நாளைக்கா? இப்போதே போகலாம்.''

''இப்போதா?''

''ஆமாம், மெட்ராஸிலிருந்து லீவு போட்டு எதற்காக வந்தது? இந்த மாதிரியெல்லாம் புதிது புதிதாய்ப் பார்க்கத்தான்.''

''மெட்ராஸிலே இல்லாத அதிசயமா இங்கே?''

''இட்லியோடு வடையும், சாம்பாரும் போட்டுத் தின்கிற ஜனங்களைத்தான் அங்கே பார்க்கலாம். மற்றபடி ரொம்பப் புத்திசாலிகளெல்லாம் நம்மோடு பேசமாட்டார்கள். மேற்கே ஒரு காலும் கிழக்கே ஒரு காலும் வைத்துக்கொண்டு நிதானப்படுத்திக்கொள்ளவே அவர்களுக்குப் பொழுது சரியாகப் போய்விடுகிறது. இப்படி நாட்டுக் காற்றுமேலே படுகிறபோதுதான் உயிர் வருகிறது. நாட்டு மண்ணிலேதான் புதிதாய் ஏதாவது முளைக்கிறது.''

''இந்த ஆள் ரொம்பப் பழசாச்சே, தெரியுமா?''

''எனக்குப் புதிது. அது போதும்.''

''அவர் கிட்டப்போகிறதென்றால் முழுகிவிட்டுப் போக வேணுமோ என்னவோ? அசுத்தமாய்ப் போகலாமோ?''

''குளிக்கிறதுக்கு, ஓடுகிற தண்ணீர் எங்கே எங்கே என்று பறக்கிறது உடம்பு

''காபி?''

''எல்லாம் சாப்பிட்டுக் கொள்ளலாம்.''

பல்லைத் தேய்த்துக் குளித்தோம்.

''அவருக்குப் பிள்ளை குட்டி உண்டா?''

''அதில் ஒன்றும் குறைவு இல்லை. நாலு பிள்ளைகள். ஒவ்வொருத்தனும், ஆயிரம் ஐநூறு சம்பளம் வாங்குகிறான். ஒரு பையன் நிலம் நீச்சைப் பார்த்துக்கொண்டு இங்கே இருக்கிறான்.''

''பிள்ளைகளோடு ஏதாவது மனத்தாங்கல் இருக்குமா?''

''இல்லாவிட்டால் இப்படி ஏன் பரதேசிக் கோலம் போட வேணும்? நீ என்ன இவரைப்பற்றியே பேசிக் கொண்டிருக்கிறாய்?''

''பின்னே எதைப்பற்றிப் பேசுகிறது. புதுச் செய்தியாக இருந்தால் பேசித் தானே ஆக வேணும்?''

குளித்துவிட்டுத் துணியையும் அங்கேயே உலர்த்திக் கட்டிக்கொண்டு ஆசிரமத்தைப் பார்க்க நடந்தோம்.

''இப்போது ஏதாவது நூற்றுக்கொண்டிருப்பாரோ?'' என்று நண்பன் கேட்டான்.

"அந்த ஆசிரமம் இல்லை. இது சும்மா தபசுதான்."

ஒரு சின்னத் தோப்பு. நல்ல நிழல்பாங்கு. வாழை, வேம்பு, முருங்கை, செம்பருத்திச் செடிகள், பவழ மல்லிகை மரங்கள், மல்லிகைப் புதர்கள், துளசி, விபூதிப் பச்சை, மாசிப் பச்சை நடை வரப்புக்குப் பொன்னாங்கண்ணி, நாலைந்து எலுமிச்சங் கன்றுகள், வெண்டை வரிசை, கீரைப்பாத்திகள், வேப்ப மரத்தில் கட்டிய ஒரு பசுவும் கன்றும், சூழ்நிலை மனத்திற்கே, குளுகுளுவென்று இருந்தது. தோட்டத்தின் நடுவில் வீடு, கீற்று வேய்ந்த வீடு, நாலு பக்கமும் விசாலமான தாழ்வாரம், வீடு தோட்டம் எல்லாம் மெழுகியும் பெருக்கியும் துப்புரவாக இருந்தன.

ஐயர் புலித்தோலைப் பரப்பிக் கண்ணை மூடி நிமிர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தார். இரண்டு நிமிஷம் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றிருந்தோம்.

"அப்புறம் வருவோமே?" என்றான் சுந்தரராஜன்.

ஐயர் கண் திறந்தது. திரும்பி எங்களைப் பார்த்தார்; விகற்ப சமாதிதான் போல் இருக்கிறது.

"நமஸ்காரம்" என்றேன் நான்.

காலைக் கிணற்றங்கரையில் கழுவி வருமாறு சைகை காட்டினார். கழுவி வந்தோம். "தாழ்வாரத்தில் உட்காருங்கள், ஒரு நிமிஷம்" என்ற பாவனையில் சைகை காட்டவே உட்கார்ந்தோம். ஒரு சிறிய

... ஐயர் புலித்தோலைப் பரப்பிக் கண்ணை மூடி நிமிர்ந்து தியானத்தில் ஆழ்ந்திருந்தார். இரண்டு நிமிஷம் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றிருந்தோம்...

அலமாரியில் புத்தகங்கள், இரண்டு மூன்று ஞான யோகிகளின் படங்கள் அங்கு வேறு ஒன்றும் இல்லை. சுற்றிமுற்றிக் கண்ணால் அளந்து கொண்டு அந்த அமைதியையும் நிழலையும் தன்மையையும் பருகிக் கொண்டிருந்தோம். ஒரு நிமிஷம் ஆயிற்று.

"என்ன துரைசாமி! எங்கே இப்படி அத்தி பூத்தாற் போல? அவர்கள் யார்?"

"என்னோடு காலேஜிலே வாசித்தவர்; சென்னையிலே ஒரு மத்திய சர்க்கார் இலாகாவுக்கு உதவித் தலைவர். லீவிலே வந்திருக்கிறார்."

"நமஸ்காரம்."

"நமஸ்காரம்."

"எந்த இலாகாவோ?"

சுந்தரராசன் சொன்னான்.

"ஓகோ! பெரிய வேலை தான் - என்ன துரைசாமி, அப்பா அம்மா எல்லோரும் சௌக்கியம்தானே?"

"ம், அப்பா ஊரிலே இல்லை."

"எப்போது போனான்?"

"மூன்று வாரம் ஆயிற்று."

"எங்கே?"

"விழுப்புரம்."

"உடம்பு திடமாக இருக்கிறான் அல்லவா?"

"கொஞ்சம் பலக் குறைவு தான்."

"ரொம்ப சீக்கிலே அடிபட்டுவிட்டான். பாவம்! - என்ன, அவன் இவன் என்று பேசுகிறானே என்று பார்க்கிறீர்களா? இவன் அப்பா என் க்ளாஸ்மெட், ஸார். இத்தனையுண்டு குழந்தையிலிருந்து சேர்ந்து வாசித்தோம். பரம சாது, தங்கக் கம்பி என்று சொல்லுவார்கள். நான் தங்க புஷ்பனம் என்று சொல்லுவேன். அவ்வளவு மிருதுவான சுபாவம்! இந்தக் கோபம், அதட்டல், உருட்டல் ஒன்றும் தெரியாது. பரம புண்ணிய சாலிக்குத்தான் இந்த குணங்கள் வாய்க்கும்."

"இந்தக் குணங்கள் எல்லாம் என் பக்கம் திரும்பிக்கூட பார்க்கவில்லை" என்றேன் நான்.

"நீயும் ஒன்றும் குறைவு இல்லை. அதற்கு என்ன? யாரும் லட்சியம் இல்லை என்று ஒரு போக்கு. வயசானால் அதுவும் சரியாகப் போய்விடுகிறது. ம், சாருக்குச் சொந்த ஊர் எதுவோ?"

ஊரைச் சொன்னான் சுந்தரராஜன்.

"பேஷ் பேஷ்! நம் பக்கந்தான். அதுதான் மூஞ்சியிலே எழுதியிருக்கிறதே. நிதானம், அழுத்தம், குறும்பு, புத்தி, சக்தி தெரிகிறது" என்று தலையாட்டினார் ஐயர்.

"எங்கே இப்படி?"

"சும்மாதான், பல் தேய்க்க வந்தோம். என்ன தோட்டம் துரவெல்லாம் புதிதாயிருக்கிறதே என்றார் இவர். காண்பிக்கலாமென்று கூட்டி வந்தேன்."

"ஆமாம் துரைசாமி, இப்போது நான் 'எக்ஜிபிஷன்' மாதிரிதான் இருக்கிறேன். இந்தப் பேர் புதிதாக இருக்கிறது பார்."

"எது?"

"எதுவா, உனக்குத் தெரியாதோ? வானப்பிரஸ்தம்."

"அதற்கு நிஜ அர்த்தம் என்ன!"

"பழைய நாளிலே வித்தியாப்பியாசம் பண்ணி இல்லறம் நடத்தி, உலகம் சுகம் எல்லாம் அனுபவித்துவிட்டு வயசானவுடனே கிழவியை அழைத்துக் கொண்டு காட்டிலே போய்த் தபசு பண்ணுவார்கள். அந்த மாதிரி கிளம்பி வந்துவிட்டேன் நான். அதுதான் அர்த்தம். நான் இப்போது இல்லற சந்நியாசி. கடைசியில், இல்லறம் போய்ச் சந்நியாசம்தான் நிற்கும்."

"சந்நியாசம் அவசியந்தானா?" என்று கேட்டான் சுந்தரராஜன்.

"வைராக்கியம் வந்துவிட்டதானால் சந்நியாசத்திலே போய்த் தானாக மனசு விழுந்து விடுகிறது. அப்போது அது அவசியம் என்றுதான் படும்."

"வைராக்கியம் வந்தால் தானே?"

ஆமாம், கோபித்துக் கொண்டு சில பேர்கள் சந்நியாசம் வாங்கிக்கொண்டால் என்ன ஆகும் தெரியுமோ? கோபம் தணிந்த பிறகு, ஏண்டா வந்தோமென்று அழுகை அழுகையாக வரும். இந்த மாதிரி வீட்டைவிட்டு, ஊரை விட்டுத் தனியாக ஒதுங்கி வந்தால்தான் வைராக்கியம் பழகும். மனிதனை ஆட்டி வைக்கிற பெரிய சக்தி எது ஸார்? சொல்லுங்கள் பார்ப்போம், சுந்தரராஜன்?"

"சதை"

"அப்படி என்றால்?"

"ம், காமம்."

"கரெக்ட், ஏது ஏது! பெரிய ஆளாக இருக்கிறீர்களே! துரைசாமி, உன் சிநேகிதர் பெரிய ஆளாய் இருக்கிறாரே! அந்தக் காமத்தை வெல்ல முடியாது என்றுதான் வானப்பிரஸ்தத்திலேயும் அவளைக் கூட்டிக் கொண்டு போ, கூட வைத்துக் கொண்டு பிரம்மச்சரியம் பழகு என்று சொன்னார்கள். இல்லாவிட்டால் அங்கேயும் போய் ஏதாவது தடுமாறி விழுந்தால் இரண்டு கண்ணும் போனது போலத் தான். வைராக்கியம் பழகவே இந்த நிலை."

... ஆமாம், கோபித்துக் கொண்டு சில பேர்கள் சந்நியாசம் வாங்கிக்கொண்டால் என்ன ஆகும் தெரியுமோ? கோபம் தணிந்த பிறகு, ஏண்டா வந்தோமென்று அழுகை அழுகையாக வரும்...

"இப்படி வரவேணுமென்று உங்களுக்கு ஏன் தோன்றியது?" என்று கேட்டான் சுந்தரராஜன்.

"அதுவா? எனக்குப் பிள்ளைகளோடு சண்டை பூசல் ஒன்றும் கிடையாது ஸார். ஒரு தெய்வத்துக்கே அடுக்காத அநியாயத்தைப் பார்த்தேன். அப்போது பிறவியின் ரகசியம் புரிந்து போய்விட்டது. கிளம்பி விட்டேன்."

"என்ன அநியாயம்?"

"சாலிப்பாட்டி சாலிப் பாட்டி என்று இங்கே ஒருத்தி இருந்தாள். உனக்குத் தெரியுமாடா துரைசாமி?"

"யார்?"

"கிட்டன் இருக்கிறான் அல்லவா? 'ஸெமி' பளிங்கு மூக்குக் கண்ணாடி?"

"ஆமாம், நாகுவுடைய அண்ணன்."

"அவன் பாட்டி, பரம ஏழை, சின்ன வயசிலே வீணாகப் போய்விட்டாள். காலணாக் கிடையாது. இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு படாத சிரமப்பட்டாள். பக்கத்து ஊரிலே போய்ச் சமைத்துப் போடுகிறது; சமைத்துவிட்டுத் திரும்பி வருகிறது; வருகிற போதெல்லாம் இரண்டு இரண்டு செங்கல்லைக் கையிலே எடுத்து வருவாள்."

"செங்கல்லா? எதற்கு?"

"வீடுகட்ட. அப்போது எங்கள் அம்மா எங்கள் பழைய வீட்டைப் புது வீடாக மாற்றிக் கொண்டிருந்தாள். சாலிப் பாட்டி தூரத்து உறவு. நாலு

தலைமுறைக் கணக்கிலே எங்கள் அம்மாவுக்கு அத்தை முறை. அவளுக்கு ஒரு வேகம். என் மருமாள் வீடுகட்டுகிற போது நான் மட்டும் சும்மா இருப்பேனா என்று சாமக்கிரியையெல்லாம் சேர்க்க ஆரம்பித்தாள். எங்கே கல்லு கிடந்தாலும் இரண்டு இரண்டாக எடுத்துக்கொண்டு வருவது, எங்கேயாவது வீட்டு வேலை நடந்தால் ஒரு படி அரைப் படியாகச்சிமெண்டைப்பிச்சை வாங்குகிறது. ஐயா, இப்படியே சேர்த்தாள் ஐயா, சேர்த்தாள்-ஐயா, தம்படி செலவழிக்காம குவித்துவிட்டாள். எங்கள் வீட்டிலே தச்சு வேலை நடந்தது. துண்டு விழுகிற சட்டம், பலகை குச்சி ஒன்றை விட மாட்டாள்: தூக்கிக் கொண்டு போய்விடுவாள். ரொம்ப ஆச்சரியமானபொம்மணாட்டி. கடைசியிலே கழுக்கூடு மாதிரி இருந்த அவள் வீடு, வெறும் குடிசை, அது என்ன ஆச்சு? பளபளவென்று சின்ன வீடாக, ஓட்டு வீடாக, அழகாய் வளர்ந்துவிட்டது. வயது அறுபத்தஞ்சு அப்போது அவளுக்கு. இத்தனை செய்தவளுக்கு என்ன கிடைத்தது தெரியுமா? ஆறு மாசம் அந்த வீட்டிலே அவளால் இருக்க முடியவில்லை. பிள்ளையும் நாட்டுப் பெண்ணுமாகச் சேர்ந்து அவளை உதை உதை என்று உதைத்தார்கள், சோறுபோடாமல் விரட்டி விட்டார்கள். ஊரிலே எவ்வளவோ பேர் சொல்லியும் நடக்கவில்லை.

அந்தப்பயல் கிராதகன். கடைசியிலே திண்ணையிலாவது இருக்கட்டுமடா என்று சொல்லி அவளைத் திண்ணையில் வைத்தார்கள். ஒரு வாரம் அங்கேயே இழுத்துக்கொண்டு கிடந்தது அது. அப்புறம் ஹோகயா. முதல் நாளைக்கு வந்து ''இந்தாருங்கள், பால்கோவா பண்ணியிருக்கிறேன் கொஞ்சம் சாப்பிடுங்கள் என்று மாமியார் வாயிலே கொண்டு திணித்தாள், நாட்டுப் பெண். இதை நான் கண்ணாலேயே பார்த்தேன். அன்றிலிருந்து அது மனசிலே வேலை செய்து கொண்டிருந்தது. ஒன்று தெரிந்து கொண்டேன். இந்த உலகத்திலே அன்பு இருக்கிறதே அன்பு, அது இறங்குமுகமாகப் போகும், பக்கவாட்டிலே போகும், மேல் நோக்கிப் போகாது.

''அப்பனுக்குப் பிள்ளை மேல் ஆசை. அந்தப் பிள்ளைக்கு அவன் பிள்ளைமேல் ஆசை. இப்படிப் போகுமே ஒழிய, பிள்ளை அப்பாவிடம் இருக்கிறது என்று சாத்தியம் இல்லை.''

''என்னஇது,ஒரேஅடியாக?''

''அதுதான் ஸார் உண்மை. அப்பாவிடம் பயந்தான் இருக்கும். கௌரவம் இருக்கும். பெண்டாட்டியிடமும் பிள்ளைகளிடமும் இருக்கிற அன்பும் ஆசையுமா இருக்கும்?''

''நீங்கள் ஏதோ புதிதாகச் சொல்ல வேணுமென்று சொல்கிறதுபோல இருக்கிறது.''

''புதிதா! மிகவும் பழசான சமாசாரம், ஐயா இது. நம் சாஸ்திரங்கள் கவிகள் எல்லாம் என்ன சொல்லுகிறார்கள்? அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். ஏன் ஐயா பிள்ளையிடம் அன்பாக இரு; பெண்டாட்டியிடம் ஆசையாக இரு என்று சொல்லக் கூடாதோ?



... அப்பனுக்குப் பிள்ளை மேல் ஆசை. அந்தப் பிள்ளைக்கு அவன் பிள்ளைமேல் ஆசை. இப்படிப் போகுமே ஒழிய, பிள்ளை அப்பாவிடம் இருக்கிறது என்று சாத்தியம் இல்லை...

ஆக, இந்த அன்பு போகிற போக்கு இறங்குமுகம் இல்லையா? மேல்நோக்கிப் போகிறது இயற்கைக்கே முரண் என்று ஆகவில்லையா?

சுந்தரராஜன் என்னைப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்தான்.

''வயசான பிறகு காட்டுக்குப் போ என்று இதற்காகத்தான் வைத்திருக்கிறார்கள். வயசான பிறகு உன்னைக் கவனிக்க மாட்டார்கள், யாரும். மரியாதையாய் ஒதுங்கிவிடு என்று அர்த்தம்; கடமையினாலும் நன்றியினாலும் நம்மை வைத்துக் காப்பாற்றுவான் பிள்ளை. வாஸ்தவந்தான். ஆனால் தர்மசங்கடம் இல்லாமல் இராது, இரண்டு தலைமுறை சேருவதில்லை. அடிப்படையாக நான் சொல்கிற இறங்குமுகந்தான் சரி. என்ன, உங்களுக்கு என்ன தோன்றுகிறது?''

''யோசிக்கிறோம். அப்புறம்தான் தெரியும்.''

''பேஷாக யோசியுங்கள் -இந்தா என்ன, உள்ளைவிட்டு வரமாட்டேன் என்கிறாய்? இவர்கள் வந்து எத்தனை

நாழிகை ஆச்சு தெரியுமா- இல்லையோ?... உன்னைத் தானே! நானும் மூச்சுவிடாமல் பேசிக் கொண்டிருக்கிறேன்.. என்று உள்ளே பார்த்துக் கத்தினார் ஐயர்.

''இதோ!'' என்று குரல் வந்தது.

அரை நிமிஷத்தில் இரண்டு தம்ளரில் காப்பியை எடுத்து வந்தாள் ஐயர் மனைவி; பொல்லென்று வெளுத்த தலை, சற்று ஸ்தூலித்த உடல், பிறகு அவருக்கும் காபி வந்தது.

நல்ல காபி. கள்ளிச் சொட்டு காப்பி; மணக்கிற காப்பி.

''காபி இல்லாமல் என்னால் இருக்கமுடியாது ஸார். நாலு வேளை சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். ஆசிரமம் எடுத்துக்கொண்ட பிறகு மூன்று வேளையாகப் பண்ணிக் கொண்டிருக்கிறேன். இரண்டு, ஒன்றாகக் குறைத்து நிறுத்தி விடுவேன். இன்னும் நாலு வருஷம் கழித்து நீங்கள் வந்தால் இங்கே கொத்தமல்லிக் காபிதான் கிடைக்கும், சொல்லி விட்டேன்'' என்று எச்சரிக்கையுடன் முடித்தார் ஐயர்.

''வெற்றிலை போடுவது உண்டா?''

''பரவாயில்லை'' என்றான் சுந்தரராஜன்

''இருக்கிறது, வேணுமென்றால் வருகிறது.''

''அவருக்கு அதுதான் உயிர்'' என்றேன் நான்.

''இந்தா, உன்னைத்தான். வெற்றிலை சீவல்?''

வெற்றிலை சீவல் பெட்டியில் வந்தன. அவற்றோடு உயரமான டப்பா ஒன்றும் வந்தது.

சுந்தரராஜன் அரைத்தான். உயரமான டப்பா நிறையக் குங்குமப் பூவாக நறுக்கிய புகையிலை.

ஐயரும் வாயில் போட்டு அரைத்துப் புகையிலை ஒரு கொத்து எடுத்து உள்ளங்கையில் வைத்துப்பிடித்து வாயில் அடக்கினார். புகையிலையைக் கண்டதும் சுந்தரராஜன் முகம் பளீர் என்று மலர்ந்தது. அவனும் ஒரு பிடி எடுத்து அடக்கினான்.

''ஒண்ணாங் கிளாஸ் புகையிலையாய் இருக்கிறது.''

''சிவபுரியிலிருந்து நேராய் வருகிறது. ஸார் முன்னெல்லாம் பன்னீரும் வாசனையும் கலந்ததாகப் போட்டுக் கொண்டிருந்தேன். ஆசிரமத்துக்கு வந்த பிறகு வெறும் புகையிலையோடு நிறுத்திக் கொண்டிருக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாகத்தான் விட வேண்டியிருக்கிறது.''

''விடமுடியுமா?''

''முயற்சி பண்ணுகிறது. முடியவில்லை யென்றால் பகவான் செயல், திடீரென்று விட்டுவிட்டு, ஜபம் பண்ணுகிறபோது புகையிலையை நினைத்துக் கொண்டிருப்பதை விட ஒரு தடவை போட்டுத் துப்பிவிட்டு உட்கார்ந்தால் தண்டா இல்லை, பாருங்கள்.''

''அது சரி, அறவே விட்டு விடுகிறதுதான் முடியுமா என்று சந்தேகமாக இருக்கிறது.''

''அதுதான் சொன்னேனே! முயன்று பார்க்கிறது. முடியவில்லை என்றால் இன்னொரு ஜன்மாவிலேதான் விட வேணும். நாம் என்ன பண்ணுகிறது? சம்ஸ்காரம் விடுகிறதா?''

ஐயரோடு வெகுநேரம் பேசினோம். ''நானே கடவுள், நானே பிரம்மம்'' என்றுதான் தியானம் செய்கிறார் அவர். ஊரில் வாழ்ந்தபோது லிங்கம் விக்கிரகம் எல்லாம் வைத்து, அபிஷேகம் பூஜை எல்லாம் தினப்படி செய்து வந்தாராம். ஞான மார்க்கத்தில் இறங்குவதற்காகத் தீர்மானித்ததும் அவற்றையெல்லாம் மூட்டை கட்டி ஒன்றுவிட்ட தம்பியிடம் ஒப்படைத்துவிட்டு, ஆசிரமத்துக்கு வந்துவிட்டாராம். இப்போது அவருக்குத்தியானந் தான் தொழில்.''

விடைபெற்றுக் கொண்டு கிளம்பும்போது மணி ஒன்பது ஆகிவிட்டது.

''ஒரு வாரம் இருப்பீர்கள் அல்லவா? இன்னொருதடவை வந்துவிட்டுப் போங்கள்'' என்றார் அவர் சுந்தரராஜனைப் பார்த்து.

''கட்டாயமாக வருகிறேன்.''

வெளியே வந்து நடந்தோம்.

''ஸ்வாரஸ்யமான ஆள் தான்'' என்றான் சுந்தரராஜன். ''அவர் மார்பெல்லாம் பார்த்தாயா? வைரம் பாய்ந்திருக்கிறது; பிராணாயாம மார்பு'' என்றான். ''உள்ளூரிலே இந்த மாதிரி ஓர் அபூர்வமான ஆள் இருக்கிறபோது அவரோடு பழகாமல் நையாண்டி பண்ணிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாயே!'' என்று என்னைக் கடிந்து கொண்டான்.

''சரி, நீ இனிமேல் ஊருக்குப் போகிறவரைக்கும் இங்கே தான் பழி கிடப்பாய் போல் இருக்கிறதே!''

''பின்னே என்ன? இந்த மாதிரிப் புகையிலை இங்கே யார் கொடுப்பார்கள்? நீ கொடுப்பாயா? என்ன துர்ப் பழக்கமென்று உபதேசம் பண்ணுவாய்!''

– தி. ஜானகிராமன் எழுதிய ''அக்பர் சாஸ்திரி'' என்ற நூலிலிருந்து.

நன்றி : ஐந்திணைப்பதிப்பகம்
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை 600 005.

புதுக் குறளுக்குப் புதை குழி!

மதுரையில், 1901–ஆம் ஆண்டில் செந்தமிழ்ச் சங்கம் நிறுவிய பெருமையாளர் பாண்டித்துரைத் தேவர்; தமிழை யார் பிழைபட எழுதினாலும் பேசினாலும் அவருக்குப் பிடிக்காது.

அக்காலத்தில், மதுரைமா நகரில் ஸ்காட் துரை என்கிற ஆங்கிலோ–இந்திய வழக்கறிஞர் ஒருவர் இருந்தார். தமிழை அரை குறையாகப் படித்திருந்த அவர்; திருக்குறளில் எதுகை மோனையே இல்லை என்று பேசிக் கொண்டிருந்தார்; அது மட்டுமல்ல–

'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி உகர முதற்றே உலகு' – என்பது போலக் குறட்பாக்களை மனம்போல மாற்றி எழுதி 'சுகாத்தியரால் திருத்தியும் புதுக்கியும் பதிப்பிக்கப்பட்ட குறள்' எனப்பெயரிட்டு, அச்சிட்டு ஒரு ரூபாய் விலைக்கு அதை விற்கவும் ஏற்பாடு செய்துவிட்டார்.

அதைவிடக் கொடுமை – தமது புதுக்குறள் பற்றிப் பாண்டித்துரைத் தேவரிடமும் பெருமையோடு போய்ப் பேசியிருக்கிறார்.

தேவரோ, 'உலகப் பொதுமறையாம் திருக்குறளைத் திருத்த இவர் யார்?' என்று உள்ளுக்குள் கொந்தளித்தார். அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், அவ்வளவு புதுக்குறள் புத்தகத்தையும் தாமே விலைக்கு வாங்கி – ஆழக் குழிதோண்டச் செய்து அதில் போட்டு எரித்து மண் தள்ளி மூடச் செய்தேவிட்டார்!

கர்ப்பிணிப் பெண்ணுக்குக் கால்சியம் அவசியம்

தினமும் 1500 - 2000 மில்லிகிராம் கால்சியத்தை உணவில் சேர்த்துக்கொள்ளும் கருவுற்ற தாய்மார்களுக்கு பிரசவம் எளிமையாக இருக்கும் என்றும், பிரசவக்குறைகளை இதுபோக்கும் என்றும் அமெரிக்காவிலுள்ள மருத்துவக் கழகம் ஆய்வின் மூலம் கண்டு பிடித்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர்கள்

குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அடிமை ஒழிப்பு நிறுவனம் ஒன்று கணக்கெடுத்துள்ளது. இதில் இந்தியா முதலிடத்தில் உள்ளது என்று கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. இந்தியாவில் 7.3 கோடியிலிருந்து 11.5 கோடி குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளார்கள் என்று அந்தக் குறிப்பு தெரிவிக்கிறது. 80 இலட்சம் பேர் பாகிஸ்தானிலும், , 57 இலட்சம் பேர் நேபாளத்திலும் 57 இலட்சம் பேர் பிலிப்பைன்ஸ் தீவுகளிலும் 50 இலட்சம் குழந்தைகள் சீனாவிலும், வங்காள தேசத்தில் 28 இலட்சம் பேரும், இந்தோனேஷியாவில் 24 இலட்சம் குழந்தைகளும், தாய்லாந்தில் 11 இலட்சம் பேரும் இலங்கையில் 5 இலட்சம் பேரும் குழந்தைத் தொழிலாளர்களாக உள்ளனர் என்றும் அந்தக் குறிப்புத் தெரிவிக்கிறது.

கன்பூஷியசும் சட்டைப்பித்தானும்

சீனா என்றவுடன் அதன் நீண்ட நெடுஞ்சுவரும், உலகத் தத்துவ ஞானிகளில் ஒருவரான கன்பூஷியசும் நினைவுக்கு வருவார்கள். கன்பூஷியஸ் சட்டைப்பித்தான்களில்கூட தத்துவத்தை உணர்த்த முடியும் என்று சொன்னவர். அவருடைய காலத்தில் சீனர்கள் சகட்டுமேனிக்கு சட்டைப்பித்தான்களை வைத்துத்தைத்து அணிவார்களாம். அதை ஐந்து பித்தான்களாகக் குறைத்து மக்களை அணியச் சொன்னாராம் கன்பூஷியஸ். அதுமட்டுமல்ல, அறிவுரை சொன்னதோடு ; தன் சட்டையிலும் ஐந்துப் பித்தான்களை வைத்துத் தைக்கச்சொல்லி அணிந்தாராம். அதனால் எல்லோரும் அவர்போலவே அணியத் தொடங்கினராம். அது என்ன ஐந்து என்கிறீர்களா?

உண்மை, அமைதி, பொறுமை, சகிப்புத் தன்மை, நேர்மை என்ற குணங்களை அந்த ஐந்து பித்தான்களும் நினைவுப் படுத்துகின்றனவாம். சரி, உங்கள் சட்டையில் எத்தனைப் பித்தான்கள் உள்ளன?

தெரிந்து கொள்வோம்

'டீ அருந்துவோமா?

டீ பிரியர்களுக்கு ஓர் நற்செய்தி,

ஒரு நாளைக்கு 4 முதல் 7 கோப்பைகள் வரை டீ (அதாவது கருப்பு டீ என அழைக்கப்படும் பால்கலக்காத டீ) அருந்தினால் மாரடைப்பு வருவதில்லை என்று டச்சு நாட்டு மருத்துவக்குழு அறிவித்துள்ளது. எனவே, டீ அருந்தி ஜமாயுங்கள். ஆனால் கருப்பு டீ தான்!

சென்னைத் துறைமுகக் கப்பலுக்கு சிங்காரவேலர் பெயர்

அண்மையில் சென்னைத் துறைமுகத்திற்குப் புதிதாக வாங்கப்பட்டுள்ள முட்டுக்கப்பலுக்கு 'சிங்கார வேலர்' பெயர் வைக்கப்பட்டுள்ளது.

சிங்காரவேலர் முட்டுக்கப்பலின் இழுவைத்திறன் 32 டன். இதன் இழுவைத்திறன் 12 நாட்கள் மைல், இதில் 1700 குதிரை சக்தி உள்ள இரண்டு 'பெர்ஜன்' டீசல் எஞ்சின்களும், எல்லா திசைகளிலும் இயங்கக் கூடிய 'வாய்த்' சினீடர் புரொப்பலர்கள் இரண்டும் பொருத்தப்பட்டுள்ளன. இதன் விலை 14 கோடி ரூபாய் ஆகும். இந்தக் கப்பல் பம்பாயிலுள்ள பாரதி கப்பல்கட்டும் தனியார் நிறுவனத்தால் கட்டப்பட்டது.

எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை :

தஞ்சாவூர் நகராட்சி 32வது வட்டம் பூக்கார புது வஸ்தா தெரு அருகில் உள்ள கல்லணைக் கால்வாயில் அமைந்துள்ள 20 கண் பாலத்திலிருந்து பூக்காரத் தெருவை இணைக்கும் சாலை மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இதில் நகராட்சி சாக்கடை மண்ணைப்போட்டு நடக்கமுடியாத மிக மோசமான நிலையில் இருக்கிறது. இச்சாலை தென்வெட்டுக் காரத்தெரு, கோரிக்குளம், கோரிக்குளம் புதுத்தெரு அன்புநகர், பூக்காரத்தெரு ஆகிய தெருவாசிகள் போக்குவரத்திற்குப் பயன்படக்கூடிய சாலை. இச்சாலை நெடுநாட்களாகக் கப்பி போடவில்லை. மேலும் சாக்கடை மண்ணைப்போட்டு நடந்து செல்வதற்குக்கூட முடியாத மிக மோசமான நிலையில் இருக்கிறது. இதனால் பல தொத்து வியாதிகள் பரவுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. மேற்கண்ட தெருவாசிகளின் நன்மையைக்கருதி ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

சி. சாமி அன்பன்,
32வது வட்ட தெருவாசிகள்,
பூக்கார புதுவஸ்தா தெரு, தஞ்சாவூர்.

தீர்வு :

தஞ்சாவூர் நகராட்சியில் 32ம் வார்டில் அமைந்துள்ள பூக்கார புதுவஸ்தா தெரு அருகில் உள்ள கல்லணைக் கால்வாயில் அமைந்துள்ள 20 கண் பாலத்திலிருந்து பூக்காரத்தெருவை இணைக்கும் சாலை ஏற்கனவே தார் போடப்பட்டு தற்போது பழுதடைந்துள்ளது. அந்தச்சாலையை மீண்டும் புதுப்பித்துத் தார்தளம் அமைக்கும் பணிக்கு ரூ. 1,25,000 க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கழிவுநீர், கால்வாயிலிருந்து எடுக்கப்பட்ட மண், குப்பைகள் நகராட்சி துப்புரவுப்பணியாளர்கள் மூலம் வெளியே எடுக்கப்பட்டு அப்புறப்படுத்தி நடந்து செல்வதற்கு இடையூறு இல்லாமல் செய்யப்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

– வி.கு. ஜெயக்கொடி, இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்.

பிரச்சினை :

எங்கள் ஊரில் குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது. 1000 வீடுகள் கொண்ட எங்கள் ஊரில் ஒரே ஒரு அடிபம்புதான் உள்ளது. மேலும் அத்தண்ணீரை உபயோகிக்க முடியாத அளவிற்கு அதைச்சுற்றி சாக்கடை தேங்கி இருப்பதால் அதை உபயோகிக்கும் எங்கள் ஊர் மக்களுக்குப்பலவிதமான நோய்கள் தாக்குகின்றன. இதை, சம்பந்தப்பட்ட துறைக்கு நேரடியாகவும், கடிதம் மூலமும் தெரிவித்தும் அவர்கள் எந்தவித நடிவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் இந்தப்பிரச்சினை தொடர்பான துறையின் உயர் அலுவலர்களிடமிருந்து பதிலைப் பெற்றுப்பலன் அளிக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
ஊர் பொதுமக்கள், வெள்ளக்கோயில் வார்டு,3,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி - 627003.

தீர்வு

திருநெல்வேலி மாநகராட்சி பாளையங் கோட்டை மண்டலத்திலுள்ள வண்ணாரப் பேட்டை வெள்ளக்கோயில் வார்டு 3 பொது மக்களின் கடிதத்தின் நகலில் தெரிவித்துள்ளபடி 17.09.96ல் வார்டு 3 மற்றும் 2ல் உள்ள பகுதிகள் சுத்தம் செய்து கொடுக்கப்பட்டது.

மேலும் வெள்ளக்கோயில் பகுதி தற்சமயம் மாநகராட்சியுடன் இணைந்த பகுதியாகும். மேற்படி பகுதிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இதுவரை கிடையாது. மேலும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பணியினை மேற்கொள்ள ரூ. 6.63 கோடி குடி நீர் அபிவிருத்தித் திட்டத்தில் வழிவகை செய்யப பட்டுள்ளதால் மேற்படி பணி நிறைவேறும் பொழுது குடிநீர் பற்றாக்குறை தீர்ந்துவிடும். தற்போது மேற்படி பகுதிகளில் வாரம் ஒருமுறை டில்லர் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி பகுதியில் இரண்டு அடிபம்பு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஏனைய மூன்று அடி பம்புகள் பயன்பாட்டுக்குத் தகுதியற்றதாக ஆகிவிட்டதால் தற்போது கழிவுநீர் ஓடை கட்ட பகுதி 2 திட்டத்தில் மதிப்பீடு சேர்க்கப்பட்டுள்ளது. நிதி ' ஒதுக்கீடு கிடைத்தபின் பணி மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

து. சந்திரசேகரன், ஆணையாளர்,
திருநெல்வேலி மாநகராட்சி

பிரச்சினை

ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டம், குடவாசல் தாலுகா, கொரடாச்சேரி ஒன்றியம், விஸ்வநாதபுரம் ஊராட்சி ஒன்றியம் கிராமத்தையும் நீடாமங்கலம் தாலுகா நீடாமங்கல் அனுமந்தபுரம் ஊராட்சி ஒட்டக்குடி மேல்கரை கிராமத்தையும் இணைக்கும் நடைபாலம் வெண்ணாற்றின் குறுக்கே மிகவும் சீர்கெட்டு உள்ளது. பொதுமக்கள் இந்த பாலத்தின் வழியே நடந்து செல்வது மிகவும் அபாயகரமானதும் அச்சத்திற்குள்ளதுமாக உள்ளது. இப்பாலத்தினைப் பயன்படுத்தி 15 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் மாணவ, மாணவிகள், அரசுப்பணிக்குச் செல்லும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள், குறிப்பாக நோயாளிகள் தினந்தோறும் செல்ல வேண்டியுள்ளது. அதுபோல மக்கள் பெரிதும் அல்லலுக்கு ஆளாகின்றனர். விவசாயிகள் இடுபொருட்கள் எடுத்து வரவும், விளை பொருட்களை எடுத்துச் சென்று வாணிபம் புரியவும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். பழுதுபட்ட பாலத்தினை வண்டிப்பாலமாக மாற்றினால் கொரடாச்சேரியி லிருந்து மன்னார்குடிக்கு சுமார் 12 கி.மீ. குறைந்த பயணமும் பல குக்கிராமங்களுக்கு வசதியான பஸ் வசதியும் ஏற்படும். இந்தப்பாலம் சம்பந்தமாகக்கடந்த 1990 முதல் பலமுறை முதலமைச்சர், அமைச்சர்கள் ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலை துறை இயக்குனர்கள், மாவட்ட ஆட்சியர் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகிய அனைவர்க்கும் பலமுறை மனுக்கள் அளித்தும் இதுவரை எந்தப்பயனும் ஏற்படவில்லை. மாவட்ட ஆட்சியர் திரு. ஸ்கந்தன், கோட்டப்பொறியாளர் (நெடுஞ்சாலை) திரு. வீராசாமி ஆகியோர் பாலத்தினை பார்வையிட்டு உடன் ஏற்பாடு செய்து தருவதாக உறுதி அளித்து சென்றார்கள்.

தற்சமயம் இப்பாலம் ஊராட்சிஒன்றியப்பராமரிப்பில் இருந்து வருகிறது. பாலத்தினை மேம்பாடு செய்யவோ அல்லது வண்டிபாலம் கட்டவோ ஊராட்சி ஒன்றிய நிதி ஆதாரங்களைக்கொண்டு செய்ய இயலாது என்பது தெரிகிறது. எனவே மேற்படி பாலம் நெடுங்சாலைத் துறையினர் மூலம் பகுதி -2 திட்டத்தில்தான் செய்ய இயலும் அல்லது உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படும் அங்காடி மைய கிராமச் சாலைகள் திட்டப்பிரிவின் கீழ் செய்ய இயலும் என்றும் தெரியவருகிறது. எனவே தாங்கள் இப்பகுதி கிராமமக்களின் நீண்ட நாள் கனவினை நனவாக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
த.உ. கோவிந்தராசன், ஒட்டக்குடி, களத்தூர்
மேல்கரை, அஞ்சல் - 613 703, கொரடாச்சேரி.

தீர்வு

மேல்கரை கிராமத்தை இணைக்க வெண்ணாற்றின் குறுக்கே கட்ட வேண்டிய உயர் மட்டப்பாலவேலை, இக்கோட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தி வருகிற வேலைகளில் இடம் பெறவில்லை. உலக வங்கிக் கடன் திட்டத்தில் செயல்படுத்த வேலைகள் தேர்வு செய்ய விவரம் கோருகிறபோது உரிய விவரம் முன்னுரிமை வழங்கி அனுப்பிவைக்கப் படும் என அன்புடன் தெரிவிக்கிறேன்.

எஸ்.எஸ். கருப்பையன்,
கோட்டப்பொறியாளர்,
த.நா.வே.வ. திட்ட கோட்டம், மன்னார்குடி.

பிரச்சினை

எங்கள் கிராமத்திற்கு பொது தொலைபேசி இணைப்பு வேண்டி பலமுறை விண்ணப்பித்தும், பராளுமன்ற உறுப்பினர் பரிந்துரை கடிதம் இணைத்து அனுப்பியும் கடந்த 5,6 ஆண்டுகளாக மனு மீது மனு அனுப்பியும் பொது தொலைபேசி இணைப்பு அமைக்கவில்லை. எங்கள்கிராமத்திற்குப் பொதுத் தொலைபேசி இணைப்பு கிடைக்க ஆவன செய்யவும்.

இப்படிக்கு,
ஆதிநாராயணன்,
நாஞ்சலூர் அஞ்சல், சிதம்பரம் வட்டம்,
தென்னாற்காடு மாவட்டம் - 608302

தீர்வு

தொலைபேசி இல்லாத கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தொலைபேசி வழங்க வேண்டும் என்று இந்திய அரசு 1991 ஆம் ஆண்டு கொள்கை வகுத்துள்ளது. சில கிராமங்களில் தனியார் தொலைபேசி இருப்பதால் இந்தச் சலுகை கிடைப்பதில்லை. தாங்கள் குறிப்பிட்ட நாஞ்சலூர் கிராமத்தில் தனியார் தொலைபேசி இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தற்போதுள்ள கொள்கையின் அடிப்படையில் தொலைபேசி வழங்க இயலாது. எனினும் இதுபோன்ற (தொலைபேசி உள்ள) கிராமங்களுக்கு இனிவரும் காலங்களில் தக்க கொள்கை வகுக்கப்படும்போது தொலைபேசி வழங்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட மேலாளர் (தொலைபேசி)
கடலூர் - 1

எந்த ஒரு நல்ல காரணத்திற்காகவும் இறக்கத் தயாராயிருப்பவர்கள், அரிதாகவே தோல்வியுறுகின்றனர்.

– ஜவகர்லால் நேரு

இந்த மழைக்காலத்தில், எங்கும் பரவலாகக் காணப்படும் நோய் மலேரியா ஆகும். சரியானபடி கவனிக்கத்தவறிவிட்டால், இதுவே பல பக்க விளைவுகளை ஏற்படுத்தி, உயிருக்கேகூட ஆபத்தை உண்டாக்குமளவிற்கு முற்றிவிடவும் கூடும்.

குறிப்பாக இளம் வயதினரையே இந்நோய் மிக எளிதில் பற்றுகிறது. ஆகவே, இந்த மலேரியா நோய்ப்பற்றிய சிலவிஷயங்களை நாமெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டியது இப்போது அவசியம்.

சின்னஞ்சிறு மழலைகள் மலேரியாவிலிருந்து தப்ப வேண்டுமானால் - கொசுக்கடியிலிருந்து, குறிப்பாக இரவு நேரங்களில் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

உங்கள் குழந்தைக்கு மலேரியாதான் வந்திருக்கிறது என்று தீர்மானமாகிவிட்டால் காய்ச்சல் கண்ட குழந்தையைக் குளுமையாக வைத்திருங்கள்; ஆனால், குளிர்ச்சியாக வைக்கக் கூடாது.

தக்க மருந்து மாத்திரைகள் உட்கொண்டபின் மலேரியாவிலிருந்து குணமாகும் குழந்தைக்கு, அதிக அளவில் திரவ ஆகாரங்களும் சாப்பாடும் தேவைப்படும்.

கொசுக்கடியால்தான் பெரிதும் மலேரியா பரவுகிறது. ஆதலால், குழந்தைகளைக் கொசு அண்டாமல் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். கொசுக் கடியிலிருந்து பாதுகாக்கப் பல நடவடிக்கைகள் உள்ளன.

இரவில் கொசு வலைகளைப் பயன்படுத்தலாம்.

மழை மழலை மலேரியா



டாக்டர் ஆர். உமா

கொசு முட்டைகளை அழித்துவிடுவதோடு, அதன் உற்பத்தியையே தடுத்துவிடத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மலேரியா காணப்படும் பகுதிகளில் வாழும் கர்ப்பிணிப் பெண்கள், மலேரியாத் தடுப்பு மாத்திரைகளைக் கர்ப்பகாலம் முழுவதும் பிரசவமாகும் வரை தொடர்ந்து உட்கொண்டு வரவேண்டும்.

மலேரியா பரவியுள்ள பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்குக் காய்ச்சல் வந்தால், உடனே நலப்பணியாளரிடம் செல்லவேண்டும். அந்நோய் மலேரியாவே எனக் கண்டுபிடிக்கப்பட்டால், மலேரியா தடுப்பு மருந்துகளைக் குணமாகும் வரை கொடுத்து வரத் தயங்கக் கூடாது.

கொசுவத்திச் சுருள்களை அளவோடு, எரிக்கலாம்; மின்சாரத்தின் மூலமும் கவனமாக அதைப் பயன்படுத்தலாம்.

வீட்டின் கதவுகள், ஜன்னல்களிடையே கொசு புகாதவாறு வலை அடித்து வைப்பதும் நல்லது.

கொசு உற்பத்தியாகும் இடங்களை மருந்தடிக்கச் செய்து அழித்தல் வேண்டும்.

சமூகத்திலுள்ள அனைவரையுமே, கொசுக் கடியிலிருந்து பாதுகாக்க வேண்டும், ஏனெனில், மலேரியா கண்ட ஒருவரைக் கடித்த கொசுவானது, பறந்துபோய் மற்றொருவரைக் கடிக்கும்போது, கடிபட்ட அவருக்கும் மலேரியா தொற்றிவிடும் அபாயம் இருக்கிறது.

எங்கெல்லாம் தண்ணீர் தேங்கி நிற்கிறதோ, அங்கெல்லாம்தான் அதிக அளவில் கொசு உற்பத்தியாகிறது. குளம், குட்டைகள், சாக்கடைகள், சில சமயங்களில் தண்ணீர்த் தொட்டிகள், சகதிகளில்கூட தண்ணீர் தேங்கிநிற்கும்; அங்கும் கொசு உற்பத்தியாகும். புதர் மண்டிய ஓடைகளின் கரையோரங்களிலும் இதற்கு வாய்ப்புண்டு. தண்ணீர் சேருகிற, அல்லது தேங்குகிற இடங்களில் கொசு மருந்தையோ, மண்ணெண்ணெயையோ தெளித்து, கொசுக்களை அழிக்கலாம்; அதன் இன உற்பத்தியைத் தடுக்கலாம்.

சுற்றுப்புறத்தை எப்பொழுதும் தூய்மையாக வைத்திருப்பதனாலும், தண்ணீர் தேங்கவிடாமல் செய்வதனாலும் கொசு உற்பத்தியைக் குறைக்கலாம்; அல்லது கட்டுப்படுத்தலாம்.

மலேரியா நோய் கண்ட கர்ப்பிணிப் பெண்கள், மற்றவர்களைவிட இருமடங்கு வேதனைப்பட நேரிடும். கர்ப்ப காலத்தில் இவ்வியாதி வருவது மிகவும் ஆபத்தானது. இது இரத்தச் சோகைக்கு அவர்களை ஆளாக்கிவிடும். கருச்சிதைவுக்கும் இது வழி வகுக்கும். குறைப் பிரசவத்திற்கும் காரணமாகும். குழந்தை இதனால் இறந்தே பிறந்திடவும் நேரிடும். மலேரியாவால் தாக்கப்பட்ட தாய்க்குப் பிறக்கும் குழந்தை மிகச் சிறியதாகவும், பலவீனமாகவும் எடைக்குறைவாகவும் எளிதில் தொற்று நோய்க்கு ஆளாகிற நிலையிலும்தான் பிறக்கும்.

ஆகவே கர்ப்பிணிப் பெண்கள், கர்ப்ப காலம் முழுவதும் பிரசவமாகும் வரை தொடர்ந்து, மலேரியாத் தடுப்பு மருந்துகளை அலுக்காமல் சாப்பிட்டு வரவேண்டும்.

நலப்பணியாளரிடமிருந்தோ, மருத்துவமனையிலிருந்தோ தான் கர்ப்பிணிகள் மலேரியாத் தடுப்பு மாத்திரைகளைப் பெற வேண்டும். ஏனெனில் எல்லா மலேரியாத் தடுப்பு மருந்துகளையும் கர்ப்ப காலத்தில் பெண்மணிகள் உபயோகப்படுத்தக் கூடாது.

ஒரு குழந்தைக்குக் காய்ச்சல் வந்து, அது மலேரியாதான் என நிரூபணமானால், மலேரியா தடுப்பு மருந்துகளைக் குணமாகும் வரை கொடுத்துவர வேண்டும். குறைந்தது பத்து நாட்களுக்குக் கொடுக்க வேண்டிவரும்.

கைக்குழந்தைகளானால் எப்படித் தருவது என்ற கேள்வி எழலாம்; அப்படிப்பட்ட சிசுக்களுக்கு மலேரியாத் தடுப்பு இனிப்பு மருந்து கொடுக்கலாம்.

காய்ச்சல் விரைவில் நின்று போனாலும் கூட, பத்து நாட்கள் வரை மருந்து கொடுப்பதை நிறுத்திவிடக் கூடாது.

மலேரியாப் பகுதியானாலும் கூட, காய்ச்சல் இல்லாத குழந்தைகளுக்கு மலேரியா

கலைவாணர் புகழ் வாழ்க!

சீர்திருத்தக் கொள்கைகளை பகுத்தறிவுக் கருத்துக் களைத் தமிழ்த் திரைப்படங்களின் வாயிலாக உலாவரச் செய்து சமுதாயத்தில் மறு மலர்ச்சி பாயச்செய்த பெருமை கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களைச் சாரும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், நாகர்கோவில் அருகில் உள்ள ஒழுகிணசேரியில் சுடலை முத்து - இசக்கியம்மாள் தம்பதியின் மகனாக 29.11.1908-இல் பிறந்தவர் என்.எஸ். கிருஷ்ணன். அவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும் சிறுவயதிலேயே கலை ஆர்வம் என்னும் செல்வத்தை மிக அதிக அளவில் பெற்றிருந்தார்.

நாடகங்களில் நடித்தார்; நடிப்புலகில் ஒளிவீசித் திகழ்ந்தார். நகைச்சுவைப் பாத்திரத்தையே விரும்பி ஏற்றார். நாடெல்லாம் போற்றும் நகைச்சுவை நடிகரானார். காலத்தின் கட்டாயத்தால் நாடக உலகிலிருந்து திரைப்பட உலகில் புகுந்தார்; திறம்பட நடித்தார்; திக்கெலாம் புகழ் தேடிக் கொண்டார். கலைவாணர் என்னும் பட்டத்தையும் பெற்றார்; மக்களின் கவலையையும் கண்ணீரையும் நகைச்சுவை மருந்து கொண்டு நீக்கினார்.

நகைச்சுவை வெடிகளை உதிர்ப்பதுடன் நல்ல நல்ல கருத்து மணிகளையும் மக்கள் மன்றத்திற்குக் காணிக்கை ஆக்கினார். சிரிக்க வைத்து நாட்டைச் செழிக்க வைக்கும் சீர்திருத்தக்காரராக விளங்கினார்.

அவரது மேதையைத் தமிழகத்தில் வாழ்ந்த அறிஞர் பெருமக்களெல்லாம் பாராட்டிப் போற்றியிருக்கிறார்கள். அறிஞர் பெருமக்களையும் அரசியல் விற்பன்னர்களையும் தமது அருங்கருத்துகளால் - அதிசயிக்க வைத்த பெருமை சிரிப்புக் கடலிலே மூழ்க வைத்த திறமை கலைவாணரின் தனி உடைமை!

"கலை காலத்தை வெல்வது, கலைவாணருடைய நகைச்சுவை இப்போதும் ஏற்றுக் கொள்ளத்தக்க அளவுக்கு இருக்கிறது. கலைக்கல்லூரி அமைத்து அவர் ஆசானாக இருந்து பணியாற்ற வேண்டியவர்" எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கலைவாணரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"நமது நகைச்சுவை அரசு கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தனது தொழிலில் ஒரு மேதாவி என்றாலும் அதை நடத்தும் முறையில் ஒரு பெரிய புரட்சியாளர் என்றே சொல்ல வேண்டும்.

"நாடகப் புரட்சி உலகைப் பற்றிச் சரித்திரம் எழுதப் பட்டால், அச்சரித்திரத்தின் அட்டைப் பக்கத்தில் என்.எஸ். கிருஷ்ணன் படம் போடாவிட்டால் அச்சரித்திரம் தீண்டப் படாதாகிவிடும்" - தந்தை பெரியாரின் பாராட்டு வாசகம் இது.

"கிருஷ்ணன் தமிழ் மக்களைச் சிரிக்க வைக்கும் மகான்.

"கிருஷ்ணன் பிறருடைய உள்ளத்தைக் குத்திப் பிளக்கிறதில்லை. அவர் பிறருடைய உள்ளத்தை விரியச் செய்கிறார். அதை விளையாட்டுப் பொம்மையாக அடித்து விடுகிறார்" - மறுமலர்ச்சி எழுத்தாளர் வ.ரா. கலைவாணரை இப்படிப் போற்றிப் புகழ்ந்தார்.

சிறுகுழந்தை முதல் வயது முதிர்ந்தவர்வரை கலைவாணரின் நகைச்சுவையில் சொக்கிப் போயிருக் கிறார்கள் என்பதைத் திரையுலக வரலாறு நமக்கு எடுத்துச் சொல்கிறது.

கருத்துச் செல்வத்தை மட்டுமல்ல; கையிலிருந்த பொருட் செல்வத்தையும் ஏழை எளியவர்களுக்கு வழங்கி இதயம் மகிழ்ந்தவர் கலைவாணர்.

தனிப்பட்ட முறையில் தன்னை அணுகிவந்து பணஉதவி கேட்டவர்களுக்கெல்லாம் அள்ளிக் கொடுத்த வள்ளல் அவர்.

வாரி வழங்கிய வள்ளலே 1957 ஜூலை மாதத்தில் நோய்க்கு ஆளானார். சிலநாள் சென்னை பொது மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை பெற்றார். எனினும் நோய் குணமாகவில்லை.

ஆகஸ்ட் திங்கள் 30-ஆம் நாளன்று இன்னுயிர் நீத்தார். மறைந்து பல ஆண்டுகள் உருண்டோடி விட்டன என்றாலும், அவரைப் பற்றிய நினைவுகள் தமிழ்மக்களின் நெஞ்சில் நீங்காது நிலை பெற்றிருக்கின்றன.

1969-இல் அவரது திருவுருவச்சிலை தியாகராய நகர் வாணிமகால் அருகில் அன்றைய முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அண்ணா பங்கு பெற்ற கடைசிப் பொதுநிகழ்ச்சியாக அது அமைந்தது. அதன் பின்னர் அண்ணா, உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சேர்ந்தார். சிகிச்சை பயனின்றி பிப்ரவரி 3-இல் மறைந்தார்.

கலைவாணரின் பாடல்களில் சீர்திருத்தக் கருத்துகள் சிறந்தோங்கியிருந்ததற்கும் அந்தப் பாடல்கள் மக்களைக் கவர்ந்ததற்கும் - பாடல் எழுதிய உடுமலை நாராயண கவிக்கும் பெரும் பங்கு உண்டு. உடுமலையாரை நன்கு வேலை வாங்கி, தனக்கு ஏற்ற விதத்தில் பாடல்களை எழுதவைத்த திறமை கலைவாணருக்கு மட்டுமே உண்டு.

– எஸ்.எஸ். சுந்தரம்

கணிப்பொறியின் கதை



கம்ப்யூட்டர் என்று அழைக்கப்படும் கணிப்பொறி பல ஆயிர ஆண்டுகளுக்கு முன்பே இருந்துவந்துள்ளது.

'Abacus' என்று அழைக்கப்படும் கணிப்பொறி 4000 ஆண்டுகளுக்கு முன்னரே மத்திய தரைக்கடல் நாடுகளில் (அரேபியா, துருக்கி போன்ற முகம்மதிய நாடுகள்) உருவாக்கப்பட்டது. அது இன்றுவரை பயன் பட்டு வருகிறது.

பதினேழாம் நூற்றாண்டில் காலத்திற் கேற்ப மாறுதல்கள் செய்யப்பட்ட கணிப் பொறிகள் அறிமுகம் செய்யப்பட்டன. ப்லெய்ஸ்பாஸ்கல் என்ற ஃப்ரெஞ்சுக்காரர் இயந்திர வடிவில் கணிப்பொறி ஒன்றை உருவாக்கினார். இந்த இயந்திரம் சக்கரங்களின் மீது பொருத்தப்பட்டிருந் தது. சக்கரங்கள் சுழலும் போது எண்கள் தசம முறையில் மாறின. எண் களைகூட்டவோ, கழிக்க வோ வேண்டுமென்றால் சக்கரங்களைச் சுழற்ற வேண்டும்.

கொஞ்சம் காலத்திற் குப் பிறகு 1833ல் சார்லஸ் பேப்பேஜ் என்பவர் ஃப்ரெஞ்சுக்காரரின் கணிப் பொறியில் எஞ்சின் ஒன்றைப் பொருத்தினார். கணித வாய்ப்பாடுகளை இதனால் சுலபமாகக் கண்டறிய முடிந்தது.

1946-ல் மின்சாரக் கணிப்பொறி உருவாக்கப்பட்டது. அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியப் பல்கலைக்கழகத்தில் அது உருவாக்கப்பட்டது 'ENIAC' என்று (Electronic Numerical Interrater and Calculator) அது அழைக்கப்பட்டது. வால்வுகள் இதற்கு ஆதார மாக இருந்தன. மின்சாரக் கணிப்பொறிகள் ராணுவத்தில் குண்டுகளை எறியும் இலக்கு களைக்கணித்தறிய உதவின.

தொழில் துறை வளர, வளர வால்வுகள் மறைய டிரான்சிஸ்டர்கள் இடம் பெற்றன. ஒருங்கிணைந்த மின்சுற்று என்ற அவை IC என்று சுருக்கமாக அழைக்கப்பட்டன. கணிப் பொறி களின் வடிவங்கள் நாளுக்கொரு மாற்றம் பெறலாயின. அளவில் சுருங்கின. அனைவருக்கும் பயன்படுகிற Digital Electronic Computer என்ற கணிப்பொறி 1951ல் விற்பனைக்கு வந்தது.

இன்று இந்தக் கணிப்பொறிகள் LSI (Large Scale Integration)-ஐ அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படுகின்றன. வால்வுகள், டிரான் ஸிஸ்டர்கள், IC க்கள், LSI க்கள் என்று கணிப்பொறி மாற்றம் பெற்றதை முறையே முதல் தலைமுறை, இரண்டாம் தலைமுறை, மூன்றாம் தலைமுறை, நான்காம் தலைமுறை எனப் பெயர் சூட்டியுள்ளனர். தலைமுறைகள் மாற மாறக் கணிப்பொறிகளின் வடிவம் வேலை செய்யும் வேகம் போன்றவையும் மாறி வருகின்றன.

இப்போது VLSI (Very Large Scale integration) என்ற கணிப்பொறி ஐந்தாவது தலைமுறை என மதிக்கப்படு கிறது. மனிதன் கட்டளையிட சொற்களை உருவாக்கவும், நிகழ்ச்சிகளைச் சங்கேத மொழியில் அமைக்கவும், பிரச்சினைகளைத் தீர்க்க வும் இந்தக் கணிப்பொறியில் முடியும். விரைவில் இது தனக்குத்தானே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளவும், தானே முடிவு செய்து கொள்ளவும் வலிமைபெற்றுவிடும்.

ஜப்பானில் ஆறாவது தலை முறை கணிப்பொறியைப் பற்றி ஆராயத் தொடங்கி விட்டார்கள். மனித மூளையின் இயக்கத்தைப் பற்றியும், தனக்குத்தானே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வது பற்றியும் இந்தக் கணிப்பொறி முயலும்.

இந்தக் கணிப்பொறி முற்றுப்பெற்றால் நான்காவது தலைமுறைக் கணிப்பொறி இயங்கியதைவிடப் பத்து கோடி முறை வேகம் கொண்டதாக இதன் செயல்பாடுகள் அமையும்!

– சேலம் சக்திக்கொடி

நன்றி: கலைக்கதிர், செப்டம்பர் 1993

நேரத்தில் மிகக் குளிர்ந்த நீர் கூடாது.

கனமான ஆடைகளைக் குழந்தைகளுக்கு உடுத்தக்கூடாது, கனமான போர்வைகளைப் போர்த்துதலும் ஆகாது.

மலேரியா நோய், சக்தியை அழித்து விடுகிறது. வியர்வையால் ஏராளமான நீரிழப்பு ஏற்பட்டுவிடுவதே இதற்கு முக்கியக் காரணம் ஆகும்.

எனவே - கூடுதல் உணவும், திரவ ஆகாரமும், அப்படிப்பட்ட குழந்தைக்குத் தரவேண்டும்; அவ்வாறு செய்வது இந்த இழப்பை ஈடு செய்யும். அதிக உணவும் திரவ ஆகாரமும் கொடுப்பதன் மூலம் மலேரியாவின் போது இழந்த சக்தியை ஈடு செய்துவிட இயலும். இது ஊட்டச்சத்துக் குறைவும் நீரிழப்பும் ஏற்படாமல் செய்ய உதவும்.

மலேரியா நோயைப் பொறுத்தவரை, இளம் பிராயத்தினரை இவ்வாறெல்லாம் முன்னெச்சரிக்கையோடு பாதுகாத்தே ஆக வேண்டும். இல்லையேல், அவர்களை மலேரியா நோயினின்றும் காப்பாற்ற முடியாமலே போய்விடும்.

பெரியவர்களுக்கு மலேரியா நோய் கண்டால், உடனே தக்க மருத்துவரை அணுகித் தன்னைப் பரிசோதித்துக் கொள்ளவும், தக்க மருந்து மாத்திரைகளைச் சாப்பிட்டுவரவும் அவர்கள் தயங்கவே கூடாது.

மாத்திரைகள் கொடுக்கக்கூடாது. இது, வளரும் குழந்தைகளின் இயற்கையான எதிர்ப்புச் சக்தியைத் தடுத்துவிடக்கூடும்.

காய்ச்சல் கண்ட குழந்தையைக் குளுமை யாக வைத்திருப்பது எப்படி யென்றால், காய்ச்சலைக் குறைக்கும் மாத்திரையான 'பேரசிட்டமால்' கொடுத்தால் இதற்குப் போதுமானது.

குளிர்ந்த தண்ணீர் ஒத்தடம் கொடுத்தல் அல்லது குளிர்ந்த தண்ணீரால் உடல் முழுவதும் ஒத்தி எடுத்தல் குழந்தைகளுக்கு நல்லது; அதே

நேருவும் புகைப்பட நிபுணர்களும்!

1962ல் கிருஷ்ணகிரியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு வந்திருந்த ஜவகர்லால் நேருவைப் புகைப்படக் காரர்கள் நெருக்கியடித்துக்கொண்டு புகைப்படம் பிடித்தனர். சில புகைப்பட நிபுணர்கள் கீழே குனிந்து அவருடைய காலையே படம் பிடித்தனர்.

''அங்கே என்ன இருக்கிறது என்று படமெடுக்கிறீர்கள்?'' என்று கேட்டார் நேரு.

ஒரு புகைப்பட நிபுணர், சிரிப்புடன் அவர் கழற்றிவிட்டிருந்த காலணிகளைக் காட்டினார். அதில் ஒன்றில், காலின் கட்டை விரல் வைக்கும் இடத்தில் தேய்ந்துபோய் ஓட்டை விழுந்திருந்தது!

வேளாண்மை :

குட்டை மக்காச்சோளம்

மக்காச்சோள இனத்தைச் சார்ந்த 'பேபிகார்ன்' என்னும் குட்டை மக்காச் சோளம் சமீபகாலமாக மிகவும் பிரபலமடைந்து வருகிறது. இதன் கதிர்களை 'சாலட்' போல பச்சையாகச் சாப்பிடலாம். இதிலிருந்து சத்து நிறைந்த ரசம் (சூப்) தயாரித்தும் அருந்தலாம். இவற்றின் முதிராத இளம் கதிர்களையே உண்ணவேண்டும்.

இதர தானிய மக்காச்சோளப் பயிர்களைப் போல் அல்லாமல், 'பேபிகார்ன்' குட்டையாக (சுமார் மூன்றடி உயரம்) வளரும் தன்மை உடையது. பயிர் வளர்ந்ததும் கணுக்களில் சிறிய மக்காச்சோளக் கதிர்கள் உருவாகும். ஒரு செடிக்கு சுமார் 3 கதிர்கள் உற்பத்தியாகும். செடியில் தோன்றும் ஆண் பூக்களை அவை மலர்வதற்கு முன்பாக வெட்டிவிட வேண்டும். இதனால் மகரந்த சேர்க்கை நடைபெறாமல் சூலகங்கள் மட்டும் வளரத் தொடங்கும். சுமார் 50 கிராம் எடையுள்ள இளம் கதிர்களை அறுவடை செய்யலாம்.

இறவையில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யலாம் இவற்றை 45 செ.மீ. 15 செ.மீ. என்ற இடைவெளியில் பார்களில் நடவேண்டும். ஒரு ஏக்கருக்கு 6 கிலோ விதைகள் தேவை. ஒரு ஏக்கருக்கு சுமார் 40000 செடிகள் வரை நடவு செய்யலாம். அடியுரமாக ஏக்கருக்கு 40:40:15 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து இடவேண்டும். நட்ட 30 நாட்கள் கழித்து ஏக்கருக்கு 40:15 கிலோ தழை, சாம்பல் சத்து மேலுரமாக இடவேண்டும். வாரம் ஒரு முறை நீர்ப் பாய்ச்சினால் போதுமானது.

'பேபிகார்ன்' விதைத்த 65 நாளில் பூக்கத் தொடங்கும். 10-வது நாள் முதல் கதிர்களை அறுவடை செய்யலாம். ஒரு வருடத்தில் மூன்று பயிர்கள் வரை சாகுபடி செய்யலாம். ஒரு செடியிலிருந்து சுமார் 3 கதிர்கள் கிடைக்கும். ஒரு கிலோவுக்கு கிட்டத்தட்ட 20 கதிர்கள் இருக்கும். ஒரு கதிரிலிருந்து 2.5 டன் மகசூல் பெறலாம்.

'பேபிகார்ன்' ஒரு குறுகிய காலப் பயிராகையால் சாகுபடி செலவு ஒரு ஏக்கருக்கு அதிகபட்சம் ரூ. 5000 மட்டுமே ஆகும். ஒரு கிலோ கதிரின் பண்ணை விலை ரூ. 10 ஆகும். ஒரு ஏக்கரிலிருந்து பயிருக்கு ரூ. 25,000 கிடைக்கும். ஒரு வருடத்தில் மூன்று பயிர்களிலிருந்து ஏக்கருக்கு ரூ. 75,000 மொத்த வருமானம் கிடைக்கும். சாகுபடி செலவுகள் போக நிகர லாபமாக ஏக்கருக்கு ரூ. 60,000 வரை ஒரு வருடத்தில் பெற வாய்ப்பு உள்ளது. பேபிகார்னுக்கு ஹோட்டல்கள், சூப்பர் மார்க்கெட் மற்றும் பெரிய நகரங்களில் இவை அதிகமாக உள்ளது.

வெளிநாடுகளில், குறிப்பாக சிங்கப்பூர் போன்ற நாடுகளில் சீன மக்கள் குழந்தை மக்காச்சோளத்தை மிகவும் விரும்பி சாப்பிடுகிறார்கள். நம் நாட்டில் டெல்லியைச் சுற்றி பேபிகார்னை சாகுபடி செய்து நல்ல இலாபம் அடைகிறார்கள். கோயம்புத்தூரில் சில முன்னோடி விவசாயிகள் இதன் சாகுபடியைத் தொடங்கியுள்ளனர். விதையும் கிடைக்கிறது.

எளிதாக சாகுபடி செய்து உள்ளூரிலும், வெளிநாட்டிலும் விற்பனை செய்யலாம். அதிக இலாபம் கொடுக்கக்கூடிய இந்தப் பணப்பயிரை விளைவித்து வணிக வேளாண்மையைப் பலரும் மேற்கொள்ளலாம்.

டி. ஆறுமுகம்
உதவிப் பேராசிரியர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்



திராட்சையின் தோற்றப்பகுதி காகஸ்தான் என்று கருதப்படுகிறது. காகஸ்தானிலிருந்து காபூல் வழியே திராட்சை இந்தியா வந்திருக்கலாம். இவ்வாறே காகஸ்தானிலிருந்து மத்திய ஆசியா வழியே எகிப்துக்கும், துருக்கியைத் தாண்டி கிரேக்க ரோமானிய எல்லைகளுக்கும் இத்திராட்சை சென்றிருக்கலாம்.

பழைய பைபிளில் நோவா அமைத்த திராட்சைத் தோட்டம் பற்றிய குறிப்பு உண்டு. இதனால் புராதண கால யூதர்களும் அராபியர்களும் வாழ்ந்த ஸெமிட்டிக் பிராந்தியம், அதாவது தென்மேற்கு ஆசியாவில் திராட்சை சுமார் 3000, 4000 ஆண்டுகளுக்கு முன்பே சாகுபடி செய்யப்பட்டது.

புகழ்மிக்க கிரேக்க அரசாட்சியின் பொருளாதாரம் மதுரச ஏற்றுமதியில்தான் அடங்கியிருக்கிறது. தொடக்கத்தில் பன்றித் தோல் பை அல்லது ஆட்டுத்தோல் பையில் மதுவை நிரப்பி ஏற்றுமதி செய்தனர். பிறகு (ஸெலட் பழங் குடியினர்) மரப்பீப்பாய்களைத் தயார் செய்தனர். நடுவில் இரும்புப் பட்டயம் அடிக்கப்பட்டது. கி.பி. 100 ஆண்டுகளுக்குப் பின்னர் மதுரசம் அனுப்பவே பீப்பாய்கள் தயாரிக்கப்பட்டன. கிரேக்கர்களை வென்ற ரோமானியர்களும் திராட்சை சாகுபடியிலும் மது உற்பத்தியிலும் ஈடுபட்டனர்.

திராட்சை சாகுபடிக்கு உரிய சிறப்பான தட்பவெட்பமும் இந்தியாவில் குறைவு. இன்று சுமார் 1500 எக்டேரில் சாகுபடியாகும்



"தித்திக்கும் திராட்சை"



திராட்சை 4.08 இலட்சம் டன் உற்பத்தியாகிறது. உலக உற்பத்தியுடன் ஒப்பிடும்போது நமது பங்கு மிகக் குறைவு. திராட்சையின் இலத்தின் வழக்கு விட்டிஸ் வைனிபரா.இதில் விட்டிஸ், ஜீனஸ் பெயராகும். ஆகவே திராட்சை சாகுபடியை "விட்டி கல்ச்சர்" என்று கூறுவர்.

சமஸ்கிருதம், தமிழ், வங்காளி, அசாமி, ஒரியா, இதர திராவிட மொழிகளிலும் 'திராட்சை' ஒரு பொதுவான பெயர்ச்சொல். எனினும் இந்தி, உருது, பாரசீக மொழி வழக்கில் இது "அங்கூர்" எனப்படுகிறது.

இன்று இந்தியாவில் உற்பத்தியாகும் திராட்சையில் சுமார் 45 சதவிகிதம் கர்நாடகத்திலும் 20 சதவிகிதம் மகாராட்டிரத்திலும்,16 சதவிகிதம் ஆந்திர மாநிலத்திலும், 12 சதவிகிதம் தமிழ் நாட்டிலும் மீதி 7 சதவிகிதம் பஞ்சாபிலும் பயிராகிறது.

தமிழ்நாட்டில் மதுரை, திண்டுக்கல், நிலக்கோட்டை வட்டாரங்களில்தான் திராட்சை சாகுபடி பிரபலம். ஓரளவு தர்மபுரி மாவட்டத்திலும் உண்டு. இது மிகவும் செலவான சாகுபடி. ஒரு எக்டேருக்கு நிலத்தில் ரூ. 3,500 செலவு செய்தால் ஆண்டுக்கு ரூ. 30,000 இலாபம் பெறலாம்.

பெங்களூர் நீலம், பச்சை திராட்சை, ஸீமா ஸாயிபி, அனாப் ஸாயிபி, கறுப்பு சம்பகம், தாம்ஸன் ஸீட்லஸ், பன்னீர் ஆகிய ரகங்கள் சாகுபடியாகின்றன. திராட்சை வளர்ப்பில் பிரதான செலவு கான்கிரிட் அல்லது கல்லுக்கால் நட்டு கம்பிகளில் பந்தல் போட வேண்டியிருக்கும். பந்தல் உயரம் ஆறரை அடி வேண்டும். இது ஒரு அசுரக்கொடி, கவாத்து செய்யாமல் விட்டால் 50 அல்லது 60 அடி உயரம் வரை படரும் இயல்புள்ளது. நன்கு பராமரிக்கப்படும் திராட்சைக் கொடிகள் மூன்று ஆண்டுகளுக்கு நல்ல பலன் தரும்.

உங்களுக்குத் தெரியுமா?

வினா: தமிழிலும் ஆங்கிலத்திலும் ஏராளமான சொற்கள் இருக்கின்றன; ஒரு சொல்லை எழுதி, அப்படியே அதைத் திருப்பிப் படித்தாலும் அதே சொல் வர வேண்டும். தமிழில் இரண்டு, ஆங்கிலத்தில் இரண்டு சொற்களை உங்களால் சொல்ல முடியுமா?

விடை: விகடகவி, மோரு போருமோ?

MALAYALAM, KATTAK

(ஆர். முத்தம்மாள், ஸ்ரீவில்லிபுத்தூர்)

8 ஆம் பக்க தொடர்ச்சி

அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதுமுதல் சுமார் பதினைந்தாண்டுக்காலம் சென்னை மாநகராட்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் வசமே இருந்தது.

இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து அதுவரையில் சென்னை மாநகராட்சி காங்கிர சாரிடம்தான் இருந்தது.

ஆட்சிப் பொறுப்பு

சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றிய தி.மு.கழகம், 1967 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பெரும் வெற்றி பெற்றுத் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது.

தி.மு. கழகம் ஆட்சிக்கு வந்தபின் நடந்த சென்னை மாநகராட்சித் தேர்தல்களிலும் கழகமே வெற்றிவாகை சூடியது. வேலூர் நாராயணன் வணக்கத்திற்குரிய மாநகரத் தந்தையானார்.

1969-70ல் திரு. வை. பாலசுந்தரம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

19970-71ல் திரு.சா. கணேசன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1971-72ல் திருமதி. காமாட்சி ஜெயராமன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1972-73ல் திரு.ஆர். ஆறுமுகம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'அ'வில் தொடங்கிய மேயர்கள் பட்டியல் இந்த 'ஆ'வுடன் முடிவுற்றது.

1973 டிசம்பரில் மஸ்டர் ரோல் மோசடி தொடர்பாகத் திரு.எச்.வி. ஹண்டே கொடுத்த புகாரின் பேரில், சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டது. அதன்பிறகு திரு. டி.வி. அந்தோணி இ.ஆ.ப. மாநகராட்சித் தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

1968ல் மாநகராட்சித் தேர்தல் நடை பெற்றபோது, சென்னை மாநகரில் 120 வட்டங்களே இருந்தன. இப்போது அதன் எண்ணிக்கை 155 ஆக விரிவாகியிருக்கிறது.

உள்ளாட்சித் தேர்தல்கள்

காங்கிரஸ் கட்சியானது 1969ல் பிளவு பட்டு, இந்திரா காங்கிரஸ் துளிர்த்தது. அதே போல் திராவிட முன்னேற்றக் கழகத்துடன் முரண்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், அ.இ.அ.தி.மு.கவைத் தொடங்கி 1977ல் ஆட்சிபீடமேறினார்.

18 வயதுடையவர்களையெல்லாம் வாக்காளர்பட்டியலில் சேர்த்து, உள்ளாட்சித் தேர்தல்களை அவர் நடத்த முயன்றார். முதலில் ஊராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்திட எண்ணிய அவர் - பெண்கள் ஆதிதிராவிடர்கள், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கெல்லாம் இடஒதுக்கீடு செய்து தேர்தல் நடத்த முயன்றார்.

இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. மாண்புமிகு முதல்வராக இருந்த திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் இட ஒதுக்கீடு எதுவுமின்றி ஊராட்சி முதலான உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தப்படும் என்றார். அதன்படி 1986ல் தமிழ்நாட்டில் ஊராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது.

அத்தேர்தல்தான் முதன்முதல்18 வயதுடையோர் வாக்களித்த சிறப்பினைப் பெற்றது.

[illegible]

...[illegible] பதில் [illegible] யப்புக்காகச் [illegible] வகுப்பு நடந்து [illegible] ரசிரியர் மிகவும் ஆர்வமாகப் [illegible] சொல்லிக் கொண்டிருந்தார். அனைத்து [illegible] வ, மாணவியரும் பேராசிரியரின் உரையை [illegible] விடாமல் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தனர். [illegible] ணவனையும் கூர்ந்து கவனிப்பதில் [illegible] ரியர், அண்ணாத்துரை [illegible] விட்டார். [illegible] நடத்திய பாடத்தை [illegible] கோபமாக அண்ணாத்துரை இடம் [illegible] அண்ணா பேராசிரியரின் பாடத்தைக் [illegible] கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

'அண்ணாதுரை, வகுப்பில் ஏன் நீ மட்டும் குறிப்பெடுக்க வில்லை. சும்மா உட்கார்ந்து இருக்கிறாய்?' என்று சற்றுச் சூடாகக் கேட்டார் பேராசிரியர்.

[illegible] அண்ணா அவர்கள், 'குறிப்பு எடுப்பதையோ, அப்படி எடுத்த குறிப்புகளை மனப்பாடம் செய்வதையோ நான் வெறுத்து [illegible]' என்றார்.

அண்ணாவின் பதிலால் [illegible] பேராசிரியர், 'சரி நான் இதுவரை நடத்திய பாடத்தைத் திருப்பிச் சொல் பார்க்கலாம்' என்றார் [illegible].

[illegible] ந்தது [illegible] செய்தி. அந்தப் [illegible] டையில் சக தோழர் [illegible] கவனித்துப் பின்னர் [illegible] ளைத் தன் உரையில் மேற்கோள் காட்டிப் பேசுவதற்கு அடிச்சுவடாக அமைந்தது எனலாம்.

சுவைமிகு செய்திகள்

இதேபோல், மகாகவி பாரதியாரின் இளமைக் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியைக் காணலாம்.

பார், அதி சின்னப்பயல்

சுப்பிரமணியன் எட்டயபுரத்தில் தன்னுடைய இளமைப் பருவத்தைக் கழித்துவந்தான். சின்னஞ்சிறு வயதிலேயே தோப்புத் துறவுகளிலும், ஆற்றங்கரைகளிலும் சிந்து பாடிக்கொண்டே விளையாடித் திரிந்தான். [illegible] இத்தகைய கவிதையையும் ஆற்றலைக் கண்ட எட்டயபுரத்து சமஸ்தானப் புலவர்கள், சுப்பிரமணியத்தைத் தங்கள் சபையிலே அழைத்துச் சோதித்தார்கள். அவருடைய அபாரத் திறமையைக் கண்டு போற்றிப் புகழ்ந்து பாராட்டி, 'பாரதி' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கிகவுரவித்து மகிழ்ந்தார்கள்.

ஒருமுறை [illegible] சேர்ந்த செல்வந்தர் காந்திமதிநாதப் பிள்ளை என்பவர், பாரதியைக் கிண்டல் செய்தார். [illegible] கேலியாக, ''பாரதி சின்னப்பயல்'' [illegible] யைக் கடைசி அடியாகக் கொண்டு ஒரு பாட்டுப் பாடு என்றார். உடனே பாரதியோ, ஈற்றடியாக, 'காந்திமதிநாதனைப் பார்; அதி சின்னப்பயல்!' என்று பாடினார். வியந்துபோன செல்வந்தர், பாரதியைக் கட்டிப்பிடித்து உச்சிமோந்தார். அந்தச் சிறுவனே பின்னர் மகாகவி பாரதியாக உருவெடுத்தார்.

'அகல்யா' எனும் கவிஞர்

கவிஞர் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் தனது இளம் வயதில், புதுச்சேரியில் பாவேந்தர் பாரதிதாசனாருடன் வாழ்ந்து வந்தார். பாவேந்தர் தன்னுடன் உள்ளவர்களைப் பாராட்டி ஊக்குவித்துக் கவிதை எழுதச் செய்வார். ஒருநாள், பட்டுக்கோட்டையார் தான் கொண்டுவந்திருந்த ஒரு கவிதைப் பத்திரிகையைப் பாவேந்தர் புரட்டிக் கொண்டிருந்தார். அதில் நறுக்கென ஒரு நல்ல கவிதை தென்பட்டது. எழுச்சிமிகுந்த பொதுவுடைமைக் கொள்கைப் பாடல் அது. பாவேந்தர், பட்டுக்கோட்டையாரிடம் 'தம்பி, அகல்யா என்பவர் எழுதிய இதுபோன்ற பாடல்களை நீயும் எழுதிப் பழகணும், என்ன அற்புதமான பாட்டு' என்று அறிவுரை செய்தார்.

புன்னகையுடன் ''சரிங்க அய்யா'' என்று சொன்னவர், மெதுவாக "அந்தப் பாட்டை எழுதிய அகல்யா நான்தான்யா" என்று சொன்னார்.

கலகலவெனச் சிரித்த பாவேந்தர், ''தம்பி, நீ எப்போது 'அகல்யா' ஆனாய்?'' என்று கேட்க – ''நான் அ. கல்யாணசுந்தரம்தானே ஐயா? முதல் நான்கெழுத்தை எடுத்து அப்படிப் போட்டேன்'' என்றார் . பாவேந்தர் அவரை வாய்விட்டுப் பாராட்டினார். அதன்பின்பு ''இம்மாதிரியான புரட்சிமிக்க பாடல்களை எழுதும் ஆற்றல்கொண்ட நீ இனிமேல் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்ற பெயரிலேயே எழுது. தமிழ் உன்னை வாழ்த்தும்; தமிழர் தலை நிமிர்வர்,'' என்றார்.

அவரின் வாக்குப் பலித்தது. இன்றும் பட்டுக்கோட்டையாரின் புரட்சிமிகு பாடல்கள் ஒலிப்பதைக் கேட்கிறோம் அல்லவா?

இளமைப்பலி எழுதிய சிறுவர்

முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தனக்கு 16 வயதாகும்போதே உணர்ச்சிமிகு கவிதைகளையும், கட்டுரைகளையும் படைத்தவர். அந்த வயதிலேயே, 'முரசொலி' என்ற கையெழுத்துப் பிரதியைத் தொடங்கி நடத்திவந்தார். ஒருமுறை 'இளமைப்பலி' எனும் புரட்சிக் கருத்துகள் கொண்ட ஒரு கட்டுரையை அறிஞர் அண்ணா அவர்கள் நடத்திய 'திராவிட நாடு' பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார்.

அருமையான கட்டுரையாகக் கருத்துச் செறிவோடு இருந்ததால், அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் வெளியிட்டார். பின்னர் ஒருமுறை, திருவாரூருக்கு அண்ணா வந்தபோது, மறக்காமல், 'இளமைப்பலி' என்ற கட்டுரையை எழுதியவரை அழைத்துவரச் சொன்னார்.

பேரறிஞர் முன்னால், அடக்க, ஒடுக்கமாகப் பணிவோடு இளைஞர் கலைஞர் நின்று கொண்டிருந்தார். கலைஞர்தான் அந்தக் கட்டுரையை வடித்தார் என்பதை அறிந்தவுடன் அண்ணா அவர்கள் வியந்துபோனார்; பாராட்டினார். பிறகு கலைஞர் மாணவராக இருந்த காரணத்தால், 'அவர் படிப்பில் ஆர்வம் செலுத்த வேண்டும். படித்து முடித்த பிறகு அரசியலுக்கு வரவேண்டும்' என்று அறிவுரை வழங்கினார்.

அந்தக் கலைஞர்தான் இன்றைக்கு முத்தமிழ் வித்தகராக, தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் ஒப்பற்ற தலைவராக, முதல்வராக விளங்கி வருகிறார்.

வாழ்க்கையில் இளமைக் காலத்தை வீணடித்துவிடக்கூடாது. அது ஒருமுறைதான் பூக்கும் மலர். அது வதங்கி வீணாகக் குப்பைக்குப் போய்விடக்கூடாது. என்றும் வற்றாத மணம் வீச வேண்டும்.

– எம்.வி.எம். அசோகன்

புரட்சி என்பது வாலிபத்தின் கூறு; பகுத்தறிவாளரின் ஆயுதம்; மக்களின் மகத்தான சக்தி; அதை அழித்திட எவராலும் இயலாது.

– அறிஞர் அண்ணா

அப்போது நடைபெற்ற நகராட்சித் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக்கழகம் அதிக இடங்களைப் பெற்றது. அதே சமயம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலைப் பொறுத்தமட்டில் இ. காங்கிரஸ் அ.தி.மு.க கூட்டணிக்கு அதிக இடம் கிடைத்தது.

1986 ல் நடைபெற்ற அந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலுக்குப் பிறகு, சரியாகப் பத்தாண்டு கழித்து இப்போதுதான் தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழக அரசால் முறைப்படி தேர்தல் நடத்தப் பெற்றிருக்கிறது.

மதுரை நகராட்சி

1866ல் இந்தியாவில் நகரவை என்ற அமைப்பின் கீழ் சென்னை மாநகருக்கு அடுத்தபடியாக மதுரை மாநகர் விளங்கியது. நகரவை என்பது, இப்போதைய நகரியம் என்பதற்கு இணையானது எனலாம்.

அப்போதைய மதுரை மாநகர் 2.6 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் 41,600 என்ற அளவில் மக்கள் தொகையும் உடையதாக இருந்தது.

அந்த நகரவையே பிறகு மாநகராட்சி எனப்பட்டது. வி.எச். லீவிங் என்பவர்தான் முதல் தலைவராக இருந்தார். அவருக்கு உதவியாக அமர்த்தப்பட்ட 14 உறுப்பினர்களும் 'ஆணையாளர்கள்' என்று குறிப்பிடப் பட்டார்கள்.

அந்த உறுப்பினர்கள் 1892–1920 ஆம் ஆண்டுகளிளெல்லாம் நடத்தப்பட்ட தேர்தல் மூலம் தேர்வு பெற்றனர்; அவர்களைத் தவிர வேறுசில உறுப்பினர்களை அரசும் நியமித்தது.

அதேபோல் 1969 ஆம் ஆண்டில் நடைபெற்ற நகராட்சித் தேர்தலில், மதுரை மாவட்டத் தி.மு.கழகச் செயலாளராக இருந்த திரு.எஸ். முத்து அவர்கள் வெற்றி பெற்று, நகராட்சித் தலைவர் ஆனார்; துணைத் தலைவராகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஆனந்தம் அவர்கள் பொறுப்பேற்றார்.

மதுரை மேயர்

அதனையடுத்து, 1971 - ஆம் ஆண்டு, நகராட்சியாக இருந்த மதுரைக்கு மாநகராட்சி அந்தஸ்து அளிக்கப்பட்டது; மதுரையைச் சுற்றிலுமிருந்த 13 ஊராட்சிகளும் இதன் காரணமாக மதுரையோடு சேர்க்கப்பட்டன. வார்டுகள் எல்லாம் முறைப்படி பிரிக்கப்பட்டன.

இதற்குப் பின் ஏழாண்டுக்காலம் கழித்தே –அதாவது 1978 ஆம் ஆண்டில் மதுரை மாநகராட்சிக்கு முதன்முதலாகத் தேர்தல் நடத்தப்பட்டது.

அதற்கு 65 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்; ஆதிதிராவிட சமூகத்தார் 4 பேரும், பெண்கள் 5 பேரும், மாநகராட்சி உறுப்பினராக

அரசால் நியமிக்கப்பட்டார்கள். அதே ஆண்டில் இந்த 74 பேரும் பதவியேற்றார்கள்.

அப்போதெல்லாம் மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள் பதவிக்காலம் ஆறாண்டுகளாக இருந்தது. அதே சமயம் நகரத் தந்தையின் பதவிக் காலம் 2 ஆண்டுகள் மட்டுமே என்ற நிலை.

நகராட்சித் தலைவராக இருந்த மதுரை எஸ். முத்து அவர்களே இரண்டாம் முறை

யாகவும் வெற்றி பெற்று வணக்கத்திற் குரிய மதுரை மேயராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

முதலில் தி.மு.க.விலும், பிறகு அ.தி.மு.க. விலும் இருந்த அவர் 1980 வரை இரண்டாண்டுக் காலமே மேயராகப் பதவி வகித்தார்.

துணைமேயராகத் திரு.கே.எஸ். சந்தானம் அவர்கள் இருந்தார்.

பிறகு மதுரை மேயராகத் திரு. எஸ்.கே. பாலகிருஷ்ணன் அவர்களும், திரு.எம். பட்டுராஜன் அவர்களும் - துணைமேயர் களாகத் திரு.கோ. நவநீத கிருஷ்ணன், திரு.எம். முனியசாமி ஆகியோரும் பதவி வகித்தனர்.

1984 ஜூலை 28 ஆம் தேதியுடன் மதுரை மாநகராட்சி உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவடைந்தது. அதன்பின் மாவட்ட ஆட்சித் தலைவரே மாநகராட்சித் தனி அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டார். மாநகராட்சியின் நிர்வாகப் பொறுப்பு ஆணையரிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதிய மேயர்கள்

இவ்வாறு சென்னை மாநகராட்சியும், மதுரை மாநகராட்சியும் பல மேயர்களைக் கண்டுவிட்டன; ஆனால் மாநகராட்சி அந்தஸ்து பெற்றும், இதுவரைமேயரைக்காணாமலிருந்த திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாநகராட்சிகள் இப்போதுதான் முதன் முதலாக 'வணக்கத் திற்குரிய' மேயரைத் தேர்ந்தெடுத்திருக்கின்றன.

மறக்க முடியாதவை

சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் 155 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க 15 இலட்சத்து 10 ஆண்களும், 15 இலட்சத்து 6 ஆயிரத்து 262 பெண்களுமாக 30 இலட்சத்து 6 ஆயிரத்து 272 வாக்காளர்கள் உரிமை பெற்றிருந்தார்கள். அவர்களோடு, புதிதாக ஒரு இலட்சத்து 3 ஆயிரத்து 286 பேரும் வாக்குரிமை பெற்றிருந்தனர். ஆக மொத்தத்தில் சென்னை மேயரையும் உறுப்பினர்களையும் தேர்ந் தெடுக்க 31 இலட்சத்து 19 ஆயிரத்து 558 பேர் வாக்குரிமை பெற்றிருந்தனர்.

மானமும் அறிவும்தான் மனிதனுக்கு அழகு.

–தந்தை பெரியார்

எண்ணாயிரம் பேர் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

தமிழ்நாடு முழுமைக்குமாக அக்டோபர் 9,12 தேதிகளில் நடந்த உள்ளாட்சித் தேர்தல்கள் மூலம் மட்டும் 13,738 தலைவர்கள், ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 203 வார்டு உறுப்பினர்கள் என, 1.32 இலட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுமைக்குமாக 819 இடங்களில் அக்டோபர் 14,15 தேதிகளில் வாக்குகள் எண்ணப்பட்டன.

மாநகராட்சி மேயர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் கவுன்சிலர்கள் அனைவரும் 25.10.1996 அன்று பதவியேற்றனர்.

இந்தத் தேர்தலில் ஒருவரே இரண்டு இடங்களில் போட்டியிட முடியாது என்ற நிலை வகுக்கப்பட்டிருந்தது. பொதுத் தேர்தலுக்கு இருந்தது போலவே, இந்த உள்ளாட்சித் தேர்தலுக்கும் இரண்டு பிரிவாகப் பார்வை யாளர்களர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் யாரானாலும், தேர்தல் பணிக்காக அரசு வாகனங்களைப் பயன்படுத்தக்கூடாது என்று தேர்தல் ஆணையர் அறிவித்திருந்தார். வாக்குச் சீட்டுகள் அச்சிடுதல் உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான மற்ற பணிகள் போன்ற வற்றுக்காக மட்டும், 48 கோடி ரூபாய் வரை செலவாகும் என்றும் தெரிவித்திருந்தார்.

தேர்தல்கள் முடிவுற்றபின், அவர் விடுத்திருந்த அறிவிப்பொன்று நமக்குப் பெரும் மகிழ்வளிப்பதாக இருந்தது. ''ஒன்றிரண்டு ஊர்களில் நடைபெற்ற சிறு சிறு அசம்பாவிதங்களைத் தவிர, தேர்தல் அமைதி யாகவே நடந்து முடிந்தது.'' என்பதே அது.

– பி.எல் ராஜேந்திரன்



அன்பு மகள் வளருகிறாள்

கவலையும் வளர வேண்டுமா ?

இன்றே கிஸான் விகாஸ் பத்திரத்தில் சேமியுங்கள்

லட்சாதிபதி ஆகிடுங்கள்!

மகளின் திருமணச் செலவுபற்றிய கவலையை விடுங்கள்.

ஆரம்ப முதலீடு	5 1/2 ஆண்டுகளில்	11 ஆண்டுகளில்	16 1/2 ஆண்டுகளில்	22 ஆண்டுகளில்
Rs.5000	Rs. 10000	Rs. 20000	Rs. 40000	**Rs. 80000**
Rs. 6250	Rs. 12500	Rs. 25000	Rs. 50000	**Rs. 100000**
Rs. 10000	Rs. 20000	Rs. 40000	Rs. 80000	**Rs. 160000**
Rs. 12500	Rs. 25000	Rs. 50000	Rs. 100000	**Rs. 200000**

(ஒவ்வொரு 5 1/2 ஆண்டிலும் மறுமுதலீடு)

★ இலவசப் பரிசுக் கூப்பனும் உண்டு. சூப்பர் பம்பர் முதல் பரிசு மாருதி ஆம்னிவேன் மற்றும் 249 பரிசுகள்

தொடர்பு கொள்க:
அனைத்து அஞ்சலகங்கள்,
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்
மற்றும் முகவர்கள்,
புதுக்கோட்டை

வ. கனகராஜ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
புதுக்கோட்டை

மழை வெள்ளம்: முதல்வர் ஆணை

வங்கக்கடலில் உருவான புயல் சின்னம் பலவீனப்பட்ட போதிலும், தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாகப் பெய்த கடுமையான மழை வெள்ளத்தால் பலவிதமான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன; சிலர் உயிரிழக்கவும் நேர்ந்திருக்கிறது. இவ்வாறு பெய்த மழையின் அளவு, அதனால் ஏற்பட்ட பலவகைச் சேதங்கள் குறித்த விவர அறிக்கையினை உடனே தயாரித்து அரசுக்கு அனுப்புமாறு - மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் ஆணையிட்டிருக்கிறார்.

மாண்டோர் குடும்பத்தார்க்கு நிதி

மழை-வெள்ளம் காரணத்தால் ஏராளமான பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டுள்ளதால் தமிழக அரசு நிவாரண நடவடிக்கையில் போர்க்கால நடவடிக்கை போல்தீவிரவேகம்மேற்கொண்டுள்ளது. இந்த மழை வெள்ளம் காரணமாகத் தமிழகமெங்கும் 21 பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரிகிறது ஏராளமான கால்நடைகளும் மாண்டிருக்கின்றன.

இந்த மழை வெள்ளத்தால் உயிரிழந்தோர்க்கு விபத்துகளில் மாண்டோர்க்கு வழங்கப்படுவது போல் தலா ரூ. 15 ஆயிரம் தர மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்.

இதுவரை மழைகாரணமாக உயிரிழந்தோர்க்கு ரூ. 10 ஆயிரம் மட்டுமே தரப்பட்டு வந்தது; இப்போது அத்துடன் ரூ. 5 ஆயிரம் சேர்த்து வழங்கப்படுகிறது.

இம் மழையால், முழுவதுமாகச் சேதமடைந்த குடிசைகளுக்குத் தலா ஆயிரம் ரூபாயும், சரிபாதியளவில் சேதமுற்றவைகளுக்கு ரூ. 500ம் வழங்கப்படும்.

கால் நடைகளைப் பொறுத்தவரை ஆடு - செம்மறி ஆடு இறந்திருந்தால் ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபாயும், பசு, காளை, எருமை இறந்திருந்தால் ரூ. 5 ஆயிரம் வீதமும், பசு, எருமைக் கன்றுகளுக்குத் தலா இரண்டாயிரம் ரூபாயும் வழங்கப்படும். இது தொடர்பான நடவடிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மேற்கொள்ளப்படும்.

உயிரிழந்தோரின் குடும்பத்தார்க்குப் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ 50 ஆயிரம் பெற்றுத்தரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆந்திராவுக்கு உதவி

ஆந்திர மாநிலத்தில் வீசிய கடுமையான புயல், பெய்த கொடூரமான மழை ஆகியவற்றால் அந்த மாநிலம் பெரும் பாதிப்பிற்கு ஆளானது. இக்கொடுமையால் அங்கே ஏறத்தாழ 300 பேர் இறந்திருப்பதாக அஞ்சப்படுகிறது.

அந்த அண்டை மாநில மக்களின் துயர்துடைக்கும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்க ஆணையிட்டுள்ளார்.

வருந்துகிறோம்

திரு. அ. கண்ணன் அவர்கள் நம்முடைய 'தமிழரசு' அலுவலகத்தில் ஓராண்டு காலம் பணிபுரிந்தவர்; பின்னர் காமராசர் இல்லத்தின் காப்பாளராகப் பணியாற்றி வந்தார். 46 வயதுடைய அவர், சிங்கம்புணரியில் 2.10.1996 அன்று இயற்கை எய்தினார். திருமதி இராணி என்ற மனைவியும், ஒரு மகனும், ஒரு மகளும் அவருக்கு உண்டு.

திரு.மு. முத்துக்காளத்தி அவர்கள், நம் 'தமிழரசு' ஏட்டில் இணையாசிரியராகவும், அதன்பின் செய்தி மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநராகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்றவராவார். சிறந்த எழுத்தாளராகவும், பதிப்பாளராகவும் விளங்கிய அவர், 15.10.1996 அன்று சென்னையில் காலமானார். பேராசிரியர் திருமதி சிவ அரசி என்னும் துணைவியாரும், ஒரு மகளும், இரண்டு புதல்வர்களும் அவருக்கு உண்டு.

மேற்கண்ட அன்பர்கள் இருவர் மறைவினாலும் கலங்கி நிற்கும் அவர்கள் குடும்பத்தாருக்குத் 'தமிழரசு' தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

மாநகராட்சி மேயர்களின் வாழ்க்கைக் குறிப்பு

திரு. மு.க. ஸ்டாலின் [தி.மு.க]

சென்னை மாநகராட்சி
(மொத்த வார்டுகள் 155)
பெற்ற வாக்குகள் : 8,24,526

தி.மு.கழக இளைஞரணியின் மாநிலச் செயலாளராக உள்ள இவர் (வயது 44.) நெருக்கடி நிலை காலத்தில் கடுமையான சிறைத் தண்டனைக்கு ஆளானவர். பி.ஏ. பட்டம் பெற்றவர். இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். சென்னை உட்பட 14 சட்டமன்றத் தொகுதிகளையும் உள்ளடக்கிய 174 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள சென்னை மாநகராட்சியின் தந்தையாக, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் இரண்டாவது மகனாவார். இவரது மனைவி பெயர் துர்க்காவதி. இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் இருக்கிறார்கள்.

திரு.வி. கோபாலகிருஷ்ணன் [த.மா.கா]

கோயம்புத்தூர் மாநகராட்சி
(மொத்த வார்டுகள் - 60)
பெற்ற மொத்த வாக்குகள் : 2,14,394

தி.மு.கழகக் கூட்டணி சார்பில், கோவை மாநகராட்சித் தேர்தலில் நின்று வெற்றி பெற்றவர் இவர். 1988ல், மேட்டுப்பாளையம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இவர் இருந்திருக்கிறார்; இவருடைய தந்தையார் திரு. ஆதிகேசவலு அவர்கள், எஸ்.என்.ஆர். அறக்கட்டளையின் அறங்காவலராக இருக்கிறார். கோயம்புத்தூர் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டு 15 ஆண்டுகள் ஆகின்றன.

திருமதி புனிதவல்லி [த.மா.கா]

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி
(மொத்த வார்டுகள் : 60)
பெற்ற மொத்த வாக்குகள் : 1,55,623

தி.மு.கழகக் கூட்டணி ஆதரவுடன் நின்ற இவர், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு.எம். பழனியாண்டியின் மனைவி இவர். பி.ஏ. பட்டதாரி. சிறந்த சமூக சேவகி எனப் பெயரெடுத்தவர். சமூகநலவாரிய உறுப்பினராக இருந்தவர்; எக்ஸ்னோரா' அமைப்பின் தலைவியாக இருப்பவர். திருமதி புனிதவல்லி அவர்கள் திருச்சி மாநகராட்சியின் முதல் மேயர் என்கிற பெருமைக்கு உரியவராகிறார்.

திரு. சூடாமணி [தி.மு.க]

சேலம் மாநகராட்சி
(மொத்த வார்டுகள் - 72)
பெற்ற மொத்த வாக்குகள் : 1,56, 826

சேலம் மாநகராட்சித் தேர்தலில் பெரு வெற்றி பெற்றுள்ள டாக்டர் சூடாமணி அவர்களுக்கு 58 வயதாகிறது. சேலம், நகராட்சியாக இருந்த காலத்தில் ஐந்தாண்டுகாலம் நகராட்சித் தலைவராகப் பணியாற்றிய அனுபவம் இவருக்கு உண்டு. மருத்துவப் படிப்பில் பட்டம் பெற்றுள்ள இவர் தந்தையார் காலந்தொட்டே அரசியலில் ஈடுபாடு கொண்டிருந்தாலும் கட்சி பேதமின்றி பொதுப்பணியாற்றும் ஆர்வலர்; தனக்கு அடுத்த வேட்பாளரைவிட இவர் 60 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்றிருப்பதிலிருந்தே இது விளங்கும்.

திருமதி. உமாமகேஸ்வரி [தி.மு.க]

திருநெல்வேலி மாநகராட்சி
(மொத்த வார்டுகள் - 55)
பெற்ற மொத்த வாக்குகள் : 96, 671

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த இவருக்கு 39 வயதாகிறது. இவருடைய கணவர் திரு.கு. முருகசங்கரன், திண்டுக்கல்லில் உதவிக் கோட்டப் பொறியாளராகப் பணியாற்றிவருகிறார். பி.ஏ. பட்டம் பெற்றவர் திருமதி உமா மகேஸ்வரி.

இவருடைய பெற்றோர் - திரு. பூபாலன், திருமதி இரத்தினம் அம்மாள். இசையில் ஆர்வமுடைய இவருக்கு ஒரு புதல்வன், இரண்டு புதல்வியர் உண்டு.

திரு.பெ. குழந்தைவேலு [தி.மு.க]

மதுரை மாநகராட்சி

(மொத்த வார்டுகள் - 72)
பெற்ற மொத்த வாக்குகள் : 1,80,322

மதுரைமாநகராட்சிமேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு.பெ. குழந்தைவேலு அவர்கள் 56 வயதினர்; சட்டப் படிப்பு படித்துள்ள இவர் பெற்றோர் - திரு.பெருமாள். திருமதி அன்னலட்சுமி ஆகியோராவர். இவருடைய மனைவி பெயர் திருமதி தனலட்சுமி, இவர்களுக்கு ஒரு மகனும், மகளும் உள்ளனர். தி.மு. கழக அவைத் தலைவராக இருக்கின்ற இவர், முன்பு மாணவர் அணி இணைச் செயலாளராகவும் இருந்திருக்கிறார்; சாதாரண விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

—அ. மதிமாறன்

அட்டைப்பட விளக்கம்

முதலாம் அட்டை:

சென்னை மாநகராட்சி மேயராக திரு. மு.க. ஸ்டாலின் பதவியேற்பு

இரண்டாம் அட்டை :

சென்னை மாநகராட்சி

நான்காம் அட்டை :

தமிழக மாநகராட்சி மேயர்கள்

உள்ளாட்சித் தேர்தல்: சில தகவல்கள்

சென்னை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராகப் பொறுப்பேற்கவிருக்கும் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் 1.4.1953 ஆகும். இப்போது இவர் வயது 44; இவர் ஏற்கவிருக்கும் சென்னை மேயரின் எண்ணிக்கையும் 44. இதுமட்டுமல்ல; இவர் தந்தையார் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வராகப் பதவியேற்றபோது அவர் வயதும் 44 ஆகும்.

திருநெல்வேலி மாநகராட்சி மேயர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள வணக்கத்திற்குரிய திருமதி. மு. உமாமகேசுவரி அவர்கள், தமிழ் நாட்டிலேயே ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த முதல் மேயர் என்கிற சிறப்பைப் பெறுகிறார்.

இலண்டனை அடுத்து, இந்தியாவின் முதல் மாநகராட்சி என்ற பெருமையோடு இங்கேதான் மேயர் பதவி ஏற்படுத்தப்பட்டது.

சென்னை மாநகராட்சியாகுமுன், முதலில் நகராட்சித் தலைவராகப் பதவி வகித்த தமிழ்நாட்டுக்காரர் நீதிக்கட்சி நிறுவனர்களில் ஒருவரான வெள்ளுடை வேந்தர் சர். பிட்டி தியாகராயர் ஆவார்; அவருடைய சிலையை சென்னை மாநகராட்சி வளாகத்தில் காணலாம்.

இந்திய வைஸ்ராயாக இருந்த 'லார்டு ரிப்பன்' பெயரில் 1913ல் கட்டப்பட்ட 'வெள்ளை மாளிகை' எனப்படும், சென்னை மாநகராட்சி கட்டிடத்தில் உள்ள நீரர் சத்திய மூர்த்தி திருவுருவச் சிலை, அந்நாள் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களால், திரு. ஜி. குசேலர் (தி.மு.க) அவர்கள் மேயராக இருந்தபோது திறந்து வைக்கப்பட்டது.

உலகத்திலேயே சென்னை மேயர்தான் 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பெருமையினைப் பெறுகிறார். பம்பாய், கல்கத்தாவிலெல்லாம் சென்னை மாநகரைவிட அதிக மக்கள் உள்ளபோதிலும், அங்கெல்லாம் இதுவரை மேயர் பதவிக்கென்று நேரடியாகத் தேர்தல் நடந்ததில்லை.

சென்னை நகர நிர்வாகம், 1688ல் பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்பட்டது; 1792ல் சென்னை நகராட்சி ஏற்படுத்தப்பட்டது. 1919ல் சென்னை நகராட்சிச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி சென்னையின் முதலாம் நகரத் தந்தையாக நியமிக்கப்பட்டவர் தேநியல் ஓிக்சன் என்ற வெள்ளையர் ஆவார்.

சென்னை மாநகராட்சியின் 'வணக்கத்திற்குரிய தமிழராக' முதல் மேயராக 1933ல் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, ராஜா சர் முத்தையா செட்டியாருக்கு வயது 29 தான். 1719 முதல் எரபாலு செட்டித் தெருவிலிருந்த சென்னை நகர நிர்வாக அலுவலகம், இவர் காலத்தில்தான் இப்போதுள்ள ரிப்பன் கட்டிடத்திற்கு இடம் மாறியது. மேயர் அணியும் 100 பவுன் தங்கச் சங்கிலி, மேயர் அமரும் நாற்காலி, காகிதஉறை நறுக்க மேயர் பயன்படுத்தும் வெள்ளிக்கத்தியெல்லாம் இவர் செய்து கொடுத்தவைகளேயாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் : எம். அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

திரு பெ. குழந்தைவேலு
- மதுரை

திரு வி. கோபாலகிருஷ்ணன்
- கோயம்புத்தூர்

திருமதி உமாமகேஸ்வரி
- திருநெல்வேலி

திருமதி புனிதவல்லி
- திருச்சிராப்பள்ளி

திரு சூடாமணி
- சேலம்

தமிழரசு

16.11.1996 ரூ.3

ஆசிரியர் மடல்

காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்களும் டில்லியில் நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி, தமிழ் நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீர் தரப்படவேண்டும் என்பதன் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடந்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தை குறித்த செய்தி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

குறுவை சாகுபடி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் – வடகிழக்குப் பருவமழை, காலத்தோடு கருணை காட்டத் தொடங்கியிருக்கிறது. அந்த நம்பிக்கையில், சம்பா நடவில் உற்சாகத்தோடு ஈடுபட்டுள்ளனர் தமிழ்நாட்டு விவசாயப் பெருமக்கள்.

தமிழகத்தில் காவிரி நதிநீர் பாயும் பரப்பளவு 20.208 இலட்சம் ஏக்கர்; அதேநேரத்தில், மேட்டூர் அணைபாசனப்பகுதி மட்டும் 21.588 இலட்சம் ஏக்கர். இதில் தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 15.889 இலட்சம் ஏக்கர் இருக்கிறது.

கடந்த இருபதாண்டு காலமாகவே பெரும் பிரச்சினையாகியுள்ள காவிரி நீரால் - உணவு உற்பத்தி, மின் உற்பத்தி, இலட்சோபலட்சம் மனித உழைப்பு நாட்கள் எல்லாம் தமிழ்நாட்டில் சீர்கேடு அடைந்துள்ளது. இந்நிலையில், காவிரி வடிநிலப் பகுதி விவசாயிகள் சம்பாப் பயிர் விளைவிக்க மேற்கொண்டுள்ள நம்பிக்கை நிறைவேற, தட்டுப்பாடற்ற காவிரி நீர் மிக மிக முக்கியமாகும். ''இருமாநில விவசாயிகளும் பாதிக்கப்படாதபடி நீர்ப்பங்கீடு அமையும்; இதில் தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை'' என்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தெரிவித்துள்ளமை எல்லோருக்கும் தெம்பளிப்பதாக இருக்கிறது.

தூய பட்டு

தூய சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்



இந்த இதழில் ...

★ அரசுப் பணியாளர்கள் இல்லாவிட்டால் திட்டமில்லை
-முதல்வர் கலைஞர் 2

★ தம்பிக்கு
-எழிற்பித்தன் 6

★ கூட்டுறவே நாட்டுயர்வு 7

★ மாநகராட்சித் தலைவர்களின் பதவியேற்பு நிகழ்ச்சிகள் 9

★ செய்திச்சரம் 14

★ வாழ்வோர் யார்?
கவிஞர் கா. வேழவேந்தன் 15

★ வாசகர் இதயம் 17

★ குறட்டை ஒலி
-டாக்டர் மு.வ. 18

★ ஹோமியோபதி மருத்துவம் 23

★ அவனி போற்றும் 6 மாதச் சாதனை குப்பையிலிருந்து மின்சாரம் 30

★ நிலமடந்தை
-முனைவர் சிலம்பொலி செல்லப்பன் 34

★ கைத்தறிக் கூட்டுறவாளர் 39

★ மாநகராட்சி மேயர்கள் 43

★ சிறுமையும் பெருமையும் 44

★ அறிவியல் துளிகள் 47

★ ஆசிரியர் மடல் 48

தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2027
கார்த்திகைத் திங்கள் : 1
மலர்: 27
இதழ்: 10
16.11.1996
விலை: ரூ. 3

அரசுப்பணியாளர்கள் இல்லாவிட்டால் திட்டமில்லை!

- முதல்வர் கலைஞர்

தலைமையுரை ஆற்றிய மாநாட்டினுடைய தலைவர் பாலசுப்பிரமணியம் அவர்களைப் பற்றி நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலச் செயலாளர் நல்லகண்ணு குறிப்பிடும்போது, பாலசுப்பிரமணியத்தின் நீண்ட உரையைக் கேட்டு மகிழ்ந்ததாகவும், அந்த உரையில் பிணைந்திருந்த தமிழ் மொழியின் அழகைப் பெரிதும் வியந்து ரசித்ததாகவும் குறிப்பிட்டார். நானும் கூட அவருடைய உரையிலே மயங்கிப் போய் என்னென்ன கோரிக்கைகளை வைத்தார் என்பது தெரியாமலே உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன். மற்ற கோரிக்கைகள் இருக்கட்டும். இவ்வளவு அழகான தமிழில் ஒரு அழகான அருமையான உரையை ஆற்றி நம்மை எல்லாம் மகிழ்வித்து இளமைக் காலம் முதல் தான் கொண்டுள்ள போர்க்குணம் மாறாத சிறுத்தையாக விளங்குகின்ற அவர் மீது பழி வாங்குகிற நடவடிக்கைகள் கடந்த காலத்திலே எடுக்கப்பட்டன என்பதை என்னுடைய கவனத்திற்கு இங்கே கொண்டு வந்தார். அந்த நடவடிக்கைகள் நிச்சயமாக நீக்கப்படும் என்ற உறுதியை, அவரைப் போல நடவடிக்கைகளுக்கு உள்ளானவர்கள் மீது இருக்கின்ற அந்தக் கொடுமைகளும் அகற்றப்படும் என்ற உறுதியை முதற் கண் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்கள் என்றும், அரசு அலுவலர்கள் என்றும், அரசுப் பணியாளர்கள் என்றும் பல் பெயரிட்டு அழைக்கப்பட்டாலும்கூட நீங்களெல்லாம் அரசின் ஆணிவேர்களாக இருக்கிறீர்கள் என்பதை என்னைப் போன்றவர்கள் என்றைக்கும் மறந்துவிட முடியாது. உங்களுடைய கோரிக்கைகள் வைக்கப்படும் பொழுதெல்லாம் சிலர் சொல்வதுண்டு, சில நிதி அமைச்சர்கள் பேசி நான் கேட்டதுண்டு. "அரசினுடைய நிதி நிலை பத்தாயிரம் கோடி ரூபாய் என்றால், அதில் ஐயாயிரம் கோடி ரூபாய் அரசு அலுவலர்களுடைய, பணியாளர்களுடைய, ஊழியர்களுடைய சம்பளத்திற்கே போய் விடுகிறது என்று ஒன்றைச் சொல்லி, பொதுமக்களுடைய வெறுப்பை அரசு அலுவலர்கள் மீது உருவாக்க எண்ணுகிற விதத்திலே பேசுவார்கள்.

அதைக் கேட்கின்ற பொது மக்களுக்குக் கூட, "ஆமாம் நிதி நிலை அறிக்கையில் பத்தாயிரம் கோடி ரூபாய் அரசின் நிதி நிலை என்கிறார்கள். வரவு செலவுத் திட்டம் படிக்கிறார்கள், அதிலே பாதி ரூபாய் ஐயாயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இவர்களுக்கே அள்ளிக் கொடுத்துவிட்டால், பிறகு மக்களுக்கான திட்டங்கள் எப்படி நிறைவேறுவது?" என்று பாமரத்தனமாகக் கேட்கிற பெரிய மனிதர்களும் உண்டு. நான் 'பாமரத்தனம்' என்ற கடுமையான வார்த்தையைச் சொல்வதற்குக் காரணமே, அவர்கள் வேண்டுமென்றே பேசுவதில்லை. உண்மையிலேயே புரியாமல் பேசுகிற காரணத்தால் அதைப் பாமரத்தனம் என்று குறிப்பிடுகிறேன்.

பத்தாயிரம் கோடி ரூபாயிலே ஒரு அரசு திட்டங்களை நிறைவேற்ற அறிவிப்புச் செய்தால், அந்தத் திட்டங்களுக்கு முதலமைச்சர் கையெழுத்துப் போட்டதும் மாயா பஜாரிலே வருவதைப் போல அந்தக் கோப்பு தானாக வெளியே போய் அதுவே கல்லூரியைக் கட்டிவிடாது. அந்தக் கோப்பு செல்ல வேண்டிய இடங்களுக்கெல்லாம் சென்று பல்வேறு அலுவலர்கள் அந்தக் கோப்பின் வழி பணிபுரிந்து அந்தக் கோப்பின் வழி ஒப்பந்தப் புள்ளிகள் வரவேற்கப்பட்டு, அந்தக் கோப்பின் வழி அவர்களின் நியாயமான ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாம் நிறைவேறிய பிறகு கல்லூரிக்கான பணிகள் நடைபெற்று, அந்தக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டப்பட்டு அந்தக் கல்லூரிக்கான சுவர்கள் எழுப்பப்பட்டு, அந்தக் கல்லூரிக்கான விதானங்கள் அமைக்கப்பட்டு, வகுப்பறைகள் வகுக்கப்பட்டு, இத்தனையும் ஒரு கோப்பிலே முதலமைச்சரோ, நிதியமைச்சரோ, கல்வியமைச்சரோ கையெழுத்திட்டு விட்டால் தானாக நிறைவேறுவதில்லை. இவ்வளவையும் செய்வதற்கு இடையிலே இருப்பவர்கள் தான் நீங்கள் என்பதை நான் என்றைக்கும் மறந்துவிடக் கூடியவன் அல்ல.

எனவே ஒரு திட்டத்தை நிறைவேற்ற இத்தனை கோடி ரூபாய் என்று மதிப்பீடு செய்யும்பொழுது, அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக அரசுப் பணியாளர்கள் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிட முடியாது. அதை மறந்து விடாத காரணத்தினாலேதான் உங்களுடைய எந்த ஒரு முறையீட்டையும் அலட்சியப்படுத்தாமல் அதனுடைய நியாயத்தை உணர்ந்து, சற்று நிதிநிலை குறுக்கிட்டாலும்கூட அதையும் தவிர்த்து அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்கின்ற மனப்பக்குவம் படைத்தவன்தான் நான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடையிலே உள்ளாட்சி மன்றத் தேர்தல் வந்து நடந்து முடிந்து அதனுடைய வெற்றிக் களிப்பிலே வெற்றி பெற்றவர்களெல்லாம் இருக்கிற இந்தக் காலக்கட்டத்தில் அதற்காக நானும் மற்றவர்களும் கட்சிரீதியாகவும் அரசு ரீதியாகவும் எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகள், பணிகள் இவற்றின் காரணமாக இந்த மாநாட்டில் நீங்கள் என்னென்ன கோரிக்கைகள் வைக்கப்போகிறீர்கள், வைத்த கோரிக்கைகள் என்னென்ன, அவைகளைப் பற்றி முன்கூட்டியே அரசு அதிகாரிகளிடத்திலே கலந்துபேசி அதற்கான முடிவினை இந்த மாநாட்டில் சொல்லக் கூடிய அளவுக்கு நேரம் இல்லாமல் போய் விட்டதென்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இருந்தபோதிலும் இதைக் கோரிக்கை மாநாடு என்று நான் கருதாமல் இந்த நான்கைந்து மாத கால ஆட்சிக்கு நீங்கள் தருகின்ற பாராட்டு மாநாடு என்று கருதுகின்றேன். நம்முடைய பிள்ளையை "கடைக்குப் போய் வா" என்று சொன்னால் அது எங்கே போகிறதோ, போகாதோ என்ற சந்தேகத்தில் தாய் "என் கண் அல்ல, ராஜா அல்ல, ரொம்ப நல்ல பிள்ளையாயிற்றே" என்றெல்லாம் ஐந்தாறு முறை கொஞ்சி, குலாவி, போற்றிப் பாராட்டி கடைசியாக

214290

"கொஞ்சம் கடைக்குப் போய் விட்டு வா" என்று சொன்னால் அந்தப் பேச்சிலே பையன் மயங்கிக் கடைக்குப் போய்விட்டு வருவான். ஏனென்றால் நான் சிறுவனாக இருந்தபொழுது என்னுடைய அம்மா என்னை அப்படித்தான் கொஞ்சுவார்கள். எனக்கு இப்பொழுது அம்மா இல்லை. எனவே நீங்களெல்லாம் அம்மாவாக இருந்து மாநாட்டுத் தலைவரும் மற்றவர்களும், நல்லகண்ணு அவர்களும் என்னைப் பாராட்டி, சீராட்டி "மேலும் எங்களுக்காகப் பணியாற்றி எங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்று" என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

"நீங்கள் வைத்துள்ள இருபத்தி ஐந்து கோரிக்கைகளை நான் ஊன்றிப் படித்திருக்கிறேன். அவைகளெல்லாம் புறக்கணிக்கப்படகூடியவைகள் அல்ல, என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். மத்திய ஊதியக்குழு விரைவில் தனது அறிக்கையை அளிக்க உள்ளது. அதனுடைய அறிக்கையின்படி மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறது. அந்த ஊதியக்குழுவின் தலைவர் ஊதியக் குழுவைப்பற்றி சில விவரங்களைத் தெரிந்து கொள்ள கடந்த கால ஆட்சியிலே பலமுறை சென்னையை நாடி வந்தபொழுதும் கூட முதலமைச்சரை சந்திக்க முடியாமல் போன சூழ்நிலைகள் எல்லாம் இருந்தன. ஊதியக்குழுவின் முடிவுகள் எடுக்கப்படுகிற இந்தக் கால கட்டத்திலாவது தமிழக முதல்வராகிய உங்களைச் சந்திக்க இயலுமா என்று என்னைக் கேட்டபொழுது உடனடியாக வரச்சொல்லி அவரோடு நான் பேசியிருக்கின்றேன். அவரிடத்திலே பேசும்பொழுதும் "இந்த மையக் குழுவை மறந்துவிடாமல் ஊதியக் குழுவை, அதனுடைய பரிந்துரைகளை செய்யுங்கள்" என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எந்த மையக் குழுவை? திட்டம் என்பது வேறு, அரசுப் பணியாளர் என்பது வேறு என்று தனியாகப் பிரித்துப் பார்க்காமல் திட்டத்தோடு இணைந்திருப்பவர்கள்தான் அரசுப் பணியாளர்கள், அவர்கள் இல்லாவிட்டால் திட்டம் இல்லை என்ற அந்த

☆ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் கொடுமைகள் தடுப்புச் சட்டம் 1989ன் செயலாக்கத்தை ஆய்வு செய்ய, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 24 பேர் கொண்ட கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

உணர்வோடுதான் ஊதியக்குழுவின் பரிந்துரைகள் வரவேண்டுமென்று நான் அவர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன்.

அந்த ஊதியக்குழுவின் பரிந்துரைகள் நல்ல முறையில் வருமென்று நான் கருதுகின்றேன். மத்திய அரசும் அதை நிறைவேற்றும் என்று நம்புகின்றேன். இன்றல்ல, நிதிநிலை அறிக்கையை சட்டமன்றத்தில் நான் படிக்கும்போதே கூறியிருக்கின்றேன். மத்திய ஊதியக் குழுவின் சிபாரிசுகள் மத்திய அரசால் நிறைவேற்றப்படுகிற நேரத்தில் மாநில அரசும் அதைப் பின்பற்றி நடக்கும் என்று நான் குறிப்பிட்டிருக்கின்றேன். நிச்சயமாக அதைப் பின்பற்றி நாம் நடப்போம் என்ற உறுதியை உங்கள் முன்னால் எடுத்து வைக்கின்றேன்.

இங்கு மாநாட்டுத் தலைவர் அவர்களால் பேசப்பட்டு என்னிடத்திலே அச்சிடப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள அந்தக் கோரிக்கைகள் அனைத்தும் எனக்கு ஒரு குறிப்பேடாகத் தென்படும். அடுத்த நிதிநிலை அறிக்கையைப் படிப்பதற்கு இரண்டு மாதங்கள்தான் இருக்கின்றன. இப்பொழுது படித்து முடித்த நிதிநிலை அறிக்கை ஒரு ஆறுமாத காலத்திற்குத்தான். ஏனென்றால் ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் ஒரு நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு, மே மாதத்தில் ஆட்சிக்கு வந்த நாம் அளித்த நிதிநிலை அறிக்கை இந்த நிதி ஆண்டுக்கு மாத்திரம் தான். எனவே அது முழுமையான நிதிநிலை அறிக்கை அல்ல. எனவே அடுத்த நிதிநிலை அறிக்கை டிசம்பர் கடைசியிலோ அல்லது ஜனவரியிலோ. ஆளுநர் உரையும் அதைத் தொடர்ந்து நிதிநிலை அறிக்கையும் வைக்கப்பட இருக்கிறது. இந்த இரண்டு மூன்று மாத காலம் பொறுத்துக் கொள்ளுங்கள்.

ஒன்றை உறுதியாகச் சொல்வேன். நிதிநிலை அறிக்கையை நான் தயாரிக்கும் பொழுது எப்போதுமே – நான் நிதியமைச்சராகப்பொறுப்பேற்றிருந்த காலக்கட்டத்தில் 69லும் சரி, அதற்குப் பிறகும் சரி, இப்பொழுதும் சரி; அதிகாரிகளை விட்டு நிதிநிலை அறிக்கைகளை எழுதச் சொல்லி அதனைப் படிப்பவன் அல்ல. நானேதான் நிதிநிலை அறிக்கையை எழுதித் தயாரிப்பேன். புள்ளி விவரங்களில் அதிகாரிகளிடத்தில் கலந்து கொள்வேன். வேறு சில பிரச்சினைகளில் அதிகாரிகளிடம் கலந்து கொள்வேன்.

அதிகாரிகளைக் கலந்துகொண்டு நான் தயாரிக்கின்ற நிதிநிலை அறிக்கைக்கு நீங்கள் வைத்துள்ள கோரிக்கைகளையெல்லாம் ஒருமுறை படித்துவிட்டுத்தான் ஒவ்வொரு பக்கம் எழுதும்பொழுதும் இந்த மாநாட்டிலே கலைவாணர் அரங்கத்திலே அரசுப் பணியாளர்களின் நான்காவது மாநாட்டில் என்ன சொன்னீர்கள் என்பதை எடுத்து வைத்துக் கொண்டுதான் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படும் என்பதை மாத்திரம் உங்களுக்குத் தெரிவித்து, இதையே என்னுடைய வாக்குறுதியாக நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் இதையே தொலைக் காட்சியும், வானொலியும், பத்திரிகைகளும் வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(சென்னை – கலைவாணர் அரங்கில் 27.10.96 அன்று நடைபெற்ற தமிழக அரசுப் பணியாளர்கள் சங்கத்தின் நான்காவது மாநாட்டில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...)



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாளான 30.10.96 அன்று, அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தம்பிக்கு...

-எழிற்பித்தன்



திசைகளில் மேலாம் கிழக்கு - தம்பி
தீந்தமிழ் தேனாம் நமக்கு.
விசையது காற்றின் மிடுக்கு - தம்பி
விரிகடல் வானம் முழக்கு!



இசையெனும் தேவை பெருக்கு - தம்பி
இளமையில் கல்வி நமக்கு.
வசையெனில் கேடாம் விலக்கு - என்றும்
வாழ்வினில் அன்பே இ ருக்கு!




மேவிய ஆசை செருக்கு - தம்பி
மேலும் அதுதான் அழுக்கு.
தேவைகள் ஆயிரம் இருக்கு - நீயும்
தெளிவுற மனத்தைப் பழக்கு!

பாவையர் காதல் கிடக்கு - அது
பருவ நதிகளின் மிடுக்கு.
தாவியே ஓடும் அடக்கு - தம்பி
தன்னிலை விளக்கம் எதற்கு!



ஓவியச் சாலை விழிக்கு - தம்பி
உரைகள் மனம்தான் அதற்கு.
காவிய மேன்மை விளக்கு - என்றும்
காவலாய் இருக்கும் நமக்கு!




திசைகளில் மேலாம் கிழக்கு - தம்பி
தீந்தமிழ் தேனாம் நமக்கு.
விசையது காற்றின் மிடுக்கு - தம்பி
வேர்ப்பலா கவிதை நமக்கு!

"கூட்டுறவு வாரவிழா பண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளையொட்டி இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகின்ற விழா. கூட்டுறவில் மிகுந்த நாட்டம் கொண்டவர் ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள். கூட்டுறவில் அவருக்கு அக்கறையும் ஆர்வமும் இருந்த காரணத்தால்தான் இந்திய நாடு கூட்டுறவால் கட்டப்பட்டு இயங்க வேண்டுமென்று அவர் கருதினார். நேரு காலத்தில், அவரால் கூட்டுறவு போற்றப்பட்டது.

எனவேதான், அவருடைய பிறந்த நாளான 14-ஆம் தேதி முதல் ஒரு வார காலம் கூட்டுறவு வாரமாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

முதல்நாள் மனித வள மேம்பாட்டு நாளாகவும், இரண்டாம் நாள் கூட்டுறவு மூலம் ஜனநாயகம் மற்றும் சமுகநீதி பாதுகாக்கின்ற நாளாகவும் கொண்டாடுகிறோம்.

அதற்கு அடுத்த நாள் கூட்டுறவு மூலம் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு - வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி நாள்.

அடுத்து, விற்பனை மற்றும் நுகர்வோர் நாள். அடுத்து, கூட்டுறவு மூலம் வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நுட்ப நாள். அடுத்து மகளிர் மற்றும் நலிவுற்றோர் நாள். இறுதியாகக் கூட்டுறவு மூலம் வீட்டு வசதி நாள்.

இந்த நாட்களில் அடங்கியுள்ள தலைப்புக்களைக் காணும்பொழுதும், அந்தத் தலைப்புகள் பெற்றிருக்கின்ற தகவல்களை நோக்கும் பொழுதும், இவைகளுக்குள்ளேயே ஒரு நாட்டினுடைய வாழ்வு, சமுதாயத்தினுடைய முன்னேற்றம், அந்தச் சமுகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீதி, சமுதாயத்திலே வலுவாக இருப்பவர்கள், வலுவற்று இருப்பவர்கள், பலமாக இருப்பவர்கள், பலவீனமாக இருப்பவர்கள், இவர்களுக்கு இடையே நடைபெற வேண்டிய சமத்துவம், சமதர்மம் இவை அனைத்தும் இந்தத் தலைப்புகளுக்கிடையே அடங்கி இருக்கின்ற காட்சியை நாம் காண முடிந்தது.

அப்படி ஒரு வாரத்தைக் கொண்டாடி விட்டு, நிறைவு நாளையும் கொண்டாடி விட்டு நாம் கலைந்து செல்கிறோம் என்றால், ஏதோ ஆண்டுக்கு ஒரு வாரம் இதைக் கொண்டாடினோம்; அப்போது மாத்திரம் இதை நினைத்துக் கொண்டோம் என்றில்லாமல், தொடர்ந்து இந்தப் பணிகளில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

சீமான் எவ்வளவு தவறு செய்தாலும், அது வெளியே வராது. சீமான் போட்டி

கூட்டுறவே நாட்டுயர்வு

முதல்வர் கலைஞர்

ருக்கிற பட்டுச் சட்டை அதைப் பாதுகாத்து விடும். ஏழை- அவன் ஒரு இயக்கத்திற்கு வந்தால், அது கூட்டுறவு அமைப்பாக இருந்தாலும்சரி, சட்டமன்றமாக இருந்தாலும்சரி- ஏழை தவறே செய்யமாட்டான் என்று சொல்லவில்லை - ஆனாலும் ஏழை செய்தால், அது உடனடியாக அம்பலத்திற்கு வரும். பணக்காரன் செய்தால், அதை மறைப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆதாரங்கள் அவனிடம் உண்டு.

ஏனென்றால், கறுப்புத் துணியில் ஒரு துளி மையை உதறினால், அது தெரியப்போவதில்லை. தூய்மையான வெள்ளைத் துணியில் ஒரு துளி மை படுமானால், அது பளிச்சென்று தெரியும்.

எனவே, கூட்டுறவுத் துறையில் அங்கம் வகிக்கும் அனைவரையும் நான் தூய்மையான வெள்ளைத் துணியாகவே கருதுகிறேன்; ஒரு துளி மையும் மேலே சிந்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படிப் பார்த்துக்கொண்டால், இந்தச் சமுதாயத்தைச் சிந்தாமல் சிதறாமல் காப்பாற்றினோம் என்ற பெருமை நமக்கெல்லாம் வாய்க்கும்!"

(21.11.90 அன்று, கூட்டுறவு வார விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில். சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து)

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட், நெ.கே.708

செயலிங் ஹவுஸ் — உதகமண்டலம் 643001

ஸ்தாபிதம் 1935 — போன்:42339, 43975, 43028

நீலகிரி மாவட்ட வேளாண் பெருமக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக அவர்களின் நண்பனாக தத்துவவாதியாக வழிகாட்டியாக சேவை ஆற்றி வருகிறது.

வேளாண் பெருமக்களின் இடுபொருள் தேவைகள் அனைத்து வகை உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், விவசாய கருவிகள், தரமான காய்கறி விதைகள் ஒரே கூரையின் கீழ் குறைந்த விலையில் தேவையான நேரத்தில் பெறும் வாய்ப்பு அளிக்கிறது.

நீலகிரி மாவட்டத்தில் 22 சில்லரை விற்பனை நிலையங்கள் செயல்பட்டு அனைத்து வேளாண் இடுபொருள்களும் உரிய நேரத்தில் கிடைக்க வகை செய்கிறது.

உருளைக்கிழங்கு விதை வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்து வழங்கி வருகிறது.

தரமான குறுமிளகு கொள்முதல் செய்து நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு நியாயமான விலையில் வழங்கி வருகிறது.

ஆண்டுக்கு ரூ.10 கோடிக்கு மேல் விளைபொருள் விற்பனையும், ரூ.6 கோடி மதிப்பிற்கு விவசாய இடுபொருள்கள் விற்பனையும் செய்யும் கூட்டுறவு நிறுவனம்.

உருளைக்கிழங்கு, மலைக்காய்கறிகள், தேயிலை உயர் மகசூலுக்கு "என்.சி.எம்.எஸ்." சிறப்பு கலப்பு உரங்கள் உபயோகியுங்கள்.

உருளைக்கிழங்கு, மலைக்காய்கறிகள் விற்பனைக்கு அணுகுங்கள் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

சங்கத்தில் நகைக்கடன் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

உதகமண்டலத்தில் கல்யாண மண்டபம் செயல்பட்டு வருகிறது.

கோத்தகிரியில் கல்யாண மண்டபம் செயல்பட்டு வருகிறது.

1993-94 வியாபார அளவு ரூ.1434.96 இலட்சம்.
1993-94 நிகர லாபம் உத்தேசமாக ரூ.70 இலட்சம்
1994-95 வியாபார அளவு ரூ.1835.91 இலட்சம்
1994-95 நிகர இலாபம் உத்தேசமாக 48 இலட்சம்
1995-96 வியாபார அளவு 2300 இலட்சம்
1995-96 நிகர லாபம் உத்தேசமாக ரூ.90 இலட்சம்

என்.கே.ராமன்,
செயலாளர்

பி.ஜோசி
தனி அலுவலர்

மாநகராட்சித் தலைவர்களின் பதவியேற்பு நிகழ்ச்சிகள்

கால் நூற்றாண்டைக் கடந்து நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலில், இத்தனைக் காலமும் இல்லாதபடி பொது வாக்கெடுப்பின் மூலம் வெற்றி பெற்றார், திரு மு.க. ஸ்டாலின் அவர்கள். 16.10.1996ல் முறைப்படி இந்த அறிவிப்பு வெளியிடப் பட்டது. அவர் மாநகராட்சி மேயராகப் பொறுப்பேற்பது குறித்த ஆணையை, மாநகராட்சி ஆணையர் திரு. தேவ. ஜோதி ஜெகராஜன் அவர்கள், திரு மு.க. ஸ்டாலின் அவர்களிடம் வழங்கினார்.

விழாச் சிறப்பு

திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை மேயராகப் பதவியேற்கும் விழா, மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் மாளிகையில் 25.10.1996 அன்று சிறப்புற நடைபெற்றது. ஈ.வெ.ரா. பெரியார் நெடுஞ்சாலையில் உள்ள ரிப்பன் மாளிகை, இந்த நிகழ்ச்சியினையொட்டி விழாக்கோலம் பூண்டிருந்தது. வெள்ளம்போல் தமிழர் கூட்டம் வீதியெலாம் நிறைந்திருந்தது. மீண்டும் மக்களாட்சி முறைப்படி உள்ளாட்சித் தேர்தல் நடந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட மேயரையும் உறுப்பினர்களையும் காணும் மகிழ்ச்சியில் மாநகர மக்கள் முகமெலாம் மலர்ந்திருந்தன.

ரிப்பன் மாளிகை மாநகராட்சி மன்றத்தில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு ஜி. கருப்பையா மூப்பனார் அவர்களும், ஏனைய கூட்டணிக் கட்சித் தலைவர்களும், மாண்புமிகு இந்நாள் முன்னாள் மாநில அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு மத்திய அமைச்சர்களும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் குடும்பத்தினரும், அரசு தலைமைச் செயலாளர்- உயர் அதிகாரிகள் உட்படப் பல்லாயிரக்கணக்கான பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

சென்னை மாநகராட்சியின் முன்னாள் மேயர்கள், உறுப்பினர்கள், ஏராளமான தாய்மார்கள் ஆகியோரும் உற்சாகத்தோடு அக் கூட்டத்தில் காணப்பட்டனர்.

மேயர் பதவியேற்பு

மாநகராட்சிக் கட்டடத்தின் முன் உள்ள சர்.பிட்டி தியாகராயர் சிலைக்கு மாலையணிவித்து விட்டு, திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் மூன்றாம் தளத்திற்கு வந்தார்.

கருநீல வண்ணக் கோட்டும், சிவப்பு அங்கியும் வெள்ளைப் பேண்ட்டும் மேயர்கள்

அணியும் 101 பவுன் தங்கச் சங்கிலியுமாக மரபுப்படி திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் தோற்றமளித்தார்.

சென்னைப் பெருநகர முதன்மை நீதிபதி திரு ஏ. இராமமூர்த்தி அவர்கள் அவைக்கு வந்ததும்- தமிழ்த்தாய் வாழ்த்துக்குப்பின், பதவியேற்பு நிகழ்ச்சி பற்றி மாநகராட்சி ஆணையாளர் அறிவித்தார். அதன்பிறகு பதவியேற்பு நிகழ்ச்சி தொடங்கியது.

பெருநகர முதன்மை நீதிபதி அவர்கள் சொல்லச் சொல்ல அப்படியே வணக்கத் திற்குரிய மேயர் அவர்கள் தொடர்ந்து சொல்லி ஏற்றுக்கொண்ட பதவியேற்பு உறுதிமொழி வாசகங்கள் வருமாறு:

"சென்னை மாநகராட்சியின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு மு.க. ஸ்டாலின் என்னும் நான், சட்டப்படி நிறுவப்பட்டுள்ள இந்திய அரசியல் அமைப் பில் உண்மையான நம்பிக்கையும், பற்றுறுதி யையும் கொண்டிருப்பேன். நாட்டின் இறையாண்மையையும், ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்துவேன். நான் மேற்கொள்ள விருக்கும் கடமையை நேர்மையுடன் நிறை வேற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்".

-இவ்வாறு இருக்கை முன்னுள்ள 'மைக்' மூலம் சொல்லி முடித்தபின் அவ்வாசகங் களோடு கூடிய உறுதிமொழிப் பத்திரத்திலும் அவர் கையெழுத்திட்டார்.

இதன் பின்னர், 'வணக்கத்திற்குரிய மேயர்' அவர்களை, மாநகர முதன்மை நீதிபதி அவர்கள் மேயருக்குரிய இருக்கையில் அமரச் செய்தார்.

மேயர் கொடி

மாநகராட்சிக்கென்று தனிப்பட்ட கொடி ஒன்று உண்டு.

புலி, வில், கயல் என்கிற மூவேந்தர்கள் இலச்சினையோடு, பாய்மரக் கப்பலும், மாநகராட்சிக் கட்டடத் தோற்றமும் அந்த, நீலவண்ணக்கொடியில் பொறிக்கப் பட்டிருக்கும்.

மேயர், பதவியேற்றுக் கொண்டதும், மாநகராட்சிக் கட்டடத்தின் மேல் பரந்த தேசியக் கொடிக்கம்பத்தின் அருகே, மற்றொரு கொடிக் கம்பத்தில் இந்த மாநகராட்சிக் கொடியும் 'மலர்ந்துவிட்டது மக்களாட்சி' என்பதை எல்லோருக்கும் அறிவிக்கும் விதத்தில் ஏற்றிப் பறக்கவிடப் பட்டது.

அலைமோதிய கூட்டம்

சென்னை மாநகர மேயராகப் பதவியேற்ற பின், திரு மு.க. ஸ்டாலின் அவர்கள், ரிப்பன் கட்டடத்தின் முன்னே அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு அழைத்துவரப்பட்டார்.

அந்த உச்சிவெயில் நேரத்திலும் அம் மேடைக்கு எதிரே அலைமோதிய மாபெரும் கூட்டத்தாரிடையே அவர் நன்றி தெரிவிக்கச் சிறியதோர் மேடை அமைக்கப்பட்டிருந்தது.

நன்றியுரை

பெருவாரியான வாக்குகள் வித்தியாசத் தில் வெற்றிபெறச் செய்து தன்னைச் சென்னை மேயராகத் தேர்ந்தெடுத்த மாநகர மக்களுக்கு நன்றி தெரிவித்து, வணக்கத்திற் குரிய மாநகராட்சித் தந்தை திரு மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

"28 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு சென்னை மாநகராட்சித் தேர்தல் நடை பெற்று 44வது மேயராக என்னுடைய 44 வயதில் பணியாற்றிடும் வாய்ப்புக் கிடைத் தமைக்கு மகிழ்ச்சி அடைகிறேன்.

எதிர்ப்பைத் தாங்குவது என்பது எளிதானது அல்ல; அத்தகைய எதிர்ப்பின் நடுவிலும் கடமையைச் செய்வதே பெருமை சேர்ப்பதாகும்.

–டாக்டர் எம்ஜி.ஆர்.

டாக்டர் ராஜேந்திர பிரசாத், ஜவகர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல் போன்ற வர்கள் மேயர் பதவியை அலங்கரித் திருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் ராஜா சர். முத்தையா செட்டியார், சத்தியமூர்த்தி, யு. கிருஷ்ணா ராவ், பி.வி. செரியன், டி.செங்கல்வராயன், அ.பொ. அரசு, வி. முனுசாமி, ஜி.குசேலர், சி. சிட்டிபாபு போன்றவர்கள் இடம் பெற்றிருந்த மேயர் வரிசையில் 44வது மேயராக நான் இடம் பெறுவதில் பெருமைப்படுகிறேன்.

இதுவரை மாநகராட்சி மன்ற உறுப் பினர்கள் வாக்களித்துத்தான் மேயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது தான் முதன்முறையாக மக்களே நேரடியாக வாக்களித்து மேயராகப் பொறுப்பேற்பதில் பூரிப்படைகிறேன்.

மாநகராட்சி உறுப்பினராக அண்ணா போட்டியிட்டதும், தி.மு.க முதன் முதலாக ஆட்சிப்பொறுப்பேற்ற இடம் சென்னை மாநகராட்சி என்பதும் வரலாற்றுச் சிறப்புக் குரியது. சுமார் 40 இலட்சம் மக்கள் தொகை கொண்ட சென்னை மாநகர மக்களின் அடிப்படை வசதிகளைச் செய்ய வேண்டியது மாநகராட்சியின் கடமையாகும்.

நிதி ஆதாரத்தைப் பெருக்க வரிகளை உயர்த்துவது மட்டுமல்ல; உயர்த்தப்பட்டி ருக்கின்ற வரிகள் முறையாக, முழுமையாக வசூலிக்கப்பட்டு முறையாகச் செலவிடப் படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஒதுக்கப்பட்ட தொகை ஒழுங்காக மேம் பாட்டுத் திட்டங்களுக்குப் போய்ச் சேர்ந் திருக்கிறதா என்பதையும் கண்காணிப்பதன் மூலமாகவும் நிதி ஆதாரத்தைப் பெருக்கலாம்.

மாநகராட்சியில் வலிமையான எதிர்க் கட்சி இல்லையென்றாலும்கூட, எங்கள் பணிகள் எந்த வகையில் அமைய வேண்டும் என்று நடுநிலை ஏடுகள் அவ்வப்போது தெரிவிக்கின்ற ஆலோசனைகளை ஏற்று நடப்போம். சென்னையைச் சிங்காரச் சென்னையாக மாற்றுவோம் என்று ஏற்கெனவே மக்களுக்கு வாக்குறுதி அளித் துள்ளோம். அதை நிறைவேற்றுவோம்.

'என் வாழ்க்கையில் பாதியைக் கலை இலக்கியத்திற்காகத் தந்துள்ளேன்; மற் றொரு பாதியை அரசியலுக்காக - சமு தாயத்திற்காகத் தந்துள்ளேன். அதாவது, என்னை உள்ள நான், உங்களுக்காகத் தந் துள்ளேன்'

-முதல்வர் கலைஞர்

எந்த ஒரு திட்டத்தையும் செவ்வனே செயல்படுத்த பொதுமக்களின் ஈடுபாடும் ஒத்துழைப்பும் நிரம்பத் தேவை. மாநகராட்சி தீட்டுகின்ற திட்டங்களுக்கு மக்களின் ஆதரவு மிகமிக அவசியம். அதேபோன்று சேவை நிறுவனங்கள், குடியிருப்போர் நலச் சங்கங்கள் நகர முன்னேற்றத்தில் நாட்டம் கொண்ட வணிக நிறுவனங்கள், பொது அமைப்புகள் ஆகிய அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவையும், ஆலோசனை களையும் வழங்கிட வேண்டுகிறேன்.

இதே மாநகராட்சி மன்றத்தில் தவறு நடைபெற்றது என்று தெரிவித்தவுடன் எந்தக் கட்சி ஆளும் பொறுப்பிலே இருக்கிறது என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், கட்சிப் பாகுபாடின்றி மாநகராட்சி மன்றத்தையே கலைத்து நடவடிக்கை எடுத்தவர் தான் இப்போது தமிழகத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிறார் என்பதை நாங்கள் நன்கு அறிவோம்

தவறு நடைபெறுமேயானால், தன் மகன்தானே மேயர் என்று கூடப் பார்க் காமல் நடவடிக்கை எடுக்கக் கூடியவர்தான் என் தந்தை என்பதையும் நான் நன்றாக அறிவேன். காரணம், அவர் திருவாரூரைச் சேர்ந்தவர்.

கன்றின் மீது தேரையேற்றிக் கொன்றவன் தன் மகன்தான் என்பது தெரிந்தும், மகனையே தேர்க்காலில் இட்டுக் கொன்ற மனுநீதிச் சோழன் ஆண்டது திருவாரூரில் தான்.

எனக்கு வாக்களித்த மக்களுக்காக மட்டுமல்லாமல், வாக்களிக்காத மக்களுக்

காகவும் உழைத்து, அவர்கள் நன்மதிப்பையும் பெறுவேன். என்னைத் தேர்ந்தெடுத்த மக்கள் நாம் தவறு செய்துவிட்டோம் என்று வருந்தாத அளவுக்கும், வாக்களிக்காத மக்கள், தவறிவிட்டோமே என்ற வருந்துகிற அளவுக்கும் என் பணிகள் அமையும்.

சென்னை மாநகரத் தந்தை என்று சொல்வதைவிட, இந்த மாநகராட்சியின் முதல் சேவகனாக இருப்பதையே நான் விரும்புகிறேன். வணக்கத்திற்குரிய மேயர் என்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக, அனைவரையும் வணங்கக்கூடியவன் என்ற வகையிலே செயல்படுவேன் என்று உறுதி கூறுகிறேன்"- இவ்வாறு மேயர் அவர்கள் உரையாற்றினார்.

துணை மேயர்

பிறகு, சென்னை மாநகராட்சியின் 155 உறுப்பினர்களும் உறுதிமொழி எடுத்துப் பதவியேற்றுக் கொண்டனர்.

மாலை திருமதி ஜெயசந்திரவதனா துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இத்துடன் மாநகராட்சி மன்றக் கூட்ட நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மதுரை மாநகராட்சி

அக்டோபர் 25 ஆம் தேதியன்று இதே போல மற்ற 5 மாநகராட்சி மேயர்களும், 104 நகராட்சி மன்றத் தலைவர்களும் உறுப்பினர்களும், புதிய அமைப்பான 28 மாவட்டப் பஞ்சாயத்துகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் 28 மாவட்டங்களிலும் பதவியேற்றார்கள்.

மேலும் 384 ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்களும், துணைத் தலைவர்களும், உறுப்பினர்களும், 634 பேரூராட்சி, 12,584 சிற்றூராட்சி மன்றத் தலைவர்களும் அன்றைய தினமே பொறுப்பேற்றுக் கொண்டனர்.

மதுரை மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயராகத் திரு பி. குழந்தைவேலு தி.மு.க. அவர்கள் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி திரு வே. இராதாகிருஷ்ணன் அவர்கள் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

மதுரை மாநகராட்சியின் துணை மேயராகத் திரு மிசா பாண்டியன் அவர்கள் பதவியேற்றார். தேர்ந்தெடுக்கப்பட்ட 72 உறுப்பினர்களும் பதவியேற்றார்கள்.

கோவை

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய முதல் மேயராகத் திரு வி. கோபாலகிருஷ்ணன் (த.மா.கா.) அவர்கள் பதவியேற்றார். அவருக்கு, கோயம்புத்தூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி திரு பி. தங்கவேல் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

கோவை மாவட்டத் துணை மேயராகத் திரு எம். வேலுசாமி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவியேற்றார். தொடர்ந்து 72 உறுப்பினர்களும் பதவியேற்றனர்.

திருச்சி மேயர்

திருச்சிராப்பள்ளியின் வணக்கத்திற்குரிய முதல் மேயராகத் திருமதி புனிதவல்லி பழனியாண்டி த.மா.க. அவர்கள் பதவியேற்றுக் கொண்டார். அவருக்குத் திருச்சி மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி திரு எஸ். மாரிமுத்து அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

திருச்சி மாவட்டத் துணை மேயராக எமிலி ரிச்சர்டு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து வார்டு உறுப்பினர்கள்

ஒழுக்கம் என்பது நம் இதயங்களின் தூய்மையில் தான் வேரூன்றியிருக்கிறது.

—காந்தியடிகள்

வாழ்க்கையில் நாம் உயர்ந்த பொருட்களைப் பெற வேண்டுமானால், சலியாத உழைப்பும், தளராத ஊக்கமும், விடா முயற்சியும் மிகமிக அவசியமாகும்.

60 பேருக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சேலம் மேயர்

சேலம் மாவட்டத்தின் வணக்கத்திற்குரிய முதல் மேயராக டாக்டர் ஜி. சூடாமணி (தி.மு.க.) அவர்கள் பதவியேற்றார். சேலம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி திரு. சடையப்பன் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

சேலம் மாவட்டத் துணை மேயராகத் திரு. ஜி.கே. சுபாஷ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து மாநகராட்சி உறுப்பினர்கள் 60 பேரும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர்.

நெல்லை மேயர்

திருநெல்வேலி மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய முதல் மேயராகத் திருமதி மு. உமாமகேஸ்வரி (தி.மு.க.) அவர்கள் பதவியேற்றுக் கொண்டார். அவருக்கு மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி திரு கு. நடராசன் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

திருநெல்வேலி மாநகராட்சியின் துணை மேயராகத் திரு. விசுவநாத பாண்டியன் அவர்கள் பதவியேற்றார். பின்னர் மாநகராட்சி உறுப்பினர்கள், 55 பேர்களும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்கள்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் இவ்வாறு தமிழ்நாடெங்கும் நடைபெற்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் அனைவரும் 1996 அக்டோபர் 25ஆம் தேதி அகமகிழ்வோடு பதவியேற்றனர். அமைதியாகவும் எளிமையாகவும் பதவியேற்பு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

உள்ளாட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் பேசுகையில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்- "கடந்த பொதுத் தேர்தலில் எங்களுக்குக் கிடைத்த வெற்றி சோறு போட்டது போன்றது; உள்ளாட்சித் தேர்தல்களில் பெறவிருக்கும் வெற்றி அதற்குக் குழம்பு ஊற்றுவது போன்றது.." என்று குறிப்பிட்டார்.

தமிழகப் பெருமக்கள் அந்த எதிர்பார்ப்பைப் பரிபூரணமாக நிறைவு செய்து விட்டனர்; உள்ளாட்சி அமைப்புகளைப் பல ஆண்டுகளுக்குப் பிறகு உயிர்த்தெழச் செய்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

-பி.எல். ராஜேந்திரன்

தமிழரசு
படிக்க ... பயன்பெற ... பாதுகாக்க
'தமிழரசு' தமிழ்
(மாதம் இருமுறை)
சந்தா விவரம்
ஆண்டுச் சந்தா .... ரூ. 72
அரையாண்டுச் சந்தா ... ரூ. 36
'தமிழரசு' ஆங்கிலம்
(மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 36
சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை
சென்னை - 600 002.

செய்திச்சரம்

☆ 'டிங்கி' காய்ச்சலால், டில்லியில் மட்டும் ஏறத்தாழ 300 பேர் உயிரிழந்துள்ளனர். 7 ஆயிரத்திற்கும் மேலானோர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். 'ஏடிஸ்ஈஜிப்டை' என்கிற மிக்க குறைந்த தூரமே பறக்க முடிந்த கொசுக்களாலேயே இக் காய்ச்சல் உண்டாகிறதாம். ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், தேசியத் திட்டம் ஒன்றை வகுத்து, மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து இத்தகைய கொடிய காய்ச்சல் பரவாமல் தடுக்குமாறு மத்திய அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. டி.ஆர். பாலு அவர்கள் தெரிவித்திருக்கிறார்.

☆ வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள பாலாறு அணை, கடந்த மாதம் நிகழ்ந்த மழை வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது; ரூ.16.38 கோடியில் இந்த அணைக்கட்டு சீரமைக்கப்படவிருக்கிறது.

☆ இரண்டொரு மாதத்தில் மத்திய அரசின் புதிய ஜவுளிக் கொள்கை அறிவிக்கப்படும் என்று மாண்புமிகு மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. ஆர்.எல். ஜாலப்பா அவர்கள் அறிவித்திருக்கிறார்.

☆ இந்திய இராணுவத்தின் காலாட்படை தினம் அண்மையில், சென்னை மாநகரில் அனுசரிக்கப்பட்டது. நாட்டின் பாதுகாப்பிற்கெனத் தங்கள் உயிரையே தியாகம் செய்த வீரர்களின் நினைவாகப் போர் நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

☆ நெய்வேலியில் புதிய நிலக்கரிச் சுரங்கம் அமைக்க அனுமதிக்குமாறு தமிழ்நாடு அரசு விடுத்துள்ள கோரிக்கையை மத்திய அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்று, மாண்புமிகு மத்திய நிலக்கரித்துறை இணையமைச்சர் திரு. காந்திசிங் தெரிவித்திருக்கிறார்.

☆ பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்த்தப்படமாட்டாது என்று, மாண்புமிகு மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு.

☆ வெளிநாடுகளில் மனித ஆற்றல் தேவை அதிகரித்து வருவதால், அதற்கென மத்திய மனித ஆற்றல் ஏற்றுமதி மேம்பாட்டுக் குழுமம் அமைக்க மைய அரசு முடிவு செய்திருப்பதாக மாண்புமிகு மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. அருணாசலம் அவர்கள் கூறியுள்ளார்.

☆ இலங்கைக்கு 750 மெட்ரிக் டன் அரிசி வழங்கவிருக்கிறது இந்தியா; முதல் கட்டமாக 20 மெட்ரிக் டன் அரிசி சென்னையிலிருந்து சரக்குக் கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

☆ தமிழகத்தில் புதிதாக 55 கூடுதல் நீதிமன்றங்களை அமைத்திட முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக முன்னோடித் திட்டம் ஒன்று அமல்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் உள்ள 133 மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், 30 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் 25 மாநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ஆக மொத்தம் 394 நீதிமன்றங்களுக்குக் கூடுதலாக ஒரு தட்டச்சர் பதவியிடங்கள் வழங்கப்படும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பணியிடங்களுக்கு 788 தட்டச்சுப் பொறிகள் 394 கம்ப்யூட்டர்கள் வழங்கப்படும்.

-அ. மதிமாறன்

வாழ்வோர் யார்?

-கவிஞர் கா. வேழவேந்தன்



எழுந்தாலும் 'நெற்கதிர்'போல் எழுதல்
வேண்டும்;
எரிந்தாலும் விளக்கைப்போல்
எரிதல் வேண்டும்;
அழுதாலும் 'தேனடை'போல் அழுதல்
வேண்டும்;
அசைந்தாலும் 'தென்றல்'லைப்போல்
அசைதல் வேண்டும்;
விழுந்தாலும் 'விதை'யைப்போல்
விழுதல் வேண்டும்;
விரைந்தாலும் 'கார்முகில்'போல்
விரைதல் வேண்டும்;
விழுதுவிடும் ஆல்போல நிழலைத் தந்து
வியனுலகில் வாழ்பவரே
என்றும் வாழ்வார்!
கோடிகளை இருப்பறையில்
சேர்த்துச் சென்ற
கொழுத்தவரை பழுத்தவரை
நினைத்தோ மாநாம்?
ஆடுகின்ற ஆட்டமெல்லாம்
ஆடிச் செல்லும்
ஆர்ப்பாட்டப் புயற்காற்றைப்
போற்று வோமா?
தேடுகின்ற செல்வத்தைத்
தேகந் தன்னைச்
சீர்மணக்கும் சந்தனம்போல்
தேய்த்தோர் மட்டும்
ஏடுகளில், எழில்நெஞ்சில்
நிலைத்து நின்றார்;
இறந்துமிங்கே வாழ்வாரே
'வாழ்வார்' என்பேன்!



நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

தலைமையகம்

உதகமண்டலம்

ஓர் நற்செய்தி!

நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு அமைக்கப்பட்ட 73 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் விவசாயப் பெருமக்களுக்கும், விவசாயம் அல்லாத காரியங்களுக்கும் அடியிற்கண்ட கடன்கள் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்குகிறோம்.

1. குறுகிய காலப்பயிர்க் கடன்கள்
2. நீண்டகால விவசாயக்கடன்கள்
3. கறவை மாடுகள் வாங்க, டிரேக்டர், டில்லர் வாங்கத் தேவையான கடன்கள்
4. நகைக் கடன்கள்

பொதுமக்களுக்கு அவர்களுடைய தகுதி அடிப்படையில் மத்திய வங்கி நேரிடையாக அடியிற்கண்ட கடன்களைக்குறைந்த வட்டியில் வழங்குகிறோம்.

1. லாரி, வேன், கார் போன்ற வாகனங்கள் வாங்க
2. ஆட்டோ ரிக்ஷா வாங்க
3. சிறுதொழில் துவங்க
4. நகைக் கடன்கள்

மற்றும் இதர வணிக வங்கிகளைவிட டெபாசிட்டுகளுக்கு அதிக வட்டி தரும் வங்கி நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

30 நாட்கள் முதல் ஓராண்டு வரை	12%
ஓராண்டும் அதற்கு மேலும் இரண்டு ஆண்டுகள் வரை	13%
இரண்டு ஆண்டும் அதற்கு மேலும்	14%

மேலும் விபரங்களுக்குத் தலைமையகத்தையும் எங்கள் 15 கிளைகளையும் அணுகுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வி. மணி
செயலர்

திரு. சற்குரு மகாதேவன்
தனி அலுவலர்

ஒவ்வொரு 'தமிழரசு' இதழிலும் வெளிவரும் மருத்துவக் கட்டுரைகள் மிகவும் பயன்படும் விதத்தில் இருக்கின்றன; தொடர்ந்து வெளிவரட்டும்.

– அ. கந்தசுவாமி,
க. பத்மாவதி,
திருப்பூர்.

பக்கத்திற்குப் பக்கம் பயனுள்ள கருத்துகள், எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக ஆசிரியர் மடல் என அனைத்துத்தரப்பு மக்களும்படித்துப் பாதுகாக்கும்படி வெளிவரும் 'தமிழரசு'ப் பணி வெல்க.

– குழந்தை சுதந்திரன்.
மங்கலம்பேட்டை

முன்புபோல வெறும் அமைச்சர்கள் படங்களையே போட்டு இடத்தை நிரப்பாமல், நாங்கள் படித்து மகிழும்படியான செய்திகளை நிறையத் தருகிறீர்கள்; சிறப்பான கவிதைகளையும் வெளியிடுகிறீர்கள். தொடரட்டும் உங்கள் தமிழ்ப்பணி.

– எஸ்.லியோன் வின்னி
தக்கலை.

'தமிழரசு' இதழில் - கேள்வி பதில் பகுதி, துணுக்குகள் ஆகியவைகளும் சேர்த்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

– கவிஞர் ஆர்.கே.எஸ். சம்சுகனி
டி. மாரியூர், கடலாடி.

கவிதைகள், அறிவியல் துளிகள், சிறுவர்களுக்கேற்ற சிறுகதைகள், ஆங்காங்கே அரசுத் திட்டங்கள் எனப் பல இனிய அம்சங்களோடு வெளிவரும் புதுமைக் களஞ்சியமாகத் திகழ்கிறது தமிழரசு. வாழ்க.

– எஸ் மிதிலா பெல்,
முளகுமோடு

பழநிபாரதியின் 'காலத்தின் காதுகளில்' கவிதை அருமையிலும் அருமை. பாராட்டுக்கள்.

– வந்தை ஹரி,
வந்தவாசி.

மற்ற இதழ்களைப் போல வாசிக்க மட்டுமல்ல; அண்மைக் காலத் 'தமிழரசு' ஏட்டில் இடம்பெறும் ஒவ்வொரு படைப்பும் வாழ்க்கைக்கும் என்றிருக்கிறது.

– ப. முருகேச பாண்டியன்,
கரப்பாடி.

வேலைவாய்ப்புகள் பகுதி பல அரிய செய்திகளைத் தெரிவிப்பதாக இருந்தது. இப்படிப்பட்ட பகுதிகளை அடிக்கடி வெளியிடவும்.

– ஆ.வெ. திருஞானம்
உச்சிப்புளி.

தமிழரசு இதழில் நீங்கள் செய்திருப்பது நல்ல மாற்றம்; அது வாசகர்களுக்குத் தருவது முன்னேற்றம். தொடரட்டும் உங்களின் இந்தப் பணி; அகலட்டும் வாசகர்களின் அறியாமைப் பிணி.

– எம். ஐயப்பன்,
செங்கோட்டை.

''ஏதாவது பாலாவது கஞ்சியாவது வார்க்கக் கூடாதா?'' என்றாள் கிழவி.

''பாலுக்கு நாம் எங்கே போவது? கஞ்சி வார்த்தால் செத்துப் போகுமே'' என்றாள் மருமகள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த என் மனம், ''இப்படியும் உலகம் இருக்க வேண்டுமா?'' என்று வருந்தியது.

... வட பகுதியார் குங்குமப்பூவும் சர்க்கரையும் கலந்து சுண்டக் காய்ச்சின பாலை வயிறாரப் பருகிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார்கள். தென் பகுதித் தலைவி, குட்டிகளின அருகேஉட்கார்ந்து இரக்கத்தோடு பார்த்து; அவற்றை மெல்லத் தடவிக் கொண்டிருந்தாள்...

பிற்பகலில் குட்டிகளின் 'கய்ங்' ஒலி வரவரப்பெருகியது. பெரிய பிள்ளைகள் இருவருக்கும் சொல்லி, நாயைத் தேடிக்கொண்டு வரும்படி அனுப்பினார் மருமகள். அவர்கள் இங்கும் அங்கும் தேடிவிட்டு 'இல்லை' என்று திரும்பினார்கள். மாலையில் கணவர் வந்தவுடன், ''பெரிய கண்(ண)றாவியாக இருக்கிறது. எங்கேயாவது பார்த்துப் பிடித்துக் கொண்டுவாங்க. இளங்குட்டிகள் இரவெல்லாம் கத்துமே?'' என்றாள் மனைவி. கணவர் தம்சட்டையைக்கழற்றாதபடியேகுட்டிகளைப் பார்த்துக்கொண்டு வாசலில் நின்றார். ''தாய்க்கு இல்லாத அன்பா? எங்கேயாவது இருந்தால் எப்போதோ வந்திருக்குமே. முனிசிபாலிட்டியார் பிடித்துக் கொண்டு போயிருப்பார்கள். பொழுதும் போச்சே'' என்று சொல்லிக்கொண்டே வெளியே நடந்தார்.

விளக்கு வைக்கும் நேரத்தில் செல்வர் மனைவி, மேலே வந்தாள். என் மனைவியோடு ஏதோ குறை சொல்லத் தொடங்கினாள். நான் பக்கத்து அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தேன்.

''லைசென்ஸ் பணம் கட்ட முடியாதவர்கள் நாய் ஏன் வளர்க்க வேண்டும்? நாங்கள் அவர்களோடு பேசுவதே இல்லை. நீங்களாவது கொஞ்சம் சொல்லுங்கள். இரவெல்லாம் தூக்கம் இல்லாமல் போய்விடுமே. எடுத்துத்

தொலைவில் கொண்டுபோய் விட்டுவிட்டால் வழியில் போகின்றவர்கள் ஆளுக்கொன்று எடுத்துக்கொண்டு போய் விடுவார்கள். நீங்கள் வந்து சொல்லிப் பாருங்கள்'' என்றாள்.

அவள் கீழே இறங்கிய சிறிது நேரத்தில், என் மனைவி தென் பகுதியாரிடம் சென்று பேசிக்கொண்டிருந்தாள். திரும்பி வந்ததும், ''என்ன செய்தி?'' என்று கேட்டேன்.

''மூன்று நாய்க் குட்டிகள்; வெளியே விட்டால் செத்துப்போகும். யாராவது எடுத்துக் கொண்டு போனாலும் வளர்க்க முடியாது. இராப்பொழுது எப்படியாவது கழிந்து விட்டால், நாளை முனிசிபாலிட்டிக்குப் பணம் கட்டி, நாயை மீட்டுக்கொண்டு வந்து காப்பாற்றலாம்'' என்றார்களாம்.

''இதை வட பகுதியாரிடம் சொன்னாயா?'' என்றேன்.

''சொன்னேன், கதவு, சன்னல் எல்லாவற்றையும் சாத்திவிட்டுக் குட்டிகளின் ஒலி கேட்காதபடி செய்துவிட்டுத் தூங்குங்கள் என்று சொன்னேன்'' என்றாள்.

... உறக்கம் வரவில்லை. உலகமெல்லாம் நாய்க்குட்டி மயமாக இருப்பதாகத்தோன்றியது. அந்தக் 'க்யங் க்ய்ங்' ஒலி தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை...

இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆயிற்று. வீட்டுச் சிறுவர்களின் ஒலியெல்லாம் அடங்கினபடியால் குட்டிகளின் ஒலி, தொடர்ந்துபாட்டுப் போல் கேட்டது.

வட பகுதியார் குங்குமப்பூவும் சர்க்கரையும் கலந்து சுண்டக் காய்ச்சின பாலை வயிறாரப் பருகிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார்கள். தென் பகுதித் தலைவி, குட்டிகளின் அருகே உட்கார்ந்து இரக்கத்தோடு பார்த்து; அவற்றை மெல்லத் த்டவிக் கொண்டிருந்தாள். அவளுடைய கணவர், இளங்குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு, இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தார். இளங் குழந்தை அழத் தொடங்கியது. ''குழந்தைக்குப் பால் கொடு'' என்று மனைவியை வற்புறுத்தினார்.

அவள் அரை மனத்துடன் எழுந்து குழந்தையுடன் உள்ளே சென்றாள். பகல் முழுவதும் உழைத்த தொழிலாளி ஆகையால், அவருக்கு மேன்மேலும் கொட்டாவி வந்தது. சிறிது நேரம் நின்று குட்டிகளைப் பார்த்துவிட்டு அவரும் உள்ளே சென்றார்.

இனி எல்லோரும் உறங்கிவிடுவார்கள் என்று எண்ணி நானும் படுக்கச் சென்றேன். ஆனால் உறக்கம் வரவில்லை. உலகமெல்லாம் நாய்க்குட்டி மயமாக இருப்பதாகத் தோன்றியது. அந்தக் 'க்யங் க்ய்ங்' ஒலி தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லை. ஒரே முறை மட்டும் வட பகுதியார் ஏப்பம் விட்ட ஒலி கேட்டது. காற்று வேண்டும் என்று ஓரிரு சன்னல் திறந்து வைத்திருப்பார்கள் என்று எண்ணினேன்.

குட்டிகளின் ஒலி பொறுக்க முடியாத எல்லைக்குச் சென்றது. திடீரென்று ஒவ்வொரு சுரமாகக் குறைந்து வருவதை உணர்ந்தேன். என்ன காரணமோ, குட்டிகளும் ஒவ்வொன்றாகத் தூங்கத் தொடங்குகின்றனவோ என்று எண்ணினேன். சிறிது நேரத்தில் அவற்றின் ஒலி பாதி அளவிற்குக் குறைந்துவிட்டது. ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று எண்ணி, பார்க்கலாம் என்று எழுந்தேன். மேற்கு நடையில் நின்று சாய்ந்து பார்த்தேன். கீழே கிழக்கு நடைப்புறத்தில் சின்ன மண்ணெண்ணெய் விளக்கின் ஒலி தெரிந்தது. அந்த ஏழையின் மனைவி குட்டிகளின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். என்ன செய்கிறாள், பார்க்கலாம் என்று அமைதியாக நின்றேன். நான் நிற்பது தெரியாதபடி ஒரு தூணின் பக்கமாக மறைந்து நின்றேன்.

அவள் இடக்கையில் ஒரு கொட்டாங்கச்சி இருந்தது. அதில் கொஞ்சம் பால் போல் இருந்தது. வலக் கையில் பஞ்சுபோல் ஏதோ வைத்திருந்தாள். அதைக் கொட்டாங்கச்சியில் தோய்த்துத் தோய்த்து ஒவ்வொரு குட்டியின்

சிறுகதை டாக்டர் மு. வரதராசனார் சிறுகதை டாக்டர் மு. வரதராசனார் சிறுகதை டாக்டர் மு. வரதராசனார்

குறட்டை ஒலி

நாங்கள் மேல் மாடியில் குடியிருந்தோம். கீழே, வட பகுதியில் ஒரு குடும்பம், தென் பகுதியில் ஒரு குடும்பம் இருந்தன. தென் பகுதியார் வறுமையால் வாடி இளைத்தவர்கள். கணவன், மனைவி, ஆறுகுழந்தைகள், ஒருபாட்டி, ஒரு நாய் என்று பெருகிய குடும்பம் அது. வட பகுதியார் செல்வம் செழித்துக் கொழுத் தவர்கள். திருமணமாகி இருபது ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லாமல் ஏங்குகின்றவர் கள். அவர்களின் கூடத்திலும் அறைகளிலும் நிறையப் படங்கள் உண்டு. ஓர் அலமாரி நிறையக் குழந்தைப் பொம்மைகளும், நாய்ப் பொம்மைகளும் உண்டு. உயிருடன் இயங்கியவர்கள் எலி, எறும்பு முதலியவை தவிர அந்தக் கணவன் மனைவி இருவர்தான்.

... இந்த உலகத்தில் புதியவர் ஒருவர். அறிஞரோ, அரசியல்வாதியோ, தொழி லாளியோ - புதிதாக வந்து சேர்ந்ததாக எண்ணினேன். அவருடைய முதல் குரலைக் கேட்கும் பேறு எனக்குக் கிடைத்ததே என்று மகிழ்ந்தேன்...

ஆனால், அவர்கள் இருந்த பகுதி தூய்மை யாக, ஒழுங்காக இருந்தது. பொருள்கள் வைத்தவை வைத்தபடியே இருந்தன. அவர்களின் தும்மல், இருமல், ஏப்பம், கொட்டாவி தவிர வேறு எந்த ஒலியும் கேட்பதில்லை.

தென் பகுதிக் குடும்பமோ ஆரவாரம் மிகுந்தது. குழந்தைகள் எந்நேரமும் ஒன்றை ஒன்று அடித்துக்கொண்டு அமர்க்களம் செய்யும். தாய்க்கும் தந்தைக்கும் குழந்தை களின் வழக்கைக் கேட்டுத் தண்டிக்கும் வேலை நிறைய இருந்தது. போலீசு நிலையம், நீதி மன்றம், சிறைக் கூடம் எல்லாம் அங்கு இருந்தன. அந்தக் கிழவி எந்நேரமும் சளைக்காமல் இருமிக்கொண்டிருந்தாள். இருமல் ஓய்ந்த நேரத்தில் பாக்கு உலக்கையால் வெற்றிலைப் பாக்கை நறுக்கி, ''லொட் லொட்'' என்று குற்றிக் கொண்டிருந்தாள். அதுவும் ஓய்ந்த நேரத்தில் வருவார் போவார் இடத்தில் மருமகளைப் பற்றி வசை பாடிக்கொண்டிருந்தாள். இடையிடையே கிழவியின் வாழ்க்கைக்கு அமைந்த தாளம் போல், அவர்கள் வளர்க்கும் நாய், தெருவழியே போவாரைப் பார்த்து, உருமிக்கொண்டும் குலைத்துக் கொண்டும் இருக்கும்.

சில வேளைகளில் மேலே இருந்து நான் எட்டிப் பார்ப்பது உண்டு. அவர்களின் கூடத்தில்கண்ட பொருள்கள் கண்டபடி சிதறிக் கிடக்கும். வட பகுதியாரின் கூடத்தை எட்டிப் பார்க்கலாம் என்றால், பார்ப்பதற்கு அங்கே ஒன்றும் இருக்காது.

இவர்களின் அமர்க்களமும் அலங்கோலமும் அவர்களுக்குப் பிடிப்பதில்லை. எந்தக் குடும்பமாவது வேறு வீட்டில் இடம் பார்த்துக் கொண்டு அகல் வார்களா என் றால், அதுவும் இல்லை. இரு சாராரும் மனப்பொருத் தம் இல்லாமல் தனித்தனியே வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அவர்களால் எங்களுக்கு எந்தக் குறையும் இல்லை. தனியே மேல் மாடியில் இருந்தபடியால், நாடகம் பார்ப்பது போல் கீழே நடந்தவற்றை வேடிக்கையாகக் கவனித்துக்கொண்டு வந்தோம்.

ஏழையின் மனைவி, நிறைந்த கர்ப்பவதி யாக இருந்தாள். அவர்வீட்டு நாயும் அப்படித்தான் இருந்தது. ஒருநாள் இரவு அவள் ஏழாவது குழந்தையை ஈன்றெடுத்தாள். அந்தக் குழந்தையின் புத்தம் புதிய குரலை மேலே இருந்த படியே கேட்ட போது, எனக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டானது. இந்த உலகத்தில் புதியவர் ஒருவர். அறிஞரோ, அரசியல்வாதியோ, தொழி லாளியோ - புதிதாக வந்து சேர்ந்ததாக எண்ணினேன். அவருடைய முதல் குரலைக் கேட்கும் பேறு எனக்குக் கிடைத்ததே என்று



மகிழ்ந்தேன். அடிக்கடி அந்தக் குரலைக் கேட்பதில் விருப்பம் இருந்தது. ஆனால், குழந்தையை ஏன் இப்படி அழவிடுகின்றார் களோ என்ற வருத்தமும் இருந்தது. செல்வரின் மனைவி அதன் குரலைப் பற்றி என்ன எண்ணினாளோ, தெரியவில்லை. நம் வீட்டில் அழத் தெரியாத குழந்தைப் பொம்மை இருக்கிறது. இப்படிப்பட்ட உயிருள்ள குழந்தை இல்லையே என்று ஏங்கிப் பொறாமைப்பட்டாளோ, அல்லது, உள்ள கூச்சல் போதாதென்று இதுவும் வந்து சேர்ந்ததே என்று வெறுப்பு அடைந்தாளோ என்னவோ!

... தாய்க்கு இல்லாத அன்பா? எங்கேயாவது இருந்தால் எப்போதோ வந்திருக்குமே. முனிசிபாலிட்டியார் பிடித்துக் கொண்டு போயிருப்பார்கள்...

சில நாட்களில் அந்த நாய் ஐந்து குட்டிகளைஈன்றது. மேலே இருந்து ஆவலோடு எட்டிப் பார்த்தேன். இரண்டு குட்டிகள் வெண் ணிறமாய்ச் சின்ன கரும்பட்டை களோடு இருந்தன. மற்ற மூன்றும் தாய் போலவே செந்நிறமாய் இருந்தன. அந்த வெள்ளைக் குட்டிகளில் ஒன்றை எடுத்து வளர்க்கலாமா என்ற ஆசை தோன்றியது. இன்னும் கொஞ்சம் வளரட்டும், பிறகு எடுத்து வளர்க்கலாம் என்று அமைதியானேன்.

அடுத்த மூன்றாம் நாள் காலையில் வெளியே சென்ற அந்தத் தாய்நாய், நெடு நேரம் ஆகியும் திரும்பி வரவில்லை. அந்த ஐந்து குட்டிகளும் 'கய்ங் கய்ங்' என்று ஓயாமல் கத்திக்கொண்டிருந்தன.

''என்னடியம்மா இந்தக் குட்டியெல்லாம் இப்படிக் கத்துதே, கவனிக்கக்கூடாதா, பாவம்?'' என்றாள் கிழவி.

''அந்த நாய் காலையிலே போனது இன்னும் வரவில்லை அத்தை. பால் இல் லாமல் குட்டி எல் லாம் கத்துது'' என் றாள் மருமகள்.

வாயிலும் வைத்தாள். குட்டிகள் அதைச் சுவைத்து அமைதியாவதைக் கண்டேன். சிறிது நேரத்தில் முக்கால் பகுதி ஒலி அடங்கிவிட்டது.

ஒரு குட்டி மட்டும் கத்திக்கொண்டே இருந்தது. அவள் கொட்டாங்கச்சியைக் கீழே வைத்துவிட்டாள். வலக்கையில் இருந்த பஞ்சு போன்ற துணியைத் தன் மார்பு அருகே கொண்டு போய் இடக்கையால் அழுத்தித் தன் பாலால் நனைத்து, அந்த ஒரு குட்டியின் வாயில் வைத்தாள். மூன்று முறை அவ்வாறு செய்த பிறகு அதன் ஒலியும் அடங்கியது. குட்டிகள் மூலைக்கு ஒன்றாகப் படுத்துக் கிடந்தன. அந்த இளங்குழந்தையின் தாய், சிறு விளக்கை எடுத்துக்கொண்டு எழுந்து நடந்தாள். விளக்கொளியில் அவளுடைய முகம், மலர்ந்த செந்தாமரையைப் போல், மகிழ்ச்சியோடு விளங்கியதைக் கண்டேன்.

என் படுக்கைக்கு வந்து படுத்தேன். ஏதோ சுமை இறங்கியது போன்ற உணர்ச்சி என் மனத்தில் இருந்தது. பெருமூச்சு விட்டுக் கை கால்களை நீட்டினேன். ஏப்ப ஒலி வந்த அதே திசையிலிருந்து குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது. ●

கள் மயக்கம்

''வயலில் வேலை செய்துகொண்டிருந்த ஒரு குடியானவன் முன் சாத்தான் தோன்றியது. ''மனிதனே! நீ இறக்கும் தருணம் வந்துவிட்டது. உன் இறப்பைத் தவிர்க்க வேண்டுமென்றால் நான் மூன்று உபாயம் சொல்வேன். அதில், ஒன்றை நீ செய்தால் உன் உயிரை என்னால் காப்பாற்ற முடியும்'' என்றது. ''சரி'' சொல் என்று தயங்கியபடியே கூறினான் குடியானவன்.

''ஒன்று, நீ உன் வேலைக்காரனைக் கொல்லவேண்டும். இரண்டு உன் மனைவியை அடித்து விரட்டவேண்டும். மூன்று இந்த குவளையிலுள்ள மதுவைக் குடிக்க வேண்டும்.'' சாத்தான் சொல்லி முடித்தது.

குடியானவன் யோசித்தான். என்னுடைய வேலைக்காரன் மிகவும் நல்லவன் விசுவாசம் உள்ளவன். அவனைக் கொல்வது பாவம். அதனால் வேண்டாம். இரண்டாவது, என் மனைவி மிகவும் அன்பானவள். அவளை நான் மிகவும் நேசிக்கிறேன். அவளை அடிப்பது என்பதை நினைத்தே பார்க்க முடியாது. அதனால் அதுவும் வேண்டாம். மூன்றாவதாக மதுவைக் குடிப்பது என்பது தற்காலிகமானதுதான். அதனால் அதைக் குடித்து உயிரைத் தக்கவைத்துக் கொள்ளலாம். என்று அவன் முடிவு செய்தான்.

சாத்தானிடம் ''சரி, மதுக் கிண்ணத்தைக் கொடு'' என்று வாங்கி மடமடவெனக் குடித்தான். போதை தலைக்கேறியது. நிதானம் இழந்தான். மூளை வேலை செய்ய மறுத்தது.

தள்ளாடியபடியே வீட்டுக்கு வந்தான். அவனை வரவேற்ற அவனது மனைவியை அடித்து உதைத்தான். பாத்திரங்களைத் தூக்கி எறிந்தான். தடுத்த தன் மனைவியைக் கொன்றான். பின்னர், வேலைக்காரன் 'அய்யோ! உங்கள் மனைவியைக் கொன்றுவிட்டீர்களே!'' என்று தலையில் அடித்துக் கொண்டு அழுதான்.

''என் மனைவியே போய்விட்டாள் நீ என்னடா என்று, வேலைக்காரனையும் அருகே கிடந்த ஆயுதத்தை எடுத்து வெட்டிக் கொன்றான்.

குடியானவனை, குடிகாரனாக மாற்றிவிட்டது அந்தப் பொல்லாத மது எனவே மதுவை எந்தக் கட்டத்திலும் அருந்தவே கூடாது.

- ஜே. மவுரஸ் எழுதிய, மேக் தி மோஸ்ட் ஆப் யுவர் டைம் என்ற ஆங்கில நூலிலிருந்து.

ஹோமியோபதி மருத்துவம்

டாக்டர் எஸ்.பி.கோபிகார், டாக்டர் எஸ். முகம்மது அலீம்

இருபது - இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஹோமியோபதி மருத்துவம் என்றால் போலி மருத்துவம் என்று தமிழக மக்களால் பரவலாக நம்பப்பட்டு வந்தது. இன்று பட்டி, தொட்டி எல்லாம் பரவி எல்லோராலும் போற்றப்படுகின்ற சிறப்பு மருத்துவமாக இது உருவெடுத்துள்ளது.

1975 ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழகத்தில் முறையாக ஹோமியோபதி மருத்துவக் கல்வியோ மருத்துவர்களுக்கான சட்டத் திட்டங்களோ கிடையாது. ஆகையால் பாரம்பரிய மருத்துவர்கள் என்ற பெயரில் முறையாக இம்மருத்துவத்தைப் பயிலாத பலரும் மருத்துவம் புரிந்து வந்தனர். அவர்களில் பலர், ஆங்கில மருத்துவம், ஆயுர்வேதா, சித்தா, யுனானி போன்ற இதர மருந்துகளையும் உபயோகித்து வந்தனர். இச்செயலால் ஹோமியோபதி மருத்துவத்தின் தனித்தன்மையை மக்கள் உணரமுடியாமல் இருந்துவந்தது.

கட்டுரையின் ஆசிரியர்

டாக்டர் எஸ்.பி. கோபிகார் ஹோமியோபதி பட்டப்படிப்பில் தங்கப்பதக்கம் பெற்ற இவர், 1937 ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு நோய்களைக் குணப்படுத்திவருகிறார். தமிழ்நாடு ஹோமியோபதி மருத்துவக் கழகத்தின் தலைவராக உள்ளார் இவர் நூற்றுக்கணக்கான மருத்துவ சம்பந்தப்பட்ட ஆலோசனைக் கூட்டங்களில் கலந்துகொண்டும் நூற்றுக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மருத்துவ ஏடுகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். டெல்லியிலிருந்து வெளிவரும் ஹோமியோபதி ஹெரிட்டேஜ் என்ற பத்திரிகைக்கு ஆசிரியராகவும் இருந்து வருகிறார்.

இக்கட்டுரையின் இணையாசிரியரான டாக்டர் எஸ். முகம்மது அலீம் 1983லிருந்து சென்னையில் ஹோமியோபதி மருத்துவம் செய்துவருகிறார். ஹோமியோபதி இன் ப்ராக்டீஸ் என்ற காலாண்டுக்கொருமுறை வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராக இருக்கிறார். இவர் நூற்றுக்கணக்கான ஆய்வுக்கட்டுரைகளை உள்நாடு மற்றும் வெளிநாட்டின் பத்திரிகைகளில் எழுதியுள்ளார்.

அப்பொழுது மக்கள் நல்வாழ்வுத்துறை சுகாதார அமைச்சராக இருந்த மாண்புமிகு அமைச்சர் திரு.க. அன்பழகன் அவர்களின் முயற்சியால் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் செயல்பட்ட அரசு ஹோமியோபதி மருத்துவர்களுக்கான சட்டத் திட்டங்களை நிர்ணயித்து, தமிழ்நாடு ஹோமியோபதி கவுன்சிலையும், தமிழ்நாடு அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியையும் நிறுவி ஹோமியோபதிக்கென தனிப் பெருமையை அளித்தது.

ஹோமியோபதி என்றால் என்ன?

''முள்ளை முள்ளால் எடுக்கவேண்டும்'' எனும் தமிழ்ப் பழமொழியின் அறிவியல் வடிவம் தான் ஹோமியோபதியின்கோட்பாடு. இம்மருத்துவம் ''ஒத்த மருத்துவம்'' எனத் தமிழ் அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. ஹோமியோபதி என்கின்ற சொல் 'ஹோமியோ' (HOMEO) 'பெத்தோஸ்' (PATHOS) என்கின்ற இரண்டு இலத்தீன்

வார்த்தைகளால் உருவானது. 'ஹோமியோ' என்றால் 'ஒரே மாதிரியான' என்றும் 'பெத்தோஸ்' என்றால் 'வேதனை' என்றும் பொருள்படும். ஒரு இயற்கையான நோயைப் போன்று ஒரு செயற்கையான நோயை உருவாக்கும் தன்மை உள்ள ஒரு மருந்தைக் கொடுத்து அந்த நோயைக் குணப்படுத்தும் முறையே ஹோமியோபதி ஆகும்.

டாக்டர் சாமுவேல் ஹானிமேன்

சான்றாக, நாம் வெங்காயத்தை நறுக்கும்போதோ அல்லது பச்சையாக உண்ணும்போதோ, நமது கண்ணில் இருந்தும், மூக்கில் இருந்தும் நீர் வடிகிறது. கண்ணிலும் தொண்டையிலும் ஓர் எரிச்சலும் மூக்கில் ஒரு குறுகுறுப்பும் ஏற்படுகிறது. இத்தகைய குறிகள் 'நீர்க்கோர்வை' (COMMON COLD) எனும் சளித் தொந்தரவில் ஏற்படும். குறிகளை ஒத்திருக்கிறது. வெங்காயத்தால் ஏற்படும் செயற்கையான குறிகளும், நீர்கோர்வையால் ஏற்படும் இயற்கையான குறிகளும் ஒத்து இருப்பதால் வெங்காயத்தை முறையாக வீரியபடுத்தி மருந்தாகக் கொடுக்கும் போது நீர்கோர்வை எனும் நோய் குணப்படுத்தப்படுகிறது.

... ஒரு இயற்கையான
நோயைப்போன்று
ஒரு செயற்கையான நோயை
உருவாக்கும் தன்மை உள்ள ஒரு
மருந்தைக் கொடுத்து அந்த நோயை
குணப்படுத்தும் முறையே
ஹோமியோபதி ஆகும்...

ஹோமியோபதியின் தோற்றம்

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த டாக்டர் சாமுவேல் ஹானி மேன் (Dr. Samuel Hahnemann) எனும் ஆங்கில மருத்துவ மேதை மருத்துவம் புரிந்து வந்தார். அக்கால கட்டத்தில் நோய்களைக் குணப்படுத்தும் முறை மிகவும் கொடூரமானதாக இருந்தது. நோயாளிகளுக்கு அட்டைப் பூச்சிகளைவிட்டு இரத்தத்தை உறிஞ்சவைத்தல், இரத்தக் குழாய்களை அறுத்து இரத்தத்தை வெளியேற்றுதல், கந்தகம், பாதரசம், ஊமத்தை போன்ற நச்சுத்தன்மை வாய்ந்த பொருள்களை, வீரியப்படுத்தாமல் (வீரிய படுத்துதல் என்பது நச்சுத் தன்மையைக் குறைக்க ஹோமியோபதி மருத்துவத்தில் பயன்படுத்தப் படும் முறை) அப்படியே மருந்தாகக் கொடுப்பது போன்றவைகளைச்சிகிச்சையாக மருத்துவர்கள் பயன்படுத்தினர்.

டாக்டர் ஹானிமேன் அவர்கள் தன்னிடம் சிகிச்சை பெறும் நோயாளிகள் இத்தகைய மருத்துவ முறையால் நோய் குணமடைவதைவிட, அதிகம் அவதி அடைவதை உணர்ந்து மிகவும் மனம் நொந்து போனார். ஆகவேதான் வைத்தியத் தொழில் புரிவதையே நிறுத்திவிட்டார். அவர் பன்மொழி அறிஞர் ஆதலால் பல வேற்றுமொழி நூல்களை ஜெர்மனிய மொழியிலும், ஆங்கில மொழியிலும் மொழிமாற்றம் செய்து அதன் மூலம் வரும் வருமானத்தைக் கொண்டு தனது குடும்பத்தை நடத்திவந்தார்.

சிங்கோனா தந்த திருப்பம்

ஒருமுறை டாக்டர் கல்லன் (Dr. Cullen) எனும் ஆங்கில மருத்துவர் எழுதிய ஒரு புகழ்பெற்ற மருத்துவகுண நூலை மொழிமாற்றம் செய்யும்போது, அந்நூலில் கொடுக்கப்பட்ட ஒரு கருத்து, டாக்டர் ஹானிமேன் அவர்களின் சிந்தனையைத் தூண்டி விட்டது. கொயினா

சொன்னதைச் செய்வோம்!
செய்வதைச் சொல்வோம்!

(1996ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் நாள் முதல்,
நவம்பர் மாதம் 13ஆம் நாள் வரை)

மனை வரி ரத்து, நிலுவைத் தொகையும் தள்ளுபடி.

பட்டா பாஸ் புத்தகம் வழங்க ரூ.24 கோடி நிதி ஒதுக்கீடு.

நிர்வாக வசதியின் பொருட்டு, புதிய மாவட்டங்கள் நான்கு உருவாக்கம்.

'சிங்கிள்' டெண்டர் முறை அறவே நீக்கம்.

பருப்பு, மஞ்சள், மிளகாய், புளி, பனங்கற்கண்டு முழு வரிச்சலுகை.

கணிப்பொறி, தொலைக்காட்சிப் பெட்டி, காகிதம், பொறிகடலை சாதாரண பிஸ்கட்டுகள், ஆயத்த ஆடைகள் வரிகுறைப்பு.

சில்லறை விற்பனை விலையை உயர்த்தாமல் அயல்நாட்டு மது உற்பத்தியாளர்களிடம் வசூலிக்கும் வரியை உயர்த்தி அரசுக்குக் கூடுதல் வருவாய் ரூ.65 கோடி.

மொலாசஸ் ஏற்றுமதியில் நடந்த முறைகேடுகள் நீக்கம் - ரூ.10 கோடி.

பலமுனை விற்பனை வரி முறையினை மாற்றி ஒரு முனை விற்பனை வரியாக சீரமைத்தல்.

ரூ.3.17 கோடி நிதி ஒதுக்கீட்டில், வறட்சி நிவாரணப் பணிகள் செயலாக்கம்.

வணிக வரிப் பதிவை ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்துக்கொள்வதற்குப் பதில், 5 ஆண்டு காலத்திற்குப் பதிவு செய்துகொள்ள அனுமதி.

பள்ளி இறுதித் தேர்வில் முதல் மூன்று இடம் பெறும் மாணவர்கட்கு மாவட்டந் தோறும் மேற் படிப்பை அரசு ஏற்றல்.

முதல் 10 இடம் பெறும் பட்டதாரிகளற்ற குடும்ப மாணவர்களுக்குக் கல்விச் செலவை ஏற்றல்.

ஆதிதிராவிடர் நலத்திட்டத்தின் கீழ் 40 புதிய ஆதிதிராவிட மாணவ-மாணவியர் நல விடுதிகள் தோற்றுவித்தல்.

பள்ளி மாணவர்கள் அனைவருக்கும் இலவச பஸ் பயணம்.

★ இலங்கைத் தமிழ் மாணவர்கட்கு உயர்கல்வி கற்பதில் தடை நீக்கம்.

★ 21 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும் 99 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 81 உயர்நிலைப் பள்ளிகள்

மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்வு.

85 புதிய தொடக்கப் பள்ளிகள் அமைப்பு.

திராவிடப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி - ரூ.50 இலட்சம்.

1996-97-ஆம் கல்வி ஆண்டுக்கான பாடநூல்கள் பழைய விலையிலேயே விற்பனை.

ஆசிரியர் பயிற்சி முடித்து, அரசு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களில் 11,652 பேருக்கு முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளது.

ரூ.50 இலட்சம் செலவில் ஆசிரியர் பயிற்சித் திட்டம் தொடக்கம்.

உயர்நிலைப் பள்ளிகளில் அடிப்படை வசதிகளைப் பெருக்கிட ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு.

அனைத்து மேநிலைப் பள்ளிகளுக்கும், ஆய்வுக் கூடங்கள் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் தொடங்க நடவடிக்கை.

திருநெல்வேலியில் புதிய சட்டக் கல்லூரி தொடக்கம்.

தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை முழுமையாகச் செயலாக்க, தலைமைச் செயலகத்திற்கு 500 தமிழ்த் தட்டச்சுப் பொறிகள்.



வழக்கறிஞர்கள் சங்கங்களுக்கு நூலகம் மற்றும் பிற வசதிகளுக்கு ரூ.31 இலட்சத்து 50 ஆயிரம் நிதி வழங்க அரசு ஆணை.

"நல்லாசிரியர் விருது" இனி "டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது" என வழங்க ஆணை.

ஆதிதிராவிட நலத்துறை பள்ளிகளில் ஆய்வகங்கள் அமைத்திட ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

இரண்டாம் பசுமைப் புரட்சி உருவாக்க வல்லுநர் குழு.

நிலுவைத் தொகையைச் செலுத்திய விவசாயிகளுக்கு மின்கட்டணச் சலுகை.

விவசாயிகள் பயன்பெறும் வகையில், சீரான மின்சாரம் வழங்க ஆணை.

தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு, மானிய விலையில் வேளாண் பொருட்கள் வழங்க ரூ.1.63 கோடி நிதி ஒதுக்கீடு.

கரும்பு விவசாயிகளுக்குச் சேர வேண்டிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க ரூ.26.28 கோடி முன்பணம்.

மருத்துவமனைப் பார்வையாளர் கட்டணம் நீக்கம்.

300 தொடக்கச் சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்ட ரூ.18 கோடி நிதி ஒதுக்கீடு.

'டானிடா' சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் - தருமபுரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களுக்கு ரூ.57.51

கோடி நிதி ஒதுக்கீடு.

★ தமிழ் ஆட்சி மொழித் துறைக்குத் தனி அமைச்சகம்.

★ மெட்ராஸ் என்பதை 'சென்னை' என்று பெயர் மாற்றம்.

★ மொழிக்காவலர், தமிழறிஞர், நலிந்த கலைஞர் உதவித்தொகை உயர்வு ரூ.400 லிருந்து ரூ.500.

★ தேவநேயப் பாவாணர் நூல்கள் நாட்டுடைமை. அவரது குடும்பத்திற்கு ரூ.20 இலட்சம் பரிவுத்தொகை.

★ பிறமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

★ தமிழ்நாட்டில் செல்லும் புகைவண்டி களுக்குத் தமிழ்ப் பெயர் சூட்ட - தென்னக ரெயில்வே மூலம் அரசு ஏற்பாடு.

★ இந்திய மொழிகளிலேயே 'இணையம்' எனப்படும் 'இண்டர்நெட்' மூலமாகத் தமிழில் செய்திப் பரிமாற்றம் செய்ய வசதி.

★ கடந்த ஆட்சியினரால் தேர்ந்தெடுக்கப் பட்ட 10,000 காவலர்கள், 600 காவல் துறை உதவி ஆய்வாளர்கள் 1000 தீயணைப்புப் பணியாளர்கள் பணிய மர்த்தல்.

★ தமிழ் நாடெங்கும், காவல் துறையின ரால் சமூக விரோதச் செயல்கள் கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

★ இனக் கலவரங்களிலோ, காவல் துறையினரின் துன்புறுத்தலாலோ, துப்பாக்கிச் சூட்டினாலோ இறந் தவர்கள் குடும்பத்திற்கு ரூ.50,000 நிதியுதவி.

★ அறிஞர் அண்ணா பிறந்தநாளையொட்டி 419 சிறைக் கைதிகள் விடுதலை.

★ காவல்துறையினர் சீருடை செலவுப் படி ரூ.25லிருந்து ரூ.30ஆக உயர்வு.

★ காவல்துறையில் பணிபுரியும் காவலர் களின் தூய பணிக்கு, கீழ்க்கண்டவாறு சிறப்புப் படி அளிக்கப்பட்டுள்ளது. 15 ஆண்டுக்கு ரூ.5, 20 ஆண்டுக்கு ரூ.7.50, 25 ஆண்டுக்கு ரூ.10, 30 ஆண்டுக்கு ரூ.15, 35 ஆண்டுக்கு ரூ.20.

★ தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் காவல்துறையினருக்கு வீடு கட்டுவதற்கு, ரூபாய் ஒரு கோடியிலிருந்து மூன்று கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ மாநில மனித உரிமைகள் ஆணையம் அமைப்பு.

★ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு நிதியுதவி அதிகரிப்பு - ரூ.10,000 லிருந்து ரூ.15,000.

★ இனக் கலவரங்களில் இறப்பவர் குடும்பத்திற்கு ரூ.50,000.

★ தமிழ்நாடு சட்டமன்றத்தில் மீண்டும் மேலவை அமைத்திட, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற நடவடிக்கை.

★ வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஆந்திர மக்கள் துயர் துடைக்க ரூ.1 கோடி நிதி உதவி.

★ பார்வையற்ற பகுதி நேரப் பணியாளர் களுக்கு ரூ.800லிருந்து ரூ.1200 வரை ஊதிய உயர்வு.

★ சென்னை நகருக்குக் கிருஷ்ணா குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

★ உலக வங்கிக் கடன் உதவியில், ரூ.1,140 கோடி மதிப்பீட்டில் நீர்வள ஆதார மேம்பாட்டுத் திட்டம்.

★ திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், வரட்டாறு மற்றும் குப்பத்து ஓடை ஆறுகளின் குறுக்கே ரூ.8.78 கோடி செலவில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் தொடக்கம்.

★ திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் செண்பகத் தோப்பு நீர்த் தேக்கத் திட்டம் ரூ.21.33 கோடி செலவில் தொடக்கம்.

★ நகர்ப்பகுதி சாலைப் மேம்பாட்டுப் பணி களுக்காக ரூ.35 கோடி நிதி ஒதுக்கீடு.

★ ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் கிழக்குக் கடற்கரைச் சாலைத் திட்டத்திற்கு ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு.

★ பரம்பிக்குளம் ஆழியாறு - சாத்தனூர் அணை உள்ளிட்ட 12 திட்டங்களின் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.47.24 கோடிக்கு அரசு அனுமதி.

★ சென்னை-சைதாப்பேட்டையில் ரூ.6 கோடி செலவில் சுரங்கப்பாதை அமைக்க நடவடிக்கை.

★ நியாயவிலைக் கடை பொருட்கள் குறித்த நேரத்தில் வழங்கல்.

★ நியாய விலைக் கடைகளில், வரு மானத்தின் அடிப்படையில் உணவுப் பொருட்கள் எல்லா நாட்களிலும்

85 புதிய பள்ளிகள்



சாலைப் பணிகளுக்கு 35 கோடி ஒதுக்கீடு

பெற்றிடத் தகுந்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

★ திருப்பெரும்புதூரில் கொரியா கார் தொழிற்சாலை - ரூ.2,450 கோடி.

★ பொள்ளாச்சியில் தேங்காய் பதனிடும் தொழிற்சாலை - ரூ.399 கோடி.

★ கன்னியாகுமரியில் தேங்காய் உட் பொருள் தொழிற்சாலை - ரூ.18 கோடி.

★ செங்கல்பட்டு அருகே கண்ணாடி தயாரிக்கும் தொழிற்சாலை - ரூ.550 கோடி.

★ மறைமலை நகரில் ஆப்டிகல் பைபர் கேபிள் திட்டம் - ரூ.41.57 கோடி.

★ குத்தகைக் காலத்தை இருபது ஆண்டு களாக நீடிக்கும் புதிய கனிமக் கொள்கை.

★ ரூ. 500 கோடி முதலீட்டில், கன்னியா குமரியில் ரப்பர் தொழிற்சாலை.

★ புதிதாகப் பல தொழிற்சாலைகளை உருவாக்கிட, மின் உற்பத்தியைப் பெருக்குவதன் அடிப்படையில், சி.எம்.ஆர். வாசவி தனியார் நிறுவனத் துடன் ஒப்பந்தம்.

★ தென் கொரியா நிறுவனத்துடன் தமிழ்நாடு அரசு இணைந்து ரூ.350 கோடி முதலீட்டில் புதிய டயர் தொழிற்சாலை அமைப்பு.

★ இராணிப்பேட்டையில் 700 ஏக்கர் நிலப் பரப்பில் தொழிற்பேட்டை விரிவாக்கம்.



சென்னை மாநகராட்சிக்கு ரூ.200 கோடி; மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு.

8500 முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஓய்வூதியம்.

அனைத்து உள்ளாட்சி மன்றங்களுக்கும் குறித்த நாளில் தேர்தல் நடத்தப்பட்டது.

ரூ.77 கோடி செலவில், சென்னை கோயம்பேட்டில் 295 ஏக்கர் நிலப் பரப்பில், ஆசியாவிலேயே சிறப்புமிக்க நவீன காய், கனி, மலர் அங்காடி திறந்து வைக்கப்பட்டது.

மீண்டும் மக்கள் குறை தீர்க்கும் 'மனுநீதித் திட்டம்' செயலாக்கப்பட்டு உள்ளது.

எல்லாக் குடியிருப்புகளிலும், பாது காக்கப்பட்ட குடிநீர் வசதி செய்திடப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை.

மூன்றே ஆண்டுகளில் 218 ஊராட்சி ஒன்றியங்களில் தொழிற் பயிற்சிப் பள்ளிகள் தொடங்க ஆணை.

ரூ.1,313.20 கோடி செலவில் திருப்பூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயலாக்கம்.

இலவச கான்கிரீட் வீடுகள் திட்டத்திற்கு (இந்திரா குடியிருப்புத் திட்டம்) ரூ.50.81 கோடி கூடுதல் நிதியளிப்பு.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்குப் பயன்பட, ஊரக வீட்டு வசதி வாரியம்.

சென்னை-மணலியைச் சுற்றியுள்ள பகுதிகளில் ரூ.26 கோடி செலவில் நீர் ஆதார மேம்பாட்டுத் திட்டம்.

சென்னை மாநகரில் கழிவு நீரகற்றும் பணியை விரிவுபடுத்த ரூ.10 கோடி நிதி ஒதுக்கீடு; இதில், ரூ.5 கோடி செலவில் ஆதி ஆந்திரக் குடியிருப்புகளுக்குக் கழிவு நீரகற்றும் வசதி.

ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் வழங்கப்பட்டுள்ள ரூ.1 கோடி ரூபாய் மானியத்தில், ரூ.15 இலட்சத்திற்கு மிகாமல் அதன் அலுவலகங்களை அமைத்துக்கொள்ள அனுமதி.

பொள்ளாச்சி அருகே ஏற்றுமதி இறைச்சிக் கூடம் - ரூ.168 கோடி.

புதிதாக 10 கால்நடை மருத்துவ மனைகள் கட்டித் தரல்.

தமிழ்நாடு எரிவாயுத் திட்டம் - ரூ.30 கோடி.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி திட்ட உதவித் தொகை அதிகரிப்பு - ரூ.5000 லிருந்து ரூ.10,000.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு மகப்பேறு திட்ட உதவித் தொகை உயர்வு - ரூ.300 லிருந்து ரூ.500.

குடும்பத் தலைவர் இறந்தால் குடும்பத் திற்கான நிதியுதவி உயர்வு - ரூ.5,000 லிருந்து ரூ.7,500.

சத்துணவுத் திட்ட மேம்பாட்டிற்கு ரூ.401 கோடி கூடுதல் நிதி ஒதுக்கீடு.

அரசு மறுவாழ்வு இல்லவாசிகள் மற்றும் அரசினர் ஏழைகள் பராமரிப்பு இல்லவாசிகளுக்கும் அளிக்கப்பட்டு வந்த உணவுக் கட்டணமானது பெரிய



வர்களுக்கு ரூ.7லிருந்து ரூ.15 ஆகவும், சிறியவர்களுக்கு ரூ.5லிருந்து ரூ.10 ஆகவும், உயர்த்தப்பட்டுள்ளது.

திரைப்படத் தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்குத் தீர்வு.

குறைந்த முதலீடு திரைப்பட மானியம் உயர்வு - ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சம்.

அரசு இடங்களில் படப்பிடிப்புக் கட்டணம் குறைப்பு.

அரசு விழாக்களில் எளிமை; அரசு நிகழ்ச்சிகளில் சிக்கனம்.

பத்திரிகையாளர் ஓய்வூதியம் உயர்வு - ரூ.500 லிருந்து ரூ.1,000.

படப்பிடிப்பின்போது சண்டைக்காட்சிக் கலைஞர்கள் உயிரிழக்க நேர்ந்தால் ஒரு இலட்சம் ரூபாய் உதவித்தொகை; நிரந்தர ஊனமுற்றால் ஐம்பதாயிரம் ரூபாய் உதவித் தொகை; காயமடைந் தால் மருத்துவச் சிகிச்சைக்கான செலவு வழங்கிட அரசு ஆணை.

மக்கள் விருப்பதிற்கிணங்க, ஜெ.ஜெ.டி.சி. நிறுவனம் 'இராஜீவ் காந்தி போக்கு வரத்துக்கழகம்' எனவும்- தரமணி ஜெ.ஜெ. திரைப்பட நகர் 'எம்.ஜி.ஆர். திரைப்பட நகர்' எனவும் பெயர் மாற்றம்.

பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்டபொம்மன் நினைவுக் கோட்டை மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

திரையரங்குகளின் நுழைவுக் கட்ட ணங்கள், கடைசி வகுப்பு நீங்கலாக





28.10.94க்கு முன் வசூலித்துவந்ததைவிட, 75 சதவிகிதத் திற்கு மிகாமல் மாற்றி அமைத்துக் கொள்ளலாம். அஃதன்னி மில் சிறப்பு அனுமதி பெற்றுக் கட்டணங்களை உயர்த்திடவும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

அர்ச்சகர்கள், கிராமப் பூசாரிகள், உலமாக்கள், ஓதுவார்கள் உதவித் தொகை உயர்வு ரூ.400 லிருந்து ரூ.500.

கங்கைகொண்ட சோழபுரம் கோவில் கலைச்செல்வங்கள் பராமரிப்புக்காக ரூ.5 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

புதிதாக 222 உலமாக்களுக்கு ஓய்வூதியம்.

திருக்கோயில் ஊழியர்களின் ஓய்வூதியம் ரூ.300-லிருந்து ரூ.500 ஆக உயர்வு.

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் 16 கால் மண்டபத்தைப் புதுப்பிக்க ஏற்கெனவே கொடுத்துள்ள ரூ.15 இலட்சத்துடன் மேலும் ரூ.35 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் மின் உற்பத்திப் பிரிவுகள்.

தமிழ் நாட்டில், 2000 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய, 2 ஆண்டுகளில் செயல்படும் 20 சிறிய மின் துணை உற்பத்தி நிலையங்கள் தொடக்கம்.

சிறு துறைமுகங்களைச் சீராக்க 'கடல்சார் வாரியம்'.

கிராமப்புறங்களுக்குத் தனியார் பேருந் துகள் செல்லமுடியாத முறைகேடான சலுகைகள் நீக்கம்.

தொட்டிய நாயக்கர் மற்றும் உட் பிரிவுகளுக்குத் துணை வட்டாட்சி

யர்களே சாதிச் சான்றிதழ் வழங்க ஆணை.

★ 69 சதவிகித இட ஒதுக்கீட்டை நிலை நாட்ட உச்சநீதி மன்றத்தில் அயராத முயற்சி.

★ பழங்குடியினர் தொழில் தொடங்கிட ஒன்றரைக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

★ ஆதிதிராவிட - பழங்குடியினர் - பின் தங்கிய வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களை சேர்ந்த அரசு உயர் நிலைப்பள்ளி விடுதி மாணவ மாண வியர் உணவுச் செல வினம் ரூ.138.75 லிருந்து ரூ.180 ஆக உயர்வு.

★ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினருக்கு ஒதுக்கப்பட்டு, காலியாக உள்ள 454 காவல் பணிகள் உடனடி யாக நிரப்பப்பட்டது.

★ 1.10 இலட்சம் கைத்தறி நெசவாளர் பயன்பெற, சேமிப்பு மற்றும் பாது காப்புத் திட்டத்தில் சலுகை பெறும் வயது வரம்பு 60 ஆக உயர்வு.

★ அரசு அலுவலர்கள் குடும்பப் பாது காப்பு நிதியை ரூ.60,000 லிருந்து ஒரு இலட்சமாக அதிகரிப்பு.

★ முழு ஓய்வூதியம் பெறத் தேவையான பணிக்காலம் 33 ஆண்டுகளிலிருந்து 30 ஆகக் குறைப்பு.

★ அரசு ஊழியர்கள் அகம் மகிழ இடைக்கால நிவாரணம்.

★ நாட்டுயர்வு நலப்பணிகள் தொடர்ந்திட கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது.

★ குடிசை மாற்று வாரிய வீடுகளைச் செப்பனிட ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு.

★ குடிசை மாற்று வாரிய வீடுகள், குடியிருப்போர் விரும்பினால், எளிய தவணை முறையில் அவர்களுக்கே நியாயமான விலையில் உரிமையாக்குதல்.

★ 442 மீன்பிடிக் கிராமங்களுக்கு, மின்விளக்குடன் கூடிய 20,000 வீடுகள் கட்ட ரூ.6.75 கோடி நிதி ஒதுக்கீடு.

★ தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் மூலம் ரூ.120 கோடி செலவில் வர்த்தகப் பொருட் காட்சி மையம்.

★ பெரியார் மாவட்டத்தில் ரூ.50 இலட்சம் செலவில் வேளாண்மை தகவல்மையம்.

★ சுற்றுச் சூழலைப் பாதுகாக்க ரூ.2.5 கோடி செலவில், 3,130 தொழிற்சாலை களுக்கு 57 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்.

★ மாசுக்கட்டுப்பாடு மேம்பாட்டுப் பணி களுக்காகக் கடலூரிலும், தூத்துக் குடியிலும் ரூ.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு.

★ மீனவர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் ரூ.6.56 கோடி நிவாரண உதவி.

★ பருவநிலை சாதகமாக இல்லாத மாதங்களில் கடலில் மீன்பிடிக்கச் செல்லமுடியாமல் சிரமத்திற்கு ஆளாகும் மீனவர்களுக்குச் சேமிப்பு நிவாரணத்தின்கீழ் கடல் மீனவர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மாநிலப் பங்காகிய ரூ.6.56 கோடியும் மற்றும் மத்திய அரசு அதன் பங்கை வழங்க முன்வராத நிதியாகிய ரூ.6.56 கோடியையும் சேர்த்து ரூ.13.12 கோடியை வழங்கப்பட்டுள்ளது.

★ வால்பாறை மற்றும் நீலகிரியைச் சேர்ந்த 528 தேயிலைத் தோட்டத் தொழிலாளர் களுக்குப் பணி நிரந்தரம்.

★ நீதிமன்றங்களுக்கு 394 கூடுதல் தட் டச்சர்கள் நியமனம்.

★ தமிழ் நாட்டில், மேலும் 55 கூடுதல் நீதிமன்றங்கள்.

★ பூம்புகார் சுற்றுலா வளாக மேம்பாட்டுப் பணிகளுக்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

★ இந்திய உச்சநீதி மன்றத்தின் பிரிவு ஒன்றைத் தமிழ்நாட்டில் சென்னையில் அமைக்குமாறு மத்திய அரசினை வலியுறுத்திக் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது.

(Quinine) மருந்து தயாரிக்கப்பயன்படுத்தப்படும் சிங்கோனா (Cinchona) மருந்தின் பட்டையி லிருந்து எடுக்கப்படும் சாற்றை ஆரோக்கிய மான ஒருவர் உட் கொண்டால் அவர் மலேரியா போன்ற தோற்றமளிக்கும் ஒரு விதமான நோய்க்கு ஆளாகலாம் என்பதே டாக்டர்கல்லன் என்பவர் எழுதிய கருத்தாகும்.

> ... நோயாளிகளுக்கு ஒத்தகுறி உருவாக்கும் மருந்துகளைக் கொடுக்கும் போது ஏற்கெனவே உள்ள இயற்கையான நோயுடன் புது செயற்கை நோயும் சேர்ந்து, நோயின் குறிகளின் தன்மை அதிகமாகி பிறகு குறைகிறது...

டாக்டர் கல்லன் அவர்களின் கருத்து உண்மைதானா என சோதித்து அறிய, டாக்டர் ஹானிமேன் அவர்கள் தானே சிங்கோனா மரப்பட்டையின் சாற்றை உட்கொண்டார். என்ன ஆச்சரியம்! அவர் மலேரிய நோயின் ஒத்த குறிகளால் அவதி யுற்றார். தனது சோதனையை மீண்டும், மீண்டும் செய்து பார்த்தார். இச்சோதனையைத் தனது மனைவி, பிள்ளைகள், நெருங்கிய நண்பர்கள் எல்லோரி டமும் நடத்திப்பார்த்தார். விளை வுகள் ஒன்றாகவே இருந்தன. இச்சோதனைகள் மூலம் டாக்டர் ஹானிமேன் அவர்கள் டாக்டர் கல்லன் அவர்களின் எதேச்சை யான கருத்தை அறிவியல் பூர்வமாக உறுதிப்படுத்தினார். பின்னர் நூற்றுக் கணக்கான மருத்துவப் பொருட்களைத் தானும் அருந்தி, தன்னைச் சார்ந் தோரையும் அருந்தவைத்து, ஒவ் வொரு மருத்துகளாலும் என் னென்ன குறிகள் உருவாகின்றன' என அறிந்து அவைகளை முறை யாகப் பதிவு செய்தார்.



பல்சட்டிலா எனும் இம்மருந்து வயிற்றுக் கோளாறுக்கும் மாதவிடாய் பிரச்சினைகளுக்கும் பொதுவாகப் பயன்படுகிறது.

தனது கண்டுபிடிப்புகளை ''ஆர்கனான் ஆஃப் மெடிசின்'' (Organon of Medicine) எனும் நூல் மூலம் உலகுக்கு வெளிப்படுத்தினார். மீண்டும் தனது மருத்துவத் தொழிலைத் தொடங்கி ஹோமி யோபதி கோட்பாட்டைப் பயன்படுத்தி நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தார்.

நோயாளிகளுக்கு ஒத்தகுறி உருவாக்கும் மருந்துகளைக் கொடுக்கும்போது ஏற்கெனவே உள்ள இயற்கையான நோயுடன் புது செயற்கை நோயும் சேர்ந்து, நோயின் குறிகளின் தன்மை அதிகமாகி பிறகு குறைவதை அறிந்தார்.

மருந்து வீரியப் படுத்தல்

ஆரம்ப காலத்தில் நோயின் தன்மை அதிகரிக்காமல் தடுக்க டாக்டர் ஹாரிமேன் அவர்கள் மருந்தை வீரியப்படுத்தும் முறையை (Drug Dynamisation or Potentisation) பயன்படுத்தினார். இம் முறை யில் மருந்தை Rectified sprit எனும் சுத்தப்படுத்தப்பட்ட சாராயத்துடனோ அல்லது Lactose எனும் பால் மருந்தை 9 :2 அல்லது 99:1 எனும் விகிதாச்சாரத்தில் கலந்து அக்கலவையை நன்றாகக் குலுக்கியோ அல்லது அரைத்தோ மருந்தை வீரியப்படுத்தி நோயாளிகளுக்குக் கொடுத்தார். இம்மருந்துகளைக் கொடுக்கும் போது ''மெடிசினல் அக்ர வேசன்' (Medicinal Aggravation) எனும் தன்மை குறைந்து நோயாளிகளுக்கு விரைவில் குணம் கிடைத்தது. மருந்துகளை வீரியப்படுத்துவதால் மருந்தின் நச்சுத்தன்மை குறைந்து, நோயைக் குணப்படுத்தும் தன்மை அதிகமாவதை டாக்டர் ஹானிமேன் உணர்ந்தார். மருந் தின் வீரியத்தை அதிகப்படுத்த அதிகப்படுத்த, அதன் நச்சுத் தன்மை மிகவும் குறைந்து நோயாற்றும் தன்மை மேலும் மேலும் அதிகமாவதை அறிந்தார்.

இன்றைய ஹோமியோபதி மருத்துவர்கள் ஓமியோபதி மருந்துகளை 6, 30, 200, 1000, 10000, 50000 போன்ற வீரியங்களில் (Potencys) பயன்படுத்திகிறார்கள். 6வது வீரியம் என்றால் ஆல்கதால் அல்லது லேக்டோஸ் பவுடரில்

மருந்தின் அளவு 1/1000 ஆகும். 200 வது வீரியம் என்றால் 1/100, 200 ஆகும்.

ஹோமியோபதியின் தனித்தன்மைகள் :

ஓமியோபதி மருத்துவம் ஒரு நிலையான கோட்பாட்டின் அடிப்படையில் உருவானது. ஆகையால் இம்மருத்துவம் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தும்.

ஆங்கில மருததுவத் துறையில் மருந்துகளும், அவற்றை உபயோகப்படுத்தும் முறைகளும் காலத்திற்கு ஏற்ப மாறிவருகிறது. புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்கும்போது பழைய மருந்துகள் (Out dated) பழையன எனத் தூக்கி எறியப் படுகிறது. ஆனால், ஓமியோபதி மருந்துகள் என்றும் நிலைத்து இருக்கின்றன. புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்படும்போது பழைய மருந்துகளுடன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனவே ஒழிய, பழைய மருந்துகள் தூக்கி எரியப்படுவதில்லை.

ஆர்னிகா எனும் இம்மருந்து அடிபட்ட காயங்கள் (உட்காயம்) ஆறப் பயன்படுகிறது.

குணப் பரிசோதனை

பெரும்பாலான ஹோமியோபதி மருந்துகளை ஆரோக்கியமான மனிதர்களுக்குக் கொடுத்து, என்னென்ன குறிகள் உருவாகின்றன என அறிந்து, அக்குறிகள் முறையாகப் பதிவு செய்யப்படுகின்றன. மருந்தின் குணங்களை இவ்வாறு அறிவதற்கு மருந்து குணப்பரிசோதனை (Drug proving) எனப் பெயர். இம்முறையில் மருந்துகள் மனிதர்களின் உடல் நிலையிலும், மன நிலையிலும் என்னென்ன மாற்றங்களை உண்டாக்குகின்றன என அறிய முடிகிறது.

> ... வீரியப்படுத்தப்பட்ட ஹோமியோபதி மருந்துகளை உபயோகப்படுத்தும் போது, இம் மருந்துகளுக்கு நச்சுத்தன்மையேதும் இல்லாததால், இம்மருந்துகளுக்குப் பக்க விளைவு ஏதும் கிடையாது...

ஆங்கில மருந்துகளை விலங்குகளுக்குக் கொடுத்து விலங்குகளின் திசுக்களில் என்ன மாற்றங்களை உண்டாக்குகின்றன என அறிந்து பிறகு மனிதர்களுக்கு மருந்தாகக் கொடுக்கப்படுகின்றது. விலங்குகளின் திசுக்களும் மனிதர்களின் திசுக்களும் ஒரே மாதிரியாக இல்லாததாலும் அவற்றின் எதிர்ப்புச் சக்திகளும் ஒரே மாதிரியாக இல்லாததாலும் இம்மருந்துகள் மனிதர்களுக்குக் கொடிய தீங்குகளை அளிக்கின்றன.

பக்க விளைவுகள் இல்லை

வீரியப்படுத்தப்பட்ட ஹோமியோபதி மருந்துகளை உபயோகப்படுத்தும்போது, இம் மருந்துகளுக்கு நச்சுத்தன்மையேதும் இல்லாததால், இம்மருந்துகளுக்குப் பக்க விளைவு ஏதும் கிடையாது. இதர மருத்துவத் துறையில் மருந்துகளைக் கச்சாவாக உபயோகப்படுத்துவதால் பின் விளைவுகள் அதிகம் ஏற் படுகிறது.

ஹோமியோபதி மருந்துகளை நோயுற்றவர்கள் கூறும் குறிகளைக்கொண்டோ அல்லது அவரைச் சார்ந்தோர், நோயாளியைப்பற்றிக் கூறுவதை வைத்தோ நிர்ணயம் செய்ய முடியும். இரத்தம், மலம், நீர் பரிசோதனை கள், எக்ஸ்ரே, ஸ்கேன், என்டோஸ்கோபி போன்ற பரிசோதனைகள் மருந்தை நிர்ணயம் செய்ய அவசியப்படுவதில்லை. ஆனால், இப் பரிசோதனைகள் நோயின் காரணம், தன்மை, பாதிக்கும் வேகம் ஆகியவை அறியவும், நோயை எந்த அளவு குணப்படுத்த முடியுமென ஊகிக்கவும் ஓமியோபதி மருந்துகள் உட்கொண்டபின் எந்த அளவு உடலில் முன்னேற்றம் ஏற்படுகிறது என

அறியவும் உபயோகப்படுகிறது. ஆனால், ஆங்கில மருந்துகளை நோயாளிகள் கூறும் குறியுடன், இரத்தம், மலம், நீர், எக்ஸ்ரே, என்டோஸ்கோப் போன்ற பரிசோதனைகள் மூலம் அறியப்படும் குறிகளையும் கொண்டு, நோய் நிர்ணயம் செய்து பின்தான் கொடுக்க முடியும். நோய் நிர்ணயம் செய்வதில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்தால், கொடுக்கப்படும் மருந்து கள் மூலம் மிகக் கொடிய விளைவுகள் ஏற்படலாம்.

> ... மற்ற மருத்துவத் துறையில் அறுவை சிகிச்சை மூலம்தான் குணப்படுத்த முடியும் என நம்பப்படும் பல நோய்களை நோயாளிகளின் குறிகளைக்கொண்டே சரியான ஹோமியோபதி மருந்துகளைக் கொடுப்பதன் மூலம் குணப்படுத்த முடிகிறது...

மருந்து ஒவ்வாமை ஏற்படாது

வீரியப்படுத்தப்பட்ட ஹோமியோ மருந்துகளைக் கொடுக்கும்போது மருந்து ஒவ்வாமை (Drug allergy) ஏற்படுவதில்லை. இதர மருந்துகள் பலவும் ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன.

மருந்து எதிர்ப்பு சக்தி ஏற்படாது

நாள்பட்ட நோய் (Chronic Diseases) உடையவர்களுக்குப் பல ஆண்டுகள் ஹோமியோபதி சிகிச்சை செய்ய நேரிடும்போது மருந்து எதிர்ப்புச் சக்தி (Drug resistance) உடலில் ஏற்படுவதில்லை. ஆனால், இதர மருந்துகளுக்குப் பெரும்பாலும் உடலில் மருந்து எதிர்ப்புச் சக்தி ஏற்பட்டு மருந்துகள் மேற்கொண்டு பல னளிக்காமல் போய்விடுகிறது.

ரூஸ் எனும் இந்தச் செடியிலிருந்து ரஸ்டாக்ஸ் எனும் மருந்து தயாரிக்கப்படுகிறது. இது பொதுவாக மழைக்காலங்களில் வரும் உடல்வலி, காய்ச்சல் போன்ற நோய்களைப் போக்கும்.

விரைவான தீர்வு

வீரியப்படுத்தப்பட்ட மருந்துகள் அனைத்தும் வாய்மூலம் உட்கொள்ளுவதன் மூலமாகவோ அல்லது மூக்கால் நுகர்வது மூலமாகவோ தக்க பலனை விரைவில் அளிக்கிறது. ஆகவே, ஹோமியோபதியில் ஊசி மருந்துகள் இல்லை.

உண்மையான ஹோமியோபதி மருந்துகள் அல்லது ஹோமி யோபதியை முறையாகப் பயன்படுத்துபவர்கள் கண்டிப்பாக ஊசிகளைப் பயன்படுத்த மாட்டார்கள். மேலும் ஹோமியோபதி மருந்து கள் அனைத்தும் இனிப் புச் சுவையுள்ள சிறு மாத்திரைகளாகவோ (Pills) அல்லது தூளாகவோ (Powders) அல்லது சாராய சுவையுள்ள (Alcoholic) சொட்டு மருந்து களாகவோ கொடுக்கப் படுகிறது. ஆகவே, இம் மருந்துகள் அனைத்துத் தரப்பினராலும் குறிப்பாகக் குழந்தைகள் அனைவராலும் விரும்பி உட்கொள்ளப்படுகிறது.

அறுவைச் சிகிச்சை அறவே இல்லை

மற்ற மருத்துவத் துறையில் அறுவை சிகிச்சை மூலம்தான் குணப்படுத்த முடியும் என நம்பப்படும் பல நோய்களை நோயாளிகளின் குறிகளைக் கொண்டே சரியான ஹோமியோபதி மருந்துகளைக் கொடுப்பதன் மூலம் குணப்படுத்த முடிகிறது. 'டான்சி லைடிஸ்' (Tonsillitis) என அழைக்கப்படும் ''தொண்டைச் சதை வளர்ச்சி'' நோய், மூலம், பௌத்திரம், சிறுநீரகக்கல், கர்ப்ப பையில் சதை வளர்ச்சி, (Uterine fibroid) சினைப்பையில் நீர்கட்டி (Ovarian Cysts) போன்ற நோய்கள் பெரும்பாலும் ஹோமியோபதி மருந்துகள் மூலம் குணப் படுத்தப்படுகிறது.

உண்மைச் சம்பவம்

ஹோமியோபதியின் தனித் தன்மைகளை விளக்கக்கூடிய எங்கள் அனுபவம் ஒன்றை இங்கே கொடுக்கிறோம்.

ஒரு பெண்மணி தன்னுடைய பதினாறு வயதிலிருந்து அடிக்கடி தலைவலியினால் அவதியுற்று வந்தார். பல வலி நிவாரண மருந்துகளை உபயோகித்தும் குணமாகாததால் தன்னுடைய குடும்ப வைத்தியரை சந்தித்துச் சிகிச்சை பெற்றார். ஆனால், பலன் இல்லை. குடும்ப வைத்தியரின் ஆலோசனைப்படி மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து கொண்டார். மிகச் சிறிய அளவில் கிட்டப் பார்வை பாதிக்கப்பட்டதால் தலைவலி வந்திருக்கலாம் என எண்ணி, கண் மருத்துவர் கண்ணாடி அணியும்படி அறிவுறுத்தினார். பல மாதங்கள் கண்ணாடி அணிந்தும், தலைவலி அடிக்கடி வருவதில் எந்த மாற்றமும் இல்லை.

மீண்டும் குடும்ப வைத்தியரின் ஆலோசனைப்படி காது, மூக்கு, தொண்டை நிபுணரிடம் சிகிச்சைக்குச் சென்றார். அவர் இப்பெண்ணின் தலையை எக்ஸ்ரே எடுத்துப் பார்த்து கபால எலும்பில் உள்ள சைனஸ் எனும் பகுதியில் சீழ்கட்டி இருப்பதனால்தான் தலைவலி வந்துள்ளது என நோய் நிர்ணயம் செய்தார். இதனைக் குணப்படுத்த ஊசி மூலம் சைனஸில் (Sinus) உள்ள சீழை வெளியேற்றிவிட்டு சக்தி வாய்ந்த நுண்கிருமிக் கொல்லி மருந்துகள் (Antibiotics) எழுதிக் கொடுத்தார். இம்மருந்துகளைச்சாப்பிட்டபின் கிட்டத்தட்ட எட்டு நாட்களுக்குத் தலைவலி வரவில்லை. ஆனால் அடுத்த நாளே தலைவலி இன்னும் அதிகமான வேகத்துடன் வந்துவிட்டது. அடுத்து ஒரு எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில், 'சைனஸ் சீழ் ஏதும் இல்லாமல் நன்றாக இருந்தது. காது, மூக்கு, தொண்டை நிபுணர் 'சைனஸ் சைடிஸ்' வியாதியைக் குணப்படுத்திவிட்டதாக மகிழ்ச்சியுற்றார். ஆனால், நமது நோயாளியோ தலைவலியால் மேலும் அவதியுற்றார்.

பிறகு மூளையில் ஏதேனும் கோளாறு இருக்கலாம் என எண்ணி நரம்பியல் நிபுணரை அணுகினார். இ.இ.ஜி., ஸ்கேன் போன்ற பரிசோதனைகளால் மூளையில் எந்தப் பாதிப்பும் இல்லை எனத் தெரியவந்தது. அவருடைய சிகிச்சையும் பலனளிக்காததால் இது ஒரு மனநிலை நோய் என்ற முத்திரையுடன் மன நோய் நிபுணரிடம் அனுப்பப்பட்டார். அவர் கொடுத்த மருந்துகளால் இப்பெண்மணி எப்பொழுதும் உறக்கத்தில் ஆழ்ந்து தனது வேலைத்திறன் குறைந்து தனது நாட்களைக் கழிக்கலானார்.

பல ஆண்டுகள் கழித்து ஒரு நண்பரின் ஆலோசனைப்படி ஓமியோபதி மருத்துவம் பெற அவர் எங்களை அணுகினார். அவரின் தலைவலி எந்தச் சூழ்நிலையில் வருகிறது, வலியின் தன்மை என்ன, இதர நோய்க்குறிகள் என்னென்ன உள்ளன என அறிந்து அதற்காக ஒத்த மருந்துகளைக் கொடுத்தோம். ஆறு மாத கால சிகிச்சைக்குப்பின் அவர்குணமடைந்தார். இப்பொழுது ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக எந்த மருந்தும் உட்கொள்ளாமல் பூரண ஆரோக்கியத்துடன் உள்ளார்.

> ... உங்களின் பிணியைக் குணப்படுத்தக்கூடிய சக்தி உங்களிடமே உள்ளது. ஆனால், அதனை உங்கள் உடல் சரிவர பயன்படுத்திக் கொள்ளவில்லை...

ஒரு முறை இப்பெண்மணி எங்களிடம் இந்த வியாதியின் பெயர் என்ன? எப்படி வந்தது? உங்கள் மருந்து எதனைக் குணப்படுத்தி எனது தலைவலியைப் போக்கி யது எனக் கேட்டார். ''உங்களின் பிணியைக் குணப்படுத்தக்கூடியசக்தி உங்களிடமே உள்ளது. ஆனால், அதனை உங்கள் உடல் சரிவர பயன்படுத்திக் கொள்ள வில்லை. உங்களின் நோய்க் குறிகளுக்கு ஒத்த ஹோமியோபதி மருந்தைக் கொடுத்ததன் மூலம் உங்கள் உள்ளே உறங்கிக்கொண்டிருந்த நோய் நீக்கும் சக்தி விழித்துக்கொண்டு உங்கள் தலைவலியைக் குணப்படுத்திவிட்டது,'' எனப் பதிலலித்தோம்.

இதன் மூலம் ஹோமியோபதியின் சிறப்பு அம்சங்கள் பலவற்றை உணர முடியுமென எண்ணுகிறோம்.

ஹோமியோபதியின் எதிர்காலம்

அண்டைய மாநிலங்களாகிய கேரளம், ஆந்திரம், ஆகிய பகுதிகளில் ஹோமியோபதி

மருத்துவம் நல்ல நிலையில் வளர்ந்துள்ளது. அதுபோலவே, தமிழ்நாட்டில் இம் மருத்துவம் வளர்வதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. ஏனெனில், மற்ற மருத்துவ முறைகளைப் போல் அல்லாமல், ஹோமியோபதி மருத்துவம் எளிமையானது. இதில் அறுவை சிகிச்சை முறைகள், ஊசிபோடுதல் போன்றவை வழக்கில் இல்லை. இது, இலகுவானது. ஹோமியோபதி மருந்துகள் எதிர் விளைவோ அல்லது பக்க விளைவோ ஏற்படுத்துவதில்லை என்பதால் நோயாளிகளிடையே இம்மருத்துவம் நல்ல பெயரைப் பெற்று வருகிறது. நோய்களைக் குணப்படுத்துவதிலும் மற்ற மருத்துவ முறைகளைவிடச் சிறந்து விளங்குகிறது. செலவும் குறைவு. எனவே ஹோமியோபதி மருத்துவத்திற்குத் தமிழகத்தில் நல்ல எதிர்காலம் உள்ளது. •

தெரிந்து கொள்ளுங்கள்

ஒரு மாதத்தில் நீங்கள் 39 பாக்கெட் சிகரெட் புகைக்கிறீர்களா? அப்படியானால் ஒரு இரத்த நாளம் விரைவில் அடைப்பட்டுவிடும்; 45 பாக்கெட் புகைக்கிறீர்களா? ஆம் எனில் 2 இரத்த நாளங்கள் கெட்டுவிடும்; 97 பாக்கெட் பிடிக்கிறீர்களா? 3 இரத்த நாளங்களும் கெட்டு, யாரும் காப்பாற்ற முடியாதபடியான மாரடைப்புக்குச் சீக்கிரமே நீங்கள் ஆளாக நேரிடும் என்கிறார்கள் ரஷ்ய மருத்துவர்கள் - எச்சரிக்கை!

மற்ற புகையை நாம் எப்போதாவதுதான் சுவாசிக்க நேரிடுகிறது; ஆனால் அந்தப்புகை சிகரெட் புகைபோல நேரடியாக நம் நுரையீரலையோ, ரத்த நாளங்களையோ சென்று அடைந்து ஆபத்தை உண்டாக்குவதில்லை.

10 சிகரெட் புகைப்பவரின் அருகே ஒருநாள் முழுவதும் இருந்தீர்களானால் போதும்; நீங்கள் புகைக்காமலே இருந்தாலும், 2 சிகரெட் புகைத்த அளவிற்குச் சுவாசத்தால் நீங்கள் பாதிக்கப்படுவீர்கள்.

ஃபில்டர் சிகரெட்டால் ஆபத்தில்லை என்பது தவறு; உதடுகளும் பற்களும் வேண்டுமானால் கறைபடாமல் இருக்குமே தவிர, சாதாரண சிகரெட்டால் ஏற்படும் மற்றெல்லாப் பாதிப்புகளும் உண்டு.

பெண்கள் சிகரெட் பிடித்தால், அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தைகள் ஊனமுற்றவர்களாகப் பிறப்பார்கள்; புகைக்கும் பெண்களின் கருப்பையும் பெரிதும் பாதிக்கப்படும்.

விடாப்பிடியாக சிகரெட் புகைக்கும் ஆண்களுக்கு, முதுமை வரும் முன்பேமலட்டுத் தன்மை வந்துவிடும் வாய்ப்பு நிறைய இருக்கிறது.

– தேவிஸ்



மாணவர் பக்கம் மாணவர் பக்கம் மாணவர் பக்கம் மாணவர் பக்கம் மாணவர் பக்கம்

குப்பையிலிருந்து மின்சாரம்?

வீணாகக் குப்பைத்தொட்டிக்குப் போகும் பழத்தோலிலிருந்து மின்சாரம் தயாரிக்க முடியுமா?

சாணத்திலிருந்து எரிவாயு தயாரிப்பது நமக்கெல்லாம் தெரியும். ஆனால் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியுமா?

நகரங்களில் உள்ள சாக்கடைக் குழாய்களின் அடைப்பை ஆட்கள் இறங்காமலேயே போக்க முடியுமா?

முடியும்... முடியும்... எங்களால் முடியும் என்கிறார்கள் நம்மலூர் பள்ளிக்கூட மாணவ, மாணவிகள்.

கழிவுப்பொருளிலிருந்து மின்சாரம்
(Bio - Battery)

ஆரஞ்சு, எலுமிச்சை, வாழைப்பழத் தோல்களிலிருந்து, மின்சாரம் தயாரித்துக் கொண்டிருந்த ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா மேல் நிலைப்பள்ளியின் 9 ஆம் வகுப்பு மாணவி அபர்ணா பத்மாஷியை நாம் வியப்புடன் பார்த்தோம்.

பழத்தோல்களைப் போட்டுக் கலக்கி அதிலிருந்து சாற்றை எடுத்து ஒரு குடுவையில் வைத்திருக்கிறார். அதில் இரண்டு செப்புத் தகடுகளைப் பாதியளவுக்கு மூழ்க விட்டுள்ளார். அதன் இரு முனைகளையும் ஒரு வோல்டா மீட்டருடன் இணைக்கும் போது, அதிலிருந்து மின்சாரம் வருவதை ஓல்டா மீட்டரின் முள் அசைவிலிருந்து காணமுடிந்தது.

ஆச்சரியத்தோடு, பார்த்த நம்மிடம், பழத்தோலை சிறிய அளவில் பயன் படுத்திச் செய்வதால் குறைந்த அளவே மின்சாரம் தயாரிக்கமுடிகிறது. இதுவே பெரிய அளவிலும் தயாரிக்கலாம் என்றார்.

''அப்படியென்றால் கொத்தவால் சாவடியில் தினமும் டன்கணக்கில் பழத்தோல் கிடைக்கிறது, அதைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கலாமா என்றோம்.''

'ஓ' தாராளமாக, கொத்தவால் சாவடியில் வீணாகும், பழக்கழிவுகளிலிருந்தே அங்குள்ள அனைத்து விளக்குகளையும் எரிய வைக்கக் கூடிய அளவுக்கு மின்சாரம் தயாரிக்க முடியும் என்றார்.

சாணத்திலிருந்து மின்சாரம்

மாட்டுச் சாணத்தைப் பயன்படுத்தி சாண எரிவாயு தயாரிப்பதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால், தியாகராய நகரிலுள்ள புனித அகஸ்டின் மெட்ரிகுலேசன் பள்ளி மாணவிகள் புவனா (9ஆம் வகுப்பு), சத்யா (10ஆம் வகுப்பு) ஆகிய இருவரும் சாணத்திலிருந்து மின்சாரத்தைத் தயாரித்துக் காட்டினார்கள்.

நான்கு சிறு பாத்திரங்களில் சாணத்தைக் கரைத்து வைத்து அதிலிருந்து மின்கம்பிகளைச் செருகி மின்சாரம் தயாரிக்கிறார்கள். இதில் 5.4 வோல்ட் மின்சாரம் தயாரிக்க முடியும் என்று செய்து காட்டினார்கள்.

பாதாளச்சாக்கடை அடைப்பை எடுக்கும் கருவி.

சென்னை போன்ற பெரிய நகரங்களில் பாதாள சாக்கடைகள் இருக்கின்றன. இவைகளில் எங்காவது அடைத்துக் கொண்டால் அவ்வளவுதான், நகரமே நரகமாகி விடுகின்றது. இந்த அடைப்புக்களைச் சரி செய்ய, மாநகராட்சி ஊழியர்கள் சாக்கடைக் குழாய்களுக்குள் இறங்கிப் பணிபுரிகிறார்கள். அப்படிப்பட்ட சமயங்களில் ஏற்படும் விஷ வாயுக்களால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுகிறது. எனவே, இதைத் தடுக்க, ஆட்கள் இறங்காமலேயே சாக்கடைக் குழாய்களில் ஏற்படும் அடைப்புகளை வேதியியல் பொருட்களைக் கொண்டே போக்கிட முடியும் என்று ஜெய்கோபால் கரோடியா பள்ளி, இந்து வித்யாலயா பள்ளி மாணவிகள் சௌமியா (+2), தேவி (+ 2) மற்றும் அரவிந்த் (+1) ஆகியோர் ஒரு கருவியைச் செய்திருக்கிறார்கள். இந்தக் கருவியைப் பயன்படுத்தி சாக்கடை அடைப்பு களை நீக்கலாம் என்கிறார்கள். செயற்கையாக அங்கே இருந்த கருவியில் ஓர் அடைப்பை ஏற்படுத்தி அதனை நீக்கியும் காட்டினார்கள்.

நெருப்பு இல்லாமலும் புகையும், தீப்பெட்டி இல்லாமலும் தீ வரும்!

தீப்பெட்டி இல்லாமல் நெருப்பு உண்டாக்க முடியுமா? முடியுமே என்கிறார்கள்

கொசுத் தொல்லையா? விரட்ட இதோ ஒரு புதுச் செடி!

கொசுத் தொல்லையால் அவதியுற்ற மக்களுக்குக் கொசுவர்த்தி சுருள்கள் மற்றும் கொசு வில்லைகள் போன்றவை வந்தன. இவைகள் பக்கவிளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே, அவற்றை பயன்படுத்த வேண்டாம் என்று மருத்துவர்கள் ஒருபுறம் சிவப்புக் கொடி காட்டுகிறார்கள். கொசுக்கடியே பரவாயில்லை என்று பொதுமக்கள் தவிக்கின்றச் சூழ்நிலையில் எந்தவொரு பக்க விளைவும் இல்லாத ஒரு செடியை அறிவியல் அறிஞர்கள் அண்மையில் கண்டுபிடித்துள்ளார்கள். இச்செடிக்கு 'சிட்ரோஜ' என்று பெயரும் வைத்துள்ளனர்.

இச்செடியை அறைக்குள் வைத்து வளர்த்தால் அதிலிருந்து எலுமிச்சைப் பழ வாசனை வருகிறதாம். இது கொசுக்களை அண்ட விடாமல் விரட்டி விடுமாம். ஆந்திராவில் உள்ள ஒரு நிறுவனம் இதை விற்பனைக்காக இந்தியச் சந்தையில் அறிமுகப்படுத்தப் போகிறது. பார்க்கப்போனால் அறிவியல் உலகம் படிப்படியாக மூலிகைப் பக்கம் நோக்கி போய்க் கொண்டிருப்பதுபோல் தெரிகிறது அல்லவா?

சாணத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மின்கலம்

சென்னையைச் சேர்ந்த எம்.டபிள்யூ.ஏ. மெட்ரிகுலேசன் மாணவிகள் ஜலீல் பாத்திமா (+2), ஆத்திகா (+ 2), பெனசிர் அப்பாஸ் எனும் மாணவிகள்.

பொட்டாசியம் குளோரைடுடன், அடர் கந்தக அமிலத்தில் ஒரு பங்கு கலந்து ஒரு திரியின் நுனியில் சிறிது சக்கரையைப் போடுகிறார்கள். அவ்வளவுதான் படபட வென்று தீச்சுவாலை உருவாகிறது. நாம் அசந்து போனோம்.

ஈரோடு நவரசம் பள்ளி மாணவர்கள் மனோஜ்பாபு (+2), வினோத் (+2) ஆகியோர் ஒரு கம்ப்யூட்டரில் 48 நாடுகளின் விவரங்களை (பயோ டாட்டாக்களை) பதிவு செய்துவைத் துள்ளார்கள். நாம் எந்த நாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள நினைக்கிறோமோ அதற்காக கீ போர்டில் கைவைத்தால் போதும்! அந்த நாட்டின் அனைத்துப் புள்ளிவிவரங்களும் மானிட்டரில் வந்துவிடுகின்றன. இது இந்த மாணவர்கள் தயாரித்துள்ள புரோகிராம் என்கிறார்கள்.

இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி யைப் படிப்படியாக விளக்கும் காட்சிப் பொருள்கள், அணைகளைப் பற்றிச் சொல்லும் காட்சிப் பொருள்கள், தொலைபேசி, செல்லுலர், பேஜர் இவை எப்படிச் செயல்படுகின்றன என்பதை விளக்கப்படும் காட்சிப் பொருள்கள். சூரிய சக்தியிலிருந்து தானாகவே இயங்கும் தண்ணீர்க் குழாய் இப்படி எத்தனையோ செய்திகளைச் சிறுசிறு காட்சிப் பொருள்கள் மூலம் செய்து காட்டுகிறார்கள்.

அவ்வையின் நெல்லிக்கனி

சென்னை பாலலோக் மெட்ரிகுலேசன் பள்ளி மாணவர்கள் ஸ்ரீராம் (+2), ஜெயஸ்ரீ (+2) வசந்த் (+2) ஆகிய மூவரும் எந்தெந்த உணவுப் பண்டங்களில் எவ்வளவு வைட்டமின் சத்து இருக்கின்றன என்று கண்டுபிடித்துச் சொல் கிறார்கள்.

சாதாரண வைட்டமின் மாத்திரைகளை விட எலுமிச்சைசாற்றிலும், நெல்லிக்காயிலும் (வைட்டமின் சி) அஸ்கார்பிக் அமிலம் நிறைய

இருக்கிறது என்கிறார்கள். அதைக் கருவிகள் மூலம் நிரூபித்தும் காட்டுகிறார்கள். மனிதன் தினந்தோறும் ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டால் போதுமாம். அதில் அவ்வளவு சத்து இருக்கிற தாம். ஔவையார் பெற்ற நெல்லிக்கனியின் மகத்துவம் இப்போதுதான் புரிகிறது. அதுவும் அறிவியல்பூர்வமாக நிரூபித்துக்காட்டும் போது நம்பிக்கை இன்னும் கூடுகிறது.

புரோட்டின் மிகுந்த தண்ணீர்ப் பாசி

ஸ்பைகி ஸ்பைருலினா என்னும் தண்ணீர்ப் பாசி உணவாகப் பயன்படுகிறது. இதில் 70 சதவிகிதம் புரதச்சத்து மற்றும் வைட்டமின்சத்துக்கள் இருக்கின்றன. அதனால் புரதச் சத்துக்காக எங்கும் தேடி அலைய வேண்டிய தில்லை என்று சொல்கிறார்கள் ஜெய்கோபால் கரோடியா பள்ளி மாணவிகள்.

எமர்ஜென்சி விளக்கு

ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா பள்ளி மாணவிகள் எமர்ஜென்சி விளக்கைத் தயாரித்துள்ளனர். ரூ. 150 செலவில் இந்த விளக்கைத் தயாரிக்க முடியும் என்பதைச் செய்து காட்டியுள்ளனர். இந்தத் தயாரிப்புக்குத் தேவையான மூலப் பொருள்கள் கேன் (தண்ணீர் கேன்) 6 வோல்ட் பேட்டரி டிரான்சிஸ்டர், கேபாசிட்டர், ஸ்விட்சு, சிவப்பு விளக்கு ஆகியவை இதைக் கொண்டு தயாரிக்கப்படும் எமர்ஜென்சி விளக்கு எடைக் குறைவாகவும் விலை மலிவாகவும் இருக்கிறது.

சென்னை மேற்கு மாம்பலத்தில் ஜெய்கோபால் கரோடியா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இங்கு அக்டோபர் 24,25,26 ஆகிய மூன்று நாட்கள் மாநில அளவி லான கண்காட்சி ஒன்று நடந்தது. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள 60 பள்ளி களிலிருந்து மாணவ, மாணவிகள் கலந்து கொண்டார்கள்.

நிறைவு விழாவில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் அவர்கள் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார். கண்காட்சியின் அமைப்பாளரும் ஜெய்கோபால் கரோடியா இந்து வித்யாலயா மேல்நிலைப்பள்ளி முதல்வருமான திருமதி கிரிஜா சேஷாத்ரி அவர்கள். நம்மிடம் பேசும் போது, 'சென்னை, செங்கல்பட்டு, திருச்சி,

பழத்தோலிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் மின்கலம்

சேலம், ஈரோடு, மதுரை, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பள்ளிகள் உயிரியல், வேதியியல், கணிப்பொறி அறிவியல், இயற்பியல், பூகோளம் போன்ற பிரிவுகளில் இக் கண்காட்சியில் கலந்து கொண்டுள்ளன. கண்காட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த பள்ளிகளுக்குச் சுழற்கேடயமும், சுழற் கோப்பையும் வழங்கப்பட்டுள்ளன'' என்றார்.

இந்தியா ஒரு வல்லரசாகும் நாள் தொலைவில் இல்லை. அதை உலகுக்கு உணர்த்தும் நேரம் நெருங்கிவிட்டது என்பதைக் கட்டியம் கூறப் புறப்பட்டு விட்ட இந்த இளம் விஞ்ஞானிகளை எவராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. ஒரு நூல் கொடுத்தால் போதும், ஆடையாய்க் கையில் கொடுத்து விடும் அறிவும் ஆற்றலும் இவர்களிடையே இருப்பதை நாம் காணமுடிந்தது.

இந்தக் கண்காட்சியைப் பார்க்க பள்ளி மாணவ மாணவிகளும் பெரியவர்களும் நிறைய அளவில் வரிசையில் நின்று பார்த்ததை நம்மால் கவனிக்க முடிந்தது.

இவ்வளவு திறமையுள்ள இந்த விஞ்ஞானத்தளிர்களை முளையிலேயே கருக விட்டுவிடாமல் அவர்களுக்கு உற்சாகமூட்டி நாளைய சமுதாயத்துக்கு நல்வழிகாட்டப் பயன்படுத்திட வேண்டும் என்கிற உணர்வுக ளோடு வெளியே வந்தோம்.

- கேட்டி. புகழேந்தி
எம்.வி.எம். அசோகன்

நிலமடந்தை

முனைவர் சிலம்பொலி செல்லப்பன்

'செய்' என்பது நிலம். செய்யில் இட்ட வித்து முளைக்க நீர் இன்றியமையாதது; செழித்து வளரக் காற்றும், சூரிய ஒளியும் தேவை. நல்ல வித்தாயினும், பாறைமேல் இட்டால் பயிர் முளைக்குமா? சிறந்த நிலமாயினும் சொத்தை வித்தினை வித்தினால் பலனேது? பண்பட்ட நிலத்தில் பொறுக்கு விதைகளையிட்டாலும், நீரில்லா விட்டால் அவை முளைக்கமாட்டா. முளைத்த பயிருக்குச் சூரிய ஒளி இல்லை யேல், அது வெளுத்து நாளடைவில் அழிந்துவிடும். அனைத்தும் பொருந்திய நிலையில் முளைக்கும் பயிரே செழித்து வளர்ந்து சிறந்த பயனை நல்கும்.

வள்ளுவரின் பண்பட்ட உள்ளமாகிய நிலத்தில் வதிந்த கருத்து வித்துக்கள் அவருடைய பட்டறிவாகிய நீர் பட்டமையால், குறட்பயிர்களாக முளைத்தன. அவருடைய புலமை ஒளிபெற்று, அக் குறட்பயிர்கள் உரத்துடன் வளர்ந்து உலகுக்கு நலம் விளைத்தன. வள்ளுவரின் உள்ளச் செய்யில் தோன்றி வளர்ந்த குறள், உலகச் செய் கொண்டு விளக்கும் கருத்துக்களை இனிக் காணலாம்.

ஒரு பாத்தியில் பயிர்கள் வளர்ந்து வருகின்றன. நீர் பாய்ந்து, களையெடுத்துக் கொத்திவிட்டமையால் நிலம் புழுதி படிந்த நிலையில் இருக்கிறது. அடுத்து நீர் பாய்ச்சப்படுவதை எதிர்பார்த்துள்ள நேரம், அந்நிலையில் நீர் பாய்ந்தால் பயிரின் வளர்ச்சி மகிழ்வூட்டக் கூடியதாய் இருக்கும். தேவைக்கு மேல் நீர் பாய்ந்து சதுப்புற்ற நிலத்தில் மேலும் நீரைப் பாய்ச்சினால் பயிர் அழுகிக் கெடும் அளவுக்கு மிஞ்சி, நிலம் வறண்டுபோனாலும் பயிர் கருகிவிடும். எதிர்நோக்கி நிற்கும் தருணத்தில் பாய்ச்சப் படும் நீர்தான் வளர்ச்சிக்கு உதவும். அவை அறிந்து பேச வேண்டிய இன்றிய மையாமையை வலியுறுத்த வள்ளுவர் வளரும் பயிருக்கு நீர் பாய்ச்சும் நிலையைச் சுட்டிக்காட்டுகிறார்.

பேசுவோர் அவையின் தன்மையை அறிந்து, ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்லவேண்டும். அவையறியாது பேசுவோரின் பேச்சு, பேசியும் பேசப்படாத தேயாகும். அறிவிற் சிறந்தவர்முன் பேசுவோர், தாமும் அறிவிற் சிறந்தோராய்ப் பேச வேண்டும். அறிவில் இளையார்முன் பேசும்போதோ, தாமும் அந்நிலை நின்றே பேசவேண்டும். அவர்கட்குப் புரியாத உயர்ந்த கருத்துக்களை அங்கு பேசுவதால் பயன் ஏதுமில்லை. தாமே உணர்ந்து கொள்ளும் தன்மையுடையவர்முன் கற்றவர் பேசுதல், வளரும் பயிர் உள்ள பாத்தியில் உரிய வேளையில் நீரைச் சொரிந்தது போலாகும். நீரை எதிர்பார்த்திருந்த பயிருக்கு நீர் கிடைக்கிறது; சேர்ந்த நீரும் பயிர் வளரப் பயன்படுகிறது.

"உயர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று"

மக்களில் தீயவர்கள், கயவர்கள் இருப்பார்கள். கழுத்திலிருக்கும் நகைக்காகக் குழந்தையைக் கொல்லும் கயமைத்தனம் நிறைந்தோரும் மனித வடிவில் உலவு வதுண்டு. அத்தகையோரிடம் இரக்கம் காட்டித் தண்டிக்காது விட்டுவிட்டால் சமுதாயம் பாழ்பட்டுவிடும். வயலில் பசுமை யான பயிரினூடே முளைக்கும் களையும், பயிரைப் போலவே பசுமையாகவும் செழிப்பாகவும் தோற்றமளிக்கும். பசுமைத் தோற்றத்தால் பயிரைப் போன்று இருக்கும் தன்மை கொண்டு களையைக் களையாது விட்டுவிட்டால், அது வளரத் தொடங்கி, நாளடைவில் பயிரையே நசுக்கிவிடும்.

பயிருக்கிடையே காணப்படும் களையை அகற்றுவதுபோலச் சமுதாயத்தில் தோன்றும் கொடியவர்களைக் களைய வேண்டியது நல்லாட்சியின் அவசியச் செயலாகும்.

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்"

கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்ற களையைக் களைவதற்கு நிகரான செயலாகும் என்பது இதன் பொருள்.

வள்ளுவர், மக்களிடையே குலம் பிரிக் கிறார். உயர்ந்த குலம் என்றும் தாழ்ந்த குலம் என்றும் பேதப்படுத்துகிறார். உலக ஒருமைப்பாடு பற்றிப் பேசிய அவ் வொப்பில், புலவன் குலப் பாகுபாடு பற்றிக் கூறியிருப்பானா என்ற ஐயம் உடனே அனைவர்க்கும் தோன்றும்.

"சாதிகள் இல்லையடி பாப்பா- குலந்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

- என்றார் பாரதியார்.

வள்ளுவர் பிரிக்கும் குலம் இச்சாதி சமயத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல! "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்று முழங்கிய முதற் புரட்சியாளர் அவர்.

"சாதியிரண்டொழிய வேறில்லை......"

"இட்டார் பெரியோர்; இடாதோர் இழி குலத்தோர்"

-என்றாள் அறநெறி கூறிய ஔவைப் பாட்டி. கொடையாளர் உயர் சாதியினர்; இடமுடிந்தும் இட இடந்தரா உள்ள முடையோர் இழி சாதியினர்; இஃது ஔவையின் கருத்து. குலத்தைப் பிரிக்க ஔவை கொண்ட அளவுகோல் கொடைத் தன்மை; இதற்கு வள்ளுவர் கொள்ளும் அளவுகோலோ நமக்கு வியப்பூட்டுவதாக உள்ளது!

அவர் நாவலர் அல்லவா? எனவே ஒருவனுடைய நாக்கைக் கொண்டே இனம் பிரிக்கிறார். எவ்வாறு? எந்த நாக்கு உயர்ந்த, சீரிய அறிவு நலம் சான்ற சொற்களை வெளிப்படுத்துகின்றதோ, அந்நாவுக்குரியவன் உயர் குலத்தவன், கீழ்த் தரமான, முறையற்ற கேடான, கயமைத் தன்மை நிறைந்த சொற்களை எவனுடைய நா பேசுகிறதோ, அவன் கீழ்க் குலத்தவன். இது வள்ளுவர் கருத்து.

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்."

முளைத்து வரும் வித்து, நிலத்தின் தன்மையை - அது சத்துள்ள நிலமா, சத்தற்ற நிலமா என்ற கூறுபாட்டைக் காட்டும். அதேபோல், ஒருவனுடைய வாயிலிருந்து பிறக்கும் சொல் அவனுடைய குடியைக் காட்டும். இதன் பொருள் என்ன? செம்மையான சொற்களைக் கூறுவோர் உயர்ந்த குடியினர். நலம் பயக்காத மொழி பேசுவோர் தாழ்ந்த குடியினர் என்ப தேயாம்.

சொற்களைக் கூறவேண்டிய முறையைப் பற்றித் தெய்வப் புலவர் வலியுறுத்திக் கூறியுள்ள கருத்து ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று. நம் வாயிலிருந்து

பிறக்கும் சொல் தரும் பொருள் என்ன, அவ்வாறு பேசுவது முறைதானா, நம்முடைய பண்பாட்டுக்கு அது ஏற்றதா, என்பன போன்றவற்றைச் சிந்தியாமலேயே பல வேலைகளில் நாம் பேசிவிடுகிறோம்.

திரைப்பட விளம்பரங்களிலும், பத்திரிக்கைகளிலும், "ரசிகர்களின் கனவுலகக் கன்னி... நடிப்பது" என்ற எழுத்துக்களைக் காணுகிறோம். சிந்தித்துப் பார்த்தால் இதன் பொருள் எவ்வளவு கேவலமானது? உறங்குபவன் தனக்கு உரியவள் அல்லாத ஒருத்தியைக் கனவிலே கண்டு துயில்கிறான் என்றால், அது எவ்வகைப் பண்பாகும்? பொருள் பற்றிச் சிந்தியாமலேயே எழுதிவிடுகிறோம், பேசிவிடுகிறோம். இது தவிர்க்கப்பட வேண்டும்.

உயர்ந்த நிலையிலே இருப்பவர்களே ஆயினும், செல்வர்கள் ஆயினும், செல்வாக்கு மிகுந்தவர் ஆயினும், தகுதியற்ற சொற்களைப் பேசும் நாவைக் கொண்டிருப்பின், அவர்கள் தாழ்ந்தவரேயாவர்! இழிவான சொற்களைக் கூறுவோர் பல பட்டங்கள் பெற்றவரேயாயினும், அவர்கள் இழிந்த குலத்தவரே என்பது வள்ளுவர் கருத்து. பண்புநலம் கனியப் பேசும் பழக்கத்தை வள்ளுவரின் இக்குறள் வலியுறுத்துகிறது. நாட்டு மக்கள் பின்பற்றி ஒழுகவேண்டிய மிகச்சிற[illegible] இது.

"மக்கள் பொறையுடையவர்களாக இருக்கவேண்டும். பிறர் செய்யும் தீங்கையும் பொறுக்கவேண்டும். அத்தீங்கை நினைவில் கொள்ளாது மறந்து விடுதல் பொறுத்தலைவிட நல்லதாகும்" என்பதனைத் திருவள்ளுவர் நிலத்தைக்கொண்டு விளக்குகிறார். நிலத்தை அகழ்கின்றார்கள்; தனக்கு ஊறு செய்கிறார்களே என்று அந்நிலம் வெகுண்டு அவர்களை அழிப்பதில்லை.

மாறாக, அகழ்வோர் நின்று கொள்ள இடத்தை நல்குகிறது. அது மட்டுமா? இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கிறது. தோண்டத் தோண்டத் தோண்டுபவர்கட்குப் பல பயனுள்ள பொருள்களை நல்குகிறது. நீரைத் தருகிறது; நிலக்கரியைத் தருகிறது; தங்கத்தைத் தருகிறது; எண்ணெய்யைத் தருகிறது; மேலும் ஏற்றமிகு பொருள்கள் எவ்வளவோ தருகிறது. அகழ்வாரைத் தாங்குவதோடு, அவர்கட்கு நன்மையையும் நல்கும் நிலத்தின் இந்தப் பண்பு வள்ளுவரால் பெரிதும் பாராட்டப்படுகிறது.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வார் பொறுத்தல் தலை"

-நிலத்தின் மீது நின்றுகொண்டு அதே நிலத்தை வெட்டுவது போன்றே, நம்மால் புரக்கப்படுபவர்களே நம்மை இகழ்ந்து பேசவும் நேரலாம். அதை நாம் பொறுமையுடன் தாங்கவேண்டும். ஒருவன் அகழ்வதினாலேயே நிலத்துக்கு அழிவு ஏற்பட்டு விடுவதில்லை. அகழ்ந்த அந்த இடம், வாளியாக, கூவலாக மாறிச் செம்மை பெறுகிறது. பிறர் இகழ்வதைப் பொறுமையுடன் ஏற்றால், அது நமக்குப் பெருமையாகவே முடியும்.

விசும்பில் உள்ள நீருக்கு நிறம், மணம், சுவை கிடையாது. அது கீழே வீழ்ந்து நிலத்தில் படியும்போது, சேர்ந்துள்ள நிலத்தின் தன்மைக்கேற்ப, நிறம், சுவை முதலியன மாறுபடுகின்றன. அதுபோன்றே ஒருவரின் தனித்த இயல்பான அறிவு சேரும்

இனத்திற்கே மாறுபடும் என்பதால், சிற்றினம் கூடாது என வள்ளுவர் வலியுறுத்துகிறார். நல்லினம் சேர்ந்தால் நன்மை கிட்டும், பூவோடு சேரும்போது நாரும் மணம் பெறுதல் போல! சிற்றினம் சேர்ந்தாலோ அனைத்தும் அழியும், சாக்கடையிற் சேரும் பன்னீரும் சாக்கடையாவது போல; ஆகவே ஆராய்ந்து இனம் சேரவேண்டும் என்பது அறிவிக்கப்படுகிறது.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு"

களர் நிலம் விளைவுக்கு ஒவ்வாதது; வித்திய வித்தை முளைக்கவொட்டாமற் செய்வது. நிலம் என்ற பெயரில் ஒரு பரப்பைக் கொண்டிருப்பது தவிர, அதனால் பயனேதுமில்லை. கல்லாதாரை வள்ளுவர் களர் நிலத்தோடு ஒப்பிடுகிறார். அவர்கள் பிறப்பு எவ்விதத்திலும் பயனற்றது. இருந்தும் அவர்கள் இல்லாதவர்களே! களர் நிலத்தைப்போல அவர்களால் வடிவோடு உலவுவது தவிர, சமுகத்திற்குப் பயனில்லை,

"உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்."

-நாட்டில் கல்லாமையாகிய களரை இல்லாமையாக்கி, அதை நலம் கொழிக்கும் நன்செய்யாய் மாற்றும் பணியில் அரசன் அயராது உழைக்க வேண்டுமென வள்ளுவர் அவாவுகிறார்.

வலிமையும் பெருமையும் உடையவராயினும் நமக்கு வாய்ப்பில்லாத இடத்தில் இருந்தால் மிக எளியவராலும் வெல்லப் பட்டு விடுவார். ஆண்மை செறிந்த யானையாயினும் கால் புதையக்கூடிய வளர் நிலத்தில் சிக்கிக்கொண்டால், கேவலம், நரி கூட அதைத் துன்புறுத்தி மகிழும்.

"காலாழ் களரில் நரியடும் கண்ணஞ்சா
வேலாள் முகத்த களிறு".

-எவ்வளவு வலிமை பொருந்தியவராயினும் ஏற்ற காலமும் இடமும் அமையாவிடில், எடுத்த செயலைச் சிறப்புற முடிக்க முடியாதவராகி விடுவார்.

சறுக்கு நிலங்களில் கவனமுடன் நடக்க வேண்டும்; இன்றேல் வழுக்கி விழ நேரிடும்.

அங்கு ஒரு கோலை ஊன்றி நடப்பது பாதுகாப்பாகும். வழுக்கல் நிலத்தில் கோல் ஊன்றி நடப்பதைப் பார்த்த வள்ளுவர், அதுகொண்டு ஒரு அரிய கருத்தை உரைக்கிறார். வாழ்க்கை ஒரு நீண்ட பயணம். அதில் நம்மை இடர வைக்கும் இடங்களும் இருக்கலாம். அவற்றைக் கடக்கும்போது உயர்ந்தோர்களின் மொழியினை ஊன்று கோலாகக் கொண்டால் இடரேதும் நேராது.

"இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்க முடையார்வாய்ச் சொல்."

விளைநிலத்தைக் கவனித்துப் பார்த்துப் பருவத்தில் செய்ய வேண்டியன செய்ய

நாட்டின் பெருமையை வளர்க்கக் கல்வி அத்யாவசியம். அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாகவும் வாழத் தொழில் வளர்ச்சி அவசியம்.

—தந்தை பெரியார்



வேண்டும். உழுதல், எருப்பெய்தல், களை கட்டல், நீர்பாய்ச்சல், காத்தல் என்றவை களை முறைப்படி ஆற்ற வேண்டும். அவ்வாறு அடுத்தன செய்யாது சோம்பியிருப்பானாயின் நிலம், பயனைத் தராது.

நிறைகாத்து ஒழுகும் புகழ்புரிந்த இல்லாளைப் பெற்ற ஒருவன் அவளை நாடோறும் பேணி, நகைமுகம் காட்டி, நலம் புனைந்துரைத்து, உளம் மகிழச் செய்வானேல் அவளும், கூடிமுயங்கிக் குறைவற்ற இன்பம் தருவாள். அவளைப் பிரிந்து காணாதிருப்பினோ, ஊடிக் கொள்வாள். இஃது இல்லத்தில் நிகழ்வது.

அதுபோன்று, நிலமங்கையை மணந்துள்ள உழவமகனும் நாடொறும் அவளைக்

FINANCE (PENSION) DEPARTMENT

G.O. No.463, Dated 31st July 1996
(Thadhu, Aadi 16, Thiruvalluvar Aandu 2027)

PENSION - Classification of Dearness Allowances as Dearness Pay for purpose of Death Gratuity/Retirement Gratuity and raising the maximum limit of Gratuity from Rs.1 lakh to Rs.2.50 lakh - Revised Orders - Issued.

READ - the following:-

1. G.O. Ms. No.764, Finance (Pension) Department, dated 27.9.1995.
2. Government Letter No.68513/Pension/95-1, Finance, dated 13.11.1995

ORDER:

In the Government Order read above, as amended in the Government letter read above, orders have been issued that Dearness Allowance as indicated below (inclusive of the Dearness Pay at 20% of pay sanctioned in G.O.Ms.No.3, Finance (Pension) dated 3.1.1994) be taken into account along with pay for calculating retirement gratuity in respect of the employees retiring on or after 1.10.1995. This Dearness Pay shall also be applicable to the cases of death gratuity in respect of those who die in harness on or after 1.10.1995.

Pay Range	Dearness Allowance to be added to pay for calculating Gratuity
(1)	(2)
1. Basic Pay upto Rs.3,500/- per mensem	97% of pay
2. Basic Pay above Rs.3,500/- per mensem and upto Rs.6000/- per mensum	73% of pay subject to a minimum of Rs.3395/- and maximum of Rs.4161/-

2. The Government have also issued orders in the Government Order read above enhancing the existing ceiling on the maximum amount of retirement gratuity/death gratuity from Rs.1.00 lakh to Rs.2.50 lakhs with effect from 1.10.1995.

3. It was also ordered in the said Government Order that the said orders shall apply to all State Government employees including the teaching and non-teaching staff working under local bodies and aided educational Institutions, but excluding employees governed by University Grants Commission, All India Council of Technical Education scales of pay and the Teachers/Physical Directors/Librarians in Government and aided Polytechnics and Special Diploma Institutions.

4. The Government have now decided to extend the orders issued in the Government Order read above with retrospective effect from 1.4.1995. Accordingly, the Government direct that the orders issued in the Government Order read above on merger of Dearness Allowance for calculating the retirement gratuity/death gratuity and enhancing the maximum limit of retirement gratuity/death gratuity from Rs.1.00 lakh to Rs.2.50 lakhs in respect of those who retired/died while in service on or after 1.10.1995 be given retrospective effect from 1.4.1995.

5. The Accountant General is requested to rework the retirement gratuity/death gratuity in respect of employees retired/died on or after 1.4.1995 and issue authorisation for drawal of difference in gratuity without waiting for proposals from the pension sanctioning authorities.

(BY ORDER OF THE GOVERNOR)

S. GURUMURTHI,
SECRETARY TO GOVERNMENT

பிறகட்சித் தலைவர்களுடன் தொடர்பு!

- திரு. எம். பக்தவத்சலம்

(முன்னாள் முதல்வர்)

பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சுமுகமான சமூக உறவு கொண்டிருப்பதில் தவறு ஒன்றுமில்லை. இதைப் பிரமாதப்படுத்துவதும், கற்பனையான குற்றச்சாட்டுக்களைக் கூறி இழிவுபடுத்த முயற்சிப்பதும் சரியல்ல.

ஒருவர் தமது கட்சிக் கொள்கைகளுக்கு முரணாகப் பிற கட்சிகளைச் சேர்ந்தவர்களுடன் தொடர்பு கொள்ளக் கூடாது. தமது கட்சிக் கொள்கைகளை எதிர்ப்பவர்களுடன் மறைமுகமாக உறவு வைத்துக் கொள்வதை நான் எதிர்க்கிறேன். கட்சிக்கும், கட்சிக் கொள்கைகளுக்கும் இவ்வாறு துரோகம் செய்வது மன்னிக்கக் கூடாத தவறு என்றே நான் கருதுகிறேன். ஆனால் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களிடையே சமூக உறவுகள் கெட வேண்டும் என்று கூறுவதில் அர்த்தமில்லை.

முன்பு ஒரு சமயம் நாங்கள் டில்லிக்குச் சென்றிருந்த போது, மத்திய கவுன்சில் நடக்கும் இடத்தைப் பார்க்கப் போயிருந்தோம். ஏ. ராமசாமி முதலியார் மத்திய கவுன்சிலின் காரியதரிசியாக அப்போது இருந்தார். அவர் எங்களை வரவேற்றார்.



அவர் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர். ஆனால் எங்களை மிக்க அன்புடன் அவர் வரவேற்று உபசரித்தார்.

பி.டி. ராஜன் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்தவர். அவர் எனது மனைவியின் சகோதரியைத் திருமணம் செய்து கொண்டவர். ராஜன் எனக்குச் சொந்தக்காரர் என்பதால், அவர் வேறு கட்சியைச் சேர்ந்தவராக இருந்தும் அவருக்கு நான் சலுகை காட்டுகிறேன் என்று சிலர் பிரசாரம் செய்தார்கள்.

உறவினரான அவரை நான் மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராக்கப் போகிறேன் என்றே பேசினார்கள்.

காமராஜரே இது பற்றி என்னிடம் ஒரு முறை கேட்டார். "ராஜனைப் போடப் போகிறீர்களா?" என்று அவர் கேட்டார். இல்லை என்று நான் பதிலளித்தேன். தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரையே மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக நியமித்தேன்.

ராஜனின் குழந்தைகள் என்னிடம் மிகவும் அன்பு கொண்டவர்கள். ஆனால் அவர்களுடைய வீட்டிற்கு எப்போதாவதுதான் நான் செல்வேன்.

நாங்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், நெருங்கிய உறவினர்கள் என்றாலும் அரசியலில் வெவ்வேறான பாதைகளில் சென்றவர்கள். அரசியலில் ராஜனுக்கு நான் என்றைக்கும் விட்டுக் கொடுத்ததில்லை. அவரை எதிர்த்துப் பலமுறை பேசியிருக்கிறேன்.

1967-ஆம் வருடம் நடந்த பொதுத்தேர்தலில் ராஜனின் மகன் பழனிவேல் ராஜன் தி.மு.க.வின் சார்பில் சட்டமன்றத்திற்குப் போட்டியிட்டார். அவர் போட்டியிட்ட தொகுதிக்கு நான் சென்று அவரை எதிர்த்துக் கூட்டங்களில் பேசினேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை நான் கடுமையாக எதிர்த்திருக்கிறேன். ஆனால் அண்ணாதுரையின் பிறந்த தின விழாவையொட்டிய ஒரு மலருக்கு எனது கட்டுரையைக் கோரியபோது மறுப்பு தெரிவிக்காமல் தந்தேன். பிறகு, எனது பிறந்த நாளையொட்டி சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில் அண்ணாதுரை கலந்து கொண்டு என்னைப் பாராட்டிப் பேசினார்.

சட்டமன்றத்தில் கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, திருக்குவளை என்ற இடத்தில் அவரது தாயின் பெயரில் கட்டப்பட்ட



கண்டு- உர உணவு வேண்டுமா, நீராடையை நிறைவுறப் பெற்றிருக்கிறாளா; இல்லக் காப்பாகிய வேலை ஊன்றி உள்ளதா என்பன போன்ற அவள் தேவை யறிந்து உதவவேண்டும். இன்றேல் அவளும் 'தன்னுடைய அலங்காரமாகிய பயிர்க் கோலம்' அழிந்து ஊடிவிடுவாள். அதன் விளைவு, விளைவு கிடைக்காது. மனை யாளின் நலம் கவனியாதவன் போக மிழக்கிறான்; அது போன்றே நிலத்தைக் கவனியாதவனும் போகமிழக்கிறான்.

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து இல்லாளின் ஊடி விடும்".

நம்மிடம் ஏதுமில்லை என்று ஏங்கி யிருப்பாரைக் கண்டு நிலமங்கை சிரிக் கிறாள். இறகால் உடலை நீவிடில் நம் உடலெங்கும் மயிர் சிலிர்க்கும். அதேபோல், கொழுமுனை பட்டால் போதும், நிலமங்கை கூசி உடல் குழைந்து, பயிராகிய மயிர் சிலிர்ப்பாள். இதையறிந்து உழைத்து, உயர்வு தேடாது, சோம்பித் திரிபவர்களைப் பார்த்து இரக்கப்படும் நிலமங்கை சிரிக்காது என் செய்வாள்!

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்".

-இக்குறளுக்கு ஓர் அரிய விளக்கம் போல அமைந்துள்ளது, தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஒரு கவியரங்கப் பாடல்.

"எதுவும் இல்லையென ஏங்கியிருப்பாரைக்
கண்டு,
எது இல்லை என் மகனே!
வெடித்திருக்கும் என் வயிற்றில் மண்வளம்
பார்;
வெகுதூரம் அகழ்ந்திட்டால் வைரமணி
வழங்கிடுவேன்;
வெகுளியாய் வாழாமல் வேளாண்குடி
பெருக்கிடுக,
எனச் சிரித்து நிலமடந்தை நிற்கின்றாள்!
உழவர் திருமகனே! உணர்ந்திடுக
புவிச் சிரிப்பு
உழைத்துப் பெற்றிடுக உடனடியாய்ப்
புதுச் செழிப்பு!"

நம்பிக்கை மூலமாக, மனிதனால் மலையைக் கூட அசைக்க முடியும்.

–காந்தியடிகள்

கைத்தறிக் கூட்டுறவாளர்

வே. குணாளன், இ.ஆ.ப.,

இயக்குநர் - கைத்தறி துணிநூல் துறை

தமிழ்நாட்டின் பாரம்பரியக் கலாச் சாரத்தில் கைத்தறித் தொழில் இன்றிய மையாத பங்கு வகிக்கின்றது என்பதுடன், துணிநூல் தொழில் துறையில் தமிழ்நாடு ஒரு தொன்மையான மாநிலமாக உள்ளது. இதில் கைத்தறிகள், விசைத்தறிகள் மற்றும் ஆலைகள் உள்ளடங்கியுள்ளன. இந்த மூன்று துறைகளும் செம்மையாக வளர்ந்து வருவதுடன், மாநில அரசு இம்மூன்று துறை களும் எந்தவிதப் பாகுபாடும் இன்றி வளர்ச்சி அடைவதற்குத் தேவையான உதவிகளை அளித்துவருகின்றது.

தமிழ்நாடு அரசு கைத்தறி நெசவாளரின் நலனிற்கான வெவ்வேறு திட்டங்களை வகுத்து, செயலாக்கம் செய்து நடைமுறைப் படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. தமிழ்நாடு அரசு மத்திய அரசின் பல்வேறு வகை வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களை முனைப்புடனும் செவ்வனேயும் செயல் படுத்தி, இதர மாநில அரசுகளுக்கு முன் மாதிரியாகத் திகழ்வதுடன், மத்திய அரசு நடத்தும் கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகள் ஏற்படுத் தும் திட்டத்தினைச் செயலாக்குவதில் தனித் தன்மை வகிக்கிறது.

கைத்தறி நெசவாளர்களின் நலனைப் பாதுகாப்பதிலும், மண்ணின் இப்புராதனச் செயல்திறனைப் பாதுகாத்து ஆக்கபூர்வ மாக்குவதிலும் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொணர்ந்த நெசவாளருக்குக் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின்கீழ் தாராள உதவியளித்து அவர்களை மேம்பாடு அடையச் செய்வதிலும் கைத்தறி மற்றும் துணிநூல் இன்றியமையாத பங்கு வகிக்கிறது. சுமார் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட தறிகள் 1439 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் எண்ணிக்கை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொணரப் பட்டுள்ளன.

கூட்டுறவு அமைப்பில் கொணரப்பட்ட தறிகள் கைத்தறியில் அனைத்து ரகங் களையும் உற்பத்தி செய்வதுடன், இச் சங்கங்கள் 1995-96-இல் ரூ.435.76 கோடி மதிப்புள்ள 1233.86 இலட்சம் மீட்டர்கள் உற்பத்தி செய்து ரூ.455.66 கோடி மதிப்புள்ள 1193.78 இலட்சம் மீட்டர்கள் விற்பனை செய்துள்ளன.

மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் 1995-96-ல் பெற்ற நடைமுறை மூலதனம் ரூ.359.93 கோடிகளாகும். ரூ.400 இலட்சம் வட்டி மான்யமாக அளிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு, கைத்தறித் தொழிலிலுள்ள சிரமங்களைச் சீர்செய்வதற்கான விரிவான திட்டத்தின்கீழ் கைத்தறி வளர்ச்சி மையங்கள் மற்றும் தரமான சாயச்சாலைகளை ஏற் படுத்துகின்றது. 1995-96-ல் தமிழ்நாட்டில் 99 கைத்தறி வளர்ச்சி மையங்களும் 5 தரமான சாயச்சாலைகளும் அமைப்பதற்காக மத்திய அரசு ரூ.233.36 இலட்சம் நிதியுதவி அளித் துள்ளது.

☆

கைத்தறி ஆடை மக்களை ஒளி பொங்கச் செய்வதுபோல், நெசவாளர்களின் வாழ்க் கையில் ஒளி பொங்கச் செய்ய வேண்டியது நம் கடமை. உழவுக்கு அடுத்த இடம், கைத்தறித் தொழில் பெற்றிருக் கிறது. இதனைக் காத்திடுவது நமது கடமை.

–பேரறிஞர் அண்ணா

ஒரு பிரசவ விடுதியைத் திறந்துவைக்க வேண்டும் என்று என்னை அழைத்தார். அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு நான் சென்றேன். ஆனால் சட்டமன்றத்தில் கருணாநிதி எங்களது ஆட்சி பற்றிக் கடுமையாகப் பேசுவார். நானும் சுடச்சுட அவருக்கு பதில் தருவேன்.

1970-ஆம் வருடம் தாம்பரத்தில் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் பேச வேண்டும் என்று என்னை அழைத்தார்கள். அழைப்பை ஏற்றுக் கொண்டேன். முதலமைச்சர் என்ற வகையில் கருணாநிதியைப் பாராட்டிப் பேசினேன். அதில் தவறு ஒன்றுமில்லை. ஏதோ ஒன்றை எதிர்பார்த்து நான் அந்த விழாவில் பேசினேன் என்று சிலர் பிரசாரம் செய்தார்கள். கருணாநிதிகு பக்த வத்ஸலம் 'சலாம்' போடு கிறார் என்று ஒரு பத்திரிகை எழுதியது.

இதுவா கீழ்த்தரமான அரசியல்? பிறந்த நாள் வாழ்த்து தெரிவிப்பதில் என்ன தவறு? கருணாநிதி சார்ந்துள்ள தி.மு.க.வின் கொள்கைகளை நான் ஆதரித்தேனா? அவற்றை ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கூறினேனா?

கொள்கை அளவில் ஒரு சந்தர்ப்பத்திலும் நான் விட்டுக் கொடுத்தது கிடையாதே? திமுகவின் இருமொழிக் கொள்கையை நான் தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறேன். மாநில சுயாட்சி, தனிக்கொடி கோரிக்கை, மதுவிலக்கு, காவிரி நீர் பிரச்சினை முதலியவற்றில் தி.மு.க.வின் நிலையை நான் எதிர்த்திருக்கிறேன். எனவே கொள்கை சம்பந்தப்பட்ட வரையில் நான் ஒருபோதும் விட்டுக் கொடுத்ததில்லை.

ஆனால், திருமணம் போன்ற குடும்ப நிகழ்ச்சிகளிலும் பிறந்த நாள் விழா போன்ற பொதுப்படையான நிகழ்ச்சிகளிலும் தி.மு.க. அல்லது இதர கட்சிகளைச் சேர்ந்தவர்களின் அழைப்பை ஏற்றுக் கலந்து கொள்ளுவதில் தவறு எதுவும் இல்லை.

இந்தியா உடைய வேண்டும் என்று பேசுபவர் ஈ.வெ.ரா. காந்தீய நெறிக்கு நூற்றுக்கு நூறு அவர் எதிரானவர். அவருடைய சிலையைக் காமராஜ் திறந்து வைத்தார்.

அண்ணாதுரையே, சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது காமராஜைத் தமது தொகுதியில் தண்டலம் என்ற இடத்திற்கு வருமாறு அழைத்தார். காமராஜ் சென்றார். தாரை, தப்பட்டைகள் முழங்க வரவேற்பு தரப்பட்டது. காமராஜ் அதை ஏற்றுக்கொண்டார்.

எனவே, கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களில் விட்டுக் கொடுக்காமல் பிறகட்சிகளைச் சேர்ந்தவர்களுடன் சமூக உறவுகளை வைத்துக் கொள்ளுவதில் தவறு எதுவும் இல்லை. அந்த உறவுக்கு அரசியல் அர்த்தம் கற்பிப்பது தான் தவறு.

-'எனது நினைவுகள்' என்ற நூலிலிருந்து.

மறைந்த இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி நினைவு நாளினையொட்டி, (31.10.1996) தமிழக அரசின் சார்பில் சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற 'தேசிய மறு அர்ப்பணிப்பு நாள்' நிகழ்ச்சியில், அவரது திருவுருவப் படத்திற்கு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் திரு. முல்லை வேந்தன், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி சற்குண பாண்டியன், மாண்புமிகு சட்டப்பேரவை எதிர்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன், செய்தித்துறை செயலர் மற்றும் இயக்குநர் ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினர்.

சென்னை மேயர்கள்

இராசா சர் முத்தையா செட்டியார் 1933
லத்தன் 1934
அப்துல் அமீதுகான் 1935
ஸ்ரீராமுலு நாயுடு 1936-1937
ஜெ. சிவசண்முகம் பிள்ளை 1937-1938
கே. வெங்கடசாமி நாயுடு 1938-1939
எஸ். சத்தியமூர்த்தி 1939-1940
சி. பாசுதேவ் 1940-1941
ஜி. ஜானகிராம் செட்டி 1941
வி. சர்க்கரை செட்டியார் 1941-1942
சி. தாதுலிங்க முதலியார் 1942-1943
டாக்டர் சையது நியமத்துல்லா 1943-1944
எம். இராதாகிருஷ்ண பிள்ளை 1944-1945
என். சிவராஜ் 1945-1946
சுந்தரராவ் நாயுடு 1946-1947
யு. கிருஷ்ணராவ் 1947-1948
எஸ். இராமசாமி நாயுடு 1948-1949
டாக்டர் வி.வி. செரியன் 1949-1950
ஆர். இராமநாதன் செட்டியார் 1950-1951
சி.எச்.எஸ். சாகிப் 1951-1952
டி. செங்கல்வராயன் 1952-1953
பி. பரமேஸ்வரன் 1953-1954
ஆர். முனுசாமிபிள்ளை 1954
எம்.ஏ. சிதம்பரம் 1954-1955
வி.ஆர். இராமநாதன் 1955-1956
கே.என். சீனிவாசன் 1956-1957
திருமதி தாராசெரியன் 1957-1958
கே. கமலக்கண்ணன் 1958-1959
அ.பொ. அரசு 1959
எம்.எஸ். அப்துல்காதர் 1959-1960
வி. முனுசாமி 1960-1961
ஜி. குசேலர் 1961-1963
ஆர். சிவசங்கரமேத்தா 1963-1964
எஸ். கிருஷ்ணமூர்த்தி 1964
சி. சிட்டிபாபு 1964-1965
எம். மைனர்மோசஸ் 1965-1966
ஆர் சம்பந்தம் 1966-1967
டாக்டர் ஹபிபுல்லா 1967-1968
வேலூர் டி. நாராயணன் 1968-1969
வை. பாலசுந்தரம் 1969-1970
சா. கணேசன் 1970-1971
திருமதி. காமாட்சி ஜெயராமன் 1971-1972
ஆர். ஆறுமுகம் 1972-1973
திரு. மு.க. ஸ்டாலின் - 1996

சிறுமையும் பெருமையும்

வயது முதிர்ந்த ஏழை வழிப்போக்கர் ஒருவர் சாலையிலே போய்க்கொண்டிருந்தார். அந்திப் பொழுதாகி இரவு நெருங்கிக் கொண்டிருந்தது.

எங்காவது தங்க இடம் கேட்கலாமென்று, கிழவர் ஒரு பெரிய வீட்டின் சன்னல் கதவில் தட்டினார்.

''தாயே, இராப்பொழுதைக்கழிக்க இடம் தாருங்கள்!'' என்று வேண்டினார்.

பணக்காரியான அந்த வீட்டுக்காரி, கிழவரின் குரல் கேட்டு வெளியே வந்தாள். கூச்சலிட்டுக் கிழவரை அவள் ஏசத் தொடங்கினாள்.

''நாய்களை அவிழ்த்துவிட்டு உன்னை விரட்டியடிக்கச் சொல்வேன். இரவில் தங்க இடம் கேட்டு இங்கே வராதே, நீ, ஓடிவிடு!'' என்று கத்தினாள்.

கிழவர் அங்கிருந்து விலகி நடந்தார். அடுத்தாற் போல் ஓர் ஏழையின் சிறு குடிசை இருப்பதைக் கண்டு அங்கே சென்று சன்னலில் தட்டினார்.

''தாயே, இராப்பொழுதைக்கழிக்க இடம் தாருங்கள்!'' என்று வேண்டினார்.

''பெரியவரே, உள்ளே வாங்க!'' என்று அந்த வீட்டுக்காரி கிழவரை உள்ளே அழைத்தாள்.'' இரவில் நீங்கள் எங்களுடன் தங்கலாம். ஆனால் இங்கேசப்தமாய் இருக்கும். இடமும் அதிகமில்லை, இதை நீங்கள் பொருட்படுத்த மாட்டீர்களென்ன நினைக்கிறேன்'' என்றாள்.

கிழவர்குடிசைக்குள்வந்தார். பரம ஏழைக் குடும்பம்என்பது தெரிந்தது. குழந்தைகள்நிறைய இருந்தனர். கந்தலாய்க்கிழிந்தபழையசட்டைகள் போட்டிருந்தனர்.

''குழந்தைகள் ஏன் இப்படிக் கந்தலாய் உடுத்தியிருக்கிறார்கள்? புதிய சட்டைகள் தைத்துத் தரக் கூடாதா?'' என்று கிழவர் கேட்டார்.

''எங்கே போவேன் நான்?'' என்று அவள் பதிலளித்தாள்.''என்கணவர்இறந்துவிட்டார்,தன்னந் தனியளாய் இருந்து இந்தக் குழந்தைகளை வளர்க்க வேண்டியிருக்கிறது... அன்றாடம் ரொட்டிக்குக்கூட கையில் காசு இல்லை. துணிமணிகளுக்குஎங்கேபோவேன்?''என்றாள்.

இதைக்கேட்ட கிழவர் மேற்கொண்டு பேசாமல் மௌனமாகி விட்டார். பிறகு வீட்டுக்காரி சாப்பாட்டை எடுத்து மேஜைமீது வைத்துக் கிழவரையும் தம்முடன் சேர்ந்து சாப்பிடுமாறு அழைத்தாள்.

''பெரியவரே, வந்து உட்காருங்கள், சாப்பிடுவோம்'' என்றாள்.

''தாயே, நன்றி! எனக்குப் பசிக்கவில்லை, சற்று முன்புதான் நான் சாப்பிட்டேன்'' என்றார் கிழவர்.

பிறகு தமது மூட்டையை அவிழ்த்து அதிலிருந்தவை யாவற்றையும் எடுத்துக் குழந்தைகளிடம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார். அதன்பின் படுத்துக் கொண்டார்; உடனே தூங்கிவிட்டார்.

பொழுது விடிந்ததும் கிழவர் எழுந்து, தமக்குக் காட்டிய அன்புக்காக வீட்டுக்காரிக்கு நன்றி தெரிவித்தார்.

''அம்மையே, காலையில் செய்வதை அந்தியாகி, இருட்டும் வரைசெய்து கொண்டே இருப்பாய் நீ!'' என்று சொல்லி வாழ்த்திவிட்டு அவளிடம் விடைபெற்றுக் கொண்டார்.

கிழவர்சொன்னதின்பொருள்அவளுக்குப் புரியவில்லை. ஆனால் அதைப் பற்றி அவள் கவலைப்பட்டுக் கொள்ளவில்லை. கிழவரை வழியனுப்பி வைத்துவிட்டுக் குடிசைக்குள் திரும்பி வந்தாள்.

''என் குழந்தைகள் கந்தலை உடுத்தியிருப்பதாய் இந்த ஏழைக் கிழவரே சொன்னால், ஏனையோர் என்னவெல்லாம் சொல்வார்கள்?''என்று நினைத்துக்கொண்டாள்.

அவளிடம்கடைசியாய்எஞ்சியிருந்தசொற்ப அளவு துணியிலிருந்து ஒரேயொரு சட்டையாவது தைப்பதென்று முடிவு செய்து கொண்டாள். இந்தத் துணியை அளந்து ஒரு சட்டைக்காவது போதிய அளவு என்று பார்ப்பதற்காகப் பணக்காரியான பக்கத்து வீட்டுக்காரியிடம் கஜக்கோல் கேட்டு வாங்கி வரச் சென்றாள்.

கஜக் கோலை வாங்கி வந்ததும் அவள் நேரே உக்கிராண அறைக்குச் சென்று அலமாரியிருந்து துணியை எடுத்து அளக்க ஆரம்பித்தாள். அவள் அளந்து செல்லச் செல்ல அந்தத் துணி நீளமாய் மேலும் மேலும் நீண்டு சென்றது. முடிவின்றி நீண்டு சென்றது. பகல் பொழுது பூராவும் அளந்து சென்றாள். அந்திப் பொழுதாகி இருட்டியதும் தான் முடிவடைந்தது.

தனக்கும் தன் குழந்தைகளுக்கும் தம் வாழ்நாள் முழுதுக்கும் போதுமான துணி தன்னிடம் இருக்கிறதென்று மகிழ்ந்து கொண்டாள்.

''வயதான பெரியவர் இதைத்தான் கூறிச் சென்றிருக்கிறார்!'' என்று இப்பொழுது கிழவருடைய வாழ்த்தின் உட்பொருளைப் புரிந்துகொண்டாள்.

அன்று அந்திப் பொழுதிலேயே கஜக்கோலை அவள் பணக்காரப் பக்கத்து வீட்டுக்காரியிடம் கொண்டு போய்க் கொடுத்தாள். வயதான பெரியவர்கூறிச்சென்ற வாழ்த்தின் விளைவாய்த் தனக்கு உக்கிராண அறை நிறைய துணி கிடைத்து விட்டதென்று நடந்தது எதையும் மறைக்காமல் அவளிடம் சொல்லிவிட்டு வந்தாள்.

''அடாடா! அந்தப் பிச்சைக்காரக் கிழவனை இரவில் என் வீட்டில தங்கச் சொல்லாமல் விரட்டியடித்தேனே!'' என்று நினைத்து வருந்தியவாறு அவசரமாய்த் தனது வேலைக்காரனைக் கூப்பிட்டாள்.

''சீக்கிரமாய் வண்டியைப் பூட்டி அந்தப் பிச்சைக்காரனிடம் வேகமாய் ஓட்டிச் செல். எப்படியாவது அந்தக் கிழவனைத் தேடிப்பிடித்து என்னிடம் அழைத்து வா! ஏழைகளுக்குத் தாராளமாய் உதவ வேண்டும். எப்பொழுதுமே நான் கூறிவரும் ஒன்று இது'' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தாள்.

வேலைக்காரன் உடனே புறப்பட்டு வண்டியைவிரட்டிக்கொண்டுகிழவரைதேடிச் சென்றான். மறுநாளன்றுதான் அவன் கிழவரைத் தேடிப் பிடிக்க முடிந்தது. ஆனால் கிழவர் திரும்பிவர மறுத்துவிட்டார்.

''ஐயோ நான் என்ன பாவம் செய்தேனோ!'' என்று வேலைக்காரன் புலம்பினான். ''கிழவரே உம்மை நான் அழைத்துச் செல்லாமல் திரும்பினால், என் எஜமான் சம்பளம் இல்லாமலே என்னை வேலையிலிருந்து விரட்டி விடுவார்'' என்று வருந்தினான்.

''தம்பி, நீ வருந்தாதே, உன் விருப்பப்படியே உன்னுடன் வருகிறேன்.'' என்று கிழவர் அவனிடம் சொன்னார்.

பிறகு வண்டியில் ஏறி அந்தப் பணக்காரியின் வீட்டுக்குத் திரும்பிச் சென்றார்.

பணக்கார வீட்டுக்காரி பொறுமை இழந்தவளாய் வெளி வாயிலில் நின்று கொண்டிருந்தாள். கிழவர் வந்து சேர்ந்ததும், தலை குனிந்து வணங்கியும் இனிமையாய்ச் சிரித்தும் அவரை வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள். உணவும் பானமும் அளித்து உபசரித்தாள். பிறகு மிருதுவான படுக்கை போட்டுக் கொடுத்தாள்.

''ஐயா, பெரியவரே, வசதியாய்ப் படுத்து உறங்க வேண்டும்!'' என்றாள்.

கிழவர் அந்தப் பணக்காரியின் வீட்டில் ஒரு நாள் முழுவதும், பிறகு இரண்டாம் நாளும், பிறகு மூன்றாம் நாளும் தங்கியிருந்தார். சாப்பிட்டும், பானம் அருந்தியும், தூங்கியும் தமது புகைக்குழாயை எடுத்துப் புகை பிடித்தும் வந்தார். பணக்கார வீட்டுக்காரி அவருக்கு வேண்டிய உணவும் பானமும் அளித்தாள். தேனொழுகப் பேசினாள். ஆனால் உள்ளுக்குள் புகைத்து கொண்டிருந்தாள்.

'இந்தக் கிழட்டுச் சனியன் எப்பொழுது என் வீட்டை விட்டுப் போய்த் தொலையப் போகிறதோ!' என்று தன்னுள் கூறிக் கொண்டிருந்தாள்.

கிழவரைப் போகச் சொல்வதற்கு அவளுக்குத் தைரியம் வரவில்லை. அவருக்காகச் செய்த இவ்வளவும் விரயமாகிவிடக் கூடாதே என்று பொறுமையாய் இருந்தாள்.

பிறகு அவள் பெரு மகிழ்ச்சி அடையும் வண்ணம் நான்காம் நாள் அதிகாலையில் கிழவர் அங்கிருந்து புறப்படத் தயாரானார். பணக்கார வீட்டுக்காரி வெளியே வந்து கிழவரை வழி அனுப்பி வைத்தாள். கிழவர் வாயைத் திறக்கவில்லை. மௌனமாகவே வெளிவாயிலை வந்தடைந்தாள், பிறகு மௌனமாகவே அதைக் கடந்து தெருவுக்கும் சென்றுவிட்டார். பணக்கார வீட்டுக்காரியால் அதற்கு மேல் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

''இன்று நான் என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லவில்லையே?'' என்றாள்.

அட்டைப்பட விளக்கம்

முதலாம் அட்டை:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் - தமிழ்நாடு அரசு இந்த ஆறுமாத காலத்தில் நிகழ்த்தியுள்ள அவனி புகழும் சாதனைகளும்.

இரண்டாம் அட்டை:

சாதனை நிகழ்த்தும் மாணவர்கள் (கட்டுரை 30ஆம் பக்கம்)

நான்காம் அட்டை:

தமிழகத்திற்கு வருகைதந்த மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு கல்வியமைச்சர் அவர்களும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயரும் விமான நிலையத்தில் (திருச்சி) வரவேற்றனர் 31.10.1996

''அம்மையே, காலையில் செய்வதை அந்தியாகி இருட்டும் வரை செய்து கொண்டு இருப்பாய் நீ!'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

பணக்காரவீட்டுக்காரி உடனேவீட்டுக்குள் ஓடி வந்து தன்னிடமிருந்த துணியை அளப்பதற்காக கஜக்கோலை அவசரமாய் கையில் எடுத்தாள்.

ஆனால் அத்தருணத்தில் பலமாய்த் தும்மினாள். வெளியே முற்றத்திலிருந்த கோழிக் குஞ்சுகள் பயந்து போய்ப் படபடத்துப் பறந்து நாற்றிசையிலும் ஓடும்படி அவ்வளவு பலமாய்த் தும்மினாள்.

அன்று பகற் பொழுது பூராவும் ஓயாது தும்மிக் கொண்டே இருந்தாள். ''உ-உச்-ச்சு! உ-உச்-ச்சு! உ-உச்-ச்சு!''...

அவளால் சாப்பிடவும் முடியவில்லை, பானம் அருந்தவும் முடியவில்லை, எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லவும் முடியவில்லை. எதற்கும் அவளிடமிருந்து ஒரே பதில்தான் வந்தது. 'உ-உச்-உச்சு! உ-உச்-ச்சு! உ-உச்-ச்சு!'

பொழுது சாய்ந்து இருட்டியதும்தான் அவளுக்குத் தும்மல் நின்றது.

- சோவியத் மக்களது நாட்டுக் கதைகள்.
தொகுப்பு - 'நவத்தினமாலை' என்ற நூலிலிருந்து
''எஸ்தோனிய நாட்டுக்கதை''

அறிவியல் துளிகள்

தாய்மையடையும் ஒரு பெண்ணின் கருப்பையில் சிசுவின் எந்தப் பகுதி முதலில் உண்டாகும் தெரியுமா? தலைப் பகுதியும் வால்பகுதியும்தான்; இது எல்லாத் தாய்மார்களுக்கும் பொதுவானது.

மாறுகண் என்பது சிலருக்குப் பிறக்கும்போதே இருக்கும்; சிலபேர் வளர்ந்தபிறகு, கண் தசைகளின் செயல் இழப்பாலும் அப்படி உண்டாகும்; இந்த மாறுபாட்டை நீக்க இப்போது பல மருத்துவ முறைகள் வந்துவிட்டன.

கண்களில் இருக்கும் ஐரிஸ் தசையில் சில நிறமிகள் இருக்கின்றது. அவற்றின் நிறத்தன்மையைப் பொருத்தே கண்கள் கருமையாகவும் நீலமாகவும், பூனைக்கண் போலவும் அமையும்.

பாதரசம் என்பது 'சின்னபார் என்கிற சிவந்த தாதுவாகவே முதலில் கிடைக்கிறது; சில இடங்களில், பாறைகளினடியில் சிறுசிறு துளிகளாகவும் காணப்படும்.

ஃபிரிட்ஜுக்குள் ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் குளிர்ச்சி ஏற்பட்டதும் அதிலுள்ள கம்ப்ரசர் தானாகவே நின்றுவிடும். ஆகவே, நீங்கள் ஃபிரிட்ஜின் மின் இணைப்பை 24 மணி நேரமும் துண்டிக்காமல் வைத்திருக்கலாம். அதாவது, ஸ்விட்ச்சை அணைக்க வேண்டியதில்லை. ஆனால், ஃபிரிட்ஜ் 24 மணி நேரமும் இயங்காது.

திறந்த பாத்திரத்தைவிட, அழுத்தச் சமையல்கலத்தில் விரைவாகச் சமைக்க முடியும். அழுத்தச் சமை கலத்திற்குள் வளி அழுத்தத்தைப்போல் சுமார் 15 மடங்கு அதிக அழுத்தம் நிலவுகிறது. இதனால், கலத்திற்குள் அதிக வெப்ப நிலை தோன்றும்; உணவும் விரைவில் சமைக்கப்படும்.

தீப்பட்டுக் கொப்பளித்ததில் உள்ளது ஊனீர் எனப்படும்; தீப்பட்ட பகுதியில் இருக்கும் நுண்ணிய இரத்தக் குழாய்களின் சுவர்கள் பழுதடைவதாலும், அவற்றின் வெளிவிடும் தன்மை அதிகரிப்பதாலும்தான் பிளாஸ்மா என்ற திரவம் வெளியேறுகிறது. அதில் உள்ள ஊனீரே தீக் கொப்புளங்களைப் புடைத்தெழச் செய்வதாகும்.

அதிக வெளிச்சத்திலிருந்து அறையினுள் நுழையும் போது ஒரு சில நிமிடங்களுக்கு இருளாகத் தோன்றக் காரணம். அதிக வெளிச்சத்தில் இருக்கும் போது கண்களுக்குள்ளே அதிக ஒளி புகாமலிருக்க வேண்டி கண்களின் 'பாப்பா' ஐரிஸ் சுருங்கி ஒரு புள்ளியாகி விடுகிறது. அப்படியே சுருங்கிய ஐரிஸுடன் அறைக்குள் பிரவேசிக்கும் போது அறையில் ஒளி குறைவாக உள்ளதால் சுருங்கிய ஐரிஸின் வழியாக மேலும் குறைவாகவே ஒளி புகுவதால் அறை இருளாகத் தோன்றுகிறது. சிறிது நேரத்தில் ஐரிஸ் விரிந்ததும் அறை வெளிச்சமாகிவிடுகிறது.

> மானத்தைப் பற்றிக் கவலையில்லாதவன் எவ்வளவு படித்தவனானாலும் சரி;
> அவனுடைய படிப்பும் மானாபிமானம் உள்ளவர்களுக்கு ஆபத்தாகவே முடியும்.
>
> – தந்தை பெரியார்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் :எம் அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. சோமநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

ஆசிரியர் மடல்

நடந்து முடிந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்களின் மூலம் - 6 மேயர்களும், 474 மாநகராட்சி உறுப்பினர்களும், நகராட்சித் தலைவர்கள் 102 பேரும், நகரமன்ற உறுப்பினர்கள் 3392 பேரும், பேரூராட்சித் தலைவர்கள் 634 பேரும், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் 10,173 பேரும், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் 649 பேரும், ஊராட்சி ஒன்றியங்களின் உறுப்பினர்கள் 6,504 பேரும், சிற்றூராட்சித் தலைவர்கள் 12,584 பேரும், சிற்றூராட்சிகளின் உறுப்பினர்களாக 97,014 பேரும் பொது வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இவர்கள் தவிர- சென்னை மாநகராட்சிக்கு 10 பேரும் - மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்குத் தலா ஐந்து பேரும்- சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாநகராட்சிகளுக்குத் தலா 2 பேரும் நியமனம் பெற உள்ளனர்.

இவர்களெல்லாம் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களுக்கு உதவக்கூடியவர்களும், பொதுமக்களின் அடிப்படைத் தேவைகளை உடனுக்குடன் தீர்த்து வைக்க வேண்டியவர்களும் ஆவர். அதாவது, உள்ளாட்சி மன்றங்களின் நிர்வாகம், கால் நூற்றாண்டுக்குப் பிறகு மக்கள் பிரதி நிதிகளின் கைக்கு வந்திருக்கிறது.

"தேர்வு பெற்றோர் கடமைகள் மகத்தானவை; மக்கள் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதே குறிக்கோளாகக் கொண்டு, எல்லோரும் செயல்பட வேண்டும்; தம் அதிகாரத்திற்குட்பட்ட ஆட்சியைத் திறம்பட நடத்தும் வல்லவர்களாக- துளிக் களங்கமும் வராமல் செயல்படும் நல்லவர்களாக அனைவரும் திகழ வேண்டும்" - என்றெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனைவரையும் கேட்டுக் கொண்டிருக்கிறார். அதன்படி அவர்கள் வளரவும் வாழவும் வாழ்த்துகிறோம்.

தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

பதிவு எண்.
Licence No.TN/M

தமிழரசு
1.12.1996 ரூ.3

பொங்கல் முதல் வறுமை ஒழிப்பதற்கான அரசின் புதிய திட்டம்

- முதல்வர் கலைஞர்

"**1996-**ஆம் ஆண்டு உணவுப் பாது காப்புக் கண்காட்சி தொடக்க விழாவில் நானும் பங்கு பெறுவதில் மிகுந்த மகிழ்ச்சி யடைகின்றேன். இந்தக் கண்காட்சியை அமைப்பதற்கான முயற்சிகளை மேற் கொண்டதற்காக சென்னை கிழக்கு ரோட்டரி கிளப்பை நான் பாராட்டுகிறேன். ரோம் நகரில் உணவு மாநாடு நடைபெறுவதற்குச் சில நாட்கள் முன்பாக இந்தக் கண்காட்சி நடை பெறுகிறது.

உணவுப் பாதுகாப்பு குறித்த எந்த ஒரு கருத்தரங்கமும் அல்லது விவாதமும் நம் நாட்டில் பசுமைப் புரட்சியை உருவாக்கிய நமது மரியாதைக்குரிய சி.சுப்பிரமணியம் அவர்களும், வேளாண்மை மற்றும் உற் பத்திக்கு, ஆற்றிய பங்கு காரணமாக அனை வராலும் அறியப்பட்டவரும் அதில் உலகம் முழுவதும் அங்கீகாரம் பெற்றவருமான டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களும் இல்லாமல் முழுமை அடையாது. அவர்கள் இருவருமே இப்போது சென்னையில் உள்ளனர். அதை நாங்கள் முழு அளவில் பயன்படுத்திக் கொள்வோம் என்று உறுதி யளிக்கிறேன்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவு, மாநிலம் தனது மக்களின் சத்துணவின் அளவையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்து வதில் அக்கரை செலுத்தி, பொதுச் சுகா தாரத்தை மேம்படுத்துவது அதன் அடிப் படைப் பணிகளில் அடங்கியதாகும் என்று குறிப்பிட்டிருப்பதை நினைவூட்டு வதற்கு இது சரியான சந்தர்ப்பமாகும். எல்லோருக்கும் உணவு வழங்குவதில் தமிழ்நாடு முன்னணி யில் உள்ளது. தமிழக அரசு பல ஆண்டு களுக்கு முன்பே சத்துணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அது சர்வதேச தரத் துடன் கூடிய சிறப்பான திட்டம் என்று பாராட்டப்பட்டது.

"தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்" என்று மகாகவிபாரதி கூறினார்: அரசின் மிக முக் கியக் கடமை எழுத்தறிவின்மையையும் பசியையும் அகற்றுவதேயாகும். மகாகவி பாரதியாரின் சொற்களை எதிரொலிக்கும் வகையில் மகாத்மா காந்தியடிகளும் "சுதந்திர இந்தியாவின் முதல் கடமை ஒவ்வொரு தனி மனிதருக்கும் அன்றாட உணவை வழங்குவதாகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

நாம் இப்போது உணவுப் பாதுகாப்பு என்று கூறுவது எது என்றால் பல ஆண்டுகளுக்கு முன்பே மகாகவி பாரதி கூறியதுதான்!

ஒரு சமுதாயம் உணவில் "பாதுகாப்புடன்" உள்ளது என்று கூற முடியுமானால் அதில் உள்ள எல்லோருக்கும் ஆற்றலோடும் ஆரோக்கியத்துடன் வாழும் அளவுக்கு, போதுமான அளவுக்கு உணவு கிடைத்தால் தான் கூற முடியும். இதற்கான வழி உடலுழைப்பாகவும், பொருளாதாரமாகவும்

அல்லது இரண்டுமாகவும் இருக்கலாம். உடலுழைப்பு ரீதியான வழியை உணவை தொடர்ந்து வழங்குவதன் மூலம் உறுதிப் படுத்த முடியும். பொருளாதார ரீதியான வழி மக்களுடைய வாங்கும் சக்தியை அதிகரிக்கச் செய்வதன் மூலம் மட்டுமே உறுதி செய்ய முடியும்.

இவைகளில் ஏதேனும் ஒன்று இல்லா மலோ, குறைவாகவோ இருந்தால் அதன் விளைவு உணவில் பாதுகாப்பற்ற நிலை ஏற்படும். பசிக்கு முக்கியக் காரணம் வறுமை, வருவாயைப் பெருக்கும் பல்வேறு திட்டங் களை அமல்படுத்துவதன் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களின் சதவிகிதம் குறைந்து வருகிறது என்ற சிந்தனையால் நாம் ஓரளவு ஆறுதல் அடைய முடியும் என்றாலும், நம் நாட்டில் உள்ள கோடிக் கணக்கான மக்கள் இன்று கூட ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவுகூட பெற முடியாமல் இருக்கிறார்கள், என்பது மிகுந்த வேதனைக்குரிய செய்தி. உணவுப் பாது காப்பின்மையைப் போக்குவதற்கான ஒரு வழி ஏழைகளுக்குப் பணத்தை ரொக்கமாகக் கொடுக்க வேண்டும் அல்லது உண்மையான வருவாய் உயரும் வகையில் அவர்கள் மீது கருணை காட்ட வேண்டும். அத்துடன் அவர்கள் உணவைப் பயன்படுத்தும் நிலையை அதிகரித்துக் கொள்வதற்கான வழிகளைக் காட்ட வேண்டும். வருவாயை அளிப்பதற்கு எல்லோரும் அறிந்த ஒரு வழி பொது விநியோக முறை மூலம் சந்தை விலைகளை விட குறைவான விலைக்கு உணவுப் பொருட்களை வழங்குவதாகும்.

வறுமையை எதிர்க்க நாங்கள் முயற் சிக்கும் மற்றொரு முக்கியமான திட்டம் மதிய சத்துணவுத் திட்டமாகும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல இத்திட்டத்தை அமல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இதன்மூலம் நேரடியாகப் பயன் பெறுகிறவர்களின் எண்ணிக்கை 79 இலட் சத்தை விட அதிகமாகும். இவர்களில் குழந்தைகள், மாணவர்கள், முதியோர், உதவித்தொகை பெறுவோர், கர்ப்பிணிப் பெண்கள், கைவிடப்பட்டோர் ஆகிய ஆதரவு தேவைப்படுவோர் அடங்குவர். மதிய உணவுத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கப் பட்ட நிதி 1995-96-ஆம் ஆண்டு ரூ.360 கோடி இருந்தது. அது நடப்பு ஆண்டில் ரூ.401 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

1996-97-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் வறுமையால் ஏற்படும் பசியை ஒழிப்பதற்கான புதிய திட்டம் ஒன்றை அரசு அறிவித்தது. அத்துடன் இத்திட்டத்தை வகுத்துச் செயல்படுத்துவது குறித்து அரசுக்கு அறிவுரை கூற டாக்டர் எம்.எஸ். சுவாமி நாதன் தலைமையில் குழு ஒன்றையும் அரசு அமைந்துள்ளது. இந்தப் புதிய திட்டம் பொங்கல் பண்டிகையை ஒட்டி தென் னார்க்காடு வள்ளலார் மாவட்டம் கீரப் பாளையம், தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம், திண்டுக்கல் மன்னர் திருமலை மாவட்டம், வேடசந்தூர், தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர், இராமநாதபுரம் மாவட்டம் திருப்புலன், கன்னியாகுமரி மாவட்டம் கருத்தங்கோடு, நீலகிரி மாவட்டம் கோத்தகிரி ஆகிய 7 வட்டங்களில் (தாலுகா) தொடங்கப்படும். ஒவ்வொரு மாவட்டமும் வேறுபட்ட வேளாண்மை தட்பவெப்ப மண்டலங் களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் புதிய திட்டத்தின் அடிப்படையில் அகில இந்திய

காலம்

காலம் மாறக் கூடியது; மாறிக் கொண்டே தான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும்; அப்படி மாறாத சமுதாயம் மறைந்து விடும்.

-பேரறிஞர் அண்ணா

மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு பகுத்தறிவில் தெளிவு பெறுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு பக்குவமானவன் என்பது பொருள்.

– தந்தை பெரியார்





இந்த இதழில்...

★ பொங்கல் முதல் வறுமை
ஒழிப்பதற்கான புதிய திட்டம்
-முதல்வர் கலைஞர் 2

★ பாரதி உள்ளம்
-புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 5

★ செய்திச் சரம் 6

★ காவல்துறை போக்குவரத்துப்
பிரிவினருக்கு நவீன கருவிகள் 8

★ இதய நோய்
- டாக்டர் என். அர்த்தநாரி 1

★ கூட்டுறவுத் துறையின் சாதனை
மணக்கும் பணிகள் 1

★ கோடு தாண்டிய கோதை
- அன்னம் ....

★ அயோடின் உப்பு ....

★ கம்பனும் பாரதியும்
- டாக்டர் சாரதா நம்பி ஆரூரன் ....

★ வேலைவாய்ப்பு அலுவலகத்தில்
விடுபட்டுப்போன பதிவைப்
புதுப்பிக்க அரசாணை ....

★ அரசு உதவிகளைப் பெற யாரை
அணுக வேண்டும்? ....

★ பாவம், பசுந்தளிர்கள் ....

தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2027
கார்த்திகைத் திங்கள் : 16
மலர்: 27 இதழ்: 11
1.12.1996 விலை: ரூ. 3

2/4290.

அளவில் வறுமையற்ற பகுதி ஒன்றை 9வது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பிரதமர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய திட்டத்தை அமல்படுத்துவதற்கு எந்தெந்த வழிகளில் உதவி செய்யமுடியுமோ, அந்தந்த வழிகளில் உதவி செய்ய நாங்கள் மகிழ்ச்சியுடன் முன்வருவோம். இத்தாலியில் நடைபெறவிருக்கும் உலக உணவு மாநாடு ஒவ்வொரு தனிநபருக்கும் உணவை வழங்குவதற்கான வழிகளையும், முறைகளையும் ஆராய்வதற்காக நடைபெறுவதால் அம்மாநாட்டில் எங்கள் திட்டத்தை விவாதிக்க வேண்டும் என்றும் நமது அன்பிற்குரிய பிரதமரை நான் கேட்டுக் கொள்கிறேன். எந்தவொரு குழந்தையும், பெண்ணும், மனிதனும் உணவு இல்லாமல் நோய்வாய்ப் படக்கூடாது என்பதை உறுதி செய்வதே எங்கள் முயற்சியாகும்.

தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்குப் பிறகு உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. நம் மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளன. நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களின் உணவுப் பாதுகாப்பை அளிப்பதில் நாம் வெற்றி பெறாவிட்டால் இந்த மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற முறையில் எங்கள் கடமையிலிருந்து தவறியவர்கள் ஆவோம். இந்த இனிய வேளையில் நாம் ஒருங்கிணைந்து இந்நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் உணவுப் பாதுகாப்பளிக்கும் பணியில் நம்மை அர்ப்பணித்துக் கொள்வோம்.

(உணவுப் பாதுகாப்புக் கண்காட்சி விழாவினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. தேவகவுடா அவர்கள் 9.11.96 அன்று சென்னையில் துவக்கி வைத்தார். அவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களது உரையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்கள் படித்தார். அந்த உரையிலிருந்து...)

1997ஆம் ஆண்டு அரசு விடுமுறை நாட்கள்

1997ஆம் ஆண்டுக்கான அரசு மற்றும் பொது விடுமுறை நாட்கள் விவரம்:

1.1.1997	புதன்	ஆங்கிலப் புத்தாண்டு
14.1.1997	செவ்வாய்	பொங்கல் திருநாள்
15.1.1997	புதன்	திருவள்ளுவர் தினம்
16.1.1997	வியாழன்	உழவர் திருநாள்
26.1.1997	ஞாயிறு	குடியரசு தினம்
9.2.1997	ஞாயிறு	ரம்ஜான்
28.3.1997	வெள்ளி	புனித வெள்ளி
1.4.1997	செவ்வாய்	வங்கி ஆண்டுக் கணக்கு முடிவு
8.4.1997	செவ்வாய்	தெலுங்குப் புத்தாண்டு
14.4.1997	திங்கள்	தமிழ்ப் புத்தாண்டு
18.4.1997	வெள்ளி	பக்ரித்
1.5.1997	வியாழன்	மே நாள்
18.5.1997	ஞாயிறு	முகரம்
18.7.1997	வெள்ளி	மிலாது நபி
15.8.1997	வெள்ளி	சுதந்திர தினம்
25.8.1997	திங்கள்	கிருஷ்ண ஜெயந்தி
5.9.1997	வெள்ளி	விநாயக சதுர்த்தி
30.9.1997	செவ்வாய்	வங்கி அரை ஆண்டுக் கணக்கு முடிவு
2.10.1997	வியாழன்	காந்தி ஜெயந்தி
10.10.1997	வெள்ளி	ஆயுத பூசை
11.10.1997	சனி	விஜயதசமி
30.10.1997	வியாழன்	தீபாவளி
25.12.1997	வியாழன்	கிறிஸ்துமஸ்

பாரதி உள்ளம்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

சாதி ஒழித்திடல் ஒன்று - நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் - மற்ற
பாதி துலங்குவ தில்லை!
சாதி கலைந்திட்ட ஏரி - நல்ல
தண்டமிழ் நீரினை ஏற்கும்
சாதிப் பிணிப்பற்ற தோளே - நல்ல
தண்டமிழ் வாளினைத் தூக்கும்!

என்றுரைப் பார் என்னிடத்தில் - அந்த
இன்ப உரைகளென் காதில்
இன்றும் மறைந்திட வில்லை - நான்
இன்னும் இருப்பத னாலே!
பன்னும் நம் பாரதியாரின் - நல்ல
பச்சைஅன் புள்ளத்தி னின்று
நன்று பிறந்தஇப் பேச்சு - நம்
நற்றமிழர்க் கெழில் மூச்சு!

மேலவர் கீழவர் இல்லை - இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை!
நாலு தெருக்களின் கூட்டில் - மக்கள்
நாலா யிரத்தவர் காணத்
தோலின்ில் தாழ்ந்தவர் என்று - சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்!

மேலும் அப்பாரதி சொல்வார் - "சாதி
வேரைப் பொசுக்குங்கள்" என்றே!

செந்தமிழ் நாட்டினிற் பற்றும் - அதன்
சீருக்கு நல்லதோர் தொண்டும்
நிந்தை இல்லாதவை அன்றோ! - எந்த
நேரமும் பாரதி நெஞ்சம்
கந்தையை எண்ணுவ தில்லை - கையிற்
காசை நினைப்பதும் இல்லை!
செந்தமிழ் வாழிய! வாழி - நல்ல
செந்தமிழ் நாடென்று வாழ்ந்தார்!

- டிசம்பர் 11, மகாகவி பாரதியார் பிறந்த நாள்



செய்திச் சரம்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி.கே. மூப்பனார் அவர்களும், மாண்புமிகு மத்தியத் தொழில் துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்களும், 21.11.96 அன்று, புதுடில்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு தேவ கௌடாவைச் சந்தித்தனர்.

காவிரி நடுவர் மன்றத்திற்கு இரு வாரத்திற்குள் நடுவர் நியமிக்கப்படுவார் என்று அப்போது பிரதமர் அவர்கள் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசின் 10வது நிதிக்குழு ரூ.28.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

இத்தொகையில், பேரூராட்சிகளுக்கு ரூ.10.67 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.8.73 கோடியும், மாநகராட்சிகளுக்கு ரூ.8.82 கோடியும் ஒதுக்குமாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்.

டில்லி நகர வீதிகளில் இனி எச்சில் துப்பினாலும், குப்பைகளைப் போட்டாலும் அபராதம் செலுத்தவேண்டும். இந்தக் கண்காணித்துத் தண்டிக்க, நடமாடும் முனிசிபல் நீதிபதிகள் நியமிக்கப்படவிருக்கின்றனர்.

மீனவர்களுக்காக 1996-97ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட 4,000 வீடுகளும் இந்த நிதியாண்டிற்குள் கட்டி முடிக்கப்படும்.

இயந்திரங்கள், வலைகள் வழங்குதல், மீனவர் காப்புறுதித் திட்டம், நீர்த்தேக்கங்களில் மீன் பிடிப்பு, விற்பனை ஆகிய திட்டங்களை விரைந்து செயல்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திருமதி ஜெனிபர் சந்திரன் தெரிவித்தார்.

தமிழகத்தில் 100 மாஜிஸ்திரேட்டுகள் நியமிக்கப்படவிருக்கின்றனர். இவர்களில் 30 பேர் பெண்களாவர்.

பி.எல். பட்டம் பெற்று வழக்கறிஞர் பணிபுரிந்திடும் 38 வயதிற்கு உட்பட்டோர் டிசம்பர் 12ஆம் தேதிக்குள் இதற்காக விண்ணப்பிக்கலாம் என்று தமிழ்நாடு தேர்வாணையக் குழு அறிவித்திருக்கிறது!

சென்னை, உதகமண்டலம், கடலூர், கோயம்புத்தூர், நாகர்கோயில், திருத்தணி ஆகிய இடங்களில் நீதிமன்றக் கட்டடங்களும், நீதித்துறை அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டவும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை இட்டுள்ளார்.

நீதிமன்றங்களில் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துதல், மரச்சாமான்கள் வாங்குதல், புதிய கட்டடங்கள் கட்டுதல் போன்றவற்றுக்காக மொத்தம் ரூ.21.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

முதன் முதலாக ரியோடி ஜெனிரோவில் சுற்றுச்சூழல் பற்றிய உலகளாவிய மாநாடு 1992ல் நடைபெற்றது. அடுத்த மாநாடு 1998ல் நம் இந்தியத் திருநாட்டில் நடைபெறவிருக்கிறது. 155 உறுப்பு நாடுகள் கலந்துகொள்ளும் மாநாடாக இது இருக்கும்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்குப் பாடநூல்களும் குறிப்பேடுகளும் இலவசமாக வழங்கும் திட்டத்தின் கீழ், ரூ.35 முதல் ரூ.190 வரை படிக்கும் வகுப்பிற்கேற்ப வழங்கப்பட்டு வந்தது.

இதை ரூ.50 முதல் ரூ.600 வரை உயர்த்தி வழங்கலாம் என தமிழ்நாடு அரசு ஆணையிட்டு இருக்கிறது. இதற்காக அரசு ரூ.4.65 இலட்சம் அளித்துள்ளது.

தமிழ்நாடு திருக்கோயில்களில், 150 புலவர்களை நியமித்துத் தேவாரம், திருப்புகழ் வகுப்புகள் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாண்புமிகு இந்து அறநிலையத் துறை அமைச்சர் திரு புலவர் செங்குட்டுவன் கூறியுள்ளார்.

சென்னை அருகில் உள்ள செம்பரம்பாக்கம் திருமழிசை பகுதியில், 1,500 ஏக்கர் நிலப் பரப்பில் துணை நகரம் 'சாட்டிலைட் டவுன்' அமைக்கப்படும்.

இதன்மூலம், சுமார் ஒன்றரை இலட்சம் மக்களுக்கு வீட்டுவசதி அளிக்க முடியும். இத்திட்டத்தின் மொத்தப் பரப்பில் 5 சதவிகிதம் தொழில் நிலையங்கள் அமைக்க ஒதுக்கீடு செய்யப்படும். இப்பகுதியில் விவசாயம் செய்து வருவோர்க்கு மாற்று வேலை வாய்ப்புக்கான வழிவகை செய்யப்படும் என்று மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு கு. பிச்சாண்டி அறிவித்திருக்கிறார்.

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன வெள்ளி விழா நிறைவு நாள் விழா, 23.11.96 அன்று சென்னையில் நடைபெற்றது.

இதில் மேதகு இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்கள் கலந்து கொண்டார். இவ்விழாவிற்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு தமிழகக் கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில் "ஐந்தாண்டுகளில், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி" வழங்கப்படும்' என்று குறிப்பிட்டார்.

காவல்துறை போக்குவரத்துப் பிரிவினருக்கு ரூ.6.57 கோடியில் ஜீப்புகள், வயர்லெஸ் நவீன கருவிகள்! மாண்புமிகு முதல்வர் கலைஞர் வழங்கினார்

தமிழகத்திற்கு நகர்ப்புறங்களில் ஏற்படும் விபத்துக்களைத் தடுக்கும் வகையில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய பத்து பெருநகரங்களில் போக்குவரத்துத் திட்டங்கள் மற்றும் போக்குவரத்து ஒழுங்குப்படுத்தும் ஏற்பாடுகளுக்காகவும், போக்குவரத்தைச் சீரமைத்துச் சிறப்புடன் நடைமுறைப்படுத்த உலக வங்கியின் உதவியுடன் தமிழகப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழக அரசு 7 கோடியே 22 இலட்ச ரூபாய் அனுமதித்துள்ளது.

காவல்துறைத் தலைவர் தலைமையில் தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழு, ரூ.6 கோடியே 57 இலட்சம் செலவில் வாகனங்கள் மற்றும் நவீன கருவிகள் வாங்க முடிவு செய்து அதன்படி ஜீப்புகள், ஆம்புலன்ஸ்கள், கிரேன்கள், மோட்டார் சைக்கிள்கள், வயர்லெஸ் கருவிகள், கணிப்பொறிகள், சிக்னல்கள், புகைப்படக் கருவிகள் போன்றவை வாங்கப்பட்டன.

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்-தலைமைச் செயலகத்தில், காவல்துறைத் தலைவர் திரு ராஜசேகரன் நாயர், இ.கா.ப., அவர்களிடம் 19.11.96 அன்று இக்கருவிகளை வழங்கினார். முன்னதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இக்கருவிகளைப் பார்வையிட்டார். வயர்லெஸ் கருவிகள் மூலமும் பேசிப் பரிசோதித்தார். புதிதாக வாங்கப்பட்ட ஜீப்புகளிலும் ஏறிப்பார்த்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், அரசு உயர் அலுவலர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

❍ ❍ ❍

மூதறிஞர் இராஜாஜி பொன் மொழிகள்

- ☐ தீண்டாமை என்பது நமது சமூகத்தில் ஒரு மாசு. தீண்டாமை ஒரு விஷப் பாம்பு. அதைக் கொன்றாக வேண்டும்.
- ☐ எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடு என்பது இல்லை.
- ☐ பள்ளிக்கூடங்கள் தேசத்தில் எத்தனை இருந்தாலும், பண்பாட்டுக்குப் பள்ளிக்கூடம் வீடேயாகும்.
- ☐ வாழ்க்கையில் தைரியமாக இருப்பதைவிட மகிழ்ச்சி அளிக்கக் கூடிய விஷயம் வேறு என்ன இருக்க முடியும்!
- ☐ ஞானமும், பக்தியும் அனைவருக்கும் உரித்தான பெருஞ்செல்வம்.
- ☐ கோபம் கூடாது. அது முகத்தின் அழகைக் கெடுத்துவிடுகிறது. சாந்தமே முகத்திற்கு அழகு தருகிறது.
- ☐ ஒழுக்கத்துடனும், நாணயத்துடனும் ஒவ்வொருவரும் நடந்து கொண்டால், எல்லோருக்கும் நன்மை விளையும்.
- ☐ நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்துவிட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெறவேண்டுமானால், மக்கள் அற வழியில் நிற்கவேண்டும்.



அது போதுமே!

கனவில் ஒரு நாள் சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து உலுக்கினேன்.

சிங்கம் என்னிடம் கேட்டது-

"அடேயப்பா! உனக்கு எப்படி இவ்வளவு வீரம் வந்தது?"

நான் சொன்னேன்-

"நானும் ஆடு சாப்பிடுகிறவன்தானே!"





வளையம்

மகன் தாயைப் பார்த்துக் கேட்டான்-

"தாயே, சாவு என்பது என்ன?"

தாய் சொன்னாள்

"வாழ்வின் முடிவு!"

மகன் கேட்டான் -

"வாழ்வு என்பது என்ன?"

தாய் சொன்னாள் -

"சாவின் தொடக்கம்!"

ஒரே உண்மை

பாதிரியார் ஒருவர் பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொண்டு இருந்தார்.

எல்லா மாணவர்களையும் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்

"இங்கே இதுவரை ஒரு பொய்கூடச் சொல்லாத மாணவன் உண்டா?"

எல்லா மாணவர்களும் மௌனமாக நின்றனர். பாதிரியார் அமைதியாகப் பெருமூச்சு விட்டார். பிறகு சொன்னார் -

"கர்த்தரே, உமக்கு வணக்கம்! எங்கள் மக்கள் முதன் முறையாக மௌனத்தின் மூலம் ஒரேயொரு உண்மையைப் பேசி இருக்கிறார்கள்!"



- கவிஞர் கண்ணதாசன் எழுதிய 'குட்டிக் கதைகள்' என்ற நூலிலிருந்து
வெளியீடு: வானதி பதிப்பகம், சென்னை-17

இதய நோய்

டாக்டர் எஸ். அர்த்தநாரி

திடீரென்று எதிர்பாராமல் 30 வினாடிக்குள், அல்லது 1 மணி நேரத்திற்குள், அல்லது 24 மணி நேரத்திற்குள் ஏற்படும் மரணம் திடீர் மரணம் ஆகும்.

திடீரென்று நல்ல நிலையில் வாழ்ந்து வருகின்றவருக்கும் நல்ல செயலாற்றிக் கொண்டிருப்பவருக்கும் விரைவாக வரும் இத்தகைய மரணம் அபாய நிலைக்குப் பின் வருவதும் எதிர்பாராததும் என்றும் இரண்டு வகைப்படும்.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டும் 6 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் மாரடைப்பு கண்டு திடீரென மரணமடைகிறார்கள். இவர்களில் பாதிப்பேர் மருத்துவமனைக்குக் கொண்டு போவதற்கு முன்பே, வீட்டில் மரணமடைகின்றனர்.

61 சதவிகிதம் மாரடைப்பு மரணம், மார்பு வலி கண்ட முதல் 1 மணி நேரத்தில் வருகிறது. 54 சதவிகிதம் மாரடைப்பு மரணம் மார்புவலி கண்ட 24 மணி நேரத்திற்குள் வருகிறது. 75 சதவிகிதம் மாரடைப்பு திடீர் மரணம் இதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச்செல்லும் 3 கரோனரி இரத்தக் குழாய் அடைப்பினால் வருகிறது. இடது கரோனரி ரத்தக்குழாயினால் 75 சதவிகிதம் பேர் இவ்வாறு எதிர்பாராமல் திடீர் மரணமடைகிறார்கள். ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் என மாரடைப்பால் திடீர் மரணமடைகின்றனர்.

திடீர் மரணத்தின் நான்கு நிலைகள்

1. முன் எச்சரிக்கை நிலை

2. இறுதிநிலை அறிகுறிகள்

3. இருதயத் துடிப்பு நின்று விடுதல்.

4. உடல் திசுக்களின் உயிரிழப்பு.

முன் எச்சரிக்கை நிலை

இந்நிலையில் நோயாளிகளுக்கு மார்பு வலி, மூச்சுத் திணறல், படபடப்பு, சோர்வு, ஆகியவை ஏற்பட்டு இருக்கும். அந்த நேரத்தில் தக்க சிகிச்சைகளை அளித்தால் உடனடி மரணத்திலிருந்து காப்பாற்றலாம்.

இறுதிநிலை அறிகுறிகள்

மேற்கூறிய நிலையிலிருந்து மாற்றத்தைக் காணலாம். அவர்கள் தலைபளுவிழந்து இருத்தல், இரத்த அழுத்தம் குறைதல், இருதயத் துடிப்பிலே மாற்றம் ஏற்படுதல் போன்றவை.

இருதயத் துடிப்பு நின்று விடுதல்

இந்த நிலையில் இருதயத் துடிப்பு நின்றவுடன் மூச்சும் நின்றுவிடுகிறது.

மூன்றாவது நிலையைத் தீவிர சிகிச்சை அளிக்காவிட்டால் அல்லது தீவிர சிகிச்சையில் தோல்வி ஏற்பட்டால் உடலிலே உள்ள திசுக்கள் உயிரிழக்கின்றன. இதை ஆங்கிலத்தில் 'பயோலாஜிக்கல்' டெத், என்பர்.

இருதயத்திலிருந்து ஓடும் இரத்த ஓட்டம் தடைப்பட்டால் உடனடியாகக் கவனித்து இரத்த ஓட்டத்தினைச் சீர் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இருதயத்தின் துடிப்பு நின்றுவிடும் நிலை வரும். இருதயத் துடிப்பு நின்றபோது உடனடியாகத் தீவிர சிகிச்சை அளித்து உயிர்ப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால்

மரணம் ஏற்படும். இந்நிலையில் திரும்பவும் இருதயத்தை இயக்கி வைக்க முடியாது.

எப்போது வரும்? எப்படி தடுப்பது?

வயது ஆக ஆக நம் உடலில் உள்ள இரத்தக் குழாய்களில் கொழுப்புச்சத்து படிந்து இரத்தக் குழாயின் விட்டத்தைச் சுருக்கி விடுவதோடல்லாமல் இரத்தக் குழாய் இறுக்கமாகி, விரிவடையும் தன்மையை இழந்துவிடுகிறது. குறிப்பாக இருதயத்திற்கு இரத்தத்தை எடுத்துச்செல்லும் கரோனரி இரத்தக்குழாய் தமனி இறுக்கத்தினால் தாக்கப்பட்டு இருதயத்திற்குக் குறைவாக இரத்தத்தைச் செலுத்துகிறது. இதனால் மார்பு வலி-மாரடைப்பு, ஏற்பட்டு மரணம் வருகிறது.

இவ்வகை மரணம் பெரும்பாலும் இளம் வயதினருக்கு வருகிறது; 25 முதல் 50 வரை.

76 சதவிகிதம் 20 முதல் 39 வயது வரை உள்ளவருக்கு வருகிறது.

62 சதவிகிதம் 45 முதல் 54 வயது வரை உள்ளவருக்கு வரும்.

58 சதவிகிதம் 55 முதல் 64 வயது வரை உள்ளவர்களைப் பாதிக்கும்.

42 சதவிகிதம் 65 முதல் 72 வயது வரை உள்ளவருக்கு வருகிறது.

மாரடைப்புக் காரணமான திடீர் மரணம் இளம் வயதினருக்கும் இயற்கை மரணம் வயோதிகர்களுக்கும் வருகிறது. ஆண்கள்தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். எந்த நாடு இனம் என்ற பாகுபாடு இல்லை. இவ்வகை மரணம் சில குடும்பங்களில் நிகழ்கிறது. தந்தை திடீர் மரணத்தினால் இறந்தால், மகன் திடீர் மரணத்தினால் இறக்க வாய்ப்பு அதிகமாக உள்ளது.

மாரடைப்பு மரணம் வரும் காரணங்கள்

இளம் வயதினருக்கு இரத்தக் கொதிப்பு இருந்தால் திடீர் மரணம் ஏற்படும். இருதய மின் அலைப்படம் (இ.சி.ஜி) படத்தில் மாறுதல்கள் தெரிந்தால் மரணம் வர வாய்ப்புள்ளது. இரத்தத்தில் கெட்ட கொழுப்பு அதிகமாக இருத்தல், உடல் பருமனாக அதிகமாக இருத்தல், அதிகமான இருதயத் துடிப்பு ஆகியவற்றால் மாரடைப்பு ஏற்படும்.

படித்தவர்கள் விவரம் அறிந்தவர்கள் திடீர் மரணத்தின் காரணங்களை ஓரளவு அறிந்து அதற்கு ஏற்றவாறு தடுப்பு முறைகளை மேற்கொண்டு இவ்வாறான மரணத்தைத் தடுக்கின்றனர். படிக்காதவர்கள் அறியாமையினால் அதிகமாகத் திடீர் மரணத்தினால் இறக்கின்றனர்.

கரோனரி இரத்தக்குழாய் அடைப்புக்குச் சிகிச்சை செய்து வருபவர்களுக்கும் இந்த மரணம் வரலாம். இருதயத்தை நுண் நோய்க்கிருமிகள் வைரஸ், முதலியவை தாக்குதலால் ஏற்படும் மையோகாடைடிட்ஸ் நோயினால் இந்த உடனடி மரணம் ஏற்படலாம். சுரவாங்கி என்ற மூட்டு வீக்க வால்வு நோய்கள் இந்த மரணத்தை அளிக்க வல்லது. பழுதடைந்த வால்வினை அகற்றி செயற்கை வால்வு பொருத்தியவர்களுக்கும் கூட இப்படி மரணம் வரும். இருதயத் துடிப்பில் வேறுபாடுகள் கண்டவர்கள் மரணமடைகின்றார்கள். இருதயத்தின்மேல்உறை பெரிகடாடைட்ஸ் என்ற வியாதியினால் பாதிக்கப்பட்டாலும் மரணம் ஏற்படும்.

பச்சிளம் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் கூட இந்த வகையிலான திடீர் மரணம் வரலாம். இதற்குக் காரணங்கள் பிறவியில் வரும் இருதய நோய், மூளையிலுள்ள மூச்சு மையத்தின் பாதிப்பு ஆகியவைகளே.

கண்டிப்பாக மரணம் அடைபவர்கள்!

1. இடது கரோனரி இரத்தக் குழாய் ஆரம்பப் பகுதியில் அடைப்பு உள்ளவர்கள்.

2. வீங்கிய இருதயம் உள்ளவர்கள்.

3. தாறுமாறான இருதயத் துடிப்புள்ளவர்கள்.

4. ஈரிதழ் வால்வு நீண்டு உள்ளவர்கள்.

5. இருதயத்தில் துடிப்பு மாறுதல் ஏற்பட்டவர்கள்.

மாரடைப்பு கண்டவர்களுக்கு மட்டுமே திடீர் என்று மரணம் வருவதில்லை. இருதயத்தில் பல வகை நோய்கள் உள்ளன; அந்த நோய்கள் பிறவியிலேயே வரும். இருதய நோய்கள் பல; குழந்தைகளுக்கு வரும் சுரவாங்கி, முட்டிவீக்க வால்வு நோய்கள் கண்டவர்களுக்குத் திடீர் மரணம் எந்த நேரத்திலும் வரலாம். மாரடைப்பைத் தவிர மற்ற இருதய நோய்கள் மாரடைப்பிற்குக் காரணமான கரோனரி

விளாம்பழம்

நெஞ்சு வலிக்கிறதே என்று வேதனைப் படாமல் இருக்க விளாம்பழம் சாப்பிடுங்கள். நெஞ்சு வலி பறந்துவிடும்.



இரத்தக்குழாய் அடைப்பு இல்லாத மற்ற நோய்களாவன:

தலையிலே அடிபடுதல், காக்கா வலிப்பு, பாரிசவாயு, அதிக மாத்திரை உட்கொள்ளுதல், ஊசிபோடும் போது ஏற்படும் ஒவ்வாமை. சர்க்கரை நோயினால் ஏற்படும் மயக்கநிலை ஆகியவைகள் மாரடைப்பைத் தவிர திடீர் மரணத்தை வரவழைக்கும் காரணங்கள்.

மரணத்தின் அடிப்படை

இரத்தக் குழாய்களில் ஏற்படும் ரத்தக் கொழுப்பு அடைப்பு பிறகு திடீரென்று இரத்தம் உறைந்து இரத்தக்கட்டி ஏற்பட்டு குழாயில் முழு அடைப்பு ஏற்படுதல். கரோனரி இரத்தக்குழாய் சுருக்கம், மாரடைப்பினால் ஏற்படும் இருதயத்தின் இடது கீழ்அறை வீக்கம், இருதயம் இயங்க இருக்கும் மின்அலை செல்லும் பாதையில் மாற்றம் ஆகியவை திடீர் மரணத்தின் அடிப்படைக் காரணங்கள்.

'கார்டியா அரஸ்ட்'

இருதயத் துடிப்பு நின்றுவிடுவது மட்டுமல்லாமல் மூச்சும் நின்றுவிடுவதுதான் கார்டியா அரஸ்ட்.

ஒருவன் மரணத்தை அடைவதற்கு முன்பே அவனுக்கு இருதய துடிப்பு நின்ற சில வினாடிகளில் சுவாசமும் நின்றுவிடுகிறது. 6 நிமிடங்களுக்கு மேல் நீடித்தாலும் திடீர் முதலுதவிகளைச் செய்யாவிட்டாலும் மரணம்தான் ஏற்படும்.

தொண்டையில் உணவு மாட்டிக் கொள்ளுதல்; இரண்டாவது - செயற்கைப் பற்கள் மூச்சுக் குழாயிலே அடைத்தல்.

இருதயத் துடிப்பு நிற்பதற்கான காரணங்கள்

1. இருதயத் துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 72 தடவை துடிக்கிறது.

2. மாரடைப்பு கண்டவர்களுக்கு இந்தத் துடிப்பு தாறுமாறாக அடித்துக்கொண்டால் இதற்கு வென்றிக்குரல் டாக்காட்டியா - இருதயம் இயங்காமல் நின்றுவிடுவதற்கு வென்றிக்கில் ஏசிஸ்டோல் என்று பெயர்.

3. இருதயத் துடிப்பு, இரத்த ஓட்டமும் நின்றபின் இருதயத்தின் மின் அலை மட்டும் வரை படத்தில் தெரியும் எலெக்ட்ரோ, மெக்கானிக்கல் டிசசோசியேசன்.

இருதயத் துடிப்பு தாறுமாறாக மாறக் காரணம்

1. இருதயத்தில் உள்ள தசைகளில் ஏற்படும் மின்சாரம் ரசாயன மாற்றங்கள் மற்றும் மின்சார அலையில் ஏற்படும் மாற்றம்.

2. இருதயம் தானாக இயங்கி மின் இயக்க சக்தியில் மாற்றம்.

இருதய துடிப்பை மூச்சுநின்றபின் அறிவதெப்படி?

இருதயத் துடிப்பும் மூச்சடைப்பும் நிற்பதற்குச் சில வினாடிகளுக்கு முன்பு அமைதியின்றியும் துடிப்போடும் இங்கும் அங்கும் அலையும் தன்மை ஏற்படும். சம்மந்தமில்லாமல், இடம் நேரமறியாது எதையாவது பேசுவார். இவைகள்தான் மிக முதல் அறிகுறிகளாகத் தோன்றும். மேலும் மூச்சடைப்பு, படபடப்பு, முகம் வெளுத்துக் காணப்படுவது அதிகமாக வியர்ப்பதும் இருக்கும். அத்துடன் மூச்சுவிடக் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பார்.

இறுதி அறிகுறிகள்

கை, கால், கழுத்து முதலியவைகளுக்கு ஓடும் இரத்தக்குழாயில் துடிப்பு இருக்காது. இருதயத் துடிப்புச் சத்தம் கேட்காது. மூச்சு நிற்பது, இருதய துடிப்பு நின்ற 60 வினாடிகள் கழித்து நின்றுவிடும். கண்களிலுள்ள பாப்பா விரிந்திருக்கும். சில நேரங்களில் வலிப்பு ஏற்படும். இருதய மின் அலையில் தாறுமாறான துடிப்பு இருக்கும்.

திடீர் மரணத்திற்குப் பிறகும் மறுவாழ்வு

1. முதலில் நின்ற இருதயத் துடிப்பினை மீண்டும் இயக்க வைக்கலாம்.

2. மூளைக்குப் போதிய பிராணவாயுவினைச் செலுத்த வேண்டும்.

3. நின்றுவிட்ட மூச்சினைத் திரும்பவும் ஆரம்பிக்க வேண்டும்.

இந்த 3 முக்கிய நோக்கத்தோடு நோயாளிக்கு மறுவாழ்வுச் சிகிச்சை அளிக்க வேண்டும். அவைகள்:

1. ஆரம்பச் செயல்கள்.

2. அடிப்படை இருதயத் துடிப்பு உதவி.

3. உயர்நிலைத் துடிப்பு உதவி.

4. இருதயத் துடிப்பு நின்ற பின் மறுவாழ்வுச் சிகிச்சையின் கண் காணிப்பு.

5. நீண்டகால ஆலோசனை - வைத்தியம்.

ஆரம்பச் செயல்கள்

இருதயத் துடிப்பும் மூச்சும் நின்றதைச் சரிவர அறிந்து கொள்ள வேண்டும். தாக்கப்பட்ட வர்களின் தோளிலே தட்டி 'அலோ' என்று அழைக்கவேண்டும். அப் போது எந்தவிதப் பேச்சும் இல்லை என்று அறிந்தவுடன் பக்கத்தில் உள்ளவர்களை உதவிக்கு அழைக்க வேண்டும். அந்த நேரத்தில் தாக்கப்பட்டவரின் கழுத்தில் - கோரசில் கைவைத்து இரத்த ஓட்டம் உள்ளதா என்று கவனிக்க வேண்டும். அதோடு, மூக்கின்மேல் கை வைத்து மூச்சு விடுகின்றாரா என்றும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இருதயத் துடிப்பு நின்ற பின்பு தான், மூச்சு நின்றது என்பதை அறியவேண்டும். அறிந்தபின் மார் பின் மேல் லாவகமாக ஓங்கிக் குத்த வேண்டும். நமது குத்து மிகவும் வேகமாகவும், பலமாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால் தாறுமாறாக அடித்து நின்ற இருதயத்தை ஓங்கிக் குத்துவதால் தாறுமாறான துடிப்பு நின்று விடும். அதோடு இருதயமும், ஒழுங்காகச் சீராகத் துடிக்க ஆரம்பித்துவிடும். நமது கைக் குத்து ஒரு அடி தூரத்தில் இருந்து மார்பின் நடுப்பகுதியில் குத்த வேண்டும்.

செயற்கை மூச்சு

அடுத்து மூச்சுக் குழாயின் வழியை சுத்தம் செய்ய வேண்டும். மூச்சுக் குழாயில் சளி, நீர் இருந்தால் அதை நீக்க வேண்டும். அதன் பிறகு முகட்டினை மேலே தூக்கி கழுத்தின் பின்பகுதி முதுகில் மேல்படும்படி தள்ளி, வாயைத் திறக்க வேண்டும்.

அடிப்படை உதவி என்பதால், மூச்சுக் குழாயினை மேற்கூறிய முறையில் சுத்தப்படுத்தி வாயைத் திறக்க வேண்டும். அதன்பின் வாயோடு வாய் வைத்துக் காற் றினைத் தாக்கப்பட்டவர் வாயில் ஊத வேண்டும். இதையே மருத்துவமனையாக இருந்தால் மூச்சு இயக்க செயற்கை மூச்சுக் கருவிகளைப் பொருத்தி மூச்சு இயக்கத்தைச் சரி செய்யலாம்.

இருதயத் துடிப்பை இயக்க தாக்கப்பட்டவரின் மார்பின் நடுப் பகுதியில் நமது வலது கையை வைத்து அதன்மீது இடது கையை வைத்து அழுத்த வேண்டும். அப்படி அழுத்தும்போது இதயத் தின் மீது அழுத்தம் ஏற்பட்டு இருதயம் துடிக்க ஆரம்பிக்கும். அதே நேரத்தில் செயற்கை மூச்சு இயக்கத்தையும் செய்யவேண்டும்.

மார்புச்சளி மறைய

ஒரு கைப்பிடி முருங்கைக் கீரையை ஒரு டம்ளர் தண்ணீரில் வேகவைத்து, குளிரவைத்து உப்பு, மிளகு எலுமிச்சைச்சாறு கலந்து குடித்துவந்தால் மார்புச் சளி குணமாகும். சிலருக்கு ஆஸ்துமாகூட குணமாகும்.

நவீன சிகிச்சை முறைகள்

இவைகளை ஏழு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. ஆரம்பச் செயல் முறைகள்.

2. நவீன கருவிகளை உப யோகித்தல்.

3. இருதயத் துடிப்பினைக் கண்காணித்தல்.

4. இருதயத் துடிப்பு இயக்கக் கருவிகளை உபயோகித்தல்.

5. இரத்தக்குழாய்கள் மூலம் மருந்துகளைச் செலுத்துதல்.

6. சரியான மருந்துகளை உபயோகித்தல்.

1. உடலில் ஏற்படும் இரசாயன மாற்றத்திற்கு மருந்து.

2. இரத்த ஓட்டத்தைச் சீராக்க மருந்துகள்.

3. இருதயத் துடிப்பு தாறு மாறாகத் துடிப்பதைச் சீராக மாற்றுதல்.

7. நோயாளியை நல்ல நிலைக் குக் கொண்டுவருதல்.

இருதயத் துடிப்பினைக் கண் காணித்துக் கொண்டு தாறு மாறான மாற்றங்களை அறிந்து, உடனுக்குடன் மருந்துகளை இரத்தக்குழாய் மூலம் செலுத்தி இருதயத் துடிப்பினைச் சீராக்க வேண்டும்.

இருதயத் துடிப்பு தாறுமாறாக இயங்குவதால் இருதயம் செய லிழந்து நின்று விடுகிறது. தாறுமாறாக வேகமாக இயங்கும் இருதயத் துடிப்பினைச் சரிசெய்ய மார்பின் மீது ஓங்கி குத்திவிட்டு சரியாக இயங்காவிட்டாலும், அதே நேரத்தில் இரத்தக்குழாய் துடிப்பு கழுத்தின் பகுதியில் இல்லாவிட்டால் உடனடியாக இருதயத் துடிப்பு இயக்கக் கருவி யினை உபயோகப்படுத்தி இரண்டு தட்டையான பிளேட்டு களை ஒன்று மார்பின் இடது புறத்திலும் மற்றொன்றினை மார் பின் நடுப்பகுதியிலும் வைத்து 250 ஜூவல் மின்சாரத்தைச் செலுத்த வேண்டும். அப்படி மின்சாரத் தைச் செலுத்தும் போது இருதயம்

வயிறு பசிக்க

கொய்யா மரத்து இலை இர்ண்டைப் பிடுங்கித் தின்றால் வயிறு பசிக்க ஆரம்பித்து விடும்.

சீராக இயங்கச் செய்கிறது. முதல் முறையில் வெற்றியடையாவிட் டால் இரண்டாவது முறையில் சற்று கூடுதலாக மின்சாரத்தைக் கொடுத்து அதாவது 300 ஜூவல் கொடுக்க வேண்டும். இது போன்று 3 அல்லது 4 முறைகள் மின்சாரத்தைச் செலுத்தினால் இருதயத் துடிப்பு மறுபடி வரும்.

இருதயத் துடிப்பு சீராக இயங்கியபிறகு, விட்டோகையின் என்ற மருந்தினை இரத்தக்குழாய் மூலம் உள்ளே செலுத்த வேண்டும். அப்படியும் இயங்க வில்லையென்றால் மாற்று மருந்து பிரிட்டிலியம் டோசிலேட் என்ற மருந்தினைக் கொடுக்க வேண்டும். சோடா பை-கார்பனேட் என்ற மருந்தினையும் கொடுக்க வேண் டும். அப்படியும் இருதயம் இயங்கவில்லையென்றால் மறு முறையும் துடிப்பு இயங்குவதற்கு மின்சாரத்தைச் செலுத்த வேண்டும்.

இந்த முறைகளைப் பலமுறை கையாண்டு எந்தவித முன்னேற்ற மும் ஏற்படவில்லையென்றால், இந்தத் தீவிர சிகிச்சை முறையைக் கைவிட வேண்டும். அதற்கு முன்பு இருதய மின் அலை இ.சி.ஜி. மூச்சு முதலியவைகள் நின்றுவிட்டது என்பதை உறுதியாகத் தெரிந்த பின்புதான் கைவிட வேண்டும். உணர்வு இழந்து இருதயத் துடிப் பும் மூச்சு இயக்கமும் இயங்காமல் இருந்து, கண் விழித் திரை பாப்பா பெரியதாகத் தெரிந்தால் மரணம் அடைந்துவிட்டார் என்று கூறலாம்.

இந்தத் தீவிர சிகிச்சை முறை யில் வெற்றி கண்டு நோயாளி பிழைத்துக் கொண்டால், அவர் களை நன்றாகப் பரிசோதனை செய்து அவர்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளதா, மார்பு வழி சார்பு நோய் உள்ளதா, தாறு மாறாக இயங்கும் இருதயத் துடிப்பு உள்ளவரா என்ற விவரங்களை இருதயம் மின் அலை படம் இ.சி.ஜி. பயிற்சி இருதய மின் அலை படம் இ.சி.ஜி. இருதயம் உள் ஆராய்வு செய்து இருதயத்திற்கு இரத்தத்தை எடுத் துச் செல்லும் இரத்தக்குழாயில், எந்த இரத்தக்குழாயில் அடைப்பு ஏற்பட்டுள்ளது என அறிந்து அதற்கு ஏற்றாற்போல் சிகிச் சையை மேற்கொள்ள வேண்டும்.

கரோனரி இரத்தக்குழாய் அடைப்பை எடுத்தவுடன் அறுவை சிகிச்சை செய்யத் தேவையில்லை. மருந்துகள் உட்கொண்டும், மார்பு வழியின் கடுமை நாளுக்குநாள் அதிகமாகி அன்றாட வேலை களுக்குப் பாதிப்பு ஏற்பட்டால் கரோனரி பைபாஸ் என்ற அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம். கரோனரி பைப்பாஸ் அறுவை சிகிச்சையும் முழு குணத்தையும் கொடுக்காது. இந்த அறுவை சிகிச்சை மூலம் இருதயத்திற்குச் சிறிது அதிகமாக இரத்தத்தைச் செலுத்த இயலும். அதனால் மார்புவலி குறைந்து தடைபட்ட அன்றாட செயல்களை, மீண்டும் வேதனையில்லாமல் செய்ய இயலும். அவ்வளவே!

ஆனால் - கொழுப்புச் சத்துள்ள உணவைத் தவிர்த்தல், புகை பிடியாதிருத்தல், காலை-மாலை நடத்தல், ஏற்ற உடற்பயிற்சி செய்தல் போன்றவற்றின் மூலம் இதய நோய்க்கே ஆளாகாமல் இருக்கவும் முடியும்.

தமிழரசு
படிக்க ... பயன்பெற ... பாதுகாக்க

'தமிழரசு' தமிழ்
(மாதம் இருமுறை)
சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா .... ரூ. 72
அரையாண்டுச் சந்தா ... ரூ. 36

'தமிழரசு' ஆங்கிலம்
(மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ. 36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை
சென்னை - 600 002.

எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை:

எங்கள் ஊர் சீர்காழி தாலுக்காவில் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புளியந்துறை என்கிற கிராமம். எங்கள் ஊரில் 3000 மக்கள் வசிக்கின்றனர். குடிநீருக்காகச் சென்ற ஆண்டு தண்ணீர்த் தொட்டி கட்டி, தெருத் தெருவாகப் பம்ப் வசதிகள் செய்துள்ளார்கள். 1 வருடத்திற்கு மேல் ஆகியும் இதுவரை குடிநீர் வந்தது கிடையாது. அதனால் அதைச் சரிசெய்து அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். முருகேசன்
புளியந்துறை அஞ்சல் -
சீர்காழி வட்டம் 609 101

தீர்வு:

குறிப்பிடப்பட்டுள்ள கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட புளியந்துறை என்னும் ஊராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்குச் செல்லும் மின் ஒயர்களில் அடிக்கடி மின் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவதால், மின் இணைப்பு அவ்வப்போது துண்டிக்கப்படுவதுடன், மோட்டார் காயில் தீய்ந்து விடுகிறது. மேற்கண்ட குறைகள் அவ்வப்போது சீர்செய்யப்பட்டு வருகின்றன. மேலும் மின் ஒயர்கள் அமைந்துள்ள இடத்தில் மரங்கள் அடர்ந்து உள்ளதால் அடிக்கடி மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு விடுகிறது. தற்போது மேற்கண்ட மரக் கிளைகள் அனைத்தும் வெட்டப்பட்டு, மின் வாரியத்தினை அணுகி மின் ஒயர்கள் சரிசெய்யப்பட்டு இப்போது மோட்டார் நல்ல நிலையில் இயங்கி அனைத்துத் தெருக்களிலும் உள்ள பைப்புகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது, என்ற விவரத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெ. ரங்கன்
ஆணையர்
ஊராட்சி ஒன்றியம், கொள்ளிடம்.

பிரச்சினை:

காமராசர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், திருச்சுழி ஒன்றியம், கீழ்க்குடி கிராமத்தில் உள்ள நடுநிலைப்பள்ளி மாணவர்கள் எழுதுவது, எங்கள் பள்ளியில் தற்போது இருநூற்று முப்பத்தொன்று மாணவர்கள் பயில்கிறார்கள். எங்கள் பள்ளிக்கென 1982ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டத்தில் பள்ளிக் கட்டடம் ஒன்று திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டது. இக்கட்டடம் இதுநாள் வரை பள்ளிக்கென வழங்கப்படவில்லை. சில ஆண்டுகளாக இக்கட்டடத்தில் பாலர் பள்ளி சத்துணவு மையம் நடைபெற்றுவருகின்றது. சித்தா மருத்துவமனை நடைபெற்று வருகின்றது. பள்ளிக்கெனக் கட்டப்பட்ட இக் கட்டடத்தை எங்களுக்கு வழங்காமையால் நாங்கள் இடமின்றி மழையில் நனைகிறோம். வெயிலில் காய்கின்றோம். காற்றில் கஷ்டப்படுகின்றோம். பள்ளிக்கெனக் கட்டப்பட்ட இக்கட்டடத்தை எங்களுக்கு மீட்டுத் தருமாறு வேண்டுகிறோம்.

ஆறாம் வகுப்பு
மாணவ, மாணவிகள்,
கீழ்க்குடி கிராமம்,
திருச்சுழி ஒன்றியம்,
அருப்புக்கோட்டை வட்டம்,
காமராசர் மாவட்டம்.

தீர்வு:

காமராசர் மாவட்டம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியம், கீழ்க்குடி கிராமத்தில் உள்ள பள்ளிக்கான ஒரு பிரதானக் கட்டடமும், இரண்டு கூடுதல் கட்டடங்களும் கட்டித்தரப்பட்டுள்ளன. இவற்றில் பிரதானக் கட்டடத்திலும், ஒரு கூடுதல் கட்டடத்திலும் தற்போது பள்ளி இயங்கிவருகிறது. ஒரு கூடுதல் கட்டடத்தில்தான் சித்தா மருத்துவமனை இயங்கிவருகிறது. இதனால் பள்ளியின் மாணவ மாணவிகளுக்கு எந்தச் சிரமமும் இல்லை. மேலும் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 1995-96ம் ஆண்டு கூடுதல் திட்டத்தின்கீழ் கீழ்க்குடி கிராமத்தில் கூடுதல் பள்ளிக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் நக.சி2/1120/95, நாள் 17.9.96ன்படி அனுமதி வழங்கப்பட்டு உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜி. குருசாமி
ஆணையாளர்
திருச்சுழி ஊராட்சி ஒன்றியம்
காமராசர் மாவட்டம்



கூட்டுறவுத்துறையின் சாதனை மணக்கும் பணிகள்

43-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவை (நவம்பர் 14ந் தேதி முதல் 20ந் தேதி வரை) முன்னிட்டு கூட்டப்பட்ட செய்தியாளர்கள் கூட்டத்தில் 7.11.96 அன்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு வே. தங்கப்பாண்டியன் அவர்கள் கலந்துகொண்டார். அப்போது கூட்டுறவுத்துறையில் நிறைவேற்றப்பட்ட பணிகள் குறித்து அவர் குறிப்பிட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

☆ நடப்பு நிதியாண்டில் குறுகிய காலக் கடன் ரூ.287 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

☆ மத்திய காலக் கடன் கடந்த 6 திங்களில் வழங்கப்பட்டத் தொகை ரூ.20.40 கோடி, நீண்ட காலக் கடன் 6 மாதத்தில் ரூ.32.67 கோடி வழங்கப்பட்டது.

☆ நகைக் கடன் ரூ.2000 கோடி வழங்க இலக்கு. கடந்த 6 மாதங்களில் வழங்கப்பட்ட நகைக்கடன் ரூ.1153 கோடி.

☆ வாழ்வில் நலிவுற்றவர்கள் 70 சதவிகிதம் பயனடைய இலக்கு. 6 மாதத்தில் சாதனையும் 70 சதவிகிதம் ஆகும்.

☆ பண்ணைச்சாராக் கடன் திட்டத்தில் சிறு தொழில்கள் தொடங்குவதற்கு ரூ.36 கோடி வழங்கப்பட்டுள்ளது.

☆ வேளாண்மைக்கு ரூ.75 கோடி அளவிற்கு உர விற்பனை செய்யப்பட்டுள்ளது.

☆ விளைபொருள்கள் விற்பனை ரூ.425 கோடி இலக்கு. இது காறும் வேளாண் விளை பொருள்கள் விற்பனை ரூ.318 கோடியாகும்.

☆ நுகர்வோர் நுகர்பொருள் விற்பனை இலக்கு ரூ.1850 கோடி. தற்போது நுகர் பொருள் விற்பனை ரூ.887 கோடி.

☆ தேர்ந்தெடுக்கப்பட்ட 30 வகையான அத்தியாவசியப் பொருள்களை வெளிச் சந்தை விலையை விட 5 சதவிகிதம் குறைவான விலையில் விற்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

☆ தீபாவளி பண்டிகையையொட்டி தரமான பட்டாசுகளை ரூ.50, ரூ.100 மதிப்பில் விற்பனை செய்வதோடு, சிறார்களுக்கென்று தனியாகவும் பட்டாசு பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டன.

☆ இத்தகைய சலுகை விற்பனை 25.10.96 முதல் 9.11.96 வரை இடைவெளியின்றி விற்பனை செய்யப்பட்டது. பண்டக சாலைகளில் குறிப்பிட்டத் தொகைக்கு மேல் பொருள்கள் வாங்குவோர்க்குப் பரிசு கூப்பன்கள் வழங்கப்பட்டன.

☆ திருவாரூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு புனரமைப்பிற்காக பங்கு மூலதனம் ரூ.21 இலட்சம்.

☆ அனையாறு மகளிர் கூட்டுறவு பண்டக சாலையில் நவீன சில்லரை விற்பனை நிலையம் அமைக்க ரூ.2 இலட்சமும், இராணிப்பேட்டை கூட்டுறவு பண்டகசாலையில் நவீன கூட்டுறவு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க ரூ.2 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

☆ இராமநாதபுரம் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, சிவகாசி நுகர்வோர் லித்தோ ஒர்க்ஸ், தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலை, உதகமண்டலம் கூட்டுறவு பண்டகசாலை ஆகியவற்றிற்கு மூன்று சில்லரை விற்பனை நிலையம் அமைக்க தலா ரூ.1.35 இலட்சம், ஆக மொத்தம் ரூ.4.05 இலட்சம், திருபுவனம் கூட்டுறவு பண்டகசாலை, புஞ்சை புளியம்பட்டி கூட்டுறவு பண்டகசாலை, திண்டுக்கல் தபால் தந்தி ஊழியர்கள் கூட்டுறவு பண்டகசாலை ஆகியவற்றிற்குச் சிறிய அளவிலான மூன்று சிறிய விற்பனை நிலையம் அமைக்க தலா ரூ.60 ஆயிரம் வீதம் ரூ.1.80 இலட்சம் நடப்பு நிதியாண்டில்

பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

☆ விவசாயிகளுக்கு உடனடியாக கடன் வழங்குவதற்கு 3.10 இலட்சம்பேர்களுக்கு பச்சை வண்ண அட்டைகள் வழங்கி ரூ.119.37 கோடி கடன் வழங்கப் பட்டிருக்கிறது.

☆ வாழ்வில் நலிவுற்றவர்களுக்கு 30.9.96 வரை குறுகிய, மத்திய காலக் கடன் ரூ.176.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.

☆ ஆதிதிராவிடர்களுக்குக்குறுகிய கால, மத்திய காலக் கடன் ரூ.35. 55 கோடி, நீண்ட காலக் கடன் ரூ.32.67 கோடியும் 30.9.96 வரை வழங்கப்பட்டிருக்கிறது.

☆ தேவையின் அடிப்படையில் சிறு வியாபாரங்கள் செய்வதற்கு 3 ஆயிரம் பேருக்கு ரூ.40 இலட்சம் கடன் வழங்கப் பட்டிருக்கிறது.



☆ மலைவாழ் மக்களுக்கு நுகர் பொருள்கள் விநியோகிப்பதற்காக 30 கூண்டு வண்டிகள் ரூ.97.57 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

☆ மலைவாழ் மக்களுக்குக் கடன் வசதி வழங்குகின்ற வகையில் அரசு மானியம் ரூ.117.37 இலட்சம் நடப்பாண்டில் வழங்குகிறது.

☆ ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டப் பணிகள் கோவை, திருவண்ணாமலை சம்புவராயர் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இத் திட்டப் பணிகள் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., இராமநாதபுரம் மாவட்டங்களிலும் தலா ரூ.8.19 கோடி, மதிப்பீட்டில் 1997-98ல் தொடங்க உள்ளன.

43வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவையொட்டி,

☆ மருத்துவ வல்லுநர்கள் நேர் காணல்,

☆ மக்கள் நோய் அறிதல் முகாம்.

☆ இலவச பல் சிகிச்சை மற்றும் கண் சிகிச்சை முகாம்.

☆ தோல் சிகிச்சை முகாம்.

☆ இரத்ததான முகாம்.

☆ மரக்கன்றுகள் நடும் முகாம்.

☆ சுற்றுச் சூழல் முகாம்.

ஆகிய முகாம்கள் நடத்தப் பட்டன. இதன்மூலம் பல்லாயிரக் கணக்கான மக்கள் பயனடைந் தார்கள்.

SEENIAPPA TILE FACTORY
MANAMADURAI - 623 606
PHONE:
Office: 68526
Factory: 68626
Manufacturers of:
Quality Raja Mark Roofing Tiles, Ridges, Flooring Tiles

கோடு தாண்டிய கோதை

- அன்னம்

இரவின் நிசப்தத்தைக் கிழித்துக் கொண்டு நெல்லை எக்ஸ்பிரஸ் சீரான வேகத்தில் ஓடிக் கொண்டிருந்தது.

ஜன்னல் ஓரமாக அமர்ந் திருந்தாள் சௌம்யா, பௌர்ண மிக்கு இரண்டு நாட்களே இருந்ததாகையால், மேகமற்ற வானிலிருந்து சந்திரன் விழிக்கு இதமான ஒளியினால் உலகைப் போர்த்தியிருந்தான். அவளுக்கு நேர் எதிரே அமர்ந்திருந்த கௌதமன் தன் கால்களை உரிமையுடன் அவள் மடியில் போட்டுக் கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரும் வாழ்க் கையில் இணைந்து மூன்று நாட்கள் தான் ஆகின்றன. திருமணம் முடிந்த பின் தேனிலவிற்கு என்று எல்லோரும் ஊட்டி, கொடைக்கானல் என்று போவார்கள். இவர்களோ கல்லிடைக் குறிச்சிக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்திற்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

சௌம்யாவுக்கு என்னவோ இதில் விருப்பம் இல்லைதான். ஆனால், கௌதமனுடைய அப்பாவின் பேச்சைத் தட்ட முடியவில்லை. கௌதமனின் தாத்தா ஸ்வாமிநாத ஸ்ரௌதிகள் ஊரில் இருந்தார். வயது கிட்டத்தட்ட தொண்ணூறு. கூடப் பழுத்த சுமங்கலி பாகீரதி பாட்டியும் இருந்தாள். அவர்களிடம் ஆசிர்வாதம் பெற்று உள்ளூர்க் கோவிலில் நேத்திக் கடன்களை முடித்துவிட்டுத்தான் வர வேண்டும் என உறுதியாகச் சொல்லிவிட்டார்.

தாத்தா குடும்பத்திற்கு மூத்தவர். நான்கு தம்பிகள், மூன்று தங்கைகளை வளர்த்து ஆளாக்கியவர். அவருக்கேமூன்று பிள்ளைகள். ஐந்து பெண்கள். கௌதமனின் அப்பாதான் கடைசிப் பிள்ளை. சப்ஜட்ஜாக இருந்து ஓய்வு பெற்றவர். வயது அதிகம் ஆனாலும் திடமாக இருந்தார். ஊரில் எல்லோராலும் மதிக்கப் படுபவர். குறையாத செல்வம் உள்ளவர். பதினைந்து வருஷங்களாக ஊரைவிட்டு எங்கேயும் வெளியே வருவதில்லை. வீட்டில் விரிவான பூஜைகள் உண்டு. கணீரென்ற குரலில் பாராயணம் செய்வார். நல்ல மனம். எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என நினைப்பவர்.

கௌதமன் தன் தாத்தாவைப் பற்றிப் புகழ்ந்து கொண்டே பேசினான்.

'ரொம்பக் கட்டுப்பாடு இருக்குமோ? எனக்குப் பயமாக இருக்கிறது கௌதம்.

'இதில் தான் எல்லா விவகாரமும் ஆரம்பிக்கிறது. புருஷனைப் பெயரிட்டுக் கூப் பிடுவது தாத்தாவுக்குப் பிடிக் காது. பல் தேய்க்காமல் காப்பி சாப்பிடுவது புருஷர்கள் நின்று கொண்டிருக்கும்போது உட்

காருவது, அவர்கள் சாப்பிட்டு முடிக்குமுன் தான் சாப்பிடுவது, அனாவசியமாக இரைந்து பேசுவது, சிரிப்பது..'

'ஓ! காட்... நமக்கெல்லாம் ஆகாதப்பா, பேசாமல் திரும்பி விடலாம்.'

'அதே வீட்டில் என் பாட்டி எழுபது வருஷங்களுக்கு மேல் வாழ்ந்திருக்கிறாள் என்ன சொல்கிறாய்?'

'கிராமத்துக் கட்டுப்பெட்டி, கிணற்றுத்தவளை.'

'இல்லை என் பாட்டி படிக்காதவள் இல்லை. உன் மாதிரி கான்வெண்டில் படித்து தாட்பூட் என இங்கிலீஷில் பேசத் தெரியாதவள்தான். ஆனால் காளிதாசனின் காவியங்கள் அத்தனையும் பாடம்., இந்த எண்பத்திரண்டு வயதிலும் குரலில் பிசிறு தட்டாமல் பாடுவாள்.

'அம்மாடி, பாட்டியைப் பற்றிச் சொன்னால் என்னமாக கோபம் வருகிறது? உரலில் மாட்டிக் கொண்டாயிற்று. இனி உலக்கைக்குத் தப்பமுடியுமா! இந்த நான்கு நாட்களில்தான் எப்படி நடந்து கொள்ள வேண்டும். சொல்லுங்கள்.

'காலையில் ஐந்தரை மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டும். பல் தேய்த்து, முகம் கழுவி, பொட்டிட்டு'...

'இதெல்லாம் எனக்குத் தெரியும். மேலே சொல்லுங்கள்.' 'பெட் காப்பி' கேட்காமல், புதிதாக வந்த மாட்டுப் பெண் வாசலில் கோலம் போட வேண்டும். தினமும் தலைக்குக் குளிக்க வேண்டும். கீழே தலைமுடி உதிராமல் கவனமாக இருக்க வேண்டும். குளித்த பிறகுதான் காப்பி.'

'பத்து மணிக்காவது கண்களில் காட்டுவார்களா?"

'நீ குளித்து முடித்துவிட்டு வந்தவுடன் காப்பி தயாராக இருக்கும். பாட்டி கைக் காப்பி ஒரு தரம் சாப்பிட்டால் அங்கேயே தங்கக் கூட விரும்புவாய். அத்தனை அமிர்தமாக இருக்கும்.'

"சரி .. அப்புறம்?"

"தாத்தா சீக்கிரம் எழுந்து விடுவார். தன் ஜபதபங்களை



'இதெல்லாம் எனக்குத் தெரியும். மேலே சொல்லுங்கள்.' 'பெட் காப்பி' கேட்காமல், புதிதாக வந்த மாட்டுப் பெண் வாசலில் கோலம் போட வேண்டும். தினமும் தலைக்குக் குளிக்க வேண்டும். கீழே தலைமுடி உதிராமல் கவனமாக இருக்க வேண்டும். குளித்த பிறகு தான் காப்பி.'

யெல்லாம் முடித்து விட்டு பூஜைக்கு உட்கார்ந்தால் அது முடிய மணி பன்னிரண்டு ஆகும். குளிக்காமலோ நம் மரபுப்படி புடவை உடுத்தாமலோ பூஜை அறைக்குள் போகக் கூடாது."

"உங்கள் அம்மா சொல்லி அனுப்பியிருக்கிறார். ஒன்பது கஜப் புடவை கொண்டு வந்திருக்கிறேன்."

"கொண்டு வந்தால் போதுமா? கட்டிக் கொள்ளத் தெரிய வேண்டாமா?"

சௌம்யா அவனை அடிக்கக் கையை ஓங்கினாள்.

தெரியாவிட்டால் பரவாயில்லை. பாட்டி சொல்லிக் கொடுப்பாள்" என்றான் கௌதமன்.

"அப்புறம் உனக்குப் பன்னிரண்டு மணி வரை பசி தாங்காது என்று எனக்குத் தெரியும். மாடியில் நம் பெட்டியில் நிறைய பிஸ்கட் பொட்டலம் இருக்கும். சாப்பிட்டுக் கொள். கீழே வரும்போது வாயை நன்றாகத் துடைத்துக் கொண்டு வா." சௌம்யா சிரித்தாள்.

"நீங்கள் மாட்டிக் கொண்டு இருக்கிறீர்கள். அது தான் சொல்கிறீர்களா?"

"ஆமாம். அப்புறம் தாத்தா பூஜை செய்யும் போது சப்தம் போட்டு யாரும் பேசக் கூடாது. இருமல் தும்மல் வந்தால் தள்ளிப் போக வேண்டும்."

"மூச்சுவிடலாமா இல்லையா?" எனக் கேட்டாள் சௌம்யா இடக்காக.

"தாத்தா அதிர்ந்து பேச மாட்டார். தப்பு ஏதானும் நடந்தால் திட்ட மாட்டார். கத்த மாட்டார். தன்னையே தண்டித்துக் கொள்வார். அன்றைக்கு உபவாசம் இருப்பார். மற்றவர்களுக்குச் சிரமமாகப் போகும்."

சௌம்யா புரிந்து கொண்டாள். பயம் பூரணமாக விலகா விட்டாலும் எப்படியாவது நான்கு நாட்கள் சமாளித்து விடலாம் எனத் தைரியம் வந்தது.

வீட்டு வாசலில் பாட்டி ஆரத்தித் தட்டுடன் காத்திருந்தாள். முதல் பார்வையிலேயே சௌம்யாவிற்குப் பாட்டியைப் பிடித்துப் போய்விட்டது. லட்சுமிகரமான முகம். கண்களில் கனிவு. பேச்சில் இதம்.

பழைய காலத்து வீடு. இருந்தாலும் நன்றாகப் பராமரிக்கப்பட்டிருந்தது. ரேழி நடையைத் தாண்டியவுடன் கம்பி போட்ட முற்றம். நான்கு புறமும் அறைகள். மழுமழு வென்ற மரத்தூண்கள். தேக்கு மரச் சட்டங்கள் போட்ட கூரை, கூடத்தில் டி.வி. இருந்தது. வி.சி.ஆர் இருந்தது.

கௌதம் சௌம்யாவை மாடிக்குக் கூட்டிப் போனான். இரண்டே அறைகள் தான். கீழே விசாலமாக குளியலறை. நான் கடிக்கு ஆறடி இல்லை. பானையில் வெந்நீர் கொதித்துக் கொண்டிருந்தது. இதமான சூட்டில் சௌம்யா குளித்து முடித்தாள். பக்கத்தில் உடை மாற்றிக் கொள்ளத் தனி அறை.

ஒன்பது கஜப் புடவைகளைப் பிரித்து உடுத்த முயன்ற சௌம்யா தோற்றுப் போனாள். பாட்டி உள்ளே வந்து கற்றுக் கொடுத்தாள். கட்டி விட்டாள் என்றே சொல்லலாம். கூந்தலைச் சீவிப் பின்னலிட்டு மல்லிகைச் சரம் சூட்டி மணப்பெண்ணைப் போல் அழைத்து வந்தாள்.

இதற்குள் பஞ்சகச்சம் கட்டிப் பட்டை பட்டையாக விபூதி பூசிக் கௌதமன் காத்திருந்தான்.

இருவருமாகப் பூஜை அறையில் நுழைந்தார்கள். அங்கே சௌம்யா தாத்தாவை முதல் முறையாகப் பார்த்தாள்.

கிட்டத்தட்ட, ஆறடி உயரம் இருப்பார். நல்ல சிவந்த நிறம் பட்டையான கரைபோட்ட வேட்டி, அங்கவஸ்திரம், மணையில் இருந்தபடியே நமஸ்கரிக்கச் சொன்னார்.

சௌம்யா கௌதமின் இடது பக்கம் நின்றபடியே நமஸ்கரிக்கயத்தனித்தாள்.

"உம்..." என்ற உறுமல்



தாத்தாவின் கண்டத்திலிருந்து எழுந்தது.

பாட்டி அவசர அவசரமாக சௌம்யாவை கௌதமின் வலப் புறம் பிரதட்சிணமாக வரச் சொன்னாள். இருவரையும் இரண்டு கைகளால் பூ எடுத்துப் போட்டு விட்டு நமஸ்காரம் செய்யச் சொன்னாள். இரண்டு கைகளையும் தூக்கி பெரியவர் ஆசிர்வதித்தார்.

பகல் உணவு, தாத்தா, பேரன், மற்ற ஆடவர்கள் முதலில் சாப்பிட்டார்கள். பாட்டி, சௌம்யாவைப் பாயாசம் வைக்கச் சொல்லி அனுப்பினாள். ஒன்பது கஜப் புடவையில் நடக்கச் சிரமமாக இருந்தது. தாத்தாவிடம் இருந்த பயம், இலையில் பாயாசம் வைக்கும் போது தரையில் சிந்தி விட்டது. தாத்தா நிமிர்வதற்குள் பாட்டி துடைக்கத் துணியுடன் காத்திருந்தாள்.

பின்னர் சௌம்யா சாப்பிட்டாள். பாட்டி பக்கத்தில் உட்கார்ந்து உபசரித்தாள். எல்லோரையும் பற்றி அன்பாக விசாரித்தாள். சாப்பாடு முடிந்தவுடன் கூடத்திற்குப் போனார்கள். தாத்தா ஒரு கையால் விசிறியபடி ஊஞ்சலில் உட்கார்ந்தார்.

சௌம்யா ஒரு தூணைப் பிடித்தபடி நின்றாள். அவளை அவர் பல கேள்விகள் கேட்டார். அவள் படிப்பு பற்றி, அவள் உத்தியோகம் பற்றி, அவள் அப்பா, அம்மாவைப் பற்றி, சௌம்யா அசந்து போனாள். இந்த மனிதர் தான் எத்தனை விஷயங்கள் தெரிந்து வைத்திருக்கிறார். கிணற்றுத் தவளை என எடை போட்டது எத்தனை தவறு?

பகலில் படுப்பது அந்த வீட்டில் வழக்கம் இல்லை என எச்சரித்திருந்தான் கௌதம். அவனைத் தனியே சந்திக்கக் கூட அவளால் இரவு பத்து மணிக்குதான் முடிந்தது.

பாட்டி அவள் கையில் பால் செம்பைக் கொடுத்து மாடிக்கு அனுப்பினாள். முதலிரவு அறை போல உள்ளே ஜோடிக்கப் பட்டிருந்தது.

“ஆமாம். வீட்டில் இத்தனை பேர் இருக்கிறார்களே... யார்?” எனக் கேட்டாள் சௌம்யா.

“பாட்டி சொல்லவில்லையா?”

“சொன்னார்கள். மாமா, பேத்தி, அக்காள்கள், மருமகன் இப்படி ஏதேதோ”

“அது கூட எனக்குத் தெரியாது. நமக்கு நேருவைத் தெரியும். அவருக்கு நம்மைத் தெரியாது என்பார்கள் இல்லையா?” அது போலத்தான். அவர்களுக்கு நம்மைத் தெரியும். அது நமக்குப் போதும்' என்றான் கௌதமன் சுருக்கமாக.

மறுநாள் காலை.

ஐந்து மணி அடிக்கவில்லை.

சௌம்யா கௌதமை எழுப் பினாள். அவன் காதுகளில் மெது வாகச் சொன்னாள்.

“ஐயையோ...” என்றான் அவன் திடுக்கிட்டுப் போய். அவர்கள்

எதிர்பார்க்காத விபரீதம், ஒரு வாரத்திற்கு முன்பே.

“இப்போது என்ன செய்வது?” எனக் கையைப் பிசைந்தாள் சௌம்யா.

கௌதமன் பாட்டியைப் பார்த்து மெதுவாகச் சொன்னான்

“அட பாவமே... இருக்கப் போற நான்கு நாளிலே இது ஒரு கூத்தா?” என்றவள் பூஜை அறையை முடினாள்.

சௌம்யாவைக் கீழே கூட்டிப் போனாள்.

பின்னர் வாயிற் திண்ணை ஓரத்தில் மரத்தடுப்புப் போட்ட அறையைக் காட்டினாள்.

“அங்கேயே இரு அம்மா. கதவைத் திறக்காதே. உனக்கு இதெல்லாம் பழக்கம் இல்லே. பார்த்து இருந்துக்கோடி குழந்தே.”

வேலைக்காரி அதற்குள் சுத்தப்படுத்தியிருந்தாள். ஐந்தடி நீளமுள்ள பெஞ்சு போடப்பட்டி ருந்தது. ஒரு போர்வை கொண்டு தந்தாள். ஒரு செம்பும் தம்ளரும்.

சௌம்யாவிற்கு அழுகை அழுகையாக வந்தது. அவர்கள் வீட்டு அல்சேஷியனுக்கு ஒதுக்கப் பட்ட இடம் இன்னும் கொஞ்சம் தாராளமாக இருக்கும்.

“தவறிப் போய்த் தாத்தா கண்ணில் பட்டுவிடாதே. குளிக்கப் புறப்பட்டு விடுவார்' என எச்சரித்தாள் பாட்டி.

அன்று வியாழக்கிழமை ஞாயிறன்று அவர்கள் திரும்பப் புறப்பட வேண்டும். வெள்ளிக் கிழமை காலையில்தான் கோவில் அபிஷேகம். ஆராதனை எல்லாம் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

வீட்டில் அத்தனை பேர் இருந்தாலும் இவள் வயதில் மனம் விட்டுப் பேச யாரும் இல்லை. ஒரே ஒரு பிள்ளைக் குழந்தை இரண்டு வயது முடிந்திருக்கும். ‘அஸ்வின்' என்று பெயர். நேற்று அவளிடம் ஒட்டிக்கொண்டது. அது, இருந்தாலும் கூடப்போதும்.

ஏதோ யோசனையில் ஆழ்ந் திருந்த அவள் கதவை யாரோ பிறாண்டுவது போல் கேட்கவே சற்றே திறந்தாள். இரண்டு பிஸ்கட் பொட்டலம் உள்ளே வந்து விழுந்தது. அவசரமாகத் திரும்பிப் போய்க் கொண்டிருந்த கௌதமின் முதுகு தெரிந்தது.

வீட்டு வாசலில் பாட்டி ஆரத்தித் தட்டுடன் காத்திருந் தாள். முதல் பார்வையிலேயே சௌம்யாவிற்குப் பாட்டியைப் பிடித்துப் போய்விட்டது. லட்சுமிகரமான முகம். கண் களில் கனிவு. பேச்சில் இதம்.

அஸ்வினின் தாய் குழந்தை யுடன் வாசலுக்கு வந்தாள். சௌம்யாவைப் பார்த்துச் சிரித் தான் குழந்தை. அவளிடம் போகத் தன் தாயின் இடுப்பிலிருந்து தாவினான். ஆனால் அவன் அம்மா விடவில்லை. அழ அழக் கூட்டிப் போனாள். வீட்டில் அவளுக்காகத் தனிச் சமையல் சுவையில் குறைவு இல்லைதான். நேரம் தப்பி. ஜெயில் கைதிக்குப் போடுவது போல். எல்லாவற் றையும் அவளே கழுவி, அவளே எடுத்துக் கொண்டுப் போய்க் கவிழ்த்து. அவள் நடந்த இட மெல்லாம் பின்னாலேயே ஒருவர் நீர் தெளித்தது...

சௌம்யாவிற்கு இம்மியும் பிடிக்கவில்லை. “சுத்த காட்டு மிராண்டி ஜனங்கள்!” எனச் சபித்தாள். முக்கியமாகத் தாத்தா வின் மேல் கோபம் வந்தது.

காலை ஒன்பது மணிக்கு எல்லாரும் கோவிலுக்குப் புறப் பட்டுப் போய்விட்டார்கள். திரும்பி வரப் பதினோரு மணி ஆகும் எனப் பாட்டி சொன்னாள்.

“நீ கூட வேண்டுமானால் கொஞ்சநேரம் திண்ணையில் உட்கார்ந்து கொள்!” எனச் சொல்லிவிட்டுப் போனாள் பாட்டி. பாவம் பெண் மனசு புரிந்தவள்.

மணி பத்தரை.

அஸ்வினுடைய தாய் வெளியே வந்தாள்.

தீபாராதனை ஆகும் நேரம்.

போய் எட்டிப் பார்த்துவிட்டு வருகிறேன்?” என்று சௌம்யா விடம் சொன்னாள்.

“அஸ்வின் எங்கே?” எனக் கேட்டாள்.

“உள்ளே தூங்கிக் கொண்டி ருக்கிறான்!” எனச் சொல்லி விட்டுப் போனாள் அவள்.

இன்னும் பத்து நிமிடங்கள் தான் இந்த விடுதலை கூட, மறுபடியும் கூண்டிற்குள் அடைப் பட்டாக வேண்டும்.

திடீரெனக் குழந்தையின் வீறிட்ட அழுகை. சௌம்யா தன் நிலை மறந்து உள்ளே ஓடினாள்.

அங்கே திறந்திருந்த பூஜை அறையினுள்ளே குழந்தை கீழே கிடந்தான். அவன் மேல் குத்து விளக்கு. ஆடையில் தீ.

தூக்கத்திலிருந்து எழுந்திருந் தவன், அம்மாவைத் தேடியிருக் கிறான். அகஸ்மாத்தாக பூஜை

அறையின் கதவு திறந்திருக்கவே எட்டிப் பார்த்து இருக்கிறான். தட்டில் இருந்த வாழைப் பழம் அவன் கண்ணில் பட்டிருக்கிறது. எடுத்துக் கொண்டு திரும்பியவன் கால்இடறிக் கீழேவிழ, குத்து விளக்குச் சாய்ந்து அதன் சுடர் அவன் ஆடையில் பற்றிக் கொள்ள...

சௌம்யா யோசிக்கவில்லை உள்ளே பாய்ந்தாள். குழந்தையை வாரி எடுத்தாள். தன் கையால் துணியைக் கசக்கித் தீயை அணைத்தாள். விசும்பிய குழந்தையைத் தோளில் போட்டுத் தட்டிய வாறு வெளியே வர யத்தனித்த போது,

பூஜை அறை வாசலில் தாத்தா, பாட்டி, கௌதம்... எல்லோரும்!

குழந்தையைக் கீழே போட்டு விட்டு, பொங்கிவரும் அழுகையை அடக்க முடியாமல் வெளியே ஓடி வந்தாள்.

கௌதம் அவளைக் கோபத்துடன் வெறித்தான். "படித்துப் படித்துச் சொல்லியும் இப்படிச் செய்து விட்டாயே!' எனக் கோபித்தான்.

அலாதியான ஒரு மௌனம்.

குடம் குடமாகத் தண்ணீர் கொண்டு அறை கழுவப்பட்டது.

தன்மேல் கொட்டப்பட்ட அக்கினித் திரவமாகத் தெரிந்தது சௌம்யாவுக்கு. துடைப்பத்தால் தேய்த்துத் தேய்த்துப் பெருக்கினார்கள். தன்னையே இரண்டு அடி அடித்தால் கூடப் பரவா யில்லை எனப்பட்டது.

தாத்தா குளித்தார். பாட்டி குளித்தாள்.

மறுபடியும் பூஜை ஆரம்பமாகியது. மணி பன்னிரண்டு. ஒன்று தாத்தா எழுந்திருக்கவில்லை. சௌந்தர்யலஹரி முடிந்தது. மூகபஞ்சசதி நிறைவு பெற்றது. ஆனால் அவர் எழுந்திருக்கவில்லை.

அத்தனைப் பேரும் பட்டினி.



ஒன்பது கஜப் புடவைகளைப் பிரித்து உடுத்த முயன்ற சௌம்யா தோற்றுப் போனாள். பாட்டி உள்ளே வந்து கற்றுக் கொடுத்தாள். கட்டி விட்டாள் என்றே சொல்லலாம்.

பகல் இரண்டு மணி. தீபாராதனை மணி அடித்தது.

'பாட்டி மட்டும் உள்ளே போனாள்.

'சாப்பிட வாருங்கள்! என அழைத்தாள்.

இல்லை. நான் வரவில்லை. எனக்கு வேண்டாம்!

தெரியாமல் நடந்து விட்டது. இதற்காக...'

நீங்கள் எல்லோரும் போய்ச் சாப்பிடுங்கள். எனக்கு வேண்டாம் என்றால் வேண்டாம்.

இதோ பாருங்கள் அந்தப் பெண் குழந்தை... சக்தி யாரையாவது உதவிக்குக் கூப்பிட்டிருக்கலாம். தானே உள்ளே போனது தப்பு. பாவம், நான்கு நாட்கள் இருக்கப்போகிறாள் நம் கோபத்தை அவளிடம் காட்டி.'

பாகீரதி அவளா குழந்தை' சுவாமிநாதன் கேட்டார் உக்கிரமாக.

'ஆமாம், நம்ம பழக்கம் வழக்கம் எல்லாம் 'தெரியாத சிறிசு. குழந்தை தான்.

'குழந்தை இல்லேடி அவள். தேவி. நான் வணங்கும் மாதா நம் வீட்டில் ஒரு சிசு ஹத்தி ஏற்படக் கூடாது என்பதற்காக இந்தப் பெண் ரூபத்தில் வந்த ஆதி சக்தி. அவள் காலில் விழுந்து நமஸ்கரித்தால் கூடத் தோஷம் இல்லை' என்றார் சுவாமிநாதன் உணர்ச்சிப் பெருக்குடன்.

கௌதம் உடல் சிலிர்த்தது. சௌம்யா பரவசப்பட்டுப் போனாள்.

'அப்படியானால் சாப்பிட வாருங்களேன்.'

'இல்லை பாகீரதி. எந்தக் குற்றத்திற்கும் தண்டனை உண்டு. பூஜை அறை விளக்கைத் தணிக்காமல் போனது என் தப்பு. அறையை மூடாமல் வந்தது உன் தப்பு. நாம் இரண்டு பேரும் இன்று உபவாசம் இருப்போம். மற்றவர்கள் சாப்பிடட்டும்! என்றார் சுவாமிநாதன் முடிவாக.

சௌம்யா தன்னையறியாமல் கையெடுத்து அவர் இருந்த பக்கம் பார்த்துக் கும்பிட்டாள்.

-'தலைவாழை' என்ற மூத்த தலைமுறைக் கதைகள் தொகுப்பிலிருந்து.

வெளியீடு
அன்னம் பி லிட்.,
2, சிவன் கோயில் தெற்குத் தெரு,
சிவகங்கை.

ஆப்பிளின் அருமை

ஆப்பிளை அடிக்கடி உண்பதினால் வலிப்பு நோய் குணமாகும்.



☆எங்கள் ஊர் பிர்ச்சினை, துணுக்குகள், சிறுகதை போன்ற புதுப்புதுப் பகுதிகளோடு, இரு பத்தேழு ஆண்டுகள் ஆயினும் இன்று பூத்த புதுமலர்போல் வெளி வருகிறது 'தமிழரசு'; வாழ்த்துகிறேன். **-குருசாமிராஜ் தூசிபாளையம்**

☆அறிஞர் அண்ணாவின் சிறு கதை 'பலி' அருமையாக இருந்தது; அப்படிப்பட்ட கதைகள் அடிக்கடி இடம் பெறட்டும்.

-டி. முருகேசன்
பச்சார்பாளையம், கோவை

☆மாநகராட்சி பற்றிய பல விவரங்களை வெளியிட்ட தாங்கள் நகராட்சி, ஊராட்சித் தலைவர்கள், அவர்கள் செயல் பாடுகள் பற்றிய விவரங்களை வெளியிடலாமே?

-அ. கந்தசாமி
திருப்பூர்

☆நேரமறிந்து தாங்கள் வெளியிட்ட மழைக்கால நோய்கள் கட்டுரை சிறப்பாக இருந்தது.

-வ. செயராமன்
ஆவணியாபுரம்

☆'தமிழகத்தில் காந்தியாரும்' 'பட்டுக்கோட்டையாரின் பாட்டுத் திறம்' கட்டுரையும் மன நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

-பாவலர் இராவணதாசன்
சென்னை

☆'இலக்கியத்தில் சொல்லாடல்' பகுதியில் அந்தகக் கவி வீர ராகவ முதலியாரின் பாடலைக் கட்டுரையாளர் மிக அருமையாக விளக்கியிருந்தார்.

-க. நஞ்சையன்
பாலசமுத்திரம்

☆'கலைஞரின் உவமைகள்' என்ற கட்டுரையும், வள்ளலாரின் மானிட தர்மம் பற்றிய கட்டுரையும் ரசிக்கும்படி இருந்தன; பாராட்டுக்கள்.

-ப. அருணாசலசண்முகம்
வீரளூர் - தி.ச.மா.

☆கலைஞரின் எழுத்தோவியங்களைத் தொடர்ந்து வெளியிடுங்கள்; வரவேற்கிறோம்.

-எஸ். நாகராஜன்
மேலப்பாதி

☆அமைச்சர் தமிழ்க்குடிமகன் கவிதை அற்புதம்; தொடர்ந்து எழுதச் செய்யுங்கள். இலக்கிய இதழாக விளங்கும் தமிழரசு தொண்டு தொடரட்டும்.

-பி.சி. குருசந்தர்
தலைவாசல்

☆'பனித்துளிப் பார்வை'களில் இறையன்பைக் கண்டேன்.

-ம.கா.முத்துவேல்
களப்பாள் - மன்னை

☆இராவணன் வீரம், தந்தை பெரியார் மரணம், பெருஞ் சித்திரனாரின் வறுமை போன்ற வற்றைக் கலைஞர் உவமைகளில் கண்டுகளித்தோம்; அண்ணாவுக்குப் பிறகு கலைஞரைத் தவிர அழகு தமிழ்நடை எழுத்தும் பேச்சும் யாருக்கு வரும்?

-தி.பொ.சண்முகசுந்தரம்
திட்டக்குடி

அயோடின் உப்பு

'உப்பு இல்லாத பண்டம் குப்பையிலே' என்பதைக் கொண்டே நம் உணவு முறைக்கு உப்பு எவ்வளவு அவசியம் என்று அறியலாம். முற்காலத்தில் உப்பு, சுவைக்காக மட்டும் சேர்க்கப்பட்டு வந்தது. தற்போது உப்பில் அயோடின் கலந்து அது ஒரு சத்துணவாக மாற்றப்பட்டுள்ளது.

மக்கள் மற்றும் கால்நடைகளின் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாது தேவைப்படும் ஊட்டச்சத்துக்களில் ஒன்று அயோடின். இந்த அயோடின் பொதுவாக விளைபொருள்கள் மற்றும் தண்ணீர் மூலம் கிடைக்கும். ஆனால், நிலத்தில் அயோடின் பற்றாக்குறை இருப்பதால், ஒவ்வொரு நாளும் நமக்குத் தேவையான அயோடின் அது தரமுடியாது. இதனை ஈடுசெய்ய அயோடைஸ்டு உப்பை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

சாதாரண உப்புடன் பொட்டாஷியம் அயோடேட் வடிவில் மிகச் சிறிதளவு அயோடின் கலந்ததுவே அயோடைஸ்டு உப்பு. இதில் சேர்க்கப்படும் இந்த இரசாயனப் பொருள் மிகமிகச் சிறிதளவே ஆகும். அதாவது, 10 இலட்சம் பங்கு உப்புக்கு 50 பங்கு இரசாயனப் பொருள். இதனால் உப்பின் நிறம் மணம், சுவை எதுவும் மாறாது.

அயோடின் பற்றாக்குறையால் பெரியவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள், கால்நடைகளுக்குப் பல தீமைகள் ஏற்படுகின்றது.

அயோடின் குறைவால் பெரியவர்களுக்குக் குரல்வளைச் சுரப்பி வீக்கம், சக்தி இல்லாமை, ஆற்றல் திறன் குறைவாயிருத்தல் போன்றவை ஏற்படுகின்றன.

கர்ப்பிணிப் பெண்களுக்குக் கருச்சிதைவு, குழந்தை இறந்து பிறத்தல், மனவளர்ச்சி குன்றிய அல்லது ஊனமுடன் குழந்தைகள் பிறத்தல், சிசு மரணம் ஆகியவை ஏற்படுகின்றன.

குழந்தைகளுக்குக் குறைந்த அறிவுத்திறன், பள்ளியில் குறைவான ஆற்றல், மனவளர்ச்சி குன்றியிருத்தல், உடல் வளர்ச்சி இல்லாமை அல்லது குறைவாயிருத்தல், காது கேட்பதிலும், பேசுவதிலும் குறைபாடுகள், சக்தி இல்லாமை ஏற்படுகிறது.



கால்நடைகளுக்கு ஏற்படும் அயோடின் குறைவால் பால், முட்டை, இறைச்சி மற்றும் கம்பளி உற்பத்தி குறைகின்றது.

அயோடின் சத்து குறைவினால் ஏற்படும் நோய்கள் இந்தியாவின் வட கிழக்கு மற்றும் வடஇந்தியாவின் பகுதியிலும், இமயமலையின் சாரல்களிலும் மற்றும் ஜம்மு காஷ்மீர் பகுதிகளிலும் அதிகமாக காணப்படுகிறது. ஆனால், தற்போது அயோடின் சத்து குறைவினால் ஏற்படும் நோய்கள் மகாராஷ்டிரம், குஜராத், மத்திய பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், கேரளா, தமிழ்நாடு, டெல்லி ஆகிய பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளன. இந்தியாவில் எல்லா மாநிலத்திலும் அயோடின் குறைவுள்ள பகுதிகள் புதிதாக ஒவ்வொரு நாளும் கண்டறியப்படுகின்றன.

ஒரு மனிதனுக்கு நாள் ஒன்றுக்கு சராசரியாக 150 மைக்ரோ கிராம் அயோடின் தேவைப்படுகிறது. வாழ்நாளில் ஒரு மனிதனுக்கு ஒரு தேக்கரண்டிக்கும் குறைவான அளவே உள்ள அயோடின் தேவைப்படுகிறது. ஆனால் அயோடின் தேவை சிறிதளவே என்றாலும் அது தினமும் தேவைப்படுகிறது.

சில வகையான கடல் பாசிகளைத் தவிர மற்ற உணவுகளில் அயோடின் சத்து அதிகமாய் காணப்படுவதில்லை. எல்லா வகை உணவுகளிலும் அயோடின் அது எந்த இடத்தில் வளருகிறதோ அந்த மண்ணில் இருந்தே பெற்றுக் கொள்கிறது. அப்படி வளரும் போது அந்த மண்ணில் போதுமான அளவு அயோடின் இல்லை என்றால் அதில் கிடைக்கக்கூடிய உணவு வகையிலும் அநேகமாய் அயோடின் காணப்படுவதில்லை.

உணவில் அதிக அளவு அயோடின் கலந்திருந்தால் நமது உடல் நமக்குத் தேவையான அளவு அயோடினை மட்டுமே ஏற்றுக் கொண்டு அதிகப்படியாக உள்ள அயோடினை சிறுநீர் மூலமாக வெளியேற்றிவிடும்.

சமையலுக்கும் மற்றும் உணவின்போதும் சாதாரண உப்பைப் பயன்படுத்துவது போல் அயோடின் உப்பைப் பயன்படுத்தலாம். ஆனால் உப்பைப் பயன்படுத்துமுன் தண்ணீரில் கழுவக் கூடாது. அப்படி செய்தால் அதில் உள்ள அயோடின் சத்து தண்ணீரில் போய்விடும்.

அயோடின் உப்பைத்தொடர்ந்து திறந்தவெளியில் வைக்கக்கூடாது. சூரிய ஒளியும் காற்றிலுள்ள ஈரப் பசையும் அயோடின் சத்தைக் குறைத்துவிடும். எனவே, அயோடின் உப்பை பிளாஸ்டிக் கண்ணாடி, பீங்கான், மண் பாத்திரங்களில் மூடி சூரிய ஒளிபடாத இடத்தில் பாதுகாப்பாக வைக்கவேண்டும்.

இயற்கை உணவுப் பொருள்கள், தண்ணீரில் கிடைக்கக்கூடிய அயோடின் அளவுடன், அயோடின் உப்பைச் சேர்த்து அயோடின் பற்றாக்குறையினால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கலாம்.

அயோடின் பற்றாக்குறைவால் ஏற்படும் விளைவுகளை நீக்கும் நோக்குடன் தமிழ்நாடு அரசு உணவுக்கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் உட்கொள்ளும் தேவைக்காக அயோடின் தாது கலந்த உப்பின் விற்பனை- விநியோகத்தை மாநிலம் முழுவதும் கட்டாயமாக்கியிருக்கிறது. உட்கொள்ளும் தேவைகளுக்காக உப்பைக் கொள்முதல் செய்து, சேமித்து வைத்து, விநியோகம் செய்யும் அனைவரும் இப்போது அயோடைஸ்டு உப்பு வர்த்தகத்தில் மட்டுமே ஈடுபட வேண்டும்.

இதனால் அயோடின் பற்றாக் குறைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் உப்பு வியாபாரிகள் மிக முக்கியப் பங்கு வகிக்கிறார்கள்.

சாதாரண உப்பை, அயோடைஸ்டு உப்பாக மாற்றுவதற்கு ஆகும் செலவு டன் ஒன்றுக்கு ரூ.50 மட்டுமே ஆகும். ஒரு கிலோவுக்கு சுமார் 5 காசு.

பொது நலம் கருதி, எந்தவொரு உணவுப் பொருளையும் போலவே, அயோடைஸ்டு உப்பும் சில தர அளவுகளைக் கொண்டிருக்க வேண்டும். அதன்படி இல்லாத உப்பு வர்த்தகத்தில் ஈடுபடுவோர் கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

எனவே, அயோடைஸ்டு உப்பைத் தயாரித்தும் உட்கொண்டும் அயோடின் பற்றாக் குறைவால் ஏற்படும் தீமைகளைக் களைவோம்.

-ஜி. பாஸ்கரன்

சகாராவில் மரங்கள்!

மரம் வெட்டும் வேலைக்கான நேர்முகத் தேர்வு நடந்துகொண்டிருந்தது. ஒருவரிடம் உயர் அலுவலர் கேட்டார்:

''ஒரு நாளைக்கு உன்னால் எத்தனை மரம் வெட்ட முடியும்?''

''சுமார்... பத்து அல்லது பதினைஞ்சுங்க!''

''அடேயப்பா!... இதுக்கு முன்னே எங்காவது மரம் வெட்டின அனுபவம் உண்டா?''

''உண்டுங்க; சகாராவுல வெட்டீருக்கேன்!''

''சகாராங்கிறது பாலைவனமாச்சே!''

''நான் அப்பிடி வெட்டப் போயிதாங்க அது அப்பிடி ஆச்சு!''

"கண்ணொடு கண்ணினை
நோக்கொக்கின்
வாய்ச்சொற்கள் என்ன
பயனும் இல"

-என்று இக்'காட்சி'யைப் பற்றி வள்ளுவரும் குறிப்பிடுவார்.

ஆடவர் கற்பு

பொதுவாக மகளிரின் கற்பொழுக்கத்தைப் பற்றித்தான் இலக்கியங்கள் பாராட்டுவது வழக்கம்! ஆனால் கம்பனும் பாரதியும் ஆடவர் கற்பையும் வலியுறுத்துவதைக் காணலாம்!

"கற்பு நிலையென்று
சொல்லவந்தார், இரு
கட்சிக்கும் அது பொதுவில்
வைப்போம்"

-என்று ஆடவருக்கும் பெண் களுக்கும் கற்பு எனப்படுவது ஒரே நிலையில் வைக்கப்பட வேண்டும், பேசப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறார் பாரதியார்.

கம்பனது காவிய நாயகனிடம் இவ்வுயர்ந்த பண்பினைக் காண கிறோம்.

"இந்த இப்பிறவிக்கு இருமாதரை
சிந்தையாலும் தொடேன்!

-என்ற உறுதியுடன் வாழ்ந், தவன் இராமன்.

'குலத்து மாதருக்குக் கற்பு இயல்பாகுமாம்' என்பார் பாரதி. இராமன் ஆணையால் நெருப் பிடைப் புகுகின்றாள் சீதை. சீதையின் கற்பாகிய தீ, அக்கினிக் கடவுளின் வலிமையையும் அடக்கி விட்டதாம்.

'தீந்ததவ் வெரியவள் கற்பின்
தீயினால்

என்கிறான் கம்பன்.

மொழிப்பற்று

பாரதியின் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் கம்பனது நாட்டுப் பற்றுடனும், மொழிப் பற்றுடனும் ஒத்து விளக்கக் காணலாம்.

'தேமதுரத் தமிழோசை
உலகெங்கும் பரவும் வகை
செய்தல் வேண்டும்'

என்று விரும்பினார் பாரதியார்.

'சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ்
முழக்கம் செழிக்கச் செய்வீர்!

-என்று கட்டளையிட்டார்.

'சென்றிடுவீர் எட்டுத்திக்கும்
கலைச்
செல்வங்கள் யாவும்கொணர்ந்
திங்கு சேர்ப்பீர்!

என்று வேண்டினார்.

அதுமட்டுமல்ல, தமிழின் சுவை கண்டவர் தெய்வ வாழ்க்கை யையே வாழலாம் என்றும் உறுதியாக் கூறுகின்றார்!

"தெள்ளுற்ற தமிழமுதின்
சுவை கண்டார்
சிங்கமரர் சிறப்புக் கண்டார்"

என்கிறார்!

அகத்தியரைப் பற்றிக் கூறு மிடத்துக் கம்பனின் தமிழ்மொழிப் பற்று புலனாகும் **'என்றுமுள தென்தமிழை இசை கொண்டான்'** என்கிறான். அகத்தியர் வட நாட்டிலிருந்து தென்நாட்டிற்கு வந்து தமிழ் பயின்று, தமிழால் புகழ் கொண்டார் என்ற கருத் தைக் கூறும்போது இங்ஙனம் கம்பன் கூறுகின்றான்.

என்றுமுள தமிழ், தென் மொழி, இசை கொண்ட தமிழ் இவ்வாறெல்லாம் உள்ள தமிழைக் கற்று அகத்தியர் புகழ்கொண்டார் என்று கூறுவது கம்பனின் தாய் மொழிப் பற்றை விளக்கும்.

நாட்டுப் பற்று

பாரதியாரின் நாட்டுப்பற்று உலகறிந்தது.

'பாருக்குள்ளே நல்ல நாடு
எங்கள்
பாரத நாடு" எனவும்,
"பாரத தேசமென்று பெயர்
சொல்லுவார் மிடி
பயங்கொல்லுவார் துயர்ப்பகை
வெல்லுவார்!

என்று பாரத நாட்டைப் புகழ்வார்.

'செந்தமிழ் நாடென்னும்
போதினிலே இன்பத்
தேன்வந்துபாயுது காதினிலே
எங்கள்
தந்தையர் நாடென்று
பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே,

என்று தமிழ்நாட்டையும் பாடி னார் பாரதியார்.

கம்பராமாயணத்தின் நாட்டுப் படலம் முழுவதும் கம்பனின் நாட்டுப்பற்றை விளக்கும் பாட லாகவே அமைந்துள்ளது எனலாம்!

'காவிரி நாடன்ன கழனி நாடு'

என்று கோசல நாட்டை ஒத்து கழனிகளை உடைய கோசல நாடு என்று கோசல நாட்டைச் சோழ நாடாகவே சிறப்பித்துள்ளான்.

'வண்மை இல்லையோர்
வறுமை இன்மையால்
திண்மை இல்லைஓர் செறுநர்
இன்மையால்

''ஏன் கொக்கு ஒத்தக் கால்ல நிக்கிது தெரியுமா?''

''இன்னொரு காலையும் மடக்கினா கீழே விழுந்துடுவோம்கிற பயத்தாலதான்!''

உண்மை இல்லைபொய் உரை
இல்லாமையால்
வெண்மை இல்லைபல
கேள்வி மேவலால்"

-என்ற பாட்டில் வறுமையற்ற, வீரமிக்க, வாய்மையும் கல்வி ஞானமும் நிறைந்த கோசல நாட்டை காந்தியடிகள் கனவு கண்ட இராம இராஜ்யத்தைக் காண்கிறோம். பாரதியார் காண விரும்பிய சுதந்திர இந்தியாவும் இத்தகையதே.

தமிரின் தனித்தன்மை

நீண்டநாள் அல்சர் நோயில் அவதிப்படுபவர்கள் முப்பது நாள் இட்லி, புட்டு, இடியாப் பத்தைத் தயிர் போட்டுப் பிசைந்து சாப்பிட்டுவந்தால் அல்சரா? அது எங்கே என்பார்கள்.

உயிரினம் அனைத்தும் ஒன்றே

உயிரினம் அனைத்தும் ஒன் றென உணரும் தன்மையைப் பாரதியிடமும் கம்பனிடமும் காண்கிறோம். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பார் வள்ளுவப் பெருந்தகை கடவுளின் அவதாரம் என்று சொல்லத்தக்க இராமனும், வேடுவர் குலத்தில் பிறந்த குகனும், குரங்கினத்திற்கு பிறந்த சுக்கிரீவனும், அரக்கர் குலத்தில் வீடணனும், பறவை இனத்துச் சடாயுவும் உடன்பிறந்த வர்களாகச் சகோதர உணர்வுடன் கம்பனால் மதிக்கப்படுகின்றனர்.

"துன்புஉளதுஎனின் அன்றோ
சுகம்உளது? அதுஅன்றிப்
பின்பு உளது "இடை, மன்னும்
பிரிவு உளது" என, உன்னேல்
முன்பு உளெம், ஒரு நால்வேம்
முடிவுஉளது எனஉன்னா!
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்"

-என்று கூறி இராமன் குகனை உடன்பிறப்பாக ஏற்கிறான்.

"குகனோடு ஐவர்
ஆனோம்முன்பு பின்குன்று
சூழ்வான்
மகனோடும் அறுவர் ஆனோம்
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர்
ஆனோம்.

என்று வீடணைத் தழுவிக்
கொள்கிறான் இராமன்!

இவ்வுலகில் மனிதரெல் லோரும் உடன்பிறந்தவர்களைப் போன்றவர்கள் என்ற உலக சகோதர அன்பைப் பாரதியிடமும் காண்கிறோம்!

"காக்கை குருவி எங்கள்
ஜாதிநீள்
கடலும் மலையும் எங்கள்
கூட்டம்
நோக்கும். திசையெலாம்
நாமன்றி வேறில்லை
நோக்கநோக்கக் களியாட்டம்"

என்று எல்லா உயிர்களையும் ஒரே சாதியாகக் காண்கிறார்.

அதுமட்டுமா? தன் சீடனை நோக்கிக் கூறுகிறார்.

'கேளப்பா, சீடனே! கழுதை
யொன்றைக்
கீழான பன்றியினைத்
தேளைக் கண்டு
தாளைப் பார்த்திருக்கரமும்
சிரமேற்கூப்பிச்
சங்கர சங்கர என்றுபணிதல்
வேண்டும்!

என்கிறார். "எல்லா உயிரினும் நானே இருக்கிறேன்" என்று கீதையில் கண்ணன் கூறியதை வாழ்வியல் நெறியாக வாழ்ந்து காட்டியவர் மகாகவி பாரதி.

கற்பனையும் நடைமுறையும்

கம்பனுக்கும், பாரதிக்கும் இடையில் நாலிழை போல் அமைந் துள்ள வேறுபாடும் உண்டு! உயர்வு நவிற்சியாக, அமைந் துள்ள பல கற்பனைகளைக் கம்பனில் காணலாம். பாரதியார் பாடல்களில் அவ்வாறு இல்லை. ஏனென்றால் கம்பன் படைத்தது காவியம்! பாரதி பாடியது தேசீயம்!

"சேலுண்ட வொண்கணாரிற்
திரிகின்ற செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி
வளர்த்திய மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி
கன்றுள்ளிக் கனைப்பதுச்
சோர்ந்த
பாலுண்ட துயிலப் பச்சைத்
தேரை தாலாட்டும் பண்ணை
-என்று பாடுவான் கம்பன்.

இது போன்ற கம்பனின் கற்பனைகள் அக்கால இலக்கியப் போக்கை ஒட்டியனவேயன்றி வேறன்று! பாரதியாரின் பாடல்கள் கற்பனை நயத்துக்காகப் பாடப் பட்டதைவிட அவை எழுப்பிய சுதந்திர வேகத்துக்காகவே பாராட்டப்பட்டன!

கவிச்சக்கரவர்த்தி கம்பன் காப்பிய உலகின் நாயகன் பாட்டுக்கொரு புலவன் மகாகவி பாரதி தேசியம் வளர்த்த தமிழ்ப்பாடல்களின் நாயகன், கம்பன் கவிதை உணர்ச்சியைத் தூண்டினான் பாரதியார் சுதந்திரப் பயிரை வளர்த்தார். காலத்தால் மாறுபட்டாலும் கருத் தொருமித்த கவிஞர்களாகவே இவ்விருவரையும் காண்கிறோம்.

கம்பனும் பாரதியும்

-டாக்டர் சாரதா நம்பி ஆரூரன்

'பாட்டுக்கொரு புலவன்
பாரதியடா அவன்
பாட்டைக்கேட்டுக்
கிறுகிறுத்துப் போனேனடா'

-என்று பாடினார் கவிமணி. ஒரு தமிழனை இன்னொரு தமிழன் பராட்டமாட்டான்! அதிலும் ஒரு கவிஞன் இன்னொரு கவிஞனைப் பாராட்டுதல் என்பதுமிக அபூர்வமான ஒன்றே மகாகவி சுப்ரமணிய பாரதியைப் பாராட்டாத புலவர்கள் இல்லை எனலாம்.

'பாலும் சோறும் வீட்டுக்குறுதி
பாரதி பாட்டு நாட்டுக்குறுதி!

-என்றார் சுத்தானந்த பாரதி!

பாரதியால் பாடப்பட்டவர்கள் மூவர். கம்பன், வள்ளுவன், இளங்கோ இம்மூவரைப்போல உலகில் எங்குமே கவிஞர்கள் பிறந்ததில்லை, இதை நான் உண்மையாகச் சொல்கிறேன் வெறும் புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை என்கிறார் பாரதியார்.

"யாமறிந்த புலவரிலே
கம்பனைப் போல்
வள்ளுவன்போல்
இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை"
உண்மை வெறும்
புகழ்ச்சியில்லை"

இப்பாட்டில் உள்ள கம்பன், வள்ளுவன், இளங்கோ மூவருமே உலகமகா கவிஞர்கள் சிறந்தவர்கள் என்று பாடினார் பாரதியார்.

உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் எக்காலத்துக்கும் பொருந்தும் அறநூலாக விளங்குவது குறள், சமண சமயக் கொள்கைகளை விளக்கும் ஒரு நூலாக இருப்பினும் சமயப் பொறை உடைய நூலாக சிலப்பதிகாரம் விளங்குகிறது. ஆனால் ஒரு புலவன் அல்லது கவிஞன் என்ற நிலையில் நின்று கம்பன் பாடிய காவியம் பாரதியாரை அதிகமாகக் கவர்ந்திருக்கலாம்.

"கல்வி சிறந்த தமிழ்நாடு புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின்-
மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு
வள்ளுவன் தன்னை
உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட
தமிழ்நாடு நெஞ்சை
அள்ளும் சிலப்பதி
காரமென்றோர் மணி
யாரம் படைத்த தமிழ்நாடு"

-என்ற கம்பனை வைத்துப் பாடுகிறார் பாரதி.

கம்பன், வள்ளுவன், இளங்கோ ஆகிய மூவரையும் இவ்விரு இடங்களில் சேர்த்துக் கூறியது போல் வேறொரு இடத்திலும் சேர்த்துக் கூறுகிறார்!

யாமறிந்த புலவரிலே
கம்பனைப் போல் வள்ளுவர்
போல்
இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை உண்மை,
வெறும்
புகழ்ச்சி யில்லை!

தம்முடைய சுயசரிதையில்,
"கம்பன் என்றொருமானிடன்
வாழ்ந்ததும்"

-என்று காட்டுகிறார்!

கம்பன் காப்பியத்தில் மூழ்கித் திளைத்த எவரும் கம்பனுடைய சொல்லாற்றலையும் அளத்தலாகா அறிவுத் திறனையும், வியக்காமல் இருக்க முடியாது! செயற்கரிய செய்த கம்பன் தன் ஒப்பற்ற படைப்பால் மனித சமுதாயத்தின் மாண்பினை உயர்த்தியதால் பாரதி அடைந்த பெருமையும், பெருமிதமும் 'மானிடன்' என்ற ஒரே சொல்லால் உணர்த்தப் படுகின்றன.

பாரதியார் பாடல்களையும், கம்பன் பாடல்களையும் படிப்போருக்கு இவ்விரு மகாகவிஞர்களின் மனப்போக்கும் பெரும்பாலான இடங்களில் ஒத்துப் போகக் காணலாம்.

காதல் செய்வீர் ஜெகத்தீரே!

பாரதியார், கம்பன் இருவருமே காதல்மணத்தை ஆதரிக்கின்றனர்.

காதலர் இருவர்கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இல்லற
வாழ்க்கை'

என்பார் தமிழ் மூதாட்டி அவ்வை! இக்காதல் வழிபட்ட கற்பு வாழ்வே பாரதியும் கம்பனும் காட்டுவது.

"காதலினால் மானுடர்க்குக்
கலவி யுண்டாம்;
கலவியிலே மானுடர்க்குக்
கவலை தீரும்;
காதலினால் மானுடர்க்குக்
கவிதை யுண்டாம்;
கானமுண்டாம் சிற்பமுதற்
கலைக ளுண்டாம்;
ஆதலினால் காதல்செய்வீர்;
உலகத் தீரே
அதன்றோ இவ்வுலகத்
தலைமை யின்பம்;
காதலினால் சாகாம லிருத்தல்
கூடும்;
கவலைபோம், அதனாலே
மரணம் பொய்யாம்"

-என்று காதலைப் போற்றிப் பாடுகிறார் பாரதியார்!

"காதல் காதல் காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்"

-என்று காதலற்ற வாழ்வைக் காட்டிலும் சாதல் என்பது இனிமையானது என்று காதலின் சிறப்பை உயர்த்திக் காட்டுகின்றார் பாரதியார்!

இக்காதலின் அருமையை உணர்ந்தே இராமன், சீதை திருமணத்தைக் காதல் வழிப்பட்ட திருமணமாகக் காட்டுவான் கம்பன்!

வான்மீகி, சனகன் வைத்திருந்த வில்லை முறித்த பின்னரே இராமன் சீதையைக் கண்டதாகவும், திருமணம் புரிந்து கொண்டதாகவும் தன் இராமாயணத்தில் காட்டியுள்ளார். ஆனால் கம்பனோ தம் காப்பியத்தை மரபுநிலை வழுவாமல் இயற்ற வேண்டும் என எண்ணினான். அதனால் வில்லை முறிப்பதற்கு முன்னமே இராமன் சீதையைச் சந்திக்கும் வண்ணம் செய்கிறான்!

'கற்பெனப்படுவது களவின்
வழித்தே'

என்று தொல்காப்பியர் கூறும் நெறியைப் பின்பற்றிக் கூறினான்!

கன்னிமாடத்தில் நிற்கிறாள் சீதை! இலக்குவனும் முனிவரும் தொடர இராமன் தெருவில் நடந்து கொண்டிருக்கிறான். காப்பியத் தலைமாந்தர் இருவரும் சந்திக்கின்றனர் எங்ஙனம்?

எண்ண அரு நலத்தினாள்
இனையள் நின்றுவழி,
கண்ணொடு கண்இணை
கல்வி, ஒன்றைஒன்று
உண்ணவும், நிலைபெறாத
உணர்வும் ஒன்றிட,
அண்ணலும் நோக்கினான்
அவளும் நோக்கினாள்
(மிதிலைக்காட்சி.35)

இப்பாடல் தமிழ் இலக்கணத்தில் கூறப்படுகின்ற 'காட்சி' என்ற துறையின் பாற்படும். Love at first sight என்று ஷேக்ஸ்பியரும் 'கண்டதும் காதல்' பற்றிக் கூறுவார். மொழியும், நாடும் வேறென்றாலும் மனித உணர்வுகள் ஒன்றுதானே.

தமிழரசு



நூல்நயம்

தூறலும் சாரலும்

ஆசிரியர் :
கவிஞர் கா. வேழவேந்தன்

வெளியிட்டோர் :
வேந்தர் பதிப்பகம்
103, டாக்டர்
இராதாகிருட்டினன் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை600 004.

பக்கம்: 144 விலை: ரூ.25

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் இதய உரையோடு கூடிய கவிதை நூல் இது. இந்நூலில் 46 கவிதைகள் நறுக்கி வைத்த கரும்புத் துண்டு களாகச் சிதறிக் கிடக்கின்றன. கவிஞர் அவர்களின் இந்நூலில் தமிழ் மணக்கின்றது.

வெளியிட்டோர்:
சங்கீதா பதிப்பகம்,
14/2 பீட்டர்ஸ் காலனி,
இராயப்பேட்டை,
சென்னை600 014.)

கிராம மூலிகைகள்

ஆசிரியர்:
புலவர் நா. பசும்பொற்கிழார்

வெளியிட்டோர்:
காந்திய இலக்கியச் சங்கம்,
மதுரை - 625 020.

பக்கம்:28 விலை: ரூ.5

மூல நோயை நீக்குவதி லிருந்து, மறதியைப் போக்குவது வரை, 31 கிராமப்புற மூலிகைகள் எவ்வாறெல்லாம் உதவுகின்றன; எளிய முறை மருந்தாகின்றன என்றெல்லாம் உரிய பக்குவத் தோடு இந்த நூலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

செந்நீரோவியம்

ஆசிரியர்:
கவிஞர் பண்ணன்

வெளியிட்டோர்:
எல் 25/3, 26வது
குறுக்குத் தெரு,
பெசன்ட் நகர்,
சென்னை - 600 090.

பக்கம்:418 விலை: ரூ.95

பைந்தமிழ்ப் பாயிரத்தில் தொடங்கி, 5 காண்டங்களைக் கொண்டதாக, அரிய தமிழ்க் கவிதைகளால் இந்நூலை எழிலுற உருவாக்கியுள்ளார் கவிஞர் பண்ணன். பல வகை யாப்புக் கவிதைகளோடு கூடிய காப்பியம் என்றபோதிலும், கதையினை நடத்திச் செல்லும் பாங்கு நமக்கு வரலாற்றுப் புதினம் ஒன்றைப் படித்த மனநிறைவை உண்டாக்கு கின்றது.

அமுதமொழிகள் ஆயிரம்

ஆசிரியர்:
வேலூர் ம. நாராயணன்

வெளியிட்டோர்:
நிறைவாணன் பதிப்பகம்,
3, பெரியார் வீதி,
பாவேந்தர் நகர்,
வேலூர் - 9
வ.ஆ. அம்பேத்கர்
மாவட்டம்

பக்கம்: 119 விலை: ரூ. 32

'அன்பு' முதல் 'வெற்றி' வரையான பல தலைப்புகளின் கீழே, உலகில் வழங்கப்படும் பொன்மொழிகளையெல்லாம் வகைப்படுத்தித் தொகுத்துத் தந்திருக்கிறார் நூலாசிரியர். தமிழறி ஞர்கள் உதிர்த்தவை மட்டுமன்றி, பல மொழி அறிஞர்கள் உதிர்த்த முத்துக்களும் இதில் ஒளி வீசுகின்றன.

மலரும் மணமும்

ஆசிரியர்: வேலூர் ம. நாராயணன்

வெளியிட்டோர்: மேலே உள்ள அதே பதிப்பகம்

பக்கம்: 120 விலை: ரூ.32

ஆறு இலக்கியக் கட்டுரை களும், மூன்று தன்னிலை அனு பவக் கட்டுரைகளும் உடைய இந்நூல், ஆசிரியரின் இலக்கிய அறிவின் நிழலாகத் திகழ்கிறது. பாவேந்தர், பாவாணர், கம்ப தாசன் போன்ற நம் காலத் தமிழறி ஞர்களும் முற்காலத்தவரும் தொடப்பட்டிருக்கிறார்கள்.

பொற்குவியல் தொகுதி - 2

ஆசிரியர்:
பாவலர் வைரிதரளம்

வெளியிட்டோர்:
முத்தமிழ் இலக்கிய மன்றம்
அம்மையப்பட்டு
வந்தவாசி - 604 408

பக்கம்: 88 விலை: ரூ.5

பல்வேறு தலைப்புகளில், பல்வேறு மொழிப் பேரறிஞர் களின் பொன்மொழிகள் இந்த நூலில் தரப்பட்டிருக்கின்றன. தமிழ் இலக்கியத்தின் பொன்னடி களும் ஆங்காங்கே பொலிவுறத் திகழ்கின்றன.

-இந்திரன்



அறிவியல் துளிகள்

அட! கொசுவா?

மழைக்காலங்களில் குண்டு குழிகளில் எல்லாம் தண்ணீர் தேங்கி, சுற்றுப்புறச் சுழலுக்குக் கேடு விளைவிக்கும். தேங்கிய தண்ணீரில் கொசுக்கள் முட்டையிட்டு, விரைவாகப் பரவி பல விதமான வியாதிகளை உருவாக்குகின்றன. கொசுக்களில் மட்டும் 25 ஆயிரம் வகைகள் இருப்பதாக ஒரு ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இக் கொசுக்களில் அனோபலிஸ் என்ற கொசு இனம் மலேரியா காய்ச்சல் உருவாவதற்குக் காரணமாய் இருக்கிறது. க்யூலக்ஸ் வாடிகன்ஸ் என்ற கொசுக்கள் யானைக்கால் நோயை உண்டாக்குகின்றன. க்யூலக்ஸ் டிரைட்டினியோரிங்ஸ் என்ற கொசுக்கள் பன்றிகளின் இரத்தத்தை உறிஞ்சி, குழந்தைகளின் உடலுக்குள் புகுந்து, மூளைக்காய்ச்சலை உண்டாக்குகின்றன. பொதுவாகக் கொசுக்களின் ஆயுள் காலம் மூன்று ஆண்டுகள் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இத்தகைய தீங்கு விளைவிக்கின்ற கொசுக்களைத் தண்ணீர் தேங்கி உள்ள குட்டைகளில் மண்ணெண்ணெயைத் தெளிப்பதன்மூலம் ஒழிக்கலாம்.

பொதி சுமக்கும் கழுதை

சாதாரணமாகக் காகிதங்களைத் தின்னும் நாட்டுப்புறக் கழுதைகள் ஒரே மூச்சில் 3 லிட்டர் வரை தண்ணீர் குடிக்குமாம். அவை 7 நாட்கள் எந்தவித உணவுமில்லாமல் உயிர் வாழ்வதற்கான தெம்பு கொண்டதாம். ஆரோக்கியமான கழுதைகள் சுமார் 45 கிலோ வரை பொதி சுமக்கும் என்கிறார்கள்.

தக்காளி

தக்காளியில் யூரிக் அமிலம் அதிக அளவில் உள்ளது. இது நீர்ப்பையிலுள்ள கற்களை கரைக்க வல்லதாம்.

பல்லி

வீடுகளில் உலாவும் பல்லியிடம் ஒரு சிறப்புத் தன்மை உண்டு. எதிரி அதன் வாலைக் கவ்வினால் வால் துண்டுபடும். பிறகு, அதே இடத்தில் புதிய வால் உற்பத்தியாகிவிடும். பெரும்பாலான பல்லிகள் விஷமற்றவை என்றாலும் அமெரிக்கப் பாலை வனத்தில் உள்ள ஒரு பல்லி இனமும், மெக்ஸிகோ நாட்டில் உள்ள ஒரு பல்லிவகையும் விஷமுள்ளதாம். பல்லிகளில் 2,500 வகைகள் உண்டாம்.

ரோபோ

ரோபோ என்ற சொல் 'ரோபோட்டா' என்ற செக்கோஸ்லோவாக்கிய மொழியிலிருந்து வந்தது. ரோபோ என்றால் வேலை என்று பொருள். மனிதனையும், மனிதனின் வேலைகளையும் காப்பிடிக்கும் ஒரு இயந்திரம்தான் ரோபோட் ஆகும். ரோபோக்களை உபயோகித்து மனிதனால் செய்ய முடியாத பல வேலைகளைச் செய்யலாம். ரோபோக்கள், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னால் கனடாவில் இருந்து புறப்பட்ட கனிஷ்கா என்ற விமானம் நடுக்கடலில் விழுந்தபோது அந்த விமானத்தின் கறுப்புப் பெட்டியைக் கடலில் மூழ்கி, தேடி எடுத்தது. ரோபோவை விளையாட்டு, பந்தயம் போன்ற பொழுதுபோக்கிற்கும் பயன்படுத்துகிறார்கள்.



கால்களும், நோய்களும்

கால்களின் மூலம் 60 வகையான வியாதிகள் நம் உடலுக்குள் நுழையக்கூடும் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். கூடுமானவரை பாத அணிகள் அணிந்தும், கால்களைச் சுத்தமாகவும் வைத்திருப்பதன்மூலமும் நாம் வியாதிகளிலிருந்து தப்பிக்கலாம்.

வேகம்

நத்தை ஒரு கிலோ மீட்டர் தூரத்தை அடைய 24 மணி நேரத்தை எடுத்துக்கொள்கிறது. ஆமைகள் 100 மீட்டர் தொலைவைக் கடக்க 22 நிமிடங்கள் ஆகும். விலங்குகளிலேயே சிறுத்தைப் புலிகள்தான் வேகமாக ஓடக்கூடியவை. அவை மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் ஓடும்; ஆனால், ஒரு சில மீட்டர்கள் ஓடியதுமே அது களைத்து விடுகின்றன.



அரேபியா வளைகுடாவின் கரையோரச் சேற்றில் கிடக்கும் கெளுத்தி மீன்களில் ஒருவிதக் களிம்பு (Secretion) காணப்படு கிறது. 60க்கும் மேலான புரதங்கள் அதில் அடங்கியிருக்கின்றனவாம். ஆறாத ரணங்களையும் ஆற்றும் சக்தி அந்தக் களிம்பிற்கு இருப்ப தாகக் குவைத் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக் கிறார்கள்!





மின்னல் தாக்குமிடத்தையும், அது எந்தக் கணக்கில் தாக்கு கிறது. என்பதையும் மிகச் சரி யாகக் கண்டுபிடிக்க, அமெரிக்க வானிலைத் துறை அதிகாரிகள் விண்வெளியுகக் கம்ப்யூட்டர் கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். காடுகளில் மின்னல் தாக்கிக் காட்டுத் தீ மூளுவதைத் தவிர்க்க இந்த முறை பயன்படுகிறதாம்!



அட்டை என்றாலே இரத் தத்தை உறிஞ்சும் என்றுதான் நமக்குத் தெரியும். ஆனால் அதி லிருந்து சுரக்கும் பிசுபிசுப்பான திரவம், கிளகோமா (Glaucoma) என்கிற கண் நோயை நீக்கும் மருந்தாகப் பயன்படுகிறது என் கிறார்கள் பிரிட்டனில் அட்டைப் பண்ணையே வைத்து நடத்தும் பயோபார்ம் நிறுவனத்தார்!

சொல்லுங்கள் பார்க்கலாம்?

- ராஜூ

1. இளமையில் கருமை
முதுமையில் வெண்மை!
- அது என்ன?

2. சின்னச் சின்னப் பெட்டிக்குள்ளே
சேதியெல்லாம் கண்ணுக்குள்ளே!
- அது என்ன?

3. அடித்தால் வலிக்கும்
கடித்தால் இனிக்கும்!
- அது என்ன?

4. ஓட்டம் நின்றால்
ஆட்டம் போச்சு!
- அது என்ன?

5. கலகல சிரிப்புடன் அழைப்பான்
காதுக்குள் கதைகளை நுழைப்பான்!
- அது என்ன?

6. நின்றால் நிற்பான்
நடந்தால் நடப்பான்
படுத்தால் படுப்பான்!
- அவன் யார்?

7. சின்னப்பெட்டி நல்ல பெட்டி
சேதி சொல்லும் வெல்லக்கட்டி!
- அது என்ன?

விடைகள்:
1. தலைமுடி 2. தொலைக்காட்சி 3. கரும்பு
4. பட்டம் 5. தொலைபேசி 6. நிழல்
7. வானொலி.

மாம்பழம் ஒரு மாமருந்து

கனிகளில் சிறந்தது முக்கனி என்பது நமது முன்னோர்களின் முதுமொழி. மா, பலா, வாழை என்று முக்கனிகளில் முதல் இடத்தை மாம்பழத்திற்கு அளித்துள்ளனர் நமது முன்னோர். பல கவிஞர்கள் மாம் பழத்தையும் அதற்குரிய உயர்ந்த இடத் தையும் புகழ்ந்து பாடி இருக்கிறார்கள். வால்மீகியும் காளிதாஸனும் மாம்பழத் தின் ரசிகர்களாகவும் அவற்றின் மீது மிகுந்த விருப்பம் உடையவர்களாகவும் இருந்தனர்.

மாம்பழத்தில் பல்வேறு ரகங்கள் உள்ளன. இந்தியாவில் 14,000 ரகங்கள் அல்லது இனங்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை, தரத்திலும், தன்மையிலும், பெயரிலும் ஒன்றுக்கு ஒன்று வேறுபட்டவையாக வும் மாறுபட்டவையாகவும் இருக்கின் றன. மாம்பழம் ஒரு இனிமையான சுவையுள்ள பழமாகும். எல்லா வகை யான மனிதர்களையும் அது தனது இனிய சுவையால் கவர்ந்துள்ளது.

மாம்பழத்தின் தோலில் கரோட்டின் சத்து மிகுந்த அளவில் இருக்கின்றது. ஆகவே, மாம்பழத்தை அதன் தோலு டன் சாப்பிட வேண்டும். மாம்பழத்தில்,
86.1 சதவீதம் கார்போஹைடிரேட்டும்,
11 சதவீதம் நார்சத்தும்,
0.1 கால்ஸியமும்,
0.3 சதவீதம் இரும்புச் சத்தும்,
0.3 சதவீதம் பாஸ்பரசும்,
மற்றும் வைட்டமின் சத்துக்களும், புரதச்சத்தும், தாதுப்பொருட்களும் இருக்கின்றன.

மாம்பழத்தின் ஒவ்வொரு 100 கிராமிலும்,

4,800 யூனிட் கரோட்டின்,
40 மில்லி கிராம் வைட்டமின்-சி
50 மில்லி கிராம் ரிட்போபிளேவின் என்ற "பி" இனத்தைச் சேர்ந்த வைட்டமினும் மற்றும்
13 மில்லி கிராம் வைட்டமின்-டியும் அடங்கியுள்ளன. நூறு கிராம் மாம்பழத்தில் 50 கிராம் கலோரி சத்து உள்ளது.

பப்பாளி மற்றும் வாழைப் பழத்தை விட மாம்பழத்தில் அதிக அளவில் சத்துக்கள் இருக்கின்றன. ஒருவர் உடல் களைப்பாகவும் மனச்சோர்வாக வும் இருக்கும்போது மாம்பழம் சாப்பிடுவது நல்லதாகும். மாம்பழம் உடனடியாக உடல் அசதியைப் போக்கி புத்துணர்ச்சியை அளிக்கிறது.

மாம்பழம் உடல் நலத்தை மட்டு மல்ல ரத்தத்தை உற்பத்தி செய்வ திலும் மிகுந்த பயனை அளிக்கிறது. பசி இல்லாதவர்களும்கூட மாம்பழம் சாப்பிடலாம். உணவு செரிமானத்துக்கு உதவும் அமிலங்களை மாம்பழம் மீண்டும் வயிற்றில் சுரக்கச் செய்கிறது. மாம்பழம் வயிற்றை இளகச் செய்து ஜீரண சக்தியை அதிகரித்து - மலச்சிக்கலைப் போக்குகிறது. வயிறு மற்றும் குடல் பகுதிகளில் உண்டாகும் வாய்வுத் தொல்லைகளைப் போக்கு கிறது.

புற்றுநோயைத் தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் மாம்பழம் பெரும் உதவியாக இருக்கிறது. வேறு உணவு எதுவும் சாப்பிடாமல் இருந்து மாம்பழச் சாறு மட்டும் சாப்பிட்டு வந்தால் அனிமியா, வெளிறிப் போதல், காட்ரேக்ட் மற்றும் சாதாரண ஜலதோஷம் போன்றவை குணமாகும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாதவிலக்குக் காலங்களில் அதிக ரத்தப் போக்கு ஏற்பட்டால் - முழுமையான ஓய்வோடு மாம்பழச் சாறு அருந்தி னால் - ரத்தப்போக்கு குறையும்.

சத்துணவுப் பற்றாக்குறையே மனநோய்களுக்கு அடிப்படை காரணம் என்று ஆராய்ச்சிகள் நிரூபித்து உள் ளன. ஆகவே, அத்தகைய நோயாளி களுக்கு அதிகமான அளவில் மாம்பழ மும் மற்ற பழங்களும் அவர்களுக்கு அளிக்கப்படும் உணவோடு கொடுக்கப் பட வேண்டும் என்று சிபாரிசு செய்யப் பட்டுள்ளது. வைட்டமின்-ஏ சத்து நமது கண்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் அவசியமான சத்து ஆகும்.



அது மாம்பழத்தில் அதிக அளவில் இருக்கின்றது.

மாம்பழத்தில் அதிகமான அளவில் கலந்துள்ள கால்சியம் சத்தும், வைட்டமின்-சி சத்தும், நமது பற்களுக்கும், ஈறுகளுக்கும், எலும்புகளின் வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமானதாகும். மாம்பழம் ஒரு சிறந்த சரும டானிக் ஆகும். சருமம் மற்றும் கூந்தலின் அழகையும் ஆரோக்கியத்தையும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் விரும்புவோர் - தினமும் ஒரு மாம்பழம் சாப்பிட வேண்டும் என்று ஆலோசனை கூறப்படுகிறது. சர்க்கரையும் வறுக்கப்பட்ட உணவுகளும் நமது சருமத்தைப் பாதிக்கிறது. இனிய மாம்பழம் சருமத்தைப் பாதுகாக்கிறது.

உடல் எடையை அதிகரிக்க விரும்புவோர் தினசரி ஒரு மாம்பழம் அல்லது இரண்டு மாம்பழங்களை தேன் மற்றும் தேங்காய்ப்பாலுடன் மாம்பழச்சாற்றைக் கலந்து சாப்பிட்டு வந்தாலும் உடல் எடை அதிகரிக்கும். உடல் எடையை அதிகரிப்பதற்கு மருந்துக் கடைகளில் விற்கப்படும் விலையுயர்ந்த டானிக்குகளைவிட மாம்பழச்சாறு சிறந்ததும் மலிவானதுமாகும்.

புளிப்பு மற்றும் கசப்பான உணவுப் பொருட்களைச் சாப்பிடக்கூடாது என்று சிலர் கூறுவார்கள். ஆனாலும், மாங்காய்களைச் சட்னியாகவும், கறியாகவும், ஊறுகாயாகவும் சாப்பிடுவதில் எந்த விதக் கெடுதலோ தீமையோ இல்லை. மாம்பழச் சாறுடன் மற்ற காய்கறிகளைக் கலந்து சாலடாகச் சாப்பிடுவதும் நன்மை தரும். மாங்காய்களை மென்று சாப்பிடுவது பற்கள் மற்றும் ஈறுகளின் ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லதாகும். ஆனால் துவர்ப்பான மாங்காய்களை அதிக அளவில் சாப்பிடுவது நல்லதல்ல.

பழரசம், ஜேம், ஜெல்லி போன்றவை தயாரிக்கவும் மாம்பழங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மாம்பழச் சாறுடன் முந்திரிப்பருப்பு, வெல்லம் போன்றவற்றைக் கலந்து பாயாசம் தயாரிக்கலாம். அது இனிமையாகவும் சுவையாகவும் இருக்கும். அத்துடன் தேங்காய்ப்பாலும் ஏலக்காயும் சேர்த்துக் கொண்டால் கமகமவென்று நறுமணமுள்ளதாக இருக்கும். நோயாளிகளுக்கும், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், முதியோர்கள், பெரியவர்கள் மற்றும் வளரும் குழந்தைகளுக்கும் இது ஒரு சிறந்த உணவாகும்.

மாம்பழம் மட்டுமல்ல - மாம்பழக் கொட்டைகள், மாவிலைகள், மாமரப் பட்டைகள் ஆகியவையும் மருத்துவத் தன்மை கொண்டவை ஆகும். மருந்துக் கடைகளில் விற்கப்படும் பற்பசைகளைவிட மாவிலைகள் பல் வியாதிகளுக்கு சிறந்த மருந்தாகும் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காய்ந்த மாவிலைகளைப் பொடியாக்கி - அந்தப் பொடியைத் தீக்காயங்களில் தடவி வந்தால் - தீப்பட்ட காயங்கள் விரைவில் குணமாகும். மாமரத்தில் உண்டாகும் பிசின் அல்லது பசை - பூச்சிக் கடிகளுக்குச் சிறந்த மருந்தாகும். அது வலிகளைக் குறைக்கும். இரத்தம் வடிதல், மற்றும் புண்களுக்கு காய்ந்த மாமரப் பட்டை சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

மாம்பழக் கொட்டைகளைப் பொடியாக்கி - அந்தப் பொடியை வயிற்றுப் போக்கு மற்றும் சீதபேதியுள்ளவர்களுக்குக் கொடுத்தால் வயிற்றுப் போக்கும், சீதபேதியும் உடனடியாக நிற்கும் - குணமாகும். இது விலையுயர்ந்த கோகோ வெண்ணையைவிட சிறந்தது என்று ஹைதராபாத்திலுள்ள தேசிய சத்துணவு நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

மாம்பழக் கொட்டைகளை வீணாக்கும் வகையில் வெளியில் எறிந்து விடக்கூடாது. இன்னொரு மாமரத்தை உண்டாக்கும் வகையில் அதை மண்ணில் நட்டு, தண்ணீர் பாய்ச்சி வளர்க்க வேண்டும், அல்லது பொடியாக்கி மருந்தாகப் பயன்படுத்த வேண்டும்.

நன்றி: எழுமின் நலம்பெற



வாழையின் மகிமை

சிறுநீரகத்தில் கற்கள் இருந்தால் பப்பாளியும், வாழைத்தண்டும் மாற்றி மாற்றி உண்டு வந்தால் இந்நோய் குணமாகும்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் விடுபட்டுப்போன பதிவைப் புதுப்பிக்க அரசாணை

வாசகர்களே! வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து, உங்கள் பதிவைப் புதுப்பிக்கத் தவறி விட்டீர்களா? கவலையை விடுங்கள். இதோ அதற்கான அரசாணை! இந்த அரசாணையை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் நேரில் காட்டி நீங்கள் புதுப்பித்துக் கொள்ளலாம்.

தமிழ்நாடு அரசு

-சுருக்கம்-

வேலைவாய்ப்பு அலுவலக நடைமுறைகள் - பதிவுகள் புதுப்பித்தல் - 1992, 1993, 1994 மற்றும் 1995 ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு, புதுப்பிக்கச் சலுகை வழங்குதல் ஆணை வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ2) துறை

அரசு ஆணை நிலை எண்.157 — நாள் 28.10.1996-ல்

படிக்கப்பட்டது

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையரின் கடித எண். பப158305/96, நாள் 5.9.96 மற்றும் 19.9.96.

******

ஆணை:

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை தொடர்பான மானியக் கோரிக்கையின் மீது 20.8.1996ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவையில் நடந்த விவாதத்திற்குப் பதிலளிக்கையில், பல்வேறு காரணங்களினால் தங்களின் பதிவுகளை வேலைவாய்ப்பகங்களில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்குச் சலுகை அளிக்கும் நோக்கத்தில் அவர்கள் தற்போது புதுப்பிக்க அவகாசம் அளிக்கப்படும் என்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்தார். இது தொடர்பாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையருடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

2. 1993, 1994 மற்றும் 1995ஆம் ஆண்டுகளில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தங்களின் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறியவர்களுக்குச் சில நிபந்தனைகளுடன் ஒரு முறை அவகாசம் அளித்து அவர்கள் தங்கள் பதிவுகளைப் புதுப்பிக்க வகை செய்யும் வகையில் ஆணைகள் வழங்கலாம் என்று வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அரசுக்குப் பரிந்துரை செய்தார். இதனை அரசு நன்கு ஆராய்ந்து, 1989 முதல் 1992 வரையில் உள்ள காலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, அவற்றை முறையாக 1992 முதல் 1995ஆம்

ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்களுக்கு அவர்கள் தங்களின் பதிவுகளைப் புதுப்பிக்க ஒரு சிறப்பு அவகாசம் அளிக்கலாம் என்று அரசு முடிவு செய்தது. அதன்படி 1989, 1990, 1991 மற்றும் 1992 ஆகிய ஆண்டுகளில் வேலைவாய்ப்புக்கெனப் பதிவு செய்து, அதன் பின்பு, முறையே 1992, 1993, 1994 மற்றும் 1995ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியவர்கள் தற்போது தங்களின் பதிவுகளைக் கீழ்காணும் நிபந்தனைகளின் பேரில் அவற்றைப் புதுப்பித்து மறு பதிவு செய்யலாம் என்று அரசு ஆணை வெளியிடுகிறது.

(1) 1992, 1993, 1994 மற்றும் 1995 ஆகிய ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறிய நபர்கள் மட்டும் இச்சலுகையைப் பெறலாம்.

(2) இச்சலுகையைப் பெற விரும்பும் நபர்கள் அரசாணை வெளியிடப்பட்ட 3 (மூன்று) மாதங்களுக்குள் சம்பந்தப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு வேலைவாய்ப்புப் பதிவு அட்டையின் நகலுடன் மனுச் செய்யவேண்டும்.

(3) இச்சலுகை ஒரு முறை மட்டும் வழங்கப்படும்.

(4) 3 மாதங்களுக்குப் பின் செய்யப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

(5) 1992ஆம் ஆண்டிற்கு முன் புதுப்பிக்கத் தவறியவர்களின் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

(6) தங்களுடைய வேலைவாய்ப்பு அட்டைகளையும் அதனுடன் சேர்த்து, அவை 1992க்கு முன் முறையாகப் புதுப்பிக்கப்பட்டதற்கான அத்தாட்சியுடனும் மற்றும் உரிய கல்விச் சான்றுகளுடனும் மனுச் செய்யப்பட வேண்டும்.

(7) 1992, 1993, 1994 மற்றும் 1995ஆம் ஆண்டுகளில் புதுப்பிக்கத் தவறியதன் பேரில், அதன் பிறகு புதிதாகப் பதிவு செய்தவர்களுக்கும் இச்சலுகை பொருந்தும். உதாரணமாக 1989ஆம் ஆண்டு சனவரியில் பதிவு செய்தவர் 1992 சனவரியில் புதுப்பிக்கத் தவறியதால் அவர் புதிதாக 1993ஆம் ஆண்டில் அல்லது அதன் பிறகு பதிவு செய்திருக்கக்கூடும். இதுபோன்ற நபர்களுக்கு இச்சலுகை வழங்கப்படுவதால் அவர்களுக்கு 1989ஆம் ஆண்டிலிருந்து பதிவு மூப்புக் கிடைக்கும்.

(8). இச்சலுகை 1992, 1993, 1994 மற்றும் 1995ஆம் ஆண்டுகளில் தங்கள் பதிவுகளை வேறு வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு மாற்றியவர்களுக்கும் பொருந்தும்.

(Those who have transferred their Registration to other employment exchanges and failed to renew them thereafter will also be covered. They should belong to *1992, 1993, 1994* and *1995.)*

3. மேலே பத்தி 2ல் வெளியிடப்பட்ட ஆணைகள் பற்றிய விவரங்களை, அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் உள்ள தகவல் பலகைகளில் (Notice Board) பொது மக்களின் தகவலுக்காக வைக்க, தக்க அறிவுரைகள் வழங்கும்படி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி.)

தேபேந்திரநாத் சாரங்கி
அரசுச் செயலாளர்

பழியுணர்வு மட்டுமே வாழ்க்கை எனக்
கொண்டவர்கள், பகைவர் முயற்சி
இல்லாமலே - தமக்குத் தாமே குழி வெட்டிக்
கொள்ளுவார்கள்!

– கலைஞர்

அரசு உதவிகளைப் பெற யாரை அணுக வேண்டும்

சமூக நலத்துறை

திட்டத்தின் பெயர்	தகுதிகள் நிபந்தனைகள்	அணுக வேண்டிய அலுவலர்
தையல் இயந்திரங்கள் வழங்கும் திட்டம்	கைம்பெண், அனாதை, விதவை, கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆண்டு வருமானம் ரூ.12000க்குக் குறைவாக இருக்கவேண்டும். வயது 20 - 40க்குள் இருக்கவேண்டும். தையற்கலை தெரிந்தவராக இருக்கவேண்டும். இலவசத் தையல் இயந்திரம் பெறாதவராக இருக்கவேண்டும்.	மாவட்ட சமூக நல அலுவலர் சம்பந்தப்பட்ட மாவட்ட
மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.	மணப்பெண் 18 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும். 8ம் வகுப்புவரை படித்திருக்க வேண்டும். மணப்பெண்ணுக்கு முதல் திருமணமாக இருக்கவேண்டும். திருமணத்திற்கு 15 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பித்திருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மேல் இருக்கக் கூடாது. கிராமப்புறமாக இருந்தால் ஊராட்சி ஒன்றிய ஆணையர் மூலமாகவும், நகராட்சிப் பகுதியில் வசிப்பவராக இருந்தால் நகராட்சி ஆணையர் மூலமும் விண்ணப்பிக்க வேண்டும். உதவித் தொகை ரூ.10,000 வழங்கப்படும்.	,,
விதவை மகள் திருமணம்	மணமகளின் தாய் விதவையாக இருக்கவேண்டும். மறுமணம் செய்யாமலிருக்க வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்க வேண்டும். ரொக்கத் தொகை ரூ.2000 வழங்கப்படும். மணப்பெண் 20 வயது நியம்பியவராக இருக்கவேண்டும்.	,,
டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டம்	மணப்பெண் விதவையாக இருக்கவேண்டும். வயது 20 முதல் 30க்குள் இருக்கவேண்டும். மணமகள் அரசின் எந்த சலுகைகளையும் பெறாதவராக இருக்கவேண்டும். மணமக்களுக்கு ரூ.5000 தேசிய சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படும். மணமகனுக்கு 40 வயதுக்கு மேல் இருக்கக்கூடாது. முதலில் திருமணம் ஆகியிந்தால் மனைவி உயிருடன் இருக்கக் கூடாது. ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும்.	,,
ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்	மணமகள் அனாதையாக இருக்கவேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும். வயது வரம்பு 20க்கு மேல் இருக்கவேண்டும். குடும்பத்தில் ஒரு நபர் மட்டும் இவ்வுதவி பெற முடியும். ரொக்கப் பணம் ரூ.2000 வழங்கப்படும்.	,,
தமிழ்நாடு அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம்	20 வயதுக்குமேல் இருக்கவேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும். தாழ்த்தப்பட்டவர் பிற்பட்டோரை மணக்க வேண்டும். பிற்பட்டோர் தாழ்த்தப்பட்டோரை மணக்கவேண்டும். முற்பட்டோர் பிற்பட்டோரை மணக்கவேண்டும்.	,,

	முற்பட்டோர் தாழ்த்தப்பட்டோரை மணக்கவேண்டும்.	மாவட்ட சமூகநல அலுவலர் சம்பந்த மாவட்டம்.
	பதிவுத் திருமணமாக இருக்கவேண்டும். திருமணம் நடைபெற்ற இரண்டு ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும். உதவித்தொகை ரூ.2000க்கு தேசிய சேமிப்புப் பத்திரமும், ரூ.3000 ரொக்கமாகவும் அளிக்கப்படும்.	
ஏழைப் பெண்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சித் திட்டம்	பள்ளி இறுதியாண்டில் 50 தேர்ச்சி மற்றும் அதற்கு மேல் பெற்றிருக்க வேண்டும். வயது வரம்பு 16 - 30 வரை. ஆண்டு வருமானம் ரூ.6400க்குக் குறைவாக இருக்கவேண்டும். தட்டெழுத்திற்கு மாதம் ரூ.15ம், சுருக்கெழுத்திற்கு ரூ.10ம் அளிக்கப்படுகிறது.	,,
விதவையின் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் வழங்குதல்.	விதவையின் குழந்தையாக இருக்கவேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும். 1 முதல் 8ஆம் வகுப்பு வரை நோட்டுப் புத்தகங்கள் அளிக்கப்படும். 9ஆம் வகுப்பு முதல் +2 வரை பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப்புத்தகங்கள் அளிக்கப்படுகிறது.	,,
தையற் பயிற்சி மையம்	வயது 18 முதல் 30க்குள் இருக்கவேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கவேண்டும். சமூகநலத் துறையின் நிதி உதவியுடன் செயல்படுகின்ற தையற் பயிற்சி பயிலும் மகளிருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50 உதவித்தொகையும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை பிற்பட்டோர் நலத்துறை ஆகிய துறைகளின் நிதி உதவியுடன் செயல்படுகின்ற தையல் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.30 உதவித்தொகையும் வழங்கப்படுகிறது.	,,
டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு உதவித் திட்டம்	கர்ப்பிணிகளுக்கு ரூ.500 உதவித்தொகை வழங்கப்படுகிறது. கர்ப்பிணிகள் மருத்துவமனையில் பெயர் பதிவு செய்திருக்க வேண்டும். அருகிலுள்ள மகப்பேறு உதவியாளரின் சான்று பெற வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.12000க்குள் இருக்கவேண்டும். முதல் இரண்டு குழந்தைகளுக்கு இவ்வுதவித் தொகை வழங்கப்படும். 20 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.	ஊராட்சி ஒன்றிய ஆணையர் / நகராட்சி ஆணையர் சம்பந்தப்பட்ட ஒன்றியம் / நகராட்சி
அரசு குழந்தைகள் பராமரிப்பு இல்லம்	5 வயது முதல் 18 வயது வரை பெண்களும் அதாவது முதல் வகுப்பு முதல் +2 வரை 5 வயது முதல் 10 வயது வரை ஆண்களும் (முதல் வகுப்பு முதல் 5 வகுப்பு வரை) தாயோ, தந்தையோ யாராவது ஒருவரை இழந்த அல்லது பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகள் இல்லத்தில் சேர்க்கப்பட்டு இடம், உடை, உணவு இலவசமாக அளிக்கப்படுகிறது. பாதுகாவலர் ஆண்(வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்க வேண்டும்.	மாவட்ட சமூக நல அலுவலர் சம்பந்தப்பட்ட மாவட்ட
தமிழக அரசு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்	இந்தத் திட்டத்தில் சேர விரும்பும் பெற்றோர் தாய் அல்லது தந்தை 40 வயதிற்குள் 1.4.92க்குப் பின்னர் குடும்ப நல அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்க வேண்டும்.	

அந்தப் பெற்றோருக்கு ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருக்கவேண்டும். ஆண் குழந்தை இருக்கக் கூடாது.

இந்தத் திட்டத்தில் பதிவு செய்யப்படும் பெண் குழந்தை 3 வயதிற்குட்பட்டதாக இருக்கவேண்டும்.

அந்தக் குடும்பம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கவேண்டும். ஆண்டுக்கு வருமானம் ரூ.12000க்கு மிகாமல் இருக்கக் கூடாது.

பயன்கள்

ஒரு பெண் குழந்தைக்கு 5000 ரூபாய் வைப்புநிதியாக அந்தக் குழந்தையின் பெயரால் அரசு முதலீடு செய்யும்.

குழந்தையின் முதல் பிறந்த நாளில் அந்தக் குழந்தைக்கு ரூ.800 மதிப்புக்கு உரிய தங்க மோதிரம் வழங்கப்படும்.

குழந்தையைப் பள்ளியில் முதல் வகுப்பில் சேர்க்கும்போது ரூ.250 கிடைக்கும். குழந்தை 6ஆம் வகுப்பிற்குச் செல்லும்போது ரூ.500 வழங்கப்படும்.

9ஆம் வகுப்பு முதல் பிளஸ் 2 வகுப்பு படிக்கும் 4 ஆண்டு காலத்தில் 40 மாதங்களுக்கு மாதம் ரூ.50 வீதம் மாதாமாதம் வழங்கப்படும்.

அந்தப் பெண் குழந்தை 20 வயது முடிந்த உடன் திருமணச் செலவிற்கோ அல்லது மேற்படிப்புக்கோ ரூ.20,000 வழங்கப்படும்.

அட்டைப்பட விளக்கம்

முதலாம் அட்டை:

காவல்துறைப் போக்குவரத்துப் பிரிவினருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நவீன கருவிகளை வழங்கினார்.

இரண்டாம் அட்டை:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 19.11.96 அன்று தலைமைச் செயலகத்தில் தேசிய ஒருமைப்பாடு உறுதி மொழியினை படிக்க மாண்புமிகு அமைச்சர்களும், அலுவலர் களும் உறுதிமொழி ஏற்கின்றனர்.

நான்காம் அட்டை:

உணவுப் பாதுகாப்புக் கண்காட்சி விழாவினை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு தேவகவுடா அவர்கள் 9.11.96 அன்று துவக்கிவைத்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : என்.எஸ். பழனியப்பன் இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர் : இரா.பா. கார்மேகம், உதவி இயக்குநர் : எம். அண்ணாமலை
ஆசிரியர் குழு : ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அ. மதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி. பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள் : என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

சென்னை, ராஜ்பவனில் 24.11.96 அன்று மேதகு இந்தியக் குடியரசு துணைத் தலைவர் திரு கே.ஆர். நாராயணன் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார்.

புகைப்பழக்கம் கண்களைக் குருடாக்கிவிடும்

புகைப்பிடிப்பதால் புற்றுநோய், இதய நோய்கள், வாய்துர்நாற்றம் போன்றவை உண்டாகும் என்றுதான் இதுவரை மருத்துவ ஆராய்ச்சிகள் கூறிவந்தன. தற்போது இந்தப் பழக்கம், புகைப்பிடிப்பவரின் கண்களைக் குருடாக்கிவிடும் என்று அமெரிக்க மருத்துவக்கழகம் கண்டுபிடித்து தெரிவித்துள்ளது.

அண்மையில், அமெரிக்காவில் நாள் ஒன்றுக்கு 25 சிகரெட் பிடிக்கும் பழக்கம் உடைய 32 ஆயிரம் பெண் செவிலியர்களிடையே 12 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதன்படி புகைப்பிடிப்பவர்களுக்கு, புகைப் பிடிக்காதவர்களைவிட இரண்டரை மடங்கு அளவுக்குக் கூடுதலாகக் கண்கள் குருடாகும் வாய்ப்புள்ளது. ஆண்களில் நாள் ஒன்றுக்கு 25 சிகரெட் குடிக்கும் 21 ஆயிரம் ஆண்களிடையே சோதனை நடத்தியபோது இரண்டிலிருந்து மூன்று பங்கு வரை குருடாகும் சூழ்நிலை உருவாகியிருந்தது. ஆனால், எவ்வளவு சிகரெட் பிடித்தால், கண்கள் குருடாகும் என்று சரியாகச் சொல்லமுடியாவிட்டாலும், புகைப்பழக்கம் கண்களைக் குருடாக்கிவிடும் என்று மட்டும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பாவம் பசுந்தளிர்கள்!



உலக நாடுகள் பலவற்றிலும் போராளி அமைப்புகள் மட்டுமல்ல; அரசாங்கங்களும் பிஞ்சுக் குழந்தைகளின் கரங்களில் துப்பாக்கிகளைக் கொடுத்து - இரத்த நாற்றத்தை நுகரச் செய்கின்றன என்று குற்றம் சாட்டுகிறது ஐ.நா.சபை அறிக்கை!

நவம்பர் மாதத்திற்குப் பெருமை சேர்த்த உலகத் தலைவர்களில் ஒருவர் பண்டித ஜவகர்லால் நேரு. இந்திய சுதந்திர போராட்டக் கால சரித்திரத்தில் அண்ணல் காந்தி அடிகளுக்கு அடுத்த இடத்திலும், சுதந்திர இந்தியாவை உருவாக்குவதில் முதலிடத்திலும் சரித்திரத்தில் இடம்பிடித்த நாயகர்! அவருக்குப் பிடித்தமான பொருட்கள் இரண்டு. ஒன்று ரோஜா மலர்கள். அது எப்போதும் அவருடைய அங்கியை அலங்கரிக்கும். சுருட்டு இல்லாத சர்ச்சிலையும், ரோஜா இல்லாத நேருவையும் எந்தப் படத்திலும் பார்த்திருக்க முடியாது! மற்றொன்று - மலரினும் மெல்லிய மழலைகள். அதனால்தான் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 14ஆம் நாள் நேருவினுடைய பிறந்தநாளை நாடு முழுவதும் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு நாடு முழுவதும் குழந்தைகள் தினவிழா கொண்டாடப்பட்டு, நேரு பிரானின் நினைவுக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது. இதே நேரத்தில்தான் ஐ.நா. சபை வெளியிட்ட ஒரு அறிக்கை நம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. குழந்தைகள் தினவிழாவுக்குச் சில நாட்கள் முன்பாக ஐ.நா. சபை வெளியிட்ட அந்த அறிக்கையில் "குழந்தைகள் தங்கள் இளமையை அனுபவிக்க அனுமதியுங்கள்" என்று உலக நாடுகளுக்கு வேண்டுகோளும் விடுக்கப்பட்டது.

ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளை நேசிக்கவே செய்கிறார்கள். எத்தனைப் பேர் மற்றவர்களின் குழந்தைகளை நேசிக்கிறார்கள் என்று பார்க்கிற போதுதான் மனிதாபிமானம் சகாரா பாலைவனத்தைவிட கொடுமையான வெப்பத்தோடு இருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

சொந்தக் குழந்தைகளைக் கொஞ்சி மகிழுகிற அந்த இதயங்களில் அடுத்தவர் குழந்தைகள் படுகிற அவதிகளைக் கண்டு அழுகிற அளவுக்கு இரக்கம் இல்லாவிட்டாலும் அதைக் கண்டு ஆனந்திக்கிற கொடூரமாவது இல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் - என்ற சிந்தனைதான் ஐ.நா. சபையின் அறிக்கையைப் படிக்கிறபோது ஒவ்வொருவர் இதயத்திலும் ஏற்படும்.

ஐ.நா. சபையின் மனித உரிமைக்கான மையம், அதன் குழந்தைகள் உதவி நிறுவனமான "யூனிசெஃப்" ஆகியவற்றின் ஆதரவோடு அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

பாலகர்களின் பரிதாப நிலை

அந்த அறிக்கையைத் தயாரித்தவர் மொசாம்பிக் நாட்டின் முன்னாள் அதிபர் மறைந்த சமோரா மேச்சலின் மனைவி கிரேகா மேச்சல். "குழந்தைகள் மீது யுத்தத்தின் விளைவுகள்" என்ற பொருள் குறித்த ஐ.நா. சபையின் ஆய்வுத் திட்டத்திற்காக அவர் எதியோப்பியா, உகாண்டா,



ஈராக், கம்போடியா, அங்கோலா, கொலம்பியா, லெபனான், ரூவாண்டா, முன்னாள் யூகோஸ்லாவியாவில் அடங்கிய நாடுகள் என்று நீண்ட தூரம் பயணம் செய்து ஆய்வு நடத்தி தனது அறிக்கையைத் தயாரித்துள்ளார்.

தனது அறிக்கையில் ஐ.நா. சபையிடம் தாக்கல் செய்துள்ள கிரேகா மேச்சல் கூறியிருப்பதாவது:

"கொலம்பியாவிலிருந்து செய்ரோ வரை மோதல்களிலும், யுத்தங்களிலும் மேலும் மேலும் குழந்தைகள் கொல்லப்பட்டு வருகின்றனர்."

குழந்தைகள் தங்கள் இளமையை அனுபவிக்க அனுமதியுங்கள். நான் குரல் அற்றவர்களுக்காகக் குரல் கொடுப்பதற்காக இங்கே வந்திருக்கிறேன். உங்கள் பார்வையைத் திருப்பிக் கொள்ளாதீர்கள்! குழந்தைகள் என்ற முறையில் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஆசைகளையும் விருப்பங்களையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

இன்று அப்பாவி மக்கள்தான் யுத்தக்களங்களில் முதல் வரிசையில் நிறுத்தப்படுகின்றனர். அந்தப் பொதுமக்கள்தான் யுத்தத்தைச் சந்திக்கின்றனர். யுத்தங்களில் கொல்லப்படுபவர்களில் 90 சதவிகிதம் பேர் அப்பாவிப் பொது மக்கள்தான். அவர்களில் பாதிப் பேர் பிஞ்சுக் குழந்தைகள்."

இவ்வாறு கூறியுள்ள கிரேகா மேச்சல், தனது அறிக்கையில் என்ன கூறியிருக்கிறார் என்று தெரிந்துகொள்ளுவோம். கடந்த வாரம் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பல தகவல்கள் நம்மை அதிர்ச்சி அடைய வைக்கின்றன. அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ள முக்கியக் கருத்துக்கள் வருமாறு:

கடந்த 10 ஆண்டுகளாக உலகம் முழுவதும் நடைபெற்று வரும் மோதல்கள் அல்லது யுத்தங்களில் சுமார் 20 இலட்சம் குழந்தைகள் இறந்துள்ளனர். இதேபோல 3 பங்கு குழந்தைகள் படுகாயமடைந்துள்ளனர்.

யுத்தங்களில் குழந்தைகள் அனுபவிக்கும் துன்பங்கள் பல வகையானவை.

சிறிய மற்றும் அதிக நுணுக்கமில்லாத ஆயுதங்களைக் கையாளுதல்.

கண்ணிவெடிகளில் சிக்கி - அல்லது கடுமையான காயத்தை அடைகின்றனர்.

அகதிகள் முகாம்கள் அவசரமாக அமைக்கப்பட்டு அவற்றில் வசிக்கநேரும் வேளையில் மருத்துவப் பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

இவை, குழந்தைகள் அனுபவிக்கும் முக்கியமான கொடுமைகள். இவற்றைக் கூறியுள்ள கிரேகா மேச்சலின் அறிக்கையில்- அத்தகைய நிலையை எப்படி மாற்றலாம்? அதற்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட வேண்டும் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தண்டிக்கப்பட வேண்டும்

18 வயதுக்குட்பட்ட குழந்தைகளை அரசாங்கமோ, போராளி அமைப்போ தங்கள் இராணுவத்தில் சேர்க்கக்கூடாது.

உலகம் முழுவதும் கண்ணிவெடிகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும்.

யாரேனும்- பொதுமக்களானாலும் இராணுவ வீரர் என்றாலும், பெண்களைக் கற்பழிப்பதை ஒரு ஆயுதமாக அல்லது யுத்த நடவடிக்கையாகப் பயன்படுத்தினால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு உலக யுத்தக் களத்தில் குழந்தைகளுக்கு எதிராக நடத்தப்பட்டு வரும் கொடுமைகளை ஒட்டுமொத்தமாகக் கூறியதோடு மட்டும் நிறுத்திவிடாமல் ஒவ்வொரு நாட்டிலும் எந்தெந்த வகைகளில் குழந்தைகள் பாதிக்கப்பட்டனர் என்பதையும் அவர் விளக்கியுள்ளார்.

உதாரணமாக 1980ஆம் ஆண்டுகளில் எதியோப்பிய நாட்டில் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் சாலைகளில் அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தனர். குழந்தைகள் உட்பட அவர்களுடைய கண்களில் பட்டவர்களையெல்லாம் இழுத்துச் சென்று இராணுவ சேவையில் ஈடுபடுத்தினர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள போர் வீரர்களில் 45 சதவிகிதம் பேர் குழந்தைகள். அதாவது சிறுவர்கள். தற்போது ஆப்கானிஸ்தானைக் கைப்பற்றியுள்ள புதிய இராணுவக் குழுவின் பெயர் தாலிபான். தாலிபான் என்பதற்கு மாணவன் என்பது பொருள். அதிலிருந்தே அதில் சிறுவர்களின் பங்கு அதிகம் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இவர்கள் குழந்தைகளை - சிறுவர்களை இராணுவத்தில் சேர்ப்பதற்குக் காரணம் என்ன? அவர்கள்தான் எதிர்த்துப் பேச மாட்டார்கள். கட்டளைக்குக் கீழ்ப் படிவார்கள். குடும்பம் இல்லாமல் தனியாக இருக்கும் ஒரு குழந்தைக்கு உணவு போன்ற அத்தியாவசியத் தேவைகளைக் கொடுத்து, பாதுகாப்பு உள்ளது என்ற உணர்வையும் ஏற்படுத்தும் போது அவன் தன்னைத் தனிமைப்படுத்திய தனது குடும்பத்தைக் கொடுமைப்படுத்திய சக்திகளை எதிர்த்துப் போராடுகின்ற பழிவாங்கும் உணர்வோடு தீவிரமான உணர்வைப் பெறுகிறான். பொதுவாகத் தீவிரவாத குழுக்களில் சிறுவர்கள் அதிக அளவில் ஈடுபடுவதற்கு இதுவும் ஒரு காரணம். அரசு இராணுவம் அத்துமீறிய செயல்களில் ஈடுபடும்போது அதனால் பாதிக்கப்படும் குழந்தை, இயற்கையாகவே பழிவாங்கும் உணர்வைப் பெறுவதும் இத்தகைய நிலைமைக்குக் காரணமாகிறது.

சிறுமிகள் நிலை

சிறுவர்கள் மட்டுமல்ல; சிறுமிகளும் கூட இராணுவத்தில் சேர்க்கப்படுகிறார்கள். ஓரிரு குழுக்களில் அல்லது இராணுவத்தில் மட்டுமே அவர்கள் கௌரவமான முறையில் போர் வீராங்கனைகளாகத் துப்பாக்கி ஏந்தி யுத்தக் களத்தில் ஈடுபடுபவர்களாக மாற்றப்படுகின்றனர். மற்ற பகுதிகளில் அவர்கள் சமையல் செய்பவர்களாக, செவிலியர்களாகச் சில வேளைகளில் விபச்சாரிகளாகக் கூட பயன்படுத்தப்படுகின்றனர் என்கிறது ஐ.நா. சபைக்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை.

இரண்டாவது உலகப் போரின் போது தாய்லாந்து உட்படப் பல்வேறு நாட்டுப் பெண்களை ஜப்பானிய இராணுவம் சிறைப் படுத்தி 'ஆறுதல் அளிக்கும் பெண்கள்' என்ற கௌரவமான பெயரின்கீழ் இராணுவ வீரர்களை மகிழ்விக்கும் விபச்சாரிகளாகப் பயன்படுத்தியது; அவர்களில் பலர் இறந்துவிட்டனர்! மீதமுள்ளவர்கள் தங்களுக்கு ஜப்பான் அரசு நஷ்டஈடு அளிக்க வேண்டும் என்று பிரச்சினை எழுப்பினர். அது இப்போது சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. கடந்த காலத் தவறுக்காக ஜப்பான் அரசு வருத்தம் தெரிவித்து நஷ்டஈடு வழங்கவும் முன்வந்துள்ளது.

கடந்த காலங்களில் புதிய புதிய நவீன ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதால் எளிதான ஆயுதங்களைச் சிறுவர்களால் கையாள முடிகிறது. அடுத்து அவர்கள் பயன்படுத்தப்படும் மற்றொரு பணி கண்ணிவெடிகளைப் பதிப்பதாகும்.

வெடி விளையாட்டு

கிரேகா மேச்சலின் அறிக்கைப் படி உலகம் முழுவதும் 11 கோடி கண்ணிவெடிகள் பதிக்கப்பட்டு உள்ளன என்று மதிப்பிடப் பட்டுள்ளன. அவற்றைத் தவறுதலாக மிதிப்பதன்மூலம் பலியாகிறவர்களுள் குழந்தைகள்தான் அதிகம். அவர்கள் கண்ணிவெடிகளைப் பயன்படுத்தி விளையாடவும் செய்கின்றனர்.

வடக்கு ஈராக்கில், குழந்தைகள் தங்கள் பொம்மை வண்டிகளுக்குச் சக்கரங்களாகக் கண்ணிவெடிகளைப் பயன்படுத்துகின்றனர். கம்போடியாவில் குழந்தைகள் பி40 ரக கண்ணிவெடிகளைப் பந்துகளைப் போல வீசி விளையாடுகின்றனர் என்று திருமதி மேச்சலின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த யுத்தக் களங்களில் நடைபெறும் மற்றொரு கொடூரத்தையும் அவர் மறக்காமல் குறிப்பிட்டுள்ளார். அதுதான் கற்பழிப்பு. இதுபோன்ற கற்பழிப்புகள் தாயை மட்டுமல்ல; பிற்காலத்தில் பிறக்கும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாதிக்கும் கொடூரச் செயலாகும். சாதாரண குடிமகனோ, இராணுவ வீரனோ யுத்தத்தில் கற்பழிப்பை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவதை ஒரு யுத்தக் குற்றமாகக் கருதி முறையாக வழக்குத் தொடர வேண்டும் என்று அவர் கூறி உள்ளார். எல்லா நாட்டு இராணுவங்களின்மீதும் இத்தகைய குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன. அவை வெறும் குற்றச்சாட்டுகள் மட்டுமல்ல; உண்மைதான் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளன. பல்வேறு நாட்டு அரசுகளின் இராணுவத் தலைமைகளும் நடவடிக்கைகள் மேற்கொண்டு தண்டனைகள் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டபோதிலும் அத்தகைய தண்டனைகள் போதுமானவையல்ல. உண்மையான சம்பவங்களில் பெரும்பாலானவை வெளிவருவதும் இல்லை.

யுத்தத்தில் பாதிக்கப்படும் குழந்தைகளின் மறுவாழ்வுப் பணிகளில் 'யூனிசெப்' நிறுவனமே ஈடுபட வேண்டும் என்பது கிரேகா மேச்சலின் கருத்து.

ஐ.நா. சபை உலகக் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு என்ன செய்யப்போகிறது என்பதை அறிந்துகொள்ள உலகமே ஆவலுடன் காத்திருக்கிறது.

நாளைய உலகை- நமது சந்ததியை- உலகக் குழந்தைகளைக் காப்பாற்ற உலக அமைப்பு என்ன செய்யப்போகிறது? நாம் ஒவ்வொருவரும் என்ன செய்யப் போகிறோம்? இந்தக் கேள்விகளுக்கான விடையைப் பொறுத்தே நமது மனிதத் தன்மையை நாளைய சரித்திரம் எடைபோடும் என்பது மட்டும் நிச்சயம்!

(நன்றி: முரசொலி 17.11.96-புதையல்)

வேலைவாய்ப்புச் செய்திகள்

ஜலந்தர் தொலைக்காட்சி நிலைய இயக்குநரிடமிருந்து ஒளிப்பதிவாளர் (Cameraman Grade III) பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. பதவி : ஒளிப்பதிவாளர் (Cameraman Grade III)

2. காலியிடங்கள்: : 8 (எட்டு)
(தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/பழங்குடியினர்...2, பிற்பட்ட வகுப்பினர்...2, முன்னாள் இராணுவத்தினர்...1, பொது...3)

3. சம்பளம் : ரு.1600-50-2300-2660

4. வயது வரம்பு : 18 முதல் 30 வயது வரை
(தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 5 ஆண்டுகளும், பிற்பட்ட வகுப்பினருக்கு 3 ஆண்டுகளும், அரசு ஊழியர்களுக்கு 5 ஆண்டுகளும் மத்திய அரசின் வயது வரம்பு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சலுகைகள் அளிக்கப்படும்.)

5. கல்வி மற்றும் தகுதிகள் : (அ) பிளஸ் 2 தேர்ச்சி அல்லது அதற்குச் சமமான தேர்வில் அறிவியல் பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) திரைப்பட (16 எம்எம் 35 எம்எம்) ஒளிப்பதிவாளர் பதவியில் குறைந்தது 3 ஆண்டுகள் அனுபவம் அல்லது ஏதாவது ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தில் 'யு' மேடிக் புகைப்படக் கருவியை இயக்கிய அனுபவம் அல்லது ஏதாவது ஒரு வீடியோ ஸ்டுடியோவில் 3 ஆண்டுகள் முன் அனுபவம் அல்லது தனியாக அல்லது பத்திரிகை நிறுவனங்களில் புகைப்படக்காரர் (Still Photograher) ஆக 3 ஆண்டுகள் அனுபவம் இருக்க வேண்டும்.

6. விண்ணப்பம் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 16.12.1996.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகள் அனைத்தும் பெற்றிருக்கும், விண்ணப்பதாரர்களுக்கு புகைப்படக் கருவித் தேர்வும், மற்றும் நேர்காணல் தேர்வும் நடத்தப்பட்டு பணியில் அமர்த்தப்படுவார்கள். இத்தேர்வுகளுக்கு ஜலந்தர் செல்ல தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் விண்ணப்பதாரர்களுக்கு விதிகளின்படி பயணப்படி வழங்கப்படும். மற்றவர்களுக்குக் கிடையாது.

விண்ணப்பப் படிவங்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வெள்ளைத்தாளில் தட்டச்சு செய்து 16.12.1996க்குள் The Director, Doordarshan Kendra, Bhagwan Mahavir Marg, Jalandhar-144 001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

சாதி மற்றும் வயது சான்றிதழ்களின் நகல்கள் அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று அனுப்பி வைக்கவேண்டும்.

நன்றி: எம்ப்ளாய்மெண்ட் நியூஸ் (நவம்பர் 16-22)

மாதிரி விண்ணப்பப் படிவம்

PROFORMA

APPLICATION FOR THE POST OF CAMERAMAN GRADE - III

In Doordarshan Kendra, Jalandhar

Affix recent Passport size photograph here

1. Name (in Block Letters) :
2. Date of Birth (Attach attested photocopy of Matriculation Certificate for proof of age:
3. Age as on 16.12.1996 : ....Years........Months.........Days
4. Father's/Husband's Name :
5. Postal Address :
6. Permanent Address :
7. Whether Departmental Candidate if so State category of post and office where he/she is employed :
8. Educational & Professional qualifications, experience etc. (Attach attested photo copies of certificates) :
9. Wheter SC/ST/OBC, if so, state name of caste Sub caste (Attach attested photo copies of certificates) :
10. Details of present employment if any with supporting documents. (Attested photo copies should be furnished) :
11. Language known : (i) Read (ii) Write (iii) Speak
12. Mother Tongue :
13. Particulars of relatives, if any working in AIR/Doordarshan or in any other office under the Ministry of Information and Broadcasting :
14. Whether physically Handicapped (Yes/No.) If yes, attach attested photo copy of certificate.
15. Whether Ex-serviceman (Yes/No.) If yes, attach attested photo copy of Certificate.
16. Whether registered with any Employment Exchange if so, indicate Registration. Number with name of Employment Exchange.
17. Any additional information.

Certified that the particulars/information mentioned in the proforma, is correct to the best of my knowledge and belief and that in the event of suppressing the relevant information, my candidature is liable to be cancelled.

Signature of the Candidate
Name in full:
(in block letters)

Place:
Date:

ஆசிரியர் மடல்

"படிப்புக்கும் அறிவுக்கும் சம்பந்தமில்லை" அதனால்தான் திருவள்ளுவரே கல்வி என்றும், அறிவுடைமை என்றும் தனித்தனி அதிகாரம் எழுதியிருக்கிறார்" என்று பட்டிமண்டபங்களில் வாதாடுவார்கள். அண்மையில், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே, சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், திரு. பொன்னுசாமி அவர்களின் மகனுக்கு ஏற்பட்ட கொடூரமான சாவைப் பார்க்கிற போது, அது சரிதானோ என்று எண்ணத் தோன்றுகிறது. 'கற்றனைத்தூறும் அறிவு' என்பது சில சமயம் இப்படிப் பொய்யாகிவிடுகிறது!

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதற்கு மனமுருகிக் கண்டனம் தெரிவித்திருக்கிறார். 'ராகிங் செய்யும் மாணாக்கர்கள் கல்வி நிறுவனத்திலிருந்தே நீக்கப்படுவர்' என்றும் கடுமையாக எச்சரித்து இருக்கிறார்.

அந்தப் பல்கலைக்கழகப் பேராசிரியர் இருவரே ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் காணாமல் போய் விட்டதாகவும், இதுவரை அவர்களைப் பற்றிய தகவல் இல்லை என்றும் ஒரு செய்தி வந்திருக்கிறது! இதெல்லாம் ஒரு கல்வியமைப்பின் நிர்வாகிகள் எத்தனை விழிப்போடிருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகள் ஆகும்.

வீட்டிலிருந்து படிக்கச் செல்பவர்களானாலும், விடுதியில் தங்கிப் படிப்பவர்களானாலும் மாணவச் செல்வங்களைப் பெற்றோர்களும் கண்காணிக்கவும் வழிநடத்தவும் வேண்டும் என்பது மிக முக்கியம்.

புதிய மாணவர்களுக்கு, முதிய மாணவர்கள் படிப்பதிலும், நடப்பதிலும் வழிகாட்டியாக இருந்தால் என்ன? அதைவிடுத்து, 'ராகிங்' என்ற பெயரால் இவ்வாறான அநியாயங்களை அரங்கேற்றுவது அறிவுடைமையாகுமா? எந்தச் சமுதாயமாவது இதை ஏற்குமா?



தமிழரசு

Licence No TN/MS(C)/PP 23

தமிழரசு

16.12.1996 ரூ.3

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

இந்த இதழில் ...

★ உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாடு -முதல்வர் கலைஞர் உரை — 2
★ (அ)ஹிம்சை சிறுகதை — 9
★ அறிந்து கொள்வோம் அரசாணையை — 17
★ கொடிநாள் செய்தி — 19
★ இலக்கியத்தில் இன்பம் — 20
★ தமிழக புதிய ஆளுநர் — 26
★ அரசு உதவிபெற யாரை அணுக வேண்டும் — 27
★ ஆசியாவில் சுற்றுப்புறச் சீரழிவு — 28
★ சுவைமிகு தகவல்கள் — 30
★ வாசகர் இதயம் — 31
★ சமையல் எரிவாயு — 32
★ எங்கள் ஊர் பிரச்சினை — 33
★ சளி - இருமல் — 37
★ செய்திச் சரம் — 43
★ வேலைவாய்ப்புச் செய்திகள் — 45
★ ஆசிரியர் மடல் — 48

தமிழரசு

திருவள்ளுவராண்டு: 2027
மார்கழித் திங்கள் : 2
மலர்: 27 இதழ்: 12
16.12.1996
விலை: ரூ. 3

JL
M311, N7ITA
214 280
N 27-12

திறமையாகவும் செயல்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமங்கள் பல குக்கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குக்கிராமமும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக்கும் குடவோலை மூலம் உறுப்பினர்கள் தேர்ந்து எடுக்கப்பட்ட விவரம் இந்தக் கல்வெட்டுகளிலிருந்து தெரியவருகின்றது. தேர்தலுக்கு நிற்கும் வேட்பாளர்களின் அறிவு, ஆற்றல், தொண்டுள்ளம், தூய ஒழுக்கம் இவற்றைக் கணக்கிலெடுத்து ஆராய்ந்த பின்னரே நிற்பதற்கே அனுமதிக்கப்பட்டனர் என்றால்; அவர்களைத் தேர்ந்தெடுப்பதில் எத்துணைக் கண்டிப்பு இருந்திருக்கும் என்பதை எளிதில் உணர முடியும். இந்தக் கிராம குடியரசுகள் நல்ல முறையில் வளர்ந்து சீராகச் செயலாற்றி, சமுதாயத்திற்குப் பேருதவிகள் பல புரிந்துள்ளன.

இந்தக் குடவோலை முறை சங்கக் காலத்திலேயே இருந்திருக்கிறது என்பதற்கு சங்க காலப் பாடல்கள் சான்றாக விளங்குகின்றன. போர்க்களத்தில் வீழ்ந்து கிடக்கின்ற வீரர்களின் சடலங்களை, கழுகுகளும், காக்கைகளும், நரிகளும், நாய்களும் தின்று தொண்டிருக்கிற காட்சியை மருதன் இளநாகனார் எனும் புலவர் காண்கிறார். காணும்போது ஒரு கழுகு ஒரு வீரனுடைய வயிற்றினைத் தன்னுடைய கூர்மையான அலகினால் கிழித்து, அவன் குடலை உருவிக் கொண்டிருப்பதைப் பற்றி அந்தப் புலவர் பாடுகிறார். இறந்து கிடக்கும் வீரனுடையக் குடலை, கழுகு உருவுவது எப்படியிருக்கிறதென்றால், கிராமப்புறங்களிலே குடவோலை முறையில் குடந்திற்குள் போடப்பட்ட ஓலைகளை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்ப்பதைப்போல் இருக்கின்றது என்று அந்தப் புலவர் எழுதுகிறார்.

எனவே சங்க காலமே, மக்களாட்சி மாண்புக்கு அடியெத்துக் கொடுத்த தங்க காலமாக இருந்திருக்கின்றது.

தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்று வந்த ஊராட்சி முறைகள், ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது உருமாறின. 1882-ஆம் ஆண்டு, வைஸ்ராயாக இருந்த ரிப்பன் பிரபு, இந்தியாவில், ஊராட்சிகளுக்குச் சட்ட வடிவம் கொடுக்க விரும்பினார். அதற்கிணங்க, 1884-இல் சென்னை மாகாணத்திலும், 1885-இல் வங்காள மாகாணத்திலும், ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. ரிப்பன்பிரபு காலத்தில் லோக்கல் போர்டு (உள்ளாட்சி) சட்டம் இயற்றப்பட்டு, ஜில்லா போர்டு, தாலுகா போர்டு மற்றும் யூனியன்கள் அமைக்கப்பட்டன. சாலைகளில் விளக்குப் போடுவது, ஊர்ச் சுகாதாரம், மருத்துவமனைகள், பள்ளிகள் அமைப்பது, கால்நடைகளையும், சாலைகளையும் பராமரிப்பது போன்ற பணிகளை இந்த ஊராட்சிகள் கவனித்து வந்தன. இச்சட்டங்கள் சரிவர இயங்காத நிலை ஏற்பட்டது. அதுமட்டுமில்லாமல், நியமிக்கப்பட்ட இந்த உறுப்பினர்களின் அமைப்புகள், அதிகாரிகள் ஆதிக்கக் கூட்டங்களாகவே இருந்தன. ஒரு கிராமத்திற்கு ஒரு ஊராட்சி என்ற அடிப்படையில் இந்த அமைப்புகள் உருவாக்கப் படவில்லை.

இந்தச் சீர்கேட்டைச் சரி செய்ய அமைக்கப்பட்ட "ராயர்கமிஷன்" கிராமங்களில் ஊராட்சிகளை அமைக்க வேண்டுமென்று குறிப்பிட்டது. அதன் அடிப்படையில் 1920-ஆம் ஆண்டு, கிராமப் பஞ்சாயத்துகள் சட்டம் இயற்றப்பட்டது. மத்திய அரசின் பரிந்துரைகள் புறக்கணிக்கப் பட்டு, மேல்தளத்தில் இருந்த ஜில்லா போர்டுகளின் மேற்பார்வையிலேயே பஞ்சாயத்துக்கள் இயங்கின. 1884-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட லோக்கல் போர்டு சட்டத்தின் வாரிசாக 1920-ல் சென்னை லோக்கல் போர்டுகளின் சட்டம் இயற்றப்பட்டு, இரண்டு சட்டங்களும் ஒன்றாக இயங்கி வந்தன.

1930-ஆம் ஆண்டில் சென்னை லோக்கல் போர்டுகள் சட்டம் திருத்தப்பட்டது. 1946-இல் ஒரு திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இப்படி கடந்த காலத்திலே ஆங்கிலேய அரசு எடுத்த முயற்சிகள் பெரும்பாலும் கண்துடைப்பாகவே இருந்தன. அதிகாரம், வருமானம், கவனிப்பு ஆகியவை இல்லாததால் ஊராட்சிகள் ஆட்சிமுறை சரிவர அமையவில்லை. நாடு சுதந்திரம் அடைந்ததும், ஊராட்சி அமைப்பு முறை, அனைத்து மக்களின் பயன்பாட்டிற்கு ஏற்றதாக அமைய வேண்டுமென்ற நோக்கத்துடன், 1950-ஆம் ஆண்டு சென்னை கிராம ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் நடைமுறையில் இருந்தபோதிலும், பொதுச் சுகாதாரம் போன்ற சில பொதுக்காரியங்களை, ஜில்லாபோர்டுகள் தொடர்ந்து கவனித்து வந்தன. இதன் காரணமாக அவ்வப்போது சிக்கல்கள் தோன்றிக்கொண்டே இருந்தன.

1919-ஆம் ஆண்டு வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி தியாகராயர் சென்னை மாநகராட்சியின் தலைவராக (பிரசிடெண்ட்) நியமிக்கப்பட்டு, மாநகராட்சி, சென்னை நகர மக்களின் சேவைக்காக முதல் அடியெடுத்து வைத்தது. 4 ஆண்டுகள் பணியாற்றிய அவருக்குப் பின் 10 பேர் அதே பொறுப்பை வகித்துள்ளனர்.



1934-ஆம் ஆண்டு தலைவர் (பிரசிடெண்ட்) ஆட்சிமுறையை மாற்றி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் கட்டுப்பாட்டில் மாநகராட்சி இயங்கத் தொடங்கியது. அவ்விதம் சென்னை மாநகராட்சியின் முதன் மேயராக இருந்த பெருமையை இராஜா சர்.முத்தையா செட்டியார் பெற்றார்.

அவருக்குப்பின் 42 பேர் நகரின் மேயராக இருந்து பணியாற்றியுள்ளனர். கடைசி மேயராக திரு ஆர். ஆறுமுகம் 1972-ஆம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர்கள் எல்லாம் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர். ஓராண்டு காலத்திற்கு மட்டுமே இந்தப் பதவியை வகித்தனர். இப்போதுதான் முதன் முறையாக ஆறு மாநகராட்சிகளில் மேயர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மற்ற உள்ளாட்சித் தலைவர்களைப் போல ஐந்தாண்டுக் காலத்திற்குப் பதவி வகிக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்நாட்டில் இரண்டாவது மாநகராட்சி என்ற பெருமையை பெற்றது மதுரை மாநகராட்சி. லெவிங்ஸ் என்ற ஆங்கிலேயக் கலெக்டர் 1866-இல் மதுரையில் சிட்டி கவுன்சில் என்ற ஒன்றை அமைத்து அதற்குத் தலைவராக இருந்தார். அந்தக் கவுன்சிலில் நான்கு உறுப்பினர்கள் இருந்தனர். சிட்டி கவுன்சில் முறை 1882-ஆம் ஆண்டு வரை நீடித்தது.

அதன்பிறகு சிட்டி கவுன்சில் என்பது முனிசிபல் கவுன்சில் ஆனது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எட்டு பேரும், நியமன உறுப்பினர்களாக ஆறு பேரும் இருந்தனர். மதுரை நகர சபையின் முதல் தலைவராக திரு இராம சுப்பையர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து திரு அப்பாசாமி நாயுடு தலைவரானார்.

1921-ஆம் ஆண்டு முனிசிபாலிட்டி சட்டம் அமலுக்கு வந்தபோது நகரசபை கவுன்சிலர்

உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மாநாடு

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் உரை

(சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபம், சென்னை.)

" **1996** மே திங்கள் 13ஆம் நாள் கழக அரசு மீண்டும் பதவிப் பொறுப்பேற்றதும், மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு 23 ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த சென்னை மாநகராட்சிக்கும் 10 ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த மற்ற அமைப்புகளுக்கும் உள்ளாட்சித் தேர்தலை நடத்திவைத்து, நீண்டகாலமாக நிறைவேற்றப் படாமலிருந்த அரசியலமைப்பையொட்டி ஜனநாயகக் கடமை ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது.

இதற்கு முன்பு உள்ளாட்சித் தேர்தல்களை அரசே நடத்தியது. இப்போது இதற்கென்றே முழுச் சுதந்திரம் படைத்த அரசியல் சாசன சட்டப்படி உருவாக்கப்பட்ட மாநிலத் தேர்தல் ஆணையம் நடுநிலையுடன் திறம்படத் தேர்தலை நடத்தியிருக்கின்றது. இத்தேர்தலில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையா இடஒதுக்கீடும், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோருக்குத் தனித்தனி இட ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

நமது மாநிலத்தில் மட்டுமே ஒட்டு மொத்தமாக, ஒரேயடியாக, ஒரே கல கட்டத்தில் நடத்தப்பட்டது. இந்தப் பிரமாண்டமான உள்ளாட்சித் தேர்தல் இதில் அராஜகமோ, குழப்பமோ நிகழாமல் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டதற்குத் துணை நின்ற தேர்தல் ஆணையர், காவல்துறையினர், அரசு அலுவலர்கள், உள்ளாட்சித்துறையினர், வாக்காளப் பெருமக்கள் மற்றும் அனைத்துக் கட்சியினருக்கும் நன்றி தெரிவிப்பதுடன் வெற்றிபெற்றுள்ளவர்களுக்கு இதயமார்ந்த வாழ்த்துக்களையும் வழங்கி வரவேற்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் 95,657 கிராம ஊராட்சி உறுப்பினர்களும், 12,584 கிராம ஊராட்சித் தலைவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை 6,501 ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்களும், 382 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும் பதவியேற்றுள்ளனர்.

தமிழகத்தில் 28 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், 649 மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தேர்வு பெற்றனர். அதுபோல 634 பேரூராட்சித் தலைவர்களும், 10,170 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நகராட்சிகளைப் பொறுத்தவரை 102 நகராட்சிகளுக்குத் தலைவர்களும் 3,392 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஊராட்சிகளைப் பொறுத்தவரை தலைவர் பதவிக்கு, 3,197 இடங்கள் பெண்களுக்கெனவும் (பொது), 1,101 இடங்கள் ஆதிதிராவிடப் பெண்களுக்கெனவும், 25 இடங்கள் பழங்குடியினர் பெண்களுக்கெனவும், ஆதிதிராவிடர்களுக்கென 1,851 இடங்களும் பழங்குடியினர்க்கென 60 இடங்களும் ஒதுக்கப்பட்டன.

ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரை தலைவர் பதவிக்கான 384 இடங்களில் ஆதிதிராவிட இனத்திற்கு 43 இடங்களும், அந்த இனப் பெண்களுக்கு 32 இடங்களும், பொதுப் பிரிவில் 202 இடங்களும், பெண் களுக்கு 107 இடங்களும் ஒதுக்கப்பட்டன.

இதுபோலவே மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் பதவி நிலையில் ஆதிதிராவிடப் பெண்களுக்கு இரண்டு இடங்களும், பொதுப்பிரிவில் பெண்களுக்கு எட்டு இடங்களும் ஒதுக்கப்பட்டன. மாவட்ட ஊராட்சித் தலைவர்களும், ஒன்றியத் தலைவர்களும், உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மற்ற அனைத்திற்கும் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் என ஆறு மாநகராட்சிகள் உள்ளன. இவற்றிற்கு 6 மேயர்களும், 474 உறுப்பினர்களும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவராக மக்களின் நம்பிக்கையைப் பெற்றுத் தேர்தலில் வெற்றி வாகை சூடி இந்த சிறப்புமிக்க மாநாட்டில் வீற்றிருக்கும் வாய்ப்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். கடந்த 25.10.1996 அன்று பதவிப் பொறுப்பேற்ற நீங்கள் அனைவரும் உங்கள் பகுதியின் வளர்ச்சியில் முழு மூச்சுடன் கடமையாற்றத் தொடங்கி யிருப்பீர்கள் என நினைக்கிறேன. இதன் மூலம் கிராம, நகரப் பகுதிகளில் மக்கள் பிரதிநிதி களின் ஆட்சி மீண்டும் தொடங்கிவிட்டது என்ற நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்பட்டு விட்டது.

மக்களாட்சி முறை என்பது குறிப்பாக தமிழ்நாட்டுக் கிராமப்புறங்களில்- சிற்றூர்களில்- பேரூர்களில்- நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே அரும்புவிட்ட ஒன்றாகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஊராட்சி முறை வகுத்து, மக்களாட்சிக்கு வழிகாட்டிய பெருமை தமிழ் மன்னர்களான மூவேந்தர்களை மட்டுமே சாரும். இவர்கள் ஆட்சியில் ஊராட்சி சிறந்து விளங்கிய செய்திகளை கல்வெட்டுகள், செப்பேடுகள், இலக்கியங்கள், வரலாற்றுச் சான்றுகள் மூலமாக அறியலாம். அண்ணா மாவட்டம், உத்திரமேரூர் கிராமத்திலுள்ள வைகுண்ட பெருமாள் கோவில் மதில்சுவர்களில் பல கல்வெட்டுகள் உள்ளன.

முதலாம் பராந்தகச் சோழன் காலத்தில் கி.பி. 921-ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உள்ளது. அதில் கிராம சபைகள் மிகவும் தெளிவாகவும்,



214 290.

அமைக்கவும், இச்சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. அக்குழு, உள்ளாட்சி அமைப்புகளான மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகள், நகராட்சிகள், பேருராட்சிகள் மற்றும் மாநகராட்சியில் தயாரிக்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதற்கும் ஒரு வரைவு வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதிலும், செயல்படுத்துவதிலும், ஊராட்சி நிறுவனங்கள் கணிசமான பங்கை வகிக்கும்.

பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டத்திற்காக நடப்பாண்டில் ரூ.60 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகையினைக் கொண்டு உள்ளாட்சி நிறுவனங்கள், மக்களுக்குப் பயன்படக்கூடிய சமூகச் சொத்துக்களை உருவாக்க முடியும்.

1996-97-ஆம் ஆண்டிற்கு, பத்தாவது நிதிக் குழுவினால் வழங்கப்பட்ட மானியத்தை ஒதுக்கீடு செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் ரூபாய் ஒரு கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில் மாவட்ட ஊராட்சிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொள்ள ரூ.15 இலட்சம் வரை செலவு செய்யலாம். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ.10 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஊராட்சிகள், அவைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து 5 சதவிகிதத்தினை நிர்வாகத்திற்காகச் செலவிடலாம். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர், மாவட்ட ஊராட்சியின் முதன்மைச் செயல் அலுவலராக இருப்பார். ஊராட்சி ஒன்றிய பொது நிதியை குடிநீர் விநியோகம், பள்ளிக் கட்டடங்கள், சாலைப்பணிகள் மற்றும் சிறிய நீர்ப்பாசனம் ஆகியவைகளுக்குச் செலவிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு செலவிடும் முன்னர், குறைந்தபட்சம் ரூ.5 இலட்சம் பொதுநிதியின் இருப்பில் வைக்க வேண்டும். ஊராட்சியின் தலைவர் ஊராட்சியின் செயல் அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அவர் செயல் அலுவலருக்கான அதிகாரங்கள் மற்றும் அலுவல்களைச் செய்யலாம். எங்கெல்லாம் ஊராட்சி உதவியாளர் இல்லையோ, அங்கெல்லாம் பகுதி நேர எழுத்தர்கள் நியமிக்கப்படலாம். ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதி நேர எழுத்தர்கள் ஊராட்சித் தலைவர் கட்டுப்பாட்டில் இருப்பார்கள்.

நடப்பாண்டில் ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா குடியிருப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம், வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், கிராமப்புற இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புத் திட்டம், மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களைச் செயல்படுத்த, மத்திய உதவியுடன் மாநில அரசு, ரூ.1,273.17 கோடி நிதி வழங்கியுள்ளது.

இந்த நிதியில் நடப்பாண்டில் எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள், வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், பழங்குடியினருக்கும் கட்டித்தரப்படும். மேலும், மொத்தம் ஐயாயிரம் கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தார்ச் சாலைகளாக மாற்றப்படும். சதுப்பு நிலங்களில் இருபது குடியிருப்புகள் இருந்தால், அவை பக்கத்தில் உள்ள சாலையுடன் இணைக்கப்படும். அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளிலும் குடிநீர் வசதி செய்து தரப்படும். சமூகக் காடுகள் திட்டம் சீரமைக்கப்படும். 1.8.1996 முதல் தெரு விளக்கு பராமரிப்பு, மின் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முதன் முறையாக நடப்பு ஆண்டு நிதிநிலை அறிக்கையில், பேருராட்சி மற்றும் நகராட்சிகளுக்குப் பெருமளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பேருராட்சிகளுக்கு ரூ.25 கோடியும், நகராட்சிகளுக்கு ரூ.9.15 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற மாநகராட்சிகளுக்கு ரூ.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 41 ஆம் பக்கம்

(அ)ஹிம்சை

சோ. தர்மன்

(1994 ஆம் ஆண்டில் வெளிவந்த இக்கதை 'இலக்கியச் சிந்தனை' அமைப்பால் சிறந்த சிறுகதையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.)

அய்யா வீட்டு வாசல்படியை மிதித்த உடனேயே அவர் முகத்தில் குறுஞ்சிரிப்பாணி பொத்துக்கொண்டு வந்தது. இரண்டு உதடுகளையும் கடித்து நமட்டிக் கொண்டாலும்கூட முகம் பிரகாசமாயிருந்தது. இப்படி அவர் முகத்தைப் பார்ப்பதே அபூர்வம். இப்படி அவர் முகம் மாறியிருக்கிறதென்றால் அவருக்குப் பிடித்தமான ஏதோ ஒரு சந்தோஷம் இருக்கும் என்று மூத்தவனுக்குத் தெரியும்.

"என்னய்யா, காட்லருந்து வரும்போதே சந்தோஷம் பிச்சுக்கிட்டுப் போகுது."

"......"

அவன் கேள்வியை அவர் காதில் வாங்கிக்கொண்டதாகவே தெரியவில்லை. காட்டிலிருந்து மேய்ந்துவிட்டு வந்த ஆடுகளுக்குத் தண்ணீர் வைக்க சருவச்சட்டியுடன் முற்றத்திற்கு வந்த அம்மா சொன்னாள், "கரிசக்காட்ல ஏதாவது கெடாரம் கெடச்சிருக்கும். ஓங்கப்பன் தெரட்டிட்டு வந்திருப்பான். போயி வாங்கி ரெங்குப் பெட்டிக்குள்ள வச்சுபூட்டு."

அய்யா செருப்பு இரண்டையும் கழற்றி மூலையில் எறிந்தார். தொரட்டிக் கம்பை பனங்கட்டையில் தொங்கப்போட்டார். துண்டில் சுற்றி வைத்திருந்த பொட்டலத்தை மெதுவாய் அவிழ்த்தார். ஆவரை இலைகளுக்கு மத்தியில் அழகாய் ஒரு கிளிக்குஞ்சி. சரியாய் ரோமம் கூட முளைக்காத பொட்டுக் கண்களுடன், சிவப்பாய் முந்திரிப் பருப்பு அலகுடன் நண்டுக் கால்களுடன் நடுங்கிக் கொண்டு நின்றது. அதன்மேல் ஒட்டியிருந்த ஆவரை இலைகளையெல்லாம் ஊதிவிட்டார். பார்த்த உடனேயே அம்மா கடுப்பாகிப் போனாள். "சனியனே இத எதுக்கு கொண்டாந்தே? மைனா ரெண்டாப் போச்சு. இனி கிளிய வளர்த்து மூணா போகப் போகுதாக்கும்".

அவர் எதையும் சட்டை செய்யவில்லை. கிளிக்குஞ்சியை ஊதிவிடவும் சிரிக்கவுமாக இருந்தார். அம்மா ஆடுகளுக்குத் தண்ணீர் வைத்துவிட்டுப் புலம்பிக் கொண்டே வீட்டுக்குள் போனாள். மூத்தவன் ஒவ்வொன்றாய் பிடித்து முளைக்குச்சியில் கட்டினான்.

"கரிசக்காட்ல ஏதாவது கெடாரம் கெடச்சிருக்கும். ஓங்கப்பன் தெரட்டிட்டு வந்திருப்பான். போயி வாங்கி ரெங்குப் பெட்டிக்குள்ள வச்சுபூட்டு."

களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. 27 பேர் கவுன்சிலர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். ஒன்பது பேர் நியமன உறுப்பினர் களாக இருந்தனர். நகர்மன்றத் தலைவருக்கு சம்பளம் வழங்க வகை செய்த முனிசிபாலிட்டி சட்டம் இது.

1931-ஆம் ஆண்டில் நகரசபை கவுன்சில் கலைக்கப்பட்டு, 1933-ஆம் ஆண்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது.

பின்னர் 1.5.1971 அன்று மதுரை, மாநகராட்சி என்ற தகுதியைப் பெற்று முதல் மேயராக எஸ்.முத்து பொறுப்பேற்றார்.

சென்னை, மதுரை மாநகராட்சிகளை யன்னியில் இப்போது புதிதாக கோவை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் ஆகிய நான்கு மாநகராட்சிகள் உள்ளன.

கிராமங்கள் சமுதாய நலத்திட்ட வேலை களை, மக்கள் அமைப்புடன் இணைந்து செயல்படுத்தினால், அது பயனுள்ளதாக இருக்கும் எனக் கருதி மாநில அரசுகள், அதற்கேற்றவாறு, ஊராட்சிகள் சட்டம் உருவாக்குவதை ஆராய்ந்து பரிந்துரை செய்ய காந்தியவாதியும், நிர்மாணத் திட்டங்களில் ஈடுபாடு உள்ளவருமான திரு பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையில் மத்திய அரசு ஒரு குழுவை 1957-ஆம் ஆண்டு நியமித்தது. அந்தக் குழுவானது, மாநில அரசுகளுக்கு மூன்றடுக்குத் திட்டம் ஒன்றைப், பரிந்துரை செய்தது. அதன்படி, மாவட்ட அளவில் ஒரு அமைப்பும், கிராம அளவில் ஒரு அமைப்பும், இதற்கிடையில் இணைப்பாக ஒரு அமைப்பும் அமைப்பதுதான் அத்திட்டத்தின் நோக்கம். அதன் அடிப்படையில் 1958-இல் பெருந் தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாட்டில் மாவட்ட வளர்ச்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி என்ற மூன்று அமைப்புகள் உருவாக சட்ட வடிவம் கொடுக்கப்பட்டது.

காலத்தின் தேவைகள் மற்றும் இந்திய மக்களிடையே தோன்றிய விழிப்புணர்வின் காரணமாக ஊரக முன்னேற்றத்தை அடிப் படையாகக் கொண்டு உருவாக்கப்படும் பயன்கள், அடித்தளத்து மக்களை மேலும் தாமதமின்றிச் சென்றடைய வேண்டும் என்றும், அவர்களையும் திட்டப்பணிகளில் ஈடுபடுத்த வேண்டுமென்றும் ஒரு கருத்து உருவானது. அதன் வெளிப்பாடாக இந்தியப் பாராளுமன்றம், இந்திய அரசியல் சட்டத்திற்கு 1992-ஆம் ஆண்டு திருத்தங்களை கொண்டு வந்தது. இவையே 73-வது மற்றும் 74-வது இந்திய அரசியல் சட்டத் திருத்தங்களாகும். இதனால் கடந்த 46 ஆண்டுகளாக மாநிலப் பட்டியலில் இருந்து வந்த பஞ்சாயத்து நிர்வாகம், மத்திய அரசின் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அதன்படி பஞ்சாயத்து முறை இந்தியா முழுவதும், கிராமப் பஞ்சாயத்து, மாவட்டப் பஞ்சாயத்து மற்றும் இடையில் ஒன்றியம் போன்ற ஓர் அமைப்பு என்ற மூன்று மட்டங்களைக் கொண்டதாக இருக்கும். இதனால், கிராமப்புற மக்களைச் சுயாட்சி அமைப்புகளில் ஈடுபடுத்தி, அந்த அமைப்பு களை முன்நடத்திச் செல்பவர்களாக உரு. வாக்க முடியும் என்றும், இது மக்களாட்சித் தத்துவத்தை மேலும் வலுப்படுத்தும் என்றும் அரசு கருதியது.

இதனைத் தொடர்ந்து 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் மற்றும் அனைத்து மாநகராட்சிச் சட்டம் திருத்தப்பட்டது.

ஏற்கெனவே இருந்த முறையில், ஊராட்சி களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரு தொடர்பு இருந்தது. அவை ஒன்றையொன்று சார்ந்திருந்தன. ஊராட்சி ஒன்றிய எல்லைக் குள் இருக்கும் அனைத்து ஊராட்சிகளும் சேர்ந்து ஊராட்சி ஒன்றியமாக இருந்தது. ஆனால் இந்த மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இந்தத் தொடர்பு இல்லை. ஒவ்வொரு அமைப்பும் தனியே இயங்கும் தன்மை கொண்டதாக அரசியல் சட்டப்படி அமைக்கப்பட்டுள்ளது.

ஊராட்சிச் சாலைகளை அமைத்தல், சாலைகளில் விளக்கு வசதி செய்தல், வடிகால் களை அமைத்தல், வடிகால் நீர் மாசுக்களை அகற்றுதல், தெருக்கள் துப்புரவு, பொதுக் கழிப்பிடங்களில் வசதி, இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகள் ஏற்படுத்துதல், கிணறு, குட்டைகள், குளங்கள் தோண்டுதல் போன்ற வையும், அவற்றைப் பராமரித்தலும், தமிழகத் திலுள்ள 12,584 ஊராட்சி மன்றங்களின் பல்வேறு பணிகளில் ஒரு பகுதியாகும்.

ஊராட்சி ஒன்றியச் சாலைகள் மற்றும் அவை மீதான சிறுபாலங்கள், அணைகள், தரைப்பாலங்கள் கட்டுதல், பழுதுபார்த்தல், மருத்துவமனைகளை நிறுவுதல், ஏழை களுக்கான வீடுகள், அனாதை இல்லங்கள், கடைகள், விற்பனைச் சாவடிகள் கட்டுமானம் செய்தல், வீட்டுமனை வழங்குதல், போன்ற வையும் அவற்றின் பராமரிப்பும் 384 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் ஒரு பகுதியாகும்.

பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டத்தைத் தயாரித்தல், மாவட்ட அளவில் நிறைவேற்றக் கூடிய மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களை ஒருங்கிணைத்தல், மாவட்ட அளவில் நிறைவேற்றக்கூடிய திட்டங்களைக் கண் காணித்தல் மற்றும் மேற்பார்வையிடல் போன்றவை 28 மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்பாகும்.

மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில், மாவட்ட ஊராட்சிகள் முதன் முறையாக அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு அளிக்கப் பட்ட உரிமைகளில், ஆலோசனைகூறும் உரிமைகளே பெரும்பாலும் உள்ளன. ஆனால், மேலும் என்னென்ன உரிமைகளை - படிப் படியாக மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்குவது என அரசு ஆழ்ந்து பரிசீலித்து வருகிறது.

இந்திய அரசியலமைப்பு (73வது திருத்த) சட்டத்திற்கிணங்க, மாநில நிதிக் குழு ஒன்று 1994-ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலை யினை ஆராய்ந்து, நிதி ஆதாரங்களை அதிகரிக்கப் பரிந்துரைத்தல், மாநிலத்திற்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் இடையே அரசால் விதிக்கப்படும் வரிகள், சுங்கம், கட்டணங்கள் ஆகியவற்றில் இருக்கும் நிகர வருமானத்தைப் பிரித்துக் கொள்வதில் கடைப்பிடிக்கக்கூடிய கொள்கைகளை வகுத்தல், அந்த வருமானத்தை உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்வதற்கானக் கொள்கைகளை வகுத்தல், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒப்படைச் செய்ய வேண்டிய வரிகள், சுங்கம், கட்டணங்களை நிர்ண யித்தல், மானியம் அளிப்பதற்கான கொள்கை களை வகுத்தல் போன்றவை இக்குழுவிற்கு வரையறுக்கப்பட்டப் பணிகளாகும்.

இயற்றப்பட்டச் சட்டமும், அதன் அடிப் படையில் அமைந்திடும் மாநில நிதிக்குழு போன்றவையும் இயங்காமல் இருக்கக்கூடிய நிலையை மாற்றி, அவற்றை இயங்க வைக்கும் வகையில்தான், இந்த அரசு பொறுப்பேற்ற வுடன் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்தியுள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

பல்வேறு நிலைகளில் உள்ள உள்ளாட்சி அமைப்புப் பொறுப்புகளை ஒப்படைச்

செய்யவும், அவ்வாறு ஒப்படை செய்ய விருக்கிறப் பொறுப்புகள் சம்பந்தமாக, உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு, கடமைகள் மற்றும் அலுவலர்கள் பற்றி, ஆய்வு செய்து பரிந்துரைக்க அரசு ஒரு குழுவை, மாநிலத் திட்டக் குழுவின் கீழ் அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளை ஒரு மாதத் திற்குள் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் மாவட்ட ஊராட்சியும், 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 240-வது பிரிவின்படி, ஆண்டுதோறும் வளர்ச்சித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும். மாவட்ட திட்டக்குழு ஒன்றை

உடனே அழுகை வரும். இரு கால்களும் நொறுக்கப்பட்டு நகங்கள் பிடுங்கி யெறியப்பட்டு மீசை உரோமத்தையெல்லாம் கையாலேயே பிடுங்கி, விதைக்கொட்டைகள் வீங்கி ஒண்ணுக்கிருக்க முடியாமல், ஒரு சொட்டு மூத்திரம்விட அவர் போட்ட கூப்பாடு. அம்மா அழுதுகொண்டே எழுந்து பேனாள். அவர் சுகமாகி நடமாடிய போதுதான் அந்த மாற்றம் தெரிந்தது. முந்தி இருந்த அய்யாவே இல்லை.

சிரட்டையில் கங்குகளை நிறைய அள்ளி வைத்துக்கொண்டு ஆடுகளின் தோல்களை ஒட்டிக்கொண்டிருக்கும் உண்ணிகளைப் பிடுங்கிப் பிடுங்கி சிரட்டையில் போடுவார். தீக்கங்கில்உப்பி டப்பென்று வெடித்துப் பிணவாடை வரும். அய்யா பலமாகச் சிரிப்பார். ஆடுகளை விரட்டும் கிடாயைக். காய அடிக்கும்போது, இரண்டு குச்சிகளால் தொங்கும். அதன் விறைகளை இடுக்கிப் பிடித்து நசுக்குவார். அது போடுகிற கூப்பாடு ஊரே வெடித்துவிடும். அய்யா விழுந்து விழுந்து சிரிப்பார். உடல் குன்னிப்போய் நடக்கமாட்டாமல் நிற்கும். அந்தக் கிடாயின் விறையில் ஓங்கி ஒரு எத்து எத்துவார். ம்மே... என்று அது அலறும்போது கை தட்டிச் சிரிப்பார். சேவல், கோழி அடிக்கும் போது அதன் இறக்கை உரோமம் ஒன்றைப் பிடுங்கி மண்டையின் நடுப் பகுதியில் குத்திவிட்டு தூர விசிறியெறிவார். அது குதித்து குதித்து துள்ளிச் சாவதை ரசித்துப் பார்ப்பார். உயிரோடு கோழியின் ரோமங்களையெல்லாம் பிடுங்கிவிட்டு ஓட விடுவார். அது தள்ளாடித் தள்ளாடி ஓடி கீழே விழுவதைக் கை தட்டி ரசிப்பார். நிறை சினையில் ஆடுகள் ஈனும்போது போடுகின்ற பிரசவ வேதனைக் கூப்பாட்டை பெரிதும் ரசிப்பார். கழுதையைப் பிடித்து வந்து அதன் வாலில் காய்ந்த ஓலையைக் கட்டி கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் தீ வைத்து விட்டு அது ஊரெல்லாம் ஓடுவதையும் கத்துவதையும் ஓடி ஓடி ரசிப்பார்.

அன்று நடுச்சாமம் வீட்டின் முன் போலீஸ் வேன் நின்றதும், தடதடவென்று வீட்டிற்கு ஓடி வந்தது போலீஸ். எதையோ தேடுவதைப் போல வீட்டையெல்லாம் சல்லடை போட்டது. ஒன்றும் கிடைக்காமல் அய்யாவை மட்டும் அள்ளிப் போட்டுக் கொண்டு பறந்து போனது. மறுநாள்தான் தெரிந்தது அய்யா நேற்று ஆடு மேய்த்துக் கொண்டிருந்த பேங்க் காலனிப் பக்கம் பட்டப் பகலில் பூட்டை உடைத்து முப்பது பவுன் நகையும் ரொக்கமும் களவுபோன விஷயம். மூன்று நாள் கழித்து அய்யா வெளியே வந்தார். இவரோடு சேர்ந்து ஐந்துபேர் பட்ட வேதனையை கதை கதையாய் சொல்வார்.

"நான் ஆட்டுக்குத்தாண்டா காயடிச் சிருக்கன். ஆனா மனுசனுக்கு காயடிக்கிறத அங்கதாண்டா பாத்தன். உசுரோட சாகுற துன்னா அதுதாண்டா... அந்த அஞ்சு பேரும் போட்ட கூப்பாட்ல, இப்ப நெனச்சாலும்

எதையோ தேடுவதைப் போல வீட்டையெல்லாம் சல்லடை போட்டது. ஒன்றும் கிடைக்காமல் அய்யாவை மட்டும் அள்ளிப் போட்டுக் கொண்டு பறந்து போனது.

ஈரக் கொல நடுங்குது. இந்தப் பயகளும் அவுக புள்ள குட்டிகளும் ஏழேழு செம்மத்துக்கும் வெளங்க மாட்டாங்க."

இருவரும் குலுங்கிக் குலுங்கி அழுதார்கள். மூத்தவனின் அரவம் கேட்டதும் ஒன்றும் நடக்காததைப் போல அய்யா சருவச்சட்டியில் தண்ணீரைத் தூக்கிக் கொண்டு ஓடினார். அம்மா சுளகில் இருந்த தானியத்தைச் சுண்டி சுண்டிப் புடைத்தாள்.

அய்யா மச்சின்மேல் ஏறி தூசி படிந்திருந்த அந்த மைனாக்கட்டை எடுத்தார்.. அது ஒட்டடை படிந்து அழுக்கேறிப் போயிருந்தது. அம்மா மறுபடியும் சொன்னாள்.

"எந்த உசுப்பிராணியையாவது கொண்ட்டு வர, அதை வளக்க, பெறகு செத்துப் போச்சுனா வீட்டோட உக்காந்து ஒப்பாரி வைக்க, ஒன்னோட பெரிய தொரட்டியாய் போச்சு."

அய்யா காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவர் கூட்டைத் தூசி தட்டி துடைப்பதிலேயே கவனமாயிருந்தார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அந்த கிளிக்குஞ்சி கூட்டினுள் போய் உட்கார்ந்து கொண்டது. அய்யாவும் கிளியாக மாறிப் போனார்.

"டேய்! தாத்தாவுக்கு ஒரு முத்தம் கொடு"

"ச்சா.. பிச்சா.. ச்சா.. ச்சா..."

வலது கையில் உட்கார்ந்துகொண்டு இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி முத்தங் கொடுக்கும். அது கண்ணை மூடி மூடித் திறக்கும்போதே, நீரில் கல் எறிந்தவுடன் வட்ட வட்டமாய் விரியும் சிறு அலைபோல அதன் கண்களை ஒரு மெல்லிய சவ்வு மூடி மூடித் திறக்கும்.

"டேய்! தாத்தாவுக்குப் பேன் எடுத்து விடு."

அந்தத் தடித்த மொட்டை அலகை அய்யாவின் நரைத்த தலை முடிக்குள் புதைத்துக்கொண்டு கோதி கோதி விடும். அய்யா குனிந்து கொண்டு தலையைத் திருப்பித் திருப்பிக் கொடுப்பார். இரு தோள்களிலும் மாறி மாறி அமரும். விளக்குமாற்றின் ஈக்கி குச்சை எடுத்துக்

உசுரோட சாகுற துன்னா அது தாண்டா... அந்த அஞ்சு பேரும் போட்ட கூப்பாட்ல, இப்ப நெனச்சாலும் ஈரக் கொல நடுங்குது. இந்தப் பயகளும் அவுக புள்ள குட்டிகளும் ஏழேழு செம்மத்துக்கும் வெளங்க மாட்டாங்க."

கொண்டு முற்றத்தில் உட்கார்ந்து கொள்வார்.

"ம்... எடு இந்த சீட்ட"

சி...கீ...கி...... கி."

"ம்... எங்க குதிக்க, இந்தா, இந்த சீட்டக் கொண்டு போயி மாரியம்மா பாட்டிக்கிட்ட குடுமா, யேய். எங்க போற? நேர வாசலுக்குப் போ.."

"ஊர் ஆடு பூராவும் போயி கொள்ள நேரமாச்சு நிய் இன்க கிளி ஜோஸ்யம் பாத்திட்டு இரு."

கூட்டுக்குள் அடைத்து வாசலுக்கு நேராக தொங்கப் போட்டுவிட்டு வேக வேகமாய் ஆடுகளை அவிழ்ப்பார்.

"டேய், தாத்தாவுக்கு ஒரு டாட்டா சொல்லு".

"ட்டா..ட்டா..ட்டா..."

அய்யா வாயெல்லாம் பல்லாகப் போவார். அம்மாவின் முகத்தில் சிரிப்பாணி

போன வருசமும் இதேபோல்தான் ஒருநாள் சின்னஞ்சிறிய மைனாக்குஞ்சியுடன் வந்தார். புட்டாணிகூட தெறிக்காத அந்தப் பச்ச மண்ணு காதுவரை வாயை வைத்துக் கொண்டு வளர்ந்த காதுகளை 'ட'னாவைப் போல் மடக்கி வைத்துக்கொண்டு நடுங்கிக் கொண்டே நின்றது. அன்றைக்கும் அவர் யார் பேச்சையும் சட்டை செய்யவில்லை. ஒரு கூடு செய்து, அந்தக் கூட்டிற்குள் அது நிற்பதாக ஒரு குச்சி செதுக்கி குறுக்காய் கட்டி, ஒரு சின்ன ஈயக் கிண்ணம் தயார் பண்ணி அதையும் கூட்டிற்குள் வைத்துக் கட்டி உள்ளே அடைத்தார்.

விடிந்தவுடன் அவர் முதலில் பார்ப்பது- அந்தக் கூட்டைத்தான். அடுத்துதான் ஆடுகள் கட்டியிருக்கும் பக்கம் எட்டிப் பார்ப்பார். நாளாக நாளாக எல்லோருக்கும் அது பிடித்துப் போயிற்று. மினுமினுவென்று அதன் உடம்பெல்லாம் மின்னும் காப்பி கலர் ரோமமும், கழுத்தில் வட்டமாய் கோடு போட்டது மாதிரியான வெள்ளையும் பார்க்க அழகாய் இருந்தது. வாரம் இரண்டு தடவை மெனக்கெட்டு மஞ்சள் தேய்த்துக் குளிப்பாட்டி விடுவார். ஈரம் எல்லாம் உலரும் வரை வெயில் தேடிப்போய் நின்றுகொண்டு மணிக்கணக்காய் காவல் இருப்பார். அது உடம்பை கால்மாற்றி கால்மாற்றி கோதிக் கோதி உரோமத்தை சிலித்துக் கொண்டு நிற்பதை கண்கொட்டாமல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருப்பார். இடது கை ஆட்காட்டி விரலை நீட்டி அதில் உட்கார வைத்து வலது கையால் முதுகைத் தடவிக்கொண்டே வந்து கூட்டுக்குள் விடுவார்.

"யேல...ஊர் ஆடு பூராவும் மேயப் போயிடுச்சு. ஒங்கப்பனைப் பாரு, மயினாவுக்கு ஓவினியம் பாத்திட்டு இருக்கிறத."

"யேல, பெரியவன...ஆராய்ச்சும் கோயில்பட்டி போனா மறந்திராம ஒரு பழுத்த கொய்யாப்பழம் வாங்கியாரச் சொல்லிருடா."

அவிழ்த்துவிட்ட ஆடுகள் பாதையை விட்டு விலகி ஓட, ஒரு லொக்கோட்டம் ஓடி ஆடுகளை அதட்டி ஒன்று சேர்ப்பார். சாயங்காலம் வந்தவுடன் ஆடுகளைக் கூட கட்டமாட்டார்.

'யேய்... மணி அய்யாவுக்கு ஒரு முத்தம் கொடு.' ரோமத்தை நீக்கி இரைப்பையை ஊதிப் பார்ப்பார். வயிறு குறையாயிருந்தால் மாரியம்மவை முறைப்பார். இப்போது மணி சாதாரணமாக வெளியில் நடமாடும். கூரையின் மேல், வீட்டு முற்றத்தில் உள்ள வேப்பமரத்தில் என்று அதுபாட்டுக்குச் சுற்றித் திரிந்தது. மற்ற மைனாக்களிலிருந்து வித்தியாசம் காட்டுவது அதன் காலில் கட்டியிருந்த ஒற்றைச் சலங்கைதான். அது பறக்கும்போதும் தாவித் தாவி உட்காரும் போதும் சிலுக் சிலுக் என்ற சத்தம் கேட்டவுடன் வெற்றிலை எச்சில் கடவாயில்

ஒழுக அண்ணாந்து கொண்டு சிரிப்பார்.

அன்று சாயங்காலம் அய்யா எப்படியோ மாறிப் போனார். மணி இன்னும் வீடு திரும்பவில்லை. கூரைகளிலும், மரங்களிலும் ஓடி ஓடித் தேடினார். மூத்தவனைக் கூப்பிட்டு அதட்டினார்.

"மைனா செத்துப்போச்சாம். நீய்யும் போயி செத்துப்போ."

அம்மாவுக்கு செம்மையான அடி விழுந்தது. அய்யா கூப்பாடு எட்டு வீட்டுக்குக்

"பெத்த புள்ளைய எவனாவது வெலைக்கு விப்பானா?" அது மாதிரி இதுவும் ஒரு புள்ளடா, நான் இத கிளியா வளக்கலேடா, இது எம் புள்ளடா. போடா எச்சிகல நாயே."

கேட்கும். அய்யா பரக்கப் பரக்க ஓடிக்கொண்டிருந்தார். இருட்டியபின் ரொம்ப நேரங் கழித்து வேப்பமரத்தின் தாடிக்கொப்பில் சில்க் என்ற சத்தம். தொழுவத்தில் உட்கார்ந்து முழித்துக் கொண்டிருந்த அய்யா வேகமாக ஓடி வந்தார். மணி அவர் தோளில் உட்கார்ந்து கொண்டது. கூட்டுக்குள் அதைத்துவிட்டுப் பானை . சட்டியை எல்லாம் உருட்டினார். பழைய சோறு கொண்டுபோய் கிண்ணத்தில் வைத்துவிட்டு பெட்டியைத் திறந்து கொஞ்சம் சேவு எடுத்துக் கூட்டுக்குள் போட்டுவிட்டுப் படுத்தார்.

விடிந்தபோது அய்யா விக்கி விக்கி

அழுதுகொண்டிருந்தார். முற்றம் தெளிக்கப் போன அம்மா பதறிப் போய் மூத்தவனை எழுப்பிவிட்டாள். மூத்தவன் போய் கூட்டை எட்டிப் பார்த்தான். மணி படுத்தப் படுக்கையாய் செத்து விறைத்துக் கிடந்தது. அதன் வாயினுள் ஒரு நீள சேவு குத்தியபடி பாதி வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. ஈரக்கையுடன் நின்ற அம்மாவின் கண் களிலும் கண்ணீர் திரண்டது. சேலை முந்தானையால் துடைத்துக் கொண்டாள். கூட்டுக்குள் கையை விட்டு வெளியே எடுத்த மூத்தவனின் கைகளில் எறும்புகள் ஊர்ந்தன. அய்யாவை ஏறிட்டுப் பார்த்தான். அவர் குத்துகாலிட்டு மூலையில் உட்கார்ந்தபடியே பரிதாபமாய் ஏறிட்டுப் பார்த்தார். அவர் கண்கள் சிவந்திருந்தன.

"தூரப் போட்ரட்டாயா?"

அன்றும் பேசாமல் எழுந்துகொண்டவர் சுவரோரம் கிடந்த மண்வெட்டியை எடுத்துக் கொண்டு மைனாவையும் வாங்கிக்கொண்டு ரோட்டில்' நடந்தார். முழுகி துண்டைக் காயப்போட்டுக்கொண்டு வந்தார். அன்றைக்கு ஆடு மேய்க்க மூத்தவன் போக வேண்டிய தாயிற்று. வீடே வெறிச்சென்றிருந்தது. அம்மா வாசல் படியில் உட்கார்ந்து சுளகில் ஏதோ புடைத்துக் கொண்டிருந்தாள். மூலையில் உட்கார்ந்து அய்யா அந்த மைனாக் கூட்டையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"மாரியம்மா... யேய் மாரியம்மா..."

"மாரியம்மாளுக்கு என்ன வச்சிருக்க?"

"இந்த தை வந்தா நான் போலீஸ் ஸ்டேசன் போய்விட்டு வந்து எட்டு வருசம் ஆகுது."

அம்மாவின் மடியில் இருந்த சுளகில் கண்ணீர் உருளும்.

அவர் போலீஸ் ஸ்டேசன் போய்விட்டு நடைப் பிணமாய் வந்ததை நினைத்தால்



தூங்கும்போது தன்னாலேயே பேசுவதும், அலறி ஓடுவதும், கூப்பாடு போட்டுக் கத்துவதும், அதிகரித்துக்கொண்டே வந்தது. தவளையைக் கல்லெறிந்த சிறுவனை அடியாய் அடித்துவிட்டார். அடிக்கடி சொல்லிக் கொண்டார்.

"இனிமேப்பட எந்த உசுப்பிராணியும் நமக்கு வேண்டாம்."

கொஞ்ச நாள்தான் ஆகியிருக்கும். சாயங்காலம் ஆடுகளுடன் திரும்பியபோது அவர் கைகளில் அழகான ஒரு நாய்க்குட்டி, செவலை நிறம். தேங்காய் மண்டை. அதன் முகத்தைப் பார்க்கும்போது வாழைப் பூவிலிருந்து இரண்டு மடல்கள் தொங்கிக் கொண்டிருப்பதைப் போன்ற அகன்ற பெரிய காதுகள். "சனியன் வெலைக்கு வாங்கி யாந்துட்டயா, மரியாதையா போயி எங்கயாவது விட்டுட்டு வந்திரு."

அய்யா காதில் வாங்கிக் கொள்ள வில்லை. அதற்கு சோறு வைப்பதற்குத் தட்டு தேடுவதிலும், கட்டிப்போட சங்கிலி தேடுவதிலும் குறியாக இருந்தார். அம்மா சொன்னாள்.

"குலுக்கையோரம் இருக்கிற பிஞ்சு பெட்டிக்குள்ள சப்புச்சவரு கெடக்கு பாரு. அதுக்குள்ள பாரு பழைய சங்கிலி கெடந்துச்சு. எடுத்து கெட்டிப்போடு."

அய்யா தேட ஆரம்பித்தார். மாரியம்மாளின் கையில் ஒரு பழைய ஈயத்தட்டு இருந்தது.

நன்றி: (அ)ஹிம்சை
இலக்கியச் சிந்தனைகள்:
(1994-ஆம் ஆண்டில் 12 சிறந்த சிறு கதைகள்)
வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
சென்னை 17

தெரிந்து கொள்ளுங்கள்

FINANCE (SALARIES) DEPARTMENT

G.O.No.236, dated 30th March 1995.

(Bhava, Panguni,16, Thiruvalluvar Aandu 2026)

Medical Aid - Government Employees Health Fund Rules 1991 - Enhancement of quantum of Assistance - Orders - Issued.

READ - the following papers:-

1. G.O.Ms.No.18, Finance(Allowances-I) Department, dated 9.1.1992.
2. G.O.Ms.No.194, Finance(Salaries) Department, dated 16.3.1993.
3. G.O.Ms.No.91, Finance(Salaries) Department, dated 7.2.1995.

Order--No.236, Finance (Salaries), dated 30th March, 1995.

The Government Employees Health Fund Rules 1991 which were initially applicable to all categories of full-time regular (time scale) Government employees of the Government of Tamil Nadu have been subsequently extended to cover the dependent family members of the Government employees and also the officers of the All India Services serving in Tamil Nadu and to their dependent family members. At present financial assistance is sanctioned in the form of grant upto Rs.50,000/- or 75% of the actual cost of specialised advanced surgery/treatment as referred to in Schedule-I of the Rules and for treatment in countries outside India, in addition to grant, employees are also given loan upto Rs.50,000/- restricting the maximum assistance ie., loan and grant to Rupees one lakh.

2. Representations have been made to increase quantum of assistance under this scheme and also to extend special assistance for certain other types of surgeries. Orders have already been issued in the Government Order third read above extending the Health Fund Scheme for Brain Surgery, Hip replacement, Spinalcord surgery etc. Government have now decided to increase the maximum amount of grant from Rs.50,000/- to Rs.1 lakh or 75% of the actual cost of specialised advanced surgeries/treatment, whichever is less and also sanction an additional loan assistance of Rs.1 lakh when the treatment has to be taken abroad. Accordingly the following amendment is issued to Tamil Nadu Government Employees Health Fund Rules 1991:-

வந்து போகும். அதைத் தாண்டி யாரும் வீட்டுக்குள் போய்விட முடியாது. வேற்றாள். அரவம் கேட்ட உடனேயே சன்னம் கொடுத்துவிடும். கூட்டுக்குள்ளேயே குதியாளம் போடும்.

"எந்தக் களவ, கையும் களவுமா புடிச்சிட்டமினு... இந்தக் குதியாளம் போடுற? பேசாமக் கெடயேன் நாயி."

"எந்த உசுப்பிராணியையாவது கொண்ட்டு வர, அதை வளக்க, பெறகு செத்துப் போச்சுனா வீட்டோட உக்காந்து ஒப்பாரி வைக்க, ஒன்னோட பெரிய தொரட்டியாய் போச்சு."

மூஞ்சியை உம்மென்று வைத்துக் கொண்டு உரோமத்தையெல்லாம் சிலிர்த்துக் கொண்டு குர் குர்ரென்று சத்தம் எழுப்பும். தன் இரண்டு கால்களையும் மாற்றி மாற்றி தூக்கிக் கொத்தும்.

"என்னடா... இந்தக் குந்தானி ஒன்னய வைறாளாக்கும். சீ கழுத போ."

மாரியம்மாவின் தாசாப் பேச்சில் அமைதியாகிப் போகும். குருவம்மாள் என்ற அந்தக் குண்டு பொம்பிளை மாரியம்மாளிடமிருந்து உலக்கையை வாங்கிக் கொண்டு திரும்பியதும் சொல்லும்.

"குந்தானி...குந்தானி."

மாரியம்மாள் முகத்தில் சிரிப்பாணி பொங்கி வழியும்.

"அக்கக்கா. பாம்பா, சோறு கொண்டா என்ற வார்த்தைகளைப் புரியும்படியாய் உச்சரிக்கும். எலுமிச்சங்காய் தண்டி சோற்று உருண்டையை வைத்துக் கொண்டு மாரியம்மாள் கூட்டை நெருங்கும் போதெல்லாம் அதை சீண்டிப் பார்ப்பாள். "தெனம் தெனம் வெட்டி முறிச்சிட்டு வருது. வேளா வேளாக்கி சோறு போட."

கிண்ணத்தில் வைத்த சோத்து உருண்டை சிதறி விழும்.

அய்யாவுக்கு ஆடு மேய்க்கிற நேரம் போக மீதி நேரமெல்லாம் கிளியோடுதான். இப்போதெல்லாம் அவர் முகத்தில் கவலையே இல்லை. தப்பித் தவறி ஒரு ஈ, எறும்பைக்கூட கொல்லமாட்டார். அது கூட்டுக்குள் இருக்கும் நேரம் ரொம்பக் குறைவு. அலகால் கொத்திக் கொத்திக் கதவின்மேல் ஏறி நிற்கும் பனங்கட்டையில் ஒற்றைக்காலைப் பற்றிக் கொண்டு தலை கீழாய் தொங்கும். துணிகள் தொங்கும் கொடியில் போய் உட்கார்ந்து கொண்டு விளையாட்டுக் காட்டும். ரூபாயை மடித்துக் கொடுத்துவிட்டால் நேராக மாரியம்மாவிடம் கொண்டுபோய் கொடுத்து விடும். இடையில் போய் பிடுங்கினால் பறந்துபோய் சேர்த்துவிடும்.

"என்னம்மா, ரூவாய புடுங்க வாரானோ? கொத்திப் புடு கொத்தி".

மாரியம்மாள் குழந்தையாகிப் போவாள்.

சாயங்கால நேரம். அய்யா முற்றத்தில் உட்கார்ந்து கொண்டு சீட்டு எடுக்க சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"கிளி ஜோஸ்யம் பார்க்கலியோ கிளி ஜோஸ்யம்."

"யோவ், ஒம்ம கிளிய இங்க கொண்டாரும்."

இருவரும் எதிரும் புதிருமாய் அமர்ந்தார்கள்.

அவன் கிளியைக் கையில் எடுத்து உற்றுப் பார்த்தான். கழுத்தைச் சுற்றியிருந்த கறுப்பு வளையத்தைப் பார்த்ததும் கண்களை அகல விரித்தான். வாயைத் திறந்து அதன் நாக்கை உற்றுப் பார்த்தான். கீழே விட்டவுடன் ஓடிப்போய் அய்யாவின் மடியில் நின்று கொண்டு ஒரு சன்னம் கொடுத்து, பதிலுக்கு கூண்டுக்குள் இருந்து சன்னம் வந்தவுடன் இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

"நல்ல அம்சம். ஜாதிக்கிளி."

"......"

"என்ன வெலைன்னா குடுக்கீடு?"

"பெத்த புள்ளைய எவனாவது வெலைக்கு விப்பானா?" அது மாதிரி இதுவும் ஒரு புள்ளடா, நான் இத கிளியா வளைக்கலேடா, இது எம் புள்ளடா. போடா எச்சிகல நாயே." கிளி ஜோஸ்யக்காரன் வேகமாக ஓடிக் கொண்டிருந்தான். தண்ணீர் குடத்துடன் வந்த அம்மா பதறிப் போனாள்.

"ஜோஸ்யக்காரப் பய நம்மக் கிளிய வெலைக்குக் கேட்டுட்டான்".

"பெய மகன சும்மாவா விட்ட செருப்பால அடிக்காம."

நாலைந்து நாட்களாக அய்யா பரபரப்புடன் காணப்பட்டார். கிளியை யாராவது விலைக்குக் கேட்டுவிட்டால் அதன் உயிருக்கு ஆபத்து என்று ஒரு நம்பிக்கை. கூண்டைக்கூட வெளியில் தொங்கவிடவில்லை.

மத்தியான வெயில், வீட்டின் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு பாயில் படுத்துக்கொண்டே, ஏதோ முணுமுணுத்தப்படி கிடந்தார் அய்யா. சாத்தியிருந்த கதவைத் தள்ளிக்கொண்டு குட்டியாடு ஒன்று வீட்டினுள் வரவும் ஓடிப்போய் ஆட்டை விரட்டிவிட்டு கதவை ஓங்கி மிதித்து டப்பென்று சாத்தினார். கீச்சென்ற சத்தத்துடன் கிளி கதவின் மேலிருந்து பொத்தென்று கீழே விழுந்து துள்ளியது. அதன் கழுத்து நசுங்கி உரோமங்கள் சிலிர்த்துக் கொண்டிருந்தன. அய்யா ஓடிப்போய் வெண்கலக் கும்பாவை எடுத்து வந்து அதனுள் போட்டு கவுத்தி குச்சியால் தட்டிக்கொண்டிருந்தார். மாரியம்மாளும், மூத்தவனும் சுற்றி நின்றார்கள். சிறிது நேரம் கழித்து கும்பாவை எடுத்தார். அது செத்துக் கிடந்தது. இரு கால்களும் நீட்டியிருக்க ஒருக்களித்துக் கிடந்தது. அதன் கழுத்து நசுங்கி கன்றிப்போய் ரோமம் உதிர்ந்து அந்த இடம் வீங்கியிருந்தது.

"குலுக்கையோரம் இருக்கிற பிஞ்சு பெட்டிக்குள்ள சப்புச்சவரு கெடக்கு பாரு. அதுக்குள்ள பாரு பழைய சங்கிலி கெடந்துச்சு. எடுத்து கெட்டிப்போடு."

"அட சண்டாளப் பாவி, கொல பாதகம் ஏத்துட்டயே."

மாரியம்மாளின் அழுகைச் சத்தம் பலமாய்க் கேட்டது. அய்யா குலுங்கிக் குலுங்கியழுதார். மூத்தவன் கண்களில் கண்ணீர் திரள நின்றிருந்தான்.

செம்பு நிறைய ஆட்டுப்பால் பீச்சி மண்வெட்டியை எடுத்துக்கொண்டு போய் குழிதோண்டி பால் ஊற்றி புதைத்துவிட்டு வந்தார். இப்போதெல்லாம் அய்யா யாருடனும் பேசுவதில்லை. சரியாக ஆடுகூட மேய்க்கப் போவதில்லை. ராத்திரியில்

AMENDMENT

In the said Tamil Nadu Government Employees Health Fund Rules 1991 for the existing rules 6(c) 6(d) & 6(e) the following shall be substituted:

6.(c)(i) A grant of Rupees one lakh or 75% of the actual cost of specialised advanced surgery/treatment whichever is less shall be sanctioned when the treatment is taken in India.

(ii) In addition to grant, specified in sub clause (i) above a loan amount not exceeding Rupees one lakh shall also be sanctioned in the case of treatment in countries other than India. The loan sanctioned shall carry simple interest at 10%.

(d) Total assistance sanctioned shall in no case exceed a maximum of Rupees two lakhs.

(e) Loan sanctioned under Rule 6(c)(ii) shall be recovered from the salary of the employees in 80 equal monthly instalments and the interest at 10% in 25 equal monthly instalments. The Heads of Departments concerned shall be responsible for effecting such recovery.

3. There shall be no change in the other existing rules and conditions.

4. These orders shall take effect from first April, 1995 and shall apply to cases undergoing surgery/specialised treatment after this date.

(By order of the Governor)

N. NARAYANAN,
SECRETARY TO GOVERNMENT.

விடா முயற்சியே வெற்றிக்கு அடிப்படை

ஒருவன் தான் மேற்கொண்ட முயற்சியில் முழுமையான வெற்றியைப் பெற வேண்டுமானால் பிடிவாதமான விடா முயற்சிதான் அதற்கு அடிப்படையாக இருக்கும்.

ஏதோ இரண்டொரு சோதனைகளைச் செய்துபார்த்து விடுவதன் முலம் எந்த விஞ்ஞானியும் முழு வெற்றியை அடைந்ததில்லை.

முயற்சி செய்பவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதி பற்றி தாமஸ் எடிசன் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

''ஒரே சமயத்தில் அதிர்ஷ்டவசமாக நான் எந்த உண்மையினையும் கண்டு பிடித்து விடவில்லை. பலகாலம் தொடர்ந்து செய்த முயற்சியின் விளைவுதான் என்னுடைய ஆராய்ச்சி முடிவுகள். அறிவியலாளர்களில் சிலர் இரண்டு மூன்று பரிசோதனைகளைச் செய்துவிட்டு நின்று விடுகிறார்கள். விரும்பியதை அடையும் வரை நான் மேற்கொண்ட முயற்சியினை கைவிடுவதே இல்லை. நூறு முறை தோல்வியடைந்த ஒருவர் நூற்று ஓராவது தடவை வெற்றியடைந்து விட முடியும் என்பது அனுபவ பூர்வமாக நான் உணர்ந்த உண்மை. எனக்கு அபாரமான மூளை இருப்பதாகவும், அதனால்தான் நான் வெற்றியடைந்துவிடுவதாகவும் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது என்னைக் குறித்து நண்பர்கள் கூறும் புகழ் மொழியே தவிர அதில் உண்மை ஏதும் இல்லை. முயன்றால் என்னைப்போன்று என்னைவிடச் சிறப்பான வெற்றியினை அடைய முடியும் என்று நிச்சயமாக என்னால் கூறமுடியம்.''

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 28.11.1996.

கொடி நாள் செய்தி

பெற்ற தாயையும் பெற்றெடுத்த செல்வங்களையும் உற்ற மனைவியையும் உறவினர்களையும் பிரிந்து, பிறந்த நாட்டின் பெருமை காத்திடும் முப்படை வீரர்களின் தியாகத்தை நினைவில் நிறுத்தும் திருநாள் கொடிநாளாகும்.

நாம் சுதந்திரக் காற்றை சுவாசிக்க, கொட்டும் மழையிலும் குளிரிலும் நின்று தமது இன்னுயிரையும் பொருட்படுத்தாது இந்திய நாட்டின் புகழைக் காக்கும் முப்படை வீரர்களின் தியாகத்தைப் போற்றுவதோடு அவர்களின் குடும்பத்தினர்க்கு நல்வாழ்வு அமைத்துத் தருதலும் நமது கடமையன்றோ!

அவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஒளிவீச கொடிநாளின் கொடி விற்பனைக்கு மனமுவந்து பெருமளவில் நிதி அளிப்போம். அந்த நிதி அவர்களின் குடும்பத்தினர்க்குப் பல்வேறு வகையிலும் பயன் தரும்.

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காக்கும் தன்னலம் கருதாத அந்தத் தியாக வீரர்களுக்கான கொடிநாள் நிதிக்குத் தொகை அளிப்பதில் தமிழ்நாடு எப்போதும் தனி இடத்தைப் பெற்று வந்திருக்கிறது. எனவே இவ்வாண்டும் பெரும் அளவில் நிதி வழங்கி முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நம் வணக்கத்தையும் நன்றியையும் காணிக்கை ஆக்குவோம்.

இலக்கியம்

இலக்கிய இன்பம்

பேராசிரியர் முனைவர் **இரா. சேது**

மக்களின் வாழ்வுக்கும் வளத்திற்கும் உறுதுணையாக விளங்குவது இலக்கியம். அவ்விலக்கியம் மக்கள் வாழ்வையே கருப்பொருளாகக் கொண்டு தோன்றுகிறது. நல்ல இலக்கியம் காலம், நாடு, மொழி, இனம் கடந்து வாழ்கிறது. இலக்கியத்தின் வடிவங்கள் காலத்திற்கேற்ப மாற்றம் பெற்ற போதிலும், அவை ஊட்டும் உணர்வுகள் காலத்தை வென்று வாழ்கின்றன.

மனித வாழ்வில் காணும் உறவும் பிரிவும், பகையும் நட்பும் எல்லாக் காலத்திற்கும் பொதுவானவை. இந்த உணர்வுகளுக்கு உருக்கொடுக்கும் இலக்கியம் நிலைபேற்றைப் பெறுகிறது. இது புலவனின் நெஞ்ச நெகிழ்ச்சியால் பிறக்கிறது. இலக்கியம் அறிவால் எழுதப்படுகிறதென்பதைவிட அகத்தால் எழுதப்படுகிறதென்பதே உண்மையாகும். இதனைத் தமிழ் இலக்கியத்தில் நிறையக் காணலாம்.

சங்க காலத் தமிழர்கள் வாழ்வை அகம் புறமெனப் பகுத்து இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்தனர். தமிழ் இலக்கியத்தில் அகமாகிய காதலைப்பாடிய கவிதைகளே மிகுதியெனலாம்.

புலவர் தாமோதரனார் இம்மெல்லிய காதல் உணர்வைமிக நுட்பமாகப் பாடியுள்ளார். காமமிக்க தலைவி ஒருத்தி மாலைப்பொழுது வந்ததைக் கண்டு கலங்குகிறாள். காதலர்கள் இணைந்திருக்கும்போது மகிழ்வதும், பரிந்திருக்கும்போது துன்புறுவதும் இயற்கையாகும். தாமோதரனாரின் பாடலில் தலைவியைப் பற்றிய எந்தக் குறிப்பும் இல்லை. மாலைப் பொழுது வந்து விட்டதென்ற நிகழ்ச்சியை மட்டுமே படம் பிடித்துக்காட்டுகிறது. கதிரவன் மறைந்த மாலைப்பொழுதில் இரைதேடச் சென்ற பறவைகள்தம் குஞ்சுகள் தங்கியுள்ள மரத்தினை நாடிச்சென்று அங்குள்ள குஞ்சுகளுக்குத் தம் அலகுகளால் இரையை ஊட்ட விரைந்து சென்றன என்ற கருத்தை விளக்கியே இப்பாடல் அமைந்துள்ளது.

இரை தேடச் சென்ற பறவைகள் தங்கள் கூட்டிற்கு மாலைப் பொழுதிலே திரும்புகின்றன. பறவைகள் கூடு நோக்கித் திரும்பும் மாலைப்பொழுது, பிரிந்த காதலர்க்குத் துன்பமாக அமைவது. காதலியின் பிரிவுத்துயரை வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பால் உணர்த்துகிறார் புலவர். இதனைக் 'காமமிக்க கழிபடர்கிளவியாற் காணப்படும் பொழுதுகண்டு சொல்லியது' எனப்பாடலின் அடிக்குறிப்பில் குறிக்கப்பெற்றுள்ளது. இயற்கை நிகழ்ச்சியை எடுத்துரைத்து, அதன் வாயிலாக தலைவனைப் பிரிந்த தலைவியின் மனவுணர்வைக் கீழே கண்ட பாடலில் வரைந்து காட்டுகிறார்.

'ஞாயிறு பட்ட வகல்வாய் வானத்து
தளியதாமே கொடுஞ்சிறைப் பறவை
இறையுறவோங்கிய நெறியயன் மரா அந்த
பிள்ளை யுள்வாய்ச் செரீஇய
இரைகொண்டமையின் விரையுமாற்செலவே'

(குறுந்தொகை : 92)

வளைந்த சிறகுகளையுடைய பறவைகள்தம் குஞ்சுகளின் வாயினுள் தம் அலகால் இரையை எடுத்து ஊட்டும் இனிய காட்சியை எழிலுற எடுத்துக்காட்டுகிறார். தாயன்பைக் காட்டிய புலவர், பொழுதுகண்டு துன்புறும் தலைவியின் பிரிவுத்துயரை மறக்கவில்லை. பிரிவுதுன்பம் தந்த போதிலும் அதனைக் கூறும் பாடல் தேனென இனிக்கிறது.

இலக்கியம் பிறக்க உணர்ச்சி இன்றியமையாதது. புலவன் தான் கூறுகின்ற காட்சிகளில் தான் பெற்ற உணர்வை வெளிப்படுத்துகின்றான். அவ்வுணர்வு ஆற்றலோடு வெளிப்படுகின்றபோது படிப்பவனின் நெஞ்சத்தில் ஆழமாகப் பதிகிறது. இதனைக் கபிலர் பாடல்களில் காணலாம். கபிலர் பரம்பு மலையை ஆண்ட பாரியோடு நெருங்கிய நட்புப் பூண்டு விளங்கினார். பாரியின் கொடைத்திறனையும், பறம்பு மலையின் வளத்தினையும் நன்கு அறிந்தவராகக் கபிலர் இருந்தார். வென்றெறி முரசின் வேந்தராம் பாரி, வஞ்சனையால் கொல்லப்பட்டபின், பறம்பு மலையை விட்டுப்பரிய நேர்ந்ததைக் கபிலர் அவல ஓவியமாக வரைந்து காட்டுகிறார். இது பாரியின் மீது கொண்ட அன்பிற்கு இலக்கணமாக விளங்குகிறது. 'பறம்பே! நின்னை நாடிவருபவருக்கு மதுவை வாரிவழங்கினாய். ஆட்டுக்கிடாய்களை வெட்டி ஊனும் சோறும் அளித்து மகிழ்வித்தாய். வந்தோரை உவந்து வரவேற்று விருந்தளித்த பாரி மாய்ந்துவிட்டான். அவன் மக்களை மணக்க ஏற்ற கணவனை நாடி எங்கு செல்வேன்? பெருமைபெற்ற பறம்பே! பாரியின் பிரிவால் செய்வதறியாது கலங்கிக் கண்ணீர் வடித்து உன்னை வணங்கி விடைபெறுகின்றேன்!'

மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டு அன்று ஆனாக் கொழுந்துவை ஊன்சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே இனியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணெம் தொழுது நிற்பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே!
கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறு இருங்கூந்தல் கிழவரைப் படர்ந்தே!

(புறம் 113)

இப்பாடல் தோன்றி இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இப்பாடலில் வெளிப்படுகின்ற உணர்ச்சி, தனிமனிதன் கொண்டிருந்த அன்பின் ஆழத்தையும், பெறற்கரிய நண்பனை இழந்ததால் அடைந்த துன்பத்தையும் வெளிப்படுத்துகிறது. இன்று கற்போரையும் இப்பாடல் கண்கலங்கச் செய்கிறது. அறிவியல் வளர்ச்சியால் எண்ணற்ற மாற்றங்கள் ஏற்பட்டாலும் அடிப்படை உணர்வுகள் மாறுவதில்லையென்பதையே நினைவூட்டுகிறது.

உலகில் இன்பமும் துன்பமும் நிறைந்தே காணப்படுகின்றன. மனிதனின் இன்பத்தைப் பெறுகின்றபோது மகிழ்வதும், துன்பத்தைக் கண்டு கலங்குவதுமாக உள்ளான். இந்நிலை மறந்து இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக எண்ணுகின்ற மனநிலை வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றார் ஒரு புலவர். அதற்கு அவர் கூறும் காரணம், உலகம் துன்பம் நிறைந்தது. வாழ்வை இனிமையாக்கிக் கொள்ள

வேண்டுமானால் துன்ப உலகில் இனியனவற்றைக் கண்டு இன்புற வேண்டுமென்று கூறுகிறார். அத்தகைய மனநிலை எல்லாருக்கும் வாய்ப்பரிதாகும். இதனை நற்கண்ணியார் என்ற புலவர் வாழ்வில் காணும் உண்மைகளை எடுத்துக்காட்டித் தெளிவுறுத்துகிறார்.

ஒரு வீட்டில் அழுகை ஒலியும், அடுத்த வீட்டில் மணவிழா ஓசையும் கேட்கிறது. ஒரு வீட்டில்காதலனோடு வாழும் மகளிர்மலரணிந்து மகிழ்கின்றனர். பிறிதோர் வீட்டில் கணவனை இழந்த மகளிர் கண்ணீர் வடித்துப் புலம்புகின்றனர். இவ்வாறு முரண்பட்ட உலகத்தைப் படைத்த இறைவன் புலவர்க்குப் பண்பில்லாதவனாகக் காட்சியளிக்கின்றான். இறைவனின் இக்கொடுஞ்செயலால் சினமுற்ற புலவர்.

'படைத்தோன் மன்ற அப்பண்பிலாளன்' என்றகடுமொழியை வீசுகிறார்.

தான் கண்ட உண்மையை, உலகுக்கு அறிவுறுத்தும் வகையில் அப்பாடலைப் பாடியுள்ளார். அப்பாடல்,

'ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்ப்பு உறைப்பப்
படைத்தோன் மன்ற அப்பண்பிலாளன்
இன்னாது அம்ம இவ்வுலகம்
இனிய காண்கிதன் இயல்புணர்ந்தோரே'

(புறம் 174)

மனிதவாழ்வு பயனிறைந்ததாக் அமையவேண்டும். பயனில்லாத வாழ்வு விளைவில்லாத நிலம் போன்றதாகும். பகுத்தறிவு பெற்ற மனிதன் பிறருக்குப் பயன்படாமல் வாழ்ந்தால், அவன் உயிரோடு இருந்தும் இறந்தவனாகவே எண்ணப்படுவான். வாழ்வு எவ்வாறு அமையவேண்டுமென்பதை ஒரு புலவர் தாம் கண்ட காட்சியின் வாயிலாகத் தெளிவுறுத்துகின்றார். புலவர் ஒருநாள் வயல்வெளியில் நடந்து செல்லுகின்ற போது வயலில் மலர்களோடு பூத்துக் குலுங்கும் கரும்பினைக் கண்டு மகிழ்கிறார். கரும்பு பூப்பூத்துக் கண்ணுக்கு விருந்தாகக் காட்சியளிக்கிறது. சில நாட்கள் கழித்து அவ்வழியாகப் புலவர் வருகின்றபோது முற்றிய கரும்பிலிருந்து சாறு பிழிந்து கொண்டிருந்தனர். சாறு பிழிந்த பின்னர் கரும்பின் சக்கையை வெளியில் உலர்த்தினர். பின்னர் வேறு கரும்பிலிருந்து சாறு பிழிவதற்கு வெயிலில் உலர்த்திய சக்கையை நெருப்பிலிட்டு ஆட்டினர். கரும்பாக இருந்தபோது அக்கரும்பு சாறு தருவதற்குப் பயன்பட்டது. சாறு பிழிந்த பின்னர் சக்கையாக இருந்து வேறு ஒரு கம்பிலிருந்து சாறு பிழிவதற்குப் பயன்பட்டது. இக்காட்சி புலவர் நெஞ்சில், ஆழமாகப் பதிந்தது. இக்காட்சியின் வாயிலாக மக்கள் உலகுக்குப் பயன்பட வாழ வேண்டுமென்ற உண்மையை உணர்ந்தார். இதனைநாலே வரிகளில் நயம்பட உணர்த்தினார்.

'கரும்பாட்டிக் கட்டி சிறுகாலை கொண்டோர்
துரும்பெழுந்து வேங்கால் துயராண்டுழவார்
வருந்தி உடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்கடல் பரிவ திலர்'

(நாலடியார் 35)

இறப்பைப் பற்றிக் கவலைப்படாமல், உயிரோடு வாழ்ந்தபோது எந்த அளவு பயன்பட வாழ்ந்தோமென்பதை எண்ணிப் பார்க்க இப்பாடல் இடமளிக்கிறது.

இலக்கியம் வாழ்விலிருந்து பிறந்த போதிலும், வாழ்வைச் செம்மைப்படுத்தும் கலைப்பெட்டகமாக விளங்குகிறது, அதுதரும் இன்பம் எல்லையில்லாததாகும்.

ஏழை நாட்களில் எழுதப்பட்ட நாவல்

ஆங்கில அகராதியை உருவாக்கியவர் என்ற பெருமைக்குரியவர் சாமுவேல் ஜான்சன். அவர் ஒரே ஒரு நாவலையும் எழுதியிருக்கிறார். அதையும் எதற்காக எழுதினார் தெரியுமா? நோய்வாய்ப்பட்டிருந்த தமது தாயாரின் வைத்தியச் செலவைச் சமாளிப்பதற்காக, ஏழை நாட்களில் அவர் எழுதி முடித்த அபிசீனிய இளவரசர் ரசேல்ஸ் என்ற நாவலுக்கு 100 பவுன் சன்மானமாகக் கிடைத்தது. ஆனால் அத்தொகை தாயாருடைய வைத்தியச் செலவுக்கு உதவவில்லை. ஏனெனில் பணம் கிடைப்பதற்குள் அவர் இறந்துவிட்டார். சவ அடக்கச் செலவுக்குத்தான் அத்தொகை பயன்பட்டது. 1759-ல் இந்த நாவல் வெளி வந்தது.

மகாகவி பாரதியின் இல்ல மேம்பாட்டுப் பணிக்கு நிதி ஒதுக்கீடு.

மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணை

தமிழக அரசு பொறுப்பேற்றவுடன் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தினை மிகப்பொலிவுடன் உருவாக்கிட வேண்டும், என்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தார். அதன் அடிப்படையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள் செய்தித்துறை உயர் அலுவலர்கள் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, தயாரித்த திட்டத்திற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஒப்புதல் அளித்தார். அதன்படி திருவல்லிக்கேணியிலுள்ள பாரதியார் இல்லத்தில் மேம்பாட்டு பணிகளுக்காகவும் நூலகம் அமைக்கும் பணிகளுக்காகவும் 8 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

பாரதியார் இல்லத்தில் அமைக்கப் படவுள்ள நூலகத்தில் பாரதியின் அனைத்துப் படைப்புகள் பாரதியாரைப் பற்றியும், பாரதியின் கவிதைகள் பற்றியும், அனைத்து நூலாசிரியர்கள் எழுதிய நூல்கள், ஆய்வு கட்டுரைகள், பாரதி பற்றிய பிற மொழி நூல்கள் ஆகியவை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

பாரதி காலத்தில் இருந்த நாளிதழ்களின் பிரதிகள், பாரதியின் கையெழுத்து மற்றும் முக்கியமான சில கவிதைகள் 'லாமினேட்' செய்து பார்வைக்காக வைக்கப்படும்.

பாரதி இல்லத்தில், பின்புறமுள்ள திறந்தவெளி அரங்கம் சீர் செய்யப்பட்டு அரங்கில் இலக்கியக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இந்நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு வசதியாகப் பார்வையாளர்கள் 500 பேர் அமர்வதற்கு வேண்டிய நாற்காலிகள் 'மைக்' போன்ற கருவிகள் வாங்கப்படும்.

நினைவு இல்லத்தில் பாரதியார் தொடர்புடைய இசைப்பாடல்கள், ஒலிபரப்புவதற்கு வேண்டிய கருவிகள் வாங்கப்பட்டு நாள்தோறும் ஒலிபரப்பப்படும்.

பாரதியார் பற்றிய செய்திப்படங்கள், திரைப்படங்கள், நாட்டுப் பற்றினை விளக்கிடும் குழந்தைகள் படங்கள் பார்வையாளர்களுக்குக் காண்பிக்க ஒரு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி மற்றும் வீடியோ பதிவு நாடாக்கருவிகள், கேசட்டுகள் வாங்கி உபயோகத்தில் வைக்கப்படும்.

பாரதியார் பிறந்தநாளான டிசம்பர் திங்கள் 11-ம் நாள் அவரது நினைவு இல்லம் மிகப்பொலிவுடன் அமைவதற்கு வேண்டிய மேம்பாட்டுப்பணிகளை தொடங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் தமிழக-அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விமானப் பயணிகள் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் விமானநிலையத் தொடர்பு சொகுசுப் பேருந்துகளை 6.12.1996 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனுள்ளனர்.

டாக்டர் எம்.ஜி.ஆர். - ஜானகி மகளிர் அறிவியல் மற்றும் கலைக்கல்லூரியினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 9.12.1996 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் தலைமையில் திறந்து வைத்தார்.

முதறிஞர் இராஜாஜி பிறந்த நாளான 10.12.1996 அன்று சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள அவரது சிலைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன், வணக்கத்துக்குரிய மேயர் திரு. மு.க. ஸ்டாலின் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அரசின் நலத்திட்டப் பணிகள், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை, தனியார் தொலைக்காட்சி மற்றும் சென்னைத் தொலைக்காட்சியில் எவ்வாறு விளம்பரப்படுத்தலாம் என்பது குறித்த ஆலோசனைக் கூட்டம், மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர் திரு வ. முல்லைவேந்தன் அவர்கள் தலைமையில், 3.12.1996 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. செய்தித்துறைச் செயலர் திரு துரை. சுந்தரேசன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் திரு நா.ச. பழனியப்பன், இ.ஆ.ப., தமிழக அரசு திரைப்படப்பிரிவு இயக்குநர் திரு. பி. அமிர்தம், மற்றும் தனியார் தொலைக்காட்சி மற்றும் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்கள்.

படமும் செய்தியும்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10.12.1996 அன்று இருங்காட்டுக் கோட்டையில் ஹூண்டாய் மோட்டார் கார் தயாரிக்கும் தொழிற்சாலைக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்கள், திரு சங் மாங் யூ தலைவர், ஹூண்டாய் மோட்டார் கம்பெனி ஆகியோர் உடன் உள்ளார்கள்.

தமிழகப் புதிய ஆளுநராக கிருஷ்ணகாந்த் பதவி ஏற்றார்

மேதகு தமிழக ஆளுநராக இருந்த டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் 2.12.96 அன்று காலை ஐதராபாத்தில் இயற்கை எய்தினார்.

ஆந்திர மாநில ஆளுநராக இருக்கும் திரு.கிருஷ்ணகாந்த் அவர்களை மேதகு தமிழக ஆளுநர் பொறுப்பையும் கூடுதலாகக் கவனிக்கும்படி மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் பிறப்பித்த ஆணையைத் தொடர்ந்து, புதிய தமிழக ஆளுநராக திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் 2.12.96 அன்று பதவியேற்றார்.

ஆந்திர மாநில ஆளுநர் திரு. கிருஷ்ணகாந்த் அவர்கள் ஐதராபாத்திலிருந்து விமானம் மூலம் சென்னைக்கு வந்தபோது சென்னை விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் கலைஞர், மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர், சென்னை மாநகர மேயர் திரு. மு.க. ஸ்டாலின் ஆகியோர் சால்வை அணிவித்தும், மலர்க்கொத்து கொடுத்தும் வரவேற்று அழைத்து வந்தனர்.

பின்னர், மாண்புமிகு தமிழக அமைச்சர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதிய ஆளுநருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

பின்பு ஆளுநர் மாளிகையில் பதவி ஏற்பு விழா எளிமையாக நடைபெற்றது. அரசு தலைமைச் செயலாளர் திரு கே.ஏ. நம்பியார், இ.ஆ.ப., குடியரசுத் தலைவரின் உத்தரவைப் படித்தார். அதைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு கே.ஏ. சாமி அவருக்குப் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார்.

இந்தப் பதவியேற்பு விழாவில், முதல்வர் கலைஞர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மேயர் திரு. மு.க. ஸ்டாலின், துணைச் சபாநாயகர் திரு பரிதி இளம்வழுதி, எதிர்க்கட்சித் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன், அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

பதவியேற்பு விழா முடிந்தவுடன், முதல்வர் கலைஞர் அவர்கள் புதிய ஆளுநருக்குச் சால்வை அணிவித்துக் கவுரவித்தார்.

அரசு உதவிகள் பெற யாரை அணுகவேண்டும்

வருவாய்த்துறை

திட்டத்தின் பெயர்	தகுதிகள் நிபந்தனைகள்	அணுகவேண்டிய முகவரி
முதியோர் ஒய்வு ஊதியம்	65 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்றவராக இருத்தல் வேண்டும். உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்).	சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர்.
உடல் ஊனமுற்றோர் ஒய்வு ஊதியம்	45 வயதுக்கு மேற்பட்ட உடல் ஊனமுற்றோர் ஆதரவற்ற உடல் அங்கஹீனமாக உள்ள நபராக இருக்க வேண்டும். உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்).	சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர்.
ஆதரவற்ற விதவைகள் ஒய்வூதியத் திட்டம்	ஆதரவற்ற விதைவைகள். வயது வரம்பு இல்லை. உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்).	சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர்.
ஆதரவற்ற விவசாயத் தொழி-லாளர் ஒய்வூதியத் திட்டம்	80 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். விவசாயக் கூலித் தொழி-லாளியாக இருந்திருக்க வேண்டும். உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்)	சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர்.
கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள்	30 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்றவராக இருக்க வேண்டும். உதவித்தொகை மாதம் ரூ. 100/- (நூறு ரூபாய் மட்டும்)	சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர்
துயர் துடைப்பு நிவாரணத் திட்டம்	குடும்ப வருமானம் ஆண்டுக்கு ரூ. 7200/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். இறந்தவர் சம்பாதிப்பவராக இருந்திருக்க வேண்டும். 22.6.92க்கு முன் இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு நிவாரணத் தொகை ரூ. 3000/-ம் 22.6.92க்கு பின் இறந்தவர்களுக்கு நிவாரணத் தொகை ரூ. 5000/-மும் இதைத்தவிர்த்து முதியோர் ஒய்வூ தியம் பெறுவோர்க்கும் ஆண்டிற்கு இருமுறை அதாவது பொங்கலுக்கும், தீபாவளிக்கும் இலவசமாக வேட்டி, சேலை வழங்கப்படுகிறது.	சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர்.
விபத்து நிவாரணம்	இறந்தவர் குடும்பத்தில் சம்பாதிப்பவராக இருக்க வேண்டும். அரசு அனுமதிக்கப்பட்ட 44 வகையான தொழில் செய்பவர்களில் ஏதாவது ஒன்றில் பணியாளராக இருந்திருக்க வேண்டும். இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 10,000/- நிவாரணம் அளிக்கப்படும். காயமுற்று உடல் ஊனமுற்றோர்க்கு ரூ. 5000/- முதல் ரூ. 7000/- நிவாரணம் அளிக்கப்படும். 28.8.96 லிருந்து இறந்தவர் குடும்பத்திற்கு ரூ. 15,000/- வழங்கப்படுகிறது.	சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப் பணி வட்டாட்சியர்.
வெள்ளம் மற்றும் தீ விபத்து நிவாரணத் தொகை	குடியிருப்பு முழுவதுமாக அழிந்து விட்டால் ரூ. 500/-ம் பகுதியாக சேதமடைந்து இருந்தால் ரூ. 250/-ம் அளிக்கப்படும். மேலும் இது தவிர குடும்பத்திற்கு 5 கிலோ அரிசி, ஒரு வேட்டி, ஒரு சேலை, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படும். மேலும் வெள்ளம், தீ விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணத் தொகையாக ரூ. 2000/-ம் வழங்கப்படும். இதுதவிர, தீ விபத்து ஏற்பட்ட குடும்பத்திற்கு ரூ. 1100/- யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தாரால் அளிக்கப்படும்.	சம்பந்தப்பட்ட துயர் நிவாரணப்பணி வட்டாட்சியர்.

ஆசியாவில் சுற்றுப்புறச் சீரழிவு

கராச்சியில் இருந்து பாங்காக் வரையிலான நகரங்களில் அதிக மக்கள்தொகை, போதிய இருப்பிட வசதியின்மை, பாதுகாப்பான நீர்ப்பற்றாக்குறை சுகாதார வடிகால் பிரச்சினைகள், தொழில்மய மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றில் இருந்து வெளியேறும் நச்சுத்தன்மை வாய்ந்த புகை ஆகியன மனிதன் உயிர்வாழ்ப் பெரும் அச்சுறுத்தலை விளைவிக்கின்றன.

நகர மக்கள் அவர்களது சுகார்தாரத்திற்கும் உயிர் வாழ்வுக்கும் ஆபத்தான நிலைமைகளில் வாழ்ந்து வருகிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனத்தின் செயலர் திரு. ஹிரோசி நகஜிமா கூறுகிறார்.

1980 ஆம் ஆண்டு தொடக்கம் முதல் 1990 ஆம் ஆண்டு வரை உலக நகர்ப்புற மக்கள் தொகையில் பெரும் அதிகரிப்பை ஏற்படுத்திய ஆசிய நகரங்கள் பொருளாதார சக்தியிலும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகின்றன. 2015 ஆம் ஆண்டு அளவில் உலகில் முன்னேற்றமடைந்த 27 நகரங்களில் 17 நகரங்கள் ஆசியப் பிராந்தியத்தில் அமைந்திருக்கும். 2020 ஆம் ஆண்டு அளவில் ஆசிய நாடுகளில் உள்ள மக்களில் பாதிக்கும் மேலானோர் நகர மக்களாக இருப்பார்கள்.

1988-ஆம் ஆண்டின் முற்பகுதியில் உலகின் மிகவும் மாசடைந்த 7 நகரங்களில் 5 நகரங்கள் ஆசியாவில் அமைந்து உள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்திருக்கின்றது. பெய்ஜிங், கல்கத்தா, ஜகார்த்தா, புதுடில்லி, ஷென்யாங் ஆகியனவே அந்த ஐந்து நகரங்கள் ஆகும்.

பொருளாதார மேம்பாடு, சுகாதாரப் பராமரிப்பு சேவைகளுக்குக் கூடுதல் வளங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அதேவேளையில் மோசமடைந்து வரும் நகர்ப்புறச் சூழல் தரமும் இதனோடு தொடர்புபட்ட ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைகளும் நகர்ப்புறங்களில் முன்னொரு போதும் இல்லாதவாறு அடிக்கடி சுகாதாரப் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றன. அருகி வரும் வளங்களால் இந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண முடியவில்லை என்று உலக சுகாதார நிறுவனத்தின் மேற்கு பசுபிக் பிராந்திய செயலர் திரு எஸ்.டி. ஹான் தெரிவித்தார்.

நோய்களின் அறிகுறிகளையும் நச்சுத்தன்மை ஏற்படும் நகரங்களையும் கண்டுபிடிப்பது சிரமமில்லை. பொருளாதார மேம்பாட்டை எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் ஒரு சஞ்சீவியாகவே கருத முடியாது. உதாரணமாக சீனா அண்மை வருடங்களில் உலகின் மிகவேகமான மக்கள்தொகை அதிகரிப்பு



நாடாகக் கணிக்கப்பட்டுள்ளது. புகைக்கரி, சல்பர் டயோக்சைட், தொழில் சாலை கழிவுகள் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் ஆகியன சீன நகரங்களில் 1988 ஆம் ஆண்டில் இருந்து புற்று நோயினால் மரணமடைவோரின் விகிதாசாரத்தை 6.2 சதவிகிதமாகவும் நுரையீரல் புற்றுநோயினால் மரணமடைவோரின் விகிதாசாரத்தை 18.5 சதவிகிதமாகவும் அதிகரித்துள்ளன. ஆண்களுக்கு ஏற்படும் புற்றுநோயின் அளவு சங்காய் நகரிலேயே மிகக் கூடுதலாகக் காணப்படுகின்றது.

வட சீனாவில் அதிக நிலக்கரிப் பயன்பாட்டினால் ஏற்படும் புகை காரணமாக பல மாதங்களாக செயற்கைகோள் புகைப்படங்களில் பல நகரங்கள் காட்சி தராமல் மறைந்து வருகின்றன. பாங்காக் நகரைச் சேர்ந்த இரண்டாயிரத்து ஐந்நூறு ஆராய்ச்சியாளர்கள் கடந்த ஆண்டு மேற்கொண்ட ஆய்வில் இருந்து 59.5 சதவிகிதமான பிலிப்பைன்சின் வாகன ஓட்டிகள் குணப்படுத்த முடியாத சுவாச நோய்களினால் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆசிய மேம்பாட்டு வங்கி 1991 ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஆய்வின்படி பிலிப்பைன்சில் சுகாதாரத் தீங்கை விளைவிக்கும் எனத் தடை செய்யப்பட்ட பொருள்களினால் ஏற்பட்ட நோய்கள் அதிகம் எனத் தெரியவந்துள்ளது.

ஆசிய நகரங்களில் மோட்டார் கார்களுக்கென கிராக்கி மிக வேகமாக அதிகரித்து வருகிறது. இதனால் ஆசிய நகரங்களில் காற்று மாசடைதல் மோசமாகி வருகிறது. சில நகரங்கள் காரீயம் அற்ற எரிபொருளை பயன்படுத்த ஆரம்பித்துள்ளன. ஆனால் வீதிகளில் போக்குவரத்துத் தடை காரணமாக வாகனங்கள் மெதுவாகப் போவதனால் வரும் புகை காற்றை மாசடையச் செய்து வருகின்றன. ஆசியாவின் நகரவாசிகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக மிக மாசடைந்த காற்றையே சுவாசித்து வருகின்றார்கள். மின்சார உற்பத்திக்கான நிலக்கரிப் பயன்பாடும், வாகனங்களுக்கும் தொழில் நிலையங்களுக்குமான எரிபொருள் பயன்பாடும் காற்றைக் கெடுக்கின்றன.

இந்த கழிவுப் பொருள்களால் சல்பர் டை ஆக்சைட், நைட்ரஜன் ஆக்சைட், கார்பன் மோனாக்சைட், காரீயம் போன்றவை காற்றில் கலக்கின்றன. இதனால் சுவாசப் பை நோய்களும் இருதய நோய்களும் நரம்புத் தளர்ச்சியும் புற்று நோயும் ஏற்படுகின்றன. நிலத்தின் கீழ் மக்கிய எரிபொருள்களை எரிப்பதால் சல்பர் டை ஆக்சைடு வெளியேறுகிறது. சல்பர் டை ஆக்சைடு சுவாச நோயையும் இருதய நோயையும் ஏற்படுத்துகிறது. வாகனங்களில் இருந்து வெளியேறும் கார்பன் மோனாக்ஸைடு இரத்தத்தை நஞ்சாக்குகிறது. இதேவேளை காரீயம் சிவப்பு இரத்த உயிரணுக்களைப் பாதிக்கிறது. ஈரல் சிறுநீரகங்கள் ஆகியன செயற்படுவதையும் இது பாதிக்கிறது. இதனால் நரம்பியல் நோய்கள் ஏற்படுகின்றன.

சிறுவர்களும் முதியோர்களும் இத்தகைய நோய்களால் எளிதில் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்று ஸ்டீபன் தம்லின் என்ற அறிஞர் கூறுகின்றார். மனிதனின் உடல் தன்னைத்தானே சுத்தப்படுத்திக் கொள்ளும் தன்மையைக் கொண்டுள்ளது. ஆனால் அதிகரிப்பான மாசுக்கு நீண்ட நேரம் உடலினால் தாக்குப்பிடிக்க முடியாது என்று உலக சுகார்தார நிறுவனத்தின் பிராந்திய ஆலோசகரான தம்லின் கூறுகிறார்.

மின்சார உற்பத்தி, உருக்கு சிமெண்டு ஆகியவற்றின் உற்பத்தி போன்றவ்வற்றினாலும் காற்று மாசடைகின்றது. நேபாளத்தின் தலைநகரான காத்மண்டுவில் நகரமையத்தில் இருந்து நான்கு கிலோமீட்டர் தூரத்தில் முழு அளவில் சிமெண்டு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைந்துள்ளது. புதுடில்லியில் அமைந்துள்ள இந்திர பிரத்தா மின்சார உற்பத்தி ஆலையில் பணியாற்றும் ஊழியர்களில் எலும்புறுக்கி நோய்க் கிருமிகள் பெரும்பாலும் உள்ளன. இந்தத் தொழிற்சாலையில் இருந்து பெரும் தொகையான கந்தகம், நைட்ரஜன் ஆக்சைடு ஆகியன வெளியேற்றப்படுகின்றன. கராச்சியில் அமைந்துள்ள பாகிஸ்தான் உருக்கு ஆலையும் பெருமளவிலான நச்சுப் புகையை வெளியிடுகிறது.

ஆசியாவின் மக்கள் நெருக்கடி மிகுந்த நகரங்களில் மூன்றில் ஒரு பங்கு மக்களும் சுத்தமான குடிநீர் வடிகால்கள் போன்ற வசதிகள் இல்லாத வீடுகளில் வசிக்கிறார்கள்.

உண்மையில் இந்த வீடுகளின் நெருக்கடியே அம்மை, சின்னம்மை நோய் பெருகுவதற்குக் காரணமாகும். மக்கள் நெருக்கமாக வாழும் சமூகங்களில் சின்னம்மை நோய் வெகுவாகப் பரவுகிறது. சிறுவர்கள் மத்தியில் இந்த நோய் பரவும் வேகம் கூடுதலானது. சுருக்கமாகக் கூறுவதானால், அதிக மக்கள் தொகையுள்ள நகரங்கள் தொற்றுநோய் வேகமாகப் பரவும் இடங்களாக இருக்கின்றன என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது.

பிலிப்பைன்ஸ் வறுமை குறித்து உலக வங்கி மேற்கொண்ட ஆய்வொன்றில் இருந்து நகர்ப்புறக் காற்று மாசடைவதனால் வறிய மக்களே கூடுதலாகப் பாதிக்கப்படுகின்றார்கள் என்று தெரிய வருகிறது. சுவாச நோய்கள் இவர்கள் மத்தியில் கூடுதலாக பரவுகிறது. செல்வந்தர்கள் போலன்றி வறியவர்கள் குளிரூட்டப்பட்ட கார்களில் பிரயாணம் செய்யாததால் வெளிக்காற்றின் தாக்கத்திற்கு ஆளாகிறார்கள். வாகனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றினால் மாசடையும் வீதியோரங்களில் வறிய சிறுவர்கள் நடமாடுவதால் அவர்கள் இந்நோய்களுக்குப் பலியாகிறார்கள்.

சிங்கப்பூரைத் தவிர, ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 20 சதவிகிதத்திற்கும் குறைவான நகர்ப்புற வீடுகள், மத்திய சாய்க்கடை முறையுடன் தொடர்புபட்டவையாக உள்ளன. பெரும் நகரங்களில் வசிக்கும் வறியவர்களின் நான்கில் ஒரு பங்கினர் மாத்திரமே நீரை முறையாகப் பெறுகின்றனர். வறியவர்கள் அநேகமாக மாசடைந்த நீரையே பெற்றுக்கொள்கிறார்கள். தாய்லாந்தில் சாவோ, பிராயா ஆறு பிலிப்பைன்சின் பசிக் ஆறு போன்ற பல ஆறுகள் மிகவும் மோசமாக மாசடைந்துள்ளன. தெற்காசியத் துணைக் கண்டத்தில் பல ஆறுகள் கழிவு வடிகால்களாக மாறியுள்ளன.

இத்தகைய பாதிப்புகளை எதிர்நோக்கும் நகரங்களுக்கு உடனடித் தீர்வு எதுவும் தெரியவில்லை. உயர்ந்துவரும் வாழ்க்கைத் தரத்தின் ஒரு அத்தியாவசிய அம்சமாக மாசடைதல் என்று சில பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

(ஐ.பி.எஸ். செய்தி)

நன்றி: புதிய கல்வி

சுவைமிகு செய்திகள்

வாழ்வும் கிழமையும்

அமெரிக்க நாட்டின் 16வது குடியரசுத் தலைவரான ஆபிரகாம் லிங்கன் பிறந்தது ஞாயிற்றுக் கிழமை; முதன் முதல் அவர் தேர்தலில் நின்று வெற்றி பெற்றது திங்கட்கிழமை; குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது செவ்வாய்க்கிழமை; பார் கவுன்சிலில் இடம் பெற்றது புதன் கிழமை; உலகம் போற்றும் கெட்டிஸ்பர்க் உரை நிகழ்த்தியது வியாழக்கிழமை; கொலை வெறியனால் நாடக அரங்கில் சுடப்பட்டது வெள்ளிக்கிழமை; அடிமை விலங்கறுத்த அப்பெருந்தலைவனின் உயிர் பிரிந்தது சனிக் கிழமை!

மிகப்பெரும் கடல்

கடல்களிலேயே மிகவும் பெரியது பசிபிக்பெருங்கடல்; இதன் பரப்பளவு 161/2 கோடி சதுர கிலோ மீட்டர்; உலகப் பரப்பில் இது 35.24 சதவீதம் மொத்த கடற்பரப்பில் 45.7 சதவீதம். இதன் சராசரி ஆழம் 10 ஆயிரத்து 900 மீட்டர்!

பறக்கும் புறா

மணிக்கு 80 முதல் 100 கிலோ மீட்டர் வேகம் வரை பறக்கும் சக்தி புறாவுக்கு உண்டு. தொடர்ந்து 15 மணி நேரம் புறாவால் பறக்க முடியும்.

அல்சேசன் பெயர் வரக் காரணம்

ஜெர்மனிக்கும், பிரான்சுக்கும் இடையே அடிக்கடி ''அல்சேஸ்'' என்ற பகுதியில் தான் போர் நடக்கும். மேலும் இந்த ''அல்சேஸ்'' பகுதியை ஜெர்மானியர்கள் அடிக்கடி கைப்பற்றுவதும், பிரான்ஸ் அதை மீட்பதும் சாதாரணமாக நடக்கும். அல்சேஸ் பகுதி மக்கள் வீரம் செறிந்தவர்கள். ஆகவே அங்கு புதிய நாய்களை ''அல்சேஸ்'' பகுதியை நினைவூட்டும் பொருட்டு ''அல்சேசன்'' என்ற பெயரிட்டு அழைக்கலாயினர்.

இரத்த ஓட்டம்

நம் உடலில் இரத்த ஓட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதை முதன்முதலில் கண்டறிந்து உலகிற்குத் தெரிவித்தவர் மருத்துவமேதை வில்லியம் ஹார்வி என்பவராவார். 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், மன்னர் முதலாம் சார்லசின் குடும்ப வைத்தியராக இருந்த பெருமையாளரும் கூட!

மிதக்கும் பன்றி

முள்ளம் பன்றியைத் தண்ணீரில் மூழ்கடிக்க முடியாது. ஏனென்றால் அதன் உடலில் உள்ள நீண்ட முட்கள் காற்று நிரம்பியதாகும்; ஆகவே அது தண்ணீரில் மூழ்காது - மிதக்கும்!

பால் காளான் சிறப்பியல்புகள்

இன்றைய உணவு உற்பத்தியில் காளான் உணவு வகைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. முட்டைக் காளான், சிப்பிக் காளான், பால் காளான், வைக்கோல் காளான், ஆகிய பல தரப்பட்ட காளான்கள் உள்ளன. பால் காளான் எல்லா வகை காளான்களைவிட சுவை மிகுந்ததாகவும், ஊட்டச் சத்து உள்ளதாகவும் விளங்குகிறது. பால் காளானின் உற்பத்தி முறைகளும் எளிதானவை. இதன் உற்பத்திக்கு மற்ற காளான்களைப் போல் மூலப் பொருட்கள் மக்கச்செய்ய வேண்டிய அவசியமில்லை. இதன் உற்பத்திச் சுழற்சி 40 முதல் 50 நாட்கள் வரைதான் ஆகும். விளைதிறன் 140 முதல் 160 சதவிகிதம் ஆகும். தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இக்காளானை வளர்க்கலாம். அறுவடை செய்த காளான்கள் சாதாரண சேமிப்பில் 3-4 நாட்கள் வரை கூட கெடாமல் பாதுகாக்க முடியும்.

புதினா

கீரைகளில் புதினா கீரைக்குச் சில தனிச் சிறப்புகள் உண்டு; உணவில் தனி மணம் ஊட்டக்கூடிய இந்தக் கீரைக்குப் பித்த மயக்கத்தைப் போக்கும் சக்தி உண்டு. வாய் துர்நாற்றத்தை இது நீக்கும். இரத்தத்தைச் சுத்திகரிக்கும். பசியைத் தூண்டும். ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

கதை, கவிதை, கட்டுரை, துணுக்கு, தியாகிகளின் வாழ்க்கை வரலாறு - இவைகளோடு அரசு ஆற்றிவரும் அரும்பணிகளையும் சேர்த்துச் சுவைபடப் படைத்துவரும் 'தமிழரசு'க்கு அன்பு வாழ்த்துக்கள்.

செ. காமராஜ்,
வேப்பூர் - செக்கடி

'பொய் சொல்ல நல்லதப்பா கதையில் உள்ள குறளில் 'பொய்யையும்' என்றிருக்கிறது; அது 'பொய்ம்மையும்' என்றிருக்க வேண்டும். அதுதான் சரி.

–புலவர் பெ. ராஜசுந்தரம்,
திருவேற்காடு

திரையுலகில், பாடல்கள் சீரழிந்து வருகிற நேரத்தில் - பாட்டுப்பிறந்தவிதம்' கட்டுரைமூலம் பட்டுக்கோட்டையாரின்வைரவரிப்பாடல்களை நினைவுபடுத்தினீர்கள். நன்றி.

–தி. பொ. சண்முகசுந்தரம்,
திட்டக்குடி.

சிந்தனைச் சிதறல்கள், சுவையுள்ள துணுக்குகள், நூல்நயம் ஆகியவை இன்னும் அதிகம் இடம்பெறவேண்டும். அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக இருக்கிறது எங்கள் ஊர் பிரச்சினை பகுதி. நல்ல மாற்றம்.

–கடல்நாகராசன்,
கடலூர்.

'அறிவியல் துளிகள்' பகுதி அற்புதம்; தொடர்ந்து இன்னும் அதிக அளவில் வெளியிடக்கூடாதா?

–ப. சுரேஷ் பிரபு
பெருங்கடம்பனூர்.
நாகைவட்டம்.

மருத்துவப் பகுதி - குறிப்பாகத் 'தாய்ப்பால்' கட்டுரை குழந்தைகளுக்கு மட்டுமன்றித் தாய்மார்களுக்கும் பயன்படுவதாகும். இதுபோன்ற கட்டுரைகளை நிறைய எதிர்பார்க்கிறோம்.

–அ. சூசைமேரி பால்ராஜ்
மரூர்.

ஆண்ட நாள் ஆண்டு
மீண்ட நம் அரசின்
தமிழரசு இதழின்
தகைமை கண்டேன்;
பக்கந் தோறும்
பைந்தமிழ் ஊற்று
தக்கோர் வழங்கும்
செஞ்சொற் புதையல்;
அரியநற் பேழை
அறிவின் திறவுகோல்!

– ம. நாராயணன்
வேலூர்.

'அறிவியல் துளிகள்' பகுதிபயனுடையதாக இருக்கிறது; தகுந்த படங்களுடன் 2 பக்கமாக வெளியிட்டால்நல்லது.

– இரா. தமிழ் ரகு,
விழுப்புரம் – 2

நச்சிலக்கிய ஏடுகள் ஈசல்போல் பெருகும் நம் நாட்டில், ஒரு தலைசிறந்த நல்லிலக்கிய ஏடாகத் திகழும் தமிழரசு பொன்றாப் புகழ்பூத்த பூந்தமிழ் மலர்போல் மணக்கிறது.

–புலவர் தமிழறிவன்
சென்னை - 14

'அன்பு என்பது...' கட்டுரை அன்பின் முக்கியத்துவத்தை விளக்குவதாக இருந்தது; வேலைவாய்ப்புகள்' பகுதியும் மிக அருமை.

–ஆர். செல்வகுமரன்
ஊத்தங்கரை.

குடும்பத் தலைவிகளே!
நீங்கள் சமையல் எரிவாயுவைப் பயன்படுத்துகிறீர்களா
இதை அவசியம் படியுங்கள்!

- தங்கள் பெயரில் இல்லாத எரிவாயு இணைப்பினைப் பயன்படுத்தும் நுகர்வோர், அந்தந்த எண்ணெய் நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு பெயர் மாற்றம் செய்து முறைப்படுத்திக் கொள்ளலாம். உபயோகிப்பாளர் இறக்க நேர்ந்தால் வாரிசு சான்றிதழைக் காட்டி பெயர் மாற்றமும் செய்து கொள்ள முடியும்.
- சிலிண்டரைக் கொண்டு வந்து வீடுகளில் சேர்ப்பவரிடம், சிலிண்டரில் வாயுக் கசிவு ஏதேனும் உள்ளதா என்பதைச் சோதித்துப் பார்க்கச் சொல்ல வேண்டும். சிலிண்டரில் 'சீல்' இருக்கிறதா என்று பாருங்கள்.
- 'சீல்' இல்லாத சிலிண்டரை ஏற்க வேண்டாம். தகுந்த ரசீது இல்லாமல் சிலிண்டரை ஏற்க வேண்டாம். உரிய ரசீது இல்லாமல் சிலிண்டர் அல்லது ரெகுலேட்டரை யாருக்கும் இரவல் கூட கொடுக்காதீர்கள். அது பிறகு பல பிரச்சினைகளை உண்டு பண்ணலாம்.
- அவரவர் வீடுகள், உணவு விடுதிகளில் உள்ள சமையல் எரிவாயு சாதனங்களை காப்பீடு செய்வது நல்லது.
- இரப்பர் இணைப்புகள் வாங்கும்போது, தரமானதுதானா என்று கவனித்து வாங்கவேண்டும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இரப்பர் இணைப்புகளைக் கட்டாயமாக மாற்ற வேண்டும்.
- இரண்டு ஆண்டுகளக்கு ஒருமுறை 10 ரூபாய் எரிவாயு விநியோகஸ்தரிடம் செலுத்தி அடுப்புச் சாதனத்தை முழுமையாகப் பரிசோதிக்க வேண்டும்.
- இரவில் படுக்குமுன் ரெகுலேட்டர், பர்னர் குமிழ் ஆகியவற்றை மூடிவிட்டீர்களா என்று கவனிக்க வேண்டும்.
- சிலிண்டரை எப்போதும் செங்குத்தாக நிற்கவைக்க வேண்டும். தனியாக உள்ள மாற்று சிலிண்டரின் வால்வினைப் பாதுகாப்பு முறையால் எப்போதும் மூடி வைக்கவேண்டும்.
- சிலிண்டரின் மீது பாத்திரம், துணிகள் போன்றவற்றை வைக்கவேண்டாம். சிலிண்டரின் அருகில் வேறு அடுப்பு எதையும் வைக்காதீர்.
- டெபாசிட் கட்டிய ரசீது காணாமல் போய்விட்டதா? வேறு இடத்திற்குச் செல்ல நேரிடும்போது காணாமல் போன ரசீதிற்குப் பதில் ரூ.10 ஸ்டாம்ப் பத்திரத்தில் எழுதித் தந்தால் போதுமானது. கட்டிய பணத்தைத் திரும்பப் பெறலாம்.
- நகரத்திற்குள்ளேயே வீடு மாறுகின்றபோது, சிலிண்டர், ரெகுலேட்டரைத் திருப்பித் தர வேண்டியதில்லை. ஆனால், டி.டி.வி எனப்படும் ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள். டெபாசிட் செலுத்திய ரசீதைத் திருப்பித் தரவேண்டும்.
- ரெகுலேட்டர் இயற்கையாகவே பழுதுபட்டால் அல்லது இயங்காவிட்டால் எரிவாயு விநியோகஸ்தர் மெக்கானிக் இலவசமாக மாற்றித் தருவார்கள். ஆனால் உடைந்து பழுதுபட்டால், வி.ஆர். எனப்படும் ரசீது மூலம் 150 ரூபாய் கட்டவேண்டும்.
- எரிவாயு அடுப்புச் சாதனங்களை நீங்களாகவே ஒரு போதும் பழுதுபார்க்க முயற்சிக்காதீர். விநியோகஸ்தர் அலுவலகத்தில் உள்ள மெக்கானிக் மூலமே சீர் செய்து கொள்ள வேண்டும்.
- இந்த விதிமுறைகளை அகில இந்திய சமையல் எரிவாயு விநியோகஸ்தர்கள் கூட்டமைப்பின் தென்பிராந்தியம் வெளியிட்டுள்ளது.

எங்கள் ஊர் பிரச்சினை

பிரச்சினை

செங்கோட்டை காலாங்கரை அருகிலுள்ள சுடுகாட்டுப் பாதையில் ஊரில் எடுக்கப்படும் குப்பைகளைக் கொண்டு வந்து குவித்துப் போக்குவரத்தைப் பாதிக்கச் செய்கின்றனர். மழைக்காலங்களில் இந்தக் குப்பைகள் நீராடும் ஆற்றில் கலந்து குளிப்பதற்குக்கூட சுகாதாரக்கேடு உண்டாகிறது. செங்கோட்டை - ஆறுமுகசாமி ஒடுக்கம் என்கிற பகுதியிலுள்ள சுடுகாட்டிற்குச் செல்லும் பாதையின் கரைகளில் தடுப்புச் சுவர்களில் காங்கிரீட் சாலை போட்டால்தான் இதற்கு நிரந்தரமான வழி பிறக்கும்.

செங்கோட்டை நித்யகல்யாணி அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள சுடுகாட்டுப்பாதையில் முட்செடிகள், இறந்த உடலைத் தூக்கிச் செல்ல முடியாமல் தடுக்கின்றன. மழைக்காலங்களில் களிமண் கூடுதலாக உள்ள காரணத்தினாலும் முட்செடிகள் மறைப்பதாலும் வழுக்கு ஏற்பட்ட இடங்கள் தெரியாமல் இறந்த உடலைத் தூக்கிச் செல்பவர்களும் கீழே விழும் அபாயம் உள்ளது. மேலும் பாதையின் அருகில் உள்ள தனி நபர்கள் பாதையைக் கொஞ்சம் கொஞ்சமாகக் ஆக்கிரமித்துள்ளனர். எனவே ஆக்கிரமிப்புகளை அகற்றவும் சுடுகாட்டுப்பாதையினைச் செப்பனிடவும், செங்கோட்டைப்புதூர் பேரூராட்சி நிர்வாக அலுவலகம் மூலம் நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ந. நாராயணன்,
செங்கோட்டை.

தீர்வு

கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, இந்நகராட்சியில் உள்ள சுடுகாடு சமீபம் உள்ள ஆற்றில் குப்பைகளைக் கொட்டுவதில்லை என்றும், அவ்வாறு கொட்டப்பட்டக் குப்பைகளைத் தற்போது அகற்றி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தென்காசி செங்கோட்டை சாலையில் குண்டாறு சமீபம் உள்ள ஆறுமுகசாமி ஒடுக்கம் பக்கம் உள்ள சுடுகாட்டின் பாதைக்கு இரு பக்கமும் தடுப்புச்சுவர் கட்டி தளம் அமைக்கும் பணிக்காக ரூ. 3,70,000/- (ரூபாய் மூன்று லட்சத்து எழுபது ஆயிரம்) மதிப்பீடு தயார் செய்து திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் நித்திய கல்யாணி கோவில் பக்கம் உள்ள பிராமணர் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதல்ல. மேற்படி பாதை புதூர் பஞ்சாயத்தைச் சார்ந்ததாகும் என்ற விபரத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி. இரா. பூங்கொடி அருமைக்கண். பி.இ.
ஆணையர், செங்கோட்டை நகராட்சி.

வாய்க்குள் வளரும் தவளைக் குஞ்சு

தென் அமெரிக்காவில் டார்வின் தவளை எனப்படும் ஒரு வகையுள்ளது. சதுப்பு நிலத்தில் இடப்பட்ட முட்டைகளை ஆண் காவல் காக்கிறது. முட்டைகளில் உயிரின் அசைவு தோன்றியதும் அவற்றை எடுத்து விழுங்கி தன் வாயில் உள்ள பையில் வைத்துக்கொள்கிறது. முட்டை பொரிந்து குஞ்சு வெளிப்படும் வரை, அவற்றை வாய்க்குள் வைத்திருந்து பிறகு அவற்றை வெளியே விடுகிறது.

பிரச்சினை

விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் பெரியபகண்டை கிராமத்தில் பல ஆண்டுகளாக மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி கேட்டு மனு செய்து வருகின்றோம். 1995ல் மே மாதம் மாவட்ட ஆட்சித்தலைவரின் மனுநீதி நாள் அன்றும் மனு கொடுக்கப்பட்டது. இதுநாள் வரை திட்டம் துவக்கப்படவில்லை. திட்டம் துவக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கோ. பாலசுப்பிரமணியன்,
பெரியபகண்டை, ரிஷிவந்தியம் ஒன்றியம்.

தீர்வு

பெரியபகண்டை ஊராட்சியில் தற்போது, இயங்கிவரும் கைப்பம்புகள் - 4 இவ்வூராட்சியின் ஆதி திராவிடர் காலனி பகுதியில் ஒரு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி நன்கு இயங்கி வருகிறது.

மேலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு விதிமுறைகளின் படி போதுமான மக்கட் தொகை, வருமானம் இவ்வூராட்சியில் இல்லை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மட்டுமே நடவடிக்கை எடுக்க இயலும் என்பதால் விவரங்கள் திருக்கோவிலூர் நகரில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வாரிய அலுவலகத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல். சீனுவாசன்,
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம், ரிஷிவந்தியம்

பிரச்சினை

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி நகரம் பரமக்குடி, எமனேஸ்வரம் என இரு பிரிவாக உள்ளது. இதனைப் பிரிக்கும் வைகை ஆற்றின் இடைக்குப் பகுதியில் ஒரு தரைப்பாலம் கட்டப்பட்டு 60 சதம் வேலை முடிக்கப்பட்டு, மீதமுள்ள வேலைகள் முடிக்கப்படாமல் அரைகுறையாக உள்ளன. இரு பகுதி மக்களும் சுட்டெரிக்கும் வெயிலில் மணலில் வைகை ஆற்றைக் கடந்து செல்ல மிகவும் அவதிப்படுகிறார்கள். புதிதாக அமைந்துள்ள கலைஞரின் அரசு மேற்படி பால வேலைகள் விரைவாக முடித்துத்தர பரமக்குடி நகர மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறையின் கவனம் நகர மக்களின் குறையைத் தீர்க்க உதவுமாறு கேட்கிறேன்.

எம்.எஸ். ராமய்யன்,
பெருமாள் கோவில் தெரு,பரமக்குடி.

தீர்வு

வைகை ஆற்றின் குறுக்கே பரமக்குடியையும் எமனேஸ்வரத்தையும் இணைக்கும் தாம்போதி கட்டும் வேலை பகுதி 2 திட்டம் (91-92) தின் கீழ் அரசு ஆணை எண். 1786/பொ.ப.து. நாள் 29.10.91 ரூ. 61.00 இலட்சங்களுக்கு நிர்வாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு ரூ. 67.10 லட்சங்களுக்குத் தலைமைப் பொறியாளர் (நெஊபது) சென்னை அவர்களால் தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டு, ஒப்பந்தங்கள் கோரப்பட்டு வேலை முன்னேற்றத்தில் உள்ளது.

எமனேஸ்வரம் பக்கத்தில் 6 கண்களும் பரமக்குடி பக்கத்தில் 10 கண்களும் கொண்ட தாம்போதி வேலை தற்சமயம் 70 சதவிகிதம் வேலை முடிவுறப்பெற்றுள்ளது. மீதி வேலை நடைபெறும் பகுதியில் காங்க்ரீட் வேலைகளுக்குப் போதுமான அளவு நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே வேலை முன்னேற்றத்தில் தடை ஏற்பட்டுள்ளது.

நிலைமை சீரடைந்ததும் பால வேலை துரிதமாக நடைபெற எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, விரைவில் செய்து முடிக்கப்பட்டுப் பொதுமக்களுக்குப் பயன்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இதன் மூலம் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

ஜி. ஜெயராமன்,
கோட்டப்பொறியாளர் (நெஊபது), பரமக்குடி.

அட்டையின் விசித்திரம்

அட்டைகள் மண்புழு இனத்தைச் சேர்ந்தவை. இவைகளுக்குச் சில விசித்திர இயல்புகள் உள்ளன, அதன் உடலின் இரு புறமுள்ள உறிஞ்சிகள் இருக்கும். முன்புற முள்ள உறிஞ்சியின் நடுவில் அதன் வாய் இருக்கும். கூரிய பற்களைக் கொண்ட அதன் மூன்று தாடைகளால் கடித்து வடிவில் காயத்தை உண்டாக்கும். அதன் உமிழ்நீரில் உள்ள ஒரு ரசாயனம் காயம்பட்ட இடத்தில் வலி தெரியாமல் செய்வதால் கடிபட்ட விலங்கு அதை உணர்வதில்லை. அவை சுரக்கும் மற்றொரு பொருள் இரத்தம் கட்டிப் போகாமல் தடுக்கிறது. இதனால் நிம்மதியாக வேண்டிய அளவு இரத்தத்தைப் பாதிக்கப்பட்டவர் உணராமலே அதனால் உறிஞ்சிக் குடிக்க முடிகிறது.

மருத்துவக் கட்டுரை

சளி - இருமல்

மழைக்காலங்களில் பொதுவாக குழந்தைகளுக்கு சளி-இருமல் போன்ற தொல்லைகள் இருக்கக்கூடும். இவைகளிலிருந்து தற்காத்திட இந்தக்கட்டுரையில் சொல்லப்பட்ட தகவல்கள் தாய்மார்களுக்கு உதவும்.

இருமலும் சளியும் உள்ள குழந்தை, இயல்பான நிலையிலும் பார்க்க மிகவும் விரைவாக மூச்சுவிடுமானால், அது ஆபத்திலிருக்கிறது - அபாயநிலையில் இருக்கிறது எனப் பொருள். உடனே மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லுவது அவசியம்.

- பெரும்பாலும் சளியோ, இருமலோ, தொண்டைக் கரகரப்போ, மூக்கில் சளி ஒழுகுதலோ தாமாகவே சரியாகி விடுபவைதான். ஆனால் சில சமயங்களில் இவை முற்றி நிமோனியாவாக உருவெடுத்து, குழந்தையின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கின்ற அபாய சூழ்நிலை தோன்றலாம். ஆனால், பெற்றோர் கீழ்க் காணுபவைகளைக் கவனமாகக் கடைப்பிடிப்பார்களானால் நிமோனியாவால் ஏற்படும் இலட்சக் கணக்கான இறப்புக்களைத் தவிர்த்திட வாய்ப்பு உண்டு.



- மருத்துவக் கவனிப்பு தேவைப்படுகிற அளவுக்கு, சளி-இருமல் எப்போதும் தொற்று நோயாக முற்றுகிறது என்பதைப் பெற்றோர் தெரிந்திருக்க வேண்டும்.
- மருத்துவ உதவியும், குறைந்த செலவிலேயே மருந்துகளும் கிடைக்கின்றன. அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இலவசமாகவே கிடைக்கின்றன.

சளி - இருமல் உள்ள குழந்தைகளின் பெற்றோர், கீழ்க்காணும் நிலைகளில், மருத்துவ மனைக்கோ, அல்லது நலப்பணியாளரிடமோ குழந்தைகளை உடனே அழைத்துச் செல்ல வேண்டும்.

- இயல்பு நிலையிலிருந்து வேகமாக குழந்தை மூச்சு விடும்போது,
- குழந்தையின் மார்பின் கீழ்ப்பகுதி (விலா எலும்புகளுக்கு இடைப்பட்ட பகுதி) மூச்சு விடும்போது, சாதாரணமாக வெளியே விரிவதற்குப் பதிலாக உள்நோக்கிப் போகும் போது.
- குழந்தையால் எதுவும் குடிக்க முடியாத நிலை ஏற்படும்போது, திரவ உணவும் உறிஞ்ச முடியாத நிலை ஏற்படுகிற போது.
- குழந்தை இயல்பாக மூச்சு விடும்போது பயப்பட வேண்டியதில்லை. சாதாரணமாக

பிரச்சினை

நான் கரூர் தீரன் சின்னமலை மாவட்டம், குளித்தலை வட்டம், ஆதனூர் கிராமம், மந்திரிக்கோன்பட்டியில் வசிக்கிறேன். எங்கள் கிராமத்தில் தாழ்த்தப்பட்டவர், பிற்படுத்தப் பட்டவர்கள் ஒருங்கே பலநூறு குடும்பங்கள் தண்ணீர் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ளோம். நாங்கள் தண்ணீருக்காக 1 கி.மீ. மணலிலேயே நடந்து சென்று தனியார் கிணறுகளில் பல பிரச்சினைகளுக்கிடையில் நீர் கொண்டு வருகின்றோம். எங்கள் ஊரில் உள்ள அடி குழாயிலும், உப்புநீர்தான். இருப்பினும் அதிலிருந்து தினமும் 50 குடம் தண்ணீர்தான் கிடைக்கிறது. பின் வறண்டுவிடும். இது தொடர்பாகக் கடந்த ஐந்து ஆண்டுகளாக முதல்வர் ஆட்சியர், ஆணையர் வட்டாட்சியர், மக்கள் பிரதிநிதிகள் அனைவரிடமும் மனுகொடுத்து எங்கள் முறையீடு பயனளிக்கவில்லை. உங்கள் மூலமாவது எங்கள் பிரச்சினை தீர்க்கப்படுமா?

ம. மணியன்,
மந்திரிக்கோன்பட்டி, ஆதனூர் தரகம்பட்டி (வழி)
குளித்தலை வட்டம்.

தீர்வு

கடவூர் ஊராட்சி ஒன்றியம் ஆதனூர் ஊராட்சி மந்திரி கோன்பட்டியில் ஆதி திராவிடர் தெருவில் ஏற்கனவே ஒரு கைப்பம்பு போடப்பட்டு, நல்லமுறையில் இயங்கி வருகிறது. கைப்பம்புக்குப் போதுமான தண்ணீர் உள்ளது. ஊருக்கு அருகில் கைப்பம்பு போடப்பட்டுள்ளது.

மேலும் வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 1995-96ம் ஆண்டிற்குப் புதிய ஆழ்குழாய் கிணறு ஒன்று பொதுவாக போடப்பட்டுள்ளது. மேலும் மந்திரிகோன்பட்டியில் மொத்தம் 4 கைப்பம்புகள் உள்ளன. அதில் ஒன்று ஆதி திராவிடர்களுக்காகப் போடப்பட்டது. மந்திரி கோன்பட்டியில் குடியிருக்கும் மக்களுக்குத் தண்ணீர் பற்றாக்குறை ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. அம்மையப்பன் ஆணையர்,
கடவூர் ஊராட்சி ஒன்றியம், தரகம்பட்டி

பிரச்சினை

மதுரையிலிருந்து திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மார்நாடு, தஞ்சாக்கூர், கட்டனூர், இருஞ்சிறை, நரிக்குடி வீரசோழன், கூடக்குளம் மண்டல மாணிக்கம், வலையபூக்குளம் வழியாக கமுதிக்கு நீண்ட நாட்களாக மருதுபாண்டியர் போக்கு வரத்துக்கழகப் பேருந்து மதுரை எம்.பி.டி.சி. கிளை மூலம் காலை 5.45க்கும், மாலை 1.30 க்கும் ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த 10 மாதங்களாகக் குறிப்பிட்ட நேரத்துக்கு வருவதில்லை. இதனால் பொதுமக்களும், மாணவ, மாணவியர்களும், கர்ப்பிணி தாய்மார்களும், அரசு அலுவலகங்களுக்குச் செல்பவர்களும் குறிப்பிட்ட நேரத்துக்குப் போக முடியாமல் பெரும் அவதிப்படுவது மிகவும் வேதனை. இது குறித்து எம்.பி.டி.சி. நிர்வாக இயக்குநர், கோட்ட மேலாளர், மதுரை எம்.பி.டி.சி. கிளை மேலாளர் ஆகியோருக்குப் பலமுறை விண்ணப்பித்தும் எவ்விதப் பலனும் இல்லை. பேருந்தை நிறுத்தினாலும்கூட, மண்டல மாணிக்கம் நடந்து போய், பேருந்தில் பயணம் செய்து கமுதி செல்லலாம். இப்பேருந்தை நம்பி கடந்த 10 மாதமாக எங்கள் ஊர் பொது மக்கள்படும் கஷ்டத்திற்கு, அளவில்லை. எனவே கூடக்குளம் வழியாக காலை 8.30 மணிக்கு பேருந்து தொடர்ந்து வருவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து உதவும்படி எங்கள் ஊர் பொது மக்கள் சார்பாக வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வீ.மு. இராமசாமி,
அவைத்தலைவர், தி.மு.க உட்கிளை, கூடக்குளம்,
கமுதி வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

தீர்வு

மேலே கண்ட வழித்தடத்தில், மழையின் காரணமாகச் சாலை மோசமாக இருந்ததால் மதுரை-கமுதி (வழி) கட்டனூர், வீரசோழன் பேருந்து சரிவர இயக்கப்படவில்லை. தற்சமயம் மேற்படி வழித்தடத்தில் பேருந்து தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொதுமேலாளர்,
மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகம், காரைக்குடி.

ஸ்குவிட்

முதுகெலும்பில்லாத உயிரினங்களில் கடலின் அடி மட்டத்தில் வாழும் 'ஸ்குவிட்' தான் பெரியது. இது எவ்வளவு பெரிதாக வளரக்கூடியது என்பதை நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. எப்போதாவது நீர்மட்டத்துக்கு வரும் ஒரு சிலவற்றைக் கொண்டு இவற்றின் அளவை யூகிக்கத்தான் முடிகிறது. நியூஜிலாந்து கடற்கரையருகே காணப்பட்ட ஒன்று 21 மீட்டர் நீளமிருந்ததாக சொல்லப்படுகிறது. இதன் எடை ஒரு டன்னுக்கு மேல் இருக்கும். கண்களின் அகலம் ஒன்றே கால் அடி. இவ்வளவு பெரிய கண் கொண்ட எந்த உயிரினமும் கிடையாது என்று கூறப்படுகிறது.

பிரச்சினை

தமிழக அரசு நூலக ஆணைக்குழுவின் கிளை நூலகம் செங்கோட்டை நகரின் மையப் பகுதியில் சுமார் .1000 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. பொதிகை வாசகர் பேரவையினரின் இடைவிடாத முயற்சியால் அடைத்தே இருந்த நூலகத்தை நெல்லை மாவட்ட நூலக அதிகாரி அவர்கள் ஒரு உதவி நூலகரை நியமனம் செய்து நூலகம் செயல்பட உதவினார்கள். ஆனால் தற்போது மீண்டும் சுமார் 20 நாட்களாக நூலகம் யாருக்கும் பயனின்றி அடைத்தே உள்ளது. எனவே, செங்கோட்டை பொது நூலகம் தினசரி சிறந்த முறையில் செயல்பட உதவும்படி தங்களிடம் மிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எம்.எஸ். ராமநாதன்,
பொதிகை வாசகர் பேரவை, செங்கோட்டை .

தீர்வு

தங்களின் கடிதத்தில் செங்கோட்டைப் பொது நூலகம் 20 நாட்களாக மூடப்பட்டிருப்பதாகவும் இதனைத் திறக்க, தக்க நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை அறிக்கை மூலம் சமர்ப்பிக்கக் கோரப்பட்டுள்ளது.

செங்கோட்டை கிளை நூலகத்தில், அதில் பணி புரிந்த நூலகர் மாறுதல் மூலம் நான்குநேரி கிளை நூலகத்திற்கு சென்றுவிட்டதாலும், மற்றும் அதில் பணி புரிந்த உதவியாளர் வயது முதிர்வில் ஓய்வு பெற்றுவிட்டதாலும், ஏற்பட்ட பிரச்சினையின் காரணமாக புகார் எழுந்துள்ளது.

இந்நூலகத்தினைத் தினசரி நன்கு செயல்படத்தக்க வகையில், தென்காசி கிளைநூலகத்திலிருந்து பணியாளர் ஒருவர் செங்கோட்டை கிளைநூலகத்திற்கு மாற்றுப்பணியில் செயல்பட்டு வருகிறார்.

இந்நூலகத்தின் மீது நேரடி கவனம் செலுத்தி ஒரு பணியாளரை நிரந்தரமாக மாற்றுப்பணி / மாறுதல் மூலம் நியமிக்கத்தக்க வகையில், மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதுடன், தொலைபேசி வாயிலாகவும் தக்க நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதனைத் தங்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இரா. கண்ணன், எம்.ஏ.பி.எட்.,
பொது நூலக இயக்குநர், சென்னை.

பிரச்சினை

எங்கள் கிராமத்தில் 1946ல் அண்ணல் காந்தி அவர்களால் ஒரு ஆரம்பப் பள்ளி திறக்கப்பட்டது. அது வளர்ந்து நடுநிலைப்பள்ளியாகவே நின்று விட்டது. எனவே, அப்பள்ளியை ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியாக மாற்றி எங்கள் கிராமப்பெண்கள் உயர் கல்வி பெற வழி வகை செய்யவும், எங்கள் கிராமத்திற்கு அருகில் பெண்கள் உயர்நிலைப்பள்ளி இல்லை என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர். கரிவரதன்,
கொடிமா, கூட்டேரிப்பட்டு, திண்டிவனம் வட்டம்.

தீர்வு

விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், திண்டிவனம் வட்டம், கொடிமா கிராமத்திலுள்ள நடுநிலைப்பள்ளியை 96-97ம் கல்வியாண்டில் மகளிர் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தக் கோரி கருத்துக்கள் ஏதும் உரிய வழியாக இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை என்றும், வரும் கல்வியாண்டில் (97-98) இப்பள்ளியை மகளிர் உயர்நிலைப்பள்ளியாக உயர்த்தக் கோரி கருத்துருக்கள் உரிய வழியாக உரிய காலத்தில் பெறப்படின், அதனை விதிமுறைகளின்படி பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை - 6.

பிரச்சினை

நாங்கள் கடந்த 28.4.1992 முதல் நான்கு வருடங்களாக நொண்டிமேடில் ஒரு நியாயவிலைக்கடை அமைத்துக் கொடுக்கும்படி அரசைக் கேட்டு வருகிறோம். ஆனால் இதுவரை நியாயவிலைக்கடை அமைத்துக் கொடுக்கப் படவில்லை. இப்பகுதியில் உள்ள 901 குடும்ப அட்டை தாரர்களின் விவரங்களைக் கொடுத்தும் இதுநாள் வரையில் நியாயவிலைக் கடை அமைத்துத் தரப்படவில்லை. தற்சமயம் புழக்கத்தில் உள்ள குடும்ப கார்டுகளின் எண்ணிக்கை 12000. எனவே தாங்கள் இதில் தனிக்கவனம் செலுத்தி எங்கள் பகுதிக்கு ஒரு நியாயவிலைக்கடை அமைக்க உதவி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆ. கிருஷ்ணமூர்த்தி,
உபதலைவர்,பொதுநல சங்கம், நொண்டிமேடு,
உதகமண்டலம்.

வில்வப் பழத்துடன் திருமணம்

அரசின் மதமாக இந்து மதத்தைக் கொண்டுள்ள ஒரே நாடு நேபாளம் ஆகும். அங்கே மூவாயிரம் ஆலயங்களுக்குமேல் உண்டு. அங்குள்ள மக்களில் நேவார் எனப்படும் ஒரு பிரிவினர் இருக்கிறார்கள். அவர்களிடையே ஒரு வினோத பழக்கம் இருந்து வருகிறது அதாவது ஒரு பெண் பருவமடைவதற்கு முன் அவளுக்கும் ஒரு வில்வப் பழத்துக்கும் சடங்குகளுடன் மணம் செய்து வைப்பது இவர்களது வழக்கம். இப்பழத்தைக் கவனமாகப் பாதுகாத்து வருவார்கள். பின்னரே வேறொரு ஆணுடன் அவள் திருமணம் நடக்கும். விவாகரத்துப் பெற விரும்பும் பெண் கணவனுடைய தலையணைக் கடியில் வெற்றிலைப் பாக்கை வைத்து விட்டால் போதும், அவள் வேறு ஒருவனை மணக்கலாம்!

வீட்டிலேயே சளி, இருமலை குணமாக்கி விடலாம். மூக்கிலே சளி ஒழுகிக் கொண்டிருந்தாலும் மருந்து இல்லாமலேயே குணமாகிவிடும். சளி, இருமலுக்கு என ஏராளமான மருந்துகள் விற்கப்படுகின்றன. இவைகளால் சளி, இருமல் குணமாகி விடும் என மக்கள் நம்புகின்றனர். சளி-இருமலுக்கு விசேஷமான மருந்துகள் எதுவும் தேவையு மில்லை. இதற்கென விற்கப்படும் மருந்து களில் பல பயனற்றவை. மேலும் சொல்லப் போனால் ஊறு விளைவிப்பவைகளாகவும் இருக்கின்றன.

குறைந்தபட்சம், முதல் நான்கு மாதங்களுக்கேனும் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். நன்றாக ஊட்டச்சத்தும் கொடுத்து, உரிய தடுப்பு ஊசிகளும் போடப்படுமானால் குழந்தைகளுக்கு நிமோனியா வராது.

❒ தாய்ப்பால்

தாய்ப்பால், தொற்று நோய் வராது பாதுகாக்கிறது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தையைவிட, புட்டிப்பால் குடிக்கும் குழந்தைக்கு நிமோனியா வரும் அபாயம் இருமடங்கு உள்ளது. குறிப்பாக, முதல் நான்கு மாதங்களுக்குத் தாய்ப்பாலை மட்டுமே தருவது அவசியம். இதர பால் தரவேண்டாம்.

❒ உணவு

வயது எதுவானாலும் நன்றாக ஊட்டச் சத்து உணவை வழங்குங்கள். நன்றாக போஷாக் குப் பெறும் குழந்தை இலகுவாக நிமோனி யாவால் பாதிக்கப்படவோ, இறக்கவோ மாட்டாது. ஊட்டச்சத்து உடலில் வலுவை ஏற்றி, நோய்க் கிருமிகளால் பாதிப்பு ஏற்படாமல் செய்யும்.

❒ வைட்டமின் -ஏ

பப்பாளி, மாம்பழம் போன்ற மஞ்சள் நிறப் பழவகைகள், கீரைகள், கேரட், பச்சை இலைக் காய்கறிகளைச் சாப்பிடச் செய்யுங்கள். இவைகளில் நிமோனியாவி லிருந்து பாதுகாக்க உதவும் வைட்டமின்-ஏ உயிர்ச்சத்து நிரம்ப உள்ளது.

❒ தடுப்பு ஊசிகள்

குழந்தைக்கு ஓராண்டு முடிவதற்குள், போட வேண்டிய அனைத்துத் தடுப்பு ஊசிகளும் - சொட்டு மருந்தும் முழுமையாகப் போடப்பட வேண்டும். பொதுவாகக் குழந்தைகளைப் பாதிக்கின்ற நோய்களான கக்குவான், காசநோய், தட்டம்மை போன்ற நோய்களிலிருந்து குழந்தைகளைத் தடுப்பு ஊசிகள் பாதுகாக்கின்றன.

❒ ஜன நெருக்கம்

ஜனநெரிசல், சளி-இருமல் பரவுவதற்குக் காரணமாகிறது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகளை மட்டுமே, இரவில் தாயோடு தூங்க அனுமதிக்கலாம். ஏனைய சிறார்கள் தனித்தனிப் படுக்கையில் தூங்க உற்சாகப்படுத்த வேண்டும்.

சளி-இருமல் உள்ள குழந்தைகள் உணவு உட்கொள்ள சங்கடப்படக்கூடும். அவர்கள் சாப்பிட நாம் உதவ வேண்டும். திரவ ஆகாரங்களை நிறையப் பருகச் செய்ய வேண்டும். பட்டினியால் வாட விடக்கூடாது.

❒ குழந்தைகளை இல்லத்தில் வைத்துப் பராமரிக்கும்போது நினைவிற் கொள்ள வேண்டியவை.

❒ தொடர்ந்து உணவளித்தல்

தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்குச் சளி-இருமல் கண்டால், சாப்பிடுவதற்குக் குழந்தை சங்கடப்படும். சாப்பிடக் கஷ்டப்படுகிறது என்பதனால் உணவு கொடுக்காமல் இருக்கக்கூடாது. உணவு குழந்தையின் வளர்ச்சிக்கு உதவுகிறது; தொற்று நோயை எதிர்த்துப் பாதுகாக்கிறது. எனவே வற்புறுத்தியாவது, அடிக்கடி தாய்ப்பால் கொடுக்க முயற்சிக்க வேண்டும். சளி, மூக்கடைப்பை ஏற்படுத்தும் எனவே மூக்கடைப்பை நீக்கி விட்டால் குழந்தை சுலபமாக உறிஞ்சிக் குடிக்கும். சப்பிக் குடிக்க கஷ்டப்படுமானால், பாலைப் பீய்ச்சி, சுத்தமான கிண்ணத்திலோ, பாலடையிலோ ஊற்றிக் கொடுக்கலாம்.

தாய்ப்பால் குடிக்காத குழந்தைகளாயின், கொஞ்சம் கொஞ்சமாக,அடிக்கடி சாப்பிட வைக்கலாம். நோயுற்ற காலத்தில் பட்டினி போடக்கூடாது. இது குழந்தையின் வளர்ச்சிக் குறைவுக்கு முக்கிய காரணமாகிவிடும். நோய் குணமான பின், குறைந்தபட்சம் ஒரு வாரமாவது, கூடுதலாக ஒரு நாளைக்கு ஒருவேளை உணவு கொடுக்க வேண்டும். இது நோய்வாய்ப்பட்ட காலத்தில் இழந்த சக்தியை ஈடுசெய்ய உதவும். நோயுறுமுன் என்ன எடை இருந்ததோ, அந்த அளவேனும் எடை கூட வேண்டும். முன்னர் போலவே சுறுசுறுப்பாக விளையாடத் துவங்க வேண்டும். அப்போது தான் குழந்தை பூரண குணம் பெற்றுள்ளது என்று பொருள்.

❒ திரவ உணவு ஏராளமாகக் கொடுங்கள்

தண்ணீர் கொடுத்தால் சளி அதிகமாகிவிடும்; இருமல் வரும் என்றெல்லாம் நம்பிக் கொண்டிருக்கின்ற நிலையை மாற்றி, சளி-இருமல் இருந்தாலும் திரவ உணவு வகைகளை நிறையக் கொடுத்து வர வேண்டும்.

சளி-இருமல் உள்ள குழந்தைகளை வெதுவெதுப்பாக வைத்திருங்கள். ஆனால் அதிக சூட்டில் வைக்க வேண்டியதில்லை. தூய்மையான - புகையற்ற காற்றைச் சுவாசிக்கச் செய்யுங்கள்.

❒ வெதுவெதுப்பாக - சூடாக அல்ல

குழந்தைகளும், சிறார்களும் தங்களது உடல் சூட்டை எளிதாக இழந்து விடுவார்கள். அதனால் அவர்களுக்கு வெதுவெதுப்பான உடை அணிவிப்பது அவசியம். அதற்காக அதிக சூட்டை உண்டாக்கக்கூடிய ஆடைகள் தேவையில்லை. இறுக்கிப் போர்த்த வேண்டியதுமில்லை.

காய்ச்சல் என்பது கடுமையான நோயின்

அறிகுறி அல்ல. ஆனால், காய்ச்சல் வரும்போது பாரசிட்டமால் அல்லது காய்ச்சலைத் தணிக்கும் மாத்திரையைத் தருவதில் தவறில்லை.

❒ சுவாசிக்க உதவுங்கள்

சளி பிடித்தால் மூக்கடைப்பு ஏற்படுவதுண்டு. அடிக்கடி மூக்கடைப்பை நீக்குங்கள். குறிப்பாகத் தாய்ப்பால் குடிக்கும் போதும், தூங்கவைக்கும் முன்பும் மூக்கடைப்பை நீக்குங்கள். குப்புறப் படுக்க வைத்து தூங்கச் செய்யலாம். சுலபமாகச் சுவாசிக்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டும். மிதமான சுடுநீரின் ஆவி பிடிப்பதன் மூலமும் மூக்கடைப்பு நீங்கும். கொதிக்கிற நீரை உபயோகிக்காதீர்கள்.

குழந்தை தூங்கும் அறையின் ஜன்னல்கள், கதவுகளை நன்றாகத் திறந்து வையுங்கள். காற்று வரும் வாயில்களை அடைத்து வைக்காதீர்கள். பசுமையான காற்றில் பச்சிளம் குழந்தை நன்றாகத் தூங்கும். காற்றோட்டமுள்ள இடத்தில் படுக்க வைப்பதே நல்லது. ஆனால் சளி-இருமல் உள்ள குழந்தையை அதிகக்காற்று வீச்சுள்ள இடத்தில் வைத்திருத்தல் நல்லதல்ல.

❒ தூய காற்று

புகை சூழ்ந்த சூழலில் குழந்தைகள் வசிப்பதும், தூங்குவதும் கூடாது. இத்தகைய சூழலில் வாழும் குழந்தைகளுக்கு நிமோனியா வரும் வாய்ப்பு அதிகம். பீடி-சிகரெட் புகையை சுவாசிக்கும் குழந்தையின் ஆரோக்கியம் நாளடைவில் பாதிப்புக்குள்ளாகும். சமையல் புகை (அடுப்புப் புகை), பீடி - சிகரெட் புகையோ இல்லாத இடத்தில் குழந்தைகளை வைத்திருக்க வேண்டும்.

குழந்தைகள் நடமாடும் இடங்களில் எச்சில் துப்புவது, இருமுவது, தும்முவது போன்றவையும் கூடாது. இவை குழந்தைகளின் ஆரோக்கியத்திற்குக் கெடுதல் விளைவிக்கலாம். சளி-இருமல் கண்ட பெரியவர்கள், குழந்தைகளிடமிருந்து தனித்திருப்பது நல்லது. இது குழந்தைகளுக்கு நோய் பீடிக்காமல் தடுக்க உதவும்.

oOo

பூமிக்கடியில் ஓடும் புகை வண்டிகள்



பூமிக்கடியில் ஓடும் ரயில் முதன்முதலில் 1863-ல் லண்டன் நகரத்தில்தான் பயன்படுத்தப்பட்டது. பாடிங்டன் - லண்டன் நகரங்களுக்கிடையே ஓடிய இந்த ரயில் நீராவி எந்திரம் கொண்டது. புகை வெளியேற ஆங்காங்கே பூமியின் மேல் மட்டத்தில் திறப்புக்கள் அமைக்கப்பட்டிருந்தன. 1890–இல், மின்சார எந்திரம் பொருத்தப்பட்ட வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அதற்காகப் புதிய ரயில்பாதைகள் தேம்ஸ் நதிக்குக் கீழே போடப்பட்டன. பூமிக்கடியில் ஓடும் ரயில்களில் அதிகம்பேர் பயணம் செய்வது மாஸ்கோவில்தான். இது 22 நிலையங்களைக்கொண்டது. இந்த ரயில் பாதையில் தினசரி 65 இலட்சம் பேர் பயணம் செய்கின்றனர். லண்டனில் உள்ள பூமிக்கடியில் ஓடும் ரயில்பாதைதான் உலகிலேயே மிகவும் நீளமானதாகும். இது 418 கி.மீ நீளம் உடையது. 277 நிலையங்களைக் கொண்டுள்ளது. நியூயார்க்கில் உள்ள பூமிக்கடியில் ஓடும் ரயில்பாதையில் 458 நிலையங்கள் உள்ளன. இந்தியாவில் கல்கத்தாவில் மட்டுமே பூமிக்கடியில் ஓடும் இத்தகைய ரயில் வசதிகள் உள்ளன.

பக்கத் தொடர்ச்சி

சென்னை மாநகருக்குட்பட்ட பகுதி களுக்கு, சென்னை மாநகர அடிப்படை வசதிகள் 'மேம்பாட்டுக் கழகம்' மூலமாக நிதி உதவி பெற ரூபாய் ஐம்பது கோடி இந்த மேம்பாட்டுக் கழகத்திற்குக் கொடுக்கப் பட்டுள்ளது. மேலும் பேரூராட்சிகள், நகராட்சிகள் அடிப்படை வசதிகளை உயர்த் துவதற்கு வசதியாக நிதி தேவை பற்றிய செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. தேவையின் அடிப்படையிலும், மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், உள்ளாட்சி நிறுவனங்களுக்குத் தேவையான நிதி உதவிகளை அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் சொத்து வரிதான் நிதி



நிலையை உயர்த்துவதற்கான முதன்மை வரியாகும். பல உள்ளாட்சி நிறுவனங்களில் சொத்து வரியும், மற்ற வரிகளும் அதிக அளவில் நிலுவையில் உள்ளன. புதிய உள்ளாட்சி நிறுவன மன்றங்கள் இந்த நிலுவையிலுள்ள வரிகளை முறைப்படி வசூலித்து உள்ளாட்சி நிறுவனங்களின் நிதி நிலையை உயர்த்த தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் தற்போதைய சொத்துவரி, வீட்டுவாடகை அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த முறையைப் பின்பற்றுவதில் பல குறைபாடுகள் உள்ளன. எனவே சொத்து வரி நிர்ணயிப்பது குறித்து புதிய முறைகளை வகுப்பதற்கு ஏற்ற கருத்துக்களை நகர்புற உள்ளாட்சி நிறுவனத் தலைவர்கள் வழங்கலாம்.

சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919-ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இதன் 1920-ஆம் ஆண்டு அனைத்து நகராட்சிகளுக்கும், 1971 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிகளுக்கு தனித் தனியாகவும் சட்டங்கள் தயாரிக்கப்பட்டன. 1994-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட திருச்சி, சேலம், திருநெல்வேலி மாநகராட்சிகளுக்கும், கோவை மாநகராட்சி சட்டப் பிரிவுகள் பொருந்தும் என்று மூன்று தனிச் சட்டங்களும் வெளியிடப்பட்டன. எனவே நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு தற்போது ஏழு சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. இச் சட்டங்களின் மூல ஆதாரச் சட்டமாகிய சென்னை மாநகராட்சிச் சட்டம் 1919-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டதால், தற்போதுள்ள சூழ்நிலைக்கு, சில சட்டப்பிரிவுகள் பொருந் தாமல் உள்ளன. அவைகளை நீக்கி, சில புதிய சட்டப் பிரிவுகள் கொண்டு வரவேண்டியுள்ளது.

இவ்வாறு ஏழு சட்டங்களுக்கும் திருத் தங்கள் செய்வதற்குப் பதிலாக, அனைத்துப் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும்

மாநகராடசிகளுக்குப் பொருந்தும் வகையில், கேரள மாநிலத்தில் உள்ளது போன்ற ஒரு பொதுவான சட்டம் தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் இந்த வரைவுச் சட்டம் தயாரிக் கப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வரைவு சட்டத்தின் நகல்களின் பேரில் பொதுமக்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களைப் பெற உரிய வழிவகை காணப்படும். பிற மாநிலங்களில் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு எவ்வாறு கூடுதல் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நேரில் பார்க்கச் செய்தும், தமிழ்நாடு மாநில நிதிக்குழு பரிந்துரைகளின் அடிப்படையிலும், நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கூடுதல் உரிமைகள் வழங்குவதற்கு புதிய சட்டத்தில் சட்டப் பிரிவுகளைச் சேர்த்து, வருகின்ற சட்டமன்ற வரவு செலவுக் கூட்டத் தொடரில் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனப் பணியாளர் களுக்கு நிர்வாகத்தைப் பற்றி பயிற்சி அளிக்க கோயம்புத்தூரில் ஒரு பயிற்சி நிலையம்

உள்ளது. இந்தப் பயிற்சி நிலையத்தில் பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி நிறுவன உறுப்பினர் மற்றும் தலைவர்களுக்கு உள்ளாட்சி நிர்வாகத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு வசதியாக பயிற்சி கொடுக்கலாம் என்று கருதப்படுகிறது. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் சுமார் 15,000 தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உள்ளதால் இவர்களுக்கு கோயம்புத்தூரில் உள்ள பயிற்சி நிலையத்தில் மட்டும் பயிற்சி அளிக்க வேண்டுமென்றால் ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்கு மேலாகிவிடும்.

எனவே பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மாவட்டத் தலைநகரிலும், சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலகங்களிலும் தனித்தனியாக பயிற்சி அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தந்த நிர்வாகத் துறை அலுவலர்களும், கோயம்புத்தூர் நகர்ப்புற நிர்வாகப் பயிற்சி நிலைய அலுவலர்களும் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று பயிற்சி அளிக்க, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. என்னென்ன பொருள்கள் குறித்து பயிற்சி அளிக்க வேண்டுமென்பதைக் கோயம்புத்தூர் பயிற்சி நிலையம் தயாரித்து அதன் அடிப்படையில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்துப் பிரதிநிதிகளுக்கும் பயிற்சி அளிப்பது தவிர, பெண் உறுப்பின்கள் மற்றும் தலைவர்கள் முதல் முறையாக பெருமளவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்குத் தனியாக ஒரு பயிற்சி அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பயிற்சிக்காக மட்டும் அரசு ரூ.50 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

பாதுகாக்கப்பட்ட குடிநீர், நல்ல சாலை வசதி, போதிய தெரு விளக்குகள், சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் அவர்களது உறைவிடத்தில் கிடைக்க வேண்டும் என்பதே கிராமப்புறங்களில் உள்ள சராசரி குடிமக்களின் எதிர்பார்ப்பாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாகிய நீங்கள், இந்த அடிப்படை வசதிகளை மக்களுக்குச் செய்து கொடுக்க உங்களது சீரிய கவனத்தைச் செலுத்துவீர்கள் என்று நான் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

இந்தத் திட்டங்களை நிறைவேற்ற கடந்த சில ஆண்டுகளில் பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவிட்டதாக காட்டப்பட்டபோதிலும், உண்மையில், அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதில் மிகப் பெரிய அளவில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதை நாம் எல்லோரும் நன்கறிவோம்.

வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டுமென்ற மாநில மக்களின் விருப்பத்தை நிறைவுசெய்ய, மக்களின் பிரதிநிதிகளான உங்களுக்கு மேலும் அதிக உரிமைகளையும், நிதி ஒதுக்கீட்டையும் செய்ய வேண்டு மென்பதை இந்த அரசு நன்கு உணர்த்தி யுள்ளது. இதுபற்றிய தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் "மாநில நிதிக் குழு" தனது அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு நேற்று (29.11.96) காலை தமிழக ஆளுநரிடம் வழங்கியுள்ளது. இந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ள திட்டங்களின் மூலம் கிடைக்கும் அனுபவத்தைக் கொண்டு, திட்டங்களை நிறைவேற்ற, உள்ளாட்சி அமைப்புகளுக்குப் படிப்படியாக கூடுதல் உரிமைகளையும் அதற்கொப்ப நிதி ஆதாரங்களையும் அரசு அளிக்கும்.

இந்த மாநாட்டில் அனுபவம் வாய்ந்த உள்ளாட்சி மன்றத் தலைவர்களும், அனுபவம் பெறவிருக்கும் உள்ளாட்சி மன்றத் தலைவர்களும் கலந்து கொண்டிருக்கிறீர்கள். மாநகரங்கள், நகரங்கள், பேரூர்- சிற்றூர்கள்- இங்கெல்லாம் வாழ்கின்ற மக்கள் இந்த அரசிடமும், உங்களிடமும் ஏராளமாக எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற- தொண்டுள்ளத்தோடு- நேர்மை, நாணயம் இவற்றை உயிரைவிட மேலாக மதிக்கும் தூய்மையான மனத்தோடு, இந்த மக்கள் பணியில் நம்மை நாமே ஒப்படைத்துக்கொள்ள வேண்டும். இந்த உணர்வைத் தான் உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நான் எதிர்பார்க்கிறேன். என் எதிர்பார்ப்பும், மக்களுடைய எதிர்பார்ப்பும் ஏமாற்றத்திற்கு உள்ளாகாமல் சேர்ந்து பணியாற்ற வாரீர் என்று உங்களை எல்லாம் அழைக்கின்றேன்."

(30.11.1996)

செய்திச்சரம்

தமிழரசு அச்சகத்துக்கு நவீன பலவண்ண 'ஆப்செட்' அச்சு இயந்திரம்.

தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டு வரும் தமிழரசு இதழின் தரத்தை மேலும் மேம்படுத்தி நவீன முறையில் புதுப்பொலிவுடன் பல வண்ணங்களில் அச்சடிக்கவும், தற்பொழுது வெளியிடப்பட்டு வரும் பிரதிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்து வெளியிடவும், 'தமிழரசு' அச்சகத்திலுள்ள பழைய 'ஆப்செட்' அச்சு இயந்திரத்துக்குப் பதிலாக புதிய நவீன பலவண்ண 'வெப் ஆப்செட்' அச்சு இயந்திரம் (Web Offset Machine) மற்றும் அதன் தொடர்புடைய சாதனங்கள் வாங்க மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், ரூபாய் ஒரு கோடி அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

திருமலை நாயக்கர் அரண்மனையைப் புதுப்பிக்க நிதி

மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனை நீண்டநாட்களாக, பராமரிப்பு செய்யப்படாமல் இருந்ததால் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. திருமலை நாயக்கர் அரண்மனையின் தொன்மையைப் பாதுகாக்கவும், கட்டடத்திலுள்ள பழுதுகளைக் களையவும் அரசு ரூ.78.40 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

இவ்வாண்டு, முதற்கட்டமாக ரூ.30 இலட்சத்திற்கு அரண்மனை கட்டடத்தின் பழுதுகளை நீக்கவும், தொன்மையைப் பாதுகாக்கவும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். மேலும் எஞ்சியுள்ள பிற பணிகளைத் தாமதமின்றி வரும் நிதியாண்டிலேயே செயல்படுத்தி அரண்மனையின் தொன்மையையும், பெருமையையும் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கும்படி தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

வள்ளுவர் கோட்ட மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்ள ரூ. 85 இலட்சம்

சென்னையிலுள்ள வள்ளுவர் கோட்டத்தைப் புதுப்பித்து புதிய பொலிவுடன் திகழ்வதற்கான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ரூ. 84.94 இலட்சம் அனுமதி வழங்கி ஆணை பிறப்பித்தார்.

ஜீவாவிற்கு நினைவகம்

அமரர் ஜீவானந்தம் அவர்களை நினைவுகூரும் வகையில் அன்னாருக்குக் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் அரசு சார்பில் நினைவகம் அமைக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ரூபாய் 15.50 லட்சம் ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்.

அமரர் ஜீவானந்தம் அவர்களின் நினைவு மண்டபம், நாகர்கோவிலுள்ள சி.பி.ராமசாமி பூங்காவின் மத்தியில் நூலகக் கட்டிடத்தின் முன் வெளியில் அமைக்கப்படும். நினைவு மண்டபத்தில், அமரர் ஜீவாவின் திருவுருவச் சிலை நிறுவப்படும். முழு மண்டபத்திலும் பளிங்குத்தரை அமைக்கப்படும்.

சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் புதிய கூடம்

சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் அரசு விழாக்கள், தனியார் திருமண நிகழ்ச்சிகள், மாநாட்டுக் கூட்டங்கள் முதலியன நடைபெற்று வருகின்றன.

இதன் வசதிகளை அதிகப்படுத்தினால் அரசுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது என்பதனைக் கருத்தில்கொண்டு, கலைவாணர் அரங்க வளாகத்தின் தரைத்தளத்தில் வருவாயைப் பெருக்க அரசு முடிவு செய்துள்ளது. அக்கூடத்தில் ஒரே சமயத்தில் 300 பேர் அமர்ந்து உணவு உண்ண வசதியுள்ள உணவுக் கூடமும், நவீன வசதிகள் கூடிய சமையல் அறையும், முதல்தளத்தில் 5 தங்கும் அறைகளும் கட்டுவதற்கு மாண்புமிகு கலைஞர் அவர்கள் ரூ.90 லட்சம் அனுமதித்து ஆணையிட்டுள்ளார்.

வெள்ளப் பகுதிகளில் முதல்வர் கலைஞர்: பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல்

சென்னையில் தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக அனைத்துப் பகுதிகளும் வெள்ளக்காடாக காட்சியளிக்கின்றன. சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளெல்லாம் நிரம்பி வழிகின்றன. இதனால், தாழ்வானப் பகுதிகளில் உள்ள குடிசைப் பகுதிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

புயல் மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 12.12.96 அன்று நேரில் சென்று பார்வையிட்டார். முதலில் வட சென்னை பகுதியில் உள்ள கொருக்குப்பேட்டை, கொடுங்கையூர் ஆகிய பகுதிகளில் தேங்கிக் கிடந்த மழைநீரைப் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு குடிசைப் பகுதிகளில் வாழும் மக்கள் படும் அவதியை நேரில் பார்த்தும் குறைகளைக் கேட்டறிந்தும் உரிய நடவடிக்கை எடுக்க உடன்வந்த உயர் அதிகாரிகளுக்கு ஆணையிட்டார்.

தொடர்ந்து திருவொற்றியூர், மணலி, ஆர்.கே.நகர், எழில் நகர், பெரம்பூர் ஆகிய பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள மக்களிடம் மழையினால் ஏற்பட்டப் பாதிப்புகளைப் பற்றிக் கேட்டறிந்தார். அந்தந்தப் பகுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தண்ணீரில் நடந்து சென்றே பார்வையிட்டார்.

மேலும், இராமபுரம், காசிமேடு, சைதாப்பேட்டை, மறைமலை அடிகள் பாலத்திற்கு வருகை தந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்குள்ளவர்களின் குறைகளையும் கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கவும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள குடிசை வாழ் மக்களுக்கு உணவும் தங்குவதற்கு வேறிடம் தரவும் அலுவலர்களுக்கு ஆணையிட்டார். முப்படை வீரர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இப்பகுதிகளைப் பார்வையிட்ட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், உயர் அலுவலர்கள் உடன் சென்றனர்.

இந்த மழை வெள்ளத்தால் 40-க்கும் மேலானோர் உயிரிழந்துள்ளனர். துயர் துடைப்புப்பணிகளுக்காக ரூ.20 கோடி ஒதுக்கீடு செய்துள்ள மாண்புமிகு முதல்வர் பெரும் நிதி உதவுமாறு மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கும் எழுதியுள்ளார்.

வேலைவாய்ப்புச் செய்திகள்

தென்னக இரயில்வே

சென்னை

வேலைவாய்ப்பு அறிவிக்கை எண் : 06/96-97

விண்ணப்பம் வந்து சேர வேண்டிய நாள் : 14.1.97

பதவி எண் : 36

விசாரணை மற்றும் பதிவு எழுத்தர்
(ENQUIRY CUM RESERVATION CLERK)

சம்பளம் : *ரூ. 1200 - 2040.*

வயது : *18-30*

காலியிடங்கள் : *30*
(ஆதிதிராவிடர் 5, பழங்குடியினர் 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 8, பொது 16)

பயிற்சி காலம் : *3 மாதங்கள்*

உதவித் தொகை : *ரூ. 1200 + இதரப்படிகள்*

கல்வித்தகுதி :
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டப்படிப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு இணையான படிப்பு

பதவி எண் 37 :

கைவினைஞர் (எந்திரப் பொறியியல்)
(SKILLED ARTISAN (MECHANICAL)

சம்பளம் : *ரூ. 950-1500*

வயது : *18-30 வரை*

காலியிடங்கள் : *20*
(ஆதிதிராவிடர் 3, பழங்குடியினர் 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 5, பொது 11)

கல்வித் தகுதி :
10 ஆம் வகுப்பு அல்லது பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு சமமான வகுப்பு அல்லது அப்ரண்டிசிப் பயிற்சி முடித்திருக்க வேண்டும் அல்லது தொழிற் பயிற்சி நிலையத்திலும் (I.T.I) படிப்பில் தேர்ச்சி

1. ஆட்டோமோபைல் எந்திரவியல் 2. டீசல் எந்திரவியல் 3. டிராக்டர் எந்திரவியல் 4. ஃபிட்டர் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பதவி எண் 38 :

கைவினைஞர் (மின்னியல்)
(SKILLED ARTISAN (ELECTRICAL)

சம்பளம் : *ரூ. 950-1500*

வயது : *18-30 வரை*

காலியிடங்கள் :
20 (ஆதிதிராவிடர் 3, பழங்குடியினர் 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 5, பொது 11)

கல்வித் தகுதி :
10 ஆம் வகுப்பு அல்லது பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி அல்லது அதற்கு சமமான வகுப்பு அல்லது அப்ரண்டிசிப் பயிற்சி முடித்திருக்க வேண்டும் அல்லது தொழிற் பயிற்சி நிலையத்திலும் (I.T.I) ஏதாவது ஒரு தொழில் படிப்பில் தேர்ச்சி.

1. மின்னணுவியல், 2. மின்சாரப் பொறியியல், 3. மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல், 4. எலக்ட்ரிசியன், 5. ஒயர் மேன், 6. லைன்மேன், 7. காய்ல்வைண்டிங்.

குறிப்பு :

(அ) பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு 3 ஆண்டு பயிற்சியும்போது உதவித் தொகையாக ரூ. 900 - 940 வழங்கப்படும்.

(ஆ) தொழிற்பயிற்சி நிலையத்தில் வேலைக்குத் தொடர்பு உள்ள பிரிவுகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 6 மாதங்கள் பயிற்சியும் பயிற்சி காலத்தில் ரூ. 950 உதவித்தொகையும் வழங்கப்படும்.

(இ) தொழிற்பயிற்சி நிலையததில் மற்றப் பிரிவுகளில் தேர்ச்சிப் பெற்றோருக்கு 1 ஆண்டு பயிற்சியும் பயிற்சிக் காலத்தில் ரூ. 950 உதவித்தொகை வழங்கப்படும்.

ரயில்வே அல்லாத பிற நிறுவனங்களில் எந்த வேலைக்கு விண்ணப்பிக்கிறாரோ அதே பிரிவில் பயிற்சிப்பெற்று அப்ரண்டிஷிப் தேர்வு பெற்றிருப்பின் அவர்களுக்கு 6 மாதங்கள் பயிற்சியும், பயிற்சிக்காலத்தில் ரூ. 950 உதவித்தொகை அளிக்கப்படும்.

(உ) ரெயில்வே நிர்வாகத்தில் எந்த வேலைக்கு விண்ணப்பிக்கிறாரோ அதே வேலையில் அனுபவம் பெற்றிருந்தால் அவர்களுக்கு பயிற்சித் தேவையில்லை. ஆனால் இரயில்வேயில் மற்ற பிரிவில் அனுபவம் பெற்றிருந்தால் அவர்களுக்கு ஓராண்டுப் பயிற்சியும், பயிற்சி காலத்தில் உதவித்தொகையாக ரூ. 950/- வழங்கப்படும்.

நிபந்தனைகள் :

1. *14.1.77க்கு முன்னதாக அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் அல்லது கல்வி நிறுவனங்களில் படிப்பை முடித்திருக்க வேண்டும்.*
2. நேர்க்கானலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், இரயில்வே நிர்வாகத்தால் நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனைகளில் தேர்ச்சிப்பெற வேண்டும்.
3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் பற்றிய தகவல்கள், நிபந்தனைகள் யாவும் இரயில்வே நிர்வாகத்தின் சட்ட, திட்டங்களுக்கு உட்பட்டது. அவைகளை மாற்றவோ, திருத்தி அமைக்கவோ, இரயில்வே நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு.
4. நடப்பிலுள்ள அரசு விதிகளின் படி வயது வரம்புகள் தகுதியுடையோர்க்கு தளர்த்தப்படும்.
5. எழுத்துத் தேர்வு மற்றும் நேர்க்காணல் தேர்வுகள் ஆங்கிலம் அல்லது இந்தி மொழியில் நடக்கும் அதற்கான விருப்பத்தை முன்கூட்டியே விண்ணப்பதாரர்கள் தெரிவிக்க வேண்டும்.

தேர்வு மையங்கள் :

பொதுவாக தேர்வுகள் சென்னை மையத்தில் நடைபெறும். தேவைப்பட்டால்கூடுதலாகதிருச்சிராப்பள்ளி மற்றும்மதுரை மையங்களில்தேர்வுகள் நடத்தப்படலாம்.

பயணக்கட்டணம்:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு மட்டும் தேர்வுமையங்களுக்குச் சென்றுவர இலவச பயண அட்டைகள் அளிக்கப்படும். இந்தச் சலுகை மற்றவர்களுக்குக்கிடையாது.

புகைப்படம் :

விண்ணப்பதாரர்கள்அன்மையில்எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான புகைப்படத்தை விண்ணப்பத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்டவேண்டும். புகைப்படத்தில் கையெழுத்திட்டிருக்க வேண்டும். இதுதவிர மற்றொரு அதே அளவிலானபுகைப்படத்தை விண்ணப்பத்துடன்இணைத்து அனுப்பவேண்டும்.

தேர்வுக் கட்டணம் :

ஆதிதிராவிடர், பழங்குடியினர் முன்னாள் இராணுவத்தினர் இவர்களுக்குத் தேர்வுக்கட்டணம் இல்லை. மற்றவர்களுக்குக் கட்டணம் கீழேகண்டவாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதவி எண் : 36க்கு தேர்வு கட்டணம் ரூ. 30 (முப்பது ரூபாய்) மட்டும்.

பதவி எண் : 37 மற்றும் 38க்கு தேர்வுக் கட்டணம் ரூ. 20 (இருபது ரூபாய்) மட்டும்.

14.12.96க்கு பிறகு வாங்கப்பட்ட அஞ்சல் ஆணையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியை தெளிவாக எழுதப்படவேண்டும்.

Member Secretary,
Railway Recruitment Board,
Chennai - 600 086.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் வயது, கல்வித்தகுதி, சாதி போன்ற சான்றிதழ்களின் நகல்களை இணைத்து 14.1.97க்குள்

Member Secretary, Railway Recruitment Board,
Poes Garden, (Binny Road), Off Cathedral Road,
Chennai - 600 086.
அனுப்ப வேண்டும்.

என்ற முகவரி எழுதப்பட்டு 14.1.97க்குள் மேற்கண்ட முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

தபால் உறையில் வேலை வாய்ப்பு அறிவிக்கை எண்,பதி எண், பதவியின் பெயர் போன்றவற்றை தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

மேலும் விவரங்கள் தெரிந்து கொள்ள விரும்புவோர் Employment News Weekly 7-13 December 1996 இதழைப் பார்க்கவும்.

மாதிரிவிண்ணப்பம்

APPLICATION PROFORMAE FOR NON EX-SERVICEMEN AND EX-SERVICEMEN CANDIDATES

RAILWAY RECRUITMENT BOARD, CHENNAI - 86
APPLICATION FORMAT FOR CANDIDATES (Except Ex-Servicemen)

(To be filled in English or Hindi by all candidates in their OWN HANDWRITING)

To
The Chairman,
Railway Recruitment Board,
Chennai- 86.

(For Office Use Only)
Serial No. :..........................
Roll No. :..............................

I hereby apply for recruitment of the following posts in Railways in response to Employment Notice No.6\96-97.

CATERGORY NO:

NAME OF THE POST :

Affix here a signed copy of your recent passport size photograph

INDIAN POSTAL ORDER DETAILS (EXAMINATION FEES)

	Name of the Post Office	Sl.No. of Postal Order	Date of the Postal Order	Amount Rs. P.
a.				
b.				

Note: SC\ST candidates are exempted from examination fees. If exemption is claimed. Write Exempted being SC\ST.

CHOICE OF EXAMINATION CENTRE (Pl.Tick ( ) the preference)

CHENNAI	THIRUCHIRAPPALLI	MADURAI
1	2	3

1. NAME OF THE CANDIDATE (IN BLOCK LETTERS)
2. FATHER'S \ HUSBAND'S NAME

RAILWAY RECRUITMENT BOARD, CHENNAI - 86
APPLICATION FORMAT FOR EX-SERVICEMEN

(To be filled in English or Hindi by all candidates in their OWN HANDWRITING)

To
The Chairman,
Railway Recruitment Board,
Chennai- 86.

(For Office Use Only)
Serial No. :..........................
Roll No. :..............................

I hereby apply for recruitment of the following posts in Railways in response to Employment Notice No.6\96-97.

CATERGORY NO:

NAME OF THE POST :

Affix here a signed copy of your recent passport size photograph

CHOICE OF EXAMINATION CENTRE [Pl.Tick ( ) the preference]

CHENNAI	THIRUCHIRAPPALLI	MADURAI
1	2	3

1. Personal No. Rank & Name :..............................
2. Arm of Service :..............................
3. Father's Name :..............................
4. Date of
   (a) Birth :..............................
   (b) Enrolment :..............................
   (c) Attestation :..............................
   (d) Retirement/Discharge
   (e) Community Code (1-sc,2ST, 4-OBC, 5-Others) :..............................
5. Reasons for Release / Discharge :..............................
6. Medical Category :..............................
7. Award of Decoration

3. ADDRESS FOR COMMUNICATION

PINCODE

4. DATE OF BIRTH
DATE MONTH YEAR

5. SEX Male Female
Indicate by tick mark

6.NATIONALITY

7. RELIGION

8.MOTHER'S TONGUE

9.MEDIUM FOR EXAM (Indicate for tick mark) ENGLISH HINDI

10. a) COMMUNITY CODE :
b) CLASSIFICATION CODE
(Only if applicable)
(Please see item No.16 for Code Numbers)

11. NEAREST RAILWAY STATION
(Only for SC\ST Candidates)
a) Nearest Railway Junction :..............................
b) Nearest Zonal Railway :..............................

12. If you are a Railway Employees. State
a) Name of the post \holding :..............................
b) Name of the Dept\Office :..............................
c) Period of Service From..................To..................
(Documentary proof to be attached)

13. EDUCATIONAL QUALIFICATION [Documentary Proof to be attached]

Sl No.	Name of the Board /University	Examination	Authority which has recognised	Subject	Year	Class/ Division	Aggregate/ % of Marks
1							
2							

14. DOCUMENTS ATTACHED
1. ....
2. ....
3. ....
4. ....

15. DECLARATION:

I hereby declare that i have carefully read the conditions of eligibility advertised and that I satisfy them. All the statements made in this application are true. Complete and correct to the best of my knowledge and belief. I also undertake to produce the origional certificates in support of my above claim. Whenever required. I understand that in the event of any particulars or information given herein being found false and / or incorrect of if I am defected to be ineligible at any stage of the selection process my candidates for the examination/interview/selection/appointment is liable to be rejected or cancelled and in the event of any misstatement/ discrepancy in the particulars being detected after my appointment, my services are liable to be terminated without notice to me.

Signature of the applicant

Place:
Date:

16. COMMUNITY CODE SC-1, ST-2, OBC-4 OTHERS-5
CLASSIFICATION CODE SRE-6 DW/ W-7 AR-8 DG-9 K-10.

Mother Tongue :..............................

8. Postal Address for Communication (address where the candidate is likely to stay normally.) Pincode..............................

9. (a) Nearest Railway Station :..............................
   (b) Nearest Railway Junction :..............................
   (c) Nearest Zonal Railway :..............................

10. Present Profession/Employment (complete details) :..............................

11. Whether SC/ST/OBC (Indicate Sub-caste/Religion) :..............................

12. Educational Qualification (Documentary proof to be attached) Civil Equivalent
   (a) Civil (education) :..............................
   (b) Millitary (Education) :..............................
   (c) Military (Professional) :..............................

13. Languages Known — To Read To Write To Speak
   (a) Indian :..............................
   (b) Foreign :..............................

14. Extra curricular activities
   (a) Sports :..............................
   (b) Literary :..............................
   (c) Cultural/ Art :..............................

15. Details of Pay/Pension/Gratuity
   (a) Last basic pay drawn :..............................
   (b) Total Emoluments :..............................
   (c) Details of Pension/Gratuity :..............................

16. Zilla Sainik Board Employment Exchange Registration No. :..............................

17. Character as assessed by Millitary Authorities (counter signed) (Applicable where applications are not made directly) :..............................

18. List of enclosures (a)............ (b)............ (c)............ (d)............ (e)............ (f)............

19. Medium of question paper the candidate would like to choose in the written examination English Hindi

(please tick mark ( ) the appropriate box

DECLARATION;

I hereby declare that I have carefully read the conditions of eligibility advertised and that I satisfy them. All the statements made in the application are true. Complete and correct to the best of my Knowledge and belief. I also Undertake To produce the origional certificates in support of my above claim. whenever required i understand that in the event of any particulars or information given herein being found false and / or incorrect or if I am detected to be ineligible at any stage of the selection process my candidature for the examination/interview/selection/appointment is liable to be rejected or cancelled and in the event of any misstatement/discrepancy in the particulars being detected after my appointment, my services are liable to be terminated without notice to me.

Place:
Date:

Signature of the Applicant.

அட்டைப் பட விளக்கம்

முதல் அட்டை:

புதிய தமிழக ஆளுநரை- முதல்வர் வரவேற்றல்.

இரண்டாம் அட்டை:

ஐதராபாத்தில், மறைந்த முன்னாள் ஆளுநர் உடல்மீது- முதல்வர் மலர் வளையம் வைத்தல்.

கடைசிப்பக்க அட்டை:

சென்னையில் நடைபெற்ற, உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் முதல் சிறப்பு மாநாடு.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
துணை இயக்குநர்: இரா.ப. கார்மேகம், உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை
ஆசிரியர் குழு: கேடி. புகழேந்தி, ஜி. [illegible] ... அசோகன், அமுதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி.பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
[illegible]: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: 568926, 568927

214380.

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23
சிறப்பு மாநாடு

ஆசிரியர் மடல்

மேதகு தமிழக ஆளுநராக இருந்த
டாக்டர் எம். சென்னாரெட்டி அவர்கள் 2.12.1996
அன்று காலை ஐதராபாத்தில் மாரடைப்பால் காலமானார்.

ஆந்திரத்திலும், மத்திய அரசிலும் அமைச்சராகப் பொறுப்பேற்றும், பஞ்சாப், உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் மேதகு ஆளுநராக இருந்தும் நல்லனுபவம் பெற்றிருந்த அவர், 1993ல் தமிழ்நாட்டு ஆளுநராக நியமிக்கப்பட்டார். அரசியலில் பல்வேறு சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் ஆளானாலும்கூட எப்போதும் பழக இனியவராகவும், பார்க்க எளியவராகவும், நிர்வாகத் திறன் மிக்கவராகவும் விளங்கியவர் அவர்.

புதிய அரசு மலர்ந்தபின் மேதகு சென்னாரெட்டி அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களே- 'சென்னை ரெட்டி' என்று குறிப்பிடும் அளவிற்குப் பெருமைபெற்றார். அப்படிப்பட்டவர் மறைவை ஆற்றொணாது, மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், ஐதராபாத்திற்கே சென்று மலர்வளையம் வைத்துக் கண்ணீரஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். தமிழ்நாடு அமைச்சரவை, சிறப்புக் கூட்டம் நடத்தி ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தது அரசு ஒருவார காலம் துக்கம் கடைப்பிடித்தது. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும்கூட அன்னாரின் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தியுள்ளன.

அரசு நடத்திய அனைத்துக்கட்சி நினைவஞ்சலி கூட்டத்தில் பேசிய மாண்புமிகு முதல்வர்- ஆளுநர் சென்னாரெட்டி அவர்களுக்குச் சென்னையில் நினைவாலயம் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

1956ல் இங்கே ஆளுநராக இருந்த திரு ஏ.ஜே.ஜான் அவர்கள் மறைந்தபோது, சென்னையில் இறுதிச் சடங்கு நடைபெற்றது. ரெட்டி அவர்களுக்குத்தான் ஆந்திரத்தில் நடத்தப்பட்டுள்ளது. மனிதாபிமானமிக்க மாமனிதரின் பிறப்பும் இறப்பும் எங்கே சம்பவித்தால் என்ன?

ஆளுநர் ரெட்டியார் அவர்களின் குடும்பத்தார்க்கு, நாமும் நம் வருத்தத்தைத் தெரிவிப்போம்.

– ஆசிரியர்